
Koviloor Digital Library

கல்லாடம்

மூலமும் விளக்கவுரையும்



Acc. No. 45857

உரையாசிரியர்
முனைவர் பழ.முத்தப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

கல்லாடம்

மூலமும் - உரையும்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45857

உரையாசிரியர்

சித்தாந்தச் செம்மணி

முனைவர் பேரா. பழ. முத்தப்பன்

உமா பதிப்பகம்

18 / 171, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 2521 5363, 2525 0092

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர் : கல்லாடம் (மூலமும் - உரையும்)

உரையாசிரியர் : பேரா. பழ. முத்தப்பன்

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : முதல் பதிப்பு - பிப்ரவரி - 2015

பதிப்புரிமை : © உமா பதிப்பகம்

தாள் : மேப் லித்தோ 18.6 கி.கி.

நூல் அளவு : 14 x 22 செ.மீ. டெம்மி

எழுத்து : 11 புள்ளிகள்

பக்கங்கள் : 344

பைண்டிங் : சாதாரணக் கட்டு

விலை : ரூ. 150.00

ஒளி அச்சு : விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை -600 005.

அச்சிட்டோர் : பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.

நூல் வெளியீடு : உமா பதிப்பகம் சென்னை - 600 001.

Koviloor Digital Library

91/4

என்னுரை

தமிழ் மொழியின் அகப்பொருள் இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகைக்குப் பிறகு குறிப்பிடத்தக்க அகப்பொருள் இலக்கியம் கல்லாடம் ஆகும். இந்நூல் 102 அகவற்பாக்களைக் கொண்டது. வேழமுகக் கடவுள் வணக்கம், வேலன் வணக்கம் என்ற இரண்டு பாடல்கள் தவிர 100 அகத்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன. மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரின் 100 துறைகளைத் தேர்ந்தெடுத்து, அதற்கு ஏற்ப நூறு அகவற்பாக்கள் பாடப் பெற்றுள்ளன. இலக்கணத்தின் வழி அமைந்த கோவை இலக்கியம் போல, திருக்கோவையார் என்ற இலக்கியத்தின் வழி இவ்விலக்கியம் தோன்றிற்று போலும். இந்நூலாசிரியர் கல்லாடர் எனத் தெரிகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கல்லாடர் என்ற பெயரில் பல ஆசிரியப் பெருமக்கள் இடம் பெற்றுள்ளார்கள். சங்க இலக்கியத்துள் பதினான்கு செய்யுட்கள் பாடியவர் கல்லாடர் என்று குறிக்கப் பெறுகின்றார். சைவத் திருமுறை பதினோராம் திருமுறையுள் திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற சிற்றிலக்கியம் பாடிய ஆசிரியர் கல்லாட தேவநாயனார் என்று குறிக்கப் பெறுகிறார். திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பா பாடியவர் கல்லாடர் என்று குறிக்கப் பெற்றுள்ளார். இவை தவிரத் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் கல்லாடர் என்ற ஒருவரும் குறிக்கப் பெறுகிறார். கல்லாடம் என்ற நூலைப் பாடியவர் கல்லாடர் என்றும் குறிக்கப் பெறுகிறது. இத்தகு நிலையில் கல்லாடர் என்ற ஆசிரியரைப் பற்றிய செய்திகளை மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் தம்முடைய தமிழிலக்கிய வரலாறு பதினோராம் நூற்றாண்டுப் பகுதியில் விளக்கமாக எழுதிக் கல்லாடம் இயற்றிய கல்லாடர் பிற்காலத்தில் தோன்றியவர். அவர் கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று முடிவு கூறியுள்ளார்.

Koviloor Digital Library

இக்கல்லாடர் சைவ சமய ஆர்வலர் என்பதும், தாம் பயின்ற திருக்கோவையாரின் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவும், ஆலவாய் அண்ணனில் திருவிளையாடற் நிகழ்வுகளில் தன் மனத்தை ஈடுபடுத்தியவர் என்பதும், இசைநுணுக்கங்களை நன்கு அறிந்தவர் என்பதும், கல்லாடத்தில் அமைந்துள்ள பாடல்களால் தெரிய வருகின்றன. ஒவ்வொரு பாடலிலும் அகத்துறைச் செய்திகளோடு மதுரை மற்றும் திருப்பரங்குன்றத்தின் சிறப்பை மையமாகக் கொண்டு, திருநீலகண்டப் பெருமானின் பெருமையினையும், செந்தமிழ் முருகனின் வரலாற்று நிகழ்வுகளையும் குறிப்பிட்டு, வருணனைச் சிறப்போடு பாடல்களைப் பாடியிருக்கிறார். மதுரையம்பதியைக் குறிப்பிடும் பொழுது ஆலவாய் அண்ணலின் திருவிளையாடல் செய்திகளைத் தவறாது குறிப்பிடுகிறார். குறிப்பிட்டுச் சொன்னால் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் ஆசிரியர் தம் நூலில் இடம் பெறச் செய்திருக்கின்றார் என்று கூறலாம். திருவிளையாடற் செய்திகளோடு, பெரியபுராண அடியார்களைப் பற்றிய நிகழ்வுகளையும், பாடல்களில் இடம் பெற வைத்துள்ளமை நூலாசிரியரின் சைவப் பற்றைப் பெரிதும் விளக்குவதாகும்.

சைவப் பற்றோடு தமிழ்ப் பற்றும் அவர்தம் பாடல்களில் இடம் பெற்றுள்ள திருக்குறள் பாக்களின் தொடர்களால் தெற்றெனப் புலப்படுகின்றன.

> "நிறைமதி புரையா நிறைமதி புரையா
> தேறான் தெளிவு எனும் திருக்குறள் பகுந்து
> குறைமதி மனனே நிறைமதி புரையா" (பா. 62)

என்ற பகுதியைச் சான்றாகக் கொள்ளலாம். பாடல்களில் இடம் பெற்றிருக்கின்ற சொற்களும், தொடர் அமைப்புக்களும் சங்க இலக்கிய மரபையொட்டித் திகழுகின்றன. எனவேதான் வழக்காற்றில் "கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே" என்று வழங்கப் பெறுகிறது. சில பாடல்கள் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுவதற்குக் கடினமான நிலையிலும் உள்ளன. எனவே, இப்பழமொழி ஏற்புயைடதாக அமைகின்றது.

Koviloor Digital Library

நூலாசிரியர் பல்துறை அறிவுடையவராக விளங்கியிருக்கிறார். வாச்சியம் (வாத்தியம்) பற்றிய அறிவும் (பா. 8), மாணிக்க வகைகளைப் பற்றிய அறிவும் (பா. 47), பண்களைப் பற்றிய அறிவும் (பா. 9) அவர் தம் பல்துறைப் புலமைக்குச் சான்றுகளாகும். அகவற்பாவிற்கு உரிய இலக்கண அமைப்பு முழுமையும் பாடல்களில் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அவர்தம் கற்பனை அமைந்த பல பாடல்கள் படித்து படித்து இன்புறத்தக்கனவாக அமைந்துள்ளன. பாடல் 25 இடம் அணித்து என்ற அகத்துறைக்குரிய பாடலாகும். இதில் தலைவன், தலைவியினுடைய ஊரும் தன்னுடைய ஊரும் எவ்வாறு ஒன்றுக்கொன்று அண்மையில் உள்ளன என்பதைக் கூறுகின்ற பொழுது நூலாசிரியர் காட்டிய இடைவெளிகள் படித்துச் சுவைக்கத் தக்க பாடல்களில் ஒன்றாகும். அதுபோலக் கண்ணப்பர் வரலாற்றைக் (பா. 15) குறிப்பிடுகின்ற பகுதியும் படித்துச் சுவைக்கத் தக்கதாகும்.

சைவ புராணச் செய்திகளை மட்டுமல்லாது இராமாயணம், பாரதம் இவற்றின் கதை நிகழ்வுகளையும், திருமாலைப் பற்றிய புராணச் செய்திகளையும், நான்முகனைப் பற்றிய புராணச் செய்திகளையும் பாடல்களில் இடம் பெற வைத்துத் தமிழ்ப் புராணக் களஞ்சியமாக நூலை நூலாசிரியர் தந்திருக்கிறார். பாடல்களில் உவமை அணியும், உருவக அணியும் சிறப்பாக இடம் பெற்றுப் பயிலுகின்றபோது, சங்க இலக்கிய உவகையை ஏற்படுத்துகின்றன.

இந்நூலைப் பற்றி மர்ரே பதிப்பு ஆசிரியர் குழுவினர் குறிப்பிடும் பொழுது, "தாம் மேற்கொண்டுள்ள பொருள்களின் தன்மைக்கு ஏற்ப, அவற்றைப் பல்வேறு நிலைகளில் அமைத்துக் காட்டும் பொருட்சிறப்பும், அப்பொருள்களை விளக்கும் பொருட்டு ஆசிரியர் கையாண்டுள்ள பலவகை அணிகளும், இயற்கைக் காட்சிகளையும் - பிற நிகழ்ச்சிகளையும் சித்தரிக்கும் சொல் ஓவியங்களும், பலமுறை நோக்கி நோக்கி இன்புறத் தக்கனவாம். அருகிய வழக்குள்ள சொற்கள் பெரிதும் பயில்வதாலும், செறிந்த சொற் அமைப்பாலும் இச்செய்யுட்கள் கற்போரை முதலில் வெருட்டினும், ஒரு முறை பயிலுகின்றவர் களைப் பலமுறையும் படித்து மகிழுவதற்குத் தம்பால்

Koviloor Digital Library

அழைக்கும் இயல்புடையனவாகும்'' என்ற மதிப்பீடு பொருத்தம் உடையதாகும்.

இந்நூல் முதன் முதலாக 1868ல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் மூலம் மட்டுமாக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் பின்னர் 1672ல் மூலமும், 37 பாடல்களுக்கு மயிலேறும் பெருமாள் பிள்ளை உரையும், ஏனையவற்றிற்குச் சுப்பராய முதலியார் உரையும் சேர்ந்து, உரைநூலாக வெளிவந்துள்ளது. பிறகு 1911ல் காஞ்சிபுரம் வித்துவான் இராமசாமி நாயுடு என்பவரால் பழைய உரைகளை ஆய்ந்து, அகல உரையுடன் உரைநூல் வெளிவந்துள்ளது. பின்னர் 1957ல் மர்ரே கம்பெனியாரின் மூலம் மட்டுமான திருந்திய பதிப்பு வெளிவந்துள்ளது. அதன்பின் 1944ல் முல்லை நிலையப் பதிப்பாகக் காஞ்சிபுரம் வித்துவான் எம். நாராயணவேலுப் பிள்ளை என்பவரால் உரை எழுதப் பெற்று, உரையுடன் கூடிய பதிப்பு வெளிவந்துள்ளது. இத்தகைய பதிப்புகள் கிடைத்தற்கு அரிதான இக்காலத்தில் எளிய உரையுடன் கூடிய இவ்வுரைநூல் வெளிவருகிறது.

ஒரு முறை திருத்தவத்துறை தமிழ்ச் சங்கத்தில் பேச வாய்ப்புக் கிடைத்த பொழுது இத்தகு எளிய உரை வெளிவர வேண்டும் என்ற எண்ணம் கருக் கொள்ளப்பட்டது. அதனை உமா பதிப்பகம் சகோதரர் உயர்திரு. இராம. லெட்சுமணன் அவர்களிடம் கூறிய போது இந்நூல் வெளிவர ஆர்வமூட்டினார்கள். அத்துடன் எம் கெழுதகை நண்பர் திருவரங்கம் தமிழாசிரியர் உயர்திரு புலவர் கேசவன் அவர்கள் உடனிருந்து ஊக்கப்படுத்தினார்கள். அவர்கள் உதவி என்றும் நினைவு கொள்ளாற்பாலது. வழக்கம்போல் கணினி வடிவு தந்த எம் அன்புத் துணைவி மு. அழகம்மை அவர்களின் பங்கும் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வுரை காலத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தமிழ்ப் பெருமக்களால் வரவேற்கப்படு மாயின் உள்ளம் மகிழ்வுறும். இந்நூலை அச்சிட்டு வெளியிடும் உமா பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் சகோதரர் இராம. லெட்சுமணன் அவர்களுக்கும் நன்றி என்றும் உரியதாகும்.

- பழ. முத்தப்பன்

Koviloor Digital Library

கல்லாடம்

பாயிரம்

வேழமுகக் கடவுள் வணக்கம்.

திங்கள் முடி பொறுத்த பொன்மலை அருவி
கருமணி கொழித்த தோற்றம் போல,
இரு கவுள் கவிழ்த்த மதநதி உவட்டின்
வண்டினம் புரளும் வயங்கு புகர் முகத்த!
செங் கதிர்த் திரள் எழு கருங் கடல் போல,
முக்கண் மேல் பொங்கும் வெள்ளம் எறி கடத்த
பெரு மலைச் சென்னியில் சிறுமதி கிடந்தென,
கண் அருள் நிறைந்த கவின் பெறும் எயிற்ற!
ஆறு-இரண்டு அருக்கர் அவிர் கதிர்க் கனலும்,
வெள்ளை மதி முடித்த செஞ் சடை ஒருத்தன்
உலகு உயிர் ஆட ஆடுறும் அனலமும்,
தென் கீழ்த் திசையோன் தெறுதரு தீயும்,
ஊழித் தீப் படர்ந்து உடற்றுபு சிகையும்,
பாசக் கரகம் விதியுடை முக்கோல்

முறிக்கலைச் சுருக்குக் கரம் பெறு முனிவர்
விழிபடும் எரியும், சாபவாய் நெருப்பும்,
நிலை விட்டுப் படராது காணியில் நிலைக்கச்
சிறு காற்று உழலும் அசை குழைச் செவிய!
ஆம்பல் -முக அரக்கன் கிளையொடு மறியப்
பெருங் காற்று விடுத்த நெடும் புழைக் கரத்த!
கரு மிடற்றுக் கடவுளை செங் கனி வேண்டி
இடடு;கொள் ஞாலத்து, வலம் கொளும் பதத்த!
குண்டு நீர் உடுத்த நெடும்பார் எண்ணமும்,
எண்ணா இலக்கமொடு நண்ணிடு துயரமும்,
அளந்து கொடு முடித்தல் நின்கடன் ஆதலின்-
வரி உடல் சூழக் குடம்பை நூல் தெற்றிய
போக்குவழி படையாது உள் உயிர் விடுத்தலின்
அறிவு புறம்போய உலண்டு அதுபோல,
கடல் திரை சிறுக மலக்கு துயர் காட்டும்
உடல் எனும், வாயில், சிறை நடுவு புக்கு

Koviloor Digital Library

போகாது அணங்குறும் வெள்ளறி வேமும்
ஆரணம் போற்றும் நின்கால் உற வணங்குதும்-
கால் முகம் ஏற்ற துளை கொள் வாய்க் கறங்கும்

விசைத்த நடை போகும் சகடக் காலும்
நீட்டி வலி தள்ளிய நெடுங்கயிற்று ஊசலும்
அலமரு காலும் அலகைத் தேரும்,
குறை தரு பிறவியின் நிறை தரு கலக்கமும்
என் மனத்து எழுந்த புன்மொழித் தொடையும்,
அருள் பொழி கடைக்கண் தாக்கி,
தெருள் உற ஐய! முடிப்பை, இன்று எனவே.

பொருள் :

பிறைச் சந்திரனைத் தன் திருமுடியில் தாங்கிய - பொன் மலையிலிருந்து வீழுகின்ற அருவி நீலமணியைக் கொட்டுகின்ற தோற்றம் போல, இரண்டு கன்னங்களிலும் கொட்டுகின்ற மதமாகிய நதியில் வண்டுக் கூட்டங்கள் புரள - புள்ளிகளோடு கூடிய முகத்தினை உடையவரே - செங்கதிரின் கூட்டம் எழுந்து நிற்கும் கருமையான கடல் வெள்ளம் வீழ்வது போலச் சிவந்த மூன்று கண்களில் இருந்தும் பெருகி வீழ்கின்ற மதநீரை உடைய வரே - பெரிய மலையின் உச்சியில் இளம்பிறை விளங்குவது போல, அருள் பார்வை உடைய முகத்தில் அழகு பெற்ற கொம் பினை உடையவரே - பன்னிரு சூரியர்களும் தருகின்ற கிரணாக் கினியும், பிறையணிந்த சடையினை உடைய சிவபெருமான் உலக உடல் உயிர்கள் நடுங்கும்படி ஆடுவத்றகு இடமாகிய பிரளய காலாக்கினியும், தெற்குச் திசையை உடைய தீக்கடவுள் வெளிப்படுத்துகின்ற நெருப்பும் உலகம் முழுவதும் பரந்து நிற்கும் ஊழித்தீயும், கமண்டலத்தையும் முக்கோலினையும் கொண்ட முனிவரது கண்களில் இருந்து வெளிப்படுகின்ற சினத் தீயும், அவர்கள் வாயிலிருந்து சபிக்கின்ற வாய்த்தீயும்(ஆகிய தீக்கள் எல்லாம்) தத்தம் நிலையிலிருந்து நீங்கிப் பரவா வண்ணம் - தத்தம் உரிமையுள்ள நிலத்தில் இருக்கும்படி சிறு காற்று உலவிட, குழையணிந்த திருச்செவியினை உடையவரே-

யானையின் முகத்தை உடைய அரக்கனானவன் தனது சுற்றத் தாரோடு தடுமாறும்படி பெருங் காற்றினை வெளிப்படுத்திய, துழை கொண்ட துதிக்கையினை உடையவரே- செங்கனியை

Koviloor Digital Library

விரும்பி, கருமிடற்றுக் கடவுளாகிய சிவபெருமானை வலம் வந்த திருவடியை உடைய பெருமானே- கடலால் சூழப்பட்ட உலகத் தாரது எண்ணங்களையும், அளவற்ற துன்பங்களையும் அளந்து தெரிந்து முடிவு செய்தல் உன்னுடைய கடமை ஆதலால் - தன்னுடைய வாய் நூலினால் தன் உடம்பை வளைத்துக் கட்டிய கூட்டில் வாழ்ந்து வெளியேறுவதற்குரிய வழியை உண்டாக்கிக் கொள்ளாது அக்கூட்டுக்குள்ளேயே வாழ்ந்து உயிர் விடுகின்ற அறிவில்லாத உலண்டு என்னும் புழுப்போல, கடலின் திரைகள் சிறுமையடையும்படிக் கலங்குவதற்கு ஏதுவாகிய எண்ணற்ற துன்பத்தைத் தருகின்ற உடம்பு என்கின்ற சிறையில் புகுந்து வெளியில் செல்லாது வருந்தி வாழுகின்ற யாம் வேதங்கள் போற்றுகின்ற உன்னுடைய திருவடியை வணங்குகின்றோம். (ஏனென்றால்)

எம்முடைய பிறவியின் கலக்கத்தையும், என் உள்ளத்தில் தோன்றிய புல்லிய சொல்லினையும் உம்முடைய அருள்மழை பொழிகின்ற கடைக்கண் பார்வை செலுத்தி இப்பொழுது ஐயனே, முடித்து வைப்பாய் என்று கருதி (வணங்கினோம்)

வேலன் வணக்கம்

பாய் திரை உடுத்த ஞால முடிவு என்ன,
முடங்குளை முகத்துப் பல் தோள் அவுணனொடு,
மிடை உடு உதிர, செங்களம் பொருது,
ஞாட்பினுள் மறைந்து, நடுவு அறு வரத்தால்,
வடவை நெடு நாக்கின் கிளைகள் விரிந்தென்ன,
செந் துகிர் படரும் திரைக் கடல் புக்கு,
கிடந்து எரி வடவையின் தளிர்முகம் ஈன்று,
திரை எறி மலைகளின் கவடு பல போக்கி,
கல் செறி பாசியின் சினைக்குழை பொதுளி,
அகல்திரைப் பரப்பின், சடை அலைந்து அலையாது,
கீழ் இணர் நின்ற மேற்பகை மாவின்
ஓர் உடல் இரண்டு கூறுபட விடுத்த,
அழியாப் பேர் அளி உமை கண்ணின்று
தன் பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்த,
அமையா வென்றி அரத்த நெடு வேலோய்!
கீழ்மேல் நின்ற அக் கொடுந் தொழிற் கொக்கின்

Koviloor Digital Library

கூறு இரண்டு ஆய ஒரு பங்கு எழுந்து
மாயாப் பெரு வரத்து ஒரு மயில் ஆகி,
புடவி வைத்து ஆற்றிய பல் தலைப் பாந்தள்
மண் சிறுக விரித்த மணிப் படம் தூக்கி,
விழுங்கிய பல் கதிர் வாய்தொறும் உமிழ்ந்தென,
மணி நிரை சிந்தி மண் புக அலைப்ப,
கார் விரிந்து, ஓங்கிய மலைத்தலைக் கதிர் என,
ஓ அறப் போகிய சிறை விரி முதுகில்
புவனம் காணப் பொருளொடு பொலிந்தோய்!
போழ்படக் கிடந்த ஒரு பங்கு எழுந்து,
மின்னின் மாண்ட கவிர் அலர் பூத்த
சென்னி வாரணக் கொடும் பகை ஆகி,
தேவர் மெய் பனிப்புற வான் மிடை உடுத்திரள்
பொரியின் கொறிப்ப, புரிந்த பொருள் நாடித்
தாமரை பழித்த கை மருங்கு அமைத்தோய்'
ஒருமையுள் ஒருங்கி, இரு கை நெய் வார்த்து,
நாரதன் ஓம்பிய செந்தீக் கொடுத்த
திருகு புரி கோட்டுத் தகர் வரு மதியோய்!
முலை என இரண்டு முரண் குவடு மரீஇக்
குழற்காடு சுமந்த யானைமகட் புணர்ந்தோய்!
செங் கண் குறவர் கருங் காட்டு வளர்த்த
பைங் கொடி வள்ளி படர்ந்த புய மலையோய்!
இமயம் பூத்த கனை மாண் தொட்டில்
அறிவின் தங்கி, அறு தாய் முலை உண்டு
உழல்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான்
வணங்கி நின்று ஏத்த, குரு மொழி வைத்தோய்!
'ஓம்' எனும் எழுத்தின் பிரமம் பேசிய
நான்மறை விதியை, நடுங்கு சிறை வைத்து,
படைப்பு முதல் மாய, வான்முதல் கூடித்
தாதையும் இரப்ப, தளை-அது விடுத்தோய்!
கூடம் சுமந்த நெடு முடி நேரி
விண் தடையாது, மண் புகப் புதைத்த
குறுமுனி தேற, நெடு மறை விரித்தோய்!
ஆறு திரு எழுத்தும் கூறு நிலை கண்டு,
நின் தாள் புகழுநர் கண்ணுள் பொலிந்தோய்!
மணிக்கால் அறிஞர் பெருங் குடித் தோன்றி,
இறையோன் பொருட்குப் பரணர் முதல் கேட்ப,
பெருந் தமிழ் விரித்த அருந் தமிழ்ப் புலவனும்,

Koviloor Digital Library

பாய் பார்அறிய, நீயே, ஆதலின்,
வெட்சி மலர் சூழ்ந்த நின் இரு கழற் கால்
குழந்தை அன்பினொடு சென்னி தலைக் கொள்ளுதும்
அறிவு நிலை கூடாச் சில்மொழி கொண்டு,
கடவுள் கூறா உலவா அருத்தியும்,
சனனப் பீழையும், தள்ளாக் காமமும்,
அதன் படுதுயரமும் அடைவுகெட்டு இறத்தலும்,
தென்புலக் கோமகன் தீத் தெறு தண்டமும்,
நரகொடு துறக்கத்து உழல்வரு பீழையும்
நீளாது இம்பரின் முடித்து,
மீளாக் காட்சி தருதி, இன்று எனவே.

பொருள் :

கடலால் சூழப்பட்ட உலகத்தில் உள்ளவர்கள் யுக முடிவு என்று எண்ணும் வண்ணம் பல தோள்களை உடைய தன் தம்பி யாகிய சிங்கமுகனுடன் - ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்கள் உதிரும்படி போர்க்களத்தில் போர்செய்து, அதில் இறந்து படாமல் தான் பெற்ற வரத்தினால் போர்க்களத்திலே இருந்து மறைந்து வாக்கினி தீயை ஒத்த சிவந்த நிற பவளக் கொடிகள் படர்ந் திருக்கும் கடலில் புகுந்து, அக்கடலில் தீப்போன்ற கதிர்களைக் கொண்ட மலைகளைப் போலக் கிளைகளைக் கொண்டு , பாசி போன்ற இலைகள் தழைத்து, பூங்கொத்துக்கள் விளங்கிட அசை யாமல் நின்ற மாமரமாகிய சூரபன்மனை ஓர் உடம்பு இரண்டு கூறு படும்படி விடுத்த தன் தாயாகிய கருணை மிக்க பார்வதி கொடுத்த நீண்ட வெற்றியை உடைய வேலினை உடையவனே.

கீழ் மேலாக நின்ற தீத்தொழிலை உடைய சூரபன்மனாகிய மாமரத்தின் இரு கூறில் ஒரு கூறாக எழுந்து, பெரிய வரத்தினால் அழியாத ஒரு மயில் உருவாகி, பூமியைத் தலையில் தாங்கிய ஆதிசேடன் மண்ணகம் சிதறும்படி பரப்பிய மணிப்படத்தைக் கொத்தி மேலெடுத்து விழுங்கிய அதனைத் தன்னுடைய வாய்களால் மீண்டும் உமிழ்ந்தாற் போல மணிகளைப் பூமியில் சிதறி மயிலானது செயல்புரிய - மேகம் தங்குகின்ற மலையில் தோன்றுகின்ற ஞாயிறு போல மயிலின் சிறகுகளை உடைய முடியில் அமர்ந்து உலகம் காணும்படி புகழுடன் விளங்குகின்ற பெருமானே.

Koviloor Digital Library

மாமரத்தின் மற்றொரு கூறு எழுந்து முருக்கம்பூ போன்ற செஞ்சூட்டுப் பொலிவு பெற்ற தலையை உடைய கோழியாகித் தோன்றி தேவர்களின் உடம்பு நடுக்கமடையும் வண்ணம் - வானத்தில் உள்ள நட்சத்திரங்களைக் கொறித்தது. தேவர்களுக்குத் துன்பமில்லாது நிகழத் தாமரையை இகழ்ந்த தன்னுடைய திருக்கரத்தின் வலப் பக்கத்தில் அச்சேவலைக் கொடியாக அமைத்துக் கொண்ட பெருமானே.

ஐம்பொறியும் அதன் வழியே செல்லாது மனத்தை ஒருவழிப் படுத்தி நாரத முனிவன் இரு கையாலும் நெய்யை வார்த்துச் செய்து முடித்த வேள்வியால் தரப்பட்ட முருக்கோடு கூடிய கொம் பினை உடைய ஆட்டுக்கடாயின் மேல் வரும் மதியினை உடைய பெருமானே.

இரண்டு மலைகள் என்று சொல்லும் வண்ணம் முலை களைக் கொண்ட கூந்தல் காட்டினைச் சுமந்த தெய்வயானையைச் சேர்ந்த பெருமானே.

சிவந்த கண்களை உடைய குன்றவாணர் காப்பாற்றி வளர்த்த வள்ளியாகிய பசிய கொடியானது படரப் பெற்ற திருத்தோள் களாகிய மலையினை உடைய பெருமானே.

இமய மலையில் உண்டாகிய பொய்கையில் பூத்த மலராகிய தொட்டிலில் அறிவோடு தங்கி, ஆறு தாய்மார்களின் முலை உண்டு திரிந்த - முப்புரத்தைத் தன் சிரிப்பாகிய நெருப்பினால் சுட்ட சிவபெருமானவர் தொழுது நின்று துதிக்க - அவருக்குக் குறு மொழியைக் கூறிய பெருமானே.

தன்னைப் பிரமமாகப் பேசின நான்கு வேதங்களை உடைய பிரமனை ஓம் எனும் எழுத்தால் நடுங்குதற்கு ஏதுவாகிய் சிறைப் படுத்தி, படைத்தல் முதலாகிய தொழில் நடவாத காரணத்தால் தேவர்களும் தந்தையாகிய சிவபெருமானும் வேண்டிக் கொண் டதற்கு இணங்கப் படைத்தல் முதலிய தொழில் நடக்கப் பிரமனைச் சிறையிலிருந்து விடுத்த பெருமானே.

நீண்ட மலை உச்சிகளைக் கொண்ட நேவி மலையானது ஆகாய வழியைத் தடுக்காது மண்ணில் அழுந்தும்படி அதனை

Koviloor Digital Library

மறைத்த அகத்திய முனிவன் தெளியும் வண்ணம் பெரிதாகிய வேதாந்தத்தை விரித்துரைத்த பெருமானே.

ஆறெழுத்து மந்திரமாகிய (குமாராயநம) அம்மொழியைச் சொல்லுகின்ற அடியவர்களின் நிலையை அறிந்தும், உன் திருவடியைத் துதிப்போரது நிலையை அறிந்தும், அவர்களின் கண்ணுள்ளே விளங்குகின்ற பெருமானே.

மாணிக்கங்களை விற்கும் அறவோராகிய மதுரை வாணிகரது பெரிய குடியில் பிறந்து இறைவன் கூறிய பொருள் கூற்றுக்குப் (இறையனார் அகப்பொருள்) பரணர் முதலிய புலவர்கள் கேட்கத் தமிழில் உலகோர் அறியும்படி பொருள் விரித்துரைத்த அரிய தமிழ்ப் புலவனாகிய பெருமானே.

அறிவு நிலை பெறாது எம்முடைய புல்லிய சொற்களை ஏற்றுக் கொண்டு - கடவுளாகிய உன்னைப் போற்றாமைக்கு ஏதுவாக எம்மிடத்தில் விளங்குகின்ற - கெடாத ஆசை, பிறவித் துன்பம் , ஒழிக்கப் படாத காமம், பெருந் துன்பம், முறை தவறி நடக்கின்ற தன்மை, இயமனின் துன்பம், நரகத்தும் சுவர்க்கத்தும் உலவுகின்ற துன்பம் ஆகியவை நீட்டிக்காது , இந்தப் பிறப் பிலேயே முடிவு செய்து இப்பொழுதே எமக்கு முத்திப் பேற்றைத் தருவாய் என்று எண்ணி, வெட்சி மாலை சூடிய வீரக்கழலை அணிந்த உன்னுடைய இரண்டு திருவடிகளை, குழந்தை அன் பினால் யாம் எமது தலையில் தாங்கிக் கொள்வோமாக.

பாயிரம் முற்றும்.

Koviloor Digital Library

நூல்

1. தமர் நினைவு கூறி வரைவு கடாதல்

அமுதமும் தருவும் பணிவரப் படைத்த
உடலக்கண்ணன் உலகு கவர்ந்து உண்ட
களவுடை நெடுஞ் சூர்க் கிளை, களம் விட்டு ஒளித்த -
அருள் நிறைந்து அமைந்த கல்வியர் உளம் எனத்
தேக்கிய தேனுடன் இறால் மதி கிடக்கும் -
எழு மலை பொடித்த கதிர் இலை நெடு வேல்
வள்ளி துணைக் கேள்வன் புள்ளுடன் மகிழ்ந்த
கறங்கு கால் அருவிப் பரங்குன்று உடுத்த
பொன் நகர்க் கூடல் சென்னி அம் பிறையோன்
(பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினை,
'கொங்கு தேர் வாழ்க்கை'ச் செந்தமிழ் கூறி,
பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி,
என் உளம் குடிகொண்டு இரும் பயன் அளிக்கும்
கள் அவிழ் குழல் சேர் கருணை எம்பெருமான்)
மலர்ப்பதம் நீங்கா உளப் பெருஞ் சிலம்ப!
கல்லாக் கயவர்க்கு அரு நூல் கிளை மறை
சொல்லினர் தோம் என, துணை முலை பருத்தன,
பல உடம்பு அழிக்கும் பழிஊன் உணவினர்,
தவம் என, தேய்ந்தது, துடி எனும் நுசுப்பே!
கடவுள் கூறார் உளம் என, குழலும்,
கொன்றை புறவு அகற்றி, நின்ற இருள் காட்டின,
சுரும்பு படிந்து உண்ணும் கழுநீர் போல,
கறுத்துச் சிவந்தன கண் இணை மலரே,
ஈங்கு இவை நிற்க! சீறூர், பெருந் தமர்,
இல்லில் செறிக்கும் சொல்லுடன், சில் மொழி
விள்ளும், தமியில் கூறினர்,
உள்ளம் கறுத்துக் கண் சிவந்து உருத்தே.

துறைவிளக்கம் :

தலைவியின் பெற்றோர் தலைவியின் அவயவத்தின் வேறுபாடு கண்டு அவளை இற்செறிக்கக் கருதினார் என்றும், அயல வரும் தலைவியை மகட்பேச (பெண்கேட்டு) நினைந்தார் என்றும் கூறித் தலைவனைத் திருமணம் செய்து கொள்ள தோழி வற்புறுத்தியது.

Koviloor Digital Library

பாடற் பொருள் :

தேவ அமிழ்தமும், கற்பக மரமும் தனக்கு உரியதாகப் படைத்துக் கொண்ட, கௌதம முனிவரின் சாபத்தால், உடல் முழுவதும் கண்களைப் பெற்ற இந்திரனது உலகத்தைக் கவர்ந்து கொண்டான் வஞ்சக எண்ணம் கொண்ட சூரபதுமன். அவனது தம்பியாகிய தாராகாசூரன் தான் போரிட்ட போர்க்களத்தை விட்டு மலையில் மறைந்து கொண்டான். அந்த மலை - அருளை முழு மையாகப் பெற்ற மெய்க் கல்வியை உடையவருடைய மனமானது எவ்வாறு முழுமையும் நிறைந்திருக்கின்றதோ அது போல, தேன் நிரம்பப் பெற்று விளங்கும் தேனடையானது, திங்களைப் போலக் காட்சிதர விளங்கியது. அந்த மலையைத் தன்னுடைய ஒளி பொருந்திய இலை வடிவாகிய நெடிய வேற் படையைச் செலுத்தித் தூளாக்கியவன், வள்ளி நாச்சியாரின் கண வனாகிய முருகன் ஆவான். அவன் தன்னுடைய வாகனமாகிய மயிலோடு மகிழ்ந்து விளங்குகின்ற, ஒலியோடு கூடி அருவி விழுகின்ற திருப்பரங்குன்றம் சூழ்ந்த பெரிய மாடங்களை உடைய மதுரை நகரத்தில் எழுந்தருளியவன், தன் தலையில் அழகிய பிறையினை உடைய சிவபெருமான் ஆவான். *(1-9)*

அவன் பொதிய மலையை உடைய பாண்டிய மன்னன் தன் உள்ளத்தில் கருதிய கருத்தினைக் கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் செந்தமிழ்ப் பாவினை இயற்றிக் கொடுத்து, அப்பாட் டிற்குரிய பரிசாகிய பொற்குவையைத் தருமி என்ற புலவனுக்கு அன்புடன் உதவியவன் ஆவான். அவன் என் உள்ளத்தில் குடி கொண்டு பிறவிப் பயன் அளிப்பவன். அத்தகையவன் தேன் ஒழுகும் மலர் சூடிய கூந்தலை உடைய உமையம்மையைத் தன் ஒரு பாகத்தில் கொண்டவன். அத்தகைய எம் இறைவனுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை நீங்காத உள்ளம் கொண்ட சிலம்பனே(தலைவனே) *(10-15)*

கற்காத கீழ் மக்களுக்கு அருமை நூலாகிய பகுதிகளை உடைய வேதங்களின் பொருள்களைச் சொன்ன ஆசிரியரின் குற்றம் பெருகுவது போல - எம் தலைவியின் முலைகள் இரண்டும் பருத்தன. பல உடம்புகளை அழித்து அவற்றின் ஊனினை உண்ணும் கீழ்மக்கள் மேற்கொண்ட தவமானது

Koviloor Digital Library

தேய்ந்தது போல - துடி போன்ற எம் தலைவியின் இடையானது தேய்ந்தது. அவளுடைய கூந்தலும் இறைவனை நினைந்து வாழ்த் தாவரது மனம் கொண்ட இருளைப் போலக் கருமை நிறத்தைக் காட்டியது. (16-21)

மேலும் வண்டுகள் அமர்ந்து தேன் உண்ணும் கழுநீர் மலர் போல விளங்கும் கண்களாகிய இரண்டு மலர்கள் கருத்துச் சிவந்து காணப்பட்டன. இத்தகைய இவளுடைய அவயவங்களின் மாறு பாட்டைக் கண்ட இவளை ஈன்த தாய் தந்தையாகிய தமர் இவள் இனி வெளியில் செல்லுதல் கூடாது என்று எண்ணி இல் செறிக்க வேண்டும்(மனையில் அடைக்க வேண்டும்) என்று சினத்துடன் கண்கள் சிவக்கத் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். மேலும் இவ்வூரில் ஊரார் இவளை மகட்பேசவும் செய்தனர். (திருமணப் பேச்சுப் பேசினர்). என்றிவை தோழி கூறித் தலைவனை வரைவு வற்புறுத்தினாள். (22-27)

விளக்க உரை :

ஒவ்வொரு கல்லாடல் பாடலும் சைவத் திருமுறையில் எட்டாந் திருமுறையான திருக்கோவையாரின் பாடல்களுக்கு உரிய துறைகளின் செய்திகளை விளக்குவது போல் அமைந்துள்ள மையால் பழைய உரையாசிரியர்கள் இப்பாடலுக்கு உரிய திருக் கோவையார் பாடல் துறையின் எண்களையும் குறிப்பிட்டுள்ளனர். அதன்படி இப்பாடல் திருக்கோவையாரின் 134 ஆவது செய்யுளுக்குரிய விளக்கமாக அமைகிறது. பாடலில் இந்திரனை சூரன் வென்றது, சூரனின் தம்பி தாரகாசூரன் கிரௌஞ்ச மலையில் மறைந்து, அவனை முருகப் பெருமான் வேலால் அழித்தது, முருகன் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றத்தை அடுத்தது மதுரை, மதுரை சோமசுந்தரப் பெருமான் கொங்குதேர் வாழ்க்கை என்ற பாடலை எழுதிக் கொடுத்துத் தருமிக்குப் பொற்கிழி அளித்தது ஆகிய புராணச் செய்திகள் சிவபெருமானின் பெருமைகளாக இடம் பெற்றுள்ளன.

சொற். பொருள் விளக்கம் :

தரு - கற்பகமரம், பணிவர - தனக்கு உரிமையாக, உடலக் கண்ணன்- இந்திரன், களவுடை நெடுஞ்சூர் - வஞ்சக எண்ணம்

Koviloor Digital Library

கொண்ட சூரபதுமன், கிளை - தம்பி, இறால் - தேனடை, புள் - மயில், கறங்கு - ஒலித்தல் , கூடல் - மதுரை, அருநூல் கிளை மறை - அரிய நூலாகிய கிளையாகிய பகுதிகளைக் கொண்ட வேதம், தோம் - குற்றம், நுசுப்பு - இடை சுரும்பு - வண்டு, சின்மொழி சிலவாகிய சொற்கள்.

2. தாய் அறிவு கூறி வரைவு கடாதல்.

'பூ', 'மணி', 'யானை', 'பொன்', என எடுத்து,
திங்களும், புயலும், பரிதியும், சுமந்த
மலை வரும் காட்சிக்கு உரிய ஆகலின்,
நிறையுடைக் கல்வி பெறு மதி மாந்தர்
ஈன்ற செங் கவி எனத் தோன்றி, நனி பரந்து,
பாரிடை இன்பம் நீளிடைப் பயக்கும்
பெரு நீர் வையை வளை நீர்க் கூடல்
உடல், உயிர், என்ன உறைதரு நாயகன்
(கடுக்கை மலர் மாற்றி வேப்பலர் சூடி,
ஐவாய்க் காப்பு விட்டு அணி பூண் அணிந்து,
விரிசடை மறைத்து மணி முடி கவித்து,
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து,
வழுதி ஆகி முழுது உலகு அளிக்கும்,
பேர் அருள் நாயகன்) சீர் அருள் போல,
மணத்துடன் விரிந்த கைதைஅம் கானல்,
நலத் தொடர் வென்றிப் பொலம் பூண் குரிசில்
சின்னம் கிடந்த கொடிஞ்சி மான் தேர்,
நொச்சிப் பூ உதிர் நள் இருள் நடு நாள்,
விண்ணம் சுமந்து தோற்றம் செய்தென,
தன் கண்போலும் என்கண் நோக்கி,
கள்வரைக் காணும் உள்ளம் போலச்
செம் மனம் திருகி, உள்ளம் துடித்து,
புறன் வழங்காது, நெஞ்சொடு கொதித்தனள்,
மாறாக் கற்பின் அன்னை -
கூறு ஆம் மதியத் திரு நுதற் கொடியே!

துறை விளக்கம் :

காதல் வேட்கையால் தலைவன் குறியிடம் வந்து சென்ற பிறகு தலைவன் வந்து சென்றதற்குரிய அடையாளத்தைக் கண்டு

Koviloor Digital Library

களவு நிகழ்ந்ததைத் தாய் அறிந்தாள். ஆதலால் தோழியைச் சினத்துடன் பார்த்தாள். அவள் பார்வையைக் கண்ட தோழி, தாய்க்குக் களவு தெரிந்து விட்டது என்று தலைவியிடம் கூறுவது போலத் தலைவனுக்கு அறிவித்து வரைவு வேண்டினாள் என்பதாகும். (வரைவு - திருமணம்)

பாடற்பொருள் :

பூ, மணி, யானை,பொன் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு, சந்திரன், மழைமேகம், சூரியன் ஆகிய இவற்றைப் பெற்ற மலையிலிருந்து அருவி விழுகின்றது. இது எதுபோல இருக்கிறது என்றால் - அறம் முதலியவற்றால் நிறைந்த கல்வி பெற்ற அறிவுடைய புலவர்கள் நாவிலிருந்து (அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருளை உட்கொண்டு, சந்திரன், மழை வளம், சூரியன் ஆகியவைகளின் மீது பாடிய வாழ்த்துக்களாக) வெளிவருகின்ற கவிதை போல இருந்தது. இவ்வாறு புலவர் நாவிலே தோன்றிய கவி போலக் காட்சி அளிக்கின்ற அருவியானது நெடுந்தூரம் பூமியில் இன்பம் உண்டாகும்படி பெருகிய நீரோடு வையை என்ற ஆறாக ஓடிவந்தது. அந்த வையை நீர் சூழ்ந்திருக்கின்ற மதுரையைத் தனது உடலாகவும், உயிராகவும் பொருந்துகின்றவன் இறைவன். *(1-8)*

கொன்றை மலரைச் சூடாது வேப்பமாலை சூடி, ஐந்து வாயினை உடைய வாசுகி என்னும் பாம்பினை அணியாது பொன் ஆபரணங்களை அணிந்து, விரிந்த சடையினை மறைத்துப் பொன்னாலாகிய மணிமுடி கவித்து, எருதுக் கொடியினை விடுத்து மீன்கொடியை ஏந்தி மதுரையில் பாண்டியனாகத் தோன்றினார் இறைவன். அத்தகைய இறைவனது பேரருளைப் போல மணம் வீசுகின்ற மலர்களைக் கொண்ட, தாழைச் செடிகள் நிறைந்திருக்கின்ற நெய்தல் நிலத்தில் *(9-15)*

பிறைச் சந்திரனைப் போல நெற்றியை உடைய தலைவியே, *(25)*

நொச்சிப்பூ உதிருகின்ற நடு இரவில் அழியாத வெற்றியினையும், பொன் அணிகலன்களையும் கொண்ட தலைவனது மேகம் போன்ற பெரிய தேர் வந்து சென்றதற்கு அடையாளம்

Koviloor Digital Library

கிடந்தது என மாறாக் கற்பினை உடைய அன்னை உணர்ந்தாள். அதனால் தன்னுடைய சிவந்த கண்ணால் என்னைப் பார்த்து, கள்ளரைக் காணும் உள்ளம் போல மனம் மாறுபட்டுப் பார்த்தாள். மேலும் அவளுடைய மாறுபடாத மனம் இப் பொழுது மாறுபட்டுத் துடித்துப் பேச்சினை வெளிப்படுத்தாது, நெஞ்சத்தில் புழுங்கி எனைப் பார்த்தாள். (என்று தோழி தலைவி யிடம் நம் களவொழுக்கத்தைத் தாய் அறிந்து விட்டாள் என்று கூறுவாள் போலச் சிறைப்புறத்து இருந்த தலைவன் கேட்கும்படி கூறி, விரைவாக வந்து வரைந்துகொள் என்ற குறிப்பை வெளிப்படுத்தினாள்)

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **256** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் மதுரையில் சோமசுந்தரக் கடவுள் பாண்டியனாக ஆட்சி புரிந்தது சிவபெருமானின் பெருமையாகக் கூறப்பெற்றுள்ளது. மலையில் இருந்து வீழுகின்ற அருவிக்குச் சான்றோரின் கவிதை உவமையாகக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(சொ-ம்)

புயல் - மேகம், பரிதி - சூரியன், மாந்தர் - புலவர், கடுக்கை மலர் - கொன்றை மலர், ஐவாய் - பாம்பு, விடைக்கொடி - எருதுக் கொடி, கயற்கொடி - மீன்கொடி, வழுதி - பாண்டியன், கைதைஅம் கானத்து - தாழம்பூ மணம் வீசும் நெய்தல் நிலம், ஓடாவென்றி - அழியாத வெற்றி, கொடிஞ்சி மாத்தேர் - கொடியை உடைய பெரிய தேர், புறன் வழங்காது - சொல்லால் வெளிப்படுத்தாது. கூறாமதியம் - திங்களின் கூறாகிய பிறைச் சந்திரன்.

3. பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

பகையுடன் கிடந்த நிலை பிரி வழக்கினைப்
பொருத்தலும், பிரித்தலும், பொருபகை காட்டலும்,
உட்பகை அமைத்தலும், உணர்த்து சொல் பொருத்தலும்,
ஒரு தொழிற்கு இரு பகை தீராது வளர்த்தலும்
செய்யா அமைச்சுடன் சேரா அரசன்
நாடு கரிந்தன்ன காடு கடந்து இயங்கி -

Koviloor Digital Library

இடும்பை நிரப்பினர்க்கு ஈதலின் - இறந்தோர்க்கு,
இதழ் நிறை மதுவம் தாமரை துளித்தென,
விழி சொரி நீருடன் பழங்கண் கொண்டால்,
(உலகு இயல் நிறுத்தும் பொருள் மரபு ஒடுங்க,
மாறனும் புலவரும் மயங்குறு காலை,
முந்துறும் பெரு மறை முளைத்தருள் வாக்கால்,
'அன்பின் ஐந்திணை' என்று அறுபது சூத்திரம்,
கடல் அமுது எடுத்துக் கரையில் வைத்ததுபோல்,
பரப்பின் தமிழ்ச் சுவை திரட்டி, மற்று அவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென் தமிழ்க் கடவுள்,
தழற்கண் தரக்கின் சரும ஆடையன்
கூடல் அம் பெரும் பதி கூறார் கிளை என)
'நிறை நீர்க் கயத்துள் ஒரு தாள் நின்று,
தாமரை, தவம் செய்து, அளியுடன் பெற்ற
திருமகட்கு அடுத்தது என்?'' என்று,
ஒருமை காண்குவர் - துகிர்க் கிளைக் கொடியே!

துறை விளக்கம்:

தோழி தலைவியின் வருத்தத்தைக் கண்டு, அந்த வருத்தத்தைப் பிறர் அறிந்தால் களவு வெளிப்படுமோ என அஞ்சி அவ் அச்சத்தைத் தலைவியிடம் கூறி அவளை அஞ்சாது ஆற்றுவித்தல் ஆகும்.

பாடற்பொருள் :

பல கிளைகளை உடைய பவளக் கொடி போன்ற தலைவியே, (22)

(பழைய நெடும்பகையை உறவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதனை அறியாது) நீண்டநாள் பகை யோடு கிடந்த, தொன்று தொட்டு வரும் வழக்கினை ஒருவாறு(பொருள் கொடுத்து தீர்த்து அப்பகைவரோடு கூடுதலும் இன்றி, பொரு பகையை உண்டாக்கிக் கொள்ளுதலும், மேலும் அவ் உட்பகையை வளர்த்துக் கொள்ளுதலும், ஆக்கமும் கேடும் தான் கூறும் சொல்லால் வரும் என்பது தெரியாது கடுஞ்சின வார்த்தைகளைக் கூட்டிக் கொளலும், ஏதேனும் ஒரு வினை செய்து பகையைத் தீர்க்காது, பகையை உண்டாக்கிக் கொள்ளுகின்ற ,நல்லமைச்சரோடு சேராத அரசனது நாடு அழிந்தாற் போன்று - முட்கள் கரிந்திருக்கின்ற

Koviloor Digital Library

காட்டு வழியே தாமரை மலரில் தேன் சொரிவது போல கண்களில் இருந்து கண்ணீர் சொரிந்து வறுமையில் வாடிய சுற்றத்தார்க்கு நம்முடைய சுற்றத்தார்க்கு எல்லாம் வாரி வழங்குவதற்காகப் பொருளைத் தேடிச் சென்றான் தலைவன். (அத்தகைய சுற்றத்தார் எத்தயைவர் என்றால்) *(1-9)*

உலகத்தில் இலக்கணமாக இருந்த அகப்பொருள் கூறு ஒரு பஞ்சத்தால் அழிந்த காரணத்தால் பாண்டியனும் கடைச்சங்கப் புலவர்களும் மிக வருந்திய காலத்தில், கடலமுதத்தை எடுத்துக் கரையில் வைத்தது போலப் பழமையான மறையாகிய வேதத் திலிருந்து, தன்னுடைய வாக்கினால் நீண்ட பரப்பினை உடைய பொருள் அமைந்த தமிழால், அன்பின் ஐந்திணை எனத் தொடங்கி அறுபது சூத்திரமாகத் தொகுத்து, தென் தமிழைப் பாண்டியனுக்கும் சங்கத்தார்க்கும் கொடுத்தான் இறைவன். (இறையனார் அகப்பொருள்) *(10-16)*

அவ்இறைவன் நெருப்பு போன்ற கண்ணை உடைய புலியின் தோலாடையை உடையவன் மேலும் அழகிய மதுரை யம்பதியை உடையவன். அத்தகைய இறைவனை வணங்காதவ ராகிய கூட்டம் போன்றவர்கள். *(17-18)*

(அவ்வாறு பொருள் தேடிச் சென்ற தலைவனை நினைந்து நீ கண்ணீர் சிந்தினால்) நீரை உடைய குளத்தில் நீண்ட காலம் ஒற்றைக் காலாகிய தண்டில் செந்தாமரையானது நின்று தவம் செய்து, தான் தாங்குவதற்குத் தாமரை பெற்ற திருமகளை ஒத்த தலைவியான உனக்கு இப்பொழுது பொருந்திய வேறு பாடு என்ன? என்று அயலவர்கள் எண்ணி ஐயமுறுவார்கள். ஆதலால் நீ அழாது ஆற்றுவாயாக என்று தோழி கூறினாள். *(19-22)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 275 ஆவது பாடலின் விளக்கமாக அமைந்துள்ளது. இப்பாடலில் மதுரை சோமசுந்தரக் கடவுள் வற்கடத்தால் தமிழின் பொருளதிகாரம் அழிந்ததற்காக இறையனார் அகப்பொருள் பாடிக்கொடுத்த வரலாறு சிவபெரு மானின் பெருமையாக இடம் பெற்றுள்ளது. தலைவன் பிரிந்து சென்ற காடு ஒரு அரசன் தன்னுடைய பழம் பகையைத் தீர்க்காது

Koviloor Digital Library

மேலும் வளர்த்துக் கொண்டதால் வளம் கெட்ட அவனது நாடு போலக் கரிந்து கிடந்தது என்பது சிறப்புடையதாகும்.

(சொ.ம்)

இடும்பை - வறுமைத் துன்பம், உலகில் நிறுத்தும் பொருள் மரபு - உலகத்தின் இலக்கணமான அகப் பொருள், தழல் - நெருப்பு, சரும ஆடை - புலித்தோல் ஆடை, கயம் - குளம், கடுத்த - போல.

4. பிரிவு அருமை கூறி வரைவு கடாதல்.

அண்டம் ஈன்று அளித்த கன்னி முனிவாக,
திரு நுதல் முளைத்த கனல் தெறு நோக்கினில்,
ஆயிர மணித் தரத்து அமைத்த வான் படையுடன்
சயம் பெறு வீரனைத் தந்து, அவன்தன்னால்,
உள்ளத்து அருளும் தெய்வமும் விடுத்த
இருள் மனத் தக்கன் பெரு மகம் உண்ணப்
புக்க தேவர்கள் பொரு கடற்படையினை
ஆரிய ஊமன் கனவு என ஆக்கிய
கூடல் பெருமான் பொதியப் பொருப்பகத்து -
அருவிஅம் சாரல் இருவிஅம் புனத்தினும்,
மயிலும், கிளியும், குருவியும், 'நன்றி
செய்குநர்ப் பிழைத்தோர்க்கு உய்வு இல' என்னும்
குன்றா வாய்மை நின்று நிலை காட்டித்
தங்குவன கண்டும். வலி மனம் கூடி,
ஏகவும் துணிந்தனம் - எம் பெரும் படிறு
சிறிது நின்று இயம்ப, உழையினம்! கேண்மின், இன்று,
ஊற்று எழும் இரு கவுட் பெரு மதக் கொலை மலைக்
கும்பம் மூழ்கி, உடல் குளித்து ஓட,
பிறை மதி அன்ன கொடுமரம் வாங்கி,
தோகையர் கண் எனச் சுடு சரம் துரக்கும்
எம்முடைக் குன்றவர்தம் மனம் புகுத,இப்
புனக் குடிக் கணியர் தம் மலர்க்கை ஏடு அவிழ்த்து,
வரிப்புற அணில் வாற் கருந் தினை வளை குரல்
கொய்யும் காலமும் நாள்பெறக் குறித்து,
நிழலும் கொடுத்து, அவர் ஈன்ற
மழலை மகார்க்கும் பொன் அணிந்தனரே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தினைப் புனத்தில் கதிர்கள் கொய்யப்பட்டமையைக் கூறித் தோழி வரைவு கடாயது. தாங்கள் காத்த தினைப்புனத்தில் தினைக் கதிர்கள் அறுக்கப்பட்டாலும், முன்பு தினைக்கதிரில் தங்கிய கிளிகள் தினை அரிந்த காலத்திலும் தினைத் தட்டைகளைப் பிரிந்து போகாது தங்கியிருப்பதைத் தோழி கூறி, அதன்மூலம் பிரிவு என்பது அருமையுடைத்து என்றும் அதனைக் கிளிமேல் வைத்துத் தலைவனை வரைவு கடாயதுமாம்.

பாடற்பொருள்:

பல்லாயிரம் கோடி அண்டத்தையும் படைத்து , அவற்றின் கண் வாழுகின்ற உயிர்களையும் காக்கின்ற உமையவளுக்குக் கோபம் உண்டாயிற்று. அதனால் தன்னுடைய அழகிய நெற்றியில் கனலாகத் தோன்றிய நெற்றிக் கண்ணில் இருந்து அளவற்ற பெரிய படைக்கருவிகள் அமைந்த அழகிய கையுடன், வெற்றியைத் தரும் வீரபத்திரனைப் படைத்து அருளினான் இறைவன். *(தந்தையாகிய தக்கன் தன்னையும், சிவனையும் அவமதித்ததால் உமையவளுக்குக் கோபம் உண்டாயிற்று)* ***(1-4)***

அவன் மூலம், (வீரபத்திரன் மூலம்) தன்னுடைய உள்ளத்தின் கண் பிறக்கும் அருளுடைமையும், தெய்வத் தன்மையையும் விடுத்தற்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை உடைய மனத்தோடு கூடிய தக்கன் செய்த யாகத்தில் அவிப்பலி உண்ட நான்முகன் முதலான தேவர்களின் கடல் போன்ற படையினை, ஊமன் கண்ட கனவு வெளிப்படாதது போல - வெளிப்படாது அடக்கிய, மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய, பொதியமலையின் கண் அமைந்த அருவியை உடைய அழகிய மலைச்சாரலில்,

(5-10)

விளையாடுகின்ற மான்களே, எம்முடைய மிகுதியாகிய குற்றத்தை இப்பொழுது நாங்கள் கூறச் சிறுபொழுது நின்று கேளுங்கள். ***(15-16)***

மதநீர் இடைவிடாது ஒழுகுகின்ற இரண்டு கன்னங்களை உடைய, கொலைத் தொழிலை உடைய, மலை போன்ற யானையின் மத்தகத்தில் மூழ்கி உடலுக்குள்ளே புகுந்து ஓட, பிறைச்

Koviloor Digital Library

சந்தினைப் போன்ற வில்லை வளைத்து. மயில் போன்ற பெண்களின் கண்களை ஒத்த அம்பை ஏவுகின்றவர் எம்முடைய குன்றக்குரவர்கள் ஆவார்கள். அவர்களுடைய மனம் ஏற்கும்படி தினைப்புனத்தில் உள்ள வேங்கையர் (மரம்) என்ற சோதிடர் மலராகிய தன் ஏடினை அவிழ்த்து, நிழலும் கொடுத்து எம் குன்றக்குரவர் பெற்ற மழலை மொழியை உடைய சிறாராகிய எமக்குப் பொன் அணி காலமும், (திருமணத்திற்குரிய பருவம்) வரியினை உடைய முதுகினைக் கொண்ட அணிலின் வால் போன்ற வளைந்த தினைக்கதிரினைக் கொய்யும் காலமும் வந்தது என மலர்ந்து அறிவித்தன. (வேங்கை பூத்தால் தினைக்கதிர் அரியப்படலாம் என்பதும், மகளிர்க்கு மணம் புரியும் காலம் வந்தது என்பதும் பண்டைக்கால நம்பிக்கை)

அதனால் நன்றி செய்தவருக்குத் தீங்கிழைத்தால் அதனால் வரும் பாவத்திலிருந்து நீங்குவதற்கு வழியில்லை என்ற உண்மையை நிலைநாட்டுவது போலத் தினை அறிந்து இருவியாக விடப்பட்ட தாள்களை உடைய இத்தினைப்புனத்தின் கண் மயிலும் கிளியும் குருவியும் தமக்கு உணவு இல்லாது இருந்து போதும் தங்கியிருந்து, முன்பு பழகிய இடம் என்பதால் அவ்விடத் திலிருந்து போகாது நின்றன. இதனை அறிந்தும் அதனைக் கண்டும் வலிய மன வலிமை கொண்டு தினைப்புனக் காவலை விடுத்து விட்டு இல்லத்திற்குச் செல்லத் துணிந்தோம் (என்று மான்களை நோக்கித் தோழி கூறினாள்.) (10-26)

(தினைப்புனக் காவல்தான் தலைவனைச் சந்திக்கக் காரணமாக இருந்தது. தினை அரிந்தவுடன் அதனை மறந்துவிட்டு வீடு செல்லத் தலைவியும் தோழியும் நினைத்தது நன்றி மறந்த செயலாகும்.)

(வி- ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 144 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலில் தினைப் புனத்தில் காவல் இருந்த மகளிர் தினை அரியப்பட்டதால் வீட்டிற்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. தலைமகன் அதனை அறியாது மீண்டும் வந்து தலைவியைக் காணாது வருந்துவான். அந்த வருத்தத்தைப் போக்குவதற்கு மறைமுகமாக மான்களை நோக்கிச்

Koviloor Digital Library

சொல்லுவது போலத் தோழி தலைவனுக்கு இல்லம் திரும்புவதைத் தெரிவித்து மணவினையை அறிவிப்பதாகச் செய்தி அமைந்துள்ளது. இப்பகுதியில் சிவ பெருமானின் பெருமையாக அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரன் படைக்கப் பெற்றதும், வீரபத்திரனால் தக்கன் யாகத்தில் அவிப்பலி உண்ட தேவர்களின் பெரும்படை அழிக்கப்பட்டதும் கூறப் பெற்றுள்ளது.

(சொ.ம்) :

அண்டம் - உலகம், கன்னி - உமையவள், முனி - கோபம், கனல் - தீ, வீரன் - வீரபாகு, ஆரிய ஊமன் - வேற்று நாட்டு ஊமையன், கூடல்பெருமான் - மதுரை நகரச் சிவபெருமான், ஏகவும் - செல்லவும், படிறு - குற்றம் (செயல்கள்), உழையினம் - மானினம், கவுள் - கன்னம், கொடுமரம் - வளைந்தவில், சுடுசரம் - அம்பு, கணியர் - சோதிடர், மழலைமகார் - மழலை மொழியுடைய பெண்கள்,

5. இளமை கூறி மறுத்தல்.

இரண்டு உடல் ஒன்றாய்க் கரைந்து, கண் படாமல்,
அளவு இயல் மண நிலை பரப்பும் காலம்
தளை கரை கடந்த காமக் கடலுள்
புல் நுனிப் பனி என மன்னுதல் இன்றி,
பீரம் மலர்ந்த வயாவு நோய் நிலையாது,
வளை காய் விட்ட புளி அருந்தாது,
செவ் வாய் திரிந்து வெள் வாய் பயவாது,
மனை புகையுண்ட கரு மண் இடந்து
பவளவாயில் சுவை காணாது,
பொற்குட முகட்டுக் கரு மணி அமைத்தெனக்
குங்குமக் கொங்கையும் தலைக்கண் கறாது,
மலர அவிழ்ந்த தாமரைக் கயல் என
வரி கொடு மதர்த்த கண் குழியாது,
குறி படு திங்கள் ஒருபதும் புகாது,
பொன் பெயர் உடையோன்தன் பெயர் கெடுப்ப,
தூணம் பயந்த மாண் அமர் குழவிக்கு,
அரக்கர் கூட்டத்து அமர் விளையாட,
நெருப்பு உமிழ் ஆழி ஈந்தருள் நிமலன்

Koviloor Digital Library

(கூடல் மாநகர், ஆட எடுத்த
விரித்த தாமரை குவித்த தாளோன்)
பேர் அருள் விளையாச் சீர்-இலர் போல,
துலங்கிய அமுதம் கலங்கிய தென்ன,
இதழ் குவித்துப் பணித்த குதலை தெரியாது,
முருந்து நிரைத்த திருந்து பல் தோன்றாது,
தெய்வம் கொள்ளார் திணி மனம் என்ன,
விரிதரு கூழையும் திருமுடி கூடாது,
துணை மீன் காட்சியின் விளை கரு என்ன,
பார்வையின் தொழில்கள் கூர்விழி கொள்ளாது,
மறு புலத்து இடுபகை வேந்து அடக்கியது என,
வடுத்து எழு கொலை முலை பொடித்தில அன்றே,
செம் மகள் மாலை இம் முறை என்றால்,
வழுத்தலும் வருதலும் தவிர்தி-
மொழிக் குறி கூடாச் செவ் வேலோயே!

துறை விளக்கம் :

தலைவன் தலைவியிடம் சிறப்புடைய தழைகளைக் கொண்டு செல்லத் தோழி அது கண்டு குழலும் முலையும் குவியாத (நன்கு வளராத) குதலைச் சொல்லை உடைய தலைவிக்குத் தலைவன் சொல்லுகின்ற காரியம் சிறிதும் இயைபுடைத்து அன்று என்று அவளது இளமை கூறித் தழையை ஏற்க மறுத்துரைத்தல்.

பாடற்பொருள்:

கூறுகின்ற சொல் முடிவதற்கு முன்னால் எதிரியைத் தாக்கி அவர்தம் குருதியால் சிவந்து நிற்கும் வேலினை உடைய தலைவனே, (33) இரணியன் என்னும் பொன்னினது பெயரை உடையவன் நாராயணா என்னும் தன் திருநாமத்தைத் அவன் மகன் சொல்லா வண்ணம் தடுத்ததால் (இரணியன் தடுத்ததால்,(15)

தாயும் தந்தையும் ஆகிய இருவருடைய உடலும் புணர்ச்சிக் கண் ஒருடலாகி இன்பத்தால் உள்ளம் உருகிக் கண் முதலிய உறுப்புக்களின் நுகர்ச்சி உண்டாகாமலும் - அளவால் இயன்ற கூட்டமும் இன்பமும் உண்டாக்கும் நிலையை உடைய கரை கடந்த காமமாகிய கூடல் நிகழும் பொழுது, புள்ளின் நுனியில் உள்ள பனித்துளி அளவாகிய (விந்து) கருப்பைப் பையில்

Koviloor Digital Library

தங்குதல் இன்றியும், பீர்க்கம்பூ போன்ற பசலை நிறம் தோன்றக் காரணமான வயாவு என்னும் நோய் உண்டாகாமலும், *(1-5)*

புளிய மரத்தில் காய்த்த வளைந்த காயாகிய புளியங்காயை உண்ணாமலும், சிவந்த வாய் வெளுத்துப் போகாமலும், வீட்டில் புகை படிந்ததினால் உண்டாகிய கரியை அகழ்ந்து எடுத்துப் பவளம் போன்ற வாயில் உண்டு சுவை காணாமலும், குங்குமம் அணிந்த கொங்கைகளில் உள்ள பொன்னால் இயன்ற குடத்தின் உச்சியில் நீலமணியைப் பதித்து வைத்தாற் போன்று காட்சிதரும் அவைகளின் உச்சியில் அமைந்த கண் கருக்காமலும், மலர்ந்த தாமரையில் தங்கும் கயல்மீன்களைப் போன்ற செவ்வரி படர்ந்த கண்கள் குழியாமலும், கரு உயிர்க்கும் காலம் என்று குறிக்கப் பெற்ற மாதங்கள் பத்தும் செல்லாமலும், *(6-14)*

ஒரு கல்தூண் ஒரு நொடியில் பெற்ற நரசிங்கமாகிய குழந்தைக்கு அரக்கர் கூட்டத்தோடு போர் புரிந்து விளையாடுதற் பொருட்டு நெருப்பினைக் கக்குகின்ற ஆழிப்படையை (சக்கரப்) வழங்குகின்ற நிமலனும், மதுரை மா நகரத்தில் கால் மாறி ஆடு வதற்காகத் தூக்கி அருளிய மலர்ந்த தாமரையைச் செயற்கையாகக் குவித்து விட்டாற் போன்ற திருவடியினை உடைய இறைவனும் ஆகிய சிவபெருமானின் மிகுந்த அருளினைப் பெறாதவர்கள் போலவும், தெளிந்த நீர் கலங்கியது போலவும் என் தோழியாகிய தலைவியினுடைய இதழ்கள் கூறும் மழலை மொழியில் சொல்லின் வடிவமும் பொருளும் விளங்காது. *(16 -23)*

மயில் இறகின் அடிப்பகுதியை வரிசையாக வைத்தது போன்ற பற்களின் காமக்குறிப்புடைய நகையும் தோன்றாது.

தெய்வத்தை ஏற்காதவர்களுடைய மனம் ஒருவழிப் படாதது போலப் பரந்த கூந்தலும், அழகிய முடியினைப் பொருந்த மாட்டாது.

காதல் துணையாகிய இரட்டை மீன்கள் தம்முடைய பார்வை யாலேயே விளைவிக்கின்ற சினையைப் போல, (குஞ்சுகளை உருவாக்குவது போல) தலைவியின் கூரிய கண்கள் தமது நோக் கத்தாலே காமக்குறிப்பு முதலிய தொழில்களைச் செய்யாது.

Koviloor Digital Library

ஒரு வேந்தன் தனது பகைவர் விளைவிக்கும் பகையைக் காலம் பார்த்து அடக்கினாற் போல, கொலையை வெளிப்படுத்து கின்ற முலை இன்னும் தோன்றவில்லை.

எனவே எம் தலைவியின் தன்மை இவ்வாறு இருப்பதால் நீ இவள் பொருட்டு என்னிடத்தில் குறை இரந்து பேசுவதையும், இங்கு வருதலையும் தவிர்ப்பாயாக. *(24 -32)*

(வி-ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **104** ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. பாடலில் தோழி தலைவியின் இளமைத் தன்மையைக் கூறிச் சிவந்த வேலினை உடைய தலைவனிடத்தில் அவன் காதலை மறுத்துக் கூறியதாகப் பொருள் அமைந்துள்ளது அவ்வாறு மறுத்துக் கூறும் பொழுது காமத்தை உண்டாக்குகின்ற பல்,கூந்தல், கண்கள், முலை ஆகியவை காமத்திற்கு உரிய நிலை யில் பருவம் அடைய வில்லை என்று கூறித் தலைவனின் வரவை மறுக்கிறாள் தோழி். இப்பாடலில் மதுரை நகரத்துச் சிவபெரு மானின் பெருமையாகத் திருமாலுக்குச் சக்கரப் படையைக் கொடுத்தமை கூறப்பட்டுள்ளது. திருமாலைக் குறிப்பிடும் போது அவரின் நரசிங்க அவதாரம் குறிக்கப் படுகிறது. இவ் அவதாரம் குறிக்கப் படும் பொழுது, நரசிங்க அவதாரம் கருவிலிருந்து தோன்றிய அவதாரம் அல்ல. கற்தூணிலிருந்து தோன்றிய அவதாரம் என்று குறிக்கப்படுகிறது..

(சொ.ம்)

இரண்டு உடல் - தாய் தந்தை ஆகிய இரு உடல், கரைந்து - உள்ளம் உருகி, மணநிலை - ஆண்பெண் புணர்ச்சி, பீரம் - பீர்க்கம்பூ, பொற்குடம் முகட்டுக் கருமணி - பொன்னிறமான குடத்தில் வைக்கப்பட்ட கருமையான மாணிக்கம், (இவ்உவமை முலைகளின் கண்களுக்குக் கூறப்பட்டுள்ளது), பொன்பெயர் - இரணியம், இரணியன்(இரணியம் - ஒருவகைப் பொன்னுக்குப் பெயர்), தூணம் - தூண், மாண்அமர் குழவி - மாண்புடைய நரசிங்க அவதாரம், ஆழி - சக்கரப்படை. அமுதம் - நீர், முருந்து - மயிலிறகின் அடிப்பகுதி, வழுத்தல் - தாழ்ந்து நின்று கூறுதல்.

Koviloor Digital Library

6. சுவடு கண்டு இரங்கல்.

நிணம் , உயிர் உண்ட, புலவு பொறாது,
தலை உடல் அசைத்து, சாணை வாய் துடைத்து,
நெய் குளித்து அகற்றும் நெடு வேல் விடலை -
அந்தணர் உகும் நீர்க்கு அருட்கரு இருந்து
கோடா மறை மொழி நீடுறக் காணும்
கதிர் உடல் வழி போய்க் கல்லுழை நின்றோர்
நெருப்பு உருத்தன்ன செருத் திறல் வரைந்த
வாசகம் கண்டு மகிழ்ந்ததும் இவணே,
துணை விளக்கு எரியும் நிலைவிழிப் பேழ்வாய்த்
தோகை மண் புடைக்கும் காய்புலி மாய்க்க
வாய் செறித்திட்ட மாக் கடிப்பு இதுவே,
செடித்தலைக் கார் உடல் இடிக் குரற் கிராதர்
மறைந்து கண்டு அக் கொலை மகிழ் உழி இந் நிலை,
தவ நதி போகும் அரு மறைத் தாபதர்
நன்னர் கொள் ஆசி நாட்டியது இவ் உழை,
கறை அணல் புயங்கன் எரி தழல் விடத்தை
மலை மறை அதகம் மாற்றிய அதுபோல்,
கொடுமரக் கொலைஞர் ஆற்றிடைக் கவர,
எண்ணாது கிடைத்த புண் எழு செரு நிலைக்
கைவளர் கொழுந்து மெய் பொடியாகென
சிற்றிடைப் பெரு முலைப் பொற்றொடி மடந்தை தன்
கவைஇய கற்பினைக் காட்டுஉழி இதுவே,
குரவம் சுமந்த குழல் விரித்து இருந்து
பாடலம் புனைந்த கற் பதுக்கை இவ் இடனே,
ஒட்டு விட்டு உலறிய பராரை நெட்டாக் கோட்டு,
உதிர் பறை எருவை உணவு ஊன் தட்டி,
வளை வாய்க் கரும் பருந்து இடை பறித்து உண்ணக்
கண்டு நின்று உவந்த காட்சியும் இதுவே,
செம்மணிச் சிலம்பும் மரகதப் பொருப்பும்,
குடுமி அம் தழலும் அவண் இருட் குவையும்,
முளை வரும் பகனும் அதனிடை மேகமும்,
சேயிதழ் முளரியும் கார் இதழ்க் குவளையும்,
ஓர் உழைக் கண்ட உவகையது என்ன,
எவ் உயிர் நிறைந்த செவ்வி கொள் மேனியின்
அண்டப் பெருந் திரள் அடைவு ஈன்று அளித்த
கன்னி கொண்டு இருந்த மன் அருட் கடவுள்

Koviloor Digital Library

(மலை உருக் கொண்ட உடல் வாள் அரக்கர்
வெள்ளமும், சூரும் , புள் இயல் பொருப்பும்,
நெடுங் கடற் கிடங்கும், ஒருங்கு உயிர் பருகிய
மணி வேற் குமரன் முதல்நிலை வாழும்
குன்று உடுத்து ஓங்கிய கூடல் அம் பதியோன்)
தாள் தலை தரித்த கோளினர் போல,
நெடுஞ் சுரம் நீங்கத் தம் கால்
அடும் தழல் மாற்றிய கால் குறி இவணே.

துறை விளக்கம்:

காட்டுவழியே உடன்போக்கில் சென்ற தலைவி , தலைவனின் அடிச்சுவடுகளைக் கண்டு செவிலித்தாய் கூறியது.

பாடற் பொருள்:

பகைவரின் உயிரை அவர்தம் உடம்பிலிருந்து நீக்கியதால் தன்னுடைய வேற்படைக்கு உண்டான புலால் நாற்றத்தையும், தசைத் துண்டுகளையும் பொறுக்காமல் தன்னுடைய தலையையும் உடம்பையும் அசைத்து, வேற்படையைச் சாணையின் கண் தேய்த்து, அதன் நுனியை நன்கு துடைத்து (அப்பொழுதும் நாற்றம் போகாததால்) பின்பு நெய்யில் மூழ்க வைத்து அந்நாற்றத்தையும், நிணமாகிய தசைத் துண்டுகளையும் போக்கிக் கொண்ட நெடிய வேற்படையை உடைய தலைமகன், *(1-3)*

அந்தணர்கள் சூரியனை வணங்கிக் கையால் அள்ளி விடுகின்ற நீரினால் சூரியன் அருளாகிய கருக்கொண்டு, அந்தணர்கள் கூறுகின்ற மந்திரம் நெடிது நிலைத்து நிற்கும்படிக் கதிரால் அருள் செய்கின்ற சூரிய மண்டலத்தின் உடல்வழி புகுந்து போய் மேலுலகத்தில் வாழ்தலே அன்றி, இவ்வுலகத்தில் தமக் கென நடப்பட்ட நடுகல்லில் நிலைத்து வாழுகின்ற மறவர்களின் போரத்திறத்தைக் கல்லில் எழுதிய தொடர்களை ஓதிப் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தது (தலைவன்) இவ்விடத்தில்தான். *(4-8)*

இரட்டை விளக்கு எரிந்தாற்போன்று கனலுகின்ற கண் களையும், பெரிய வாயினையும், நிலத்தில் விசைத்து அடிக்கின்ற வாலினையும் கொண்ட புலியைக் கொல்லும் பொருட்டு, தலைவன் அதன் வாயினுள்ளே செருகிய பெருங் கடிப்பு (குறுந்தடி) இதுவே. *(9-11)*

Koviloor Digital Library

செடி போலும் தலையினையும், கரிய உடலினையும், இடியோசை போன்ற குரலினையும் உடைய வேடர்கள் தலைவனால் குத்துண்டு தப்பி ஓடிய அப்புலியினை மறைந்து இருந்து பாரத்து மகிழ்ந்த இடமும் இதுவே. *(12-13)*

தவத்தை மேற்கொண்டு புண்ணியத் தீர்த்தங்கள் ஆடுவதற்குச் செல்லுகின்ற அரிய மறையினை உடைய தவத்தவர்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் ஆசி கூறியதும் இவ்விடமே. *(14-15)*

கரிய நிறத்தைக் கொண்ட கீழ் வாயினை உடைய பாம்பினது எரிகின்ற தீப்போன்ற கொல்லும் நஞ்சினை மலையின் கண் மறைந்து இருக்கும் மருந்து மாற்றி விடுகின்ற செயலைப் போன்று சிறிய இடையினையும், பெரிய முலையினையும், பொன்னால் ஆன தொடியையும் அணிந்த என்மகள் தன்னிடத்து உண்டாகிய கற்பை வழியிலே கவர்ந்து கொள்ளும் பொருட்டு, ஆராயாது வந்து எதிர்த்த பாவமாகிய கொலைத் தொழிலை உடைய கள்வரோடு புண்ணை உண்டாக்குகின்ற போர்க்களத்தில், அவர்கள் உடல்கள் தூளாகும்படி தலைவன் போரிடும் இடமும் இதுவாகும். *(14-22)*

என் மகள் முன்பு சூடிய குரவ மலர் கொண்ட குழலை விரித்து இப்பொழுது பாதிரி மலரை அக் கூந்தலில் சூடிக் கொண்ட இடம் இந்தக் கற்பாறை கொண்ட இடமாகும். *(23-24)*

யானைகள் உராய்வதால் மேல்தோல் பெயர்ந்து காய்ந்து பருத்த அடியினை உடைய, நெடிய ஆச்சா மரத்தினது கிளையில் இருந்த, வளைந்த வாயினை உடைய கரிய நிறமுடைய பருந்தானது, உதிர்ந்த சிறகுகளை உடைய முதிர்ந்த கழுகின் வாயில் இருந்த மாமிச உணவைப் பறித்துத் தின்ற காட்சியைத் தலைவனும் தலைவியும் பார்த்து மகிழ்ந்த இடம் இதுவே. *(25-28)*

மாணிக்க மலையையும் மரகத மலையையும் ஒரே இடத்தில் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சி போலவும், கொழுந்தினை உடைய நெருப்பையும், அவ்விடத்திலேயே இருள் கூட்டத்தையும் கண்டதால் உண்டான மகிழ்ச்சியைப் போலவும், அறியாமை கெடுதற்கு ஏதுவாகிய ஆதித்தனையும், கருமைநிற மேகத்தினையும் ஓரிடத்தில் கண்ட காட்சி போலவும், சிவந்த இதழை உடைய

Koviloor Digital Library

தாமரையையும் கரிய இதழை உடைய குவளை மலரையும் ஓரிடத்தில் கண்ட மகிழ்ச்சி போலவும், தன்னைக் காண்போர்க்கு மகிழ்ச்சியைத் தரும் வண்ணம் எல்லா உயிர்க்கண்ணும் நிறைந்த, தனது அழகு கொண்ட திருமேனியில் பல்லாயிரம் கோடி அண்டத் தையும் முறையாகப் படைத்து, அவற்றைக் காத்து, உமைய வளைத் தன் இடப் பாகத்தில் கொண்டிருக்கும் நிலையான அருளையும் கொண்ட இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள், (29-36)

நீலமலை உருக் கொண்டாற் போன்று உடம்பினையும், வாளினையும் உடைய அரக்கர் கூட்டத்தையும், சூரனையும், கிரௌஞ்சம் என்ற பறவையின் பெயர் அமைந்த மலையினையும், ஆழமாகிய நெடிய கடலினையும் ஒரு சேர உயிர் குடித்த அழகிய வேற்படையை உடைய முருகப் பெருமானின் படைவீடு ஆறனுள் முதல் வீடாக அமைந்த திருப்பரங்குன்றம் சூழ்ந்திட உயர்ந்துள்ள நான்கு மாடங்களை உடைய கூடலாகிய அழகிய மதுரை நகரத்திற்குரிய தலைவனாகிய சிவபெருமானின் திருவடி களைத் தலையில் தாங்குவதற்குக் காரணமாகிய யோகப் பயிற்சி உடையவரைப் போல, நெடிய பாலை நிலத்தை நீங்க வேண்டித் தம்முடைய கால்களைச் சுடுகின்ற வெப்பத்தை ஆற்றிக் கொண்ட அடிச்சுவடுகளே இவ்விடத்தில் காணப்படுகின்றன. (அவை தலைவன், தலைவியினுடைய சுவடுகள் என்பதால்) அவர்கள் சென்ற நெறி இதுவேயாகும். (37-44)

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 237ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. செவிலித்தாய் தலைவனையும் தலைவி யையும் தேடிச் சென்றாள். முதலில் அவ்விருவரும் நடுகல்லைப் பார்த்ததைக் கண்டும், புலி பட்டதைக் கண்டும், அதை மறைந் திருந்து பார்த்த வேடர்களின் சுவடு கண்டும், ஆறலைக் கள்வர் உடல் தூளானது கண்டும், பாறையில் உதிர்ந்த பூவோடு தலையணிப் பூ உதிர்ந்தது கண்டும், பாலை நிலத்தில் ஆற்றிக் கொண்ட சுவடு கண்டும் இரங்கிக் கூறிய செய்திகள் இப்பாடல் பொருளாக அமைந் துள்ளது. சிவபெருமானின் சிறப்பாக, நன்மையையும் தீமை யையும், ஒளியையும் இருளையும் தன்னகத்தே கொண்டது போல உமையவளை ஒருபாகத்தில் கொண்டவன் என்பது கூறப் பட்டுள்ளது.

Koviloor Digital Library

(சொ-ம்)

நிணம் - தசை, கல்லுழை நின்றோர் - நடுகல்லில் நின்றோர், மாக்கடிப்பு - மரக்கம்பு போன்ற ஆயுதம், கிராதர் - வேடர், தாபதர் - துறவோர், அதகம் - மருந்து, கற்பதுக்கை - கற்பாறை, கோளினர் - யோகம் கற்றவர்.

7. நற்றாய் வருந்தல்.

பொடித்து அரும்பாத சின் முலைக் கொடி மடந்தையள்,
மணி மிளிர் பெருங் கட்கு இமை காப்பு என்ன,
விழித்துழி விழித்தும், அடங்குழி அடங்கியும்,
தன்னை நின்று அளித்த என்னையும் ஒருவுக,
பல் மணிக் கலன்கள் உடற்கு அழகு அளித்தென,
சுற்று உடுத்து ஓங்கிய ஆயமும் துறக்குக,
பிணிமுக - மஞ்ஞை செருமுகத்து ஏந்திய
மூ- இரு திருமுகத்து ஒரு வேலவற்கு,
வான் உற நிமிர்ந்த மலைத்தலை முன்றிலின்,
மனவு அணி மடந்தை, வெறியாட்டாளன்,
வேல்மகன், குறத்தி, மா மதி முதியோள் -
தொண்டகம் துவைப்ப, முருகு- இயம் கறங்க -
ஒருங்கு வந்து, இமையா அருங் கடன் முற்றிய
பின்னர், நின்று ஏற்ற கைத்தாயையும் பிழைக்குக,
கருந் தலைச் சாரிகை, செவ் வாய்ப்ப பசுங்கிளி,
தூவி அம் தோகை, வெள் ஓதிமம், தொடர் உழை,
இவையுடன் இன்பமும் ஒருவழி இழக்குக,
(சேயிதழ் இலவத்து உடைகாய்ப் பஞ்சி
புகை முரிந்து எழுந்தென விண்ணத்து அலமர,
குழை பொடி கூவையின் சிறை, சிறை தீந்த
பருந்தும் ஆந்தையும் பார்ப்புடன் தவழ,
உடை கவட்டு ஓமை உலர் சினை இருக்கும்
வளை கட் கூகையும் மயங்கி வாய் குழற,
ஆசையின் தணியா அழல் பசி தணிக்கக்
காளிமுன் காவல் காட்டி வைத்து ஏகும்
குழிகட் கரும் பேய் மகவு கண் முகிழ்ப்ப,
வேம் உடல் சின்னம் வெள்ளிடை தெறிப்ப,
நெடுந் தாட் குற்றிலை வாகை நெற்று ஒலிப்ப,
திசை நின்று எழாது, தழல் முகம் தெறிப்ப,

Koviloor Digital Library

சுடலையில், சூறை இடை இடை அடிக்கும்
பேர் அழற் கானினும், நாடும் என் உளத்தினும்,
ஒரு பால் பசுங்கொடி நிறை பாட்டு அயர,
பாரிடம் குனிப்ப, ஆடிய பெருமான்)
வையகத்து உருவினர் மலர் ஆவறிவினைப்
புலன் நிரை மறைத்த புணர்ப்பு-அதுபோல,
குளிர் கொண்டு உறையும் தெளிநீர் வாவியை
வள்ளை, செங்கமலம், கள் அவிழ் ஆம்பல்,
பாசடை மறைக்கும் கூடல் பெருமான்
செந் தாள் விடுத்து உறை அந்தர்கள் தம்மினும்,
மூவாத் தனி நிலைக்கு இருவரும் ஓர் உயிர்
இரண்டு எனக் கவைத்த நல் அரண் தரு தோழியை,
செரு விழும் இச்சையர், தமது உடல் பெற்ற
இன்புகள் நோக்கா இயல்பு - அது போல,
மருங்கு பின் நோக்காது, ஒருங்கு விட்டு அகல,
பொருந்தியது, எப்படி, உள்ளம்-
அருந் தழற் சுரத்தின் ஒருவன் அன்பு எடுத்தே?

துறை விளக்கம் :

தலைவி தலைவனோடு உடன் போயினமை கேட்டு உள்ளத்தில் மகிழ்ந்தாலும், முன்பின் தெரியாத ஒருவனோடு தன் தோழியை விட்டும், தன்னை மறந்தும் ஊர் அலர் தூற்றவும் அருஞ்சுரம் போயினாள் என்மகள். இனி யான் எங்ஙனம் ஆற்றுவேன்? என்று நற்றாய் வருந்திக் கூறியது.

பாடற்பொருள்:

கருமணி போல் திகழுகின்ற பெரிய கண்களை இமைகள் பாதுகாப்பது போல, வெளிப்பட்டு முதிராத இரண்டு முலைகளை உடைய பூங்கொடி போலும் மடப்பத்தை உடைய என் மகள், விழித்தபோது விழித்தும், அவள் தூங்கியபோது தூங்கியும் நீங்காது இருந்து அவளைப் பாதுகாத்த தாயாகிய என்னையும் பிரிந்து செல்லினும் செல்க. *(1-4)*

அன்றியும் உடலுக்குப் பல்வேறு மணிகளால் ஆகிய அணி கலன்கள் அழகூட்டுவது போல, தன்னைப் பக்கங்களில் இருந்து அணி செய்து மேம்பட்ட தோழியர் கூட்டத்தை நீங்கினும் நீங்குவாளாக. *(5-6)*

Koviloor Digital Library

பிணிமுகம் என்னும் யானையினையும் மயிலினையும் ஆறுமுகத்தினையும் போர் முகத்தெடுத்த ஒப்பற்ற வேலினையும் உடைய முருகனுக்கு, வானளவு உயர்ந்த மலையின் முற்றத்தின் கண் அக்குமணி அணிந்த மடந்தையும், தெய்வம் ஏறி ஆடுகின்ற வேலனும், கட்டுவிச்சியும், முதுபெண்டிரும் முரசு முழங்க, வெறியாட்டுப்பறை முழங்க, ஒருங்கு சேர்ந்து பூசைகள் முடித்த பின்னர், தன்னைக் கைகளால் தழுவிக் கொண்ட செவிலித் தாயையும் பிரிந்து செல்லினும் செல்க. *(7-14)*

மேலும் கரிய தலையினை உடைய நாகணவாய்ப் புள்ளும், சிவந்த வாயினை உடைய கிளியும், அழகிய இறக்கைகளைக் கொண்ட மயிலும், வெள்ளை அன்னமும், மானும் ஆகிய இவை களோடு ஆடி நுகருகின்ற இன்பத்தையும் துறந்து செலினும் செல்க. *(15-17)*

சிவந்த மலர்களை உடைய இலவமரத்தின் வெடித்த காயினுள் இருக்கும் பஞ்சுக் கூட்டம் - தீயின் கண் உண்டாகிய புகை எழுந்தாற் போல, ஆகாயத்தில் சுழன்று நிற்க,

இலை கரிந்த கூவைச் செடியின் பக்கத்தில் சிறகுகள் கரிந்த பருந்தும் ஆந்தையும் தத்தம் குஞ்சுகளோடு தவழ, பிளந்த கிளை களை உடைய ஓகை மரத்தின் உயர்ந்த கிளைகளில் இருக்கும் வளைந்த கண்களை உடைய கூகைகள் மனம் மயங்கி வாய் குழறி நிற்க,

தணியாத ஆசையைப் போல தணியாது இருக்கும் பசியாகிய நெருப்பைத் தணிக்கும்படி காளிக்கு எதிரே காவலாகக் கட்டி வைத்துப் போகின்ற, குழிந்த கண்களை உடைய பேயின் பிள்ளை கள் கண்ணை மூடும்படி அங்கு வேவுகின்ற பிணத்தின் உடற் குறைகள் வெடித்துச் சிதற,

நெடிய தாளினையும், சிறிய இலையினையும் உடைய வாகை மரத்தின் முதிர்ந்த காய்கள் ஒலிக்க விளங்கும் இத்தகைய சுடுகாட்டில் சூறைக்காற்று திசைகளிலிருந்து எழாமல் இடை யிடையே தோன்றி தீயை அள்ளிக்கொண்டு வானில் உயர்ந்து விட்டுவிட்டுச் சுழல்வதற்கு இடமாகிய பெரிய அழற் காட்டின் கண்ணும், விரும்புகின்ற என் நெஞ்சமாகிய இடத்திலும் - இடப்

Koviloor Digital Library

பாகத்தில் இருக்கும் பூங்கொடி போன்றவளாகிய உமையம் மையார் ஆடலுக்கு ஏற்பப் பாடலைப் பாடவும், பேய்க் கூட்டங் கள் மகிழ்வோடு கூத்தாடவும், கூத்தாடிய பெருமான் சிவ பெருமான் ஆவார். (23-33)

நிலவுலகத்தில் உடலோடு பிறக்கும் மக்களுடைய கல்வி கேள்விகளால் மலராத சிற்றறிவினை - சுவை முதலிய ஐந்து புலன்களும் மறைத்த செயல்போல, குளிர்ச்சியோடு விளங்கு கின்ற நீரையுடைய குளத்தை - வள்ளைக்கொடி, செந்தாமரை, ஆம்பல் முதலியவற்றின் இலைகள் மறைத்து நிற்கும். அத்தகைய மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரப் பெருமானின் அழகு பொருந்திய திருவடிகளை மறந்து வாழ்கின்ற அறிவுக் கண் இல்லாதவரைக் காட்டிலும் ஒப்பற்ற - தாம் செய்கின்ற செயலின் கண் இருவரும் ஒருவருக்கு ஒருவர் முந்திப் போகாத தன்மை உடையவராய் - இவ்விருவருக்கும் உடல் மட்டும் இரண்டு என்று கூறும்படி வேறுபட்டுத் தம்மைப் பாதுகாத்து அருள் செய்யும் தன்னுடைய தோழியைப் பிரிந்து, (34-41)

போரின்கண் ஏற்பட்ட ஆசையால் வீரர்கள் தம்முடைய உடம்பினால் நுகருகின்ற இன்பங்களைப் பொருளாகக் கருதாத தன்மைபோல, மற்றொருத்தியின் மகன் (தலைவன்) காட்டிய அன்பை மேற்கொண்டு, தீயைப் போன்ற பாலை நிலத்தின்கண் செல்ல என் மகளின் நெஞ்சம் ஒருப்பட்டது எவ்வாறு? இனி யான் எங்ஙனம் ஆற்றுவேன்? என்று நற்றாய் கூறினாள். (42-46)

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 230 ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் நற்றாய் ஒருத்தி தன்மகள் உடன்போக்குப் போனதை அறிந்து, அவள் யார் யாரை, எத்தகைய பொருளைப் பிரிந்து சென்றிருக்கிறாள் என்பதைச் சுட்டிக்காட்டி, வேறொருத்தி பெற்ற மகனாகிய தலைவனோடு தலைவி சென்று விட்டாள், அதனை எங்ஙனம் ஆற்றுவேன்? என்று கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. சிவபெருமானின் சிறப்பைக் கூறுகின்ற பொழுது சுடுகாட்டின் காட்சியைப் பலவாறு சித்தரித்து, அச் சுடுகாட்டில் உமையவள் பாடவும், பேய்க் கூட்டங்கள் உடன் கூத்தாடவும் கூத்தாடியவர் என்று சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ.-ம்)

ஆயம் -தோழியர் கூட்டம், மனவுஅணி- அக்குமணி, தொண்டகம் - முரசு, முருகு - பறை, கைத்தாய் - செவிலித்தாய், பாரப்பு - குட்டி, உடல்சின்னம் - உடற்பாகங்கள், சுடலை - சுடுகாடு, வாவி - குளம், இச்சையர் - விரும்பும்வீரர், ஒருவன் - தலைவன்.

8. செலவு நினைந்து உரைத்தல்

உயிர் புகும் சட்டகம் உழிதொறும் உழிதொறும்
பழவினை புகுந்த, பாடகம் போல,
முதிர் புயல் குளிறும் எழு மலை புக்க
கட்டுடைச் சூர் உடல் காமம் கொண்டு
பற்றி உட்புகுந்து, பசுங் கடல் கண்டு,
மாவொடும் கொன்ற மணி நெடுந் திரு வேல்
சேவல் அம் கொடியோன் காவல் கொண்டிருந்த
குன்றம் உடுத்த கூடல் அம் பதி இறை,
தொடர்ந்து உயிர் வவ்விய விடம் கெழு மிடற்றோன்
(புண்ணியம் தழைத்த முன் ஓர் நாளில்,
இரு விரல் நிமிர்த்துப் புரிவொடு சேர்த்தி,
குழை உடல் தலை விரி கைத்திரி கறங்க.
ஒரு விரல் தெறித்தும், ஐவிரல் குவித்தும்,
பெரு வாய் ஒரு முகப் படகம் பெருக்க,
தடா உடல் உம்பர்த் தலை பெறும் முழவம்
நான் முகம் தட்டி, நடு முகம் உரப்ப,
ஒரு வாய் திறந்து உள் கடிப்பு உடல் விசித்த
சல்லரி அங்கைத் தலை விரல் தாக்க,
கயந்தலை அடி என, கயிறு அமை கைத்திரி,
இரு விரல் உயர்த்திச் செரு நிலை, இரட்ட,
இரு தலை குவிந்த நெட்டுடல் - தண்ணுமை
ஒரு முகம் தாழ்த்தி, இரு கடிப்பு ஒலிப்ப,
திருமலர் எழுதிய வரை இருபத்தைந்து
அங்குலி இரண்டு இரண்டு அணைத்து விளர் நிறீஇ,
மும் முகக் கயலுடன் மயிர்க் கயிறு விசித்த
கல்லவடத் திரள் விரல் - தலை கறங்க,
மரக்கால் அன்ன ஒருவாய்க் கோதை
முகத்தினும் தட்ட, மூக்கினும் தாக்க,
நாடு இரு முனிவர்க்கு ஆடிய பெருமான்

Koviloor Digital Library

திருவடி வினவாக் கரு உறை மாக்கள்
நெஞ்சினும் கிடந்து நிண்ட வல் இரவில்,
செல்லவும் உரியம், தோழி, நில்லாது-
எம் எதிர்வு இன்றி, இருந்து எதிர்ப்பட்டு,
மறைவழி ஒழுகா மன்னவன் வாழும்
பழி நாட்டு ஆர்ந்த பாவம் போலச்
சேர மறைத்த கூர் இருள் நடு நாள்,
'அரிதின் போந்தனிர்' என்று, ஓர்
பெரிது இன் வாய்மை வெற்பனின் பெறினே!

துறை விளக்கம்:

தலைமகன் திருமணத்திற்கு உடன்படாமையின் தோழி அவனுடன் சினந்து பேசினாள். அப்பேச்சின் குறிப்பறிந்து தலைவியின் கூற்றாக அமைந்தது இப்பாடல். இக் கூற்றில் இரவு நேரத்தில் தலைவனைக் காண்பதற்காகக் கடினப்பட்டுக் குறி யிடத்திற்கு வருகின்ற எம்மைப் பார்த்து, 'எவ்வாறு வந்தீர்' என்ற சொல்லைத் தலைவன் சொல்ல, நாங்கள் கேட்டால் மகிழ்வாக இருக்கும். என்று தன்னுடைய குறியிடத்துச் செலவினை நினைந்து தலைவி கூறியதாகும்..

பாடற் பொருள்:

உயிர் தங்குவதற்கு இடமாகிய உடம்புகள் தோறும் - காலில் அணிகின்ற பாடகம் என்ற அணி எவ்வாறு காலைச் சுற்றிக் கிடக்கின்றதோ: அதுபோல உடம்பைச் சுற்றிக் கிடக்கும் பழ வினையானது உடம்பில் தங்கியிருக்கின்ற உயிரைக் கொல்லுவ தற்கு விருப்பம் கொண்டு, (அப்பழவினை) உடலில் புகுந்தாற் போல,

மேகங்கள் ஒலிக்கின்ற ஏழு மலைகளிலும் புகுவதற்குரிய வலிமையான கட்டுடலைக் கொண்ட சூரபதுமனின் உடலைக் கொல்லுதற்கு விருப்பம் கொண்டு, அவனைத் தொடர்ந்து சென்று *(1-5)*

கடலில் புகுந்து பசிய கடலில் அவனைக்கண்டு அவன் மறைந்த மாமரத்தோடு அவனைக் கொன்ற வீரமணி கட்டிய அழகிய நெடிய வேலினையும், சேவற் கொடியினையும் உடைய முருகப் பெருமான் *(6-7)*

Koviloor Digital Library

காவல் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பரங் குன்றத்தைக் கொண்ட அழகிய மதுரையில் வாழும் இறைவனாகிய உயிரைக் கொல்லும் நஞ்சு பொருந்திய கழுத்தினைக் கொண்ட சிவபெருமான், *(7-9)*

புண்ணியம் மிக்க பூசநாளில் இரண்டு விரல்களையும் சேர்த்து நன்றாக நிமிர்த்தி ஓசை எழுப்புவதற்காக அடிக்கின்ற, குழைந்த உடற் பகுதியும், பரந்த தலைப்பகுதியும் உடைய இடக்கை என்னும் இசைக்கருவி முழங்கவும், *(10-12)*

பரந்த வாயினையும், ஒரே முகத்தினையும் உடைய படகம் என்னும் இசைக்கருவியிடத்து ஒரு விரலைக் கொண்டு அடித் தலானும், ஐந்து விரல்களைச் சேர்த்து மடக்கி அடிப்பதனாலும் ஓசை மிக்கு முழங்கவும், *(12-14)*

தனது பெரிய உடலின் மேல் தலையினைப் பெற்ற முழவம் என்னும் தோற்கருவி தன் நான்கு முகங்களிலும் , நடு முகத்திலும் தட்டுதலால் ஒலியை எழுப்பி நிற்கவும், *(15-16)*

ஓரிடத்தைத் திறந்து குமிழினை உள்ளே கட்டிய உடலினை உடைய சல்லரி என்னும் இசைக் கருவியை உள்ளங்கையாலும், நுனி விரலாலும் அடித்தலால் ஓசை ஒலிக்கவும், *(17-18)*

யானைக்கன்றின் அடிபோலத் தலையை உடைய கயறுகள் பொருந்திய துடி என்னும் இசைக் கருவி இரு விரலைச் செருகி அடித்தலால் உயர்ந்த ஓசை எழவும், *(19-20)*

இரண்டு தலைகளையும், குவிந்துள்ள நீண்ட உடலினையும் உடைய தண்ணுமை என்னும் தோற்கருவியின் ஒருமுகத்தைத் தாழச் செய்து மற்றொரு முகத்தை உயர்த்தி, அதன்கண் இரண்டு குறுந்தடிகளைக் கொண்டு அடித்தலால் ஓசை முழங்கவும், *(21-22)*

தாமரை மலர் எழுதப் பெற்ற இருபத்திஐந்து அங்குலம் வரையில் இரண்டு இரண்டு விரலாக அணைத்து விளரிப் பண்ணை நிறுத்தி - மூன்று முகங்களை உடைய மயிற் கயிறு கட்டிய கல்ல வடத்திரள் என்னும் இசைக்கருவியை விரலால் தாக்கியதால் ஓசை எழவும், *(23-26)*

Koviloor Digital Library

அளவு கருவியாகிய மரக்காலினை ஒத்த ஒருவாய்க்கோதை என்னும் கருவியின் முகத்திலும் அதன் மூக்கிலும் அடித்து ஓசை எழுப்பவும், *(27-28)*,

தன்னை நாடி வந்த பதஞ்சலி, வியாக்கரபாதர் என்னும் இரு முனிவர்களுக்காக இறைவன் திருக்கூத்து ஆடினான். *(29)*

அத்தகையவனின் திருவடிகளை நாளும் நினையாமையால் எய்திய பிறப்பினை உடைய மக்களின் நெஞ்சத்தில் உள்ள இருளைக் காட்டிலும் பெரிதும் இருண்ட இரவின்கண், தோழியாகிய நீர் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் எமக்கு எதிரே அரிதாக வந்தீர் என்று ஒரு இனிய வார்த்தையைத் தலைவனால் பெற்றோமானால்,

நீதியின் வழி ஒழுகாத வேந்தன் வாழுகின்ற நாட்டைப் பழி எய்தியதால் ஏற்பட்ட பாவம் ஒருசேர மறைந்தாற்போல, உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் மறைக்கின்ற இந்த இருளைக் கொண்ட யாமத்தில் யாம் கணப்பொழுதும் தயங்காது செல்லவும் கூடுமே என்று தலைவி கூறினாள். *(30-38)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 230 ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. பாடலில் உயிர்களை ஊழ் வினை யானது காலில் கட்டுகின்ற பாடக அணி போல சிறிதுகூட இடை வெளி விடாது சூழ்ந்திடும் என்று கூறப்பட்ட செய்தி சிறப்புடைய தாகும். ஊழ்வினை எவ்வாறு உடலில் புகுந்து கொலலுகின்றதோ அதுபோலச் சூரபதுமனை இடைவிடாது பின் தொடர்ந்து சென்று, முருகன் கொன்றான் என்று உவமையுடன் கூறப்பட்டதும் சிறப் புடையது. மேலும் பாடலில், சிவபெருமான் சிறப்பாகப் பதஞ்சலி, வியாரக்கிரர் என்ற இரண்டு முனிவர்களுக்காகப் பல இசைக்கருவிகள் முழங்க நடனம் ஆடினான் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

(சொ.-ம்)

சட்டகம் - உடம்பு, உழிதொறும் - உடம்புதோறும், பாடகம் - காலில் அணிகின்ற அணிகலன், மாவொடு - மாமரத்தொடு,

Koviloor Digital Library

புண்ணிய நாள் - பூசநாள், இருமுனிவர் - பதஞ்சலி, வியாக்கிர முனிவர், மறைவழி ஒழுகார் - நீதிவழி செல்லார்.

9. தூது கண்டு அழுங்கல்

வளைந்து நின்று உடற்றும் மலி குளிர்க்கு உடைந்து
முகில் -துகில் மூடி மணி நெருப்பு அணைத்துப்
புனம் எரி கார்-அகில் புகை பல கொள்ளும்
குளவன் வீற்றிருந்த வளர் புகழ்க் குன்றமும்,
புதவு தொட்டெனத் தன் புயல் முதிர் கரத்தினை
வான் முறை செய்த கூன் மதிக் கோவும்,
தெய்வம் அமைத்த செழுந் தமிழ்ப் பாடலும்,
ஐந்தினில் பங்கு செய்து இன்பு வளர் குடியும்,
தவல் அருஞ் சிறப்பொடு சால்பு செய்து அமைந்த
முது நகர்க் கூடலுள் - மூவாத் தனி முதல்
(ஏழ் இசை முதலில் ஆயிரம் கிளைத்த
கானம் காட்டும் புள்-அடித் துணையினர்
பட்டடை எடுத்து, பாலையில் கொளுவி,
கிளையில் காட்டி, ஐம் முறை கிளத்தி,
குரலும் பாணியும் நெய்தலில் குமட்டி,
விளரி எடுத்து, மத்திமை விலக்கி,
ஒற்றைத் தாரி ஒரு நரம்பு இரட்ட,
விழுந்தும் எழுந்தும் செவ்வழி சேர்த்தி,
குருவி விண் இசைக்கும் அந்தரக் குலிதம்
புறப்படு பொதுவுடன் முல்லையில் கூட்டி,
விரிந்தவும் குவிந்தவும் விளரியில் வைத்து,
தூங்கலும் அசைத்தலும் துள்ளலும் ஒலித்தலும்
ஆங்கு-அவை நான்கும் அணி உழை ஆக்கி,
பூரகம், கும்பகம், புடை எழு விளரி,
துத்தம், தாரம், கைக்கிளை, அதனுக்கு
ஒன்றினுக்கு ஏழு நின்று நனி விரித்து,
தனி முகம் மலர்ந்து தம் இசை பாட,
கூளியும் துள்ள, ஆடிய நாயகன்)
இணை அடி ஏத்தும் இன்பினர்க்கு உதவும்
திருவறம் வந்த ஒருவன் தூதுகள்,
இன்பமும், இயற்கையும், இகழாக் காமமும்,
அன்பும், சூளும், அளியுறத் தந்து, என்
நெஞ்சமும், துயிலும், நினைவும், உள்ளமும்,

Koviloor Digital Library

நாணமும், கொண்ட நடுவினர் - இன்னும்
கொள்வதும் உளதோ? கொடுப்பதும் உளதோ?
செய் குறி இனிய ஆயின்,
கவ்வையின் கூறுவிர், மறைகள் விட்டு எமக்கே

துறை விளக்கம்:

தலைவியிடம் தூது வந்தது என்று தோழி கூறினாள். அதனைக் கேட்டுத் தலைவி மகிழ்ந்து வந்த தூதினைப் பார்த்து இது அயலவர் தூதாகும், எம் காதலர் தூது இன்னும் வரவில்லை என்று அயலவர் தூதைக் கண்டு வருந்திக் கூறினாள்.

பாடற் பொருள்:

தம்மைச் சூழ்ந்து வருத்துகின்ற குளிருக்கு ஆற்ற முடியாது வருந்தி, முகிலாகிய போர்வையைப் போர்த்திக் கொண்டும், தம்பால் உள்ள மணிகளாகிய நெருப்பினைத் தன் மேனியில் அணைத்துக் கொண்டும், தினைப் புனத்தில் தீ மூட்டி அந்தத் தீயின் வெப்பத்தையும் அணைத்துக் கொள்ளுகின்ற குன்றக் குரவர்களால் மூட்டப் பெற்ற அகில் புகையினைப் பெற்றிருக் கின்ற, முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, புகழ் ஓங்கிய திருப்பரங்குன்றமும், *(1-4)*

கீரந்தை என்பவனின் வீட்டுக் கதவினை அவன் இல்லாத போது தட்டிய குற்றத்திற்காகத் தன்னுடைய மேகம் போன்ற கொடையினை உடைய கையை வாள் கொண்டு வெட்டி, அரசு முறை காத்த , சந்திர வம்சத்தில் வந்த பொற்கைப் பாண்டியனும், சோமசுந்தரக் கடவுளால் கூறப்பட்ட வளமான தமிழ்ச் செய்யுளும், தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல், தான் என்ற ஐந் தினையும் அறநெறியால் காத்து, அதனால் வரும் இன்பத்தை வளர்க்கின்ற நல்ல குடிமக்களும், கெடுதல் இல்லாத சிறப்போடு இருக்கின்ற, பெருமை பெற்று விளங்குகின்ற இடமான *(5-9)*

பழைய நகராகிய மதுரையின்கண் மூவாத நிலையை உடைய ஒப்பற்ற கடவுளாகிய சிவபெருமான் *(10)*

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையின் மூலம் பிறந்த பண்கள் தோன்றுவதற்குக் காரணமான இசைத்தமிழை, பறவைகளின் கால் போன்ற

Koviloor Digital Library

திருவடிகளை உடைய இரட்டையராகிய தும்புரு, நாரதர் இருவரும் இளி என்னும் இசையைக் குரலாக் கொண்டு, கோடிப் பாலை முதலிய ஏழு பாலைப் பண்களை யாழிலே தோற்றுவிக்க, *(11-13)*

குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்னும் கிளை நரம்புகள் ஐந்தினையும் தனித்தனியே ஐந்து முறையாக இசைத் தும், குரல் என்னும் இசையையும் அதற்குரிய தாளத்தையும் நெய்தல் பண்ணில் சேர்த்தும்,

விளரி குரலாகத் தொடங்கி பகை நரம்பாகிய உழையை விடுத்துத் தாரம் பெற்ற இரண்டு அலகை ஒன்றை விளரியோடு கூட்டி, அத்தாரம் கொண்ட இரண்டு அலகில் விளரிக்கு ஈந்த ஓரலகு ஒழிய, எஞ்சி நின்ற ஒற்றையாகிய தாரபாகம் குரலொடு இணைத்துத் துத்தமாக ஒலிக்க, ஆரோசையாகவும், அமரோசை யாகவும், இசைத்துச் செவ்வளி என்னும் பண்ணை ஒலிக்க,

பறவை விண்ணில் இசைத்தாற் போல இசைக்கும் உழை என்னும் இசையோடு பொதுவாகிய இசைகளோடு முல்லைப் பண்ணை இசைத்தும், *(14-20)*

விளரியின் கண் ஆரோசைகளையும் அமரோசைகளையும் இணைத்துத் தூங்கல், அசைத்தல், துள்ளல், ஒலித்தல் என்னும் இசை நான்கையும் அழகிய உழை என்னும் கருவியில் ஒலிக்க, அவ் உழையோடு அதன் அயலில் எழுகின்ற விளரியும், துத்தமும், தாரமும், கைக்கிளையும் ஆகிய ஐந்திற்கும் ஒவ்வொன்றிற்கும் ஏழு ஏழு இசையாக ஒலிக்க, ஒப்பற்ற இறைவனின் முகம் இன்பத்தாலே மலர்ந்தது. பேய்கள் மகிழ்ந்து கூத்தாடின. இவ்வாறு இசையும் கூத்துமாக ஆடிய சிவபெருமானது இரண்டாகிய திருவடிகளைப் பாடிப் பரவுகின்ற மெய்யடியார்களுக்கு வேண்டுவன எல்லாம் குறிப்பறிந்து அவ்விறைவன் வழங்குவான். அத்தகைய கடவுளால் அனுப்பப் பெற்ற தூதர்களே, *(21-30)*

பேரின்பத்தையும், இயல்பான காமத்தையும், அதற்குக் காரண மான அன்பினையும் நான் ஐயுற்று வருந்தாதபடி, நின்னைப் பிரியேன் என்னும் சத்தியவார்த்தையைக் கூறி, பிரிந்தால் இன்னது ஆவேன் என்ற சூள்மொழியையும் வழங்கி, அவற்றிற்குப் பண்ட

Koviloor Digital Library

மாற்றாக என் நெஞ்சத்தையும் தூக்கத்தையும், நினைவையும் கைக் கொண்டு சென்ற நடுநிலை தவறாத தலைவர் ***(31-34)***

என்னிடம் கைக்கொள்ளுவதற்கும் அவர் என்னிடம் பெறுவ தற்கும் ஏதேனும் பொருள் உளதோ, யான் அறியேன், அவர் உங்களிடம் கூறி விடுத்த குறிப்பு மொழிகள் என் துயரைப் போக்கும் என்றால் அவற்றை நீங்கள் மறைக்காமல் வெளிப் படையாகக் கூறுங்கள் என்று தலைவி தூதுவர்களிடம் கூறினாள். ***(35-37)***

(வி-ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **281** ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. பாடலில் சிவபெருமானால் அனுப்பப் பெற்று வந்த தூதுவர்களைப் பெருமையாகக் கருதி அவர்களிடம் காதலன் விடுத்த தூதுரைகள் இருக்குமானால் அவற்றைக் கூறலாம் என்ற செய்தி அமைந்துள்ளமையால் இது பிறர் தூது கண்டு உரைத்தலாகக் கூறப்படுகிறது. பாடலில் சிவபெருமானின் பெருமையாகப் பலவிதமான இசைக் கருவிகள் ஒலிக்க, பேய்கள் உடன்நின்று ஆட, இறைவன் ஆடிய ஆட்டம் குறிக்கப் பெற்றுள்ளது.

(சொ-ம்):

வளைந்து - சூழ்ந்து, குளவன் - முருகன், புதவு - கதவு, கூன்மதி - வளைந்த சந்திர மரபு, ஐந்து - தென்புலத்தார் முதலிய ஐவர், மூவா - முதுமை அடையாத, இன்பினர் - மெய்த்தொண்டர், கௌவை - மறைத்தல்.

10. அறத்தொடு நிற்றல்

தன்னுழைப் பல உயிர் தனித்தனி படைத்துப்
பரப்பிக் காட்டலின் , பதுமன் ஆகியும்,
அவ் உயிர், எவ் உயிர், அனைத்தும் காத்தலின்,
செவ்வி கொள் கரு முகிற் செல்வன் ஆகியும்
கட்டிய கரை வரம்பு உட்புக அழித்து,
நீர் தலை தரித்தலின், நிமலன் ஆகியும்,
தருவும் மணியும் சங்கமும் கிடைத்தலின்,
அரி முதிர் அமரர்க்கு அரசன் ஆகியும்,

Koviloor Digital Library

மூன்று அழல், நான்மறை, முனிவர் தோய்ந்து,
மறை நீர் உகுத்தலின், மறையோன் ஆகியும்,
மீனும், கொடியும், விரிதிணை ஐந்தும்,
தேன் உறை தமிழும், திரு உறை கூடலும்
மணத்தலின், மதிக் குல மன்னவன் ஆகியும்,
நவ மணி எடுத்து நல் புலம் காட்டலின்,
வளர் குறி மயங்கா வணிகன் ஆகியும்,
விழைதரும் உழவும், வித்தும், நாறும்,
தழைதலின், வேளாண் தலைவன் ஆகியும்,
விரிதிரை வையைத் திரு நதி சூழ்ந்த
மதுரை அம் பதி நிறை மைம்மலர்க் களத்தினன் -
இணை அடி வழுத்தார் அணை தொழில் என்ன,
கைதைஅம் கரை சேர் பொய்தற் பாவையோடு,
இரு திரை எடுக்கப் பொருதிரை எடுத்தும்,
பூழிப் போனகம் பொதுவுடன் உண்டும்,
சாய் தாள் பிள்ளை தந்து கொடுத்தும்,
முட உடற் கைதை மடல் முறித்திட்டும்,
கவைத் துகிர்ப் பாவை கண்ணி சூடக்
குவலயத் திரு மலர் கொணர்ந்து கொடுத்தும்,
நின்றான் உண்டு ஒரு காளை,
என்றால், இத் தொழில் செய்வது புகழே?

துறை விளக்கம் :

வெறியாட்டினால் நிகழப் போவது எது என்று தெரியாததால் அதனைத் தடைப்படுத்தத் தன்னுடைய தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றலாகும்.

பாடற்பொருள்:

மீன் முதலிய பல உயிர்களையும் தனித்தனியாகப் படைத்துத் தன்னிடத்தில் பரப்பிக் காட்டுதலால் பிரமனாகவும்,

தன்னிடத்தில் உண்டான உயிர் அனைத்ததையும், மற்ற உயிர்கள் எல்லாவற்றையும் காத்தலால் அழகைக் கொண்ட கரு மேகம் போன்ற திருமாலாகவும்,

தான் வரம்பு இகந்து ஓடாது கரைகள் அழிய வழிந்து நீரானது தலைமையாக விளங்குதலால் சிவனாகவும்,

Koviloor Digital Library

சோலையும், மணிகளும், சங்குகளும் கிடைக்கப் பெறு தலால் மிகுந்த கண்ணினை உடைய இந்திரனாகவும்,

முத்தீயினையும், நான்மறையையும் கொண்ட முனிவர்கள் மூழ்கும்படி நீரைக் கொடுத்தலால் வேதியனாகவும்,

மீன்களும் கொடிகளும் குறிஞ்சி முதலாக விரிந்த நிலம் ஐந்தும், தேன் நிறைந்த தமிழும், திருமகள் பொருந்திய மதுரையும் பொருந்துதலால் சந்திர வம்சத்துப் பாண்டிய மன்னனாகவும்,

புதிய மணிகளை எடுத்து நல்ல இடங்கள் தோறும் காட்டுதலால் இலக்கணம் மாறாத வணிகனாகவும்,

விரும்பப்படும் உழவும் வித்தும் நாற்றும் தழையப் படுதலால் வேளாண் தலைவனாகவும், *(1-17)*

விளங்குகின்ற விரிந்த அலைகளை உடைய வையை ஆகிய அழகிய நதியை உடுத்திய மதுரை நகரில் எழுந்தருளியுள்ள, குவளை மலர் போலக் கண்டத்தினை உடைய இறைவனின் இரண்டு திருவடிகளையும் வழுத்தாதார் பொருந்திய தொழில் போல *(18 - 20)*

முன்பு ஒருநாள் தாழைகள் பூத்த அழகிய கடற்கரைக் கண்ணே யாம் விளையாடுவதற்கு மணலால் இயற்றிய சிறு வீட்டின்கண் நமது பைஞ்சாய்ப் பாவையோடு இருந்த போது, அலையை உடைய கடல் என்னையும், என் பாவையையும் இழுத்துக் கொண்டு போக - அப்பொழுது அங்கு நின்ற தலைவன் கடல் அலையிலிருந்து என்னை எடுத்தும், புழுதியால் யாம் அமைத்த சிறுசோற்றை உண்டும், புதிய பைஞ்சாய்ப் பாவையைப் பண்ணிக் கொடுத்தும், வளைந்த மடலை உடைய தாழை மலரை முறித்து என் தலையில் இட்டும் நமது பாவைக்கு மாலை சூட்டுவதற்காகக் குவளை மலரைக் கொண்டு வந்து கொடுத்தும், அவன் இவ்வாறு தொழில்களைச் செய்தான் என்றால், இப் பொழுது எடுக்கின்ற வெறியாட்டால் நம் குடிக்குப் புகழ் இல்லை. (இவ்வாறு அறத்தொடு நின்ற என் சொல்லை அறிந்து உனக்குத் தக்கவற்றைச் செய்வாயாக என்று தலைவி தோழியிடம் கூறினாள்.) *(21-29)*

Koviloor Digital Library

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 290ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. பாடலில் மதுரையில் ஓடுகின்ற வையை தன் நீர் வளத்தால் மீன் உள்ளிட்ட உயிரினங்களைப் படைத்தலால் நான்முகனாகவும், நீர் வளத்தால் உயிர்களைப் பாதுகாத்தலால் திருமாலாகவும், நீருக்கெல்லாம் தலைமையாக இருப்பதால் நீரைத் தலையில் சுமந்த சிவனாகவும், சோலை, மணி, சங்கு ஆகியவற்றைப் பெற்றிருப்பதால் கண்கள் மிகுந்த இந்திரனாகவும், முனிவர்கள் மூழ்கும்படி நீரை வழங்குதலால் அந்தணனாகவும், மீன் கொடி குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்கள், அந்நிலங்களில் தோன்றும் இனிய ரசனை போன்ற தமிழ் மொழி ஆகியவை தங்குவதற்கு உரிய இடமாதலால் பாண்டிய மன்னனாகவும், நவமணிகளைத் திரட்டி வந்து காட்டுவதால் வணிகனாகவும், உழவுத்தொழில் விதைகள், பயிர் ஆகியவை தழைக்க உதவுவதால் வேளாளர் ஆகவும் வருணிக்கப் பட்டுள்ளமை சிறப்பாகும். இத்தகைய வையை சூழந்த மதுரையில் எழுந்தருளியுள்ளவர் சிவபெருமான் என்று பெருமை கூறப்பட்டுள்ளது.

(சொ.-ம்)

பதுமன் - நான்முகன், கருமுகிர்ச்செல்வன் - திருமால், நிமலன் - சிவபெருமான், அமரர்க்கு அரசன் - இந்திரன், மூன்றுஅழல் - தாருகாபத்தியம், ஆகமநீயம், தக்கிணார்க்கினீயம், மறையோன் - அந்தணன், மதிக்குலமன்னன் - சந்திரன் வம்சத்தைச சார்ந்த பாண்டியன், கைதை - தாழம்பூ, பூழிப்போனகம் - புழுதியால் ஆகிய உணவு, சாய்தாட்பிள்ளை - பைஞ்சாய்ப்பாவை, இத்தொழில் - வெறியாட்டுத் தொழில்.

11. பரத்தையற் பிரிவு கண்டவர் கூறல்

வடி விழிச் சிற்றிடைப் பெரு முலை மடவீர்!-
தொழுமின், வணங்குமின் , சூழ்மின், தொடர்மின்,
கட்டுதிர் கோதை கடி மலர், அன்பொடு
முண்டக முகையின் முலை முகம் தருமின்,
உருளின் பூழி உள்ளுற ஆடுமின்,

Koviloor Digital Library

எதிர்மின், இறைஞ்சுமின், ஏத்துமின், இயங்குமின்,
கருப்புரம் துதைந்த கல் உயர் மணித் தோள்
வாசம் படரும் மருத்தினும் உறுமின்,
பெருங் கவின், முன்நாள், பேணிய அருந் தவம்
கண்ணிடை, உளத்திடை, காண்மின், கருதுமின்,
பூவும் சுண்ணமும் புகழந்து எதிர் எறிமின்,
யாழில் பரவுமின், இங்கு , இவை அன்றி,
'கலத்தும்' என்று எழுமின், கண்ணளி காண்மின்-
வெண்சுடர் செஞ்சுடர், ஆகிய விண்ணொடு,
புவி, புனல், அனல், கால், மதி புலவோன், என,
முழுதும் நிறைந்த முக்கட் பெருமான்
(பனிக் கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப் பெரு வதுவை பொருந்திய அந் நாள்,
சொன்றிப் பெரு மலை தின்று நனி தொலைத்த,
கார் உடல் சிறு நகைக் குறுந் தாட் பாரிடம்
ஆற்றாது அலந்த நீர் நசை அடக்க,
மறிதிரைப் பெரு நதி வரவழைத் தருளிய
கூடல் அம் பதி உறை குணப் பெருங் கடவுள்)
முண்டகம் அலர்த்தும் முதிராச் சேவடி
தரித்த உள்ளத் தாமரை ஊரன்
பொன் துணர்த் தாமம் புரிந்து ஒளிர் மணித் தேர்,
வீதி வந்தது, வரலான் நும்
ஏதம் தீர இரு மருங்கு எழுந்தே.

துறை விளக்கம்:

தலைமகன் புனலாட்டு விழாவிற்குப் பரத்தையர் சேரிக்கண் சென்றான். அப்பொழுது அவன் தேரினைக் கண்ட பரத்தையர்கள் தம்முள் "இவனைப் புணர்தற்குத் தக்க தவத்தினை முற்காலத்தில் செய்தவர்களே ,இவனுடைய தேர் வந்து தோன்றிற்று. இனிச் சென்று இவனது தோளினைத் தோய்மின்" என்று கூறிக்கொண்டனர்.

பாடற் பொருள்:

சந்திரன், சூரியன் என்ற சுடர்கள் தோன்றுவதற்குக் காரண மான ஆகாயமும், மண்ணும், நீரும், அனலும், காற்றும், மதிக்கும் புலவோன் (அறிவுள்ளவன்) ஆகிய, எங்கும் நிறைந்த மூன்று கண்ணினை உடைய பெருமான், சந்திர வம்சத்தவனாகிய

Koviloor Digital Library

மலையத்துவசன் பெற்ற அழகிய மும்முலைத் தடாதகையைத் திருமணம் செய்து கொண்ட நாளில், *(14-18)*

பெருஞ்சோற்று மலையை மிகவும் தின்று தொலைத்த கரிய உடலினையும், சிறிய நகையினையும், சிறிய தாளினையும் உடைய குண்டோதரன் தாகம் ஆற்றாது வருந்துதற்குக் காரணமாகிய நீர்வேட்கையை அடக்க, அலைகளை உடைய வையைப் பெரு நதியை வரவழைத்து அருளிய மதுரை நகரத்தில் எழுந்தருளியுள்ள எண்குணங்களை உடைய கடவுள், *(19-23)*

அன்பருடைய நெஞ்சத் தாமரையை மலரச் செய்கின்ற மூவாத சிவந்த திருவடிகளை எப்பொழுதும் சுமந்துள்ள நெஞ்சத் தாமரையை உடைய மருதநிலத்துத் தலைவனாகிய நம் தலைவனுடைய, பொன்னினால் செய்த பூங்கொத்துக்களை உடைய மணிகள் கட்டிய தேர் புனலாட்டு விருப்பினால் நமது சேரியிடத்து வந்தது. ஆதலால் நம்முடைய குற்றம் நீங்கத் தேரின் இரண்டு பக்கங்களிலும் சென்று, *(24-28)*

மாவடு போன்ற விழியினையும், சிறிய இடையினையும், பெரிய முலைகளையும் உடைய பெண்களே, *(1)*

அத்தேரைக் கையெடுத்துத் தொழுவீர்களாக. வணங்கு வீர்களாக, தேரை வலம் வருவீர்களாக, அதனைத் தொடர்ந்து செல்வீர்களாக, அத்தேரின் உருளையால் எழுந்த புழுதியை மேலெங்கும் பூசிக் கொள்வீர்களாக. அத்தேரில் உள்ள மலர் மாலையை அன்போடு கூந்தலில் முடிவீர்களாக. மேலும் அரும்பு போன்ற உம் முலையில் தேரில் உள்ள தாமரை மலரினைத் தரித்துக் கொள்வீர்களாக. தேரில் உள்ள தலைவனை எதிர் கொள் வீர்களாக, அவனைப் புகழ்வீராக, அவனைத் தரிசிப்பீர்களாக, அவனை வணங்குவீர்களாக, அவனிடத்தில் செல்வீராக, மலை உச்சி போன்று உயர்ந்த அவன் தோள்களில் இருந்து வீசும் நறு மணக் காற்றோடு பொருந்துவீராக. மேலும் முற்பிறப்பில் தலைவனின் பேரழகை நாம் போற்றி நுகர்வதற்கு அருந்தவம் செய்துள்ளோம் என்பதை நும் கண்களால் காண்பீராக, அவனை நினைப்பீராக, அவன் எதிரே அவனைப் புகழ்ந்து பூவையும், சுண்ணங்களையும் எறிவீராக, அவனை யாழினால் பாடுவீராக,

Koviloor Digital Library

இவ்வாறு செய்வதோடு அவனைக் கூடுவோம் என்று எழுவீராக, அவனைக் கூடி அவனுடைய அருளைக் காண்பீராக. *(2-13)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் ***370*** ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலுக்கு உரிய துறை பரத்தையர் பிரிவு கண்டவர் கூறல் என்றும், தேர் வரவு கண்டு மகிழ்ந்து கூறல் என்றும் பழைய பிரதிகளில் கூறப்பெற்றுள்ளது. எனவே பாடற் பொருள் கொண்டு இரண்டையும் ஒரே தலைப்பாக இங்கு கொள்ளப் பெற்றுள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்பாக, சிவபெருமான் தடாதகைப் பிராட்டியைத் திருமணம் செய்து கொண்ட பொழுது படைக்கப் பட்ட விருந்தை எல்லாம் குண்டோதரன் உண்டான். அக்குண்டோதரனின் தாகத்தைத் தீர்க்க வையை நதியை உண்டாக்கி, ஆற்று நீரைப் பெருகச் செய்தார் . அத்தகைய மதுரை நகரத்து இறைவன் என்று கூறப்பெற்றுள்ளது. தேரைக் கண்ட பரத்தையருக்குப் பாங்காயினார் கூறுவது போல் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

(சொ-ம்)

வடிவிழி - மாவடுக்கண், முண்டகம் - தாமரை, பூழி - புழுதி, மருத்து - வாசம் படர்ந்த தென்றல், சுண்ணம் - பொடி, மதி புலவோன் - ஐம்பூதங்களால் மதிக்கப்படுகின்ற அறிவுடையவன், பாவை - தடாதகைப் பிராட்டி. .

12. கல்வி நலம் கூறல்.

நிலையினின் சலியா நிலைமையானும்,
பல உலகு எடுத்த ஒரு திறத்தானும்,
நிறையும் பொறையும் பெறும் நிலையானும்,
தேவர் மூவரும் காவலானும்,
தமனியப் பராரைச் சயிலம் ஆகியும்,
அளக்க என்று அமையாப் பரப்பின தானும்,
அமுதமும் திருவும் உதவுதலானும்,
பல துறைமுகத்தொடு பயிலுதலானும்,
முள்ளுடைக் கோட்டு முனை எறி சுறவம்
அதிர் வளை தடியும் அளக்கர் ஆகியும்

Koviloor Digital Library

நிறை உளம் கருதி நிகழ்பவை நிகழ்பவை
தருதலின், வானத் தரு ஐந்து ஆகியும்,
மறை வெளிப்படுத்தலின், கலைமகள் இருத்தலின்,
அகமலர் வாழ்தலின், பிரமன் ஆகியும்,
உயிர் பரிந்து அளித்தலின், புலமிசை போக்கலின்,
படி முழுது அளந்த நெடியோன் ஆகியும்,
இறுதியில் சலியாது இருத்தலானும்,
மறுமை தந்து உதவும் இருமையானும்,
பெண் இடம் கலந்த புண்ணியன் ஆகியும்,
அருள் வழி காட்டலின், இரு விழி ஆகியும்,
கொள்ளுநர் கொள்ளக் குறையாது ஆதலின்,
நிறை உளம் நீங்காது, உறை அருள் ஆகியும்,
இவை முதல் ஆகி, இரு வினை கெடுக்கும்-
புண்ணியக் கல்வி உள் நிகழ் மாக்கள்,
'பரிபுரக் கம்பலை இரு செவி உண்ணும்
குடக் கோச் சேரன் கிடைத்து, இது, காண்க'என,
'மதி மலி புரிசைத் திருமுகம் கூ'றி,
'அன்பு உருத் தரித்த இன்பு இசைப் பாணன்
பெற நிதி கொடுக்க' என உற விடுத்தருளிய,
மாதவர் வழுத்தும் கூடற்கு இறைவன்
இரு சரண் பெறுகுநர் போல,
பெரு மதி நீடுவர், சிறுமதி நுதலே!

துறை விளக்கம்:

தலைவியைத் தலைவன் திருமணம் செய்து கொண்ட பின்னர் ஓதல் பிரிவிற்கு உரியவன் ஆயினான். அப்பொழுது தலைமகளுக்குத் தன் பிரிவை உணர்த்த - கற்றோர் எல்லையில்லாத நன்மை அடைவர் என்று கல்வியின் நலனைத் தோழிக்குக் கூறுவது.

பாடற்பொருள்:

தான் நிற்கும் நிலையினின்று அசையாத நிலைமையானும், உலகம் பலவும் கைக்கொண்ட ஒப்பற்ற ஆற்றல் உடைமை யானும், நிறையும் (மனஅடக்கம்), பொறையும் உண்டாகும் நிலைமையானும், பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவரும் காவலாய் இருத்தலானும், பெரிய அடிப்பகுதியை உடைய பொன்னாலாகிய மகாமேருவை ஒத்தும், *(1-5)*

Koviloor Digital Library

யாராலும் அளத்தற்கு இயலாத விரிவுடைமையானும், உலகிற்கு அமுதத்தையும் திருவினையும் வழங்குதலானும், பல பொருள் மார்க்கத்தையும் தன்னிடத்தில் பயிலுதலானும், முள்ளினை உடைய தன் கோட்டினால் பகையை வெல்லுகின்ற சுறாமீன், சங்கினைக் கொல்லுவதற்கு இடமாகிய கடலினை ஒத்தும், (6-10)

நன்கு நிறைந்த நெஞ்சம் நினைக்கும் பொழுதே நிகழ்ந்த பொருள்களையும், நிகழப் போகும் பொருள்களையும் வழங்கு கின்ற காரணத்தால் வானுலகத்தில் உள்ள கற்பகம் முதலிய தருக்கள் ஐந்தினை ஒத்தும், (சந்தானம், தேவதானம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்), (11-12)

மறைகளாகிய இரகசியப் பொருளை வெளிப்படுத்தலானும், கலைமகள் குடியிருத்தலானும், இதயக் கமலத்தில் தங்குதலானும் பிரமனை ஒத்தும், (13-14)

உயிர்கள் விரும்பி வேண்டுகின்ற பொருளைக் கொடுத் தலானும், அவரவர்க்கு அடங்காத அறிவைப் போக்குதலானும், உலகம் முழுவதும் தன் அடியினாலே அளந்து அருளிய திருமாலை ஒத்தும், (15-16)

பேரொளிக் காலத்திலும் அசைவின்றி இருத்தலானும், ஆறங்கத்தைத் தன்னிடத்தில் உண்டாக்கி எல்லாரும் அறிய உதவும் பெருமையானும், பார்வதியை இடப் பாகத்தில் வைத்த சிவ பெருமானை ஒத்தும், (ஆறங்கம் - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதி, நிருத்தம், சோதிடம்), (17-19)

கற்றதனால் இயல்பாக எல்லா உயிர்க்கண்ணும் செல்லுகின்ற கருணையைக் காட்டுவதால் இருவிழியை ஒத்தும்,

கற்றவர்க்கு உரியோர் கற்பதால் குறையாத அறிவு பொருந்தி அது உள்ளத்தை விட்டுப் பிரியாமல் நிற்பதால் அருளை ஒத்தும்,

அறிவுடையோர் சபைக்கு முதன்மையாகி இருவினைகளைக் கெடுக்கும் தருமம் முதலாகிய கல்வியினை அறிஞர் போற்றி நிற்பர். (20-24)

Koviloor Digital Library

இளம் பிறையினை ஒத்த நெற்றியினை உடையவளே, *(32)*

இறைவன் அம்பலத்தே கூத்தாடுகின்ற பொழுது, அவன் திருவடியில் அணிந்த காற்சிலம்பின் ஒலியைத் தன் இரு செவிகளாலும் கேட்டு மகிழும் பேருடைய குடநாட்டு மன்னவனாகிய சேரமானுக்கு, மதிமலிபுரிசை என்று அடியெடுத்துப் பாடி, அந்த ஓலையைப் பெற்றுக் கொள்வாயாக என்று திருவாய் மலர்ந்தருளி, அன்பே வடிவாக அமைந்த இனிய இசையை உடைய பாணபத்திரன் பொருளைப் பெறும்படி வழங்குவானாக என்று சீட்டுக் கவி செலுத்தி அருளிய, பெரிய தவத்தினை உடையவர் வணங்குகின்ற நான்மாடக் கூடலுக்கு உரிய இறைவனின் இரண்டாகிய திருவடிகளையும் பெற்ற அடியார் போல, மிகுந்த கல்வியறிவினைப் பெற்றவர்கள் அளவில்லாத நன்மையைப் பெற்றவர் ஆவர். *(25-32)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **308** ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் கல்வியைக் கற்றவர்கள் மேருமலையையும், கடலினையும், தெய்வ மரங்கள் ஐந்தையும், நான்முகனையும், திருமாலையும், சிவபெருமானையும், கண்களையும், அருளையும் ஒத்தவர்கள் என்று கூறப்பெற்றுக் கல்வியைத் தன்னகத்தே கொண்ட கல்வியாளர்கள் சிவபெருமான் திருவடியை வணங்குகின்றோர் பெற்ற அருளைப் போல நன்மையைப் பெறுவார்கள் என்பது பாடலின் பொருளாக அமைந்துள்ளது. மேலும் இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாகச் சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சீட்டுக்கவி கொடுத்துப் பாணபத்திரன் பொருள் பெறச் செய்த பெருமை கூறப்பெற்றுள்ளது.

(சொ.ம்):

தமனியம் - பொன், பராரை - பருத்தஅடி, சயிலம் - மலை, திரு - திருமகள், சுறவம் - சுறாமீன், தரு - மரம், மறை - இரகசியம், பெண் - பார்வதி.

Koviloor Digital Library

13. முன் நிகழ்வு உரைத்து ஊடல் தீர்த்தல்.

குரவம் மலர்ந்த குவை இருட் குழலீ!
இருவேம், ஒருகால், எரி அதர் இறந்து,
விரிதலை, தோல்முலை, வெள் வாய், எயிற்றியர்க்கு
அரும் புது விருந்து எனப் பொருந்தி, மற்று-அவர் தரும்
இடியும் துய்த்து, சுரைக் குடம் எடுத்து
நீள் நிலைக் கூவல் தெளிபுனல் உண்டும்,
பழம் புற் குரம்பையிடம் புக்கு இருந்தும்,
முடங்கு அதள் உறுத்த, முகிழ்நகை எய்தியும்,
உடன் உடன் பயந்த கட ஒலி ஏற்றும்,
நடைமலை எயிற்றினிடைத் தலை வைத்தும்,
உயர்ந்த இன்பு-அதற்கு. ஒன்று உவமமும் உண்டு எனின்
(முலை மூன்று அணைந்த சிலைநுதல் - திருவினை
அரு மறை விதிக்கத் திருமணம் புணர்ந்து,
மதிக் குலம் வாய்த்த மன்னவன் ஆகி,
மேதினி புரக்கும் விதியுடை நல் நாள்,
நடுவூர் நகர் செய்து, அடுபவம் துடைக்கும்
அருட்குறி நிறுவி, அருச்சனை செய்த
தேவ நாயகன்) கூடல் வாழ் இறைவன்
முண்டகம் மலர்த்தி, முருகு அவிழ் இரு தாள்
உறைகுநர் உண்ணும் இன்பமே
அறையல் அனறி, மற்றொன்றினும் அடாதே!

துறை விளக்கம் :

முன்பு நடந்த நிகழ்வுகளை நல்ல நெற்றியை உடைய தலைவிக்கு உரைத்து தலைவி கொண்டிருந்த ஊடலைத் தலைவன் தீர்த்தல்.

பாடற் பொருள் :

குரவ மலர் சூடிய விரிந்த இருள் கூட்டம் போலும் கூந்தலை உடையவளே, நாம் இருவரும் ஒருமுறை வெம்மை உடைய காட்டில் போய், விரிந்த தலையினையும் தாழ்ந்த முலை யினையும், வெண்மை நிற வாயினையும் உடைய பாலை நிலத்து மகளிர்க்குக் கிடைக்காத புதிய விருந்து என்னும்படி அவரிடம் பொருந்தி, *(1-4)*

Koviloor Digital Library

பழைய புல்லால் வேய்ந்த அவர்களின் குடிசையில் புகுந்தும், அவர்கள் தந்த சுருட்டி வைத்த தோலை விரித்து அமர்ந்தும், நமக்கு அன்புடன் அளித்த தினை மாவினை உண்டும், பின்னர் சுரக்காயில் அமைந்த குடத்தால் அவர்களின் ஆழமான கிணற்றில் உள்ள நீரை மொண்டு எடுத்து அருந்தியும், கடலில் இருந்து எழுந்த ஓசையைக் கேட்டும், யானையின் மருப்பின்கண் தலை யினை வைத்தும் நாம் இருவரும் பெற்ற இன்பத்திற்கு ஆராய்ந்து பார்த்தால் ஒரு உவமையும் கூறமுடியாது. *(5-11)*

என்றாலும், சந்திர வம்சத்தில் தோன்றிய மன்னவன் பாண்டி யனின் மகளாகி, மூன்று முலையினையும், சிறிய நுதலினையும் உடைய தாடாதகைப் பிராட்டியைப் பிரமன் சடங்குகளைச் செய்ய, சிவபெருமான் திருக்கல்யாணம் செய்து, அதனால் பாண்டிய மன்னனாய் விளங்கி உலகை ஆளும் விதியினைக் கொண்ட அந்த நல்லநாளில், மதுரை நகரத்து நடுவில் ஆலயம் செய்து அடியார்களின் பிறவியைக் கெடுக்கும் தன் கருணையைச் சிவலிங்கக் குறியாக நிறுத்தி, ஆராதனை செய்த தேவேந்திரனால் வழிபாடு செய்யப்பட்ட தேவநாயகன் எழுந்தருளியுள்ள, இறை வனுடைய நறுமணம் கமழும் இரண்டு திருவடிகள் பொருந்து தற்கு இடனாகத் தம்முடைய நெஞ்சத் தாமரையை மலர்வித்து, சிவயோகத்தே தங்குகின்ற அடியார்கள் நுகரும் வீட்டின்பத்தைத் தான் உவமையாகக் கூறலாம். வேறு எந்த இன்பமும் உவமை ஆகாது. எனவே அந்நிகழ்ச்சியை நீ நினைத்துப் பார்ப்பாயாக .என்று தலைவன் கூறினான். *(12-21)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் ***398*** ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் தலைவன் தான் தலைவி யுடன் உடன்போக்குச் சென்ற காலத்தில் வழியில் எதிர்ப்பட்ட பாலை நிலத்து மகளிர் குடிசையில் தங்கியிருந்து தலைவியோடு கூடிய இன்பத்தை நினைவு படுத்தி, அவளுடைய ஊடலைத் தீர்க்கின்ற பொருள் அமைந்துள்ளது. இப்பகுதிப் பாடலில் தேவேந்திரனால் மதுரையில் கோயில் எழுப்பப் பெற்று, அவனால் சிவலிங்க வழிபாடு செய்யப் பெற்றது என்ற சிறப்பு சிவபெருமானுக்கு உரிய சிறப்பாகக் கூறப் பெற்றுள்ளது. மேலும்

Koviloor Digital Library

தடாதகைப் பிராட்டியை மணந்து பாண்டிய மன்னனாய் மதுரையை ஆண்ட சிறப்பும் கூறப் பெற்றுள்ளது.

(சொ.ம்):

குரவம் - மலர், அதர் - வழி, எயிற்றியர் - பாலை நில வேட மகளிர், இடி - தினைமாவு, அருட்குறி - சிவலிங்கக்குறி. கூவல் - கிணறு, குடம்பை - வீடு, அதள் - மான்தோல், அருமறை விதிக்க -பிரமன் சடங்குகளைச் செய்ய, மேதினி - உலகம், தேவநாயகன் - இந்திரன்,

14. நிலவு வெளிப்பட வருந்தல்.

நண்ணிய பாதி பெண்ணினர்கக்கு அமுதம்
அடு மடைப்பள்ளியின் நடு அவதரித்தும்,
திரு வடிவு எட்டனுள் ஒரு வடிவு ஆகியும்,
முக்கணில் அருட்கண் முறைபெற முயங்கியும்,
படி இது என்னா அடி முடி கண்டும்,
புண்ணிய நீறு எனப் பொலி கதிர் காற்றியும்,
நின்றனை, பெருமதி! நின் - தொழுதேற்கும்
நன்னரின் செய்குறும் நன்றி ஒன்று உளதால்,
ஆயிரம் தழற்கரத்து இருட்பகை மண்டிலத்து,
ஒரொரு பனிக கலை ஒடுங்கி நின்று அடைதலின்-
கொலை நுதி எயிறு என்று இரு பிறை முளைத்த
புகர்முகப் புழைக் கை ஒரு விசை தடிந்தும்,
மது இதழ்க் குவளை என்று அடுகண் மலர்ந்த
நெடுஞ் சுனை புதைய, புகுந்து எடுத்து அளித்தும்,
செறிபிறப்பு, இறப்பு. என இரு வகை திரியும்
நெடுங் கயிற்று ஊசல் பரிந்து கலுழ் காலை,
முன்னையின் புனைந்தும், முகமன் அளித்தும்,
தந்த எம் குரிசில், தனி வந்து, எமது
கண் எனக் கிடைத்து, எம் கண் எதிர் நடு நாள் -
(சமயக் கணக்கர் மதி வழி கூறாது,
உலகியல் கூறி, 'பொருள் இது' என்ற
வள்ளுவன் தனக்கு, வளர் கவிப் புலவர்முன்,
(முதற்கவி பாடிய முக்கட் பெருமான்)
மாதுடன் தோன்றிக் கூடலுள் நிறைந்தோன்-
தன்னை நின்று உணர்ந்து, தாமும் ஒன்று இன்றி,

Koviloor Digital Library

அடங்கினர் போல, நீயும்
ஒடுங்கி நின்று அமைதி, இந்நிலை அறிந்தே!

துறை விளக்கம் :

தோழி தலைவனுக்கு இரவுக் குறி கூறி, அவன் அந்த இரவுக் குறியில் வந்த பொழுது, நிலவு வெளிப்பட்டதால் அவனைக் காண முடியாமல் தடைப்பட்டு ஏற்பட்ட துன்பத்தைச் சிறைப் புறமாகத் தலைவனுக்குக் கூறுதல்.(தலைவனைச் சந்திக்க முடியாத வண்ணம் நிலவு வெளிப்பட்டு வெளிச்சம் ஏற்பட்டதால் அவனைச் சந்திக்க முடியாத வருத்தத்தைத் தோழி கூறியதாம்)

பாடற்பொருள்:

கொலைத் தொழிலையும், கூர்மை உடைய மருப்பு (தந்தம்) இரண்டு பிறைச் சந்திரன் முளைத்தாற் போன்று வாயில் தோன்ற, புள்ளியை உடைய முகத்தினையும் கொண்ட யானை வந்து எம்மை எதிர்த்த நாளில் அதனுடைய துளையுடைய தும்பிக் கையை வெட்டியும், *(11-12)*

தேனை உடைய இதழ்களைக் கொண்ட குவளை என்று சொல்லப்படுகின்ற கண்கள் மலர்ந்திருக்கின்ற நெடிய சுனை யினிடத்தில் யாம் அமிழ்ந்தபோது, அதனுள் புகுந்து காப்பாற்றி எடுத்து அளித்தும், *(13-14)*

உடம்பில் பொருந்துகின்ற பிறப்பும் இறப்பும் போல, போக்கு வரவு என்ற இரண்டு நிகழ்வுகளைக் கொண்ட, நெடிய கயிற்றினை உடைய ஊஞ்சல் ஆடுங்கால் கயிறு அற்றதனால் தலைவி அழுதாளாக. அதனைக் கண்டு முன்போல அக்கயிற் றினைச் சீர் செய்து அவள் மகிழும்படி நல்ல வார்த்தைகளைச் சொல்லியும், *(15-17)*

(இவ்வாறு யானை வந்த பொழுது காப்பாற்றியும், நீரில் மூழ்கியபோது காப்பாற்றியும், ஊஞ்சல் ஆடும் பொழுது கயிற்றைச் சீர் செய்து கொடுத்தும்)

தலைவிக்கு உயிர் தந்த விருப்பத்தினை உடைய எம் தலைவன், தான் ஒருவனாக வந்து எம் இழந்த கண் போலப் பொருந்தி. எம் எதிரே நிற்க, அவனைக் காணும் இடையாமத்தில், *(18-19)*

Koviloor Digital Library

உடம்பில் பாதியாகப் பொருந்திய உமையவளின் கண வனுக்கு, விஷமாகிய உணவை உண்டாக்கிய கடலாகிய மடப் பள்ளியாம் பாற்கடலில் தோன்றியும், (நிலவு) அட்ட மூர்த்தமாகும் வடிவில் ஒரு வடிவமாகவும், மூன்று திருநயனத்தில் ஒரு கண்ணாம் அருட் கண்ணாகப் பொருந்தியும், திருமாலும் பிரமனும் காண முடியாத பகை என்று எண்ணாமல் சிவபெரு மானின் திருவடியையும் திருமுடியையும் நீ (நிலவு) கண்டும்,, நல்வினை உண்டாக்கும் திருநீறு போல வெண்மையான நிலவு ஒளியை வீசியும் புகழோடு நின்றாய். நீ, பிறைச் சந்திரனாக இருந்த போது உன்னைத் தொழுகின்ற அடியவளாகிய எமக்கு உன்னுடைய இயல்பாகிய நற்பண்பினால் செய்ய வேண்டிய நன்மை ஒன்று உள்ளது. அது எது எனில், *(1-8)*

குளிர்ச்சியை உடைய உன்னுடைய பதினாறு கலைகளில் ஒவ்வொரு கலையாக ஒடுங்கி, அதாவது அக்கினி முதலாய தேவர்கள் பதினைந்து பேரும் உன்னை உண்ண ஒடுங்கி, எஞ்சிய பதினாறாவது கலையோடு நின்று, ஆயிரம் கிரணங்களை உடைய இருளுக்குப் பகையான ஆதித்த மண்டலத்தோடு ஒன்றி நின் உருவம் மறைந்து பொருந்தும் வழக்கம் உடையை. (முழு நிலவு ஒவ்வொரு நாளும் சுருங்கி 16ஆம் நாள் அமாவாசையாவதைக் குறிக்கிறது) *(9-10)*

ஆதலால் இப்பொழுதும் சங்கப் புலவர் நாற்பத்தொன் பதின்மர் முன் அறுவகைச் சமயவாதியர்கள் கருத்தின்வழி கூறாது, உலக நடை கூறி, பொதுவாக இதுவே பொருள் என்று கூறிய திருவள்ளுவர் பாடிய திருக்குறளுக்குத் திருவள்ளுவமாலையில் முதற்கவி சொன்ன மூன்று கண்களை உடைய பெருமான், மதுரையில் அங்கயற்கண் அம்மையுடன் தோன்றிப் பூரண கலை யாய் இருந்தான். அவனை நெடுங்காலமாக அளவிட்டு அறிந்து. அவனுடைய ஞான நெறியில் நின்று தாம் என்றும் சிவம் என்றும் இல்லாது அவரோடு இரண்டறக் கலந்து ஒன்றிவிட்ட அடியார் களைப் போல, நீயும் (நிலவு) வேற்றுமை இன்றி ஒடுங்கி, எம்முடைய நிலைமையை அறிந்து, ஆகாயம் எனவும் நீ எனவும் இரண்டு பொருளாகத் தோன்றாது ஆகாயமாகவே நீ ஒடுங்கி அமைவாயாக. இதுவே யாம் வேண்டும் வ்ரமாகும். என்று தோழி கூறினாள். *(20-27)*

Koviloor Digital Library

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 171 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்பட்ட தொடர்புக்குரிய களிறுதரு புணர்ச்சியும், புனல்தரு புணர்ச்சியும், ஊஞ்சல் தரு புணர்ச்சியும் கூறப் பட்டுள்ளது. அத்தகைய உறவு ஏற்பட்டபின் இரவுப் புணர்ச் சியில் சந்திக்கும் பொழுது அதற்குத் தடையாக நிலவு முழு நிலவாகத் தோன்றியிருக்கிறது. அவ்வாறு தோன்றிய நிலவினைப் பார்த்துத் தோழி உன்னுடைய நிலவு ஒளியை ஒடுக்கிக் கொண்டு, தலைவன் தலைவி புணர்ச்சிக்கு உதவுவாயாக என்று கூறியதாகப் பொருள் அமைந்துள்ளது. அவ்வாறு கூறும்பொழுது நிலவு திருப் பாற் கடலில் தோன்றியது என்றும், சிவனின் முக்கண்ணில் ஒன்று என்றும், சிவபெருமானின் தலையில் இருந்து தலைமுடியையும், அவன் திருவடியையும் கண்டது என்றும், திருநீறு போல ஒளி மிக்கது என்றும், பெண்கள் நிலவை நோன்பு கொண்டு வணங்கு வார்கள் என்றும் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. சிவபெருமானின் பெருமையாகத் திருக்குறள் நூலுக்கு அமைந்த திருவள்ளுவ மாலையின் முதற்பாடலைப் பாடியவர் இறையனாராகிய சிவ பெருமான் என்று பெருமை கூறப்பெற்றுள்ளது. மேலும் அவனை அவனுடைய ஞான நெறியால் நன்கு உணர்ந்து சிவ போகத்தை அடியார்கள் துய்ப்பிப்பார்கள் என்றும் கூறப் பெற்றுள்ளது.

(சொ-ம்)

பெண்ணினர் - உமையவளுக்குக் கணவனாகிய சிவபெருமான், படிறு - குற்றம், புண்ணியநீறு - திருநீறு, துளைக்கை - தும்பிக்கை, மதுஇதழ் - தேன்சொட்டும் இதழ், பரிந்து - அறுந்து, கலுழ் - துன்பம், குரிசில் - தலைவன். சமயக் கணக்கர் - பிறசமய வாதிகள்.

Koviloor Digital Library

15. தேர் வரவு கூறல்.

சலியாப் பராரைத் தமனியப் பொருப்பு எனும்
ஒரு கால் சுமந்த விண் படர் பந்தரின்,
மூடிய நால் திசை முகில் - துகில் விரித்து,
பொற்சிலை வளைத்து, வாயில் போக்கி,
கருப்பு அணி நிரைத்த கடுக்கை அம் பொலந் தார்
நிரை நிரை நாற்றி, நெடுங் காய் மயிர் அமைத்து,
ஊதையில் அலகு இட்டு, உறை புயல் தெளித்து,
போற்றுறு திருவம் நால் திசைப் பொலிய,
மரகதத் தண்டின் தோன்றி விளக்கு எடுப்ப,
குடத்தியர் இழுக்கிய அளை சிதறிய போல்
கிடந்தன ஆம்பி பரந்தன மறைப்ப,
பிடவு அலர் பரப்பிப் பூவை பூ இட
(உயர் வான் அண்டர் கிளை வியப்பு எய்த,)
உறவு, இணை, நட்பு, கிளை, வியப்பு எய்த,
முகில் முழவு அதிர, ஏழ் இசை முகக்கும்
முல்லை யாழொடு சுருதி வண்டு அலம்ப,
களவு அலர் சூடி , புறவு பாட்டு எடுப்ப,
பசுந் தழை பரப்பிக் கண மயில் ஆல,
முல்லை அம் திருமகள், கோபம் வாய் மலர்ந்து,
நல் மணம் எடுத்து, நாள் அமைத்து அழைக்க-
வரி வளை முன்கை வரவர இறப்பப்
போன நம் தனி நமர், புள் இயல் மான் தேர்,
கடு விசை துரந்த கான் யாற்று ஒலியின்,
எள்ளினர் உட்க, வள் இனம் மடக்கி, முன்
தோன்றினர், ஆகலின், நீயே, மடமகள்!
(முன் ஒரு காலத்து, அடுகொலைக்கு அணைந்த
முகில் உருப் பெறும் ஓர் கொடுமரக் கிராதன்,
அரு மறைத் தாபதன் அமைத்திடு செம்மலை,
செருப்புடைத் தாளால், விருப்புடன் தள்ளி,
வாய் எனும் குடத்தில் வரம்பு அற எடுத்த
அமுது கடல் தள்ளும் மணி நீர் ஆட்டி,
பின்னல் விட்டு அமைத்த தன் தலை மயிர் அணை
திரு மலர் விண் புக மணி முடி நிறைத்து,
வெள் வாய் குதட்டிய விழுதுடைக் கருந் தடி
வைத்து அமையாமுன் மகிழ்ந்து அமுது உண்டு, அவன்

Koviloor Digital Library

மிச்சலுக்கு இன்னும் இச்சை செய் பெருமான்)
கூடல் நின்று ஏத்தினர் குலக் கிளை போலத்
துணர்ப் பெறு கோதையும் ஆரமும் புனைக,
புதைஇருள் துரக்கும் வெயில் மணித் திருவும்,
தண்ணம் பிறையும், தலை பெற நிறுத்துக,
இறை இருந்து உதவா நிறை வளைக் குலனும்,
பெருஞ் சூடகமும், ஒருங்கு பெற்று அணிக்,
நட்டுப் பகையினர் உட்குடி போல,
உறவு செய்து ஒன்றா நகை தரும் உளத்தையும்,
கொலையினர் நெஞ்சம் கூண்ட வல் இருள் எனும்
ஐம் பால் குழலையும், அணி நிலை கூட்டுக,
விருந்து கொண்டு உண்ணும் பெருந் தவர் போல,
நீங்காத் திருவுடை நலனும்
பாங்கில் கூட்டுக, இன்பத்தில் பொலிந்தே!

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைவன் அரசனுக்குப் படைத்துணை செய்து, போர் முடிந்ததும் திரும்பி வந்தான். அவ்வாறு வரும் பொழுது உடன்பட்டவர் கொடுத்த திறைப் பொருளையும், மாறுபட்டவர் களுடைய அடையாளங்களையும் தன் தேருக்கு முன்னே வீர முரசங்கள் ஆர்ப்ப, தாவி வரும் குதிரையோடு தேரில் வந்தான். இனி நமக்குக் குறையில்லை என்று தலைவனின் வரவைத் தோழி கூறுதல்.

பாடற் பொருள்:

தன் நிலையினின்று அசையாத அடிப்பகுதியை உடைய பொன்மலை என்று கூறப்படுகின்ற மேரு மலையாம் ஒற்றைக் காலாலே (தூண்) தாங்கப் பெற்ற பரந்த வானமாகிய பந்தலின் கீழ், நான்கு திசைகளும் மூடும்படி மேகமாகிய சேலையை விரித்து, அழகிய இந்திர வில்லை வளைத்து, வாயில் அமைத்துக் கொண்டு, வண்டாகிய நீலமணி நிறைந்த அழகிய கொன்றைப் பூவாகிய பொன் மாலையை அணி அணியாகத் தொங்கவிட்டு, கொன்றையினது நெடிய காயைக் கவரியாகத் (சாமரம்) தூக்கி, பனிக் காற்றால் செல்லும் இடங்களைத் தூய்மைப்படுத்தி, மேக நீரால் நீர் தெளித்து, நான்கு திசையிலும் போற்றுகின்ற செல்வம் பொலிய , மரகதம் போலும் நிறத்தை உடைத்தாகிய தண்டினைக்

Koviloor Digital Library

கொண்ட காந்தளாகிய பெண், பூவாகிய விளக்கை ஏந்தி நிற்ப, (1-9)

பகை நரம்பின்றி உறவாகிய நரம்பும், இணையாகிய நரம்பும், நட்பாகிய நரம்பும், கிளையாகிய நரம்பும் அதிசயம் பெற, இசை ஏழினையும் எழுப்பும் முல்லை யாழிசைக்குச் சுருதி யாக வண்டுகள் முழங்கி முல்லைப் பாட்டினைப் பாட, (13-16)

முகிலாகிய முழவு அதிர, பசிய தோகையை விரித்து மயிலாகிய கணிகையர் ஆட, இடையர் குல மகளிர் வழுக்கி விழும்பொழுது சிதறிய தயிர் போல யாண்டும் பரவிக் கிடக்கும் காளானாகிய துயில் மறைப்ப, பின் பிடவம் பூவைப் பரப்பி, காயாம் பூவைச் சிதறி, முல்லை நிலமாகிய அழகிய திருமகள் இந்திர கோபமாகிய தன்னுடைய வாயைத் திறந்து சடங்குகளைச் செய்ய, நல்லநாளினைக் குறித்து அழைத்ததால் (17-20)

(இதுவரை முல்லை நிலத்தில் கார்காலம் தோன்றியதற்குரிய வருணனைகள் அமைந்து, தலைவன் கூறிப் பிரிந்து சென்ற கார்காலம் வந்துவிட்டது. எனவே தலைவன் வருவார் என்று தோழி கூறினாள்)

உன்னுடைய முன்கையில் உள்ள வரிவளையைக் கையில் இடுந்தோறும் இடுந்தோறும் அவை கழலும்படி உன்னைப் பிரிந்து போன நம்முடைய தலைவன், முழக்கத்தோடு ஓடும் காட்டாற்றின் வேகத்தை விடவும் , பறவை போல நிலந்தீண்டாது தாவிச் செல்லும் குதிரை பூட்டிய தமது தேரின்கண் தன் பகைவர் அஞ்சும்படி தன்னைப் பணியும் மன்னர் அளித்த திரண்ட திறைப் பொருள்களைத் தன் தேரின் முன் கைக்கொண்டு இதோ வந்து தோன்றினார். (தலைவியே உனக்கு ஒரு குறைவில்லை)(21-25)

மடப்பத்தை உடைய தலைவியே, முன் ஒரு காலத்தில் கொலைத் தொழிலுக்குப் பொருந்திய கரிய முகில் போன்ற நிறத்தை உடைய, ஒப்பற்ற வில்லை உடைய திண்ணன் என்ற வேடன், அரிய வேதங்களைக் கற்ற சிவகோசரியார் சிவவழி பாட்டில் அமைத்த மலர்களை விருப்பமுடன் செருப்புடைய தன் காலால் தள்ளி, வாயாகிய குடத்தில் எடுத்து வந்த அமுத நீரினால் குடத்து நீரை நீராட்டினாற் போலத் திருமஞ்சனம் செய்து,

Koviloor Digital Library

பின்னலை அவிழ்த்துத் தனது தலையினிடத்து அமைத்த பூவினைக் கற்பகத்தருவின் மலரை ஒப்ப மணிமுடியில் சூடி, தன்னுடைய வாயில் தின்று பார்த்த கரிய ஊன் தசையைத் திரு முன் வைத்து, பூசனை செய்த பொழுது மகிழ்வோடு அதனை ஏற்று அமுதாக உண்டு, அவன் எச்சிலுக்கு எப்பொழுதும் விருப்பம் கொள்ளும் சிவபெருமானுடைய மதுரை மாநகரை, நன்னெறியில் புகழ்ந்தவர்களின் குலத்திலே தோன்றிய மாந்தரைப் போன்று, ***(26-37)***

பூங்கொத்தினால் புனையப் பெற்ற மாலையையும், முத்தினால் ஆன மாலையையும் நீ அணிந்து கொள்வாயாக. இருளை அகற்றுகின்ற ஒளியை உடைய மணிகள் அழுத்திய ஸ்ரீதேவி என்னும் அணிகலனையும், பிறை என்னும் அணிகல னையும், நின் கூந்தலில் அணிந்து கொள்வாயாக. மேலும் தலைவன் பிரிந்த காலம் எல்லாம் உன் கையிலிருந்து கழலுகின்ற வளையல்களையும், தோள் வளையல்களையும் ஒருங்கே பெற்று அணிந்து கொள்வாயாக. நட்புச் செய்து ஆனால் உட்பகையோடு ஊடாடுகின்ற குடும்பத்தினர் போல, உன்னிடத்தில் பொருந்தாத ஏதிலார்க்கு நகைப்பைத் தருகின்ற உன்னுடைய நெஞ்சத்திலும், கொலைத் தொழிலை உடையோர் நெஞ்சத்தின் கண்ணும் செறிந் திருக்கின்ற அறியாமை ஆகிய இருளை ஒத்த நின்னுடைய ஐம்பாலாகிய கூந்தலை முடித்துக் கொள்க. ***(38-46)***

விருந்து கொண்டு உண்ணுகின்ற பெரிய தவத்தினை உடையவர் போல, நீங்காத செல்வத்தினை உடைய நலத் தினையும், இன்பத்தையும் பெற்றவர் போல, நீயும் இன்பத்தைப் பெறுவாயாக. (என்று தோழி தலைவியிடம் கூறினாள்)***(47-49)***

(வி-ரை) :

இப்பாடல் திருக்கோவையாரின் ***330*** ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. பாடலில் மேருமலை தாங்கி நிற்கும் ஆகாயத்தின் நான்கு திசைகளிலும் மேகம் பரந்திருப்பதும், வானவில் தோன்றுவதும், கொன்றை பூப்பதுவும், கொன்றைக்காய் அசைவதுவும், பனிக்காற்று வீசுவதும், மழைத்துளி வீழ்வதுவும், காந்தள் பூப்பதுவும், காளான்கள் பூமியை மறைப்பதுவும். வண்டுகள் முல்லைப் பாட்டுப்போல் ஒலிப்பதுவும், மயில்

Koviloor Digital Library

கூட்டங்கள் ஆடுவதும், இந்திரக்கோபப் பூச்சி தோன்றுவதும் ஆகிய கார்காலத்துச் செய்திகளை முல்லை நிலம் கொண்டிருந்தது என்ற வருணனை முன்பகுதியில் அமைந்துள்ளது. அக் கார் காலத்தில் தலைவன் தேரில் வந்துவிட்டதால் தலைவி தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்றும், நல்ல வளமான செல்வத்தைப் பெற்றது போல் பேரின்பத்தை அடைய வேண்டும் என்றும் தோழி தலைவியிடம் கூறுவதாகப் பொருள் அமைந் துள்ளது. சிவபெருமானின் சிறப்பாகக் கண்ணப்பரின் வழி பாட்டை ஏற்றுக் கொண்டு மகிழ்ந்த சிறப்புக் கூறப் பெற்றுள்ளது.

(சொ-ம்):

பராரை - பருத்த அடி, ஊதை - பனி, அலகு - பெருக்குதல், விளக்கு - காந்தள் பூ. குடத்தியர் - தயிர்க்குடத்தை ஏந்திய இடையர் குல மகளிர், அளை - தயிர், கோபம் - கார்காலத்தில் தோன்றும் ஒருவகைப் பூச்சி, கிராதன் - திண்ணன், தாபதன் - சிவகோசரியார்.

16. அழுங்கு தாய்க்கு உரைத்தல்

கல் உயர் வரைத்தோட் செம் மனக் குரிசிலும்,
கல்லாதவர் உளம் புல்லிய குழலும்,
இம் மனை நிறை புகுந்து, எழில் மணம் புணர,
கோளொடு குறித்து வரும் வழி கூறிய
மறை வாய்ப் பார்ப்பான் மகனும் பழுது இலன்,
சோதிடக் கலைமகள் தோற்றம் போல,
சொரி வெள் அலகரும் பழுது இல் வாய்மையர்,
உடல் தொடு குறியின், வரும் வழி குறித்த
மூது அறி பெண்டிரும் , 'தீது இலர்' என்ப,,
பெருந் திரட்கண்ணுள் பேச்சு நின்று ஓர்ந்து,
வாய்ச் சொல் கேட்ட நல் மதியரும் பெரியர்
ஆய் மலர் தெரிந்து இட்டு, வான் பலி தூவி,
தெய்வம் பராய மெய்யரும் திருவினர்,
(கருங் கொடி அடம்பும் கண்டலும் சூழ்ந்த
பனைக் குடிப் பரதவர் கலத்தொடும் மறிய,
கரிமுகச் செவ் வாய்ச் சூல் வளை தெறிப்ப,
கழுக் கடை அன்ன கூர்வாய்ப் பெருங் கண்
பனை கிடந்தன்ன உடல் முதல் துணிய,

Koviloor Digital Library

ஆர் உயிர் கவரும், கார் உடல் செங்கண்,
கூற்றம் உருத்து எழுந்த கொள்கை போல,
நெட்டுடல் பேழ்வாய்ப் பெருஞ் சுறவு தடியும் -
வரை நிரை கிடந்த திரை உவர் புகுந்து,
நெடுஞ் சடைக் கிடந்த குறும் பிறைக் கொழுந்தும்,
கரு முகில் வெளுத்த திரு மிடற்று இருளும்,
நுதல் மதி கிழித்த அழல் அவிர் நோக்கமும்,
மறைத்து ஒரு சிறுகுடிப் பரதவன் ஆகி,
பொன் தலைப்புணர் வலை கொடுங் கரம் ஆக்கி -
நெடுங் கடல் கலக்கும் ஒரு மீன், படுத்த)
நிறை அருள் நாயகன் உறைதரு கூடல்
வணங்கார் இனம் என மாழ்கி,
குணம் குடிபோய்வித்த ஆய் உளம் தவறே.

துறை விளக்கம்:

தலைவன் தலைவி உடன்போக்குச் சென்றபின் அவர்களைத் தேடி வந்த செவிலியிடத்து உலக இயல்பு கூறிய பிறகும், அவள் திரும்பிச் செல்லாது தலைவியை வளர்த்தெடுத்த திறம் கூறிச் செவிலி வருந்தி நின்ற பொழுது, அவளைக் கண்டோர் கூறியது.

பாடற் பொருள்:

கரிய கொடியினை உடைய அடும்பு மலரும், கண்டல் செடியும் சூழ்ந்து விளங்கும் பனைக்கொடியினை உடைய பரதவர் தங்கள் படகுகளோடு மடிய, சுரிந்த முகத்தினையும் சிவந்த வாயினையும், கருவினையும் உடைய சங்கங்கள் தெறித்து வீழ, கழுக்கடை என்ற பெயருடைய திரிசூலத்தின் நுனி போன்ற கூரிய வாயினையும், பெரிய கண்ணினையும் உடைய பனை கிடந்தாற் போன்ற உடலினையும் உடைய, மீன் முதலானவை துணிபட, ***(14-18)***

கரிய உடலினையும், சிவந்த கண்ணையும் உடைய யமன் கோபித்து எழுந்து உடலினின்று உயிர்களைக் கைக்கொள்ளும் கொள்கை போல, நெடிய உடலினையும் , பெரிய வாயினையும் உடைய பெரிய சுறாமீனைக் கொல்லும் பொருட்டு, மலைகள் வரிசையாகக் கிடந்தாற் போன்று காட்சி தரும் அலைகளை உடைய கடலிடத்தே சென்று, தன் நீண்ட சடையின்மேல் இருந்த

Koviloor Digital Library

பிறைச் சந்திரனையும், கரிய மேகமும் வெண்மை உடையது என்று கூறும் அளவிற்கு மிகக் கருமை உடைய கழுத்தில் கொண்ட இருளையும், நெற்றியிடத்து கிழிக்கப்பட்டுத் தோன்றிய கண்ணையும், பிறர் காணாதபடி மறைத்தருளி ஒரு சிறு குடியின் கண் தோன்றிய வலைஞனாக உருக்கொண்டு, *(19-26)*

பொன்னாற் செய்த மணிகளைத் தலைப்பகுதியின் கண் கொண்ட வலையைக் கையில் ஏந்தி வீசி, நெடிய கடலைக் கலக்கு கின்ற அந்த ஒப்பற்ற சுறாமீனை வலையிலே அகப்படுத்திய, அருளை உடைய முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான் எழுந் தருளியிருக்கின்ற மதுரை நகரத்தை வணங்காத மடவோர் கூட்டம் போல மயங்கி - குணம் பொருந்திய தன் மகளைத் தன் வீட்டி லிருந்து தலைவனோடு போகச் செய்தலினாலே இச்செவிலித் தாயினுடைய நெஞ்சம் பிழை உடையதாகும். *(27-31)*

கல்லாகி வளரும் மலை போன்ற தோளினையும், நடு நிலைமை உடைய மனத்தினையும் கொண்ட தலைவனும், கல்லாமையால் வரும் தவறினை உடையார் உள்ளம் போல இருண்ட கூந்தலை உடையவளும், செவிலித்தாய் சொன்ன மனையின்கண் தோற்றப் பொலிவோடு புகுந்து அழகிய திருமணத்தைச் செய்து கொள்ள,

வரும் வழியில் வியாழ நோக்கினையும், நட்சத்திரக் கோளி னையும் கருதி, திருமண நாள் பார்த்துச் ஜாதகம் சொன்ன வேதத்தை ஓதுகின்ற பாரப்பன மகனும் குற்றம் உடையவன் அல்ல. *(1-5)*

சோழிகளைக் கொண்டு மணம் புணரக் கணித நூலை வழங்கும் - கலைமகளின் தோற்றத்தை ஒத்த வெள்ளாடை அணிந்த மகளிரும் குற்றமற்ற வாய்மையை உடையவர் ஆவர். *(6-7)*

உடலினைத் தொழும் தூத இலக்கணத்தால் மணம் புணர வரும் வழி கூறிய முதுமைப் பெண்டிரும் தீங்கு உடையவர் அல்லர். *(8-9)*

இருந்த கூட்டத்தினின்று அவரவர் கூறும் மொழியை நிமித்த மாகக் கேட்டு ஆராய்ந்து அறிந்து மணம்புணர வழியை நற்சொல் லாகக் கேட்ட(விரிச்சி) நல்ல அறிவுடையோரும் பெருமை உடையவரே. *(10-11)*

Koviloor Digital Library

இத்தகு நிலையில் உண்மையினை உடைய தலைவனும் தலைவியும் போய் மலரை ஆய்ந்து அர்ச்சித்து, மிகுந்த தெய்வ உணவினைக் கொடுத்துத் தம்மைக் கூட்டுவித்த தெய்வத்தை வழிபடுவதாகிய நல்வினையைச் செய்வாராயினர். எனவே இனி ஒரு இடரில்லை. *(11-13)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **249** ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. உடன் போக்கில் தலைவியையும் தலைவனையும் அனுப்பிய செவிலித்தாயின் நெஞ்சம் பிழை யுடையது என்றாலும், தலைவனும் தலைவியும் மணம் புணர் வதற்கு வழி வகுத்துத் தந்த, நல்லநாள் குறிப்பிட்ட பார்ப்பான், கழங்கு மகளிர், உடம்பு தொடு குறி மரபினர்,(தூத இலக்கணம்) விரிச்சி கூறும் மரபினர் ஆகியோர் பெருமைக்கு உரியவரே. அவர்கள் கூறியவழி மணம் புரிந்து கொண்ட தலைவனும் தலைவியும் அருள் செய்த தெய்வத்தை வணங்கி வழிபட்டனர். ஆதலால் இனி எத்தீங்கும் நடக்காது என்று கண்டோர் உடன் போக்குத் தேடிவந்த செவிலியிடம் கூறினர் என்ற பொருள் அமைந்துள்ளது. சிவபெருமானின் பெருமையாகக் கடலில் வலை வீசிய படலக் கருத்து கூறப்பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

(சொ - ம்)

செம்மனக்குரிசில் - தலைவன், கடம்பு - ஒருவகைக்கொடி, கண்டல் - தாழை, வளை - சங்கு, திரைஉவர் - அலைகடல், நோக்கம் - கண். உடல்தொடு குறி - உடல் உறுப்புக்களின் இலக் கணம் கண்டு மணப் பொருத்தம் கூறுபவர். வாய்ச்சொல் கேட்டோர் - விரிச்சி கேட்டோர்.

17. வெறி விலக்கல்.

உழை நின்றீரும், பிழை அறிந்தீரும்,
பழங் குறி கண்ட நெடுங் கண் மாதரும் -
ஒன்று கிளக்க, நின்று , இவை கேண்மின்,
(ஒரு பால் பசுங்கொடி திருநுதல் பொடித்த
குறு வெயர்ப்பு ஒழுக்கு எனப் பிறை அமுது எடுக்க

Koviloor Digital Library

படிறர் சொல் எனக் கடுவு நஞ்சு இறைப்ப,
அண்டப் பொற் சுவர் கொண்ட அழுக்கை
இறைத்துக் கழுவுவதென்னக் கங்கைத்
துறை கொள் ஆயிரம் முகமும் சுழல,
அப் பெருங் கங்கை கக்கிய திரை எனக்
கொக்கின் தூவல் அப்புறம் ஆக,
மாணிக்கத்தின் வளைத்த சுவர் எனப்
பாணிக்குள் பெய் செந் தழல் பரப்ப,
தன்னால் படைத்த பொன் அணி அண்டம்
எண் திக்கு அளந்து கொண்டன என்னப்
புரிந்த செஞ் சடை நிமிர்ந்து சுழல,
மேருவின் முடி சூழ் சூரியர் என்னத்
தங்கிய மூன்று கண் எங்கணும் ஆக -
கூடல் மாநகர் ஆடிய அமுதை
உண்டு களித்த தொண்டர்கள் என்ன
இம் மது உண்ண உம்மையின் உடையோர்
முருகு நாறப் பருகுதல் செய்க,
வேலனும் வெறிக்களன் ஏறுதல் ஆக,
அணங்கு ஆட்டு முதியோள் முறம் கொள் நெல் எடுக்க,
பிணிதர விசித்த முருகு-இயம் துவைக்க,
ஐயவி அழலொடு செய்யிடம் புகைக்க,
இன்னும் பல தொழிற்கு, இந் நிலை நின்று,
மாறுபாடு கூறுதல் இலனே,
ஈங்கு இவை நிற்க - யாங்கள் அவ் அருவியில்
ஒழுக, புக்குத் தழுவி எடுத்தும்,
ஒரு மதி முறித்து, ஆண்டு, இரு கவுட் செருகிய
ஏந்து கோட்டு உம்பல் பூம் புனம், எம் உயிர்,
அழிக்கப் புகுந்த கடைக்கொள் நாளில்,
நெடுங் கை வேலால் அடும் தொழில் செய்து,
பெறும் உயிர் தந்து மருவி அளித்த
பொன் நெடுங் குன்றம் மன்னிய தோளன்
செவ்வே தந்தமை துயர் இருப்ப,
கூறு பெயரொடு வேறு பெயர் இட்டு,
மறி உயிர் உண்ணக் குறுகி வந்திருந்த
தெய்வம் கற்ற அறிவை
உய்யக் கூறில், ஓர் நெஞ்சு இடம் பொறாதே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

வெறியாட்டுக் களத்தே சென்று வேலவனை நோக்கி வெறியாட்டினை விலக்கி ,அறத்தொடு நிற்கும் முறைமையால் பிறிதொன்று கூறுவாள் போலத் தோழி கூறியது.

பாடற்பொருள்:

பக்கத்தில் நின்று ஏவல் கேட்போரும், இந்தப் பிழையினால் இவளுக்குத் (தலைவிக்கு) துன்பம் வந்தது என்று அறிந்து கொண்டவரும், பழைமையான குறி பார்க்கையினாலே இவளுக்கு உற்ற நோயி'னை அறிந்து கூறிய நெடிய கண்களை உடைய கட்டுவிச்சி முதலிய மகளிரும் இப்பொழுது தோழியாகிய நான் சொல்ல இருக்கின்ற காரியத்தைக் கேட்பீர்களாக. *(1-3)*

பிறையின் கண் உண்டாகிய அமுதம் - இறைவனின் இடப் பாகத்தில் இருக்கும் பசிய கொடி போன்ற உமையவளின் அழகிய நெற்றியில் தோன்றிய, வியர்வை நீர்த் துளிகளின் வரிசை போலத் தோன்றவும், *(4-5)*

பொய்யர்களுடைய சொற்கள் நஞ்சினைச் சிந்துதல் போல, தன்னுடைய கண்டத்தில் உள்ள நஞ்சு சிந்தவும்,

தன் சடையில் அணிந்துள்ள கங்கையினுடைய துறை கொண்ட ஆயிரம் முகங்களும் ,தன்னால் படைக்கப் பட்ட பொன்னால் ஆகிய அண்டச்சுவரில் உள்ள அழுக்கினை அகற்றித் தூய்மை செய்வது போல, அண்டப் பகுதிகள் எல்லாம் சென்று சுழலவும்,

தன் தலையில் சூடியுள்ள கொக்கினது இறகுகள் தன் தலையில் சூடிய கங்கையின் அலையில் தோன்றுகின்ற நுரை போல அண்டச் சுவருக்கு அப்பால் செல்லவும்,

தன் கையிலே ஏந்திய நெருப்பானது மாணிக்க மணியினாலே அண்டச் சுவரை வளைத்த கோட்டையாக ஒளியைப் பரப்பவும்,

தன்னால் செய்யப்பட்ட அந்த அழகிய பொன்னாலாகிய அண்டத்தைத் தன்னுடைய சடைகள் எட்டுத் திக்கும் சென்று அளந்திட நிமிர்'ந்து பரந்து சுழலவும்,

Koviloor Digital Library

தன்னுடைய மூன்று திருக்கண்களும் மேருவைச் சுற்றிய சூரியர்களைப் போலத் தோன்றவும், மதுரையாகிய பெரிய நகரத்தில் ஆடிய இறைவனாகிய அமுதத்தைத் தம் மனமாகிய வாயினாலே பருகி மகிழ்ந்த மெய்யடியார்களைப் போல, **(6-20)**

வெறியாடும் களத்தில் இருக்கும் மதுவினைப் பருகுவதற்குப் போன பிறவியில் தவம் செய்தவர் மதுவின் வாசம் கமழும்படி, தான் விரும்பியவாறு பருகுவார்களாக. **(21-22)**

மேலும் இங்கு வெறியாட்டு ஆடுவதற்கு வந்த வேலனும் தான் மேற்கொண்ட தொழிலைத் தடையின்றி நிகழ்த்தட்டும். கட்டுவிச்சியும் தன் வழக்கப்படி முறத்தில் இட்ட நெல்லைக் குறி சொல்லுவதற்கு முகந்து கொள்ளட்டும்.

வெறியாட்டுக் களத்தில் இறுகிக் கட்டிய வாரினைக் கொண்ட வெறியாட்டுப் பறையும் முழங்கட்டும். மேலும் வெண்சிறு கடுகினை அனலில் இட்டும், குங்குலியம் முதலிய புகைப் பொருளைத் தீயில் இட்டும் புகை அமையட்டும்.

இவ்வாறு வெறியாட்டுக் களத்தில் நிகழ இருக்கும் பல்வேறு தொழில்கட்கும் நான் உடன்பட்டுக் கூறுவது அல்லாது மாறுபாடு சிறிதும் கொள்ளேன். ஆதலால் நடக்கும் தொழில்களும் நடக்கட்டும். இவை நிற்க, **(23-29)**

நாங்கள் எப்பொழுதும் நீராடும் அருவியில் உட்புகுந்து நீராடும் காலத்தே நீர் பெருகி எம்மை இழுத்துச் செல்லுதலால் நாங்களும் அந்நீரோடு சென்றோம். அவ்வாறு செல்லும்பொழுது எங்கிருந்தோ வந்து அந்நீரில் புகுந்து, எங்களைக் கட்டித் தழுவி எடுத்தான் ஒருவன்.

மற்றொரு நாள் நாங்கள் காக்கும் பூம்புனத்தில் புகுந்த, திங்களை இரு பிளவாக்கி வாயின் இருபக்கத்திலும் செருகினாற் போன்ற உயர்ந்த கோட்டினை உடைய யானை, எம் உயிரைக் கொல்லும்படி பக்கத்தில் வந்த பொழுது, அவ்விடத்தில் கையி லிருந்த நெடிய வேலினால் அதனைக் கொன்றான் அவன்.

இத்தகைய இரண்டிடத்திலும் எம் உயிரை அணுகிப் பாது காத்து அருளிய நெடிய பொன்மலை போன்ற தோளினை உடைய

Koviloor Digital Library

தோன்றலாகிய தலைவன், தலைவியின் எதிரே வந்தமையால் உண்டான துயருக்குக் காரணம் இவ்வாறு இருக்க, *(30-37)*

தாய் தந்தை இட்ட பெயரோடு எமக்குப் பேய் கொண்டாள் என்று வேறு பெயரிட்டு வேலனைக் கொண்டு வந்து, ஆட்டுக் கடாயின் உயிரை உண்ணுதற்கு வந்திருக்கின்ற தெய்வத்தின் அறிவை இவள் பிழைக்கும்படிக் காரணமாகக் கூறின் இவளு டைய நெஞ்சம் அதனை ஏற்காது. *(38-41)*

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **292** ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாட்டின் முதற் பகுதியில் சிவ பெருமான் ஆடிய ஆட்டத்தின் போது நிகழ்ந்த செய்திகள் சிவ பெருமானின் பெருமைகளாகக் கூறப்பட்டுள்ளன. அதிலும் அவனுடைய தலையில் உள்ள சந்திரன், கழுத்தில் உள்ள நஞ்சு, சடையில் அணிந்துள்ள கங்கை, கொக்கின் இறகு, கையில் ஏந்திய நெருப்பு, தலையில் உள்ள சடை, முகத்தில் உள்ள மூன்று கண்கள் ஆகியவை பலவிதமாகத் தோன்ற , நான்மாடக் கூடலில் சிவபெருமான் இன்பக் கூத்தாடினான் என்று சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளது. மேலும் வெறியாட்டுக் களத்தில் நிகழும் கள் குடித்தல், வெறியாடல், முறத்தில் உள்ள நெல்லினை எண்ணுதல், பறை முழங்குதல், கடுகு உள்ளிட்ட மணப் பொருள்களைக் கொண்டு புகை எழுப்புதல் போன்ற செயல்கள் கூறப் பட்டுள்ளன. இத்தகைய வெறியாட்டு பயன் தராது என்று தோழி அறத்தொடு நின்றாள். நீரில் காப்பாற்றியும், யானையைக் கொன்று காப்பாற்றியும், தலைவன் செய்த செயல்களை அறத்தொடு நிற்றல் செயல்களாகக் கூறி, இத்தகைய தலைவனைத் தலைவி நேரில் கண்டதால் ஏற்பட்ட துன்பத்திற்குக் காரணமானதை விட்டுவிட்டு, வெறியாட்டைக் காரணமாக்கிக் கூறுவது தன் நெஞ்சிற்குப் பொருந்தாது என்று தோழி கூறி அறத்தொடு நின்று வெறியாட் டினை விலக்கினாள் என்ற செய்தி இப்பாடலில் கூறப் பட்டுள்ளது.

(சொ-ம்)

உழை - பக்கம், ஒரு பால் பசுங்கொடி - உமையவள், படிறர் - பொய் சொல்லுபவர், தூவல் - இறகு, பாணிக்குள் - கை, மும்மை - முற்பிறப்பு, முருகு - முரசு, ஐயவி - கடுகு.

Koviloor Digital Library

18. உலகியல்பு உரைத்தல்

'பழமை நீண்ட குன்றக் குடியினள்,
வருந்தாது வளர்த்தும், குடங்கை துயிற்றியும்,
மானின் குழவியொடு கெடவரல் வருத்தியும்,
பந்து பயிற்றியும், பொற்கழங்கு உந்தவும்,
பாவை சூட்டவும் , பூவை கேட்கவும்,
உடைமை செய்த மடமையள் யான்' என,
எம் எதிர் கூறிய இம் மொழி தனக்குப்
பெருமை நோக்கின் சிறுமை- அது உண்டே
செறி திரைப் பாற்கடல் வயிறு நொந்து ஈன்ற
செம்மகள் கரியோற்கு அறுதிபோக,
மகவின் இன்பம் கடல் சென்றிலவால்,
அன்றியும், விடிமீன் முளைத்த தரளம்,
வவ்வினரிடத்தும் அவ்வழி ஆன,
திரைக் கடல் குடித்த கரத்த மா முனிக்கும்,
திங்கள் வாழ் குலம் தங்கும் வேந்தற்கும்,
அமுத ஊற்று எழுந்து நெஞ்சம் களிக்கும்
தமிழ் எனும் கடலைக் காணி கொடுத்த
பொதியப் பொருப்பும், நெடு முதுகு வருந்திப்
பெற்று வளர்த்த கல் புடை ஆரம்
அணியும் மா மகிழ்நர் பதி உறை புகுந்தால்,
உண்டோ சென்றது? கண்டது உரைக்க,
பள்ளிக் கணக்கர் உள்ளத்துப் பெற்ற
புறம் ஆர் கல்வி, அற மா மகளைக்
கொண்டு வாழுநர்க் கண்டு அருகு இடத்தும்,
அவர் மனஅன்னை கவரக் கண்டிலம்,
பெருஞ் சேற்றுக் கழனி கரும்பு பெறு காலை,
கொள்வோர்க்கு அன்றி அவ் வயல் சாயா,
பூம் பணை திரிந்து பொதி அவிழ் முளரியில்,
காம்பு பொதி நறவம் விளரியோடு அருந்தி,
கந்தித் தண்டலை வந்து வீற்றிருந்து,
கடி மலர்ப் பொழிலில் சிறிது கண் படுத்து,
மயக்கம் நிறை காமத்து இயக்கம் கொண்டு,
நின்ற நாரணன் பரந்த மார்பில்
கலவாக் குங்குமம் நிலவிய தென்னக்
கார் வான் தந்த பேர் கொள் செக்கரில்,
வீதி வாய்த் தென்றல் மெல்லென்று இயங்கும்

Koviloor Digital Library

மூதூர்க் கூடல் வந்தருள் முக்கணன்
(காமனை, அயனை, நாமக் காலனை,
கண்ணால், உகிரால், மலர் கொள் காலால்,
சுட்டும், கொய்தும், உதைத்தும் துணித்த
விட்டு ஒளிர் மாணிக்க மலையின்) ஒரு பால்,
அடங்கப் படர்ந்த பசுங்கொடி-அதனை
வளர்த்த சேண் மலை, உளத் துயர் கொண்டு
தொடர்ந்ததும் இலை, கீழ் நடந்த சொல் கிடக்க-
பாலைக் கிழத்தி திருமுன் நாட்டிய
சூலத் தலையின் தொடர்ந்து சிகை படர்ந்து
விடுதழல் உச்சம் படு கதிர் தாக்க,
பாடல்சால் பச்சைக் கோடகக் காற்றை,
மை இல் காட்சிக் கொய் உளை நிற்ப,
வயிற்றில் இருந்து வாய் முளைத்தென்ன
இரு கால் முகனிற்கு அருகா, துரந்து,
படும் அழல் நீக்கக் குட கடல் குளிக்கும்
நா-வாய் குறியாத் தீ வாய் பாலையில் -
தம்மில் இன்பம் சூளுடன் கூடி,
ஒன்றி விழைந்து சென்றாட்கு உடைந்து,
பொன் பதி நீங்கி,உண்பது மடங்கி,
முழங்கப் பெருங் குரல் கூஉய்ப்
பழங்கண் எய்தியது பேதைமை அறிவே.

துறை விளக்கம் :

உடன் போக்கில் சென்ற தலைவி தலைவனைத் தேடிச் சென்ற செவிலிக்கு உலகியல்பு கூறி, கண்டோர் அவர்களைத் தேடிச் செல்லாது தடுத்தது.

பாடற் பொருள்:

(நம்முடையவர்களே, என்று அழைத்துச் செவிலி தான் வளர்த்த மகளைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறாள்)

குன்றத்தின்கண் ஒருவராலும் அறியமுடியாத பழமையான வரலாற்றைக் கொண்ட குடியில் தோன்றியவளை (தலைவியை) நோய் முதலியவற்றால் வருந்தாமல் நான் எடுத்து வளர்த்தேன். அவள் தூங்குவது அறிந்து என் குடங்கையின் இடத்தில் துயிலச் செய்தேன். அவள் அழும்பொழுது மான் குட்டிகளுடன்

Koviloor Digital Library

விளையாடச் செய்து அவள் துயரை மாற்றினேன், மேலும் பந்தாடுவதற்குக் கற்பித்தேன். பொன்னால் செய்த கழங்குகளை எறிந்து விளையாடக் கற்பித்தேன். பாவைக்கு ஒப்பனை செய்து கற்பித்தேன். நாகணவாய்ப் புள்ளின் மொழிகளைக் கேட்கவும் பயிற்றுவித்தேன் என்று கூறி, என்னால் வளர்க்கப் பட்ட தலைவி அறியாமை உடையவள் (எதனையும் அறியாத பெண்) என்று செவிலியாகிய மூதாட்டியார் நம் எதிரே கூறுகின்ற இம் மொழிக்குச் சிறப்பு உண்டா? என்று ஆராய்ந்து பார்த்தால் சிறப்பு ஒன்றும் தோன்றவில்லை. சிறுமைதான் தோன்றுகிறது. (என்று கண்டோர் கூறிச் செவிலிக்கு உலக இயல்பு கூறத் தொடங்கினர்) *(1-8)*

செறிந்த அலைகளை உடைய திருப்பாற்கடலாகிய தாய் வயிறு நொந்து பெற்ற திருமகளாகிய மகள், கரிய நிறமுடைய திருமாலுக்கு மனைவியாக ஆகினாள். அவளால் கிடைக்கும் இன்பங்கள் அத்திருமாலுக்குச் சென்றனவே அன்றி, கடலாகிய தாய்க்குச் சென்றதில்லை. *(9-11)*

விடியற்காலையில் தோன்றும் கோள் போன்று கடலிடத்தே தோன்றும் முத்துக்கள் தரும் இன்பம் முத்துக்களைக் கைப்பற்றிய வருக்கே ஆகுமன்றி, கடலுக்கு ஆவதில்லை. *(12-13)*

அலைகளை உடைய கடலைக் குடித்தற்குக் காரணமாகிய கையினை உடைய அகத்தியருக்கும், சந்திர குலத்தில் பிறந்த பாண்டியனுக்கும் நெஞ்சத்தில் அமுது ஊற்று எழுந்து, மகிழ்வ தற்குக் காரணமாகிய தமிழாகிய கடலை உரிமையாகக் கொடுத்த பொதியமலையாகிய தாய் பெற்று வளர்த்த, கல்லைப் புடைத்து எழுந்த சந்தன மரம் என்னும் மகள், தன்னைக் கைப்பற்றிய கணவர் வாழும் நகரின் கண்ணே சென்று, அவர் பூசும் மகிழ்வைத் தந்தது. மீண்டும் தன் தாய்க்கு இன்பம் செய்ய அவள்பால் திரும்பி வருவது உண்டோ? (பொதியமலைக்குத் திரும்பியதில்லை) *(14-21)*

தாம் ஆராய்ந்து கண்ட பொருளை உரைத்த ஆசிரியர் உள்ளம் என்ற தாய் பெற்ற புறத்தே தந்த கல்வியாகிய மகளைக் கொண்டு வாழ்வாரிடத்து இருப்பது(மாணவரிடத்து), தனக்கு அருகில் இருக்கும் ஆசிரியர் மனமாகிய தாய் கைக்கொள்ள மீண்டும்

Koviloor Digital Library

சென்றதுண்டோ? (மாணவர்க்குக் கொடுத்த கல்வி ஆசிரியருக்குத் திரும்ப வருவதில்லை) *(22-25)*

சேற்றை உடைய வயலாகிய தாய் கரும்பாகிய மகளை ஈன்ற காலத்தே, அக்கரும்பினை கைக்கொள்வார்க்கு வழங்கப்படுவதே அன்றி, அந்த வயலாகிய தாய் கரும்பாகிய மகளைத் தன்பால் வைத்துக் கொள்வதில்லை. *(26-27)*

தென்றலானது பொலிவினை உடைய குளத்தில் சஞ்சரித்து மொட்டவிழ்ந்த தாமரையில் உள்ள தேனை விளரி பாடும் வண்டுடன் அருந்தி - கமுகஞ் சோலையில் வந்து வீற்றிருந்து வாசமுடைய மலர்ச் சோலையில் சிறிதுகாலம் தங்கித் துயின்று, பின்னர் மயக்கம் கொள்வதற்குக் காரணமாகிய ஆசையினாலே இயங்குதலுற்று - உலகை அளத்தற் பொருட்டு பேருருக் கொண்ட திருமாலுடைய அகன்ற மார்பின்கண் குங்குமக் குழம்பு தங்கினாற் போல - கரிய மேகம் தோற்றுவித்த செவ்வந்தி என்னும் பெயர் கொண்ட மாலைப் பொழுதில், வீதியில் மந்தமாக வீசிற்று. *(28-36)*

அத்தகைய வீதியைக் கொண்ட மதுரை மாநகரில் எழுந் தருளியிருக்கும் மூன்று கண்களை உடைய சிவபெருமான், காம வேளைக் கண்ணால் சுட்டெரித்தும், பிரமனின் ஒருதலையை நகத்தால் கொய்தும், அச்சத்தினை உடைய எமனை மலர் போன்ற காலால் உதைத்தும், அவர்தம் செருக்கினைக் குறைத்து அருளிய, சுடர் பொருந்திய மாணிக்கமலை போல்வானுடைய உடலில் இடப்பாகம் முழுதும் தனக்குள் அடங்கும்படிப் படர்ந்த பூங்கொடி போன்றவளாகிய பார்வதியை வளர்த்தெடுத்த இமய மலையாகிய தாய், பார்வதியைச் சிவபெருமான் கைக்கொண்டு சென்ற பின்னர், தன் நெஞ்சத்தே வருத்தம் கொண்டு பார் வதியைப் பின்தொடர்ந்து செல்வதில்லை. *(37-44)*

இதுகாறும் கூறிய சொற்கள் இவ்வாறு இருப்ப, பாலை நிலத்துத் தெய்வமாகிய காளியின் முன்றில் நடப்பட்ட சூலப்படையின் உச்சியில் தோன்றும் தீக்கொழுந்து, தொடர்ந்து சென்று வானத்தின் உச்சியில் இருக்கும் ஞாயிற்று மண்டலத்தின் மேல் தாக்கியது. அத்தகைய வெப்பத்தைத் தணித்துக் கொள்ளுதற் பொருட்டு, பச்சைக் குதிரையாகிய காற்றானது சிலிர்த்து வீச, *(-45-49)*

Koviloor Digital Library

(வரி 50லிருந்து 54 வரி பொருள் பொருந்தவில்லை)

அத்தகைய தீப்பொருந்திய பாலை நிலத்தின்கண் கொடுப் பாரும் அடுப்பாரும் இன்றித் தமக்குத் தாமே சந்தித்து இன்பம் எய்தி தலைவனுடைய வஞ்சின மொழியோடு பொருந்தி - காதல் முதிர்ந்து அக்காதலுடன் தலைவனோடு சென்ற தலைவிக்கு நெஞ்சுடைந்து வருந்தி, உண்ணுதலும் இன்றி நான்கு திக்கிலும் கேட்கும்படித் தலைவியைக் கூப்பிட்டுக் கொண்டு செவிலியாகிய மூதாட்டி இங்கு வந்து துன்பம் அடைவதற்குக் காரணம் செவிலி யின் அறியாமையே ஆகும் என்று கண்டோர் கூறினர். (55-58)

(வி-ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 248 ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் உடன்போக்குச் சென்றவரைத் தேடிவந்த செவிலியைப் பாலை நிலத்தில் வாழும் கண்டோர், அவள் கூறுகின்ற தலைவி அறியாமை உடையவள் அல்ல என்பதைக் கூறி உலக இயல்பு கூறினர். அதாவது திருப் பாற்கடலில் தோன்றிய திருமகளும் முத்தும் அவைகளை உடைய வர்களுக்கு அன்றிக் கடலுக்கு இன்பம் தருவதில்லை. அது போலப் பொதிய மலையில் தோன்றிய சந்தனம் கைக்கொண்ட வர்க்கு அன்றி மலையில் வந்து சேருவதில்லை. ஆசிரியர் கற்றுக் கொடுத்த கல்வி மீண்டும் ஆசிரியருக்கு வருவதில்லை. கரும்பை விளைவித்த வயல் கரும்பை என்றும் தன்னிடத்தே வைத்துக் கொள்வதில்லை. சிவபெருமானோடு சென்ற பார்வதி மீண்டும் இமயமலைக்கு உரியவள் ஆவதில்லை என்று உலக இயல்பு களைக் கூறி, தலைவனோடு சென்ற தலைவி பிறந்த வீட்டிற்கு இன்பம் தருவதில்லை என்பதை எடுத்துரைக்கின்றனர். சிவ பெருமானின் பெருமையாகக் காமனை வென்றதும், பிரமன் தலையை அரிந்ததும், கூற்றுவனை உதைத்ததும் கூறப் பெற்றுள்ளது.

(சொ. ம்):

குடங்கை - உள்ளங்கை, செம்மகள் - திருமகள், தரளம் - முத்து, மாமுனி - அகத்தியர், வேந்தன் - பாண்டியமன்னன், ஆரம் - சந்தனம், பள்ளிக்கணக்கர் - ஆசிரியர், முளரி - தாமரை.

Koviloor Digital Library

19. மகிழ்ந்து உரைத்தல்

குங்குமக் கோட்டு அலர் உணங்கல் கடுக்கும்
பங்குடைச் செங் கால் பாட்டு அளி அரிபிடர்க்
குரு, வில், தோய்ந்த அரி கெழு மரகதக்
'கல்' எனக் கிடப்பச் சொல்லிய மேனித்
திரு நெடுமாலுக்கு, ஒரு விசை, புரிந்து
சோதி வளர் பாகம் ஈந்தருள் நித்தன்,
முனிவர் ஏமுற வெள்ளிஅம் பொதுவில்,
மனமும் கண்ணும் கனியக் குனிக்கும்
புதிய நாயகன், பழ மறைத் தலையோன்,
கைஞ்ஞின்றவன் - செங் கால் கண்டனர் போல,
விளக்கமும், புதுமையும், அளப்பு இல் காட்சியும்,
வேறு ஒப்பு எடுத்துக் கூறுவது நீக்கமும்,
அறிவோர் காணும் குறியாய் இருந்தன-
(இருந் திண் போர்வைப் பிணி விசி முரசம்,
முன்னம் எள்ளினர் நெஞ்சு கெடத் துவைப்ப,
மணம் கொள் பேர் அணி பெருங் கவின் மறைத்தது என்று
எழுமதி குறைத்த முழுமதிக் கருங் கயல்,
வண்டு மருவி உண்டு களியாது,
மற்று, அது பூத்த பொன் திகழ் தாமரை
இரண்டு முகிழ் செய்து நெஞ்சுறப் பெருகும்,
வற்றா மேனி வெள்ளத்துள் மறிய,
நுனித்தலை அந்தணர் கதழ் எரி வளர்த்துச்
சிவந்த வாய்தோறும் வெண் பொரி சிதறிச்
செம்மாந்து மணத்த வளரிய கூர் எரி
மும் முறை சுழன்று, தாயர் உள் மகிழ,
இல் உறை கல்லின், வெண்மலர் பரப்பி,
இலவு அலர் வாட்டிய செங் கால் பிடித்து,
களி தூங்கு உளத்தொடும் மெல்லெனச் சேர்த்தி,
இரண்டு பெயர் காத்த தோலாக் கற்பு
முகன் உறக் காணும் கரியோர் போல,
இடப்பால் நிறுத்தி, பக்கம் சூழ
வடமீன் காட்டி, விளக்கு அணி எடுத்துக்
குலவாழ்த்து விம்ம, மண அணிப் பக்கம்
கட்புலம் கொண்ட இப் பணி அளவும்)
வாடி நிலை நின்றும், ஊடி ஏமாந்தும்,
என் முகம் அளக்கும் காலக் குறியைத்

Koviloor Digital Library

தாமரைக் கண்ணால் உட்புக அறிந்தும்,
‘உலகம் மூன்றும் பெறுதற்கு அரியது’ என்று
எண்ணா வாய்மை எண்ணிக் கூறியும்,
கல் உயர் நெடுந் தோள் அண்ணல்
மல் உறத் தந்த ஈர்ந் தழைதானே.

துறை விளக்கம்:

தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளத் தனது உறவோடு வருவதை மணமுரசு ஒலி அறிவிக்க, அதனைக் கேட்ட தோழி தலைவன் தந்த கையடைப் பொருளான தழைகளை வாடாமல் வைத்து, அத்தழையையே பற்றுக் கோடாகக் கொண்டு ஆற்றி யிருந்தது நலந்தந்தது என்று தலைவியை நினைந்து மகிழ்ந்தது.

பாடற் பொருள்:

மலையினும் உயர்ந்த நெடிய தோள்களை உடைய நம்முடைய தலைவன் இவள் உடன்படுவாளோ மாட்டாளோ என்ற ஐயத்தால் வாட்டம் எய்தி, யான் சேட்படுத்துந் தோறும் நீங்கானாய், தன் நெஞ்சோடு புலந்து என்னை ஆற்றுப்படுத்த விரும்பியும், தன்னுடைய தாமரைக்கண் போன்ற கண்ணினால் என் முகத்தை நோக்கி அளவளாவும் பொழுதும், என் கருத்தினை அவன் நெஞ்சிற்கு ஏற்ப அறிந்தும், இத்தழை பூமி, பாதாளம், சொர்க்கம் என்ற மூன்று உலகத்தும் பெறுவதற்கு அரியது என்று கூறி வளம் பெற வழங்கிய குளிர்ச்சி பொருந்திய இத்தழைதான், ***(35-41)***

களவுக் காலத்து இகழ்ந்தவர்களது மனம் கெடும்படித் திண்ணிய போர்வையினை மிகக் கட்டிய மண முரசு முழங்கா நிற்ப, ***(14-15)***

திருமணக் காலத்தில் அணிந்து கொண்ட பேரணி என்னும் பாசடை (இலை) - அழகு என்னும் வெள்ளத்தை மறைத்தது. முலைக்கண்கள் என்னும் வண்டு பொருந்தி, தேன் நுகர்ந்து மகிழாமல் முலைகளாகிய இரண்டு தாமரை மலர்களில் இருந்தது. நெஞ்சம் என்னும் நீர் நிலையில் எழுந்த வானத்துத் திங்களை ஒளி குன்றிய பிறையாக ஆக்கும் வண்ணம், முகம் என்னும் திங் களில் விழி என்னும் கரிய கயல் மீன்கள் குதியா நிற்ப, ***(16-21)***

Koviloor Digital Library

குடுமித் தலையை உடைய அந்தணர்கள் வேதத்தை உடைய அக்னியை வளர்த்து, அத்தீயில் எழும் சிவந்த வாய்தோறும் வெண்மையான பொறியைச் சிந்த,

அகம் மலர்ந்து கூடுவதற்குக் காரணமாகிய அருள் பண்புடைய வேள்வித் தீயை, நற்றாய் முதலிய தாயர்கள் உள்ளம் மகிழும்படி மூன்றுமுறை சுற்றிட,

இல்லத்தில் இருக்கும் அம்மிக்கல்லின் மேல் வெண்மை நிறப் பூக்களைப் பரப்பி வைத்து, இலவம் பூவை விட மென்மையான தலைவியின் சிவந்த காலைப் பிடித்து மகிழ்ச்சி கூடிய உள்ளத்தோடு, அவ் அம்மியின் மேல் தலைவன் மெல்ல வைத்திட,

அறத்தின் வழியே நிற்றலில் தோல்வி அடையாத இருவரும் (தலைவனும், தலைவியும்) காத்துக் கொண்ட களவால் வந்த கற்பினைப் பொருந்தக் காணுகின்ற சான்றோர் போல, சுற்றத்தார் சூழ்ந்திருக்கத் தலைவியின் இடப்பாகம் தனக்கு வலமாக நிறுத்தி, அருந்ததியைத் தலைவிக்குக் காட்டிட,

விளக்கு முதலிய மங்கலப் பொருள்களை ஏந்தி, தம் குலத்தோர் வாழ்த்தும் வாழ்த்தொலி பெருகி நிற்ப, திருமண அணியினைத் தலைவன் தலைவியின் கழுத்திலே அணியும் காட்சியாகிய சடங்குகள் என் கண்களை இடமாகக் கொண்டு நிகழ்ந்திட, ***(22-34).***

குங்கும மரத்தின் கிளையில் வாடிய மலரை ஒக்கும் வளைந்த காலினையும், இசையினையும் உடைய வண்டினது நிறம் போன்ற கருமை நிறத்தை - பிடரியின் கண் அமைந்த நிறமும் ஒளியும் பொருந்திய அழகுடைய மரகத மலையின் ஒரு கல்லே என்று இகழ்ந்து சொல்லும்படிக் கிடந்த திருமேனியை உடைய நெடுமாலுக்கு, ஒருமுறை விரும்பிச் சோதியாக ஒளி பொருந்தி வளர்ந்த தன் வலப்பாகத்தை வழங்கிய அழிவில்லாதவனும், பதஞ்சலி முதலியோர் மனமும் கண்ணும் மகிழும்படி, வெள்ளியால் இயன்ற அம்பலத்தில் நடனமாடும், பின்னைப் புதுமைக்கும் புதுமையுடைய தலைவனும், பழைய மறைகளுக்கெல்லாம் முதல்வனும் ஆகிய இறைவனின் சிவந்த திருவடிகளைக் கண்ட மெய்யடியார்கள் தமக்குத் தாமே உவமையாயினாற் போல, ***(1-9)***

Koviloor Digital Library

ஒளியாலும், புதுமையாலும், அளவறிய காட்சியாலும் தமக்குத் தாமே ஒப்பாய், வேறு உவமை எடுத்துக் கூறுவதற்கு இயலாததாய். (தழைகள்) அறிஞர்கள் காணுதற்கு இலக்காய் (காரணமாய்) இருந்தன. *(10-13)*

(வி-ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 300 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலில் தலைவனால் கொடுக்கப் பெற்ற தழைகள் மணமுரசு ஒலிப்ப தலைவியின் கண்கள் கயல்மீன்கள் போல் அங்கும் இங்கும் சுழல, அந்தணர் வேள்வி இயற்ற, அதனைக் குடும்பத்தார் காணத் தலைவனும் தலைவியும் வேள்வித் தீயை மூன்றுமுறை சுற்றிவர, அம்மி மிதித்து அருந்ததி காட்டிட, குலமகளிர் வாழ்த்தொலிக்க, தலைவன் மணஅணியைத் தலைவியின் கழுத்தில் அணிவிக்க, நிகழுகின்ற சடங்குகள் எல்லாம் தோழி தன் மனக்கண்களில் காணும்படியாகவும், சிவ பெருமான் அடியவர்கள் தமக்குத் தாமே ஒப்பாவது போலத் தனக்குத் தானே ஒப்பாகிய தழைகள்,களவிலிருந்து வந்த கற்புக் காலத்துத் திருமணச் சடங்குகளைப் பெரியோர்கள் காணுவதற்குக் காணும்படியாகவும் அமைந்தன என்ற செய்தி இப்பாடலில் கூறப் பெற்றுள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாகத் திருமாலுக்குத் தன் வலப்பாகத்தைக் கொடுத்த செய்தி' கூறப் பெற்றுள்ளது. மேலும் மதுரையில் வெள்ளியம்பலத்தில் ஆடு வதும் கூறப்பெற்றுள்ளது. (இவ்வாறு கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. பாடற் பொருள் கோர்வையாக அமைய வில்லை என்பது அறிய வேண்டியுள்ளது)

(சொ. ம்)

கோடு - கிளை, பாட்டுஅடி - இசையினை உடைய வண்டு, மணம்கொள் பேரணி - திருமணத்தில் அணிந்து கொள்ளும் பாசடை என்ற அணிகலன், கதழ் எரி - முழங்கி எரிகின்ற, தோலா கற்பு - தோல்வி அடையாத அறத்தொடு நின்ற கற்பு, குரு - நிறம்., பிடர் - கழுத்து, அரி - திருமால்,

Koviloor Digital Library

20. பிறை தொழுக என்றல்.

நெடு வளி உயிர்த்து, மழை மதம் ஒழுக்கி,
எழுமலை விழுமலை புடைமணி ஆக,
மீன்புகர் நிறைந்த வான்குஞ்சர முகம்
வால் பெற முளைத்த கூன் கோடுஆனும்,
பேச நீண்ட பல் மீன் நிலைஇய
வானக் கடலில் தோணி-அது ஆனும்,
கொழுநர் கூடும் காம- உததியைக்
கரைவிட உகையும் நாவாய் ஆனும்,
கள் அமர் கோதையர், வெள்ளணி -விழவில்
ஐங்கணைக் கிழவன் காட்சி உள் மகிழ
இழைத்து வளைத்த கருப்பு வில்ஆனும்-
நெடியோன் முதலாம் தேவர் கூடி,
வாங்கிக் கடைந்த தேம் படு கடலில்,
அமுதுடன் தோன்றிய உரிமையானும்,
நின் திரு நுதலை ஒளி விசும்பு உடலில்
ஆடி நிழல் காட்டிய பீடு-அதுவானும்,
கரை அற அணியும் மானக் கலனுள்
தலை பெற இருந்த நிலைபுகழானும்,
மண் அகம் அனைத்தும் நிறைந்த பல் உயிர்கட்கு
ஆயா அமுதம் ஈகுதலானும்,
(பாற்கடல் உறங்கும் மாயவன் போல,
தவள மாடத்து அகல் முதுகு பற்றி,
நெடுங் கார் கிடந்து படும் புனல் பிழியும்
கூடல் வீற்றிருந்த நாடகக் கடவுள்
பொன்சுடர் விரித்த கொத்து அலர் கொன்றையும்,
தாளியும், அறுகும், வால் உளை எருக்கமும்,
கரந்தையும், வன்னியும், மிடைந்த செஞ் சடையில்,
இரண்டு-ஐஞ்நூறு திரண்ட முகம் எடுத்து,
மண், பிலன்,அகழ்ந்து, திக்கு நிலை மயக்கி,
புரியாக் கதமோடு ஒருபால் அடங்கும்)
கங்கையில் படிந்த பொங்கு தவத்தானும்,
அந் நெடு வேணியின் கண்ணி என இருந்து,
தூற்றும் மறு ஒழிந்த ஏற்றத்தானும்-
மணி வான் பெற்ற இப் பிறையைப்
பணிவாய், புரிந்து, தாமரை மகளே!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தோழி தலைவியிடம் பிறைச் சந்திரனைக் காட்டித் தானும் தொழுது, அவளையும் தொழுக என்று கூறித் தலைவி தலைவனோடு கூடிய கூட்டத்தை அறிய முற்படுதல்.

பாடற் பொருள்:

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவளே, *(35)* சூரியன் எழுகின்ற உதயகிரி என்றும், சூரியன் வீழும் மலை என்றும் கூறப்படுகின்ற இரண்டு மலைகளும் இரண்டு பக்கங்களிலும் கட்டும் மணிகளாக விளங்க, நீண்ட காற்றாகிய மூச்சினை உயிர்த்து, மழையாகிய மதத்தினைச் சிந்தி, விண் மீன் களாகிய புள்ளிகள் நிறைந்த - ஆகாயமாகிய யானையினது முகத்தில், தூய்மை உண்டாகத் தோன்றிய வளைந்த மருப்பே (கொம்பே) ஆயினும் *(14)*

இன்னும் சொன்னால் சொல்ல முடியாத பல நட்சத்திரங் களாகிய மீன்கள் விளங்குகின்ற ஆகாயமாகிய கடலின்கண் இயங்குகின்ற தோணியே ஆயினும்,

தலைவியர்கள் தங்கள் கணவனோடு கூடுவதற்குக் காரண மாகிய காமமாகிய கடலை நீந்திட, இன்பமாகிய கரையின் கண் செலுத்தும் படகே ஆயினும்,

மேலும் அப்பிறையானது ஐந்து மலரம்புகளை உடைய மன்மதன், தேன் பொருந்திய மலர் மாலையினைச் சூடுகின்ற மகளிர்களின் பிறந்தநாள் விழாவில் உள்ளம் மகிழும்படி வளைத்த கரும்பு வில்லே ஆயினும்,

இவ்வாறு காணப்படுகின்ற பிறைச் சந்திரனானது திருமால் முதலிய தேவர்கள் எல்லாம் ஒருங்குகூடிக் கடைந்த திருப்பாற் கடலில் அமிழ்தத்தோடு பிறந்த உரிமை உடையது. *(5 - 14)*

அப்பிறை உன்னுடைய (தலைவியின்) அழகிய நெற்றியின் ஒளியைக் கண்ணாடி தன்னிடத்தே காட்டினாற் போல, ஆகாயம் தன்னிடத்தில் காட்டிய பெருமை உடையதாகும்.

Koviloor Digital Library

எல்லையின்றி அணிகின்ற பெருமைக்குரிய அணிகலன்களில் உன்னுடைய தலைக்கு வைத்து அணிந்த அணி போன்ற புகழை உடையது. நிலவுலகம் அனைத்தும் நிறைந்திருக்கும் பல உயிர் களுக்கும் அமிழ்தத்தைக் கொடுப்பதாகும். (ஒளியாகிய அமுதம்) *(15 - 20)*

திருப்பாற்கடலில் உறங்குகின்ற திருமால் கிடந்தாற் போல - வெண்மை நிற மேல்நிலை மாடத்தில் அகன்ற இடத்தைப் பற்றி நீண்ட மேகமானது கிடந்து - தன்னிடத்தில் உண்டாகிய நீரைச் சொறிதற்கு இடமான மதுரை மாநகரத்தில் எழுந்தருளி யுள்ள கூத்தினை உடைய இறைவன், *(21 - 24)*

பொன்சுடர் விரித்தாற் போன்ற கொத்தாக மலரந்த கொன்றை மலரையும், தாளியாகிய அறுகம்புல்லும், வெள்ளிய இதழை உடைய எருக்க மலரும், கரந்தை மலரும், வன்னி மலரும் அமைந்துள்ள சிவந்த சடையின்கண் ஓராயிரமாகக் கூடிய முகங் களைக் கொண்ட, மண்ணிடத்தே தோன்றி திசைகளை நிலை கெடுத்த, ஒருகாலமும் தோன்றாத சினத்தோடு ஒருபக்கத்தில் அடங்கியிருக்கும் கங்கையில் ஆடிய மிக்க தவத்தை உடையவன். *(25 - 30)*

அவன் கங்கை ஒருபால் அடங்கிய நீண்ட சடையில் சூடும் பூவாகத் திங்கள் இருந்து, உலகத்தார் பழிதூற்றுவதற்குக் காரண மான களங்கம் ஒழிந்ததனால் சிறப்புப் பெற்றது. இச்சிறப்புப் பொருந்திய அழகிய வானம் ஈன்ற இந்தப் பிறையை நீயும் விரும்பித் தொழுவாயாக என்று தோழி தலைவியிடம் கூறினாள். *(31 - 35)*

(வி- ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 67 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலில் வானத்தில் தோன்றும் பிறைச் சந்திரன் பலவகையாக உருவகிக்கப் பெற்றுள்ளது. வானத்தில் தோன்றும் மேகமாகிய யானைக்கு மருப்பு போன்றது. நட்சத் திரத்தோடு கூடிய வானமாகிய கடலில் தோன்றும் தோணி போன்றது. காமக்கடலில் நீந்த உதவுகின்ற படகு போன்றது. மன்மதன் வளைத்த கரும்புவில் போன்றது. திருப்பாற்கடலில்

Koviloor Digital Library

தோன்றியது. தலைவியின் தலையணி போன்ற புகழை உடையது. இத்தகைய சிறப்புடைய பிறைச்சந்திரன் சிவபெருமானின் தலையில் சூடும் பூவாக உள்ளது என்று கூறப்பெற்றுள்ளது. சிவ பெருமானின் சிறப்பாகக் கங்கையில் ஆடிய பெருமையும், அக்கங்கையைத் தலையின் ஒரு பாகத்தில் அடக்கிய பெருமையும் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்)

எழுமலை - சூரியன் எழும் உதயகிரி, விழுமலை - சூரியன் மறையும் மலை, உவரி- கடல், நாவாய் - படகு, ஆடி - கண்ணாடி, கூடல் - மதுரை நகரம், வேணி - சடைமுடி, மறு - கறை. (களங்கம்).

21. ஆற்றாமை கூறல்.

பொருப்பு மலி தோளினும், நெருப்பு உமிழ் வேலினும்,
செந் திருமகளை, செயம் கொள் மங்கையை,
வற்றாக் காதலின் கொண்ட மதி அன்றி -
களவு அலர் தூற்ற, தளவு கொடி நடுங்க,
வேயுளம் பட்டுப் பூவை கறுக்க,
தண்டா மயல்கொடு வண்டு பரந்து அரற்ற,
காலம் கருதித் தோன்றி கை குலைப்ப,
துன்பு பசப்பு ஊரும் கண் நிழல் தன்னைத்
திரு மலர் எடுத்துக் கொன்றை காட்ட,
'இறை வளை நில்லாது' என்பன நிலைக்க,
கோடல் வளைந்த வள் அலர் உகுப்ப,
கண் துளி துளிக்கும் சாயாப் பையுளை,
கூறு பட நாடி ஆசையொடு மயங்கி,
கருவிளை மலர்,நீர், அருகு நின்று, உகுப்ப,
பேர் அழல் வாடை ஆர் உயிர் தடவ,
விளைக்கும் காலம் முளைத்த காலை -
அன்பும், சூளும், நண்பும், நடுநிலையும்,
தடையா அறிவும், உடையோய் நீயே!
எழுந்து காட்டிப் பாடு செய் கதிர்போல்,
தோன்றி நில்லா நிலைப் பொருள் செய்ய,
மருங்கில் பாதி தரும் துகில் புனைந்தும்,
விளைவயல் ஒடுங்கும் முதிர்நெல் உணவினும்
தம்மில் வீழுநர்க்கு இன்பம் என்று அறிந்தும்,

Koviloor Digital Library

(தண் மதி, கடுஞ் சுடர், வெவ் அழல், கண் வைத்து,
அளவாப் பாதம், மண் பரப்பு, ஆக,
தனி நெடு விசும்பு திரு உடல் ஆக
இருந் திசைப் போக்குப் பெருந் தோள் ஆக,
வழு அறு திருமறை ஓசைகள் அனைத்தும்,
மொழிதர நிகழும் வார்த்தை ஆக,
உள் நிறைந்து உழலும் பாடு இரண்டு உயிர்ப்பும்,
பகல் இரவு ஒடுங்கா விடுவளி ஆக -
அடுபடைப் பூழியன் கடு முரண் பற்றி,
இட்ட வெங் கொடுஞ் சிறைப் பட்ட கார்க் குலம்
தளையொடு நிறைநீர் விடுவன போல,
புரைசையொடு பாசம் அற உடல் நிமிர்ந்து
கூடமும் கந்தும் சேறு நின்று அலைப்ப,
மூன்று மத நெடும் புனல் கான்று, மயல் உவட்டி,
ஏழ் உயர் கரித்திரள் கதமொடு பிளிறும்
பெரு நகர்க் கூடல் - உறைதரு கடவுளை
நிறையப் பேசாக் குறையுளர் போலவும்)
கல்லா மன்னினும், செல்லுதி, பெரும!
இளமையும், இன்பமும், வளனும், காட்சியும்,
பின்புற, நேடின், முன்பவை அன்றால்,
நுனித்த மேனித் திருவினட்கு, அடைத்த
வினை தரும் அடைவின் அல்லது,
புனையக் காணேன், சொல் ஆயினவே.

துறை விளக்கம் :

தலைவன் சுரத்தின் வழியே சென்று பொருள் தேட நினைக்கின்றான் என்று தோழி சொன்ன அளவில், தலைவி மிக வருந்தினாள். ஆதலால் தோழி தலைவனைப் பார்த்துத் தலைவி யின் ஆற்றாமையை எடுத்துக் கூறி, நீ தேடும் பொருள் என்ன பயனைத் தரப்போகிறது என்று கூறியது.

பாடற் பொருள்:

மலையை விட உயர்ந்த தோளின் கண்ணும், தீயை உமிழ் கின்ற வேலின் கண்ணும், தணியாத காதலால் சிவந்த திரு மகளையும், வீர மகளையும், கைக்கொண்டதனால் வந்த அறிவே அன்றி, (1 - 3) அன்பும், சூளுரையும், நடுநிலைமையும், கல்வி

Koviloor Digital Library

கேள்விகளில் தடைப்படாத அறிவையும் உடையவன் நீ (தலைவன்) ஆதலால், (17 - 18)

உடம்பின் இடைப் பகுதியில் பாதியைக் காட்டும் குறைந்த ஆடையை உடுத்தியும், விளைந்த வயலில் முதிர்ந்து கிடக்கும் நெல்லாகிய உணவையும் உண்டு வாழுகின்ற காதலர்க்கு அதுவே நிறைவான இன்பத்தை உண்டாகும் என்பதை அறிந்து வைத்தும், (21 -23)

முன்னர் தேடிய பொருள்களே வாழ்வதற்குப் போதும் என்ற அமைதியின்றி, இளமையும் இன்பமும் வளமும் அழகும் பிற்பட, (42 - 43)

காலையில் எழுந்து ஒளியை உலகிற்குக் காட்டி, மாலையில் மறைகின்ற சூரியனைப் போல, உலகின் கண் தோன்றி, நிலை யில்லாது அழியக் கூடிய பொருளை ஈட்டுவதற்கு, (19 - 20)

திங்களையும் சூரியனையும் கண்களாகப் பெற்றும், யாவராலும் அளக்கப்படாத நிலப்பரப்பைத் திருவடியாகவும், ஒப்பற்ற நெடிய வானம் அழகிய உடம்பாகவும், திசைகளின் பரப்பு பெரிய தோளாகவும், வேதங்களின் ஓசைகள் அனைத்தும் மொழியாகவும், பகல் இரவு ஆகிய இரு பொழுதும் விடுகின்ற மூச்சு உள்ளே நிறைந்து போக்கு வரவு செய்யும் காற்றாகவும் அமைத்துக் கொண்டு விளங்கும்,(இறைவன்) (24 - 31)

பகைவரைக் கொல்லும் படையினை உடைய பாண்டியன் தன் சிறைக் கோட்டத்தின் கண் அடைத்த மேகக் கூட்டம் மழையைச் சொரிந்தன போல, ஏழு முழம் உயர்ந்த யானைக் கூட்டமானது தன் கழுத்தில் இட்ட கயிறும் தன்னைக் கட்டிய கயிறும் அற்றுப் போகும்படி உடலை நிமர்த்தி, தான் கட்டப் பெற்ற கொட்டிலாகிய இடமும், தறி இடமும் சேறு போலக் குழம்பி நின்று செல்லுவோரைத் துன்புறுத்தும்படி, மூன்று மதமாகிய நீரினைச் சொரிந்து மயக்கம் மிகுந்து மிகக் கோபத் துடன் முழங்குகின்ற இடமான நான்மாடக் கூடலாகிய பெரிய மதுரையில் வீற்றிருந்து அருளிய சோமசுந்தரக் கடவுளாகிய இறைவனை, (32 - 39)

Koviloor Digital Library

போற்றி வாழ்த்தாமையால் உண்டாகிய குற்றத்தினை உடையாரைப் போலவும், மெய் நூல்களைக் கற்காத கயவர் நெஞ்சம் போலவும் விளங்குகின்ற சூள் (பிரியேன் என்ற வஞ்சினம்) பொய்த்த உன் நெஞ்சுடன் பாலை நிலத்தில் செல்லுகின்றனை. *(40 - 41)*

களாமலர் சொரிந்து நிற்கவும், முல்லைக்கொடி அசையவும், காயாமலர் பூத்த இடம் எல்லாம் கருப்பாகவும், வண்டுகளானவை விருப்பம் கொண்டு, எங்கும் பரந்து பாடவும், தோன்றிப் பூவானது காலம் கருதிக் கைவிரித்தாற் போல் மலர,

கொன்றைமலர்கள் காதலனைப்பிரிந்த மகளிர் வெளிப்படுத்தும் பசலை நிறம் போன்ற ஒளியை மலர்ந்து எடுத்துக் காட்ட, *(4 - 9)*

வெண்காந்தள் மலர்கள் பிரிவுத்துன்ப்ம் கொண்ட மகளிர் கையில் அணிந்த வளையல்கள் கையிடத்தே இராது கழன்று விழும் என்று அறிவுறுத்துவது போலத் தம் மலர்களைக் கீழே சிந்தி நிற்கவும், *(10 - 11)*

கருவிளை மலர்கள் தலைவியின் அருகுநின்று அவள் கண்கள் கண்ணீர் சிந்துவதற்குக் காரணமாயின துன்பத்தை அறிந்து, தன்னிடத்தில் உள்ள நீரைச் (தேனாகிய நீரை) சிந்தவும், தலைவியின் உயிரை வெப்பத்தோடு வாடைக் காற்று வருடவும், இவ்வாறு காட்சிகள் நிகழுகின்ற காரப்பருவத்தைக் கண்டு (வருந்துகின்ற) *(12 - 16)*

அழகான உருவைக் கொண்ட என் தலைவிக்கு ஊழ்வினை தரும் முறைமையே(வருந்துவதற்குக் காரணம்)என்று கூறுவதே அன்றி, வேறு சொல்லித் தேற்றுவதற்குப் புனைந்து சொல்ல யான் ஒன்றையும் அறியேனே என்று தோழி தலைவனிடம் கூறினாள். *(44 - 46)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 17 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலில் தலைவியைப் பிரிந்து பொருள்தேட விருப்பம் கொண்ட தலைவனைப் பார்த்து,

Koviloor Digital Library

தலைவனின் பெருமைகளை எல்லாம் கூறி , இப்பொழுது இருக்கும் பொருள், இளமை, யாக்கையின் அழகு இவற்றை விட்டு விட்டு, இறைவனின் அருளைப் பெறாதவர் நெஞ்சத்தைப் போலவும், மெய் நூல்களைக் கற்காதவர் நெஞ்சு போலவும் விளங்குகின்ற சூள் பொய்த்த உன் நெஞ்சோடு பாலை நிலத்தில் செல்லக் கருதினாய் என்றும், கார்காலம் வரும்பொழுது தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி ஆற்றுவதற்கு அவளுடைய ஊழ் வினையைத் தவிர வேறு சொற்களால் தலைவியை ஆற்றுப் படுத்த முடியாது உள்ளேன் என்று தோழி கூறுவதாகப் பொருள் அமைந் துள்ளது. சிவபெருமானின் பெருமையாக ஞாயிறு, திங்கள் கண்களாவும், நிலம் திருவடியாகவும், வானம் உடலாகவும், திசை தோளாகவும், மறைமொழி வார்த்தையாகவும், உலகில் நிகழும் காற்று தன் மூச்சாகவும் கொண்டு மதுரை நகரத்தில் எழுந் தருளியுள்ள இறைவன் என்று கூறப் பெற்றுள்ளது.

(சொ- ம்)

ஜெயம் கொள் மங்கை - வெற்றித் திருமகள், களவு அலர் - களாச்செடி மலர், தளவு - முல்லைக்கொடி, வேயுளம் பட்டு - மலர்ந்து, பூவை - காயாம்பூ , வெள்அலர் - வெண்காந்தள், கரு விளை மலர் - கருங்காந்தள், மருங்கு - இடை, கந்து - கட்டுத்தறி, புரசை - கழுத்துக்கயிறு, வினைதரும் அடைவு - ஊழ்வினைக் காலம்.

22. தன்னுள் கையாறு எய்திடு கிளவி

நீர் நிலை நின்று, கால் கறுத்து எழுந்து,
திக்கு நிலை படர்ந்த முகில்- பாசடையும்,
இடை இடை உகளும் மீன் ஆம் மீனும்,
செம் முகில் பழ நுரை, வெண் முகில் புது நுரை,
எங்கும் சிதறிப் பொங்கி எழு வனப்பும்,
பல தலை வைத்து முடியாது பாயும்,
எங்கும், முகம் வைத்த கங்கைக் காலும்,
கொண்டு குளிர் பரந்த மங்குல் -வாவிக்குள்-
முயல் எனும் வண்டு உண அமுத நறவு ஒழுக்கி,
தேவர்-மங்கையர் மலர்முகம் பழித்து,
குறையாப் பாண்டில் வெண்மையின் மலர்ந்த
மதித் தாமரையே! மயங்கிய ஒருவேன்,

Koviloor Digital Library

நின்பால் கேட்கும் அளி மொழி ஒன்று உள,
மீன் பாய்ந்து மறிக்கத் திரையிடை மயங்கி,
சூல் வயிறு உளைந்து, வளை கிடந்து முரலும்
புன்னை அம் பொதும்பரில் -தம்முடை நெஞ்சமும்,
மீன் உணவு உள்ளி இருந்த வெண் குருகு எனச்
சோறு நறை கான்ற கைதைய மலரும்,
பல தலை அரக்கர் பேர் அணிபோல,
மருங்கு கூண்டு எழுந்து, கருங் காய் நெருங்கி,
விளை கள் சுமந்த தலை விரி பெண்ணையும்,
இன்னும் காணாக் காட்சி கொண்டு இருந்த
அன்னத் திரளும், பெருங் கரியாக,
சொல்லா இன்பமும் உயிருறத் தந்து,
நாள் இழைத்திருக்கும் செயிர் கொள் அற்றத்து-
மெய்யுறத் தணந்த பொய்யினர், இன்று,
(நெடு மலை பெற்ற ஒரு மகள் காண,
நான்முக -விதியே தாளம் தாக்க,
அந்த நான்முகனை உந்தி பூத்தோன்
விசித்து மிறை பாசத்து இடக்கை விசிப்ப்,
மூன்று புரத்து ஒன்றில் அரசுடை வாணன்
மேருக் கிளைத்த தோள் ஆயிரத்தொடும்,
எழு கடல் கிளர்ந்த திரள் கலி அடங்க,
முகம் வேறு இசைக்கும் குடமுழவு இரட்ட,
புட் கால் தும்புரு, மணக் கந்திருவர்,
நான்மறைப் பயன் ஆம் ஏழ் இசை அமைத்து,
சருக்கரைக் குன்றில் தேன்மழை நான்றென,
ஏழு முனிவர்கள் தாழும் மாதவர்,
அன்பினர் உள்ளமொடு என்பு கரைந்து உருக,
விரல் நான்கு அமைத்த அணி குரல் வீங்காது,
நான் மறை துள்ளும் வாய் பிளவாது,
காட்டி உள் உணர்த்தும் நோக்கம் ஆடாது,
பிதிர் கனல் மணி சூழ் முடி நடுக்காது,
வயிறு குழி வாங்கி, அழு முகம் காட்டாது,
நாசி, காகுளி, வெடிகுரல், வெள்ளை
பேசாக் கீழ்-இசை, ஒருபுறம் ஒட்டல்,
நெட்டுயிர்ப்பு எறிதல், எறிந்து நின்று இரட்டல்,
ஓசை இழைத்தல், கழி போக்கு என்னப்
பேசுறு குற்றம் ஆசொடும் மாற்றி,
வண்டின் தாரியும், கஞ்ச நாதமும்,

Koviloor Digital Library

சிரல் வான்நிலையும், கழை இலை வீழ்வதும்,
அருவி ஓசையும், முழவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும், வெருகின் புணர்ச்சியும்,
இன்னும் என்று இசைப்பப் பன்னிய விதியொடு,
மந்தரம், மத்திமம், தாரம், இவை மூன்றில்,
துள்ளல், தூங்கல், தெள்ளிதின் மெலிதல்,
கூடிய கானம் அன்பொடு பரவ,
பூதம் துள்ள, பேய் கைமறிப்ப
எங்கு உள உயிரும் இன்பம் நிறைந்து ஆட,
நாடக -விதியொடு ஆடிய பெருமான்,
மதுரை மாநகர்ப் பூழியன் ஆகி,
கதிர் முடி கவித்த இறைவன் மா மணிக்
கால் தலைக் கொள்ளாக் கையினர் போல)
நீங்கினர் , போக்கும், ஈங்குழி வருவதும்,
கண்டது கூறுதி ஆயின்,
எண் தகப் போற்றி, நின் கால் வணங்குதுமே.

துறை விளக்கம் :

தலைவனைக் காணாது வருந்துகின்ற தலைவி, தலைவன் வரப் பார்த்திருக்கின்றீர்களா என்று கேளாத பொருள்களை நோக்கித் தன் வருத்தத்தைக் கூறியது.

பாடற்பொருள்:

கடலில் உள்ள நீரைப் பருகித் தான் செல்லும் இடமெல்லாம் கருத்து வானத்தில் எழுந்து, திசை முழுவதும் பரவிச் சென்ற மேகங்களாகிய பசுமையான இலைகளையும்,

வானத்தின் இடையிடையே இயங்குகின்ற நட்சத்திரங் களாகிய மீன்களையும், சிவந்த மேகமாகிய பழைய நுரை களையும், வெள்ளை மேகமாகிய புதிய நுரைகளையும், தான் பாயும் இடமெல்லாம் சிதறி, அதனால் எழுகின்ற அழகினையும் ஓரிடத்தில் அமையாது தான் செல்லுகின்ற எல்லா இடங்களிலும் பரவும்படி பாய்கின்ற முகங்களைக் கொண்ட கங்கையாகிய கால்களையும், (வாய்க்கால்)

குளிர்ச்சி மிகுந்த வானமாகிய குளத்துக்குள் முயலாகிய வண்டு உண்ணும்படி அமுதாமாகிய தேனைச் சிந்தி, தெய்வ

Koviloor Digital Library

மகளிரின் மகிழ்ச்சியான முகங்களைப் பழித்து வட்டத்தோடு, வெண்மை நிறத்தோடு விளங்கும் திங்களாகிய வெள்ளைத் தாமரையே, *(1 - 11)*

வருத்தம் கொண்ட ஒருத்தியாகிய நான் உங்களிடத்தில் கேட்கும் வார்த்தை ஒன்று உள்ளது. அது எது என்றால்,

அலைகளில் மீன்கள் பாய்ந்து தடுக்கவும், சங்குகள் மயக்க முற்றுத் தங்களின் சூலுடைய வயிறு நொந்து முழங்குகின்ற புன்னை மரச் சோலையில், *(12 - 16)*

எம் தலைவனுடைய மனமும், தன் உணவாகிய மீனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வெள்ளைக் கொக்கு போன்ற வெள்ளிய சோற்றைக் கொண்ட தேனைச் சொரிகின்ற தாழை மலரும், *(17 - 18)*

பலவாகிய தலையினை உடைய அரக்கர் படை அணி வகுத்தாற் போன்று வரிசையாகத் திரண்டும், கரிய காய்களில் கள்ளைச் சுமந்து தலையின்கண் கொண்ட மடல்ஓலைகளை விரித்த பனைமரங்களும், *(19 - 21)*

யாம் இப்பொழுது காணும்படி காட்சி தந்து கொண்டிருக் கின்ற அன்னப் பறவைக் கூட்டங்களும் சிறந்த சான்றுகளாக, *(22- 23)*

என் உயிரானது தளிர்க்கும்படி, இவ்வாறு இருந்தது என்று பிறருக்குச் சொல்லிக் காட்ட முடியாத பேரின்பத்தை எனக்கு வழங்கி, இரவுக்குறியில் உண்மையாக வந்தது போல வந்து, பொய்ச் சூளினைச் செய்த தலைவன் பிரிந்த இற்றை நாளில், *(23 - 26)*

இமயமலை பெற்ற ஒப்பற்ற மகளாகிய பார்வதி காண, நான்கு முகத்தினை உடைய பிரமன் விதிப்படித் தாளம் அடிக்கவும், அப்பிரமனைத் திருஉந்தியில் படைத்தவனாகிய திருமால், கயிற்றினால் கட்டப்பெற்ற இடக்கை என்னும் கருவி யாகிய தோற்கருவியை முழக்கவும், முப்புரங்களில் ஒன்றில் அரசாட்சி செய்யும் வாணாசுரன் ஏழு கடல்களில் தோன்றும் ஒலிகளும் அடங்கும் வண்ணம் ஐந்து முகங்களைக் கொண்ட, வெவ்வேறு ஓசைகளை எழுப்புகின்ற குடமுழா என்னும் தோற்

Koviloor Digital Library

கருவியினை, மேருமலை ஆயிரம் கிளைகளை விட்டாற் போன்று காட்சியளிக்கின்ற தன்னுடைய ஆயிரம் கரங்களால் முழக்கவும், *(27 - 34)*

பறவைக்கால் போன்ற காலினை உடைய தும்புரு முனிவரும், ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து நிற்கும் கந் தருவர்களும், நான்கு வேதத்தின் பயனாகிய பண்களை முறைப் படி அமைத்துக் கொண்டு, சர்க்கரை மலையில் தேன்மழை பெய்தாற் போல இசைக்கும், அத்தினி முதலிய ஏழு முனிவர் களும் ஆகிய பெருமையினைக் கொண்டவர்களாகிய தவத்தினை உடையர்கள் எல்லாம் அன்புடையவராய் உள்ளமும் எலும்பும் கரைந்து உருகி நிற்கவும், *(35 - 39)*

நாசிப்பாட்டும் (மூக்கொலி சேர்ந்து) பேய் கத்தினாற் போல பாடப்படுவதாகிய குளிப்பாட்டும், வெள்ளோசையும், கீழி சையும் ஒருபுறம் ஒட்டவும், பெருமூச்செறிந்தாற் போல எறிந்து நின்று இரட்டலும், ஓசை பிழைத்தலும், கழிப்போக்கு என்று சொல்லப்பட்ட இசைக் குற்றங்களையும், சோம்பலையும் ஒருசேர விலக்கி, *(45 - 49)*

நான்கு விரல் அளவுள்ள மிடறு வீங்காமலும், நான்கு மறை களும் துள்ளுவதற்கு இடமான வாய் பிளவாது, உள்ளக் கருத் தினை வெளிக்காட்டும் கண்இமைகள் ஆடாமலும், நெருப்புப் போன்ற மணி சூழப்பட்ட முடியணி உடைய தலை அசை யாமலும், வயிறு குழியும்படி எக்கி அழுதாற் போல் முகம் காட்டாமலும் *(40 -44)*

வண்டுகளின் முழக்கமும், கஞ்சக் கருவியின் ஒலியும், வலம்புரிச் சங்கின் முழக்கமும், மீனை உண்ணுகின்ற வானம் பாடிப் பறவையின் ஒலியும், மூங்கிலின் இலைமேல் எழுந்த ஓசையும், அருவியின் ஓசையும், குடமுழவின் முழக்கமும், வலம்புரிச் சங்கின் ஓசையும்

பூனையின் புணர்ச்சியில் எழும் ஓசையும், என்று கூறுகின்ற இசையோடு மேலும் பாடுவதற்கு வகுத்துக் கூறிய ஓசை விதிகளோடு *(50 - 54)*

Koviloor Digital Library

படுத்தல், சமம், எடுத்தல் ஆகிய இவை மூன்றினில் அடக்கி, துள்ளப் படுதலும், தூங்கப் படுதலும், தெள்ளிதாக ஒலிக்கப் படுதலும் பொருந்திய இசைப்பாட்டை, அன்புடனே பாடி வாழ்த்திட (முனிவர்கள்), பூதக் கூட்டங்கள் மகிழ்ச்சியால் துள்ள, பேய்கள் கைவிதிர்த்துக் கொண்டாட, எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்க் கூட்டங்கள் மகிழ்ச்சியோடு ஆட, நாடகத்துக்குள்ள விதியோடு திருநடம் செய்த சிவபெருமான், *(55 - 60)*

மதுரை மாநகரில் பாண்டியனாகி, சடை முதலியவற்றை மறைத்துக் கொண்டு, ஒளியை உடைய அரசமுடி புனைந்து அரசாட்சி செய்யும் இறைவனின் மாணிக்கம் போன்ற திருவடியைத் தலைமேற் கொண்டு தொழாத சிறியவர்கள் போல, தன்னுடைய ஒழுக்கத்திற்குச் சாட்சி இல்லை என்ற கருதி இப்பொழுது தலைவன் என்னைப் பிரிந்தான்.

தலைவனின் அத்தகைய பிரிவும், அவன் எப்பொழுது வருவான் என்பதும் விசாரித்து அதனைச் சொல்வீர்களாயின் நின்பாதத்தை (சந்திரனின் பாதத்தை) உம் கருத்துக்கு ஏற்றபடி வணங்குவோம். *(61 - 66)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 177ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இந்நெடும் பாட்டில் முதற் பகுதியில் சந்திரனைத் தாமரை போல் உருவகித்து, அடுத்த பகுதியில் அத் திங்களிடத்தில் தனக்குக் களவொழுக்கத்தில் இன்பம் தந்து, இரவுக் குறியில் பிரிந்து சென்ற தலைவனைப் பற்றிக் கூறுகின்ற பகுதி அமைந்துள்ளது. அவ்வாறு பிரிந்து சென்றவனுடைய ஒழுக்கம், எவ்வாறு உள்ளது என்றால், பார்வதி தேவி மகிழ இசைகள் முழங்க, மதுரையில் ஆடிய சிவபெருமானின் திருத் தாள்களைப் போற்றாதவருடைய ஒழுக்கம் போல அமைந்துள்ளது என்று கூறி, அப்பிரிவொழுக்கத்தையும், தலைவன் திரும்பி வருகின்ற செய்தியையும் திங்கள் விசாரித்துச் சொன்னால் அதன் திருவடிகளைத் தலைவி வணங்குவதாகிய செய்தி இறுதியில் அமைந்து பாடல் சுவை தருகிறது. சிவபெருமானின் பெருமை களாக நாடக விதிகளுக்கு உட்பட்டுச் சிவபெருமான் ஆடிய நாடகக் கூத்து இப்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அத்திருக் கூத்து

Koviloor Digital Library

நடைபெறும் போது பின்னணியில் நிகழ்ந்தன எல்லாம் வருண னையாக இப்பாடலில் கூறப்பெற்றுள்ளன.

(சொ- ம்)

பாசடை - இலை, பாண்டில் - வட்டம், மதித் தாமரையே - திங்களாகிய தாமரை மலர், பொதும்பர் - சோலை, கைதை - தாழை, பெண்ணை - பனைமரம், கரியாக - சாட்சியாக, புள் - பறவை, தாரி - இசை, சிரல் - வானம்பாடிப் பறவை, பூழியன் - பாண்டியன்.

23. வேறுபடுத்திக் கூறல்

கண்ட காட்சி, சேணின் , குறியோ?
என்னுழி நிலையா உள்ளத்தின் மதியோ?
சூர்ப்பகை-உலகில் தோன்றினர்க்கு அழகு
விதிக்கும் அடங்கா என்பன விதியோ?
என்னுடைக் கண்ணும் உயிரும் ஆகி,
உள் நிகழ் இன்பம் உள்ளாள் ஒருத்தி-
மலைக் குஞ்சரத்தின் கடக் குழி ஆகி,
நெடு மலை விழித்த கண்ணே ஆகி,
அம் மலைத் திருநுதற்கு அழியாது அமைத்த
வெள்ளை கொள் சிந்துர நல் அணி ஆகி,
தூர நடந்த தாள் எய்ப்பு ஆறி
அமுதொடு கிடக்கும் நிறைமதிப் பக்கம்
ஒருபால் கிடந்த துணை மதி ஆகி,
அருவி வீசப் பறவை குடிபோகி
விண்டு நறவு ஒழுக்கும் பாண்டில் இறால் ஆய்,
இளமை நீங்காது காவல் கொள் அமுதம்
வரையர மாதர் குழுவுடன் அருந்த
ஆக்கியிடப் பதித்த வள்ளமும் ஆகி,
இடை வளி போகாது நெருங்கு முலைக் கொடிச்சியர்
சிறு முகம் காணும் ஆடி ஆகி,
சிறந்தன, ஒரு சுனை, இம் மலை - ஆட
அளவாக் காதல் கைம்மிக்கு அணைந்தனள்,
அவளே நீயாய், என் கண் குறித்த
தெருமரல் தந்த அறிவு நிலை கிடக்க,
சிறிது, நின் குறு வெயர் பெறும் அணங்கு ஆறி,
ஒரு கணன் நிலைக்க மருவுதி ஆயின்,

Koviloor Digital Library

இந் நிலை பெயர உன்னும் அக் கணத்தில்,
தூண்டா விளக்கின் , ஈண்டு, அவள் உதவும்,
அவ்வுழி, உறவு மெய் பெறக் கலந்து, இன்று,
ஒரு கடல் இரண்டு திருப் பயந்தாங்கு
வளைத்த நெடுங் கார்ப் புனத்து, இருவீரும்-
மணி நிற ஊசல் அணி பெற உகைத்தும்,
கருங் கால் கவணிடைச் செம்மணி வைத்து,
பெருந்தேன் இறாலொடு குறி விழ எறிந்தும்,
வெண் துகில் நுடங்கி, பொன் கொழித்து, இழியும்
அருவி ஏற்றும், முழை மலை கூஉயும்,
பெருஞ் சுனை விழித்த நீலம் கொய்தும்,
கொடுமரம் பற்றி, நெட்டிதண் பொலிந்து,
தினைக் குரல் அறையும் கிளிக் கணம் கடிதிர்,
(வெள்ளி, இரும்பு, பொன், எனப் பெற்ற
மூன்று புரம் வேவ, திருநகை விளையாட்டு,
ஒரு நாள் , கண்ட பெருமான், இறைவன்,
மாதுடன் ஒன்றி, என் மனம் புகுந்து,
பேணா உள்ளம் காணாது நடந்து,
கொலை களவு என்னும் பழுமரம் பிடுங்கி,
பவச் சுவர் இடித்துப் புதுக்கக் கட்டி,
அன்புகொடு மேய்ந்த நெஞ்ச மண்டபத்து,
பாங்குடன் காணத் தோன்றி, உள் நின்று,
பொன் மலர்ச் சோலை விம்மிய பெரு மலர்
இமையோர் புரத்தை நிறை மணம் காட்டும்
கூடல்அம் பதியகம் பீடுபெற இருந்தோன்
இரு தாள் பெற்றவர் பெருந் திருப் போல)
மருவிய பண்ணை இன்பமொடு விளைநலம்
சொல்லுடன் அமராது ஈங்கு-
வில்லுடன் பகைத்த செந் திரு நுதலே! .

துறை விளக்கம்:

தலைவி பிறை தொழாது தலை சாய்த்து நாணி நிலத்தைக் கீறி நிற்பக் கண்டு, பின்னும் இவள் வழியே ஒழுகி, இவள் ஒழுக்கத்தை அறிவோம் என்று உட்கொண்டு நீ போய்த் துறையாடி வா என்று தோழி தலைவியிடம் கூற, தலைவியும் அதற்கு இசைந்து போய் நீராடி வரும்பொழுது தலைவனோடு தலைப் பெய்து வர (கூடிவர) அவள் மேனியின் குறியறிந்து (வேறுபாடு

Koviloor Digital Library

அறிந்து) அவளை மலை அணங்காகப் புனைந்து வேறுபடுத்திக் கூறுதல்.

பாடற் பொருள்:

வில்லுடன் மாறுபட்ட சிவந்த அழகிய நுதலினை உடையாய். என்னுடைய கண்ணும் உயிருமாகி உள்ளத்தில் நிகழும் இன்பத்தையும் உடையவள் ஒருத்தி, *(5 - 6)*

அளவு படுத்தப்படாத காமம் கைகடந்து உள்ளத்தில் ஏற்பட்ட பொழுது, மலையாகிய யானைக்கு அருவியாகிய மதநீர் வீழ்ந்து அமைந்த குழியுமாகி, நெடிய மலையாகிய புருடன் விழித்துப் பார்த்த கண்ணுமாகி, அம்மலையாகிய மகளின் திருநுதலின் கண் ஒருகாலமும் அழியாது வைத்த வெண்மையாகிய நல்ல திலகமுமாகி, தூரத்தினின்றும் வந்ததால் இளைப்பாறி அமுதத்தோடு பொருந்திக் கிடக்கும் திங்களின் பக்கத்தே துணை யாகக் கிடந்த மற்றொரு திங்களுமாகி (பூரணசந்திரன்), தேன் வண்டுகள் நீங்க அருவி போலச் சிந்தும்படி தேனைச் சிந்துகின்ற வட்டமாகிய தேன்கூடுமாகி, வரையர மகளிர் (மலைமகளிர்) தம் இளமை போகாது கூட்டமாகக் காக்கும் அழுதத்தை உண்ணும் படி ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்ளும் பொருட்டுப் பதித்து வைத்த கிண்ணமும் ஆகி, இடையில் காற்றுப் போகாத முலையினை உடைய கொடிச்சியர், தம் முகத்தின் அழகினைப் பார்க்கும் கண்ணாடியுமாகி, *(7 - 20)*

மலையிடத்து அமைந்த (மேற்குறித்த பொருள்களாக விளங்குகின்ற)சுனையிடத்து எம் தலைவி நீராடச் சென்றனள். *(21- 22)*

உன்னைத் தூரத்தில் கண்ட காட்சியோ, என்னுள் நிலை யில்லாத அறிவின் பிழையோ, குறிஞ்சி நிலத்தில் பிறந்தவருக்கு விதித்த அளவு வேறுபாடாது என்று சொல்லப்பட்ட விதி யினாலோ, (யான் அறிகிலேன்) *(1 - 4)*

நீதான் அவளாக என் கண் குறித்ததினால் வந்த தடுமாற் றத்தைத் தந்த என் அறிவு ஒருபக்கம் கிடக்கட்டும். வியர்வை பெறுவதற்குக் காரணமாய் அமைந்த உனது வருத்தம் தீர்ந்து இங்கு ஒரு கணப் பொழுது இருப்பாயாயின் - நீ இங்ஙனம் பொருந்தி

Koviloor Digital Library

நிற்கும் நிலையிலிருந்து நீங்க நினைக்கும் நொடிப் பொழுதில் - தூண்டாமணி விளக்கு ஒன்று வருவது போல, நீராடச் சென்ற எம் தோழியாகிய தலைவி வந்துவிடுவாள். *(23 - 28)*

அங்ஙனம் அவள் வந்தவிடத்து இரண்டு பேரும் (நீயும் வரப்போகின்றவளும்) உண்மையாகவே உறவாடி இப்பொழுது இரண்டு திருமகளை ஒருபாற்கடல் பெற்றாற் போல (நீங்கள் அமைந்து) - நெடிய முகில் சூழ்ந்த தினைப் புனத்தில் மணிகள் அழுத்தி அழகு பொருந்தச் செய்யப்பட்ட ஊஞ்சல் ஆடுதலாலும், *(29 - 32)*

மிக்க தேனுடன் கூடிய தேன்கூடாகிய இலக்கு விழும்படி கருமையான மயிறால் அமைந்த காலினை உடைய கவண் கருவி யிடத்து மாணிக்கக் கல்லை வைத்து எறிவதாலும், *(33 - 34)*,

வெள்ளை ஆடையைப் போல அசைந்து பொன்னைக் கொழித்து வீழும் அருவியில் தோய்ந்து ஆடுதலாலும், குகை களைக் கொண்ட (முழை) மலைக்கு எதிரே நின்று எதிரொலி உண்டாகும்படி கூவுதலாலும், பெரிய சுனையிடத்து மலர்ந்த நீல மலரைக் கொய்வதாலும், கொடுமரத்தைப் பற்றி ஏறி நெடிய பரணில் இருப்பதாலும், கதிரை உடைய தினையிடத்தில் அமரும் கிளிக் கூட்டத்தை ஓட்டுதலாலும், *(35 - 39)*

ஒருநாள் தன்னுடைய அழகிய சிரிப்பால் (திருநகை) வெள்ளி, இரும்பு, பொன் என்று சொல்லும்படி பேர் பெற்ற முப்புரங்களும் (கோட்டை) வேகும்படி விளையாட்டுக் கொண்ட பெருமானாகிய இறைவனாகிய சிவபெருமான், தன்னை விரும் பாத உள்ளங்களானது காணமுடியாது மறைந்து சென்று, அடிமை யாகிய என் உள்ளத்தில் அங்கயற்கண்ணியோடு புகுந்து - கொலை, களவு முதலிய தீவினைகளாகிய பழுமரங்களைச் சாய்த்துப் பிறப்பாகிய சுவரை இடித்து, கொல்லாமை முதலிய மரங்களை நட்டு. பிறவாமையாகிய சுவரை வைத்துப் புதிதாகக் கட்டி, அருளாகிய பொன்தகடு கொண்டு வேய்ந்து, உள்ளமாகிய மண்டபத்தின்கண் வீற்றிருந்து, நான் புறத்தேயும் காணும்படி வெளிப்பட்டுத் தோன்றி, *(40 - 47)*,

Koviloor Digital Library

பலவாகிய பூஞ்சோலைகளில் மலர்ந்த மணம் கொண்ட மலர்கள் வானுலகத்திலும் சென்று நறுமணத்தைத் தோற்றுவித் தற்கு இடமான நான்மாடக் கூடலாகிய மதுரையில் தன்னைக் கண்டு வணங்கிய அன்பர்கள் வீட்டுலகத்தைப் பெறுதற் பொருட்டு, எழுந்தருளியிருக்கின்றவனுடைய இரண்டு திரு வடிகளையும் அடைந்த மெய்யடியார்கள் பெறுகின்ற பெருஞ் செல்வம், இன்பம் ஆகிய நன்மைகளைப் பெற்றாற்போல, *(48 - 51)*

நீங்கள் இருவரும் மேற்குறித்த விளையாட்டுக்களை விளை யாடும் பொழுது, மேலும் உண்டாகும் நன்மைகள் சொல்லி முடியாதவை ஆகும். *(52 - 54)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 68 ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. பாடலில் களவுக் காலத்தில் தலைவி தலைவனோடு கூடி இன்பம் துய்த்தாள். ஆதலால் பிறை தொழாது நின்றாள். அதனைக் கண்ட தோழி அவளுடைய புணர்ச்சியை மேலும் அறிந்து கொள்வதற்காகச் சுனையில் சென்று நீராடி வரும் படித் தலைவியை வேண்டினாள். தலைவியும் நீராடச் சென்றாள். நீராடச் சென்றவள் தலைவனோடு புணர்ந்து சிறிதுநேரம் கழித்துத் திரும்பி வருகிறாள். தலைவனோடு கூடிய புணர்ச்சியால் அவள் உடம்பில் சில வேறுபாடுகள் ஏற்பட்டு, ஒரு புதியவள் போல வந்தாள். அவளைத் தலைவியாக எண்ணாது புதியவளாகவே எண்ணி, தோழியானவள் நீ சிறிதுநேரம் இங்கேயே இரு, தலைவி வருவாள், நீங்கள் இருவரும் ஊஞ்சல் முதலான விளையாட்டுக் களை விளையாடி, சிவபெருமான் அடியவர்கள் போல இன் பத்தைப் பெறுவீர்களாக என்று கூறுவதாகப் பொருள் அமைந் துள்ளது. இப்பகுதியில் சிவபெருமான் பெருமையாக முப்புரம் எரித்ததும், வணங்கும் அடியவர்களின் உள்ளத்திற்குத் தீவினை போக்கி அருளினை வழங்குவதும் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்)

சேண் - தொலைவு, சூர்ப்பகை உலகு - குறிஞ்சி நிலம், குஞ்சரம் - யானை, நல்லணி - திலகம், பாண்டில் - வட்டம், வரையரமாதர் - மலைமகளிர், வள்ளம் - கிண்ணம், ஆடி -

Koviloor Digital Library

கண்ணாடி, தெருமரல் - மயக்கம், மருவுதி - பொருந்தி, திரு - திருமகள். முழை - குகை. திருநகை - சிரிப்பு, பவச்சுவர் - பிறவியாகிய சுவர்.

24. காமம் மிக்க கழிபடர் கிளவி

வானவர்க்கு இறைவன், நிலம் கிடை கொண்டு,
திரு உடல் நிறை விழி ஆயிரத் திரளும்
இமையாது விழித்த தோற்றம் போல,
கஞ்சக் கொள்ளை இடையற மலர்ந்து,
மணம் சூழ் கிடந்த நீள் கருங் கழியே!
கருங் கழி கொடுக்கும் வெள் இறவு அருந்தக்
கை பார்த்திருக்கும் மடப் பெடைக் குருகே!
பெடைக் குருகு அணங்கின் விடுத்த வெண் சினையொடு
காவல் அடைகிடக்கும் கைதைஅம் பொழிலே!
வெம்மையொடு கூடியும், தண்மையொடு பொருந்தியும்,
உலக இருள் துரக்கும் செஞ்சுடர், வெண்சுடர்,
காலம் கோடா முறைமுறை தோற்ற
மணி நிரை குயிற்றிய மண்டபம் ஆகி,
பொறை மாண்டு உயிர்க்கும் தாயாம் மண்மகள்
களையாது உடுக்கும் பைந் துகில் ஆகி,
வேனிற் கிழவன் பேர் அணி மகிழ,
முழக்காது தழங்கும் வார் முரசு ஆகி,
நெடியோன் துயிலா அறிவொடு துயில,
பாயற்கு அமைந்த பள்ளியறை ஆகி,
சலபதி ஆய்ந்து, சேமநிலை, வைத்த
முத்து மணி கிடக்கும் சேற்று இருள் அரங்காய்,
புலவு உடற் பரதவர் தம் குடி ஓம்ப,
நாளும் விளைக்கும் பெரு வயல் ஆகி,
கலம் எனும் நெடுந் தேர் தொலையாது ஓட,
அளப்பு அறப் பரந்த வீதி ஆகி,
கறவ வேந்து நெடும் படை செய்ய
முழக்கமொடு வளைத்த அமர்க்களம் ஆகி,
மகரத் தெய்வம் நாள் நிறைந்து உறைய,
மணி விளக்கு நிறைந்த ஆலயம் ஆகி,
நீர் நெய் வார்த்துச் சகரர் அமைத்த
தீ வளர் வட்டக் குண்டம் ஆகி,
எண் திகழ் பகுவாய் இன மணிப் பாந்தள்-

Koviloor Digital Library

தண்டில் நின்று எரியும் தகளி ஆகி,
பஞ்சவன் நிறைந்த அன்புடன் வேண்ட,
மாறிக் குணித்த நீறு அணி பெருமாற்கு
அமுத- போனகம் கதுமென உதவும்
அடும் தீ மாறா மடைப்பள்ளி ஆகி,
இன்னும் பலவாய் மன்னும் கடலே!
நுங்கள் இன்பம் பெருந் துணை என்றால்,
தண்ணம் துறைவற்கு இன்று இவள் ஒருத்தி,
நெருப்பு உறு' மெழுகின் உள்ளம் வாடியும்,
அருவி தூங்கக் கண்ணீர் கொண்டும்,
அரவின் வாய் அரியின் பலவும் நினைந்தும்,
நிலையாச் சூளின் நிலையா நெஞ்சம்
கொண்டனள் என் என, என் முகம் நாடி,
உற்ற வாய்மை சற்றும் தருகிலீர்
அன்று எனின், நும்மின் ஒன்று பட்டு, ஒருகால்,
'இவளோ துயரம் பெறுவது என்?' என்று
வினவாது இருக்கும் கேண்மை,
மனனால் நாடின், கொலையினும் கொடிதே!

துறைப் விளக்கம்:

தலைமகனைக் காணலுற்று வருந்துகின்ற தலைமகள் தன் வேட்கை மிகுதியால் கோளாதனவற்றைக் கேட்பதாகக் கொண்டு அவற்றை நோக்கி, நீங்கள் என்னை ஏதுற்று வருந்துகின்றாய் என்று வினவுகின்றீர் (வினவவில்லையே) இதுவோ உன் காதல் தன்மை என அவற்றை நோக்கித் (தலைவன் கேட்குமாறு) வருந்திக் கூறியது

பாடற் பொருள்:

இந்திரன் மண்ணில் கிடந்து தன்னுடைய அழகிய உடலில் நிறைந்த கூட்டமாகிய ஆயிரம் கண்ணும் குவியாது (மூடாது) விழித்த தோற்றம் போல, தாமரைக் கூட்டம் இடைவெளி இல்லாமல் மலர்ந்து மணம் சூழ்ந்து கிடக்கப் பெற்ற நீண்ட கருமையான உப்பங்கழியே! (1- 5)

நீண்ட கரிய உப்பங்கழி கொடுக்கும் விறால் மீன்களை நுகர்வதற்குச் சமயம் பார்த்திருக்கும் மடப்பத்தை உடைய வெண் மையான நாரையே! (6 - 7)

Koviloor Digital Library

பெட்டைக் குருகு மெய் வருத்தத்துடன் தான்ஈன்ற வெண் மையான முட்டைக்குக் காவலாக உணவு கிடைக்கப் பெறாது, அடைகிடத்தற்கு இடமாகிய தாழைச் சோலையே, *(8 - 9)*

வெப்பத்தோடு பொருந்தியும், குளிர்ச்சியுடன் பொருந்தியும், உலகத்தின்கண் உண்டாகிய இருளைக் கெடுக்கும் சூரியனும், சந்திரனும் - பகல், இரவு என்னும் காலத்தில் தவறாது முறை முறையாக உதிக்கும்படி, மணிகளை வரிசையாக வைத்தாற் போல மண்டபம் ஆகியும், *(10 - 13)*,

பொறுமைக்குரிய மாட்சிமைப்பட்டு அனைத்தையும் பெறும் தாயாகிய பூமி தேவி - ஒருபோதும் நீங்காது உடுக்கும் பசிய ஆடையாகி , மன்மதன் தன் படையாக வகுத்த பெரிய வரிசை மகிழும்படி ஒருவராலும் முழக்கப்படாது தானே முழங்கு கின்ற பெரிய முரசாகியும், திருமால் துயிலாது யோக நித்திரை பண்ண ஆதிசேடனாகிய பாயலுக்குப் பொருந்திய திருப்பள்ளி யறையாகியும், *(14 - 19)*

கடலரசனாகிய வருணன் ஆராய்ந்து பார்த்து இது தகுந்த காவல் அமைந்த இடம் என்று கருதிக் குவித்து வைத்த முத்துக் களும், பவளமும், பிறவுமாகிய செல்வம் குவிந்து கிடக்கும் இருள் சூழ்ந்த கருவூலம் ஆகியும்,

புலால் நாற்றத்தை உடைய உடம்பினை உடைய நெய்தல் நில மக்களாகிய உழவர், தம் குடியைப் பாதுகாக்கும் பொருட்டு நாள்தோறும் தமக்குரிய மீன் முதலாகிய உணவுப் பொருள் களாகிய விளையப் பண்ணுகின்ற பெரிய வயலாகியும், மரக் கலம் ஆகிய நெடுந்தேர் இடைவிடாமல் ஓடுதற்கு இயன்ற ஒருவராலும் அளக்கப் பட முடியாத தெருவாகியும், சுறாமீன் ஆகிய வேந்தன் தனது நெடிய படைகளோடு போர் செய்யும் பொருட்டு ஆரவாரத்தோடு நிலத்தை முற்றுகை செய்த போர்க் களமாகியும், மகரமாகிய மீன் தெய்வம் நெடுங்காலம் பொருந்தும் படி நீண்டகாலம் எழுந்தருளி இருப்பதற்குப் பல்வேறு மணி களாகிய விளக்குகள் எடுத்த கோயிலாகியும், சகரர் என்பவரால் நீராகிய நெய்யை வார்த்து வடவாக்கினி என்ற தீயை வளர்ப் பதற்கு உண்டாக்கிய வட்டமான வேள்விக் குழியாகியும், ஆயிரம் என்னும் பெரிய எண் கொண்டு விளங்குகின்ற பிளவுபட்ட

Koviloor Digital Library

வாய்களையும், நிறைந்த மணிகளையும் உடைய ஆதிசேடன் என்னும் பாம்பாகிய தண்டின்மேல் கதிரவனாகிய விளக்கு நின்று எரிதற்கு இடமாகிய அகலாகியும், *(20 - 33)*

தன்பால் நிறைந்த அன்புடனே பாண்டியன் வேண்டிக் கொண்டதால் கால் மாறி ஆடிய, திருநீறு அணிந்த சிவபெருமானுக்கு நஞ்சே ஆயினும், அந்த அமிழ்தமாகிய உணவினை விரைந்து அளித்தற்குக் காரணமான வடவைத்தீ மாறாது இருக்கின்ற மடப்பள்ளியாகியும், இவ்வாறு யான் சொல்லுகின்ற அளவிற்குப் பல்வேறு விதமாய்க் காட்சி அளிக்கின்ற கடலே, *(33 - 38)*

இப்பொழுது என் முகத்தைப் பார்த்து இவள் ஒருத்தி தண்ணந் துறைவனாகிய தலைவனுக்காக, நெருப்பில் பட்ட மெழுகு போல உள்ளம் உருகியும், அருவி ஒழுகினாற் போல ஒழுகும் கண்ணீர் கொண்டும், பாம்பின் வாயில் அகப்பட்ட தேரையைப் போலப் பற்பல நினைவுகளை நினைந்தும், அவளுடைய தலைவன் கூறிய சூள் நிலையாதது போல, நிலையில்லாத நெஞ்சம் உடையவள் ஆயினாள். இங்ஙனம் வருந்திப் பெறும் துன்பத்திற்குப் பயன்தான் யாது? என்று துன்பத்திற்கு ஆறுதலாய் அமைந்த மொழி சிறிதும் தருகின்றிலீர். *(40 - 46)*

அங்ஙனம் இரங்கி ஆறுதல் மொழி கூறவில்லை என்றாலும், நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒருமுறையேனும் அந்தோ ! நம் தோழியாகிய இவள் இங்ஙனம் துன்பப் படுதற்குக் காணரம் தான் யாது? என்று வினவுதலும் செய்யாது, இருக்கின்ற உம்முடைய நட்பின் பண்பினை நான் என் நெஞ்சத்தால் நினைக்கினும், நாவால் சொல்லினும் மிகக் கொடியது என்பதை அறியாது இருக்கின்றீர்கள். ஆதலால் உங்களுடைய நட்பு என்மாட்டு பெருந்துணையாம் (என்று இகழ்ந்து கூறினாள்) (47 - 50)

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 174 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாட்டில் கேளாத பொருள்களான உப்பங்கழியே, கொக்கே, தாழைப் பொழிவே, கடலே என்று தலைவி விளித்து, தன்னுடைய துன்பத்திற்குரிய காரணத்தைக்

Koviloor Digital Library

கேட்கவில்லையே என்று கூறி. அவைகளுக்கும் தனக்கும் உள்ள நட்பை இகழ்ச்சியாகக் கூறும் பொருளை உடையது இப்பாடல். இப்பாடலில் சிவபெருமான் சிறப்பாகப் பாண்டியனுக்காகக் கால்மாறி ஆடிய செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் கடலே என்று விளித்துக் கூறும் பொழுது மண்டபம், ஆடை, முரசு, பள்ளியறை, கருவறை, வயல், வீதி, போர்க்களம், கோயில், ஓம குண்டம், அகல், மடைப்பள்ளி ஆகியவையாக விளங்கும் கடல் என்று அழைக்கப் பெற்றிருப்பது சிறப்புடைத்தாம்.

(சொ.- ம்)

ஆயிரத்திரள் - ஆயிரம்கண்கள், கஞ்சம் - தாமரை, கருங்கழி - உப்பங்கழி, குறுகு - கொக்கு, துயில் - ஆடை, வேனில்கிழவன் - மன்மதன், நெடியோன் - திருமால், பஞ்சவன் - பாண்டியன், மாறிக்குனித்த - மாறி ஆடிய.

25. இடம் அணித்து என்றல்

பொருப்பு வளன் வேண்டி, மழைக்கண் திறப்ப,
குருகு பெயர்க் குன்றத்து உடல் பசு எறிந்த
நெடு வேற் கடவுள் மயில், கொடி, முன்றில்
பெருங்கிளை கூண்டு, வெட்சி மலர் பரப்பி,
இறால் நறவு அளாய செந் தினை வெள் இடி,
தேக்கு இலை விரித்து, நால் திசை வைத்து,
மனவு அணி முதியோள், வரை அணங்கு அயர்ந்து,
மூன்று காலமும் தோன்றக் கூற,
வேலன் சுழன்று குறு மறி அறுப்ப,
கருவி நுதிகொள் நெறிஇலை ஈந்தின்
முற்றிய பெரு நறவு எண்ணுடன் குடித்து,
நெட்டிலை அரம்பைக் குறுங் காய் மானும்
உளியம் தணித்த கணை கொள் வாய்த் திரிகல்
ஒப்பு உடைத்தாய வட்ட வாய்த் தொண்டகம்,
கோல் தலை பனிப்ப, வான்விடு பெருங் குரல்
வீயாது துவைக்கும் கடன் மலை நாடர்
வருந்தி ஏற்று எடுத்த செந்திரு மட மகள்!
ஒருவுக, உளத்துப் பெருகிய நடுக்கம்,
எம் ஊர்ச் சேணும், நும் ஊர்க் குன்றமும்,
பெருந் தவர் குழுவும், அருங் கதி இருப்பும்,

Koviloor Digital Library

பொதியமும், களிப்ப விரிதரு தென்றலும்,
கனைகடல் குடித்த முனிவனும், தமிழும்,
மேருவும், மூவர்க்கு ஓதிய புரமும்,
உலகம் ஈன்று அளித்த உமையும், மா அறனும்,
தேவர்க்கு அரசனும், காவல் தருவும்,
வழுவா விதியும், எழுதா மறையும்,
செங்கோல் வேந்தும்,தங்கிய குடியும்,
தவம் சூழ் இமயமும் , கமஞ் சூல் மழையும்,
எல்லையில் ஈங்கு இவை சொல்லிய அன்றி,
கண்ணன் கரமும் வெண்ணெயும் போலப்
பாசடை புதைத்த நெட்டாற்று ஏரியுள்,
பூத்து அலர் விரித்த சேப் படு தாமரை-
உள் வளை உறங்கும் வள்ள வாய்க் கூடல்
நிறைந்து உறை முக் கண் பெருந் திறல் அடிகள்,
அடியவர்க்கு எவ்வளவு? அது ஆம் -
கொடி புரை நுசுப்பின் பெரு முலையோளே!

துறை விளக்கம்:

தலைவன் தலைவியிடம் தன்னுடைய அருள் குணத்தை உரைத்தான். இருப்பினும் தலைவி தனது ஆற்றாமைய்யை நீக்கிக் கொள்ளவில்லை. எனவே அவளிடம் நும் ஊருக்கு எம் ஊர் அருகாமையில் உள்ளது, இத்தன்மைத்தது என்று தன் ஊரின் அணிமை கூறித் தலைவன் வற்புறுத்தியது.

பாடற்பொருள்:

கொடி போலும் இடையினையும், பெரிய முலையினையும் உடைய பெண்ணே, *(35)* மலையில் வளம் சிறக்க மழை பெய்யும் படி - கிரவுஞ்சம் என்னும் பறவையின் பெயரைக் கொண்ட மலையைப் பிளக்க எறிந்த நெடிய வேலினை உடைய முருகக் கடவுளுக்கு உரிய மயிலையும் கொடியையும் உடைய முற்றத்தில் - உறவினர்கள் திரண்டு நான்கு பக்கங்களிலும் தேக்கு இலையை விரித்து வெட்சிப் பூவோடு , சிவந்த தினை அரிசியையும் பரப்பி, தேனொடு கலந்த வெள்ளிய தினைமாவை வைத்திட,

சங்குமணி அணியும் முதுபெண்டிர் நெல்லில் தெய்வம் உண்டாகச் செய்து, மூன்று காலத்தில் நிகழ்வனவற்றை வெளிப் படையாகக் கூறிட, *(1 - 8)*

Koviloor Digital Library

வெறியாட்டு ஆடுகின்ற வேலவன் வெறியாட்டால் சுழன்று ஆட்டு மறியினை(குட்டியினை) அறுக்கவும், வேற்படையின் நுனி போன்ற இலையை உடைய ஈச்ச மரத்தில் விளைந்த கள்ளினைக் கருத்துடன் உண்ணவும்,

நெடிய இலையை உடைய வாழையினது சிறிய காயைப் போன்ற உளியால் செதுக்கப்பட்ட திரட்சி கொண்ட வாயினை உடைய திருகையைப் போன்ற ,வட்டமான வாயினை உடைய குறிஞ்சிப் பறையைக் கோலால் அடித்தலால், விண்ணகம் வரை செல்லும் ஓசை கெடாது முழங்கவும்,

இத்தகைய தெய்வ வழிபாட்டைச் செய்கின்ற மலைகளை உடைய நாட்டவர், *(9 - 16)*

தவம் செய்து பெற்றெடுக்கப்பட்ட திருமகளைப் போலும் பெண்ணே, நான் உன்னைப் பிரிவேன் என்ற அச்சத்தால் உள்ளத் தின்கண் ஏற்பட்ட துன்பத்தை விட்டொழிப்பாயாக.*(17 - 18)*

எம்முடைய ஊருக்கும், உம்முடைய குன்றத்திற்கும் எல்லை எவ்வளவு எனில் - மிக்க தவத்தினை உடைய கூட்டத் திற்கும், அவர் எய்தக் கூடிய வீட்டு இருப்பிற்கும் (வீட்டுலகம்) எவ்வளவு எல்லை உளவோ அவ்வளவு எல்லையாம். பொதிய மலைக்கும் எல்லோரும் மகிழும்படி பரவியிருக்கும் தென்றலுக் கும் எல்லை எவ்வளவோ அவ்வளவாம். கடலைக் குடித்த அகத் தியருக்கும் தமிழுக்கும் எல்லை எவ்வளவோ அவ்வளவு எல்லை யாகும். மேரு மலைக்கும் பிரமன் முதலாகிய மூன்று தெய்வங் களுக்கும் நூல்களால் கூறப் பெற்ற கோயிலுக்கும உள்ள எல்லை எவ்வளவோ அவ்வளவு எல்லையாம், மேலும் பதினான்கு உலகத் தையும் படைத்துக் காக்கும் உமையவளுக்கும் அறத்திற்கும் எவ் வளவு எல்லையோ அவ்வளவு எல்லையாம், தேவேந்திரனுக்கும் அவன் காவலை உடைய கற்பக மரத்திற்கும் எல்லை எவ்வளவோ அவ்வளவு எல்லையாம், பிரமனுக்கும் எழுதப்படாத வேதத் திற்கும் எல்லை எவ்வளவோ அவ்வளவு எல்லையாம், செங் கோல் முறைமை உடைய வேந்தனுக்கும் அவன் செங்கோலில் தங்கிய குடிகளுக்கும் எவ்வளவு எல்லையோ அவ்வளவு எல்லை யாம், தவத்தோர் வாழும் இமயமலைக்கும் நிறைந்த சூளினைக்

Koviloor Digital Library

கொண்ட மேகத்திற்கும் எவ்வளவு எல்லையோ அவ்வளவு எல்லையாம். *(19 - 28)*

கண்ணன் கையும் அவன் கையில் இருக்கும் வெண்ணெயும் போல - இலைகள் மறைத்த நெடிய ஒழுக்கினை உடைய குளத்தின் கண் மலர்ந்து, இதழ் விரிந்து, செம்மைநிறம் பொருந்திய கிண்ணம் போன்ற வாயினை உடைய தாமரை மலரில் சங்கு கிடந்து துயின்றது. இத்தகைய மதுரை மாநகரில் எழுந்தருளிய மூன்று கண்ணினையும், பெரிய திறளினையும் (வலிமையை) உடைய சிவபெருமானுக்கும் அவர்தம் அடிய வருக்கும் எவ்வளவு எல்லையோ அவ்வளவு எல்லையாம்.

இவ்வாறு சொல்லப்பட்ட எல்லை இல்லாமல் அதிகத் தூரம் இல்லை என்று தலைவன் தலைவியிடம் கூறினான். *(29 - 34)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **15** ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. முருகனுக்கு விழா எடுக்கும் மலை நாட்டவர் பெற்றெடுத்த தலைவியை ஆற்றுப் படுத்துவதற்காகத் தலைவன் தனது ஊருக்கும் தலைவியின் குன்றத்திற்கும் இடையில் உள்ள எல்லையாம் தூரத்தைக் குறிப்பதற்குத் தவத் தவருக்கும் வீட்டுப்பேற்றினுக்கும், பொதிய மலைக்கும் தென்ற லுக்கும், அகத்தியனுக்கும் தமிழுக்கும், மேருமலைக்கும் கடவுளர் கோயிலுக்கும், உமையவளுக்கும் அறத்திற்கும், இந் திரனுக்கும் கற்பகத் தருவிற்கும், பிரமனுக்கும் நான்மறைக்கும், செங்கோல் அரசனுக்கும் குடிமக்களுக்கும், இமையத்திற்கும் மழைக்கும், சிவபெருமானுக்கும் அவர்தம் அடியார்க்கும் எவ் வளவு தூரமோ அவ்வளவு தூரம். அதாவது கூறப்பட்டவை களுக்குள் நெருங்கிய தொடர்பு போல, நெருங்கிய தூரமே என்று தலைவன் தலைவியை ஆற்றுப்படுத்துவது இப்பாடலாகும். சிவ பெருமானின் சிறப்பாகக் கண்ணன் கையில் இருக்கின்ற வெண் ணெய் போலக் குளத்தில் உள்ள தாமரையில் சங்கு கிடக்கின்ற காட்சியை உடைய மதுரை நகரத் தலைவன் என்று கூறப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ - ம்)

பொருப்பு - குன்றம், குருகு பெயர் - கிரௌஞ்சம் என்னும் பறவையின் பெயர், முதியோள் - கழங்கு கொண்டு அறிவிக்கும் முதியவள், நெட்டிலை - வாழையிலை, தொண்டகம் - பறை, எழுதாமறை - வேதம், பாசடை - இலை, வளை - சங்கு, நுசுப்பு - இடை.

26. நின் குறை நீயே சென்று உரை என்றல்.

வேற்றுப் பிடி புணர்ந்த தீராப் புலவி
சுற்றமொடு தீர்க்க உய்த்த காதலின்,
கருங் கை வெண்கோட்டுச் சிறு கட் பெருங் களிறு
உளத்து நின்று அளிக்கும் திருத்தகும் அருநூல்
பள்ளிக் கணக்கர்பால் பட்டாங்கு,
குறிஞ்சிப் பெருந் தேன் இறாலொடு சிதைத்து,
மென் நடைப் பிடிக்குக் கைபிடித்து உதவி,
அடிக்கடி வணங்கும் சாரல் நாட!
(அந்தணர் இருக்கை அகல்வோர் சூழ்ந்தென,
நல் நயம் கிடந்த பொன்னகர் மூடிப்
புலை செய்து, உடன்று, நிலைநிலை தேய்க்கும்
தள்ளா மொய்ம்பின், உள் உடைந்து, ஒருகால்,
வேதியன் முதலா அமரரும் அரசனும்
போது தூய் இரப்ப, புணரா மயக்கம்
நாரணன் நடித்த பெருவாய்த் தருக்கத்து
அறிவு நிலை போகி, அருச்சனை விடுத்த
வெள்ள முரண் அரக்கர் கள்ளமதில் மூன்றும்,
அடுக்கு நிலை சுமந்த வலித் தடப் பொன்மலை
கடு முரண் குடிக்கும் நெடு வில் கூட்டி,
ஆயிரம் தீ வாய் அரவு நாண் கொளீஇ,
மாதவன், அங்கி, வளி, குதை, எழு நுனி,
செஞ்சரம், பேர் உருள், அருக்கன், மதி- ஆக,
தேர் வரை வையம் ஆகத் திருத்தி,
சென்னி மலை ஈன்ற கன்னி விற் பிடிப்ப,
ஒரு கால் முன் வைத்து, இரு கால் வளைப்ப,
வளைத்த வில் வட்டம் கிடைத்தது கண்டு,
சிறு நகை கொண்ட ஒரு பெருந் தீயின்,
ஏழ் உயர்வானம் பூழிபடக் கருக்கி,

Koviloor Digital Library

அருச்சனை விடாது, அங்கு, ஒருப்படும் மூவரில்
இருவரைக் காவல் மருவுதல் ஈந்து,
மற்று ஒருவற்கு வைத்த நடம் அறிந்து
குடமுழவு இசைப்பப் பெறும் அருள் நல்கி,
ஒரு நாள் அருச்சனை புரிந்திடா அவர்க்கும்
அரும் பெறல் உளது ஆம் பெரும் பதம் காட்டி,
எரியிடை மாய்ந்த கனல்விழி அரக்கர்க்கு
உலவாப் பொன்னுலகு அடை தரவைத்த
சுந்தரக் கடவுள், கந்தரக் கறையோன்,
மாமி ஆடப் புணரி அழைத்த
காமர் கூடற்கு இறைவன் கழல் இணை,
களிப்புடை அடியர்க்கு வெளிப்பட்டு என்ன)
ஒரு நீ தானே மருவுதல் கிடைத்து,
கள்ளமும் வெளியும் உள்ள முறை அனைத்தும்
விரித்துக் கூறி , பொருத்தமும் காண்டி---
ஈயா மாந்தர் பொருள் தேய்ந்தென்ன
நுண் இடை சுமந்து ஆற்றாது
கண்ணிய சுணங்கின் பெரு முலையோட்கே!

துறை விளக்கம் :

தலைவன் தன்னுடைய பிரிவைத் தோழியிடம் கூறிய போது, தோழி தலைவனை நோக்கி நீ இரவுப் பொழுது வந்து இன்பம் தந்தாலும், பகற் பொழுதில் பிரிவாயே என்பதை நினைந்து யான் உயிர் வாழேன்(அப்பகற் பொழுது பிரிவால்) என்று நினைத்திருப் பவளுக்கு(தலைவிக்கு) நின் பிரிவை நீயே சொல்லிப் போவாயாக என்று கூறியது இத்துறை.

பாடற்பொருள்:

கருமையான கையினையும் வெண்மையான கொம்பினையும். சிறிய கண்ணினையும் உடைய களிற்று யானையானது, (ஆண்யானை) வேறொரு பிடியை (பெண்யானையை)ப் புணர்ந்த தாலே அதனுடைய காதலியாகிய பெண்யானை கொண்ட தீராத ஊடலைத் தன் சுற்றமாகிய யானைகள் காணும்படி தீர்த்தற் பொருட்டு, தன்னிடத்தில் (ஆண்யானை) உண்டாகிய காதல் காரணமாக,

Koviloor Digital Library

பள்ளியில் சிறுவர்களுக்கு ஓதுவிக்கும் கணக்காயர்பால் உள்ளத்தில் இடைவிடாது நின்று கொடுத்தற்குக் காரணமாகிய சிறப்புத் தரும் அரிய நூல் சிதைந்து பட்டாற் போல, *(1 - 5)*,

குறிஞ்சி நிலத்தில் உண்டாகிய தேன் கூட்டினைச் சிதைத்து, மெல்லிய நடையுடைய தன் பெண் யானைக்கு மிகுந்த தேனை அதன் கைப்பிடித்துக் கொடுத்து , அடிக்கடி வணங்குதற்கு இடமாகிய மலை நாடனே, *(6 - 8)*

சூரியனையும் சந்திரனையும் இரண்டு சக்கரங்களாகவும், நிலப்பரப்பினைத் தேராகவும் கொண்டு, திருமாலை அம்பாகவும், தீக்கடவுளை அதில் அமைந்த நுனியாகவும், காற்றுக்கடவுளைக் குதையாகவும்(அம்பின் நடுப்பகுதி) கொண்டு, *(21-22)*

அடுக்காகிய உலகங்களை எல்லாம் தாங்குகின்ற ஆற்றலையும் பெருமையையும் உடைய மேருமலையினைப் பகைவருடைய உயிரைக் குடிக்கும் நெடிய வில்லாக கைக்கொண்டு, அவ்வில்லில் நஞ்சமைந்த ஆயிரம் ஆகிய வாயினைக் கொண்ட ஆதிசேடனாகிய பாம்பினை நாணாக ஏற்றி, *(18 -20)*

அவ்வில்லினை இமயமலை பெற்றெடுத்த பார்வதி பற்றியிருக்கவும், *(24)*

தன் ஒரு காலை முன்னே வைத்து அவ்வில்லினது இரண்டு நுனிகளையும் வளைத்து, வில்லை வட்ட வடிவமாகக் கொண்ட பொழுது தோன்றிய புன்முறுவலால் எழுந்த பெரிய தீயினால், *(25 - 27)*

அந்தணர் ஆசிரமத்தில் கீழ்மக்கள் சூழ்ந்து தீட்டு செய்தாற் போல, மிகவும் நலமாய் அமைந்து கிடந்த தெய்வலோகம் முழுவதும் தீட்டு செய்து, கோபித்து, அடிக்கடி கெடுதலைச் செய்து, ஓரிடத்தில் நில்லாது, மூன்று கோட்டைகளும் இறங்கும் இடத்தை அழிக்கின்ற, மூன்று கோட்டைகளை உடைய அசுரர்களின் வலிமைக்கு அஞ்சி, *(9 - 12) - (15 - 17)*

பிரமன் முதலான தேவர்களும், தேவேந்திரனும், ஒருமுறை உள்ளம் வருந்தி மலரால் அர்ச்சித்து வேண்டிக்கொள்ள, திருமாலானவன் அத்தேவர்கள் பொருட்டு அசுரர்களை மயக்குவதற்கு நடித்தபொழுது கூறிய சொற்களைப் போலத்,தோற்றுவாயினை

Koviloor Digital Library

உடைய உலகாயதர் மதத்தின் தருக்க நூல் காரணமாகத் தம் அறிவு பிறழ்ந்து இறை வழிபாட்டினை ஒழித்துப் பகைமை கொண்ட பெருங் கூட்டமாகிய அரக்கர் கூட்டத்தின் மூன்று கோட்டைகளையும், (13 - 17)

ஏழாக உயர்ந்த உலகத்தின் கண்ணே சாம்பலாகும்படி சுட்டெரித்து, (28)

(மூன்று கோட்டைகளும் அழிந்தாலும் அழியாத அக்கோட்டைக்குரிய தலைவர்களாகிய) அசுரர்களில் திருமாலின் விளையாட்டினால் மயங்காமல் சிவவழிபாட்டைச் செய்த , அக்கோட்டையில் இருந்த மூவரில் இருவரை வாயில் காக்கின்ற தொழிலைப் பெறுமாறு செய்து, மற்றொருவனாகிய வாணாசுரனுக்குத் தான் திருவுளம் கொண்டு, தான் ஆடுகின்ற கூத்தின்கண் அதனை அறிந்து அதற்கு ஏற்பக் குடமுழா என்னும் தோற்கருவியினை முழக்குகின்ற பேறு பெறும்படி திருவருள் வழங்கினார் சிவபெருமான். (இதன்பயனாக), ஒருநாள் அருச்சனை செய்தால், அவ்வாறு செய்கின்ற பகைவர்க்கும் பெறுதற்கரிய பெரும்பதம் உண்டாகும் என்பதை உலகத்தவர்க்குக் காட்டினார். மேலும் அக்கோட்டையின் கண் தீயில் பட்டு இறந்த தீப்பட்ட காலும், கண்களும் கொண்ட அசுரர்கள் சொர்க்க லோகம் எய்தும்படி நன்மை செய்த கடவுள், (29 - 37)

நீல மிடற்றவன் ஆவான். அவன் தன் மாமியாகிய மேனை என்பாள் நீராடுதற் பொருட்டுக் கடலை வரவழைத்தவன். அவன் நான்மாடக் கூடலுக்கு அரசனுமாவான். அவனுடைய திருவடிகள், நினைந்து நினைந்து நெஞ்சம் உருகும் அடியவர்களுக்கு வெளிப்பட்டாற் போலப் புகழை உடைய நீ (38 - 40)

ஏழைகளுக்கு வழங்காத புல்லர்கள் சேர்த்து வைத்திருக்கின்ற பொருள் கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து, இறுதியில் இல்லை என்று கூறும்படித் தேய்வது போலவும் (வெளிப்பட்டுத் தெரிந்தும் இல்லை என்னும்படியும் காட்சியளிப்பது பெண்களின் இடை) அமைந்த இடையினையும், அவ்இடையால் சுமக்க இயலாது பாரம் கொண்ட தேமலை உடைய பெரிய முலையினையும் உடைய,

Koviloor Digital Library

எம் பெருமாட்டி ஆகிய தலைவியிடம் நீயே அவள் முன்னிலையில் சென்று மெய்ப்பும் பொய்யுமாய் அமைந்த உன்னுடைய மொழிகள் அனைத்தையும் நன்கு விரிவாகச் சொல். அதனால் உன் கருத்தோடு அவள் கருத்துப் பொருந்துவதனை அறிந்து கொள். யான் பணிப்பெண் ஆதலின் அவள் மாட்டுச் சென்று நின் குறையினைக் கூறும் தகுதி உடையவள் அல்லள் யான் என்று தலைவனிடம் தோழி கூறினாள். ***(41 - 46)***

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **99** ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடல் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டிய பாடலாகும். முதற் பகுதியில் தலைவனுடைய மலைவளம் கூறப்பட்டுள்ளது. பின்பு முப்புரங்களைக் கொண்ட அரக்கர்களின் தீய நடவடிக்கைகளும், அவற்றைச் சிவபெருமான் அழிப்பதற்குத் தேரில் வில்லுடன் சென்று தன் புன்சிரிப்பினால் அக்கோட்டைகளை அழித்த செய்தியும், அழித்த பிறகு அம்மூன்று அரக்கர்களுக்கு அருள் செய்ததும், அதில் ஒருவருக்குத் தன் ஆட்டத்தைக் காணும் திருவருள் புரிந்ததும் ஆகிய சிவபெருமானின் அருட்செயல்கள் கூறப்பெற்றுள்ளன. பின் தலைவன் தலைவியிடம் தன் பிரிவை நேரில் கூறவேண்டும் என்று செய்தியும் அமைந்து பாடல் நிறைவு பெற்றுள்ளது. இப்பாடலில் சிவபெருமான் பெருமையாக முப்புரம் எரித்த நிகழ்ச்சி கூறப்பெற்றுள்ளது.

(சொ.- ம்)

பிடி - பெண்யானை, குலவி - ஊடல்(கோபம்), பள்ளிக் கணக்கர் - பள்ளி ஆசிரியர், இறால் - தேனடை, குலை - கெடுதல், உடன்று - கோபித்து, வேதியன் - பிரமன், அரசன் - தேவேந்திரன், தருக்கம் - உலகாயதர் கொள்கைகள், அருச்சனை - சிவவழிபாடு, ஆயிரம் தீவாய் அரவு - ஆதிசேடன் என்ற பாம்பு, குதை - அம்பின் பாகம், உருள் - சக்கரம், பூழிபட - வெந்து போகும்படி, பொன்உலகு - சொர்க்கம், மாமி - சிவபெருமான் மாமியான மோனை.

Koviloor Digital Library

27. இரவுக் குறி வேண்டல்

வள்ளியோர் ஈதல் வரையாது போல,
எண் திசை கரு இருந்து, இன மழை கான்றது,
வெண் நகைக் கருங் குழல் செந் தளிர்ச் சீறடி
மங்கையர் உளம் என, கங்குலும் பரந்தது,
தெய்வம் கருதாப் பொய்யினர்க்கு உரைத்த
நல் வழி மான, புல் வழி புரண்டது,
காலம் முடிய, கணக்கின் படியே,
மறலி விடுக்க வந்த தூதுவர்
உயிர்தொறும் வளைந்தென, உயிர் சுமந்து உழலும்
புகர்மலை இயங்காவகை அரி சூழந்தன,
(வெள் உடற் பேழ்வாய்த் தழல் விழி மடங்கல்-
உரிவை மூடி, கரித் தோல் விரித்து,
புள்ளி பரந்த வள் உகிர்த் தரக்கின்
அதள் பியற்கு இட்டு, குதி பாய் நவ்வியின்
சருமம் உடுத்து, கரும் பாம்பு கட்டி,
முன்பு உகுவிதிகள் என்பு குரல் பூண்டு,
கருமா எயிறு திரு மார்பு தூக்கி,
வையகத் துயரின் வழக்கு அறல் கருதி-
தொய்யில் ஆடும் கடனுடைக் கன்னியர்
அண்ணாந்த வன முலைச் சுண்ணமும் அளறும்,
எழினி வான் சுழலப் பிளிறு குரற் பகட்டினம்
துறை நீர் ஆடப் பரந்த கார் மதமும்,
பொய்கையும், கிடங்கும், செய்யினும் புகுந்து,
சிஞ்சை இடங்கரை, பைஞ் சிலைச் சேலை,
உடற் புலவு மாற்றும் படத்திரை வையை
நிறைநீர் வளைக்கும் புகழ் நீர்க் கூடல்-
வெள்ளிஅம் பொதுவில், கள் அவிழ் குழலொடும்
இன்ப நடம் புரியும் தெய்வ நாயகன்)
அருவி உடற் கயிறும், சுனை மதக் குழியும்,
பெருந்தேன் செவியும், கருந் தேன் தொடர்ச்சியும்,
ஓவா, பெரு மலைக் குஞ்சரம் மணக்க,
வளம் தரும் உங்கள் தொல் குடிச் சீறூர்க்கு,
அண்ணிய விருந்தினன் ஆகி
நண்ணுவன் - சிறு நுதற் பெரு விழியோளே!

Koviloor Digital Library

துறை விளக்கம் :

தலைமகன் இன்று இரவில் நான் உங்கள் சிறிய ஊருக்கு விருந்தாவேன், என்னை ஏற்றுக் கொள்வீர்களாக எனத் தோழியிடம் இரவுக்குறி வேண்டப் பெற்றது.

பாடற் பொருள்:

சிறிய நெற்றியினையும், பெரிய விழியினையும் உடைய வளே, *(34)*

வள்ளல் தன்மை உடையோர் வரையாது கொடுப்பது போல, எட்டுத் திக்கிலும் மேகமானது சூல் கொண்டு, பரவி மழை பொழிந்தது.

இருளும் - வெள்ளிய பற்களையும், கரிய கூந்தலையும், சிறிய அடிகளையும் உடைய மகளிர் நெஞ்சம் போல் இருண்டு பரந்து கிடக்கின்றது.

செல்லுகின்ற வழியானது தெய்வம் உண்டு என்று கருதாத பொய்மை உடைய மாந்தர்க்குச் சான்றோர் கூறிய அறநெறியானது பிறழ்ந்து போதல் போல,புற்கள் மூடி வழி தெரியாது பிறழ்ந்து காணப்படுகிறது. *(1 - 6)*

படைப்புக் கடவுள் முன்னரே கணித்துள்ள நாளின்படியே உயிர்களின் வாழ்வுக்காலம் முடியும் பொழுது, கூற்றுவனால் ஏவப்பட்ட தூதுவர்கள் வாழ்நாள் முடிந்த அவ்அனைத்து உயிர் களையும் சென்று வளைத்துக் கொள்ளுமாறு போல,

சிங்கங்கள் உயிருடன் சுற்றித் திரிகின்ற யானைகளை , அவை இயங்காதபடி அவற்றை வளைத்துக் கொண்டன. *(7 - 10)*

வெண்மையான உடம்பினையும், பெரிய வாயினையும், தீப் போன்ற விழிகளையும் உடைய சிங்கத்தின் தோலையும், யானைத் தோலையும் விரித்துப் போர்த்தி, கூரிய நகங்களை உடைய புலியினது தோலைப் பின்புறத்தே அணிந்து, மானின் தோலையும் உடுத்தி, கரிய பாம்புகளைக் கங்கணமாக (அணிகலன்களாக) அணிந்து கொண்டு, ஆதிப் பிரமனின் எலும்பினைக் கழுத்திலே அணிந்து, திருமாலாகிய பன்றியின் கொம்பினை மார்பிலே தொங்க விட்டு, *(11 - 17)*

Koviloor Digital Library

மக்கள் நடமாடுதல் இல்லாத வைகறைப் பொழுதில் கன்னி மகளிர் நீராடுதலால் தொய்யல் எழுதப்பட்ட முலையில் அணிந்த சுண்ணமும், குங்குமக் குழம்பும்,

மேகங்கள் வானத்தில் திரிவதைப் பார்த்து அவற்றைத் தன்னுடைய பகை யானைகள் என்று கருதி, கோபத்தால் முழக்க மிடுகின்ற யானைக் கூட்டம், நீர்த்துறைகளில் இறங்கி நீராடு தலால் நீரில் சிந்திய கரிய மதநீரும் கலந்த குளத்தின் இடத்தும், அகழியின் இடத்தும், வயலின் இடத்தும் புகுந்து சென்றது. *(18 - 23)*

அத்துடன் முழக்கத்தை உடைய முதலைக்கும், சிவந்த வாலை உடைய கெண்டை மீனுக்கும், உடலின்கண் உண்டாகிய புலால் நாற்றத்தைத் தீர்ப்பதற்குக் காரணமான வெண்மையான அலைகளை உடைய, நிறைந்த நீரை உடைய வையை ஆறு சூழ்ந்துள்ள மதுரை நகரத்தின் வெள்ளியம்பலத்தில், *(24 - 27)*

தேன் பொழியும் மலர் பொருந்திய கூந்தலை உடைய பார்வதியோடு, இன்பக் கூத்து இயற்றுகின்ற தேவதேவனாகிய சிவபெருமான்,

அருவிபோல் தோற்றமளிக்கும் கழுத்தில் இடுகின்ற புரசைக் கயிறும், சுனையாகிய மதநீர்க் குழியும், பெரிய தேன் கூடு ஆகிய செவிகளும், கரிய வண்டின் வரிசையாகிய சங்கிலியும் கொண்ட, பெரிய யானையாகிய மலையின் கண் பொருந்த வளம் கொடுப் பார். (அதாவது தலைவியின் ஊர் அமைந்துள்ள யானை போன்ற மலைக்குச் சிவபெருமான் வளம் கொடுப்பார்' என்பது பொருள்)

அத்தகைய உங்களுடைய பழைய குடியினை உடைய சிற்றூருக்கு உங்களால் கருதப்பட்ட விருந்தினனாக இற்றை நாள் இரவு நான் வருவேன் காண். ஆதலால் மறவாது என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டினான்.

(வி -ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 148 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலின் முதற் பகுதியில் இரவு

Koviloor Digital Library

நேர வருணனை அமைந்துள்ளது. அடுத்த பகுதியில் சிவ பெருமானின் தோற்றப் பொலிவும் வையை நதியின் சிறப்பும் கூறப்பெற்று இறுதியில் மலைபோல் அமைந்த யானைகள் இயங் குகின்ற தலைவியின் சிற்றூர் குறிக்கப் பெற்றுப் பொருளமைந் துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாக அவர் அணிந்துள்ள ஆடைகள், அணிகலன்கள் ஆகியவை சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளன.

(சொ - ம்)

கங்குல் - இரவு, மறலி - யமன், அரி - சிங்கம், நவ்வி - மான், உகிர் - நகம், கருமா - பன்றி, வழக்கு - சஞ்சாரம், அளறு - குங்குமக்குழம்பு, கிடங்கு - அகழி, குஞ்சரம் - யானை.

28. நகர் அணிமை கூறல்

புயற்கார்ப் பாசடை, எண் படப் படர்ந்த,
வெள்ளப் பெரு நதி கொள்ளை முகம் வைத்து,
நீட, நிறை பாயும் வான வாவிக்குள்
ஒரு செந்தாமரை நடு மலர்ந்தென்ன,
மூஅடி வழக்கிற்கு ஓர் அடி மண் கொண்டு,
ஒரு தாள் விண்ணத்து இருமை பெற நீட்டிய
கருங் கடல் வண்ணன் செங் கருங் கரத்து
ஒன்றால் இரு மலை அன்று ஏந்தியதென,
உந்தி ஒழுக்கு ஏந்திய வன முலையாட்டியும்
வரை பொரும் மருமத்து ஒரு திறன் நீயும்,
முழை வாய் அரக்கர் பாடு கிடந்தொத்த
நிறை கிடைப் பொற்றை வரை கடந்து இறந்தால் -
எரி தழற் குஞ்சி, பொறி விழி, பிறழ் எயிற்று,
இருள் உடல் அந்தகன் மருள் கொள உதைத்த
மூவாத் திருப் பதத்து ஒருதனிப் பெருமான்,
எண்ணில் பெறாத அண்டப் பெருந் திரள்
அடைவு ஈன்றளித்த பிறை நுதற் கன்னியொடும்
அளவாக் கற்பம் அளி வைத்து நிலைஇய-
பாசடை நெடுங் காடு காணிகொள் நீர்நாய்,
வானவில் நிறத்த நெட்டுடல் வாளைப்
பேழ்வாய் ஒளிப்ப, வேட்டுவப்பெயர் அளி -
இடை உறழ் நுசுப்பின் குரவை வாய்க் கடைசியர்

Koviloor Digital Library

களை கடுந் தொழில் விடுத்து, உழவு செறு மண்ட,
பண்கால் உழவர் பகடு பிடர் பூண்ட
முடப் புது நாஞ்சில் அள்ளல் புக நிறுத்தி,
சூடு நிலை உயர்த்தும் கடுங் குலை ஏற,
பைங் குவளை துய்க்கும் செங் கட் கவரி
நாகொடு வெருண்டு கழைக் கரும்பு உழக்க,
அமுத வாய் மொழிச்சியர் நச்சுவிழி போல
நெடுங் குழை கிழிப்பக் கடுங் கயல் பாயும்
தண்ணம் பழனம் சூழ்ந்த -
கண் இவர் கூடல் பெரு வளம் பதியே!

துறை விளக்கம் :

தலைவனும் தலைவியும் உடன்போக்குச் சென்ற பொழுது அவர்களை நோக்கி, ''இனிச் சிறிது நெறி சென்று, இம் மலையைக் கடந்தால் நீங்கள் சென்று சேர வேண்டிய நகரம் தோன்றும்'' என்று அவர்களை எதிர்ப்பட்டுக் கண்டோர் கூறி, நகரின் அணிமையைக் குறித்தது ஆகும்.

பாடற்பொருள்:

உலகத்தார் மதிக்கும்படி பரந்து காணப்பெறும் நீரினை உண்ட மேகமாகிய பசிய இலையினையினையும், நீண்ட காலமாக ஆயிரம் முகங்களைக் கொண்டு பெருகிப் பாயும் கங்கையாகிய நீரினையும் உடைய, ஆகாயமாகிய குளத்தின் நடுவே ஒரு செந்தாமரை மலர்ந்தது போல, *(1 - 4)*

மூவடி மண் கேட்டு ஓரடியாக ஒரு காலால் பூமி முழுவதையும் அளந்து கொண்டு, பெருமை உண்டாகும்படி மற்றொரு திருவடியை விண்ணகத்தில் நீட்டிய, கடல்போலும் கருமை நிறத்தை உடையவனாகிய திருமால், சிவந்த தன்னுடைய கை ஒன்றினால் கோவர்த்தனகிரி என்னும் மலையை ஏந்திய நாளில், ஒருமலை அல்லாது இரண்டு மலைகளைத் தாங்கியது போல, *(5 - 8)*

கொப்பூழினின்று எழுந்த மயிற் ஒழுக்கின் மேல் தங்கிய அழகிய இரண்டு முலைகளை உடையாளும், மலை அகன்றாற் போல அகன்ற மார்பினையும், ஒப்பற்ற நெற்றியினையும் உடைய தலைவனாகிய நீயும், மலைக் குகை போலும் பெரிய வாயினை

Koviloor Digital Library

உடைய அரக்கர் உடல் கிடந்தாற்போல, சிறிய மலைகளை உடைய இம்மலையைக் கடந்து அப்பாற் சென்றால், *(9 - 12)*

எரிகின்ற தீப்பிழம்பு போன்ற தலைமயிரினையும், தீப்பொறி பறக்கும் கண்களையும், பிறழ்ந்த பற்களையும், (வரிசையாக இல்லாமல்) கருத்த உடம்பினையும் உடைய யமன் மயக்கம் அடையும்படி எட்டி உதைத்த மூவாமை உடைய (இளமையான) திருவடிகளை உடைய ஒப்பற்ற தனி முதல்வனாகிய இறைவன், *(13 - 15)*

அளவைகளால் அளக்க முடியாத அண்டங்களின் பெரிய கூட்டத்தைப் படைக்கும் முறைமையில் படைத்தளித்த பிறை போன்ற நெற்றியினை உடைய பார்வதியினோடும், ஊழிக்காலம் பலவும் இந்நகரத்தில் எழுந்தருள வேண்டும் என்று ஓர் அருள் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற மதுரையம்பதி, *(16 - 18)*

பசிய இலைகளை உடைய நெடிய தாமரைக் காட்டினை உறைவிடமாகக் கொண்ட நீர் நாயானது - இந்திரவில்லைப் போன்ற நிறத்தை உடைய நீண்ட உடலினைக் கொண்ட, வாளை மீன்களின் பெரிய வாயினுள் சென்று புகவும் *(19 - 21)*

வேட்டுவன் என்னும் பெயருடைய குளவியின் இடையைப் போன்ற இடையினையும், குரவை பாடும் வாயினையும் உடைய உழத்தியர், களை பிடுங்கும் தொழிலை விட்டு விட்டு, உழவினை உடைய வயலிலே செல்லவும், மருதப்பண்ணைப் பாடுதலை உடைய உழவர்கள் எருதுகள் தங்கள் பிடரியில் சுமந்த புதிய கலப்பைகளைச் சேற்றில் அழுந்தும்படி அழுத்தி நிறுத்தி வைத்து விட்டு, வைக்கோலினைப் போராகக் குமித்து வைத்திருக்கும் சிறப்பினை உடைய கரையின்கண் ஏறவும், *(22 - 26)*

பசிய குவளை மலரை மேய்கின்ற சிவந்த கண்ணினை உடைய இளைய எருமைகளோடு, முதிய எருமைகள் சேர்ந்து கழையாகிய கரும்புகளை உழக்கவும் (கலக்கவும்), அமுதம் போன்ற வாய் ஊறலையும், மொழிகளையும் உடைய இள மகளிரின் நச்சுத் தன்மை உடைய விழிகள் போன்ற, கயல் மீன்கள் நீண்ட இலைகள் கிழிபும்படி பாய்தற்குக் காரணமான குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட, கண்டோர் கண்கள் மிண்டும் காணுதற்கு

Koviloor Digital Library

ஆசைப்படும் பெரிய வளத்தினை உடைய நான்மாடக் கூடலாகிய மதுரை நகரம் உங்களுக்குக் கண்கூடாகத் தெரியும். எனவே இம் மலையைக் கடக்கும் அளவிற்கு விரைந்து செல்வீர்களாக.

(25 - 32)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **221** ஆவது பாடலுக்கு விளக்கவுரையாக அமைகிறது. இப்பாடலில் முதற்பகுதியில் தலைவியும் தலைவனும் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். அடுத்த பகுதியில் மதுரையம்பதியின் சிறப்புக் கூறப்பெற்று, அப்பதியைத் தலைவனும் தலைவியும் விவைாகச் சென்று அடையவேண்டும் என்பது கூறப்பெற்றுள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்பாக, யமனை உதைத்ததும், பார்வதியோடு மதுரையம் பதியில் எழுந்தருளியிருப்பதும் சிறப்பாகக் கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

புயல் - நீர், பாசடை - பசிய இலை, வாவி - குளம், மூன்றடி மண் - வாமன அவதாரத்தில் திருமாலால் மூன்றடி மண் கேட்கப் பெற்றது. மருமம் - மார்பு, முழை - குகை, அந்தகன் - யமன், மூவா - முதுமையடையாத இளமையான, கன்னி - பார்வதிதேவி, பகடு - எருது,

29. அறியாள் போன்று நினைவு கேட்டல்

பற்றலர்த் தெறுதலும், உவர்ந்தோர்ப் பரித்தலும்,
வெஞ் சுடர், தண் மதி, எனப் புகழ் நிறீஇய
நெட்டிலைக் குறும் புகர்க் குருதி வேலவ!
(வேதியன் படைக்க, மாலவன் காக்கப்
பெறாதது ஓர் திரு உருத் தான் பெரிது நிறுத்தி,
அமுது அயில் வாழ்க்கைத் தேவர்கோன் இழிச்சிய,
மதமலை இரு -நான்கு பிடர் சுமந்து ஓங்கிச்
செம் பொன் மணி குயிற்றிய சிகரக் கோயிலுள்,
அமையாத் தண்ணளி உமையுடன் நிறைந்த
ஆலவாய் உறைதரும் மூலக் கொழுஞ் சுடர்)
கருவி வானம் அடிக்கடி பொழியும்,
கூடம் சூழ்ந்த நெடு முடிப் பொதியத்து -

Koviloor Digital Library

கண் நுழையாது காட்சிகொடு தோற்றிய
வெறி வீச் சந்தின் நிரை இடை எறிந்து,
மற்று அது வேலி கொள வளைத்து, வளர் ஏனல்
நெடுங் கால், குற்றுழி, இதணுழை காத்தும்,
தேவர் கோமான் சிறை அரி புண்ணினுக்கு
ஆற்றாது, பெரு முழை வாய் விட்டுக் கலுழ்ந்தென,
கமஞ் சூற் கொண்மூ, முதுகு குடியிருந்து
வான் உட்க முரற்றும் மலைச் சுனை குடைந்தும்,
பிரசமும், வண்டும், இரவி தெறு மணியும்,
வயிரமும், பொன்னும், நிரைநிரை கொழித்து,
துகில் நான்று நுடங்கும் அருவி ஏற்றும்,
மறு அறு செம்மணி கால் கவண் நிறுத்தி,
நிறைமதி கிடக்கும் இறால் விழ எறிந்தும்,
எதிர் சொல் கேட்பக் கால் புகத் திகைத்த
நெருக்கு பொழில் புக்கு, நெடு மலை கூயும்,
நுசுப்பின் பகைக்கு நூபுரம் அறற்றப்
பைங் காடு நகைத்த வெண் மலர் கொய்தும்,
மனத்தொடு கண்ணும் அடிக்கடி கொடுபோம்
செம் பொன் செய்த வரிப் பந்து துரந்தும்,
இனைய, பல் நெறிப் பண்ணை இயங்கும்
அளவாக் கன்னியர் - அவருள்,
உளம் ஆம் வேட்கையள் 'இன்னள்' என்று உரையே.

துறை விளக்கம்:

தலைவனது மகிழ்ச்சியைக் கண்டு தலைவிக்காக இவன் கொடுக்கின்ற தழையை வாடாமல் வாங்குவேன் எனத் தோழி மனதிலே உட்கொண்டு, அவனை நோக்கி என்னுடைய தோழிமார் பலர் உள்ளனர். அவருள் நின் காதலாகிய கருத்து எவர் கண்ணதோ? என்று தலைவன் காதலித்த தன் தலைவியைத் தான் அறியாள் போன்று அவனை ஆராய்வதற்குக் கூறியது.

பாடற்பொருள்:

பகைவர்களை அழித்தலும் நட்பினரைத் தாங்கலும் ஞாயிற்றின் தன்மையைப் போலவும், திங்களின் தன்மையைப் போலவும் ஆகும் என்று தன் புகழை நிலை நிறுத்திய, நெடிய இலையினையும் (வேலின் தட்டையான மேல்பகுதி) அதில் சிறு

Koviloor Digital Library

புள்ளிகளாக அமைந்த இரத்தக் கறையினையும் உடைய வேலினைத் தாங்கிய தலைவனே, (1 - 3)

ஆலவாய் என்னும் மதுரையம்பதியில் அமிர்தம் உண்ணும் வாழ்க்கையை உடைய அமரர்கோனாகிய தேவேந்திரன் - ஐராவதம் முதலிய திசை யானைகள் எட்டும், தம்முடைய பிடரியில் சுமந்து நிற்கும்படி,

பிரமன் படைக்கவும், திருமால் காக்கவும் பெறாதவளாகிய - ஓர் உருவினைப் பெரிதாக அமைத்து இறக்கிய (மதுரையம் பதியில்) பொன்னும் மணியும் அழுத்திய சிகரத்தை உடைய கோயிலுள் - அருளினை உடைய அங்கயற்கண் அம்மையோடு எழுந்தருளிய , அங்கிங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக்கின்ற, முதன்மையாகிய ஒளிப்பிழம்பாம் சிவபெருமான், (4 - 10)

மாதம் தவறாது அடிக்கடி மின்னல் முதலிய கருவிகளைக் கொண்ட மேகமானது மழை பொழிவதற்கு இடமான, தேவ கோட்டங்கள் சூழ்ந்திருக்கின்ற நீண்ட சிகரத்தை உடைய பொதியமலையின் கண்,

தன்னிடத்தில் ஒருவரும் செல்ல முடியாது, புறத்தே மட்டும் காணுகின்ற காட்சி கொண்டு தோற்றிய,

மணம் பொருந்திய மலர்களைக் கொண்ட சந்தன மரங்களின் வரிசைகள் அமைந்த சோலையில், (முன்பு கூறப்பட்ட சிறப் பினை உடைய மதுரையம்பதியில் இறைவன் தோற்றிய சோலை),

சந்தன மரங்களின் வரிசையில் இடைவெளி ஏற்பட மரங்கள் சிலவற்றை வெட்டி வீழ்த்தி, அந்தச் சந்தன மரத்தையே வேலி யாகக் கொண்டு அமைந்த தினைப்புனத்தில் வளர்கின்ற தினையினை - நீண்ட கால்களைக் கொண்டு கட்டப்பட்ட பரணிடத்திருந்து காவல் செய்தும், (11 - 16)

இந்திரன் தம்முடைய சிறகுகளை வெட்டியதால் உண்டான புண்ணினால் ஏற்பட்ட துன்பத்திற்கு ஆற்ற முடியாமல், தம்முடைய பெரிய முழைபோன்ற வாயைத் திறந்து அழுதாற் போன்ற, நிறைந்த சூளினைக் கொண்ட மேகங்கள் தங்கியிருந்து, தேவர்களும் அஞ்சும்படியாக முழங்குவதற்கு இடமான மலையின்கண் அமைந்த சுனையில் நீராடியும், (17 -20)

Koviloor Digital Library

தேனையும், வண்டுகளையும், மாணிக்கத்தையும், வயிரத்தையும், பொன்னையும் வரிசை வரிசையாகக் கொழித்துப் பலநிறைத் துகிலானது தொங்கி அசைதல் போல, விழும் அருவி நீரினை உடம்பின் கண் ஏற்று விளையாடியும்,

குற்றமற்ற மாணிக்கக் கற்களைக் கவண்கல் என்னும் கருவியிடத்தே வைத்து முழுத் திங்களைப் போல் தோன்றுகின்ற தேன்கூடு விழும்படி மாணிக்கக் கல்லை வீசியும், *(21 - 25)*

தாங்கள் கூறிய சொல் எதிரொலியாக அமையக் கேட்டு மகிழ்தல் பொருட்டு, நெடிய மலையின் எதிரே நின்று கூவியும், காற்றுப் புகுவதற்கும் இயலாத நெருங்கிய சோலைகளில் புகுந்து, இடைக்குப் பகையாகக் கருதிக் கிண்கிணயாகிய அணிகலன்கள் புலம்ப, தாம் கருதிய மலர்களைக் கொய்தும், *(26 - 29)*

அடிக்கும் தொறும் (பந்தை) தனது மனமும் கண்ணும் கூடக் கொண்டு செல்லும் சிவந்த பொன்னாற் செய்த வரி பொருந்திய பந்துகளை அடித்தும், இத்தன்மையாகிய பல்வேறு விளையாட்டு முறைமைகளைக் கொண்ட இடந்தோறும், எண்ணமுடியாத கன்னியராகிய தோழியர் உள்ளனர். இவருள் நின்னுடைய மனத்தில் உண்டாகும் வேட்கைக்குக் காரணமான தன்மை உடையவள் யார' என்று எனக்கு உணர'த்துவாயாக என்று தலைவனிடத்தில் தோழி கூறினாள். *((30 - 34)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 107 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் தோழி, தோழியர' பலர' என்று குறிப்பிடுவது பாடலில் இடம் பெற்ற தலைவி உள்ளிட்ட தோழிகள் ஆவர். தலைவி தலைவன் இருவரின் காதலை அறிந்திருந்தும் தோழி அறியாதாள் போல, தினைப் புனம் காத்தும், சுனை நீராடியும், அருவி நீராடியும், கவண்கல் எறிந்தும், எதிரொலி கேட்டும், மலர் பறித்தும், பந்து விளையாடியும் ஆகிய பலவித விளையாட்டுக்களைக் கொண்ட தன் தோழியர் பலருள் தலைவனால் காதலிக்கப்பட்ட தலைவி யார் என்று தலைவனிடம் தோழி கேட்பதாகப் பொருள் அமைந்துள்ளது. இப் பாடலில் தேவேந்திரன் அமைத்த எட்டுத் திக்கு யானைகள் தாங்கிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கின்ற மதுரையம்பதிக் கோயிலுள் உமையவளோடு சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறான், அவனால் உண்டாக்கப் பட்ட பொதியமலை சிறப்புடையது என்று சிவபெருமானின் பெருமை கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்)

பற்றவர் - பகைவர், உவந்தோர் - நட்பினர், நெட்டிலை - வேல்பகுதி , இழிச்சிய - தேவர் உலகத்திலிருந்து இறக்கிய, மதமலை இருநான்கு - எட்டுத்திக்கு யானைகள், வெறீவீ - மணமுடைய மலர், இதண் - பரண், கொண்மூ - மேகம், பிரசம் - தேன், நூபுரம் - கிண்கிணி என்ற அணிகலன்.

30. சுடரோடு இரத்தல்.

ஈன்ற என் உளமும், தோன்றும் மொழி பயின்ற
வளை வாய்க் கிள்ளையும், வரிப் புனை பந்தும்,
பூவையும், கோங்கின் பொன் மலர் சூட்டிய
பாவையும், மானும் -- தெருள்பவர் ஊரும்,
நெடுந் திசை நடக்கும் பொருள் நிறை கலத்தினைப்
பெரு வளி மலக்க, செயல் மறுமறந்தாங்கு -
சேர மறுக், முதுக்குறை உறுததி,
எரி தெறும் கொடுஞ் சுரத்து இறந்தனளாக,
(நுதி மதம், தறுகண், புகர், கொலை, மறுத்த
கல் இபம் - அதனைக் கரும்பு கொள வைத்த
ஆலவாய் அமர்ந்த நீலம் நிறை கண்டன்,
மறிதிரைப் பரவைப் புடை வயிறு குழம்பத்
துலக்கு மலை ஒரு நாள் கலக்குவ போல,
உழுவை உகிர் உழக்கும் ஏந்து கோட்டு உம்பல்,
உரிவை மூடி ஒளியினை மறைத்து,
தரை படு மறுக்கம் தடைந்தன போல)
விண் உற விரித்த கரு முகிற்படாம் கொடு,
மண்ணகம் உருகக் கனற்றும் அழல் மேனியை -
எடுத்து மூடி, எறிதிரைப் பழனத்துப்
பனிச் சிறுமை கொள்ளா முள் அரை முளரி
வண்டொடு மலர்ந்த வண்ணம் போல்,
கண்ணும் மனமும் களிவர மலர்த்துதி -
மலர்தலை உலகத்து இருள் எறி விளக்கும்,

Koviloor Digital Library

மன் உயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்,
மறை உகு நீர்க்குக் கருவும், கரியும்,
வடிவம் எட்டனுள் வந்த ஒன்றும்,
சேண் குளம் மலர்ந்த செந்தாமரையும்,
சோற்றுக் கடன் கழிக்கப் போற்று உயிர் அழிக்கும்
ஆசைச் செருநர்க்கு அடைந்து செல் வழியும்,
அருளும் பொருளும், ஆகித்
திரு உலகு அளிக்கும் பருதி வானவனே!

துறை விளக்கம்:

தலைவி உடன்போக்குச் சென்ற பின்பு, தாயானவள் வருந்திச் சூரியனை நோக்கிக் கூறியது. பெற்ற என்னையும், தன் கிளியையும் துறந்து (விட்டுவிட்டு)அறிவு முதிர்ந்து காட்டு வழியே சென்ற என் மகளின் முகத்தை நின் கதிர்களால் வாட்டாது, தாமரை மலர் போல மலர்த்துவாயாக என்று தாயர் சூரியனை நோக்கிக் கூறுவது.

பாடற்பொருள்:

பெற்ற என் உள்ளமும், கேட்டார்க்கு வெளிப்பட மொழியைக் கற்ற வளைந்த வாயினை உடைய கிள்ளையும், வரிகளை உடைய பந்தும், நாகணவாய்ப் புள்ளும், கோங்க மரத்தின் பொன் போன்ற அழகிய மலரை அணிந்த பாவையும், வளர்த்த மானும் - திசைகளை நன்கு அறிந்தவர்கள் செலுத்தும் நெடுந்தூரம் செல்லும் - பொருள்களைக் கொண்ட பெரிய மரக்கலத்தினை, பெருங்காற்று கலக்குவதால் அவர்கள் செயல் மறந்து திகைத்து வருந்தினாற் போல வருந்தவும், எம்மை விட்டுவிட்டுத் தனது பேரறிவை நாம் உணரும்படி செய்து எம்மகள் தீ போலச் சுட்டெரிக்கும் பாலைவனத்தில் சென்றனள். *(1 - 8)*

ஆறு போல மதநீர் சொரிதலையும், தறுகண்மையினையும், புள்ளிகளைக் கொண்ட முகத்தினையும், கொலைத் தொழிலையும் இல்லாத, கல்லால் இயன்ற யானையை உயிர் யானையைப் போல் கரும்பு தின்னச் செய்து அருளிய, மதுரையில் எழுந்தருளியுள்ள நீலநிறம் நிறைந்த மிடற்றினை உடைய சிவபெருமான், தான் கொண்ட எட்டு வடிவத்தில் எல்லோரும் மகிழ்தற்கு இடமான ஓர் வடிவமாகி, *(9 - 11) (26)*

Koviloor Digital Library

புலியின் நகம் கீறியதால் கலக்கத்தை அடைந்ததும், உயர்ந்த தந்தத்தினை உடையதும் ஆகிய, யானையினது தோலைப் போர்த்திக் கொண்டு தன்னுடைய பேரொளியை மறைத்துக் கொண்டான். (சிவபெருமான்)அதனால் பூமியின்கண் உண்டாகிய உயிர்களுக்கு ஏற்பட்ட தடுமாற்றங்கள் தடைப்பட்டன. அது போல, விண்ணகத்தில் சூரியனாகிய நீ பொருந்தி இருப்பதால் அவ்விண்ணகத்தில் துகிலாகிய மேகத்தினால் மூடப்பட்டாய்.

தேவர்களும், அசுரர்களும் ஒருநாள் புரளுகின்ற மலைகளை உடைய கடலின்கண் ஒளிபொருந்திய மேருமலையால் கடலின் வயிற்றிடம் குழம்பும்படி கலக்கும் பொழுது, அந்த நாளில் அதன் கண் உண்டாகிய நஞ்சு போல நிலவுலகம் சுடும்படி தீயினை உடையாய். - வானத்தில் நீ இருப்பதால் நின்னால் விரிக்கப்பட்ட கரிய மேகத்தை எடுத்துப் போர்வையாகக் கொண்டு மறைத்துக் கொள்க. (அதனால் சூரியனாகிய உன் வெப்பம் உயிர்களைத் துன்புறுத்தாது) (12 - 18)

வீசுகின்ற அலைகளை உடைய, நீர் நிரம்பிய மருத வயலில் பனியால் வாடாது, முள்ளைத் தண்டிலே கொண்ட தாமரையானது, வண்டிருக்க மலர்ந்த தன்மை போல, என் மகளின் கண்ணும் மனமும் மகிழ்ச்சியடையும்படி மலர்த்துவாயாக. (19 - 22)

பரந்த இடத்தை உடைய பூமியின்கண் உண்டாகிய இருளை நீக்கும் விளக்குமாகி, அவ்வுலகத்தே நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் விழிக்கும்படி கருதுகின்ற கண்ணுமாகி, மறையோர்கள் அக்கியம் கொடுக்கும் பொழுது சொரிகின்ற நீருக்குக் காரணமும், அவர்கள் நீர் சொரியுங்கால் சான்றுமாகி, தன் மன்னன் வழங்கிய பெருஞ்சோற்றுத் திரளை வாங்கி உண்ட கடனைத் தீர்த்தற்குப் போர்க்களத்தின் கண்ணே தம்மால் போற்றப் படுகின்ற உயிரைக் கொடுக்கின்ற,புகழுக்கு ஆசையை உடைய போர் மறவர்கள் இறக்கும் பொழுது, அவர்கள் துறக்கம் அடைவதற்கு உரிய வழியு மாகி, எல்லா உயிர்க்கண்ணும் இயல்பாகக் காட்டுகின்ற பேரன்பும் ஆகி, அவ்வுயிர்கள் நுகர்வதற்குரிய பொருள்களுமாகி, அழகிய உலகத்தினைப் பாதுகாத்து அருளுகின்ற சூரியனாகிய கடவுளே, இதுவே நான் வேண்டும் வரமாகும். (23 - 31)

Koviloor Digital Library

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **232** பாடலுக்குரிய விளக்க மாகும். இப்பாடலில் சூரியனுடைய சிறப்புக்கள் கூறப்பெற்றுத் தாமரையை மலரச் செய்வது போலத் தன் மகளின் முகத்தையும், மனத்தையும் மகிழச் செய்ய வேண்டும் என்று தலைவியைப் பெற்ற தாய் சூரியனிடத்தே வேண்டுவதாகப் பொருள் அமைந் துள்ளது. இப்பாடலில் கல்யானைக்குக் கரும்பு அளித்த பெரு மையும், யானைத் தோலைப் போர்த்திய சிறப்பும் சிவபெரு மானின் சிறப்புக்களாகக் கூறப் பெற்றுள்ளன.

(சொ - ம்)

பெருவளி - சூறாவளிக்காற்று, இறந்தனளாக - சென்றவளாக, கல்இபம் - கல்யானை, பரவை - கடல், துலக்கு - கலக்குதல், உழுவை - புலி, உரிவை - தோல், மண்ணகம் - நிலவுலகம், முளரி - தாமரை, பருதி வானவனே - ஞாயிறாகிய தெய்வமே.

31. இன்னல் எய்தல்.

வள் உறை கழித்துத் துளக்கு வேல் - மகனும்,
மனவு மயிற்கழுத்து மாலையாட்டியும்
நெல் பிடித்து உரைக்கும் குறியினோளும்,
நடுங்கு அஞர் உற்ற பழங்கண் அன்னையரும்,
அயரும் வெறியில் தண்டா அரு நோய்,
ஈயாது உண்ணுநர் நெடும் பழி போலப்
போகாக் காலை புணர்குவது என்னோ?
(நான்கு எயிற்று ஒருத்தல் பிடர்ப் பொலி வரைப்பகை
அறுகால் குளிக்கும் மதுத் தொடை ஏந்த,
முள்-தாட் செம்மலர் நான்முகத்து ஒருவன்
எண்ணி நெய் இறைத்து மண அழல் ஓம்ப,
புவி அளந்து உண்ட திரு நெடு மாலோன்
இரு கரம் அடுக்கிப் பெரு நீர் வார்ப்ப,
ஒற்றை - ஆழியன் , முயல் உடல் தண்சுடர்,
அண்டம் விளர்ப்பப் பெரு விளக்கு எடுப்ப,
அளவாப் புலன் கொள, விஞ்சையர் எண்மரும்,
வள்ளையில் கருவியில் பெரும் புகழ் விளைப்ப,
முனிவர் செங் கரம் சென்னி ஆக,

Koviloor Digital Library

உருப்பசி முதலோர் முன் வாழ்த்து எடுப்ப,
மும் முலை ஒருத்தியை மணந்து உலகு ஆண்ட)
கூடற்கு இறைவன் இரு தாள் இருத்தும்
கவையா வென்றி நெஞ்சினர் நோக்க,
பிறவியும் கூற்றமும் பிரிந்தன போலப்
பீரமும் நோயும் மாறில்,
வாரித் துறைவற்கு என் ஆதும்மே?

துறை விளக்கம் :

தலைவியைப் பெற்றோர் தலைவியின் உடலில் கண்ட மாற்றத்தை அறிந்து, அதை நோயெனக் கருதி, அந்த நோயைத் தீர்ப்பதற்காக வெறியாடுவதற்கு வேலனை அழைத்தமையைக் கேட்ட தலைவி, தலைவன் பிரிவும், தாயர் வழிபாடும் என்ற இருவகையாலும் தமக்கு உயிர்வாழும் நெறி இல்லையே என்று துன்பமடைவது.

பாடற்பொருள்:

வலிய உறையினை நீக்கிச் சுழற்றி ஆடுகின்ற வேலினைக் கொண்ட வெறியாட்டு வேலன், வெறியாட்டு ஆடிடவும், பரப்பிய நெல்லினைக் கையினால் பிடித்து முருகனுடைய வேல் இது, மயிலின் கழுத்து இது, கோழிக் கொடி இது என்று தோன்றுகின்றவாறு சொல்லுகின்ற கட்டுவிச்சி குறி சொல்லிடவும், தெய்வத்தினால் ஆயது தான் இந்நோய் என்று அவர்களால் அறிந்து, வருந்துவதற்குக் காரணமாகிய துன்பத்தைக் கொண்ட மெலிவை உடைய தாயரும், கூடி நிகழ்த்துகின்ற இவ்வெறியாடலால் வறியவர்க்கு வழங்காமல் தாமே உண்ணுகின்ற செல்வர்க்கு உண்டாகிய பெரிய பழி நீங்காதது போல என்னுடைய நோய் நீங்காது இருக்கிறது. ஆதாலால் அயலார் இந்நோய்க்கு ஏற்றிக் கூறும் பழிச்சொல் எந்நிலையாகும்? *(1 - 8)*

நான்கு கொம்புகளை உடைய ஐராவதம் என்னும் யானையின் கழுத்திலே தாங்கியுள்ள மாலைகளுக்கு எதிராகத் தேவேந்திரன், ஆறு கால்களை உடைய வண்டுகள் குடைதற்கு இடமான, தேனை உடைய மலர்மாலையினை ஏந்தி நிற்கவும், முள்ளைத் தண்டில் கொண்டுள்ள செந்தாமரை மலரில் இருக்கும் நான்கு திருமுகங்களைக் கொண்ட பிரமன் மறைமொழி கூறி,

Koviloor Digital Library

நெய் பெய்து திருமண வேள்வித் தீயினை வளர்க்கவும், நிலத்தினை அளந்து, பின்னர் அதனையே உண்டு அருளிய திருமால் இரண்டு கைகளையும் கூட்டி, மகட்கொடைக்கு உரிய நீர் வார்த்துக் கொடுக்கவும், உலகம் எல்லாம் ஒளி விளங்கும்படி ஒற்றைச் சக்கரத் தேரினைக் கொண்ட சூரியனும், முயல் கறையினை உடைய திங்களும், பெரிய திருவிளக்குகளை ஏந்தவும், *(9 - 15)*

வித்தியாதர முனிவர்கள் எண்மரும் இசையினைத் தாளத்தால் அளந்து, யாவரும் செவியால் நுகரும்படி தோல் போர்த்திய இசைக் கருவியாகிய யாழினை மீட்டிப் பெரிய புகழினைப் பண்ணில் பாட, முனிவர்கள் தங்கள் சிவந்த கைகளைக் கூப்பித் தொழ, ஊர்வசி முதலிய அரம்பையர்கள் வாழ்த்திப் பாட, மூன்று முலைகளைக் கொண்ட தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் புரிந்து, உலகைக் காத்து அருளுகின்ற மதுரை மாநகரத்துத் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளுடைய, *(16 - 21)*

இரண்டு திருவடிகளையும் இடையறாது நினைக்கும், நெஞ்சினை உடைய மெய்யடியார் அருளோடு நோக்குங்கால், நோக்கப் பட்டவருடைய பிறவிப் பிணியும், அவர்களுடைய இருவினையும் முற்றும் நீங்கினாற் போல, இவ்வெறியாடலால் என் மேனியின் பசலையும், அது உதிர்ந்ததினால் ஏற்பட்ட என் துன்பமும் ஒரோவழி நீங்குமாயின் அப்பொழுதே கடல் துறைகளை உடைய எம் தலைவனுக்கு யாம் எந்நிலை ஆவோம்? எனவே தாயரிடத்தும் தலைவனிடத்தும் அவர்தம் செயல்களால் யாம் உயிர் வாழ்தல் அரிதாகும் எனத் தலைவி துன்புற்றுத் தனக்குள்ளே கூறினாள். *(22 - 25)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **287** ஆம் பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் வெறியாடுதலாலும், கட்டுவிச்சியாலும் தெய்வத்தின் நிலையால் தான் தலைவிக்கு நோய் ஏற்பட்டது என்று தாயர் அறிந்து வெறியாட்டு எடுத்ததினால் தன்னுடைய நோய் நீங்கிவிடுமானால், தலைவனால் ஏற்பட்ட காதல் நோய் எந்நிலைத்தாம் என்று தலைவி வருந்துவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமான்

Koviloor Digital Library

பெருமைகளாக அவர் தடாதகைப் பிராட்டியரைத் திருமணம் செய்து கொண்ட செய்தி சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

மாலையாட்டி - மாலை அணிந்த கட்டுவிச்சி, அருகால் - வண்டு, விஞ்சையர் - இசைவல்ல வித்தியாதரன், பீரம் - பசலை நோய்.

32. நெஞ்சொடு நோதல்

பொருள் செயல் அருத்தியின், எண் வழி தடைந்து',
நால் திசை நடக்கும், அணங்கின் அவயவத்து,
அலை தரு தட்டைக் கரும் புறம், மலை, மடல்,
கடல் திரை உகளும் குறுங் கயல் மானும்
கடுங் கான் தள்ளி, தடைதரு நெஞ்சம்!
(கயிலைத் தென்பால் கானகம், தனித்த
தேவர் நெஞ்சு உடைக்கும், தாமரை யோகின்,
மணக் கோல் துரந்த குணக்கோ மதனை,
திருக் குளம் முளைத்த கண் தாமரை கொடு
தென் கீழ்த் திசையோன் ஆக்கிய தனிமுதல்
திரு மா மதுரை எனும்) திருப் பொற்றொடி,
என் உயிர் அடைத்த பொன் முலைச் செப்பின்
மாளா இன்பம் கருதியோ? அன்றி,
புறன் பயன் கொடுக்கும் பொருட்கோ? வாழி!
வளர் முலை இன்பு எனின், மறித்து நோக்குமதி,
பெரும் - பொருள் இன்பு எனின், பெரிது தடை இன்றே,
யாதினைக் கருதியது? ஒன்றை
ஓதல் வேண்டும், வாழிய பெரிதே!

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைவன், மீண்டு வந்தான். அப்பொழுது மீண்டும் பொருள்தேட வேண்டும் என்று நினைத்த உள்ளத்தோடு மீள முடியாது தன் நெஞ்சை நோக்கி வருந்திக் கூறியது.

பாடற்பொருள்:

பொருளைத் தேட வேண்டும் என்ற ஆசையினால் என்னை அலைதலைச் செய்து - கடிய கானகத்தில் தள்ளி, தலைவியை எண்ண முடியாது தடைப்படுத்தியும்,

Koviloor Digital Library

பார்க்கும் பொழுது நான்கு திசையிலும் காணப்பெறும் கரும்புறு மூங்கில், மலை, பூவிதழ், கடல்திரையில் திரியும் கயல்மீன் ஆகியவை தலைவியினுடைய தொய்யல் எழுதிய தோளும், அழகிய முலையும், வாயும், கண்ணும் ஆகிய அணங்கினுடைய அவயவங்களைக் காணுமாறு செய்து, அவற்றின் ஆசையால் பொருள் ஈட்டுதலை எண்ண முடியாது தடை செய்யும் நெஞ்சமே நீ வாழ்வாயாக. *(1 - 5)*

கயிலை மலைக்குத் தெற்காகிய காட்டிடத்தில் தேவியரை விட்டுப் பிரிந்த தேவர்களின் மனதை உடைத்தற்குக் காரணமாகிய தாமரை அம்பை ஏவினாற் போல, சில தாமரை அம்பை ஏவுவதற்கு ஏதுவாகிய குணத்தினை உடைய தலைவனாகிய மன்மதனை, அழகிய நெற்றியில் தோன்றிய தாமரையாகிய கண்ணைக் கொண்டு நெருப்பாக்கிய ஒப்பற்ற முதல்வனாகிய சிவபெருமானின், அழகினையும் பெருமையினையும் உடைய மதுரையைப் போன்று, அழகினையும் செல்வத்தையும் உடைய தலைவியின், *(6 - 11)*

என் உயிராகிய பொன்னை அடைத்து வைத்த முலையாகிய செப்பின் அளவாகப் பொருந்திய இன்பத்தை நினைத்தோம். அதுவன்றி பின் பயனைக் கொடுக்கும் பொருளைக் கருதியோ, *(12 - 14)*

வட்டமாக எழுந்து நின்ற முலையால் வரும் இன்பத்தைக் கருதித் திரும்பிச் செல்ல வேண்டும் என்றால் திரும்பிச் செல்வாயாக. அதுவல்லாது பொருளால் வரும் இன்பத்தினால் எனின் அதற்கும் வேறு தடை இல்லை. ஆதலால் இரண்டில் ஏதேனும் ஒன்றை நினைத்துச் சொல்வாயாக என்று தலைவன் நெஞ்சத்தைப் பார்த்துக் கூறினான். *(15 - 18)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் *342* ஆம் பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. தலைவனின் நெஞ்சம் பொருளைத் தேடிச் செல்லும் பொழுது, செல்லும் வழியில் காணும் பொருள்களில் தலைவியின் உறுப்புக்களைக் காணுவதால், பொருள் தேடும் எண்ணம் தடைப்படுகிறது. இத்தகைய தடைகளை

Koviloor Digital Library

நினைந்து ஏதேனும் ஒன்றில் மனம் செல்ல வேண்டும் என்று தன் நெஞ்சத்தைப் பார்த்துத் தலைவன் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இதில் சிவபெருமானின் சிறப்பாக மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த செய்தி கூறப்படுகிறது.

(சொ. ம்):

அருத்தி - ஆசை, எண் - எண்ணம், தட்டை - மூங்கில், செப்பு - சிறிய விளையாட்டுப் பானை, ஓதல் - சொல்லுதல்.

33. அல்லகுறி அறிவித்தல்

வற்றிய நரம்பு, நெடுங் குரல், பேழ்வாய்,
குழிவிழி, பிறழ்பல், தெற்றற் கருங் கால்,
தாளிப் போந்தின் தரு மயிர்ப் பெருந் தலை,
விண் புடைத்து அப்புறம் விளங்கு உடற் குணங்கினம்
கானம் பாடிச் சுற்றி நின்று ஆட,
சுழல் விழி, சிறு நகை, குடவயிற்று', இரு குழைச்
சங்கக் குறுந்தாட் பாரிடம் குனிப்ப,
தேவர் கண் பனிப்ப, முனிவர் வாய் குழற,
கல்லவடத் திரள், மடி வாய்த் தண்ணுமை,
மொந்தை, கல்லலகு, துத்தரி, ஏங்க,
கட்செவி சுழல,தாழ்சடை நெறிப்ப,
இதழி தாது உதிர்ப்ப, பிறை அமுது உகுக்க,
வெள்ளி அம்பலத்துள் துள்ளிய பெருமான்
கூடல் மாநகர் அன்ன, பொற்கொடி!
இரவிக்கு அணிய வைகறை காறும்
அலமரல் என்னை கொல்? அறிந்திலம் யாமே!-
வெண் முத்து அரும்பி, பசும் பொன் மலர்ந்து,
கடைந்த செம் பவளத் தொத்துடன் காட்டும்
இரும்பு கவைத்தன்ன கருங் கோட்டுப் புன்னைச
சினை முகம் ஏந்திய இணர்கொள் வாய்க் குடம்பையின்,
எக்கர்ப் புள்ளினம் வெண்மை இடம் மறைக்கும்
சிறை விரி தூவிச் செங் கால் அன்னம்,
குறும் பார்ப்பு அணைக்கும் பெடையொடு வெரீஇ,
சேவலும் இனமும் சூழும்
காவில் மாறித் துயில் அழுங்குதற்கே.

Koviloor Digital Library

துறை விளக்கம் :

தலைவியும் தோழியும் குறியிடத்திற் சென்று தலைவன் வாராமையால்: குறியல்லாத குறிப்பட்டு மீண்டமையைத் தலைமகன் சிறைப்புறம் வந்து நிற்கின்ற பொழுது, தாங்கள் அல்லகுறிப் பட்டதைத் தலைமகனுக்கு உணர்த்துவதற்காகத் தோழி தலைவியிடம் கூறுவாள் போன்று அன்னப் பறவையின் மேல் வைத்துக் கூறியது.

பாடற்பொருள்:

நெடிய சத்தத்தினையும், பெரிய வாயினையும், குழி போன்ற கண்ணினையும், வரிசையாக இல்லாத பற்களையும், வற்றிய நரம்பினையும், தெற்றுதலை உடைய கரிய காலினையும், பனைத் தலை விரிந்தாற் போல விரிந்த மயிரினை உடைய தலை யினையும், விண் புடைத்து நின்ற உடம்பினையும் (விண்வரை நீண்ட) உடைய பேய்கள் பாட்டுப்பாடி சூழ்ந்து நின்று ஆட,

(1 - 5)

சுழன்ற கண்ணினையும், சிறிய நகையினையும், குடம் போன்ற வயிற்றினையும், இரண்டு சங்கக் குழையினையும், குறுகிய தாளினையும் உடைய பூதம் ஆட,

தேவர்கள் எல்லோரும் ஆனந்தமாகக் கண்ணீர் சொரிய, முனிவர்'கள் எல்லாம் வாய் குழற, கல்லவடத் திரள் என்ற கருவியும், அழகிய வாயினை உடைய தண்ணுமை என்னும் கருவியும், ஒருகட் பறையாகிய மொந்தை என்னும் கருவியும், கல்லலகு என்னும் கருவியும், துத்திரி என்னும் கருவியும் முழங்க

(6 - 10)

அணிந்த பாம்பு சுற்ற, கொன்றை மலர் தாதினை உதிர்க்க, பிறைச்சந்திரன் அமுதினைத் துளிர்ப்ப, இவை தங்கிய சடை யானது நிமிரும்படி வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடிய பெருமான் உறையும் கூடல் மாநகரின் பொலிவு போன்று பொலி வினை உடையாய், (பொலிவினை உடைய தலைவியே)

(11 - 16)

நாம் சூழ்ந்து விளையாடுவதற்கு இடமாகிய சோலை யிடத்தில் இடுமணலாகிய மணற்குன்றின் நிறம் தெரியாது

Koviloor Digital Library

மறைக்கும் சிறகினையும், விரிந்த சூட்டினையும், செம்மையாகிய காலினையும் உடைய அன்னச் சேவலும் அதன் இனமும், சிறிய குட்டிகளை அணைக்கும் பெடையோடு அஞ்சி, சூரியன் உதிக்கும் விடியற் காலத்தில், அரும்பாகிய வெண்முத்து அரும்பி. பசிய பொன் மலர்ந்து, பூங்கொத்தாகிய செம்பவளக் கொத்தெல்லாம் காட்டும், இரும்பு பிளவு பட்டாற் போன்ற கரிய கிளைகளை உடைய புன்னை மரத்தின் கொம்புகளிடத்தில், வாயால் எடுத்து வந்த மலரால் இருக்கை அமைத்துக் கொண்ட கூட்டினிடத்தில் துயில் கொள்ளாது, ஆரவாரிப்பதற்கு அவ்விடத்தில் ஏற்பட்ட அலமரல் என்ன என்று யாம் அறிகிலோம் என்று தோழி தலைவியிடம் கூறினாள். (17 - 25)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 172 ஆவது பாடலின் விளக்கவுரையாக அமைகின்றது. முதற் பகுதியில் சிவபெருமான் வெள்ளியம்பலத்தில் ஆடுகின்ற மதுரை நகரத்தின் சிறப்பினைப் போலச் சிறப்பினைக் கொண்ட தலைவி கூறப்பெறுகிறாள். பின்பு புன்னைமரத்தில் இருக்கக் கூடிய அன்னப் பறவைகள் ஆரவாரித்தற்குக் காரணம் யாதோ தெரியவில்லை என்று கூறி அல்லகுறிப்பட்ட நிகழ்ச்சி கூறப் பெறுகிறது. அதாவது தலைவன் இரவுக்குறியில் வரும்பொழுது தான் வந்ததை அறிவிக்க மரத்தின் மேல் கல்லெறிவான். அதனால் மரத்தில் கூடு கட்டியிருந்த பறவைகள் எழுந்து ஆரவாரிக்கும். இதுவே இரவுக் குறியாகும். ஒருமுறை அன்னக் கூட்டங்கள் இவ்வாறு ஆரவாரித்ததால் தலைவன் இரவுக்குறிக்கு வந்து விட்டான் என எண்ணித் தலைவியும் தோழியும் தலைவனைக் காண வருகின்றார்கள். ஆனால் அங்கு தலைவன் வரவில்லை. அவன் வந்து கல்லெறி யாமலேயே பறவைகள் எழுந்து ஆரவாரித்ததால் அல்லகுறிப் பட்டதாயிற்று. இதனையே பறவைகள் ஆரவாரித்தலுக்கு உரிய காரணம் அறிகிலோம் என்று கூறித் தாங்கள் அல்லகுறிப் பட்டதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள். இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாக மதுரை நகரில் வெள்ளியம் பலத்தில் கால் மாறி ஆடிய பெருமை கூறப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ. ம்)

பிறழ்பல் - வரிசையில்லாத பல், செற்றற்கருங்கால் - குட்டையான கருமை நிறமுடைய கால், தாளி - பனைமரம், கானம் - பாடல், தொத்துடன் - கொத்துடன், இரும்புகவைத்தன்ன - இரும்பு பிளவு பட்டது போல் தோன்றும் கிளை போல, துயில் அழுங்குதற்கே - துயிலாது ஆராவாரித்தல்.

34. வேழம் வினாதல்

தன் உடல் அன்றிப் பிறிது உண் கனை இருள்
பகல் வலிக்கு ஒதுங்கிய தோற்றம் போல,
பெரு நிலவு கான்ற நீறு கெழு பரப்பில் -
அண்ட நாடவர்க்கு ஆர் உயிர் கொடுத்த
கண்டக் கறையோன், கண்தரு நுதலோன்,
முன் ஒரு நாளில் நால் படை உடன்று
செழியன் அடைத்த சென்னி பாட
எள் அருங் கருணையின். நள் இருள் நடு நாள்,
அவன் எனத் தோன்றி அருஞ் சிறை விடுத்த
முன்னவன் கூடல் மூதூர் அன்ன -
வெண் நகைச் செவ் வாய்க் கருங் குழல் மகளிர்!
செம்மணி கிடந்த நும் பசும் புனத்து உழையால்,
வாய் சொரி மழைமதத் தழைசெவிப் புழைக் கைக்
குழிகண் பரூஉத் தாள் கூர்ங் கோட்டு ஒருத்தல்,
சினை தழை விளைத்த பழுமரம் என்ன,
அறுகால் கணமும், பறவையும், கணையும்,
மேகமும், பிடியும், தொடர
ஏகியது உண்டேல், கூறுவிர் புரிந்தே.

துறை விளக்கம்:

தலைவன் தினைப்புனத்தின் கண் தினைப்புனத்தைக் காத்துக் கொண்டிருந்த தலைவியிடம் தன்னுடைய காதலை நேரிடையாகக் கூறத் துணியாது, தன் காதலை வெளிப்படுத்தினால் இவள் மறுத்தாலும் மறுத்துவிடுவாள் என எண்ணி, என் காதலை இவள் அறியும் வண்ணம் மறைத்த சொற்களால் சில சொல்லிப் பிறகு காதலை வெளிப்படுத்துவதே நன்று என எண்ணி, வேட்டைத் தொழில் புரிபவன் போலத் தலைவியும் தோழியும் இருக்கு

Koviloor Digital Library

மிடத்திற்குச் சென்று, தன் காதல் தோன்ற இவ்விடத்தில் மத வேழம் (யானை) வரக் கண்டீரோ எனக் கேட்பது.

பாடற்பொருள் :

நிலப்பரப்பில் நிலவை வெளிப்படுத்தி, சூரியனுடைய உடலை அன்றிப் பிற பொருள்களின் உடலையும் மறைக்கின்ற, செறிந்த இருளானது, சூரியனுடைய வலிமைக்கு ஆற்றாது, அவனிடத்தில் இருந்து ஒதுங்கிய தோற்றம் போல,

தேவர்களுக்கு ஆருயிரைத் தான் நஞ்சு உண்டு கொடுத்த தினால், கண்டத்தில் தோன்றுகின்ற கருமை நிறத்தை உடைய வனாய், நெற்றியில் கண்ணை உடையவனாய் விளங்கும் இறைவன், *(1 - 5)*

பாண்டியன் தன்னுடைய நாற் படையால் போர் செய்து, கைது செய்து காவலிடப்பட்ட சோழன் முன்னொரு நாள் பாட, அந்த இருளை உடைய யாமத்தில் பிறர் அறியாமல் பாண்டியன் எனத் தோன்றி, தன்னுடைய கருணையினால் அவனை அருஞ் சிறை விடுத்த, எல்லாப் பொருள்களுக்கும் முன்னவனாகிய இறைவனின், மதுரையாகிய முதிய ஊர் போன்ற சிறப்பினை உடைய, வெள்ளிய சிரிப்பினையும், சிவந்த வாயினையும், கரிய குழலையும் உடைய மகளிரே, *(6 - 11)*

மழை போலச் சொரிகின்ற மதத்தினையும், தாழ்ந்த செவி யினையும், துளையுடைய கையினையும், குழிந்த கண்ணினையும், நெடிய காலினையும், வளைந்த கொம்பினையும் உடைய யானையானது,

இலை தழைத்த கிளையினையும், நன்கு பழுத்த பழங் களைக் கொண்ட மரம் போலக் காட்சிதர, பழ மரத்தைத் தேடி வருகின்ற வண்டின் கூட்டமும் பறவைகளும் போல, அவ் யானையைத் தொடர்ந்து என் அம்பும் - மேகம் போன்ற, பெண் யானையும் வாய்விட்டு அலறி உம்முடைய மாணிக்கங்கள் கிடந்த தினைப் புனத்திடத்து வரக் கண்டதுண்டோ? கூறுவீராக.

(12- 18)

Koviloor Digital Library

(வி-ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **52** ஆவது பாடலுக்கு விளக்கவுரையாக அமைகிறது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்புக்களாக நஞ்சை உண்டு தேவர்களின் உயிர்களைக் காத்து, கழுத்தில் கருமை நிறம் கொண்ட செய்தியும், பாண்டியன் சிறை வைத்த சோழனின் பாடலைக் கேட்டு, அவனைச் சிறையிலிருந்து விடுவித்ததும் ஆகியவை கூறப்பெற்றுள்ளன. பின்பகுதியில் யானையைப் பற்றிய சிறப்புக் கூறப்பெற்று தன்னுடைய அம்பு பாய்ந்த யானையும், பிடியும் தினைப் புனத்திற்குள் வந்தனவோ என்று தலைவன் கேட்பதாகப் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்)

அண்டநாடவர் - தேவர்கள், செழியன் - பாண்டியன், சென்னி - சோழன், புனத்து உழையால் - தினைப் புனத்திற்குள்ளே, ஒருத்தல் - யானை.

35. நலம் புனைந்து உரைத்தல்.

அருள் தரும் கேள்வி அமையத் தேக்க,
பற்பல ஆசான் பாங்கு செல்பவர் போல்,
மூன்று வகை அடுத்த தேன் தரு கொழு மலர்
கொழுதிப் பாடும் குணச் சுரும்பினங்காள்!
உளத்து வேறு அடக்கி, முகமன் கூறாது,
வேட்கையின் நீயிர் வீழ் நாள் - பூவினத்துள் ---
கார் உடல் பிறை எயிற்று அரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப் பகை சுமந்த
பழ உடல் காட்டும் தீராப் பெரும் பழி,
பனி மலை பயந்த மாதுடன், தீர்த்தருள்
பெம்மான் வாழும் பெரு நகர்க் கூடல்
ஒப்புறு பொற்றொடிச் சிற்றிடை மடந்தைதன் -
கொலையினர் உள்ளமும் குறைகொள இருண்டு,
நானம் நீவி, நாள்மலர் மிலைந்து,
கூடி உண்ணும் குணத்தினர் கிளைபோல்
நீடிச் செறிந்து, நெய்த்து உடல் குளிர்ந்த
கருங் குழற் பெரு மணம் போல
ஒருங்கும் உண்டோ பேசுவிர் எமக்கே!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைவி தன் சொல்லை விரும்பி தலைவன் வருந்துவதைக் கண்டு சிறிது முறுவல் செய்ய, தலைவன் அதனைக் கண்டு தன் வருத்தம் நீங்கித் தனது மகிழ்ச்சியால் வண்டுகளைப் பார்த்து, உமது அகன்ற மருதநிலத்து மற்றும் குறிஞ்சி நிலத்து இவள் வாய் போல மணம் பொருந்திய ஆம்பல் பூக்கள் உளவோ என வினவுதல்.

பாடற்பொருள்:

கற்ற அறிவோடு நல் அருளை விளைவிக்கும் கேள்வியால் ஆகிய அறிவினை நிறைத்துக் கொள்ளப் பலப்பல ஆசிரியரிடத்துச் செல்பவர் போல, உண்ட தேன் அன்றி பல மலர் தரும் தேனை உண்டு அமைவதற்காகக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ என்னும் மூன்று வகையான கொழு மலர்களைக் கோதி, ஒலிக்கின்ற குணத்தினை உடைய வண்டினங்களே, *(1 - 5)*

ஒரு நிலத்து வண்டாயினும் தன் உள்ளத்தில் கண்டவை இருக்க அவற்றைப் பற்றி விரும்பி அதிகமான முகமன் சொல்லாது, (உள்ளத்தில் ஒன்றிருக்க வெளியில் வேறு சொல்லாது) நீங்கள் தேன் உண்ணத் தந்தும், நாள்மலர்க் கூட்டத்துள், *(5 - 6)*

கரிய உடலினையும், பிறை போன்ற நெற்றியினையும், உடைய அரக்கனைக் கொன்றதால் வச்சிராயுதத்தை உடைத்தாகிய பெரிய கையினை உடைய இந்திரன், சுமந்திருக்கும் பழைய வடிவினைக் காட்டுதற்குக் காரணமாகிய, தீராத அவனுடைய பெரும் பழியினை, இமயமலை பெற்ற உமையவளுடன் கூடித் தீர்த்து அருள் செய்த, இறைவனாகிய சிவபெருமான் வாழும் பெரிய நகரமாகிய மதுரையைப் போலும், *(7 - 11)*

பொன்னாற் செய்த கைவளையல்களையும், சிறிய இடையினையும், உடைய தலைவியினது - கொலை செய்வாரது உள்ளத்தில் உள்ள இருட்டானது குறையும்படி மிக்க இருண்டு, தலைமயிரில் பூசும் புழுகினைப் பெற்று(தலையில் பூசும் தைலம்) காலத்திற்கு ஏற்ற மலர்களை அணிந்து - விருந்தினரோடு உண்ணும் குணத்தை உடையார் சுற்றம் நீண்டாற் போல் நீண்டு, செறிந்து, நெய்யால் குளிர்ச்சி பெற்ற கரிய கூந்தலில் உள்ள வாசம்

Koviloor Digital Library

போல, மணக்கும் பூக்கள் உண்டாயின் நீங்கள் எமக்குச் சொல்வீர்களாக. *(12 - 18)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் *11* ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் தலைவன் வண்டுகளைப் பார'த்து அவற்றின் பெருமை கூறி, அவை சென்று தேன் உண்ணுகின்ற மலர்களில் தலைவியின் கூந்தலில் காணும் வாசம் போல, நறுமணம் உண்டோ? என்று கேட்பதாகப் பொருள் அமைந்துள்ளது. சிவபெருமானின் சிறப்பாக இந்திரனின் பழி தீர்த்த பெருமை கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

தேக்க - உள்ளத்தில் அமைக்க, மூன்று வகை - மரம், கொடி, நீர் என்ற மூன்று வகையான பூக்கள், சுரும்பு - வண்டு, வேறடக்கி - மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு, நானம் - புழுகு.

36. உலகின்மேல் வைத்து உரைத்தல்

இருளொடு தாரகை இரண்டினை மயக்கி,
குழல் என, மலர் என, மயல்வரச் சுமந்து,
வில்லினைக் குனித்து, கணையினை வாங்கி,
புருவம், கண் என, உயிர் விடப் பயிற்றி,
மலையினைத் தாங்கி, அமுதினைக் கடைந்து
முலை என, சொல் என, அவா வர வைத்து,
மெய்யினைப் பரப்பி, பொய்யினைக் காட்டி,
அல்குல், இடை என, நெஞ்சு உழலக் கொடுத்து,
முண்டகம் மலர்த்தி, மாந் தளிர் மூடி,
அடி என, உடல் என, அலமரல் உறீஇ--
(மூரி வீழ்ந்த நெறிச் சடை முனிவர்,
சருக்கம் காட்டும் அரு மறை சொல்லி,
உள்ளம் கறுத்து, கண் சிவந்து, இட்ட
மந்திரத்து, அழல் குழி தொடு வயிறு வருந்தி,
முன்பின் ஈன்ற, பேழ்வாய்ப் புலியினை,
கைதை முள் செறித்த கூர்எயிற்று அரவினை,
கார் உடல் பெற்ற தீ விழிக் குறளினை -
உரி செய்து உடுத்து, செங்கரம் தரித்து,

Koviloor Digital Library

செம்மலர் பழித்த தாட் கீழ்க் கிடத்தி,
திருநடம் புரிந்த தெய்வ நாயகன்,
ஒரு நாள் மூன்று புரம் தீக் கொளுவ,
பொன்மலை பிடுங்கி, கார்முகம் என்ன
வளைத்த ஞான்று, நெடு விண் தடையக்
கால் கொடுத்தன்ன கந்திகள் நிமிர்ந்து,
நெருக்கு பொழில் கூடல் அன்ன) செம் மகளிர்
கண் எனும் தெய்வக் காட்சியுள் பட்டோர்,
வெண்டபொடி, எருக்கம், என்பு, பனை, கிழியினை,
பூசி, அணிந்து, பூண்டு, பரி கடவி,
கரத்தது ஆக்கி, அந் நோ
அருத்தி மீட்பர் - நிலை வல்லோரே.

துறை விளக்கம்:

தலைவியின் காதலைப் பெறாது நின்ற தன் ஆற்றாமையை வழியாகக் கொண்ட தலைவன், "ஆடவர் தம் உள்ளமாகிய மீன், மகளிரது கண்ணாகிய வலைப்பட்டால் அதனை மீளப் பெறுதற்கு வேறு உபாயம் இல்லை. ஆதலால் மடல் ஊர்ந்து அதனைப் பெறுவர்" என்று தன் கருத்தை உலகின்மேல் வைத்துக் கூறுதலாகும்.

பாடற்பொருள்:

இருளையும், நட்சத்திரங்களையும் ஆகிய இரண்டினையும் மயக்கி, கூந்தல் எனவும், மலர் எனவும் சுமந்து, பார்த்தவர்கள் உயிரை விடும்படி வில்லினை வளைத்து, அம்பினைத் தொடுத்துப் புருவம் எனவும், கண் எனவும் பயிற்றி, முலை என்று சொல்லு கின்ற மலையினைத் தாங்கி, சொல் என்ற அமுதினைக் கடைந்து வைத்து, அல்குல் என்னும் உண்மையினைக் காட்டி, இடை இல்லை என்னும்படி பொய்யினைக் காட்டி, தம்மை நோக்கினார் நெஞ்சத்தைத் தடுமாறப் பண்ணி, அடி என்ற தாமரையை மலரப் பண்ணி, மேனி என்னும் மாந்தளிரைப் போர்த்து, நோக்கியவரை அலமரல் பண்ணி,(மயக்கங்களைச் செய்யும்) *(1 - 10)*

பெருமையுடன் வளர்த்த, பொருந்திய சடையினை உடைய தாருகாவனத்து முனிவர்கள் - கண் சிவப்ப உள்ளம் வெகுண்டு, ஓமக்குண்டம் தோண்டி அதனிடத்து சருக்கம் காட்டும் அரிய வேத மந்திரத்தைச் சொல்லி இட்ட, ஓமத்தீயில் உண்டாக்கிய

Koviloor Digital Library

(முனிவர்கள்) அரிய பெரிய வாயினை உடைய புலியினை உரித்து உடுத்தி,

தாழைமுள்ளினைச் சேர்த்து வைத்தாற் போலக் கூரிய பல்லினை உடைய பாம்பினைச் செம்மையான கரத்தில் அணிந்து, கரிய உடலினையும் நெருப்புப் போன்ற கண்ணினையும் கொண்ட, முயலகனை, செந்தாமரையைப் பழித்த தன் திருவடியின் கீழே கிடத்தி, எல்லோருக்கும் அருளை வழங்குகின்ற, திருநடம் செய்த தேவர்களுக்குத் தலைவனாகிய இறைவன், *(11 - 20)*

மூன்று புரங்களையும் ஒருநாளில் தீப்பற்ற மேருமலையைப் பிடுங்கி வில்லாக வளைத்த பொழுது, நீண்ட ஆகாயம் வீழாது தடுக்கக் காலாகக் கொடுத்தாற் போல, கமுக மரங்கள் உயர்ந்து நெருங்கி நின்ற சோலையை உடைய மதுரையைப் போன்ற, அழகிய பெண்களுடைய கண்ணாகிய தெய்வத்தின் காட்சியில் அகப்பட்டோர், *(21 - 26)*

முன்னே நிற்கமுடியாதவர் உள்ளத்தைத் திரும்பப் பெறுவதற்கு வேறு உபாயம் இல்லாதவிடத்து, திருநீற்றைப் பூசி, எருக்கம்பூவை அணிந்து, எலும்பினைப் பூண்டு, குதிரை எனப் பனைமடலைச் செலுத்தி, உருவம் எழுதிய கொடியைக் கையில் பிடித்து, அவரைப் பெறவேண்டும் என்னும் வருத்தத்தை உடைய உள்ளத்தை தன்வயமாக்க முயல்வர் என்று தலைவன், தான் மடல் ஏறப்போவதை உலகின் மேல் வைத்துக் கூறினான். *(27 - 30)*

(வி- ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 74 ஆவது பாடலுக்கு விளக்கவுரையாக அமைகிறது. இப்பாடலில் முதற்பகுதியில் பெண்களின் (தலைவியின்) அங்கங்கள் மயக்கத்தைச் செய்ய, அவர்களுடைய கண்களில் அகப்பட்ட ஆடவர் தன் உள்ளத்தைத் திரும்பப் பெறுவதற்கு, மடல் ஊர்தலே சிறந்த வழியாகும் என்று கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இதில் சிவபெருமானின் சிறப்பாகத் தாருகாவனத்து முனிவர்களின் யாகத்தில் இருந்து தோன்றிய புலியின் தோலைப் போர்த்தியவர் என்ற சிறப்பும், முப்புரம் எரித்த நிகழ்ச்சியும் கூறப்பெற்றுள்ளன.

Koviloor Digital Library

(சொ - ம்):

தாரகை - நட்சத்திரம், மயல் - மயக்கம், உழல - வருந்த, முண்டகம் - தாமரை, சருக்கம் - சருகு (சமித்து), கைதை - தாழைச் செடி, குறள் - பூதம் (முயலகன்), கந்திகள் - கமுகமரம், அந்நோ - அந்நோய்.

37. நாண் இழந்து வருந்தல்

மை குழைத்தன்ன தொள்ளிஅம் செறுவில்,
கூர்வாய்ப் பறை தபு பெருங் கிழ நாரை,
வஞ்சனை தூங்கி , ஆரல் உண்ணும்
நீங்காப் பழனப் பெரு நகர்க் கூடல்,
கரம் மான் தரித்த பெருமான் இறைவன்
பொன் பழித்து எடுத்த இன்புறு திருவடி
உளம் விழுங்காத களவினர் போல, என்
உயிரொடும் வளர்ந்த பெரு நாண் - தறியினை,
வெற்பன் காதற்கால் உலை வேலையின் -
வலி உடைக் கற்பின் நெடு வளி சுழற்றிக்
கட்புலன் காணாது, காட்டை கெட உந்தலின்,
என்போல் , இந் நிலை, ஆறுவரப் படைக்கும்
பேறு , ஆங்கு ஒழிக, பெரு நாண் கற்பினர்
என் பேறு உடையர் ஆயின்,
கற்பில் தோன்றாக் கடன் ஆகுகவே.

துறை விளக்கம்:

தலைவனுடன் உடன் போவதற்கு உடன்பட்ட தலைவி அதற்குரிய காரணத்தைக் கூறுதல். அதாவது தன்னை விட்டு என்றும் நீங்காதிருக்கின்ற நாணம், கற்பிற்கு முன்னே எதிர் நிற்க மாட்டாது. எனவே கற்பின் நிலைமை கருதி நாணத்தை விட்டு வருந்துதல் ஆகும்.

பாடற்பொருள்:

மையினைக் குழைத்தாற் போன்ற கருஞ்சேற்றினை உடைய வயலினிடத்தே, பறக்க முடியாத ஒரு கிழட்டு நாரை வஞ்சனை யுடன் தூங்குவது போல் தூங்கியிருந்து, வாய்த்தவழி கூரிய

Koviloor Digital Library

வாயினால் ஆரல் மீனை நுகர்தற்கு இடமாகிய மருதநிலம் சூழ்ந்த பெரிய நகரமாகிய மதுரையிடத்து, *(1 - 4)*

கையில் மானைத் தரித்த பெருமானாகிய இறைவன், இரணியவன்மனின் செல்வத்தைப் பழித்த, இன்பத்தைப் பெறுவதற்குக் காரணமாகிய திருவடியை, உள்ளத்தில் கொள்ளாத கூடா ஒழுக்கத்தை நீக்குதல் போல, *(5 - 7)*

என் உயிரோடு கூடி வளர்ந்த நாணாகிய தூணினைத் தலைவன்மேல் யான் வைத்த காதலாகிய காற்று வீசும் போது, அந்நாணினும் வலிமை உடைய கற்பாகிய பெருங்காற்று சுற்றி. என்னிடத்தில் காணாது, காடு என்னும் இடத்தில் கெடும்படிப் புறத்துத் தள்ளுதலால், என்னைப் போல நாணழிய நின்றவர் படைக்கப் பட்டதனால், இனிமேல் வரும் பிறவிகளில் பிறத்தல் ஒழிக. என்னைப் பெற்றவர் பெரு நாணோடு கூடிய கற்பினை உடையாராயின், கற்பிற் தோன்றாக் கடன் ஆகுகவே. *(8 - 15)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 208 ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் தலைவி தன்னுடைய பெரிய நாணாகிய தூணினைக் கற்பென்ற காற்று புறத்தே தள்ளி விட்டதால், என்னுடைய நாணம் அழிந்தது. இத்தகைய பிறப்பு இனிவரும் பிறப்புகளில் அமைய வேண்டாம் என்று நாணம் அழிந்ததற்காக வருந்துவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்பாக அவரின் திருவடிப் பெருமை கூறப்பெற்றுள்ளது.

(சொ. ம்):

செரு - வயல், பறைதபு - பறக்கமுடியாத, ஆரல் - மீன், பொன்பழித்து - இரணியவன்மனின் செல்வம் பழிக்கப்பட்ட திருவடி, தறி - தூண், கால் - காற்று, வளி - சூறாவளி.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45857

Koviloor Digital Library

38. தோழி இயற்பழித்து உரைத்தல்

வடமீன் கற்பின் எம் பீடு கெழு மடந்தை,
பெருங் கடல் முகந்து வயிறு நிறை நெடுங் கார்
விண் திரிந்து முழங்கி வீழாதாகக்
கருவொடு வாடும் பைங் கூழ் போல,
கற்பு நாண் மூடிப் பழங்கண் கொள்ள -
உயர்மரம் முளைத்த ஊரி போல,
ஓர் உடல் செய்து மறு மனம் காட்டும்
மாணிழை - மகளிர் வயின் வைகுதலால்,
(கரு முகிற் கனி நிறத் தழற்கண் பிறை எயிற்று
அரி தரு குட்டி ஆய பன்னிரண்டினை,
செங்கோல் முளை இட்டு, அருள்நீர் தேக்கி,
கொலை களவு என்னும் படர் களை கட்டு,
தீப் படர் ஆணை வேலி கோலி,
தருமப் பெரும் பயிர் உலகு பெற விளைக்கும்
நால் படை வன்னியர் ஆக்கிய பெருமான் -
முள் உடைப் பேழ்வாய்ச் செங் கண் வராலினம்
வளை வாய்த் தூண்டிற் கருங் கயிறு பரிந்து,
குவளைப் பாசடை முண்டகம், உழக்கி,
நெடுங் கால் பாய்ந்து, படுத்த ஒண் தொழில்
கருங்கை வழி அடைக்கும் பெருங் கழிப் பழனக்
கூடற்கு இறைவன் - இரு தாள் விடுத்த
பொய்யினர் செய்யும் புல்லம் போல,)
பேரா வாய்மை ஊரன்,
தாரொடு மயங்கி, பெருமையும் இலனே.

துறை விளக்கம்:

ஊடல் தீர்க்கும் வாயிலாகப் பாணன் வரக்கண்ட தோழி, தலைவி வருந்தும் வண்ணம் தலைவன் அயலாரிடத்து (பரத்தையரிடத்து) இன்பம் பெறுதலால் உம்முடைய தலைவன் தகவிலன் எனத் தலைவனைத் தோழி இயற்பழித்துக் கூறுதல்.

பாடற்பொருள்:

பெரிய கடலில் நீரை முகத்தற்குக் காரணமாகிய வயிறு நிறைந்த நெடிய மேகம் விண்ணில் இயங்கி, முழங்கி மழையைப் பெய்யாது நிற்க, (பெய்திட) கருவோடு கூடி வாடும் பயிர்போல,

Koviloor Digital Library

அருந்ததியின் கற்பினை உடைய எம் தலைவி, பெருமை பொருந்திய கற்பும் நாணும் மேலிடாது மெலிய, (1 - 5)

வாய்மை தவறாத ஊரனாகிய தலைவன் இன்பத்தால் மயங்கி (23 - 24)

உயரமான மரத்தில் முளைத்த புல்லுருவி போலக் கூடி இன்பம் துய்த்த பரத்தையுடன், வேறு படாது ஒன்றுபட்டு, வேறாகிய பொருளில் மனம் வைக்கும் மாட்சி உடைத்தாகிய ஆபரணங் களை உடைய பரத்தையர்க்கு அருள் செய்தலால், (6 - 8)

கரிய மேகம் போல நிறத்தினையும், தீப் போலும் கண்ணி னையும், பிறை போல் வளைந்த கொம்பினையும் உடைய பன்றிக்குட்டிகள் பனிரெண்டினையும் காத்து, (9 - 10)

செங்கோலாகிய முளையினை வித்தி, அருளாகிய நீரை நிறைத்து, கொலை, களவாகிய களையைப் பறித்து, திக்கெங்கும் செல்லும் ஆணையாகிய வேலி இட்டு, தருமமாகிய பெரும் பயிரினை, உலகமாகிய பெரு நிலத்தில் பயன்பெற விளைவிப் பவன் ஆகிய, நான்கு படைகளை உடைய வன்னியராகிய பெருமான் (11 - 15)

முள்ளினை உடைய வாயினையும், சிவந்த கண்ணினையும் உடைய வறால் மீன்களின் கூட்டங்கள், வளைந்த வாயினை உடைய தூண்டிலில் உள்ள பெருங் கயிற்றினை அறுத்து, குவளைச் செடியின் பசிய இலைகளையும், தாமரைப்பூவையும் கலக்கி, நெடிய வாய்க்கால்களில் பாய்ந்து குதித்து, நீரில் பாய்தலாகிய தொழிலை உடைய மதகின் வழியை அடைக்கும் மிகுந்த சிறப்பினை உடைய மருதநிலம் சூழ்ந்த மதுரைக்கு இறைவனும் ஆவான். அவனுடைய திருத்தாள்களில் பற்று விட்டதனால் வந்த கேண்மைக் குணம் கொண்ட பொய்யினர்க்குப் பெருமை இல்லாதது போலத் தலைவனும் பெருமை இல்லாதவன் ஆயினான். (16 - 22)

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 376 ஆவது பாடலின் விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் மழையில்லாத பயிர்

Koviloor Digital Library

போல் தலைமகள் மெலிய, தலைவன் பரத்தையரிடம் இன்பம் துய்த்தான் என்றும், அத்தகைய இன்பம் துய்த்தவன் சிவபெருமானின் திருவடியைப் பற்றாதவர் பெற்ற பெருமை இன்மை போல் பெருமை இலன் ஆயினான் என்று தோழி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமான் பெருமையாகப் பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்த சிறப்பும், அவருடைய ஆட்சிச் சிறப்பும் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

வடமீன் - அருந்ததி, பைங்கூழ் - பயிர், பழங்கண் - துன்பத்தால் மெலிய, ஊரி - புல்லுருவி, மறுமனம் - பொருளாசையால் மனம் வேறுபடுதல், தீப்படர் - திசைதோறும் பரவுகின்ற, சுருங்கை - நீர்வரும் மதகு.

39. பொழுது கண்டு இரங்கல்

கோடிய கோலினன் செருமுகம் போல,
கனைகதிர் திருகிக் கல் சேர்ந்து முறை புக,
பதினெண் கிளவி ஊர் துங்கியபோல்,
புட் குலம் பொய்கைவாய் தாழ்க்கொள்ள,
வேள் சரத்து உடைகுநர் கோலம் நோக்கி,
இருள்மகள் கொண்ட குறுநகை போல,
முல்லையும், மௌவலும், முருகு உயிர்த்து, அவிழ,
தணந்தோர் உளத்தில் காமத்தீப் புக,
மணந்தோர் நெஞ்சத்து அமுத நீர் விட,
அன்றில் புற் சேக்கை புக்கு, அலகு பெடை அணைய,
அந்தணர் அருமறை அருங்கிடை அடங்க,
முது கனி, மூலம், முனிக்கணம் மறுப்ப,
கலவையும், பூவும்,தோள், முடி, கமழ,
விரிவலை நுளையர் நெய்தல் ஏந்தி,
துத்தம், கைக்கிளை,அளவையின் விளைப்ப,
நீரரமகளிர் செவ் வாய் காட்டிப்
பசுந் தாட் சேக் கொள் ஆம்பல் மலர,
(தோளும் இசையும், கூறிடும் கலையும்,
அருள் - திரு எழுத்தும், பொருள் - திரு மறையும்,
விரும்பிய குணமும், அருந் திரு உருவும்,
முதல் என் கிளவியும், விதமுடன் நிரையே -

Koviloor Digital Library

எட்டும், ஏழும், சொற்றன ஆறும்,
ஐந்தும், நான்கும், அணிதரு மூன்றும்
துஞ்சல் இல் இரண்டும், சொல் அரும் ஒன்றும் -
ஆர் உயிர் வாழ அருள் வர நிறுத்திய,
பேர் அருட் கூடல் பெரும்பதி நிறைந்த)
முக்கட் கடவுள் முதல்வனை வணங்கார்
தொக்க தீப் பெரு வினை சூழ்ந்தன போலவும்,
துறவால் , அறனால், பெறல் இல் மாந்தர்
விள்ளா அறிவும் உள்ளமும் என்னவும்,
செக்கர்த் தீயொடு புக்க நல் மாலை!
என் உயிர் வளைந்த தோற்றம் போல,
நாற்படை வேந்தன் பாசறை -
யோர்க்கும் உளையோ? மனத் திறன் ஓதுகவே.

துறை விளக்கம்:

ஒரு மாலைப் பொழுதில் கதிரவன் மறைந்தான், தலைவனோ பிரிந்து சேண்மையில் உள்ளான், மீன் உண்ட அன்னங்களும் தம் சேக்கை அடைந்தன. இனி நான் எவ்வாறு ஆற்றுவேன் என்று மாலைப்பொழுது கண்டு மயங்கி இரங்கித் தலைவி கூறியது.

பாடற்பொருள்:

மாறுபட்ட கொடுங்கோலுடைய அரசன் போர்க்களத்தில் வீழ்ந்தது போல, நெருங்கிய கிரணங்களைக் கொண்ட சூரியன் மாறுபட்டு அஸ்தமான கிரியை சேர்ந்து முறையே புகவும், பதினெட்டு மொழிச் சொற்களும் ஓரிடத்து அடங்கியது போல, பல பறவைக் கூட்டங்கள் பொய்கையினிடத்துத் துயிலுதலாகிய முயற்சியைக் கொள்ளவும், மன்மத பாணங்களினால் தளர்பவர் களாகிய மாதர்கள் கொண்ட அழகைப் பார்த்து இருளாகிய பெண் கொண்ட இளநகை போல முல்லை அரும்பும், மல்லிகை அரும்பும் மணம் வீசி மலரவும், தலைவனைப் பிரிந்த பெண் களின் மனத்தில் காமமாகிய நெருப்புப் புகவும், தலைவனைக் கூடிய மாதரது மனத்தில் இனியநீர் சுரக்கவும், அன்றில் பறவைகள் பனைமரத்தில் கட்டிய கூட்டில் புகுந்து, அழகிய மூக்கினை உடைய தத்தம் பெண் பறவைகளைத் தழுவி உறங்கவும், (1 - 10)

Koviloor Digital Library

அந்தணர் வேதங்களைக் கூறுகின்ற ஒலி அடங்கவும், கனிந்த பழங்களையும், கிழங்குகளையும் முனிவர் கூட்டங்கள் உண்ணுவதற்குரிய காலம் அன்று என மறுக்கவும், சந்தனக் குழம்பும் மலர் மாலைகளையும் தோளினும், முடியினும் அணிந்து அவை மணம் கமழ, விரிந்த வலையினை உடைய நெய்தல் நில மக்கள் நெய்தல் பறையைத் தாங்கித் துத்தம் என்னும் ஒலியையும், கைக்கிளை என்னும் ஒலியையும் அளவாக எழுப்பவும், நீரரற மகளிரது சிவந்த வாய் போல் காட்டிப் பசிய தாளினையும், சிவந்த நிறத்தையும் கொண்டிருக்கின்ற ஆம்பல் மலர் விரியவும், *(11 - 17)*

தோள்களும், இசைகளும், சொல்லப்படுகின்ற கலைகளும், அருளாகிய அளவுள்ள எழுத்துக்களும், பொருளை உடைய சிறப் புடைய மறைகளும், யாவரும் விரும்பும் குணங்களும், அருமை யாகிய அழகிய வடிவமும், இவை முதலாகிய எட்டுச் சொற் களும் முதலில் எட்டாகவும், பின் ஏழாகவும், சொல்லின் ஆறாகவும், ஐந்தாகவும், நான்காகவும், அணிமை தரும் மூன் றாகவும், கெடாத இரண்டாகவும், சொல்லுதற்கரிய ஒன்றாகவும், அரிய உயிர் பரப்புகள் உடலோடு வாழ்ந்திருப்ப அருள் வருமாறு நிலை பெறச் செய்த, கருணை மிக்க, மதுரை என்னும் பெரிய நகரத்தில் நிறைந்திருக்கின்ற முக்கண் கடவுளாகிய இறைவனைத் தொழாதவரை அவர்தம் பெருவினைகள் மூடிக்கொண்டாற் போலவும், *(18 - 28)*

துறவினாலும், இல்லறத்தினாலும் பயனைப் பெறாத மனிதர்களது வெளிப்படாத அறிவும், விளக்கம் இல்லாத மனமும் போலவும், செவ்வானமாகிய அக்கினியோடு புகுந்த நல்ல மாலைக் காலமே *(29 - 31)*

என் உயிரை நீ சூழ்ந்த காட்சி போல, நால்வகைச் சேனை களை உடைய அரசனையும், அவனின் பாசறையில் உள்ளோ ரையும் (தலைவனையும்) நீ சூழ்ந்து கொண்டனையோ? உன் மனக் கூறுபாட்டைக் கூறுவாயாக என்று தலைவி மாலை நேரத்தைப் பார்த்து இரங்கிக் கூறினாள். *(32 - 34)*

Koviloor Digital Library

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 188 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் மாலை நேரத்து நிகழ்வுகள் தலைவியால் முதற் பகுதியில் கூறப்பெற்று, அடுத்த பகுதியில் சிவபெருமானின் அருள் உள்ளம் அறிவிக்கப் பெற்று இறுதியில் தன்னைச் சூழ்ந்து வருத்துகின்ற மாலை நேரம், தன்னைப் பிரிந்து தற்பொழுது அரசனின் பாசறையில் இருக்கின்ற தலைவனையும் வருத்துகின்றதோ? என்று தலைவி கேட்பதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்பாக எட்டுவகையான சொற்களை உலகத்தில் வாழும் உயிர்கள் உடலோடு வாழ்வதற்கு அருளுகின்ற இறைவன் என்று குறிக்கப் பெற்றுள்ளது.

(சொ - ம்)

கோடிய கோல் - கொடுங்கோல், கல் சேர்ந்து - அஸ்தமான மலையைச் சேர்ந்து, பதினெண்கிளவி ஊர் - பதினெட்டு மொழி களைப் பேசுகின்ற மக்கள், மௌவல் - மணமுல்லை, முதுகனி - நன்கு பழுத்த பழம், மூலம் - கிழங்கு, நீரரமகளிர் - நீரிடத்து வாழும் தெய்வப் பெண்கள்.

40. மா விரதியரொடு கூறல்

நிலவு பகல் கான்ற புண்ணிய அருட்பொடி
இரு வினை துரந்த திருவுடல் மூழ்கி,
நடு உடல் வரிந்த கொடிக்காய்ப் பத்தர்,
சுத்தி அமர் நீறுடன், தோள்வலன் பூண்டு,
முடற்கு வீழ் அன்ன வேணி முடி கட்டி,
இரு மூன்று குற்றம் அடியறக் காய்ந்து, இவ்
ஆறு எதிர்ப்பட்ட அருந் தவத் திருவினிர்!
'தணியாக் கொடுஞ் சுரம் தரும் தழல் தாவிப்
பொன் - உடல் தேவர் ஒக்கலொடு மயங்கி,
கொண்மூப் பல் திரைப் புனலுடன் தாழ்த்தி,
பொதுளிய தருவினுள் புகுந்து, இமையாது,
மருந்து பகுத்து உண்டு. வல் உயிர் தாங்கும்
வட்டை வந்தனை!' என, வழங்கு மொழி நிற்க,
'தாய் கால் தாழ்ந்தனள், ஆயம் வினவினள்,

Koviloor Digital Library

பாங்கியைப் புல்லினள், அயலும் சொற்றனள்,
மக்கட் பறவை பரிந்து உளம் மாழ்கினள்,
பாடலப் புதுத் தார்க் காளைபின் ஒன்றால்
தள்ளா விதியின் செல்குநள்' என்று -
தழல்விழிப் பேழ்வாய்த தரக்கின் துளி முலை,
பைங் கண் புல்வாய், பால் உணக் கண்ட
அருள் நிறை பெருமான், இருள் நிறை மிடற்றோன்,
மங்குல் நிரை பூத்த மணி உடுக் கணம் எனப்
புன்னை அம் பொதும்பர்ப் பூ நிறை கூடல்,நும்
பொன் அடி வருந்தியும் கூடி-
அன்னையர்க்கு உதவல் வேண்டும் இக் குறியே.

துறை விளக்கம்:

தலைவனும் தலைவியும் உடன்போக்குச் சென்ற காலத்து, எதிரே வந்த விரதியரிடம் தலைவி தன்னைப் பற்றி அன்னையரிடம் கூறுங்கள் என்று வினவிக் கூறியதாகும்.

பாடற்பொருள்:

சந்திர, சூரியரின் ஒளியை வீசி நின்ற தூய்மையான அருளின் கவசமாக அணியத் தக்க திருநீற்றினால் - நல்வினை தீவினை களை ஒட்டிய திருவுடல் மூழ்கப் பெற்று,

உடலின் நடுவில் கட்டிய சுரைக்காய் ஆகிய கமண்டலத்தைப் பரிசுத்தம் உள்ள திருநீற்றுப் பையோடு தோளில் மாட்டி,

விழுது போன்ற சடையை முடியாக முடித்து, ஞானா வரணியம் முதலான எட்டுக் குற்றங்களையும் முதலறக் கெடுத்து, இவ்வழியில் எதிரப்பட்ட செயற்கரிய தவத்தை உடையீர், *(1-7)*

வெப்பம் தணியாத கொடிய இப்பாலை நிலமானது தருகின்ற அக்கினியானது மேல் எழுந்து தேவர் உலகம் செல்ல, பொன் னிறமான உடலை உடைய தேவர்கள் தம்சுற்றத்துடன் வெப்பத் தால் மயக்குற்று மேகங்களைப் பல அலைகளை உடைய ஆகாய கங்கையுடன் தம் உலகின் கீழ் இருத்தி, நன்றாகத் தளிர்த்த கற்பகச் சோலையுள் புகுந்து, கண்கள் இமையாமல் அமிழ்தத்தைத் தம்முள் பகுத்துண்டு தமது வலிய உயிரைத் தாங்கும்படி செய்த, வெப்பத்தை உடைய பாலை வழியில் நீ ஏன் வந்தாய் என்று நீவீர் என்னை உபசரிக்கின்ற முகமன் முறை ஒழிக. *(8 - 13)*

Koviloor Digital Library

புதிய பாதிரி மலர்மாலை அணிந்த காளைப் பருவத்தினோடு, எவ்வகைப் பரிகாரத்தாலும் நீக்க முடியாத ஊழின் காரணமாகத் தலைவி பாலைநிலத்தில் செல்கின்றாள் என்றும், (17 - 18)

தாயினது பாதங்களை வணங்கினாள் என்றும், தன் ஆயத்தில் உள்ளாரையும் வினவினாள் என்றும், தோழியைத் தழுவினாள் என்றும், மற்றையோர்க்கு உபசாரம் சொல்லினாள் என்றும், தாம் வளர்த்த கிளி முதலிய பறவைகளை நினைந்து இரங்கிக் கூறி மயங்கினாள் என்றும்,

கனல் வீசுகின்ற விழியினையும், பெரிய வாயினையும் உடைய புலியினது முலையின் கண் பசிய கண்களை உடைய மான்கன்று பால் உண்ணும்படி அரசியல் செய்தருளிய அருள் நிறைந்த எம் பெருமான் - இருள் மலிந்த கண்டத்தினை உடையோன், அவனது ஆகாயத்தில் நிறைவாகத் தோன்றிய அழகுள்ள நட்சத்திரங்களைப் போல, புன்னைச் சோலைகளில் மலர்கள் பூத்திருக்கும் மதுரைக்கு, அழகிய தன்னுடைய திருவடி வருந்தினாலும், போய்ச் சேர்ந்தாள் என்றும் எம் அன்னை மார்களுக்கு நான் கூறிய இந்நிகழ்வுகளை எல்லாம் நீவீர் சொல்லி உதவ வேண்டும் என்று உடன்போக்கில் சென்ற தலைவி எதிர்ப்பட்ட விரதியரிடம் வினவிக் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **242** ஆவது பாடலாகிய விரதியரை வினாவல் என்ற துறைக்கு உரிய பாடலாகும். ஆனால் திருக்கோவையாரில் விரதியரை நோக்கிச் செவிலி கூறிதாகப் பொருள் அமைந்துள்ளது. இங்கோ உடன்போக்குச் சென்ற தலைவி கூறியதாகப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் விரதியரைப் பற்றிய செய்தி முதல் பகுதியிலும், பாலைவனத்து வெம்மை பற்றிய செய்தி அடுத்தும், பாடலின் இறுதியில் தலைவி உடன்போக்குச் சென்ற செய்தியும் கூறப்பெற்றுள்ளது. இப் பாடலில் சிவபெருமானின் பெருமையாகப் புலிப்பாலை மான்கள் அருந்துமாறு செய்த அருள் செய்தி கூறப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ - ம்)

கான்ற - ஒளி வீசிய, புண்ணிய அருட்பொடி - திருநீறு, கொடிக்காய் - சுரைக்காய், வேணி - தலைமுடி, இருமூன்று குற்றம் - ஞானாவாணியம், தரியனா வாணியம், வேதநீயம், மோகநீயம், கோதரம், அந்தராயம், வட்டை - பாலைநிலம், உடுக்கணம் - நட்சத்திரக் கூட்டம்.

41. ஆடு இடத்து உய்த்தல்

முன்னி ஆடுக, முன்னி ஆடுக -
குமுதமும், வள்ளையும், நீலமும், குமிழும்,
தாமரை ஒன்றில் தடைந்து வளர் செய்த
முளரி நிறை செம்மகள் ! முன்னி ஆடுக,
நிற் பெறு தவத்தினை முற்றிய யானும்,
(பல குறி பெற்று இவ் உலகு, உயிர், அளித்த
பஞ்சின் மெல் அடிப் பாவை கூறு ஆகி,
கருங்குருவிக்குக் கண்ணருள் கொடுத்த
வெண் திரு நீற்றுச் செக்கர் மேனியன் -
கிடையில் தாபதர் தொடை மறை முழக்கும்,
பொங்கர்க் கி'டந்த சூற் கார்க் குளிறலும்,
வல்லியில் பரியும் பகடு விடு குரலும்,
யாணர்க் கொடிஞ்சி நெடுந் தேர் இசைப்பும்,
ஒன்றி அழுங்க, நின்ற நிலை பெருகி,
மாதிரக் களிற்றினைச் செவிடு படுக்கும்
புண்ணியக் கூடல் உள் நிறை பெருமான் -
திருவடி சுமந்த அருளினர் போல)
கருந் தேன் உடைத்துச் செம்மணி சிதறி,
பாகற் கோட்டில் படர்கறி வணக்கி,
கல்லென்று இழிந்து, கொல்லையில் பரக்கும்
கறங்கு இசை அருவி அம் சாரல்
புறம்பு தோன்றி, நின்கண் ஆகுவனே.

துறை விளக்கம்:

தலைவியைச் சந்தித்த தலைவன் பிரிகின்ற பொழுது தன் இடத்தின் அணிமை கூறி, நான் அங்கு செல்லுகின்றேன் என்றும், இனி நீ தோழியரோடு முற்பட்டு விளையாடு என்றும், செல்கின்றவன்

Koviloor Digital Library

மீண்டும் வருவேன் என்றும் கூறித் தலைவியை அவள் விளை யாட்டிடத்தில் கொண்டுபோய் விடுதல்.

பாடற்பொருள்:

தோழிகளுடன் தலைவியே நீ இனி விளையாடுவாயாக. குமுத மலரும், வள்ளைக் கொடியும், நீலோற்பவ மலரும், குமிழ மலரும், ஒரு தாமரை மலரில் அடங்கி வளர்தலைச் செய்தது போல, தாமரை மலரில் அழகுடன் இருக்கும் இலக்குமி போல் வாய், இனி முன் விளையாடிய விளையாட்டைக் கருதி விளை யாடுவாயாக. *(1 - 4)*

பலவகைத் தோற்றத்தைப் பெற்ற இவ்வுலகத்தின் கண், உயிர்களை ஈன்றருளிய பஞ்சினும் மென்மையான திருவடிகளை உடைய பாவை போன்ற உமையவள், ஒரு பாகமாகி - கருங் குருவிக்குத் தனது கண்ணருளைக் கொடுத்துப் பாதுகாத்த வெள்ளிய திருநீறு பூசிய , செவ்வானம் போன்ற திருமேனியை உடையவனாகிய இறைவன்,

முனிவர் தமது இருக்கையில் ஓதும் வேத ஒலியும், சோலை யின் மீது கிடந்த சூல் கொண்ட மேகங்களின் ஒலியும், கால் விலங்கை அறுப்பதற்காக யானைகள் வெளிப்படுத்தும் ஒலியும், அழகு பொருந்திய முகட்டினைக் கொண்ட தேரின் ஒலியும் கூடி ஒலித்தலால், அவ்வொலிகள் நின்ற நிலையினின்றும் பெருகித் திசையானைகளின் செவிடுகளைக் கெடுக்கின்ற புண்ணியத்தைத் தருகின்ற மதுரையினிடத்தில், பெருமையோடு எழுந்தருளியிருக் கின்றான். அத்தகைய இறைவனது திருவடிகளை மனத்தின்கண் தாங்கிய அருளாளர் போல, *(6 - 17)*

உன்னை அடையும் தவத்தை நிறைவேற்றிய யானும், பெரிய தேன் அடைகளைக் கிழித்தும், சிவந்த மாணிக்கங்களைப் பல இடங்களில் சிதறியும், பலாமரத்தின் கிளைகளில் படர்ந்த மிளகுக் கொடிகளை வளைத்தும்,ஒலியுடன் கீழிறங்கிப் புனங் களில் பரவுகின்ற அருவிநீரினை உடைய அழகிய மலைச் சாரலின் புறத்தே சென்று மீண்டும் உன்னிடத்தில் வருவேனாக. *(18 -22)*

Koviloor Digital Library

விளக்கவுரை:

இப்பாடல் திருக்கோவையாரின் 16 ஆவது பாடலுக்கு விளக்கம் தருவதாகும். பாடலின் முதற் பகுதியில் இலக்குமி போன்ற தலைவி முன்பு விளையாடிய ஆயத்தாரோடு விளையாடு வதற்குத் தலைவன் தலைவியைக் கொண்டு சேர்த்து அவளை விளையாடும்படி விட்டுவிட்டுச் செல்லுவது அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாக இறைவன் கருங்குருவிக்கு அருளிய செய்தி கூறப்பெற்றுள்ளது. திருநீறு அணிந்த செவ்வானம் போன்ற திருமேனியைக் கொண்ட முனிவர்கள் தமது இருக்கையில் பாடுகின்ற வேதஒலி கூறப் பெற்றுள்ளது. மற்றும் மதுரை நகரத்தில் ஒலிக்கப்படுகின்ற ஒலிகள் வருணிக்கப்படுகின்றன.

(சொ - ம்)

முளரி - தாமரை, தாபதர் - முனிவர், சூல் கார் - சூலை உடைய மேகங்கள், பகடு - யானை, மாதிரக்களிறு - திசையானை,

42. இயல் இடம் கூறல்

வீதி குத்திய குறுந் தாட் பாரிடம்
விண் தலை உடைத்துப் பிறை வாய் வைப்ப,
குணங்கினம் துள்ள, கூளியும் கொட்ப,
மத்தியந்தணன் வரம் சொலி விடுப்பத்
தில்லை கண்ட புலிக்கால் முனிவனும்
சூயை கை விடப் பதஞ்சலி ஆகிய
ஆயிரம் பணாடவி அருந்தவத்து ஒருவனும்,
கண்ணால் வாங்கி, நெஞ்சு அறை நிறைப்ப,
திருநடம் நவின்ற உலகு உயிர்ப் பெருமான்,
(கடல் மாக் கொன்ற தீப் படர் நெடு வேல்
உருள் இணர்க் கடம்பின் நெடுந் தார்க் கண்ணியன்,
அரி-மகள் விரும்பிப் பாகம் செய்து,
களியுடன் நிறைந்த ஒரு பரங்குன்றமும்,
பொன்அம் தோகையும், மணி அரிச் சிலம்பும்,
நிரைத் தலைச் சுடிகைநெருப்பு உமிழ் ஆரமும்,
வண்டு கிளை முரற்றிய பாசிலைத் துளவும்,
மரகதம் உடற்றிய வடிவொடு மயங்க,

Koviloor Digital Library

மரக்கால் ஆடி அரக்கர்க் கொன்ற
கவைத் தலை மணி வேல் பிறைத் தலைக் கன்னி
வடபால் பரிந்த பலி மணக் கோட்டமும்,
சூடகம், தோள்வளை,கிடந்து வில் வீச,
யாவர்தம் பகையும், யாவையின் பகையும்,
வளனின் காத்து, வருவன அருளும்,
ஊழியும் கணம் என, உயர் மகன் பள்ளியும்,
உவா மதி கிடக்கும் குண்டு கடல் கலக்கி,
மருந்து கைக் கொண்டு வானவர்க்கு ஊட்டிய,
பாகப்பக்க நெடியோன் உறையுளும்,
தும்பி உண்ணாத் தொங்கல் - தேவர்
மக்களொடு நெருங்கிய வீதிப் புறமும்,
மது நிறை பிலிற்றிய பூவொடு நெருங்கி,
சூரரக் கன்னியர் உடல் பனி செய்யும்
கடைக்கால் மடியும் பொங்கர்ப் பக்கமும்,
ஊடி ஆடுநர்த் திரையொடு பிணங்கித்
தோழியின் தீர்க்கும் வையைத் துழனியும்,
அளவா ஊழி மெய்யொடு சூழ்ந்து,
நின்று நின்று ஓங்கி, நிலை அறம் பெருக்கும்
ஆனாப் பெரும் புகழ் அருள் நகர்க் கூடல்)
பெண் உடல் பெற்ற செனனிஅம் பிறையோன்,
பொற்றகடு பரப்பிய கருமணி நிரை என,
வண்டும் , தேனும், மருள் கிளை முரற்றி,
உடைந்து உமிழ் நறவு உண்டு , உறங்கு தார்க் கொன்றையன் -
திருவடி புகழுநர் செல்வம் போலும்,
அண்ணாந்து எடுத்த அணி உறு வன முலை,
அவன் கழல் சொல்லுநர் அரு வினை மானும்,
மலை முலைப் பகை அட மாழ்குறும் நுசுப்பு,
மற்று - அவன் அசைத்த மாசுணம் பரப்பி
அமைத்தது கடுக்கும், அணிப் பாம்பு அல்குல்,
ஆங்கு - அவன் தரித்த கலைமான் கடுக்கும்,
இரு குழை கிழிக்கும் அரிமதர் மலர்க் கண் -
புகர் முகப் புழைக்கை துயில் தரு கனவில்
முடங்குளை கண்ட பெருந் துயர் போல,
உயிரினும் நுனித்த அவ் உருக் கொண்டு,
பொன்மலை பனிப்பினும் பனியா
என் உயிர் வாட்டிய தொடி இளங்கொடிக்கே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

இயலிடங் கூறல் என்பது, நீ கண்டவள் இயல்பிடம் யாது? என்று கேட்ட பாங்கனுக்குத் தலைவன் தன்னால் காணப்பெற்ற தலைவியின் வடிவுக்கு இயல்பு இவை என்றும், அவளைக் கண்ட இடம் இது என்றும் கூறுவதாகும். (சில பிரதிகளில் இத்துறை அவயவங் கூறல் என்ற துறையாகவும் கூறப் பெற்றுள்ளது)

பாடற்பொருள் விளக்கம்:

(தலைவி தன்)உயிரைக் காட்டிலும் அருமையாகிய தன்னுடைய அந்தந்த உறுப்புக்களைக் கொண்டு, மகாமேருமலை நடுங்கினாலும் நடுக்கமுறாத எனது உயிரை - புள்ளிகளை உடைய முகத்தினையும், துளையுள்ள கையினையும் உடைய யானையானது தான் துயிலும் போது கனவில் சிங்கத்தைக் கண்டு அடைந்த மிகுந்த துன்பம் போன்று, என்னைத் துன்பப் படுத்திய இளங்கொடி போன்ற தலைவிக்கு *(50 - 54)*

ஓடி விளையாடுகின்ற குட்டைக் கால்களை உடைய பூதங்கள் - விண்ணைக் கிழித்து அங்கிருந்த பிறைச் சந்திரனைத் தன் வாயில் வைக்கவும், பிசாசுக் கூட்டங்கள் துள்ளவும், பேய்கள் செறிந்து ஆடவும், மத்தியந்தணன் என்னும் முனிவன் வரம் பெறுமாறு சொல்லி அனுப்பியதால், தில்லை என்னும் தலத்தைக் கண்ட புலிக்கால் முனிவனும், அனுசூயை என்னும் பார்ப்பிணி தனது கையில் இருந்து தரையில் விட்டதால் தோன்றிய பதஞ்சலி முனிவனாகிய, ஆயிரம் பட வரிசையுள்ள தவத்தால் அருமையான ஒருவனும் *(1 - 7)*

கண்களால் பெற்று நெஞ்சமாகிய வீட்டில் நிரப்ப, திருநடனம் செய்து உலகிற்கு உயிராய் நின்ற பெருமானும், *(8 -9)*

கடலிடத்து மாமரமாகத் தோன்றிய சூரபதுமனை அழித்த தீ விளங்குகின்ற நெடிய வேலாயுதத்தினை உடையவனும், தேர் சக்கரம் போலும் கடம்ப மலர்க் கொத்துக்களாகிய மாலையை உடையவனும், இந்திரன் மகளாகிய தெய்வயானையை விரும்பித் திருமணம் செய்து களிப்புடன் (முருகன்) எழுந்தருளி உள்ள ஒப்பற்ற திருப்பரங்குன்றமும், *(10 - 13)*

Koviloor Digital Library

பொன்னாலாகிய ஆடையும், மணிப்பரல்களை உடைய சிலம்பும், வரிசையான தலைச்சுடிகையை உடைய , நெருப்புப் போலும் ஒளியை வெளிப்படுத்துகின்ற கௌத்துவம் என்ற ஆபரணமும், வண்டுகள் இசைபாடுகின்ற பச்சிலையாகிய துழாய் மாலையும், மரகத மணி போன்ற நிறத்தை உடைய திருமேனி யிடத்துக் கலை மயங்கும்படி, *(14 - 17)*

நிறைமதி இருத்தற்கு இடமாகிய ஆழமான கடலை மந்தார மலையாகிய மத்தால் கலக்கி அமுதத்தைக் கையில் ஏந்தி, தேவர்களுக்குக் கொடுத்த கடவுளின் (சிவபெருமானது) ஒரு பக்கத்தில் உள்ள திருமால் வீற்றிருக்கும் கோயிலும், *(25 -27)*

மரக்கால் என்னும் ஆடலைப் புரிந்து அரக்கரை வீழ்த்திய, பிறைத் தலை போல் காட்சியளிக்கும் வலிய சூலமேந்திய துர்க்கையானவள் வடக்கின்கண் விரும்பி உறைகின்ற ஊன் மணத்தைக் கொண்ட கோயிலும், *(18 - 20)*

கங்கணமும் தோள் வளையலும் பொருந்தி ஒளி வீச, பிறரது பகைமையையும், பிற பகைமையும் ஒழியும்படி தனது சிறப்பால் காத்து, வளர்ந்து வரும் நன்மைகளைத் தருகின்ற ஊழிக்காலமும் ஒரு கணப் பொழுதாக வளர்கின்ற வடுகக் கடவுளரது ஆலயமும், *(21 - 24)*

வண்டுகள் மொய்க்காத பொன்னரி மாலையினை உடைய தேவர்களும், மக்களும் நெருங்கி உலாவுகின்ற வீதிகளும், நிறைந்த தேனைச் சொரிகின்ற பூவொடு நெருங்கி, அச்சத்தைத் தருகின்ற தெய்வப் பெண்களின் உடலை நடுக்கம் செய்கின்ற ஊழிக் காற்று தடைப்படுகின்ற சோலைப் பகுதிகளும், *(28-32)*

தத்தம் தலைவரோடு ஊடல் கொண்டு நீராடும் மகளிரை, அலைகளாகிய கையைக் கொண்டு அவர்தம் தோழியரைப் போல, அவ் ஊடலைத் தீர்க்கின்ற வையை நதியின் ஒலியும், *(33 - 34)* (இத்தகைய சிறப்புக்களை உடைய)

அளவு படுத்த முடியாது ஊழிக் காலத்தின் முடிவிலும், உண்மையால் சூழப்பெற்று, என்றும் நிலைபெற்று, உயர்ந்த அறத்தை வளர்க்கும் அருள் பொருந்திய மதுரை மாநகரத்தே, *(35 - 37)*

Koviloor Digital Library

பெண்ணைத் தன் உடலில் பாதியாகக் கொண்டவரும், தலையில் பிறைச் சந்திரனைத் தரித்தவரும், பொன்னாலாகிய தகட்டின் மேல் பரப்பப்பட்ட நீலமணியின் ஒழுங்கு என்று (வரிசை) சொல்லும்படி ஆண் வண்டுகளும், பெண் வண்டுகளும் மயக்கத்தைத் தருகின்ற இசையைப் பாடி, மலர்ந்திருக்கின்ற அம்மலரின் தேனை உண்டு உறங்குகின்ற, கொன்றை மாலையை உடையவனும் ஆகிய சோமசுந்தரக் கடவுளரது திருவடியைப் போற்றுபவரின் செல்வம் வளர்வது போல, வளர்ந்து மேலோங்கி முலைக்கண்ணாகிய தலை நிமிர்ந்தனவும், அணிகலன்கள் பொருந் தியனவும் ஆகிய அழகினை உடையது தலைவியின் முலைகள். *(38 - 43)*

மலை போன்ற முலைகள் பகைமையைச் செய்தலால் வருத்தத்தைக் கொண்ட இடையானது சோமசுந்தரக் கடவுளின் திருவடியைப் பாடுகின்றவர்களின் வினைகள் தேய்வது போல் தேய்ந்திருக்கும். *(44 - 45)*

மணியை உடைய பாம்பின் படத்தைப் போன்ற அல் குலானது சோமசுந்தரக் கடவுள் இடையில் கட்டிய பாம்பானது படத்தை விரித்ததைப் போல் காட்சி தரும். *(46 - 47)*

தலைவியின் இரண்டு காதையும் கிழித்து உலாவுகின்ற செவ்வரி படர்ந்த மலர்க் கண்களானவை, சோமசுந்தரப் பெருமான் கையிலேந்திய கலைமானை ஒத்திருக்கும். (*48 49*) (என்று தலைவன் பாங்கனிடம் இயல்பையும், இடத்தையும் கூறினான்)

விளக்கவுரை:

இப்பாடல் திருக்கோவையாரின் 108 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் 41 வரிகள் வரை மதுரை நகரத்தைச் சுற்றி அமைந்துள்ள இடங்களும், கோயில்களும், சோமசுந்தரப் பெருமானின் பெருமையும் கூறப் பெற்று, பின்னர் தலைவனை வருத்துகின்ற தலைவியின் முலை, இடை, அல்குல், கண் ஆகிய உறுப்புக்களின் அழகு, சோமசுந்தரக் கடவுளின் உறுப்பு, அணிகலன்களோடு ஒப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. எனவே இத்துறையை அவயவங் கூறல் எனக் குறிப்பிடுவதும் உண்டு.

Koviloor Digital Library

(சொ.ம் :)

வீதிகுத்திய - தெருவில் ஓடியாடி விளையாடும், பாரிடம் - பூதம், பிறை - பிறைச்சந்திரன், குணங்கினம் - பிசாசு, கூளி - பேய், மத்தியந்தணன் - ஒருமுனிவன், பணாடவி - படக்காடு, பெருமான் - சிவபெருமான்,உருள் - தேர்ச்சக்கரம், அரி - இந்திரன், மரக்கால் - ஒருவகை ஆட்டம், பலி - ஊன், யாவர்தம் பகை - பிறர் பகை, யாவையின் பகை - பிறவற்றின் பகை, மருந்து - அமிழ்தம், தொங்கல் - மாலை, மாசுணம் - பாம்பு,

43. அன்னத்தோடு அழிதல்.

கவைத் துகிர், வடவையின். திரள் சிகை பரப்பி,
அரை பெறப் பிணித்த கல் குளி மாக்கள்
உள்ளம் தீக்கும் உவர்க் கடல் உடுத்த
நாவல்அம் தண் பொழில் இன்புடன் துயில,
உலகு அற விழுங்கிய நள்ளென் கங்குல்,
துயிலாக் கேளுடன், உயிர் இரை தேரும்
நெட்டுடல் பேழ்வாய்க் கழுதும் உறங்க,
பிள்ளையும் பெடையும் பறைவாய்த் தழீஇச்
சுற்றமும் சூழக் குருகு கண்படுப்ப,
கீழ் அரும்பு அணைத்த முள் அரை முளரி
இதழ்க் கதவு அடைத்து மலர்க்கண் துயில,
விரிசினை பொதுளிய பாசிலை ஒடுக்கி,
பூவொடும், வண்டொடும், பொங்கரும், உறங்க-
(பால் முகக் களவின் குறுங் காய்ப் பச்சிணர்,
புட்கால்- பாட்டினர்க்கு உறையுள் கொடுத்த,
மயிர் குறை கருவித் துணைக் குழை அலைப்ப,
வரிந்த இந்தனச் சுமை, மதி, அரவு, இதழி,
அகன்று கட்டு அவிழ்ந்த சேகரத்து, இருத்தி,
வீதியும் கவலையும், மிக வளம் புகன்று,
பொழுது கண் மறைந்த தீவாய்ச் செக்கர்
தணந்தோர் உள்ளத்துள் உறப்புகுந்தபின்
கார்உடல் காட்டி கண்ட கண்புதைய
அல்எனும் மங்கை மெல்லெனப் பார்க்க
முரன்று எழும் கானம் முயன்று வாது இயைந்த
வட புல விஞ்சையன் வைகு இடத்து அகன் கடை,
'தென் திசைப் பாணன் அடிமை யான்' என,

Koviloor Digital Library

போகா விறகுடன் தலைக் கடை பொருந்தி,
உந்தித் தோற்றம் ஓசை நின்று ஒடுங்க,
பாலையில் எழுப்பி, அமர் இசை பயிற்றி,
தூங்கலும் துள்ளலும், சுண்டி நின்று எழுதலும்,
தாரியில் காட்டித் தரும் சாதாரி,
உலகு உயிர் உள்ளமும் ஒன்றுபட்டு ஒடுங்க,
இசை விதி பாடி, இசைப்பகை துரந்த
கூடற்கு இறையோன் தாள் விடுத்தோர் என)
என் கண் துஞ்சா நீர்மை
முன் கண்டு ஓதாது அவர்க்கு இளங் குருகே.

துறை விளக்கம் :

உலகமெல்லாம் துயிலுகின்ற பொழுது யான் துயிலாது இருக்கின்றேன், அதற்குக் காரணம் தலைவனின் நினைப்பாகும், அவனை நினைந்து நான் வருந்துகின்ற வருத்தத்தைத் தலைவனிடத்தில் சென்று சொல்லாது, தான் தன்னுடைய ஆண் சேவலைப் பொருந்தி கவலை இல்லாத துயிலுகின்றது பெண் அன்னம் என்று தலைவி பெண் அன்னத்தோடு புலந்து கூறுவது.

பாடற் பொருள்:

கிளைகளாய் அமைந்த பவளக் கொடிகள் வடவா முகாக்கினியைப் போலச் செம்மை நிறத்தவனவாய், பக்கங்கள் எல்லாம் பரவி - தங்கள் இடையில் கயிறு கட்டிக் கொண்டு முத்து, முதலிய மணிகளைக் குளித்தெடுக்கும் மக்களின் உள்ளத்தை எரிக்கின்ற உப்புக் கடல் சூழ்ந்த, குளிர்ச்சி பொருந்திய நாவலன் தீவு எனக் கூறப்படும் உலகத்தில் உள்ள மக்கள் இன்பத்துடனே துயிலவும் *(1 - 4)*

உலகம் முழுவதையும் விழுங்குகின்ற நடுராத்திரியில் உறங்குதல் இல்லாது - சுற்றத்தோடு உயிர்களாகிய இறையைத் தேடுகின்ற நெடிய உடலையும், பெரிய வாயினையும் உடைய பேய்க்கூட்டங்கள் துயிலவும் *(5 - 7)*

தன் குஞ்சுகளையும், பெண் பறவைகளையும் சிறகுகளுக்குள்ளே தழுவித் தம் சுற்றத்தோடு சூழ்ந்து கொண்ட பறவைக் கூட்டங்கள் துயிலவும், *(8 - 9)*

மொட்டுகளுக்குக் கீழே முள்ளினைத் தன் தண்டுகளில் கொண்ட தாமரைகள் - தம் இதழாகிய கதவுகளை அடைத்துக் கொண்டு கண் துயிலவும், *(10- 11)*

Koviloor Digital Library

விரிந்த கிளைகளில் தளிர்த்த பசிய இலைகளை ஒடுக்கிக் கொண்டு பூவோடும் வண்டுகளோடும் பூம்பொழில்கள் துயிலவும்
(12 - 13)

(இவை துயிலத் தான் துயிலவில்லை என்பதைத் தலைவி கூறப்போகிறாள்)

பறவையின் கால்களை உடைய தும்புரு நாரதர்களாகிய யாழிசையில் வல்லோர்களின் பாடலுக்கு உறையும் இடமாகக் (தங்கும் இடமாகக்) கொடுத்த பாலை மரத்தினது சிறிய காயுடன் பொருந்திய பச்சிலைக் கொத்துக்கள், மயிரைக் குறைக்கும் கத்திரி என்ற கருவியைப் போல இரண்டு காதிலும் அசையவும்.

கட்டப்பட்ட விறகுக் கட்டை - திங்களும் பாம்பும் கொன்றையும் நீக்கிக் கட்டப்பட்ட தலைமுடிமேல் வைத்து வீதிகளிலும் சந்துகளிலும் புகுந்து, அதிக விலை கூறி விற்ற - சூரியன் கண்ணுக்குத் தெரியாது மறைந்த தீயை ஒத்த செவ்வான மானமாகிய மாலைப் பொழுதானது, பிரிந்தோர் உள்ளத்தின் கண்ணே பொருந்தி புகுந்து, பின் கரிய உடலை அனைவர்க்கும் காட்டி - கண்ட கண்கள் தன்னிடத்தில் புதையுமாறு இருள் என்னும் பெண்ணும் மெல்ல எட்டிப் பார்க்க, (இரவு வர)
(14 - 23)

இசை நூலின் வல்லவனாகி வாதம் செய்ய இசைந்தவனும், வடநாட்டில் இருந்து வந்தவனுமாகிய ஏமநாதன் என்னும் பாணன் தங்கியிருந்த வீட்டின் வாசற் புறத்தே, தென் மதுரையில் உள்ள பாணபத்திரன் அடிமை யான் என்று சொல்லி விலையாகாத விறகுடன் ஏமநாதனின் வாசலில் இருந்து நாபிக்கமலத்தில் இருந்து தோன்றுகின்ற ஓசையானது ஒடுங்க, பாலை என்னும் பண்ணில் ஆரோகணம் செய்து அவரோகணமாக இறங்கித், தூங்கலும் துள்ளலும் மெலிந்து நின்று எழுதலும் ஒழுங்காகக் காட்டிப் பாடிய சாதாரி என்னும் இசையை உலகத்தில் உள்ள உயிர்கள் ஒருமனப்பட, கந்தர்வ நூல் முறைப்படி பாடியருளிப் பத்திரனின் பகைவனாகிய ஏமநாதனை ஓடச் செய்த மதுரைக்கு இறைவனாகிய சோமசுந்தரக் கடவுளது திருவடிகளை நினையாது வாழ்பவர்களைப் போல,
(24 - 34)

Koviloor Digital Library

என் கண்கள் உறங்காத தன்மையை நமது அன்னப் பறவையானது நன்கு அறிந்தும் அதனைத் தலைவர்க்குச் சொல் லாதது ஏனோ? *(34 - 36)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 191 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாட்டின் முதற் பகுதியில் உலக மக்கள், பேய்க்கூட்டம், பறவைக் கூட்டம், மலர்கள் , பூம்பொழில்கள் துயில்வதைக் காட்டி, தான் தூங்காதிருப்பதைத் தலைவனுக்கு அன்னப் பறவைகள் தூது சொல்லி உரைக்க வில்லையே என்று தலைவி வருந்துவதாகப் பாடல் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் திருவிளையாடலாக விறகு விற்ற படலம் கூறப்பெற்றுள்ளது. அதில் காலையில் விறகு விற்கப் புறப்பட்டு மாலைப் பொழுதில் தெருவெங்கும் சுற்றி விற்காத விறகுக் கட்டோடு இரவில் ஏமநாதனின் வீட்டின் முன்புறம் சிவ பெருமான் பாடி அவனை ஓட விரட்டியது சிறப்பாகக் கூறப் பெற்றுள்ளது.

(சொ. ம்)

வடவை - வடவாக்கினி, கல்குளிமாக்கள் - முத்துக்குளிக்கும் மாக்கள், நாவலன் தண் பொழில் - உலகம், கழுது - பேய், குருகு - பறவை, முளரி - தாமரை, பொங்கர் - பூஞ்சோலை, புட்கால் - பறவைக் கால்களை உடைய தும்புரு நாரதர், மயிர்குறைக் கருவி - கத்திரி, கவலை - சந்து, அல் - இரவு, வடபுலத்து விஞ்சையன் - ஏமநாதன்,

44. தலைவற்குப் பாங்கி தலைவி வருத்தம் கூறல்.

ஈன்ற செஞ் சூழல், சுவர்வழி பிழைத்த
வெறிவிழிப் பிணர் மருப்பு ஆமான் கன்றினை,
மென் நடைக் குழைசெவி பெறா, வெறுங் கரும் பிடி,
கணிப் பணைக் கவட்டும், மணற் சுனைப் புறத்தும்,
தழைக் குற மங்கையர் ஐவனம் அவைக்கும்
உறற்குழி நிரைத்த கல் அறைப் பரப்பும்,
மானிட மாக்கள் அரக்கி கைப்பட்டென,

Koviloor Digital Library

நாச் சுவை அடுக்கும் உணவு உவவாது
வைத்து வைத்து எடுக்கும் சாரல் நாடன்
அறிவும், பொறையும், பொருள் அறி கல்வியும்,
ஒழுக்கமும், குலனும், அழுக்கு அறு தவமும்,
இனிமையும், பண்பும், ஈண்டவும் நன்றே!-
வெடிவால் பைங் கண் குறு நரியினத்தினை,
ஏழ் இடம் தோன்றி, இனன் நூற்கு இயைந்து,
வீதி போகிய வால் உளைப் புரவி
ஆக்கிய விஞ்சைப் பிறைமுடி அந்தணன்,
(கொண்டோற்கு ஏகும் குறியுடை நல் நாள்,
அன்னயைர் இல்லத்து, அணி மட மங்கையர்
கண்டன கவரும் காட்சி போல,
வேலன் பேசி, மறி செகுத்து, ஓம்பிய,
காலம் கோடா வரை வளர் பண்டம்
வருவன வாரி, வண்டினம் தொடர,
கண் கயல் விழித்து, பூத்துகில் மூடி,
குறத்தியர், குடத்தியர், வழி விட நடந்து,
கருங்கால் மள்ளர், உழவச் சேடியர்,
நிரை நிரை வணங்கி மதகு எதிர்கொள்ள,
தண்ணடைக் கணவற் பண்புடன் புணரும்
வையை மா மாது மணத்துடன் சூழ்ந்த)
கூடல் பெருமான்,பொன் பிறழ் திருவடி
நெஞ்சு இரு'த்தாத வஞ்சகர் போல,
சலியாச் சார்பு நிலை அற நீங்கி,
அரந்தையுற்று, நீட நின்று இரங்கும் -
முருந்து எயிற்று, இளம் பிறைக் கோலம்
திருந்திய திரு நுதல் துகிர் இளங்கொடியே.

துறை விளக்கம்:

பிரிதலைக் கூறும் தலைவனுக்கு ''கடலையும் கானலையும் நோக்கிக் கண்ணீர் கொண்டு தன் ஆயத்தாரை எல்லாம் தழுவிக் கொண்டாள் தலைவி, அவள் கருதியது இன்னதென்று தெரியாது, ஏன் வருந்துகிறாள் என்பதும் தெரியாது'' என்று தலைவியினுடைய வருத்தத்தைப் பாங்கியாகிய தோழி தலைவனுக்கு உரைத்தாள் ஆகும்.

Koviloor Digital Library

பாடற் பொருள்:

வளைந்த வாலினையும், பசிய கண்களையும் உடைய நரிக் கூட்டத்தைக் குதிரைக் கூட்டத்திற்கு இலக்கணம் கூறும் நூல்களில் கூறப்பட்ட விதிக்கு ஏற்ப மாற்றி, மதுரை மாநகரத்து வீதியில் செல்லும் வெள்ளிய பிடரி மயிரை உடைய குதிரை களாக்கி நடத்திய வித்தையினைக் கொண்ட, பிறைச் சந்திரனைத் தலையிலே கொண்ட சிவபெருமான் -

தாய் வீட்டின்கண் இருக்கின்ற அழகுடைய மகளிர்கள் தம்மை மணந்த கணவர் வீட்டிற்குக் குறித்த நல்ல நாளில் - தாய் வீட்டிலிருந்து தாம் ஆசைப்பட்ட பொருளை எல்லாம் எடுத்துக் கொண்டு செல்கின்ற பெண்களின் தோற்றத்தைப் போல - மழை பெய்வதற்கு உரிய காலத்தைக் குறித்து வெறியாடுகின்ற பூசாரி, ஆடு பலியிட்டுப் பூசனை செய்து கூறிய காலம் மாறுபடாமல் மலையில் தோன்றுகின்ற பொருள்கள் எல்லாவற்றையும் வாரிக்கொண்டு -(மலையில் மழை பெய்தது. அம்மழையானது)

வண்டுக் கூட்டங்கள் தம்மைப் பின்தொடர்ந்து வர, கயல் மீன்களாகிய கண்களை விழித்து, மலர்களாகிய ஆடையால் திருமேனியை மூடிக்கொண்டு , குற மகளிரும் இடை மகளிரும் தன்னைப் பின்தொடர்ந்து வந்து வழிபட, குறிஞ்சி நிலத்தையும் முல்லை நிலத்தையும் நடந்து கடந்து, கரிய காலை உடைய உழவர்களும், உழத்தியாகிய தோழிமாரும் மதகு தோறும் வந்து தன்னை எதிர்கொண்டு வணங்கி நிற்கவும், *(13 - 26)*

கடலாகிய தன் கணவனைக் கற்புடைய மகளிர் குணத்தோடு புணர்வது போல் வையை என்னும் பெரிய மகள் மணக் கோலத்துடன் புணர்ந்து சூழப்பெற்ற, மதுரையில் எழுந்தருளி யுள்ள சோமசுந்தரக் கடவுளின் அழகிய திருவடிகளை நெஞ்சத்தின் கண் நினையாத வஞ்சகர்களைப் போல, *(27 - 30)*

தனக்கு அமைந்த சலித்தல் இல்லாத ஆதரவுகள் கெடத் துன்பம் கொண்டு வருந்துகின்ற - மயிலிறகின் அடிப்பகுதியினை ஒத்த பற்களையும், பிறை போன்ற அழகிய நெற்றியினையும், இளமையான பவளக்கொடி போன்றும் உடைய எம்தலைவி யாகிய பெருமாட்டியிடத்து *(31 -34)*

Koviloor Digital Library

கன்று, தாய் தன்னை ஈன்ற சூழலில் இருந்து விடுபட்டு கவர்த்த வழியில் ஓடி தவறிப் போயிற்று. அதனைப் பெற்ற வெறித்த விழியினையும், சருச்சரை கொண்ட கொம்பினையும் உடைய காட்டுப் பசுவாகிய தாயினிடத்தில் இருந்து பிரிந்த அந்தக் கன்றை - மெல்லிய நடையினையும் குழைந்த செவிகளையும் கொண்ட கரிய பெண் யானை தடுத்து எடுத்து, *(1-3)*

வேங்கை மரத்தின் பசிய கிளையிலும், மணலை உடைய சுனையின் பக்கத்திலும், குற மகளிர் நெல்லை இடிக்கின்ற உரல்களாகிய குழிகள் நெருங்கியிருக்கின்ற கற்பாறை இடத்தும், மக்கள் அரக்கியின் கையில் அகப்பட்டாற் போலத் (தன்னிடத்தில் அகப்பட்ட கன்றை) நாவை மடித்து சுவையறிந்து உண்ணுதற்கு உதவாமையால் ஆங்காங்கே வைத்து வைத்து எடுத்துச் செல்லுவதற்கு இடமாகிய மலைச் சாரலை உடைய தலைவனது *(4 - 9)*

அறிவுடைமையும், நட்பினர் பிழை பொறுக்கும் பொறையுடைமையும் பொருள் இயலினை அறிவதற்குக் காரணமாகிய கல்வி உடைமையும், அதன் காரியமாகிய நல்ஒழுக்கமும், இவற்றுக்கெல்லாம் காரணமாகிய உயர்குடிப் பிறப்பும், தவம் உடைமையும், எல்லோரையும் அறிந்து பாடறிந்து ஒழுகும் பண்பும் பெரிதும் நன்றாய் இருக்கின்றன, காண்பாயாக (என்று தலைவியின் நல்ல எண்ணத்தைக் கூறி, நீ பிரிவாய் என்று கூறினால் அவள் வருந்துவாள் என்று பாங்கி தலைவனிடம் கூறினாள். *(10 -12)*

(வி - ரை):

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை. இருப்பினும் மர்ரே பதிப்பில் காணப் பெறுவதால் உரைஎழுதப் பெற்றுள்ளது. இப்பாடல் உடன் போக்குத் துறையாகும். பாட்டின் முதற் பகுதியில் தலைவனின் மலை பற்றிய வருணனை கூறப் பெற்றுள்ளது. காட்டுப்பசுக் கன்று பெண் யானையால் கவரப் பட்டு ஆங்காங்கு உண்ணமுடியாத காரணத்தால் வைத்து வைத்து எடுத்துச் செல்வது போன்ற வழியினை உடையது என்று கூறப்பெற்றிருப்பது புதிய கருத்தும் சிந்தனைக்கு உரியதும் ஆகும். இப்பாடலில் நரியைக் குதிரையாக்கிய இறைவனின் திருவிளையாடல் சிவபெருமானின் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

மலையிலிருந்து ஓடி வருகின்ற வையை நதியின் சிறப்பு கூறப் படுகிறது. தலைவனின் நற்குணங்களைப் பற்றிய தலைவியின் மனநிலையும் படம்பிடித்துக் காட்டப் பெற்றிருக்கிறது.

(சொ. ம்):

ஆமான் - காட்டுப்பசு, கரும்பிடி - பெண்யானை, கல்லறை - கற்பாறை, புரவி - குதிரை,

45. சொல்லாது ஏகல்

இலது எனின், உளது என்று,உள்ளமொடு விதித்தும்
சொல்லா நிலை பெறும், சூளுறின், மயங்கிச்
செய் குறிக் குணனும் சிந்தையுள் திரிவும்,
உழை நின்று அறிந்து, பழங்கண் கவர்ந்தும்
கண் எதிர் வைகி, முகன் கொளின் கலங்கியும்,
வழங்குறு கிளவியின், 'திசை' என, மாழ்கியும்,
ஒரு திசை நோக்கினும், இருக்கினும், உடைந்தும்,
'போக்கு' என உழையர், அயர்ப்பிடைக் கிளப்பினும்,
முலைக் குவட்டு ஒழுக்கிய அருவி, தண் தரளம்
செம்மணி கரிந்து தீத்தர, உயிர்த்தும்,
'போம்' என வாய்ச் சொல் கேட்பினும், புகைந்தும்,
கொள்ளார் அறுதியும், கொண்டோர் இசைத்தலும்,
ஈது எனக் காட்டிய மயல் மடவரற்கு -
(முன் ஒரு வணிகன், மகப் பேறு இன்மையின்,
மருமான் தன்னை மகன் எனச் சடங்கு செய்து,
உள்ளமும் கரணமும் அவனுழி ஒருக்கி,
முக்கவர்த் திருநதி துணையடன் மூழ்கி,
அப் புலத்து உயிர் கொடுத்து, அருட்பொருள் கொண்டபின்,
மற்று அவன் தாயம் வவ்வுறு மாக்கள்,
காணி கைக்கொண்ட மறு நிலை மைந்தனை,
நிரைத்துக் கிளை கொள் நெடு வழக்கு உய்த்தலும்,
மைந்தனும், கேளிரும், 'மதி முடிக் கடவுள்!நின்
புந்தி ஒன்று இன்றிப் புகல் இலம்' என்று அயர்
அவ்வுழி, ஒரு சார், அவன் மாதுலன் என,
அறிவு - ஒளி நிறைவே ஓர் உருத்த தரித்து வந்து,
அருள் வழக்கு ஏறி, அவர் வழக்கு உடைத்த
கூடல் நாயகன் தாள் பணியார் என)

Koviloor Digital Library

எவ்வழிக் கிளவியின் கூறிச்
செவ்விதின் செல்லும் திறன், இனியானே?

துறைப்பொருள்:

தலைவன் பிரிய எண்ணிய பொழுது தோழியை நோக்கி யான் எவ்வாறு எடுத்துக் கூறினாலும் தலைவி பிரிவுக்கு உடன்படாள். ஆதலால் நான் இப்பொழுது பிரிந்து சென்று விரைவில் வரைந்து கொள்ள வருவேன். அதுவரை அவள் பிரிவைத் தாங்கிக் கொண்டிருப்பாளாக என்று கூறித் தலைமகன் பிரிதல் ஆகும்.

பாடற்பொருள்:

நான் பிரிய மாட்டேன் என்று சொல்லின் பிரிவு உள்ளது என்று உள்ளத்தில் நினைந்தும் ஒன்றும் சொல்லாதிருக்கும் விரதத்தை மேற்கொண்டு செய்கைகளும், குணங்களும் மாறு பட்டுத் தலைவியின் மனம் திரியவும், *(1- 3)*

பக்கத்தில் நின்று பேசும் குறிப்பறிந்து துன்பப் படுவதற்குரிய காரணத்தை ஊகித்து அறிந்தும் எதிரே நின்று முகத்தைப் பார்த்தால் மனம் கலங்கியும், *(4 - 5)*

பேசும் சொற்களில் திசை என்ற சொல்லைச் சொன்ன அளவில் மயக்கத்தை அடைந்தும், ஏதாவது ஒரு திசையை நோக்கினாலும் அந்தத் திசையைப் பார்த்து இது பிரிவின் குறி என்று உள்ளம் வருந்தியும் *(6 - 7)*

அருகிலிருந்து ஏவல் புரிவார் "போக்கு உள்ளது" என்று நினைப்பில்லாமல் மறந்து சொல்லினும் முலைகளாகிய மலைகளின் மேல் வீழ்த்திய கண்ணீர் அருவியுடன் குளிர்ந்த முத்துக்களும், செம்மைநிற மணிகளும் தீப்பற்றிக் கரியாகப் போமாறு நெருப்பாகப் பெருமூச்சு எறிந்தும், *(8 - 10)*

நீவீர் செல்லுக என்ற பிறர் சொல்லைக் காதால் கேட்பினும் உள்ளம் புகைந்து வருந்தியும், பிரிவென்னும் துன்பத்தினைக் கொள்ளாதவர்களது முடிவும், பிரிவென்னும் துணையினைக் கொண்டோரது சொல்லுதலாகிய முடிவும், (பிரிவுத் துன்பம் ஏற்காதவர் பிரிவென்னும் துணையைக் கொண்டவர் நிலையை)

Koviloor Digital Library

இத்தன்மையதாம் என்று வெளிப்படுத்திய மயில் போலும் தலைவிக்கு - (11 - 13)

முன்னொரு காலத்தில் ஒரு வணிகன் ஆனவன் பிள்ளைப் பேறு இல்லாமையால் மருமகனை மகன் எனச் சடங்கு செய்து கொண்டு, தன் உள்ளத்தையும் மனத்தையும் அப்பிள்ளை யினிடத்தில் கொண்டு வாழ்ந்து, பின் கங்கை, யமுனை, சரசுவதி என்னும் முக்கூடலாகிய தீர்த்தத்தில் மனையாளோடு நீராடி, வடகாசியில் உடலை விட்டு உயிர் பிரிய அருளாகிய பொருளை மறுமையில் அவவணிகன் கைக் கொண்ட பின்னர், (14 - 18)

அவன் தாயத்தராகிய சுற்றத்தார் பொருளைக் கவரும் பொருட்டு முன்னம் கைக்கொண்டிருந்த வேறு ஒரு பரம்பரைப் பிள்ளையை வாரிசு என்று கூறிச் சுற்றத்தாரைக் கொண்டு சபையைக் கூட்டி வழக்கு மேற்கொண்டு வணிகனின் பொருளைக் கைப்பற்றினர். (19 - 21)

வணிகன் தத்துக்கொண்ட புதல்வனும், மற்றை உறவினரும் சந்திரனை முடியில் கொண்ட கடவுளே, நின் திருவுளமாகிய புகலிடம் அன்றி வேறு ஆதரவு இல்லை என்று கூறி வருந்துகின்ற நேரத்தில், அவன் மாமன் என்று சொல்லும்படி ஒரு வடிவாக வந்து அருளோடு வழக்குப் பேசி அத் தாயத்தார்களது வழக்கைக் கெடுத்து, தத்து மகனுக்கு அருளிய மதுரை நாயகனாம் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளை வணங்காதார் போல, சொல்லாற் சொல்லி நேர்மையாகத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் வகை எவ்விதமாகக் கூடுமோ? என்று தலைவன் வருந்திக் கூறினான்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 270 ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் பிரிவு என்ற துன்பம் தலைவிக்கு எவ்வாறெல்லாம் ஏற்படுகிறது என்பதைப் பாடலின் முதற்பகுதி குறிப்பிடுகிறது. சொல்லாலும் பொருளாலும் பிரிவைத் தாங்காத தலைவிக்குப் பிரிவை வெளிப்படையாகச் சொல்லி எப்படிப் பிரிவேனோ என்று தலைவன் வருந்துகிறான். இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாக மாமனாய் வந்து வழக்குரைத்த திருவிளையாடல் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ - ம்):

இலது - பிரிவுஇல்லை, விதித்தல் - நிச்சயித்தல், சொல்லாநிலை - மவுன நிலை, பழங்கண் - துன்பம், மாள்தல் - மயங்குதல், உயிர்த்தல் - பெருமூச்செறிதல், வாணி - சரசுவதி, காணி - பூமி (பொருள்), மைந்து - உறுதி, உளையர் - பணியாளர், கரணம் - மனம்,

46. தெளிதல்.

நின்று அறி கல்வி ஒன்றிய மாந்தர்
புனை பெருங் கவியுள் தருபொருள் என்ன
ஓங்கி, புடை பரந்து,அமுதம் உள் ஊறி,
காண் குறி பெருத்து. கச்சு - அவை கடிந்தே,
எழுத்து, மணி, பொன், பூ, மலை, என யாப்புற்று
அணி பெரு முலைமேல் கோதையும் ஒடுங்கின,
செங்கோல் அரசன் முறைத் தொழில் போல,
அமுதமும், கடுவும், வாளும், படைத்த
மதர் விழித் தாமரை மலர்ந்து, இமைத்து, அமர்த்தன,
செய் குறை முடிப்பவர் சென்மம் போலப்
பதமலர் மண்மிசைப் பற்றிப் பரந்தன,
அமுதம் பொடித்த முழுமதி என்ன
முகம் வியர்ப்பு உறுத்தின, உள்ளமும் சுழன்றன -
(இதழியும், தும்பையும், மதியமும், கரந்து
வளை விலை மாக்கள் வடிவு எடுத்தருளி,
முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்
வீதி கூறி, விதித்த முன் வரத்தால் -
கரு முகில் விளர்ப்ப, அறல் நீர் குளிப்ப,
கண் புகை யாப்புத் திணி இருள் விடிய,
உடல்தொறும் பிணித்த பாவமும் புலர,
கண்ட நீள் கதுப்பினர் கை குவி பிடித்து -
குருகு அணி செறித்த தனி முதல் நாயகன்,
குருகும் அன்னமும் வால் வளைக் குப்பையை,
'அண்டமும் பார்ப்பும் ஆம்' என அணைக்கும்,
அலை நீர்ப் பழன (முது நகர்க்) கூடல்
ஒப்புடைத்து ஆய இப் பொற்றொடி மடந்தை,
'அணங்கினள் ஆம்' என நினையல்,
பிணங்கி வீழ்ந்து மாழ்குறும் மன்னே!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைவன் தலைவியை முதன் முதலில் காணுகின்றான். அவள் அழகைக் கண்டு வியப்புற்றான். அவள் தெய்வப் பெண்ணா அல்லது மானிடப் பெண்ணா என்று ஐயமுற்றுப் பின் அவள் அவயவங்களின் இயக்கங்களைக் கண்டு அவள் தெய்வப்பெண் அல்ல என்று தெளிதல் ஆகும்.

பாடற் பொருள்:

என்னோடு மாறுபட்டு இச்சித்து மயங்குகின்ற எனது மனமே, நான் சொல்லுவதைக் கேட்பாயாக. *(28)*

கொன்றை மலர் மாலையையும், தும்பை மலர் மாலை யையும், பிறைச் சந்திரனையும் மறைத்து, வளையல் விற்பவரது உருவத்தை எடுத்துக் கொண்டு, இயல், இசை, நாடகமாகிய முத் தமிழும் நான்கு வேதங்களும் பிறந்து அருளிய திருவாக்கினால், வீதியின்கண் விலை கூறி, முற்காலத்தில் கட்டளையிட்ட வரம் காரணமாகக் கரிய மேகங்கள் வெண்மையாகவும், கருமணல் நீரில் குளிப்பவும், பார்க்கின்றோர் கண்கள் புதைந்திடத் தக்க முழுமை யாக நிறைந்த இருட் பிழம்பானது விடியவும், உடல்கள் தோறும் செய்த பாவங்கள் வாடவும், நீண்ட கூந்தலை உடைய வணிகர்களின் பெண்களுடைய கைகளைக் குவித்துப் பிடித்து வளையல் என்னும் அணியை அணிவித்த, தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத சிவபெருமானது - *(14 - 22)*

நாரைகளும் அன்னப் பறவைகளும் வெண்மை நிறம் பொருந்திய சங்குக் கூட்டத்தைத் தாம் தாம் ஈன்ற முட்டை களாகவும், குஞ்சுகளாகவும் கருதி அணைக்கின்ற அலைகளைக் கொண்ட நீரினை உடைய வயல் நிலங்களால் சூழப்பட்ட பழைய நகராகிய கூடலைப் (மதுரையைப்) போன்றவளாகிய இந்தப் பொன் தொடியினை உடைய பெண்ணானவள் (தலைவி), *(23 - 26)*

அழியாத கல்வியை உடைய அறிஞர்களால் செய்யப் பட்ட கவிதைகளிடத்தில் இருக்கின்ற பொருளைப் போல, பக்கங்களில் பரந்து - உள்ளே அமுதூறி, பெருத்து, மார்புக் கச்சினைக் கிழித்து எழுத்து எனவும், மணி எனவும், பொன் எனவும், பூ எனவும்,

Koviloor Digital Library

மலை எனவும் அச்செய்யுள் போலக் கொண்டு (கவிதைக்கு அணிகள் போல் மார்பில் முலை அணிகளைப் பெற்றிருந்தது) அழகு பெற்ற, முலைமேல் தரித்த மாலைகள் வாடியிருக்கின்றன. *(1- 6).*

செங்கோலை உடைய அரசனது மனுமுறை ஆட்சி போல, அமுதமும் விடமும் (அருளும், தண்டனையும்) பெற்ற விழிகளாகிய தாமரை மலர்கள் விரிந்து, இமைக்கின்றன. *(7 - 9)*

முற்பிறவியில் செய்து விட்ட குறையை நிறைவேற்ற வந்தவரது பிறப்புப் போல, பாதங்களாகிய மலர்கள் மண்மீது நடந்தன. *(10 - 11)*

பிறைச் சந்திரனிடத்தில் அமுதத் துளிகள் அரும்பின என்று எண்ணுமாறு முகத்தில் வியர்வைகள் தோன்றியுள்ளன. அவளுடைய உள்ளமும் அங்கும் இங்கும் சுழலா நின்றன. ஆதலால் நம்மால் காணப் பெற்ற தலைவி தெய்வப்பெண் என்று கருத வேண்டாம் மனமே என்று தலைவன் தன் மனதிற்குக் கூறித் தெளிவித்தான். *(12, 13, 27)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **3** ஆவது பாடலுக்குரிய விளக்கமாக அமைகிறது பாடலில் சோமசுந்தரப் பெருமானின் கூடலாம் மதுரை நகரத்தை ஒத்த தலைவி அணிந்திருக்கின்ற மாலை வாடுதலாலும், கண்கள் இமைப்பதாலும், கால்கள் பூமியில் நடப்பதாலும், நெற்றியில் வியர்வை தோன்றுவதாலும் அவள் தெய்வப்பெண் அல்ல, மானிடப் பெண்ணே என்று தலைவன் தெளிவதைப் பாடல் குறிப்பிடுகிறது. பாடலில் சிவபெருமானின் சிறப்பாக வளையல் விற்ற திருவிளையாடல் இடம் பெற்றுள்ளது.

(சொ. ம்):

கச்சு - மார்பில் அணிந்து கொள்ளும் ஆடை, எழுத்து, மணி, பொன், பூ, மலை - செய்யுளுக்குரிய எழுத்து, சொல், யாப்பு உள்ளிட்ட அணிகள் போல மார்பகம் அணிகலன்களைப் பெற்றிருந்தது. ஒடுங்குதல் - வாடுதல், ஜனனம் - பிறப்பு, புலர - நீங்க, கதுப்பு - கூந்தல்,

Koviloor Digital Library

47. மெலிவு கண்டு செவிலி கூறல்.

(கதிர் நிரை பரப்பும் மணி முடித் தேவர்கள்
கனவிலும் காணாப் புனைவு அருந் திருவடி
மா நிலம் தோய்ந்து ஓர் வணிகன் ஆகி,
எழுகதிர் விரிக்கும் திரு மணி எடுத்து -
வரையாக் கற்புடன் நான்கு எனப் பெயர் பெற்று,
ஆங்குஆங்கு, ஆயிர கோடி சாகைகள்
மிடலொடு விரித்து, சருக்கம், பாழி,
வீயா அந்தம் பதம், நிரை நாதம்,
மறைப்பு, புள்ளி,மந்திரம், ஒடுக்கம், என்று
இனையவை விரித்துப் பல பொருள் கூறும் -
வேதம் முளைத்த ஏதம் இல் வாக்கால்
குடுமிச் சேகரச் சமன் ஒளி சூழ்ந்த
நிறை மதி நான்கின் நிகழ்ந்தன குறியும்,
குருவிந்தம், சௌகந்தி,கோவாங்கு,
சாதரங்கம், எனும் சாதிகள் நான்கும்,
தேக்கின், நெருப்பின், சேர்க்கின், அங்கையின்,
தூக்கின், தகட்டின், சுடர்வாய் வெயிலின்,
குச்சையின், மத்தகக் குறியின், ஓரத்தின்,
நெய்த்துப் பார்வையின், நேர்ந்து சிவந்து, ஆங்கு,
ஒத்த நற்குணம் உடைய பன்னிரண்டும்,
கருகி நொய்து ஆதல், காற்று, வெகுளி,
திருகல், முரணே, செம்மண், இறுகல்,
மத்தகக் குழிவு,காசம், இலைச்சுமி,
எச்சம், பொரிவு, புகைதல், புடாயம்,
சந்தை, நெய்ப்பு இலி, எனத் தரு பதினாறு
முந்திய நூ'லில் மொழிந்தன குற்றமும்,
சாதகப்புட் கண், தாமரை, கழுநீர்,
கோபம், மின்மினி, கொடுங்கதிர், விளக்கு,
வன்னி, மாதுளம் பூ, விதை, என்னப்
பன்னு சாதரங்க ஒளிக் குணம் பத்தும்,
செம்பஞ்சு, அரத்தம், திலகம், உலோத்திரம்,
முயலின் சோரி, சிந்துரம், குன்றி,
கவிர் அலர், என்னக் கவர் நிறம் எட்டும்,
குருவிந்தத்தில் குறித்தன நிறமும்,
அசோகப் பல்லவம், அலரி, செம்பஞ்சு,
கோகிலக் கண், நீடு இலவு அலர், செம்பு, எனத்

Koviloor Digital Library

தரு சௌகந்திதன் நிறம் ஆறும்,
செங்கல், குராமலர், மஞ்சள், கோவை,
குங்குமம், அஞ்சில் கோவாங்கு, நிறமும்,
திட்டை, ஏறு, சிவந்த விதாயம்,
ஒக்கல், புற்று ஆம் குருதி, தொழுனை,
மணி, கோகனகம், கற்பம், பாடி,
மாங்கிசகந்தி, வளர் காஞ்சு, உண்டை, என்று
ஆங்கு ஒரு பதின் மூன்று அடைந்தன குற்றமும்,
இவை எனக் கூறிய நிறை அருட் கடவுள்
கூடல் கூடா குணத்தினர் போல)
முன்னயைள் அல்லள்! முன்னயைள் அல்லள்!
அமுத வாய்க் கடு விழிக் குறுந் தொடி நெடுங் குழற்
பெருந் தோட் சிறுநகை முன்னையள் அல்லள்!
உலகியல் மறந்த கதியினர் போல
நம்முள் பார்வையும் வேறு வேறு ஆயின,
பகழி செய் கம்மியர் உள்ளம் போல
ஐம் புலக் கேளும் ஒரு வாய்ப் புக்கன,
அதிர் உவர்க் கொக்கின் களவு உயிர் குடித்த
புகர் இலை நெடு வேல் அறுமுகக் குளவன்,
தகரம் கமழும் நெடு வரைக் காட்சி
உற்றனள் ஆதல் வேண்டும்,
சிற்றிடைப் பெருந் தோள் தேமொழிதானே!

துறை விளக்கம்:

தலைவியின் உடல் மெலிவைக் கண்ட செவிலித்தாய் இவள் முன்பு போன்ற தன்மையள் அல்லள். இவள் மெலிதற்கு என்ன காரணம்? தெய்வங்களின் குற்றம் பட்டனள் போலும், ஒன்றும் அறிகின்றிலேன் என்று தலைவியின் மெலிவு கண்ட செவிலித்தாய் கூறியதாகும்.

பாடற்பொருள்:

அமிழ்தம் போன்ற இனிய மொழிகளைக் கூறுகின்ற வாயினையும், நஞ்சு போன்று காண்போரை வருத்துகின்ற கண்களையும்,வளைந்த வளையல்களையும், நெடிய கூந்தலையும், பெருந் தோளினையும், புன் சிரிப்பினையும் உடைய என் மகள் இற்றைநாள் முன்பு இருந்தது போல் இருந்திலள். *(48 - 49)*

Koviloor Digital Library

பொய்ம்மையான உலக ஒழுக்கத்தைத் துறந்து மறந்துவிட்ட துறவு கொண்ட பெரியோர் தங்களுடைய உறவுகளைப் பார்க்கின்ற பார்வை போல, இவள் நம்மைப் பார்க்கின்ற பார்வையும் வேறுபட்டு உள்ளது. அம்பினை வடிக்கும் கம்மாளராம் தொழிலாளர் பிறவற்றை நினைக்காது அம்பு பற்றியே நினைக்குமாறு போல, இவளுடைய ஐம்புலன்களும் தத்தமக்குரிய பொருள்கள் மேல் செல்லாது ஒரு வழியிலேயே செல்லுகின்றன. *(50 - 53)* காரணம் யாதோ? *(இனிவரும் நீண்ட பகுதியில் மாணிக்கம் விற்ற திருவிளையாடலில் மாணிக்கங்களின் நிறை, குறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன)*

ஒளி பரப்புகின்ற மணிகளை உடைய முடியணிகளை அணிந்துள்ள தேவர்கள் கனவிலும் காணுதற்கு இயலாத, புனைந்து கூறுவதற்கு அரியதாகிய, தன் அழகிய திருவடிகள் மண்ணுலகில் தோயும்படி, மாணிக்கம் விற்கும் வணிகனாகத் திருவுருவம் கொண்டு, ஒளி பரப்புகின்ற மாணிக்க மணிகள் கொண்ட சுமையைச் சுமந்து வந்து -

எழுதி ஓதாமல் கேள்வியாலே மட்டும் கற்கக் கூடிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு பெயர்களைப் பெற்று, இடந்தோறும் இடந்தோறும் எண்ணிறந்த கிளைகளை விரித்து, சருக்கமும், கெடாத விந்தமும், சொற்றொடரும், ஒலியும், புள்ளியும், மந்திரமும், ஒடுக்கமும் என்று கூறப்படுகின்ற உள்ளுறுப்புக்களால் விரித்து, அறம் முதலிய பல பொருள்களையும் கூறுகின்ற, வேதங்கள் தோன்றுவதற்கு இடமான குற்றமற்ற மொழிகளால் *(1 - 11),*

ஞாயிற்றின் ஒளி சமமாக அமைந்துள்ள மலை உச்சியாகிய கொடுமுடிகள் நிறைந்த மக்கம், காளபுரம், தும்புரம், சிங்களம் என்னும் இந்த நான்கு இடங்களில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என்னும் இந்த நான்கு காலங்களில் உருவாகிய, தான் விற்கக் கொண்டு வந்திருக்கின்ற மாணிக்கங்களின் அடையாளங்களையும், *(12 - 13)*

குருவிந்தம், சௌகந்தி, கோவாங்கு, சாதரங்கம் என்னும் மாணிக்கங்களின் நான்கு சாதிகளும் *(14 - 15)*

Koviloor Digital Library

அம்மணிகளை ஆராய்ந்தவர் அவற்றைத் தேய்க்கும் இடத்தும், தீயின் கண் சேர்க்கும் இடத்தும், உள்ளங்கையில் வைத்து நோக்கும் இடத்தும், தராசு கொண்டு நிறுக்கும் இடத்தும், பொன் தகட்டில் பதித்துப் பார்க்கும் இடத்தும், சூரியன் முன்னே நோக்கும் இடத்தும், வெயிலில் காட்டும் இடத்தும், குச்சை என்னும் மாணிக்கத்தைப் பரிசோதிக்கும் இடத்தும், மாணிக் கத்திற்குரிய இலக்கணத்தில் குறையாமையும், விளிம்பு, குறிகள் இவற்றில் தொய்வில்லாமையும், கூர்ந்து நோக்கும் பொழுது நுண்ணிய ஒளியுடைத்தாய்ச் சிவந்தும், இலக்கணத்தில் பொருந்திய நற்குணம் பனிரெண்டும், *(15 - 20)*

கரு இருத்தலும், நொய்யதாக இருத்தலும், மழுங்கி இருத்தலும், திருகல், முருகல் உடைத்தாதலும், மாறுபட்ட இருவேறு நிறங்களை உடைத்தாதலும், செம்மண் ஒட்டியதுபோல் தோன்றுதலும், இருக்கமாக இருத்தலும், முடி குளிர்ந்து இருத் தலும், காசமும், இலேசும், உமியும், எச்சமும், புரிந்திருத்தலும், புகை படிந்திருப்பது போலத் தோன்றுதலும், புடாயம், சந்தை, நெய்ப்பு இலது ஆதலும் என்று கூறப்பட்ட மாணிக்கத்தின் பதினாறு வகைக் குற்றங்களும், *(21 - 26)*

சாதகப் பறவையின் கண் போன்ற நிறமும், தாமரை மலர் நிறமும், செங்கழுநீர் மலர் நிறமும், இந்திர கோபப் புழுவின் நிறமும், மின்மினியின் நிறமும், ஞாயிற்றின் நிறமும், விளக்கின் நிறமும், வன்னிப்பூ நிறமும், மாதுளம்பூவின் நிறமும், மாதுள விதையின் நிறமும் ஆகிய நிறங்களை ஒத்த, சாதுரங்கம் என்னும் சாதி மாணிக்கத்தின் ஒளிக் குணங்கள் பத்தும், *(27 - 30)*

செம்பஞ்சும், செல்ரத்த மலரும், திலக மலரும், வெள் உலோத்திர மலரும், முயலின் குருதியும், சிந்தூரமும், குன்றி மணியும், முள்முருக்க மலரும் என்னும் கண்ணைக் கவரும் நிறங்கள் எட்டினையும் ஒத்த குருவிந்தம் என்னும் சாதி மாணிக் கங்களுக்குக் கூறப்பட்ட நிறங்களும், *(31 - 34)*

அசோகத் தளிர் நிறமும், அலரி மலர் நிறமும், செம்பஞ்சு நிறமும், குயில் கண் நிறமும், இலவ மலரின் நிறமும், செம்பின் நிறமும் எனும் இவற்றை ஒத்த நிறங்களைக் கொண்ட சௌகந்தி

Koviloor Digital Library

என்னும் சாதி மாணிக்கத்தின் அறுவகைப் பட்ட நிறங்களும், (35 - 37)

செங்கல்லும், குரவ மலரும், மஞ்சளும், கொவ்வைக் கனியும், குங்குமமும் ஆகிய இவற்றின் நிறங்களாகிய ஐந் தினையும் பெற்றுள்ள கோவாங்கு என்னும் சாதி மாணிக்கத்தின் நிறமும், (38 - 39)

சிட்டையும், ஆனேறும், சிவந்த விதாயமும், ஒக்கலும், குற்றும், குறுதியும், தொழுவும், தினை மணியும், கோகனமும், கற்பமும், பாடியும், மாங்கிச சுந்தியும், மிகா நின்ற காஞ்சுண்டை என்று கூறப்படுகின்ற பதின்மூன்று குற்றங்களும், (40 - 44)

இவை இவை என்று அமைச்சர் முதலியோருக்கு எடுத்துக் கூறி மாணிக்கங்களை விற்ற, நிறைந்த அருளை உடைய சிவபெருமானுடைய மதுரையம் பதியைச் சென்று 'சேராத தீக்குணம் உடையோர' மாறுபட்டு இருப்பதைப் போல, என்னு டைய மகளும் மாறுபட்டு இருக்கின்றாள். அவள் முன்பு போல் இருந்திலள். பெரிதும் வேறுபட்டு இருக்கின்றாள். (45 - 47)

சிறிய இடையையும் பெரிய தோள்களையும், இனிய மொழியையும் உடைய என்மகள், (53)

அவ்வாறு இருப்பதற்குக் காரணம் கடலின் இடையே மாமரமாய் நின்ற சூரபதுமனுடைய உயிரை உண்ட, குருதிக்கறை படிந்த வேற்படையினையும், ஆறுமுகங்களையும் உடைய முருகப் பெருமானின் சந்தனம் மணக்கின்ற நெடிய திருப்பரங் குன்றத்தின் ஆட்சியாகிய இடத்தின்கண் அகப்பட்டவள் ஆதல் வேண்டும். இதில் ஐயமில்லை. (54 - 58)

(வி - ரை):

திருக்கோவையாரின் 282 ஆவது துறைக்குரிய விளக்கமாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் தலைவி தலைவன் மீது கொண்ட காதலால் மயக்குற்று மெலிந்து காணப் பெற்றதை அறியாத செவிலித்தாய் திருப்பரங்குன்றமாகிய இடத்திற்குச் சென்றதால் தெய்வக் குற்றம் ஏற்பட்டு, மெலிந்திருக்கிறாள் என்று கூறுவதாக அமைந்தது இப்பாடல். தலைவியின் மாறுபாடுகளும்,

Koviloor Digital Library

வேறுபாடுகளும் இதில் கூறப் படுகின்றன. மேலும் இப்பாடலில் சிவபெருமான் மாணிக்கம் விற்ற திருவிளையாடலைக் குறிப் பிடுகிறது. மாணிக்கங்களின் வகைகள், நிறைகள், குற்றங்கள் ஆகியன கூறப் பெற்றிருப்பது சிறப்புடைத்தாம்.

(சொ - ம்)

கடுவிழி - விடம் போன்ற துன்பத்தைத் தரும் கண்கள், கதியினர் - துறவியர், பகழி - அம்பு, கம்மியர் - இரும்புத் தொழில் கொல்லர், கொக்கு - மாமரம், தகரம் - சந்தனம்,

48. பருவம் கண்டு பெருமகள் புலம்பல்

பசி மயல் பிணித்த பிள்ளை வண்டு அரற்ற,
ஆசையின் செறிந்த பொங்கர்க் குலத்தாய்
அருப்புமுலைக் கண திறந்து உமிழ் மதுப் பால்,
சினை மலர்த் துணைக் கரத்து அன்புடன் அணைத்து,
தேக்கிட அருத்தி, அலர்மலர்த் தொட்டில்
காப்புறத் துயிற்றும் கடி நகர்க் கூடல்
அருளுடன் நிறைந்த கரு உயிர் நாயகன்
(குரவு அரும்பு உடுத்த வால் எயிற்று அழல்விழிப்
பகுவாய்ப் பாம்பு முடங்கல் ஆக,
ஆலவாய் பொதிந்த மதிமுடித் தனி முதல்)
சேக்கொள் முளரி அலர்த்திய திருவடி
கண பருகாத களவினர் உளம் போல்,
காருடன் மிடைந்த குளிறு குரல் கண முகில்
எம் உயிர் அன்றி இடை கண்டோர்க்கும்
நெஞ்சு அறை பெருந் துயர் ஓவாது உடற்றக்
கவையா நெஞ்சமொடு பொருவினைச் சென்றோர்
கண்ணினும் கவரும் கொல்லோ-
உள் நிறைந்து இருந்து வாழிய மனனே?

துறைவிளக்கம் :

கூதிர் காலத்தைக் கண்டு தலைவியானவள் வருந்தி தமக்கே அன்றி தம்மை அடைந்தார்க்கு உதவி செய்கின்ற தலைவனுக்கும் இக்கூதிர் காலம் பொருந்துமா? பொருந்துமாயின் நம்மை நினைந்து ஆற்றாராய் அவரும் வருந்துவர் அன்றோ. அதனால் விரைவில் திரும்பி வருவார் என்று தன் மனதிற்கு வருந்திக் கூறுதலாகும்.

Koviloor Digital Library

பாடற்பொருள்:

பசி மயக்கத்தினால் கட்டுண்ட வண்டுகளாகிய பிள்ளைகள் இசையாக அரற்றுதலைச் செய்ய, ஆசை மிக்கவளாகிய சோலை ஆகிய நற்றாய், அரும்புகளாகிய முலைக் கண்களைத் திறந்து, மதுவாகிய பாலைச் சொரிந்து, பூங்கொத்துக்களாகிய கைகளால் அணைத்து, வண்டுகளுக்குத் தெவிட்ட உண்பித்து, விரிந்த மலராகிய தொட்டிலில் சோர்வு நீங்கத் தூங்கச் செய்யும் சிறப்பினை உடைய நகராகிய மதுரையில் அருளுடன் எழுந்தருளியுள்ளவன். எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணம் ஆனவன். *(1 - 7)*

குரா அரும்புகள் சூழ்ந்தது போன்ற வெள்ளிய பற்களையும், தீப் போன்ற விழியினையும், பிளவுபட்ட வாயினையும் உடைய பாம்பு மாலை போல் வளைந்து எல்லை காட்டுதலால், ஆலவாய் என்ற பெயர் மதுரைக்கு ஏற்பட அருளியவன். திங்களை முடியில் தரித்தவன் ஆகிய ஒப்பற்ற சிவபெருமானது செந்தாமரை போன்ற மலர்ந்த திருவடிகளைக் கண்ணாரக் காணாத வஞ்சகரின் நெஞ்சத்தைப் போல, *(8 - 12)*

கருமை நிறங்கொண்ட மேகக் கூட்டம் முழங்குகின்ற குரலுடன் - எம்முயிர்க்கும் இடையிலே அதனைக் கண்ட ஏனையோர்க்கும் மனத்தை மிக வருத்துகின்ற பெரிய துயரம் ஒழியாமல் மேலும் மேலும் வருத்துகிறது. இத்தகைய கூதிர் காலம் துன்பமில்லாத மனத்துடன் போர்த்தொழில் மேற் சென்ற தலைவனின் மனத்தைத் துன்புறுத்தவில்லை என்றாலும், அவர் கண்ணிலாவது காணப்படுமோ? என் மனமே நீ கூறுவாயாக. *(13 - 18)* (என்று தலைவி கூதிர்காலம் கண்டு தன் மனதிற்குக் கூறினாள்.)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் *319* ஆம் பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. இப்பாடலில் பூஞ்சோலை நற்றாயாக வருணிக்கப் பட்டு, வண்டுகளுக்குப் பாலூட்டி மலர்ப் படுக்கையில் தூங்க வைத்ததாக முதற் பகுதியில் வருணனை அமைந்துள்ளது. இத்தகைய சோலை சூழ்ந்த மதுரை நகரில் தோன்றிய கூதிர்காலம் தனக்கு வருத்தத்தைச் செய்கின்ற அதே நேரத்தில்

Koviloor Digital Library

போருக்குப் பிரிந்த தலைவனை வருத்தாதோ என்ற பொருளைப் பாடல் கொண்டுள்ளது. பாடலில் சிவபெருமான் பெரிய பாம்பினை எல்லை காட்ட வைத்து மதுரை நகரை ஆலவாய் என்று அழைப்பதற்குச் செய்த திருவிளையாடல் குறிக்கப் பெற்றுச் சிவபெருமானின் சிறப்பு கூறப்பெற்றுள்ளது.

(சொ. ம்):

பொங்கர் - சோலை, அரும்பு - மொட்டு, மது - தேன், கருவுயிர் நாயகன் - அனைத்து உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமான இறைவன், வால்எயிற்று - வெண்மையான பல், அழல் - தீ, செக்கொள் - சிவந்த நிறம் கொண்ட, கவையா - துன்பப்படாத,

49. முகிலொடு கூறல்

கருங் குழற் செவ் வாய்ச் சிற்றிடை மடந்தைக்கு
உளத்துயர் ஈந்து, கண் துயில் வாங்கிய
ஆனா இன்னல் அழிபடக் காண்பான்,
(விரிபொரி சிந்தி, மண மலர் பரப்பி,
தெய்வக் குலப் புகை விண்ணொடும் விம்ம,
இரு - நால் திசையும், உண்பலி தூவி,
நல் நூல் மாக்கள் நணிக் குறி சொற்று,
பக்கம் சூழ்ந்த நெடு நகர் முன்றில்
கோடு அகழ்ந்து எடுத்த மறி நீர்க் காலும்,
வெங்கார் பெய்து நாள் குறித்து உழுநரும்,
சூல் நிறைந்து உளையும் சுரி வளைச் சாத்தும்,
இனக் கயல் உண்ணும் களிக் குருகினமும்,
வரைப் பறை அரிந்த வாசவன் - தொழுது
நிரைநிரை விளம்பி வழி முடி நடுநரும்,
நாறு கழி துற்ற சகடு ஈர்க்குநரும்,
தாமரை பாடும் அறுகால் - கிளையும்
உறைத்து எழு கம்பலை உம்பரைத் தாவி
முடித்தலை திமிர்ப்ப அடிக்கடி கொடுக்கும்
அள்ளற் பழனத்து அணிநகர்க்) கூடல்
நீங்காது உறையும் நிமிர்சடைப் பெருமான் --
உரகன் வாய் கீண்ட மாதவன் போல
மண் அகழ்ந்து எடுத்து வருபுனல் வையைக்
கூலம் சுமக்கக் கொற்றாள் ஆகி,

Koviloor Digital Library

நரைத் தலை முதியோள் இடித்து அடு கூலி கொண்டு
அடைப்பது போல, உடைப்பது நோக்கி,
கோமகன் அடிக்க, அவன் அடி வாங்கி,
எவ் உயிர், எவ் உலகு, எத் துறைக்கு எல்லாம்,
அவ் அடி கொடுத்த அருள் நிறை நாயகன் -
திரு மிடற்று இருள் எனச் செறிதரும் மா முகில்'!
எனது கண் கடந்து நீங்கித்
துணைவுடன் செல்லல், ஒருங்குபு புரிந்தே.

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைமகன் மேகத்தைப் பார்த்து, பிரிந்த தான் வருவதற்காகத் தன் இல்லிலிருருந்து தெய்வத்தைப் பரவிக் கொண்டிருக்கும் தலைவிக்கு மேகங்கள் தன் தேருக்கு முன்னே சென்று, தன் வரவைக் கூறாதோ? என்று கூறுவது.

பாடற் பொருள்:

கரிய கூந்தலினையும், செம்மைநிற வாயினையும், நுண்ணிய இடையினையும் உடைய தலைவிக்கு உள்ளத்திற்கு வருத்தத்தைக் கொடுத்துக் கண்ணுறக்கத்தை நீங்கச் செய்த துன்பத்தால், வருந்துகின்ற வருத்தத்தை அளிக்கும் பொருட்டுப் பொறியைத் தெளித்து, மணம் வீசும் மலர்களைப் பரப்பி, மணப் புகையை உண்டாக்கி, ஆகாயம் எங்கும் அவை பரவ, எட்டுத்திசையிலும் சோற்றுப் பலியை இறைத்து, தொங்குகின்ற பூணூலைத் தரித்த பார்ப்பனர் குறி சொல்லியதால், (1- 7) (அவ்வாறு செய்கின்ற தலைவியிடம்)

நெடிய நகரத்தின் முன்றிலின்கண் பக்கங்களில் சூழ்ந்துள்ள கரையை அகழ்ந்தெடுத்த, மதிக்கப்பட்ட நீர் ஒழுகும் வாய்க்காலிற் செல்லும் நீரின் ஓசையும் , வெள்ளிய கார் நெல்லை விதைக்கும் நாளை நிச்சயித்து உழுகின்ற உழவர்களின் ஒலியும், சூல் நிறைந்து (கருவுற்று) வருந்துகின்ற சங்குக் கூட்டங்களின் ஒலியும், மீனினத்தை உண்ணும் மகிழ்ச்சி உடைய பறவைக் கூட்டங்களின் ஒலியும், (8 - 12)

மலைச் சிறகை வெட்டிய மருத நிலக் கடவுளாகிய தேவர் தலைவனை வணங்கி, அணி அணியாய் நின்று வாழ்த்தி நாற்று

Koviloor Digital Library

நடுகின்றவர்களின் ஒலியும், நாற்று முடிகளை முழுமையாக ஏத்தி வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றவர்களின் ஒலியும், தாமரை மலரிலிருந்து ஒலிக்கின்ற வண்டுகளின் பண்ணோசையும், ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்து ஒலிக்கப் படுகின்ற பேரொலியானது, விண்ணுலகத் தேவரை அடைந்து, அவர்தம் முடித்தலைகளைத் திமிர் ஏறும்படி(நிமிர வைத்த) இடைவிடாமல் செய்யும். இத்தகைய மிக்க நீரை உடைய, வயல்களால் சூழப்பெற்ற மதுரையின் கண் நிலைபெற்று எழுந்தருளி இருப்பவன் நிமிர்ந்த சடையை உடைய சிவபெருமான் ஆவான். ***(13 - 20)***

பாம்பினது வாயைக் கிழித்த திருமால் போல, மண்ணைத் தோண்டி எடுத்து, வெள்ளமாக வருகின்ற நீரினை உடைய வையை நதியின் கரையை அடைக்குமாறு, மண்ணைச் சுமந்து கொட்டுகின்ற தொழிலாளியாக ஆகி, நரைத்த தலையினை உடைய மூதாட்டியாகிய வந்தி என்பவள் இடித்து மாவால் சுட்ட பிட்டுணவைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு, கரையை அடைப்பது போல உடைக்க, அதனைப் பார்த்த பாண்டியன் பிரம்பால் அடிக்க, அவன் அடியை ஏற்று, அந்த அடியை எல்லா உயிர்க்கும், எல்லா உலகத்திற்கும், எல்லா கருவினுக்கும் முழுவதும் படும்படித் தந்த அருள் நிறைந்தவன் சிவபெருமான். அவனது அழகிய கண்டத்தின் கண் இருக்கின்ற இருள் போலப் பொருந்தி வரும் பெரிய மேகமே, ***(21- 29)***

என்னுடைய கண்ணைத் தாண்டிப் போய் ஒன்றாய்க் கூடி, வேகத்தோடு நீ செல்வாயாக, ***(30 - 31)*** (என்று தலைவியிடம் தான் வரும் செய்தியை உரைக்க மேகத்தைத் தூது விடுவது போல் விரைந்து செல்ல வேண்டும் என்று தலைவன் கூறினான்.)

(வி - ரை):

திருக்கோவையாரின் ***348*** ஆவது பாடலுக்குரிய விளக்கமாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் பார்ப்பனர் கூறிய வழிபாட்டு முறைப்படி தன்னுடைய துன்பத்தைத் தீர்ப்பதற்காகத் தலைவி இல்லத்தில் வழிபாடு செய்வது முதலில் குறிக்கப் பெற்றுள்ளது. பின்பு மதுரை நகரத்து மருதநிலத்து ஒலிகள் தேவர்களை நிமிர வைத்தன என்று கூறப்பெற்ற வருணனை அமைந்துள்ளது. பாடலில் பிட்டுக்கு மண் சுமந்த திரு

Koviloor Digital Library

விளையாடல் சிவபெருமானின் பெருமையாகக் கூறப் பெற்றுள்ளது. சிவபெருமானின் கண்டத்தில் உள்ள இருட்டுப் போன்ற கார்மேகம் தலைவனால் தூது விடப்பட்டதாகப் பொருளைக் கொண்டு பாடல் முடிந்துள்ளது.

(சொ. ம்) :

ஆனாஇன்னல் - வருத்துகின்ற துன்பம், தெய்வக்குலப்புகை - தெய்வ மணம் கமழும் புகை, நன்னூல் - பூணூல், முன்றில் - முன்பக்கம், சுரிவளை - சுரிந்த சங்குக் கூட்டம், வரைப்பறை அறிந்த வாசவன் - மலையினுடைய இறக்கைகளை வெட்டிய இந்திரன், சகடு - வண்டி, அல்லற்பழனம் - சேற்றுவயல், உரகன் - பாம்பு, முதியோள் - வந்திக்கிழவி, கோமகன் - பாண்டியன்.

50. தழை விருப்பு உரைத்தல்

அறுகும் தும்பையும் அணிந்த செஞ் சடையும்,
கலைமான், கணிச்சியும், கட்டிய அரவமும்,
பிறிதும் கரந்து, ஒருகானவன் ஆகி,
அருச்சுனன் அருந் தவம் அழித்து அமர் செய்து, அவன்
கொடுமரத் தழும்பு திருமுடிக்கு அணிந்து,
பொன்னுடை ஆவம் தொலையாது சுரக்கப்
பாசுபதக் கணை பரிந்து அருள் செய்தோன் -
வாசவன் மகட் புணர்ந்து, மூன்று எரி வாழ,
தென் கடல் நடுத் திடர் செய்து உறைந்து இமையவர்
ஊர் உடைத்து உண்ணும் சூர் உடல் துணித்த
மணி வேற் குமரன் களிமகிழ் செய்த
பேர் அருட் குன்றம் ஒரு பால் பொலிந்த
அறப் பெருங் கூடல் பிறைச் சடைப் பெருமான் -
திருவடிப் பெருந்தேன் பருகுநர் போல,
மணமுடன் பொதுளிய வாடா மலர்த் தழை
ஒரு நீ விடுத்தனை, யான் அது கொடுத்தனன்,
அவ்வழிக் கூறின், அத் தழை வந்து
கண் மலர் கவர்ந்தும், கைமலர் குவித்தும்,
நெட்டுயிர்ப்பு எறிந்தும் முலைமுகம் நெருக்கியும்,
ஊடியும், வணங்கியும், உவந்து அளி கூறியும்,
பொறை அழி காட்சியள் ஆகி
நிறை அழிந்தவட்கு நீ ஆயினவே!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைமகன் தந்த தழையாகிய பரிசினைத் தோழி, தலைவியிடம் சேர்ப்பித்து ''நீ தந்த தழையை யான் சென்று தலைவியிடம் கொடுத்தேன், அதனை ஏற்றுக் கொண்ட அவள் செய்த செயலைச் சொல்லின் அது பெருகும்'' என்று தலைமகளது விருப்பத்தைத் தோழி தலைவனுக்குச் சொல்லியது.

பாடற் பொருள்:

அருகம் புல்லையும், தும்பை மலரையும் அணிந்த செஞ் சடையையும், கலைமானையும், மழு ஆயுதத்தையும், இடையில் பாம்பையும் மற்றவைகளையும் மறைத்து, ஒரு வேடுவனாகி அருச்சுனனது தவத்தை அழித்துப் போராடி, அவன் வில்லால் அடித்த வடுவைத் தனது திருமுடியில் தாங்கி, அவனுடைய அம்புக்கூடு வற்றாது விளையுமாறு பாசுபதம் என்னும் அம்பினை அன்பாய்க் கொடுத்தவன். *(1- 7)*

தென்கடலின் நடுவில் அமைந்த மகேந்திரம் என்னும் நகரில் இருந்து கொண்டு இடர் செய்து, தேவர்களுடைய நகரங்களை அழித்து உண்ட சூரபதுமன் உடலை இரு கூறாக்கிய குமரக் கடவுள், தெய்வயானை நாச்சியாரை மணந்து மிக மகிழ்வெய்து பராசரன் புதல்வர்க்கு அருள் செய்த திருப்பரங் குன்றம் ஒரு திசையில் விளங்க, மிக்க புண்ணிய பலனைத் தருகின்ற கூடல் நகரில் சடையில் பிறை அணிந்த பெருமானது திருவடிப் பெரும் பேற்றை உண்ணுகின்றவர்கள் போல, *(8 - 13)*

மணம் கொண்டு வாடாத மலர்களைக் கொண்ட தழைகளை நீ தந்தாய், நான் அவற்றைத் தலைமகளுக்குக் கொடுத்தேனாக, *(14 - 16)*

அம்முறையைச் சொல்லும் பொழுது - அந்தத் தழைகள் தலைவியின் கண்களால் கவரப்பட்டன. கைம் மலர்களால் அஞ்சலிக்கப்பட்டன, பெருமூச்சு எறிந்து முலையிடத்தே ஒட்டிக் கொள்ளப்பட்டன, தொழப்பட்டன, களிப்புடன் முகமன் உரைக் கப்பட்டன, காமநோய் பொறுக்க முடியாதவளாய் நிறையால் கைவிடப்பட்ட தலைவிக்கு அத் தழைகள் நீயே ஆயின என்று தோழி தலைவனிடம் கூறினாள். *(17 - 22)*

Koviloor Digital Library

(வி - ரை)

திருக்கோவையாரின் 115 ஆவது பாடலுக்குரிய விளக்கமாக இது அமைகிறது. பாடலில் சிவபெருமான் வேடுவனாகி அருச்சுனனுக்குப் பாசுபதக் கணை அளித்த திருவிளையாடல் கூறப் பெற்று, திருப்பரங்குன்றத்தின் சிறப்பும் கூறப்பெற்று ,தலைவி தலைவன் தந்த தழைகளைப் பெற்று மகிழ்ந்த செய்தி வருணனையாகக் கூறப் பெற்றுள்ளது.

(சொ. ம்):

அருகு - அருகம்புல், கணிச்சி - மழுவாயுதம், வாசவன் - தேவேந்திரன்,

51. விரவிக் கூறல்

வெயர் - அமுது அரும்பி, முயல் கண் கறுத்து,
தண்ணம் நின்று உதவலின், நிறைமதி ஆகி,
பொன் அம் பொகுட்டுத் தாமரை குவித்து,
நிறை அளி புரக்கும் புது முகத்து அணங்கு!- நின்
ஒளி வளர் நோக்கம் உற்றனை ஆயின்,
இன் உயிர் வாழ்க்கை உடலொடும் புரக்கலை,
(ஒரு தனி அடியார்க்கு உதவுதல் வேண்டி
மண்ணவர் காண, வட்டணை, வாள், எடுத்து,
ஆதி சாரணை, அடர் நிலைப் பார்வை,
வாளொடு நெருக்கல், மார்பொடு முனைத்தல்,
பற்றி நின்று அடர்த்தல், உள் - கையின் முறித்தல்,
ஆனனத்து ஒட்டல், அணி மயிற் புரோகம்,
உள் கலந்து எடுத்தல், ஒசிந்து இடம் அழைத்தல்,
கையொடு கட்டல், கடிந்து உள் அழைத்தல், என்று
இவ்வகைப் பிறவும், எதிர் அமர் ஏறி,
அவன் பகை முறித்த அருட் பெருங் கடவுள்
கூடல் அம் கானல்) பெடையுடன் புல்லி,
சேவல் அன்னம், திருமலர்க் கள்ளினை,
அம் மலர் வள்ளம் ஆக நின்று உதவுதல்
கண்டுகண்டு, ஒருவன் மாழ்கி,
விண்டு உயிர் சோர்ந்த குறி நிலை மயக்கே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைவனின் குறையைத் தோழி தலைவியிடம் கூறுமிடத்து, தலைவியின் மனம் வாடாத வண்ணம் மென்மையாகவும், அதே நேரத்தில் தலைவனுடைய குறையை அழுத்தமாகவும் கூறுவதாகும்.

பாடற்பொருள்:

(முகமானது) வியர்வையாகிய அமுதம் அரும்பி - போர் செய்தலை உடைய கண்ணானது கறுத்து குளிர்ச்சியைத் தருவதால் முழுமையான மதியாகி, பொன்னிறமாகிய, கன்னிகை உள்ள (கன்னித் தன்மை உடைய உள்ளத்தை) தாமரையைக் கூம்பச் செய்து, குறைவில்லாத தண்ணளியைத் (அருள்) தன்னிடத்துப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் புதுமையைத் தருகின்ற முகத்தினை உடைய அணங்கே. (தலைவியே) *(1 - 4)*

உன்னுடைய விளக்கம் மிக்க கண்களாலே நோக்குவை யாயின் இனிய உயிர் வாழ்க்கையை உடலோடு காப்பாற்ற இயலாது. (நீ வாழ மாட்டாய்) *(4 - 6)*

ஒரு தனியான அடியவனுக்கு உதவ வேண்டிப் பூமியில் உள்ளார் அறியுமாறு கேடயம், வாள் கையில் எடுத்து, முதலில் சார்ந்து நிற்றலும், நெருங்கிய நிலையில் பார்வை வைத்தலும், வாளோடு நெருங்குதலும், வாளை மார்பில் ஏற்றி எதிர்த்தலும், ஒருவரை ஒருவர் பற்றி நின்று சண்டையிடுவதும், கைக்குள் அடக்கி முறித்தலும், கேடயத்துள் தாழ்ந்து முகத்தோடு அடங்கு தலும், அழகுள்ள மயில் போலும், நாய் போலும் முறையே பின்னே பறித்து முன்னே நடத்தலும், ஒருவரோடு ஒருவர் உடலோடு மயங்கி மேலே எடுத்தலும், வளைந்து இடப்புறமாக அறைகூவலும், ஒருவர் கையோடு ஒருவர் கையேறச் சேர்த்து இருக்குதலும், குறி வழிப் பிழைத்து தாம் தாம் நிற்கும் நிலைக் களத்தே ஈர்த்தலும் என்று சொல்லப்படும் இத்தகைய போர்த் தொழில்களை உடைய வாட்போரை மிக முயன்று, அவ் அடிய வனது பகைவனாகிய சித்தன் என்னும் சாதகனின் அங்கங்களைத் தனித்தனியே வெட்டிய, அருளே திருமேனியாக உடைய சிவபெருமானது, *(7 - 16)*

Koviloor Digital Library

மதுரையிடத்தே அழகுள்ள நெய்தல் நிலத்தில் ஆண் அன்னம் தனது பெடையை (பெண் பறவை) தழுவித் திருமகளுக்கு உரியதாகிய தாமரைப் பூவின் தேனை, அந்தத் தாமரை மலரையே கிண்ணமாகக் கொண்டு உண்பித்தலைப் பார்த்துப் பார்த்து ஒருவன்(தலைவன்) மயங்கி நிலை தடுமாறி உயிர் தளர்ந்த மயக்க நிலையாகிய குறிப்பினை நீ கண்டால், (உயிர் தாங்க மாட்டாய்) என்று தோழி தலைவியிடம் கூறினாள். **(17 - 21)**

(வி. ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **84**ஆவது பாடலுக்கு உரிய விளக்கமாகும். பாடலில் தோழி தலைவியிடம் தாமரைப் பூவிலிருந்த அன்னப் பறவைகள் சேர்க்கைக் காட்சியைக் கண்ட தலைவன், தலைவியிடம் தனக்கு அது கிடைக்கவில்லையே என்று தளர்ந்ததை (மயக்கத்தை) மென்மைத் தன்மையோடு கூடி, இந்தக் காட்சியை நீ கண்டால்(தலைவன் மயங்கியதை) நீயும் உயிர் வாழ மாட்டாய் என்று தலைவியிடம் தோழி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாகச் சித்தனின் அங்கம் வெட்டிய திருவிளையாடல் இடம் பெற்றுள்ளது.

(சொ - ம்):

முயல்கண் - போர் முயற்சியை உடைய கண், தண்ணம் - குளிர்ச்சி, நிறைமதி - முழுச்சந்திரன், பொகுட்டு - மொட்டு, புரக்கும் - காப்பாற்றும், மண்ணவர் - உலகமக்கள், வட்டணை - வட்டவடிவு, (கேடயம்), புரோகம் - நாய், அமர் - சண்டை, பெடை - பெண் பறவை. மாள்கி - மயங்கி.

52. ஊடல் தணித்தல்

அவ்வுழி அவ்வுழிப் பெய் உணவு உன்னி,
முகன் பெறும் இரு செயல் அகன் பெறக் கொளுவும்
புல்லப் பாண்மகன் சில்லையும் இன்றி,
இன்பக் கிளவி அன்பினர்ப் போக்கி,
முடித்தலை மன்னர் செருக்கு நிலை ஒருவி,
பொன்னுறு ஞாழற் பூவுடன் கடுக்கும்

Koviloor Digital Library

பேழ்வாய்ப் புலி உகிர் சிறு குரல் விளங்க,
அமுதம் துளிக்கும் குமுதவாய் குதட்டிப்
பழம் கோள் தந்தை வழங்கு சொல் போலும்
மழலைக் கிளவியும், இரு நிலத்து இன்பமும்,
ஒருவழி அளிக்கும் இருங் கதிர்ச் சிறுவனை,
தழல் வழி மடங்கல் கொலை அரிக் குருளையைப்
பொன்மலை கண்ட பொலிவு போல,
மணிகெழு மார்பத்து அணிபெறப் புகுதலின்,
(கறங்கு இசை அருவி அறைந்து நிமிர் திவலையும்,
துருத்தி வாய் அதுக்கிய குங்குமக் காண்டமும்,
குற மகார் கொழிக்கும் கழை நித்திலமும்,
நெடு நிலை அரங்கில் பரிபெறு தரளமும்,
புனம் பட எறிந்த கார் அகில் தூமமும்,
அந்தணர் பெருக்கிய செந் தீப் புகையும்,
வேங்கையின் தாதுடன் விரும்பிய சுரும்பும்,
கந்தி விரி படிந்த மென் சிறை வண்டும்,
சந்தனப் பொங்கர்த் தழைச் சிறை மயிலும்,
முன்றில் அம் பெண்ணைக் குடம்பை கொள் அன்றிலும்,
ஒன்றினொடு ஒன்று சென்று தலை மயங்கும்
குளவன் குன்றக் கூடல் அம் பதி நிறை,
மஞ்சு அடை குழல் பெறு செஞ் சடைப் பெருமான் -
அருந் தமிழ்க் கீரன் பெருந் தமிழ்ப் பனுவல்
வாவியில் கேட்ட காவிஅம் களத்தினன் -
திருக்கண் கண்ட பெருக்கினர்போல)
முளரிஅம் கோயில் தளைவிட வந்து,
நல்லறம் பூத்த முல்லைஅம் திருவினள்!
நின் உளத்து இன்னல் மன் அறக் களைந்து,
பொருத்தம் காண்டி - வண்டு ஆரும்
அருத்தி அம் கோதை மன்னவன் பாலே,

துறை விளக்கம்:

தன் மகனைத் துணையாகக் கொண்டு தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்க வருதலைத் தோழி கண்டு தலைவியின் வருத்தத்தைத் தணித்தது.

Koviloor Digital Library

பாடற்பொருள்:

முழங்குகின்ற அருவியானது விழும்போது வீசி எறிந்த நீர்த் துளிகளும், நீர் இறைத்து விளையாடும் கருவியை அழுத்துதலால் சிந்துகின்ற குங்குமம் கலந்த நீர்த்துளிகளும் - குறவர் பெண்கள் வண்டல் இழைத்து விளையாடுகின்ற பொழுது கொழிக்கப் பெற்ற மூங்கில் முத்துக்களும், நெடுநிலை மாடத்தை உடைய நடனம் ஆடுகின்ற அரங்கில் பெண்களின் மாலைகள் அறுந்து சிந்துகின்ற முத்துக்களும்- காட்டை அழிக்கும்போது ஏற்பட்ட அகிற் கட்டை களின் புகையும், அந்தணரால் வளர்க்கப்பட்ட செந்தீயின் புகையும், - வேங்கை மரத் தாதுக்களை விரும்புகின்ற பெண் வண்டுகளும், விரிந்த கமுக மரத்தில் தங்கிய மெல்லிய சிறகு களை உடைய ஆண் வண்டுகளும், -சந்தனச் சோலையில் சிறகு களை விரித்து ஆடுகின்ற மயில்களும், நீண்ட பனைமரத்தின் மேல் கூட்டில் தங்குகின்ற அன்றில் பறவைகளும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து மயங்கிக் கிடத்தற்கு இடமாகிய முருகக் கடவுளது திருப்பரங்குன்றம் சூழ்ந்த மதுரை என்னும் பதியில் எழுந்தருளி உள்ள, கங்கைப் பெண் தங்கியிருக்கின்ற, மேகத்தை ஒத்த செஞ் சடையினை உடைய சோமசுந்தரப் பெருமான், *(15 - 27)*

அருமையான தமிழில் வல்லமை உடைய நக்கீரர் என்னும் புலவர் பெருமையுள்ள தமிழ்ப் பனுவலைப் பொற்றாமரைக் குளத்தில் இருந்து பாட, அதனைக் காதால் கேட்டருளி அருள் வழங்கிய நீலகண்டனது திருக்கோலத்தைக் கண்ணால் கண்டு, அத்தகைய திருவருளாம் செல்வம் பெற்றவரைப் போல, *(27 - 30)*

தாமரையாகிய ஆலயத்தின் இதழாகிய கதவைத் திறந்து, நன்மை பயக்கும் இல்லறத் தர்மத்தை உண்டாக்கிய அறக் கற்பினை உடைய திருமகள் போன்ற தலைவியே, *(31 - 32)*

வீடுகள் தோறும் இடப்படும் பலி(பிச்சை) யைக் கருதி, முகம் உவப்பு, வெறுப்பு என்னும் இரு செயலையும் மனதில் கொண்டு, அப்பலியைக் கொள்ளுகின்ற புன்மைத் தன்மை கொண்ட பாணனையும், தாங்கள் கீழ்மகள் இல்லாமல் இன்பம் தரும் சொற்களைக் கூறுகின்ற அன்பை உடைய பரத்தையரையும் நீக்கி, முடியணிந்த தலையினை உடைய அரசர்க்கு உரிய

Koviloor Digital Library

செருக்கைப் போன்ற தன்னுடைய செருக்கயும் தன்னிடத்திருந்து நீக்கி, *(1 - 5)*

பொன்னிறமான ஞாழல் பூவை ஒத்த பெரிய வாயினை உடைய புலிநகமாகிய அணியானது சிறிய கழுத்தில் விளங்கவும், அமுதம் சிந்துகின்ற செம்மையான குமுத மலர்போலும் வாயைக் குதப்பி, பழத்தை உண்ணுகின்ற கிளி பேசும் சொற்கள் போல மழலைச் சொல்லும், இம்மை மறுமை இன்பத்தை ஓரிடத்தில் கொடுக்கின்ற பெருங்கதியில் செலுத்தத் தக்கப் பிள்ளையை, தீக் கண்களையும், பிடரி மயிரினையும் உடைய, கொலைத் தொழிலையும் உடைய சிங்கக் குட்டியை, பொன்மலையானது கொண்ட காட்சியை ஒப்ப, மணிவடம் அணிந்த தன் மார்பினிடத்தே ஏந்திக் கொண்டு தலைவன் விளையாடுவதால், வண்டு பொருந்துவதற்கு ஏதுவாகிய, ஆசையைத் தரத்தக்க அகஇதழ் கொண்ட மலர் மாலையை அணிந்திருக்கின்ற நமது தலைவனிடத்தில் உள்ள மனக் கோணலை (குற்றத்தை) முழுதும் களைந்து ஒன்று படுவாயாக என்று தோழி கூறினாள். *(6 - 14) - (33 - 35)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 389 ஆவது பாடலுக்கு உரிய விளக்கமாகும். பாடலில் மதுரை நகரத்து இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் அதாவது இயற்கைப் பொருள் களான அருவித் துளிகள், மூங்கில் முத்துக்கள், காட்டிடத்து அகிற்புகை, சந்தனச் சோலையில் மயில் ஆகியவை செயற்கைப் பொருள்களான கருவிநீர்த் துளிகள், மாலையில் அறுந்த முத்துக்கள், பார்ப்பனர் வளர்க்கும் புகை, பனைமரக் கூட்டில் வாழும் அன்றில் ஆகியவை முறையாக ஒன்றுக்கொன்று மயங்கிக் கிடக்கின்றதைக் குறிப்பிடுவது சிறப்புடையதாகும். இத்தகைய மதுரை நகரத்தில் நக்கீரனுக்கு அருள் புரிந்த திரு விளையாடல் குறிக்கப் பெற்றுச் சிவபெருமானின் சிறப்பு கூறப் பெற்றுள்ளது. தலைமக்களின் குழந்தையின் அழகு வருணிக்கப் பெற்று அத்தகைய குழந்தையை விரும்பித் தலைவன் விளையாடி வருவதால் தலைவி ஊடலைத் தீர்க்க வேண்டும் என்று தோழி கூறுவதாகப் பாடல் பொருள் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

(சொ. ம்):

பெய் உணவு - பிச்சையிடப்படும் உணவு , இருசெயல் - விருப்பு, வெறுப்பு, பாண்மகன் - பாணன் (தலைவனின் தோழன்), புலிஉயிர் சிறுகுரல் - புலிப்பல், தத்தை - கிளி, ஒருவழி - பெருங்கதி (முத்தி), அரிகுருளை - சிங்கக்குட்டி, தரளம் - முத்து, பெண்ணை - பனைமரம், கீரன் - நக்கீரன், முளரி - தாமரை, மன்னவன் - தலைவன்.

53. குலமுறை கூறி மறுத்தல்

பெரு மறை நூல் பெறக் கோன்முறை புரக்கும்
பெருந்தகை வேந்தன் அருங் குணம் போல,
மணந்தோர்க்கு அமுதும், தணந்தோர்க்கு எரியும்,
புக்குழிப் புக்குழிப் புலன் பெறக் கொடுக்கும்
மலையத் தமிழ்க் கால் வாவியில் புகுந்து
புல் இதழ்த் தாமரைப் புது முகை அவிழ்ப்ப,
வண்டினம் படிந்து மதுக் கவர்ந்து உண்டு,
சேயிதழ்க் குவளையின் நிரை நிரை உறங்கும்
நிலை நீர் நாடன் - நீயே, இவளே -
மலை உறை பகைத்து, வான் உறைக்கு அணக்கும்
புட்குலம் சூழ்ந்த பொருப்புடைக் குறவர்தம்
பெருந்தேன் கவரும் சிறுகுடி மகளே,
நீயே--
ஆயமொடு ஆர்ப்ப, அரிகிணை முழக்கி,
மாயா நல் அறம் வளர் நாட்டினையே,
இவளே --
தொண்டகம் துவைப்ப, தொழிற் புனம் வளைந்து,
பகட்டினம் கொல்லும் பழி நாட்டவளே,
நீயே ---
எழு நிலை மாடத்து இள முலை மகளிர்
நடம் செயத் தளரவடம் தெறு நகரோய்,
இவளே --
கடம் பெறு கரிக் குலம் மடங்கல் புக்கு அகழத்
தெறித்திடு முத்தம் திரட்டு வைபினளே,
நீயே --
அணிகெழு நவமணி அலர் எனத் தொடுத்த

Koviloor Digital Library

பொற்கொடித் தேர்மிசைப் பொலிகுவை அன்றே,
இவளே --
மணி வாய்க் கிள்ளை துணியாது அகற்ற,
நெட்டிதண் ஏறும் இப் புனத்தினளே,
ஆதலின், பெரும் புகழ் அணைகுதி ஆயின்,
(நாரணன் பாற, தேவர் கெட்டு ஓட,
வளி சுழல் விசும்பின் கிளர்முகடு அணவிக்
கரு முகில் வளைந்து பெருகிய போல,
நிலை கெடப் பரந்த கடல் கெழு விடத்தை
மறித்து, அவர் உயிர் பெறக் குறித்து உண்டருளி,
திருக்களம் கறுத்த அருட் பெரு நாயகன்)
கூடல் கூடினர் போல,
நாடல் நீ - இவள் கழைத் தோள் நசையே.

துறைப்பொருள்:

தோழி தலைவனிடம் வணங்கத் தக்க உயர்ந்த குணத்தைச் சார்ந்த தலைவனே, நீ கூறுகின்ற சொற்களுக்கு உரிய நிலையில் நாங்கள் இல்லை. நாங்கள் இழி குலத்தவர்கள் என உரைத்து, தலைவனின் காதலை மறுத்தது.

பாடற்பொருள்:

நீயோ பெரிய வேதத்திலிருந்து மனுநூல் விதி வழி பிறந்த செங்கோல் முறையை அரசியலாகச் செய்யும் பெருந்தகையாம் அரசனது குணத்தைப் போல, பிறிவில்லாதவர்களுக்கு அமுதத் தையும், (அருளையும்), பிரிந்தவர்களுக்கு அழலையும் (பகைமை யையும்) தான் புகுந்த புகுந்த இடங்களில்(தென்றல்) புலன்கள் பெறக் கொடுக்கும் தமிழுக்கு இடமாகிய பொதிகை மலை யினின்று தென்றலானது, குளங்களில் படிந்து, தாமரைகளின் புதிய அரும்புகளை மலர்த்தலால், வண்டினம் புகுந்து தேனை விரும்பி உண்டு, செவ்விதழ் கொண்ட குவளை மலர்களைத் தூங்குவதற்கு இடமாகக் கொண்டு வாழுகின்ற நீர்நிலை சூழ்ந்த மருதத்திற்குரிய தலைவன் ஆவாய். *(1 - 9)*

இவளோ மலையருவி நீரை வெறுத்து, மழைத்துளிக்கு விரும்பி அங்காத்தல் செய்கின்ற சக்கரவாளப் பறவை இனம் சூழ்ந்திருக்கின்ற, மலையை இடமாகக் கொண்ட குறவர்கள்,

Koviloor Digital Library

தேனடையில் உள்ள தேனை விரும்புகின்ற சிறுகுடியில் பிறந்த பெண்ணாவாள். (9 - 12)

நீயோ மகளிர் கூட்டத்தோடு ஆரவாரிக்க மருதப் பறை கொட்டி, அழியாத நல்லறத்தை வளர்க்கும் நாட்டினை உடையாய், (13 - 14)

இவளோ குறிஞ்சிப்பறை முழங்கத் தங்களால் காத்தலைச் செய்யப்படுகின்ற தினைப் புனக் கொல்லைகளைச் சுற்றி யானைக் குலங்களை வருத்துகின்ற சிறிய ஊரினை உடையவள். (15-16)

நீயோ உயர்ந்த மாடங்களைக் கொண்ட மாளிகைகளில் பருவ மங்கையர் ஆடல் செய்ய, முத்து வடங்கள் சிந்துதற்கு இடமாகிய நகரத்தை உடையவன். (17 - 18)

இவளோ மதம் ஒழுகுகின்ற யானைக் கூட்டங்களைச் சிங்கம் எதிர்த்து யானைகளின் மத்தகத்தைப் பிளப்பதால் உதிருகின்ற முத்துக்களைச் சேர்க்கின்ற நிலத்தை உடையவள் ஆவாள். (19 - 20)

நீயோ அலங்கரிக்கப்பட்ட ஒன்பது நவரத்தினங்களும் மலர் மாலை போல் கோர்த்துள்ள கொடிகள் அசைகின்ற பொன் தேர் மேல் ஏறுகின்றவன், (21 - 22)

இவளோ செம்மைநிற வாய்களை உடைய கிளிகளை ஓச்சுகின்ற (விரட்டுகின்ற) நெடிதாகிய பரண்மேல் ஏறுதற்கு இட மாகிய இத்தினைப் புனத்தை உடையவள். ஆதலால் (23 - 25)

மிக்க புகழைப் பெற விரும்பினை என்றால் திருமால் பின்னிடத் தேவர்கள் ஓட, வீசுகின்ற காற்றுக்கு இடனாகி, மாசில்லாத விண்ணகத்தில் அளாவி, கரிய முயல்கள் சூழ்ந்து நின்றாற் போல, கீழ் மேலாகப் பரவிய, கடலில் பிறந்த ஆலகால விஷத்தைத் தடுத்து, அத்தேவர்கள் முதலியோர் உயிருடன் வாழுமாறு உட்கொண்டு அருளி, தன்னுடைய கண்டம் கருத்த பேரருள் கடவுளாம் சோமசுந்தரக் கடவுளின் மதுரையை அடைந்தவர்கள் பற்றற்றாற் போல, இழி குலத்தாளாகிய இவளது மூங்கில் போலும் தோளைப் புணரும் ஆசையை விடுவாயாக என்று தோழி தலைவனிடம் கூறினாள். (25 - 33)

Koviloor Digital Library

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 100 ஆவது பாடல் விளக்கமாகும். பாடலில் தோழி தலைவனுடைய உயர் குலத்தைப் பற்றியும், தலைவியின் இழிந்த குலத்தைப் பற்றியும் கூறுகின்றாள். கூறுகின்ற பொழுது தலைவன் குலத்திற்கு ஏற்பத் தலைவியின் குலம் சிறிது இழிந்திருந்தாலும், மிக்க பெருமையினை உடையது என்று வீரப் பெருமைக்குரிய செயல்களைக் கூறியே குறிப்பிடுவது சிறப்புடைத்தாகும். எடுத்துக்காட்டாகத் தலைவன் மருதத்திணைக்கு உரியவன் என்று கூறுகின்ற அதே நேரத்தில் தலைவி குறிஞ்சி நிலத்திற்கு உரியவள் என்று கூறுவதும், தலைவன் பெண்கள் ஆடல் புரிகின்ற மருத நாட்டிற்கு உரியவன் என்று கூறுகின்ற நேரத்தில், யானைக் கூட்டத்தை வெல்லுகின்ற குறிஞ்சி மக்கள் சூழ்ந்த நாட்டை உடையவள் என்று கூறுகின்ற பகுதிகளைக் குறிப்பிடலாம். இப்பாடலில் சிவபெருமான் கடல் நஞ்சுண்டு தேவர்களைக் காப்பாற்றிய செய்தி சிவபெருமானின் சிறப்பாகக் கூறப்படுகிறது.

(சொ. ம்):

மறைநூல் - வேதங்கள், கோன்முறை - அரசநெறியாம் மனுநீதி, தமிழ்க்கால் - தமிழ்க் காற்றாகிய பொதிகைத் தென்றல், சேயிதழ் - செம்மைநிற இதழ், புட்குலம் - பறவைக்குலம், ஆயம் - மகளிர் கூட்டம், தொண்டகம் - குறிஞ்சிப்பறை, பகட்டினம் - யானைக்கூட்டம், பாற - புறங்காட்டல், அவர் - தேவர், களம், கண்டம் - கழுத்து, நசை - விருப்பம்.

54. காவற் பிரிவு அறிவித்தல்

நடைத் திரைப் பரவை நாற் கடல் அணைத்து
வரையறுத்து, அமைந்த வகை நான்கு ஆக,
விதிவரத் திருத்திய மேதினிப் பொறையை --
குரு மணி விரித்தலின், தேனொடு கிடந்து
மாயாது தொடுத்த மண மலர் சுமத்தலின் --
வரை என நிறுத்திய திரு உறை பெருந்தோள்
தரித்தும், அணைத்தும், தான் எனக் கண்டும்,
செய்ததும் அன்றி, திருமனம் பணைத்துக்

Koviloor Digital Library

காக்கவும் குரிசில் கருத்துறும் போலும் --
(விடையா வடந்தை செய் வெள்ளிஅம் சிலம்பினும்
தென்கால் விடுக்கும் செம்பின் பொருப்பினும்
கொண்டல் வந்து உலவும் நீலக் குவட்டினும்,
கோடை சென்று உடற்றும் கொல்லிக் கிரியினும்,
பிறந்தவர் பிறவாப் பெரும் பதியகத்தும்,
முடிந்தவர் முடியா மூதூரிடத்தும்,
கண்டவர் காணாக் காட்சி செய் நகரினும்,
வேதத் தலையினும், விதி ஆகமத்தினும்,
கல்வியர் உளத்தும், கலர் நெஞ்சகத்தும்,
தெய்வம் விடுத்துப் பொய் கொள் சிந்தையினும்,
கொலையினர் கண்ணும், குன்றாது இயைந்து,
வெளியுறத் தோன்றி, இருளுற மறைந்த
விஞ்சை வந்தருளிய, நஞ்சு அணி மிடற்றோன் --
சந்தமும், பதமும், சருக்கமும், அடக்கமும்,
சின்னக் குறளும், செழுங் கார் போலப்
பெரு மறை முழங்கும் - திரு நகர்க் கூடல்
ஒப்புற்று) அடை மலர் சுமந்த
மைப்புறக் கூந்தல் கொடி வணங்கு இடையே!

துறைப் பொருள்:

பெரிய பூமியைக் காப்பதற்காக நம்முடைய தலைவர் காவற் பிரிவாகச் செல்கின்றார் என்று தோழி தலைவிக்குச் சுடர் பொருந்திய வேலை உடைய தலைவனின் பிரிவைக் கூறியது.

பாடற் பொருள்:

துன்பத்தைத் தராத வடகாற்றினைத் தருகின்ற கயிலை மலையினும், தென்றல் காற்றை வெளிப்படுத்துகின்ற, தாமிர பரணி என்னும் நதியை உடைய பொதிய மலையினும், கீழ்க் காற்று வந்து உலவுகின்ற நீல மலையினும், மேல்காற்று வந்து வெப்பம் செய்கின்ற கொல்லி மலையினும், *(10-13)*

தன்னிடத்தில் பிறந்தவர்கள் பின்னும் பிறவாத பெருமையைத் தரும் திருவாரூரிலும், இறந்தவர்கள் பின்னும் பிறந்து இறவாத பெருமை தரும் பழமையான வடகாசியிலும், பின்னும் பிறந்து காணப்படாத அறிவுக் காட்சியைத் தருகின்ற சிதம்பரத்திலும், வேதத்தின் உச்சியிலும் ஆகமங்களிலும் கற்றறிந்தவர்

Koviloor Digital Library

உள்ளத்திலும் குறையாது பொருந்தி (மேற்கூறிய தலங்களைக் காட்டிலும்) வெளிப்படத் தோன்றியும், (14 - 21)

தவத்திற்கு இடையூறாகிய சினமுள்ள நெஞ்சகத்தும், தெய்வத்தை விடுத்துப் பொய்மையை மேற்கொள்ளுகிற உள்ளத்திலும், கொலைத் தொழிலோர் உள்ளத்திலும், இருள் போலப் பொருந்தி, மறைகின்ற வித்தையில் கைவந்த, நஞ்சாகிய இருண்ட கண்டத்தை உடையவரது, (18 - 22),

பெருமையான வேதத்தில் உள்ள சந்தங்களும், பதங்களும், சருக்கங்களும், அடக்கங்களும், சின்னக் குறளுமாகிய சாகைகளும், கார்கால மேகம்போல முழங்கிட விளங்கும் அழகிய நகராகிய மதுரைக்கு ஒப்பாகித் தேன் பொருந்திய மலர்கள் கமழும் பின்புறத்தில் உள்ள கூந்தலையும், வளைகின்ற கொடி போலும் இடையை உடைய பெண்ணே (தலைவியே) நான் சொல்வதைக் கேட்பாயாக. (23 - 27)

அரசனுக்கு உரிய அலைகள் சூழ்ந்த நாற்கடல்களை எல்லையாக வரையறுத்து அமைந்த நால்வகை நிலத்ததாம் மனுநீதி விதியோடு பொருந்திய பூமியாகிய பாரத்தை, (1-3)(9)

அணிந்துள்ள தோள் அணியில் மணிகள் பதிந்திருத்தலாலும், வண்டுகளோடு பொருந்தி வாடாது தொடுக்கப்பட்ட நறுமலர் மாலைகளைச் சுமத்தலின், மலைகள் இவை எனக் கூறுகின்ற அளவிற்குக் காட்சி தரும், வெற்றித் திருமகள் வசிக்கின்ற திரண்ட தோள்களிடத்தே தாங்கியும், (பூமி பாரத்தை), அதனைத் தழுவியும், மன்னுயிர்களைத் தன்னுயிர் என நினைந்தும், அரசியல் பணிகள் செய்து வந்ததும் அல்லாமல் தன் மனம் பூரித்து பகைக்கு உட்படாத வண்ணம் பூமியைப் பாதுகாக்கவும் தலைவன் கருத்துடையவனாக உள்ளான் என்பதை அறிவாயாக என்று தோழி கூறினாள். (4 - 9)

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **312** ஆம் துறைக்குரிய விளக்கமாகும். பாடலில் சிவபெருமான் நான்கு விதமான மலைகளைக் காட்டிலும், பல திருத்தலங்களிலும், அடியவர் நெஞ்சங்களிலும், வேத ஆகமங்களிலும் வெளிப்படத் தோன்றுவான்

Koviloor Digital Library

என்றும், வஞ்சகர் உள்ளத்தில் மறைந்து தோன்றுவான் என்றும் சிவபெருமான் சிறப்பாகப் பேசப் பெறுகின்றான். அவ் இறைவன் எழுந்தருளியிருக்கின்ற, வேதங்கள் ஒலிக்கின்ற மதுரை நகரத்திற்கு ஒப்பான தலைவியிடம் தலைவன் அரசனுக்குரிய பூமி பாரத்தைக் காப்பதற்குப் பிரிந்துள்ளான் என்று தோழி கூறும் கருத்தினைக் கொண்டது இப்பாடல்.

(சொ - ம்)

திரை - அலை, வித்வர - மனுநீதி நூல்படி, மேதினி - பூமி, வரை - மலை, வெள்ளியம் சிலம்பு - கயிலைமலை, தென்கால் - தென்காற்று, செம்பின் - தாமிரபரணிஆறு, கொண்டல் - மேகம், நீலக்குவடு - நீலமலை, கொல்லிக்கிரி - கொல்லிமலை, பெரும்பதி - திருவாரூர், மூதூர் - வடகாசி, நகர் - சிதம்பரம், செழுங்கார் - செழுமையான மேகம், பெருமறை - வேதம்.

55. உள் மகிழ்ந்து உரைத்தது

நுணி கவின் நிறைந்த திருப் பெரு வடிவினள்!
உயிர் வைத்து உடலம் உழன்றன போல,
நெடும் பொருள் ஈட்ட, நிற்பிரிந்து இறந்து
கொன்று உணல் அஞ்சாக் குறியினர் போகும்
கடுஞ் சுரம் தந்த கல் அழல் வெப்பம் --
தேவர் மருந்தும், தென் தமிழ்ச் சுவையும்,
என் உயிர் யாவையும் இட்டு அடைத்து ஏந்தி,
குருவியும், குன்றும், குரும்பையும், வெறுத்த நின்
பெரு முலை மூழ்க என் உளத்தினில் தொடாமுன் --
(வீழ் சுற்று ஒழுக்கிய பராரைத் திரு வடக்
குளிர் நிழல் இருந்து, குணச் செயல் மூன்றும்,
உடலொடு படரும் நிலை நிழல்போல
நீங்காப் பவத்தொகை நிகழ் முதல் நான்கும்,
உடன் நிறைந்து ஒழியா உட்பகை ஐந்தும்,
மதியினின் பழித்த வடு இரு மூன்றும்,
அணுகாது அகற்றி, பணிமுனி நால்வர்க்கு
அறம் முதல் நான்கும் பெற அருள் செய்த
கூடற் பெருமான் நீடு அருள் மூழ்கி,
இரு பதம் உள் வைத்திருந்தவர் வினைபோல்)

Koviloor Digital Library

போயின துணைவினை நோக்கி
ஏகின் எனக்கே அற்புதம் தருமே!

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைவன் பெரும் பொருளோடு திரும்பித் தன் இல்லம் புகுந்து தலைவியோடு மகிழ்ந்து உரைத்தலாகும்.

பாடற் பொருள்:

உணர்வுடையோர் ஆராயத் தக்க அளவு குறைவு படாத திரு மகளைக் காட்டிலும் அழகுடைய தலைவியே, உயிரை ஓரிடத்தே வைத்து, உடலானது தனியே திரிந்தாற் போல, பெரிய பொருளைச் சம்பாதிக்கும் பொருட்டு உன்னை விட்டுப் பிரிந்து போய், உயிரினைக் கொன்று உண்ணுவதற்கு அச்சப்படாத குண முடைய பாவிகள் செல்லும் இடமாகிய, கொடிய பாலைநிலத்தில் யாம் சென்ற பொழுது, அவ்வழியில் உண்டான வெம்மையானது, *(1 -5)*

தேவர் உண்ணுகின்ற அமுதமும், இனிமை கொண்ட தமிழின் சுவையும், என் உயிரும் ஆகிய எல்லாவற்றையும் தனக் குள்ளே அடைத்து வைத்து இறுமாந்து - சக்கரவாளப் பறவை யையும், மலையையும், இளநீரையும் வென்ற உனது பெரிய முலைகளில் மூழ்குவதற்கு என் மனத்தே நினைப்பதற்கு முன்னே, *(6 -9)*

விழுதுகளைச் சுற்றிலும் இறக்கிய பருத்த அடியுள்ள அழகாகிய கல்லால மரத்தின் குளிர்ந்த நிழலில் குருவாக எழுந்தருளி, இராசதம், தாமதம், சத்துவம் ஆகிய மூன்று குணங் களும் உடலோடு செல்லுகின்ற நிழல் போலத் தம்மை விட்டு நீங்காத, பிறவிக்கு ஏதுவாகிய வினைக் கூட்டம் நிகழ்தற்கு ஆதார மாகிய, அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்து, அகங்காரம் ஆகிய நான்கும் தம்முடன் அநாதியாக இருந்து, நீங்கற்கரிய உட் பகையாகிய ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாயேயம் ஆகிய ஐந்தும், அறிஞர்களால் பழித்துக் கூறப்பட்ட காமம், குரோதம், கோபம், மதம், மோகம், மாச்சரியம் ஆகிய குற்றங்கள் ஆறும், தம்மை நெருங்காமல் துரத்தி, தன்னை வணங்கப் பெற்ற சநகர், சநந்தனர், சநற்குமாரர், சநாதனர் என்னும் முனிவர்

Koviloor Digital Library

நால்வர்க்கும் அறம் முதலாகிய நான்கையும் அடையுமாறு சொல்லாமல் சொல்லி அருளிய, மதுரைத் தலைவனாம் சோம சுந்தரனின் அழிவில்லாத அருட் கடலில் மூழ்கி, *(10-18)*

அச்சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் உள்ளத்தில் இருத்தி, சிவானுபூதியில் வாழுகின்றவர் வினை ஒழிந்தாற் போல, (வழியின் வெம்மை) நீங்கிப் போன விரைவை ஆராயும் பொழுது பொருள் தேடிச் சென்ற எனக்கே அது அதிசயத்தைத் தந்தது. *(19 - 21)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **351** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் பொருள் தேடச் சென்ற தலைவன் செல்லும் பாலை நிலத்தின் வெம்மை, தலைவியின் மார்பகத்தை நினைத்ததால், மதுரை நகரத்து இறைவனின் திருவடிகளை வணங்குவோரின் வினைகள் நீங்குவது போல, விரைவாக நீங்கியது. அதன் விளைவை ஆராய்ந்து பார்த்தால் தலைவனுக்கு அது அதிசயத்தைத் தந்தது. அத்துணை வேகமாகச் சென்று துன்பம் மறைந்தது என்ற பொருளைக் கொண்டது இப்பாடல். இப்பாடலில் சிவபெருமானின் பெருமையாகக் கல்லால மரத்தின் கீழ் நால்வர்க்குத் தட்சணாமூர்த்தி வடிவில் இருந்து அருள் புரிந்த திருவருள் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

(சொ. - ம்):

நுனிக்கவின் - ஆராய்ந்த அழகு, உடலம் - உடல், குறிகினர் - குணத்தவர், கல் - வழி, குருவி - பறவை, குரும்பை - இளநீர், இருபதம் -இரண்டு திருவடி.

56. புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலத்தல்

கொன்றைஅம் துணரில் செவ்வழி குறித்து,
வால் உளை எருக்கில் வளர் உழை பாடி,
கூவிளங் கண்ணியில் குலக் கிளை முரற்றி,
வெண் கூதளத்தில் விளரி நின்று இசைத்து,
வண்டும், தேனும், ஞிமிறும், சுரும்பும்,
உமிழ்நறவு அருந்தி உறங்கு செஞ் சடையோன்,

Koviloor Digital Library

மது மலர் பறித்துத் திருவடி நிறைத்த
நான்மறைப் பாலனை நலிந்து உயிர் கவரும்
காலற் காய்ந்த காலினன், கூடல்
திரு மறுகு அணைந்து வரு புனல் வையை
வரை புரண்டென்னத் திரை நிரை துறையகத்து,
அணந்து எடுத்து ஏந்திய அரும்பு முகிழ் முலையோள்
மதிநுதல் பெருமதி மலர்முகத்து ஒருத்தியை --
ஆட்டியும் அணைத்தும், கூட்டியும் குலவியும்,
ஏந்தியும் எடுத்தும், ஒழுக்கியும் ஈர்த்தும்,
முழுக்கியும் தபுத்தியும், முலை - ஒளி நோக்கியும்,
விளி மொழி ஏற்றும், விதலையின் திளைத்தும்,
பூசியும் புனைந்தும், பூட்டியும் சூட்டியும்,
நிறுத்தியும் நிரைத்தும், நெறித்தும் செறித்தும்,
எழுதியும் தப்பியும், இயைத்தும் பிணித்தும்,
சுட்டியும் கலத்தியும், கமழ்த்தியும் மறைத்தும் --
செய்தன எல்லாம் செய்யலர் போல, என்
நெட்டிலை பொலிந்த பொன் நிறை திரு உறையுளில்--
பாசடைக் குவளைச் சுழல் மணக் காட்டினைக்
கரு வரிச் செங் கண் வராலினம் கலக்க,
வேரி மலர் முண்டகத்து அடவி திக்கு எறிய
வெள் உடற் கருங்கட் கயல் நிரை உகைப்ப,
மரகதப் பன்னத்து ஆம்பல்அம் குப்பையைச்
சொரி எயிற்றுப் பேழ்வாய் வாளைகள் துகைப்ப,
படிந்து சேடு எறியும் செங் கட் கவரியும்,
மலை சூழ் கிடந்த பெருங் குலைப் பரப்பும்,
மலையுடன் அலைந்த முதுநீர் வெள்ளமும்,
மிடைந்து, வயல் இரிந்து முதுகு சரிந்து உடைந்து
சிறியோன் செரு என முறிய, போகி,
உழவக் கணத்தைக் குலைக் குடில் புகுத்தும் --
பெரு நீர் ஊரர், நிறைநீர் விடுத்துச்
செறிந்தது ஏன்? எனக் கேண்மின்,
மறிந்துழை விழித்த மறி நோக்கினரே!

துறை விளக்கம்,

தலைவன் பிற பரத்தையரோடு செய்த புதுப் புனலாட்டை அறிந்து, தலைவி வெறுத்துத் தோழியிடம் கூறியது.

Koviloor Digital Library

பாடற்பொருள்:

வலையால் மறிக்கப்பட்ட இடத்தில் விழிக்கின்ற மான் போலும் கண்ணை உடைய பெண்ணே, (தோழியே) மணம் பொருந்திய பசிய இலைகளை உடைய குவளை மலர்க் கூட்டத்தை, கரிய வாயினையும், சிவப்பாகிய கண்களையும் கொண்ட கூட்டமாகிய வரால்மீன் கூட்டம் கலக்கவும், *(38) (24-25)*

தாமரைகளின் தீப்போன்ற மலர்களின் கூட்டத்தை வெண் மையான உடலையும், கரிய கண்ணையும் உடைய கயல்மீன் கூட்டங்கள் திசைதோறும் சிந்துமாறு பாயவும், *(26 - 27)*

மரகதமணி போன்ற இலைகளை உடைய ஆம்பல் பூக்கூட்டத்தை பெரிய வாயை உடைய வாளை மீன்கள் பாய்ந்து துவைக்கவும், *(28 - 29)*

நீரில் குளித்துச் சேறாக்குகின்ற சிவப்பாகிய கண்ணை உடைய எருமைகளும், மலை சூழ்ந்ததை ஒத்த பெரிய கரையின் பரப்பைத் தன்னுடைய அலைகளால் உடைக்கின்ற, கடல்போலும் நீர்ப்பெருக்கும் அங்குள்ள வயல்கள் மாறுபட்டிட, வரப்புக்கள் சரிய குறுநில மன்னன் செய்யும் போர் போல முறியுமாறு சென்று, *(30 - 34)*

உழவர் கூட்டங்களை உழவுத் தொழிலின் கண் குடிபோகச் செய்கின்ற பெருமையை உடைய நாட்டுக்கு உரிய தலைவன், *(35 -36)*

கொன்றைப் பூங்கொத்தில் செவ்வளி என்னும் பண்ணை இசைத்து - வெண்மையான எருக்க மலரில் உழை என்னும் பண்ணைப் பாடி, வில்வ மாலையில் கிளை என்னும் பண்ணைப் பாடி, வெள்ளிய கூதாள மலரில் விளரி என்னும் பண்ணைப் பாடி இவ்வாறு நான்கு விதமாகப் பாடலைக் கொண்ட வண்டின் கூட்டங்கள், அவ்வவ் மலர்களில் உள்ள தேனையும் உண்டு மகிழ்வதற்கு இடனாகிய செஞ்சடையன், *(1 - 6)*

தேன் கொண்ட மலர்களைப் பறித்து, தன் திருவடியின் கண் அருச்சித்து வழிபட்ட வேதியச் சிறுவனாம் மார்க்கண்டேயனை வருத்தி, அவன் உயிரைக் கவர வந்த இயமனைச் சினந்தவன்

Koviloor Digital Library

சிவபெருமான் ஆவான். அவனது திருவடியுள்ள மதுரை நகரின் அருகணைந்து நீர் நிறைந்த, வைகை நதியின் மலை புரண்டாற் போன்ற அலைகள் வீசும் துறையினிடத்தே அண்ணாந்து ஏங்கிய, குவிந்த முலைகளை உடைய இளமதி போன்ற நெற்றியை உடைய, நிறை மதி போன்ற முகத்தையும் உடைய ஒருத்தியை, (பரத்தையை) *(7 - 13)*

நீராடச் செய்தும், தோளோடு அணைத்தும், தோழிகளோடு சேர்த்துக் கொண்டாடியும், தாங்கியும், தூக்கியும், இழுத்தும், நீரில் முழுக்கியும், மேல் எடுத்தும், முலையின் அளவைப் பார்த்தும், அவள் அழைக்கும் மொழியைக் காதால் கேட்டும், அவள் குளிரால் நடுங்கும் போது கட்டியணைத்தும், சந்தனம் முதலிய சாந்தங் களைப் பூசியும், மாலை அணிவித்தும், அணிகலன்கள் பூட்டியும், ஊடாவகை நிறுத்தியும், திருத்தியும், பெருமிதம் உற்றும், நெருக்கியும், தொய்யல் எழுதியும், அதில் தப்பு ஏற்பட்டால் திருத்தியும், கச்சினைக் கட்டியும், துயிலை உடுத்தியும், பனிநீரைத் தெளித்தும் இவ்வாறு தாம் செய்த செயல்களை எல்லாம், செய்யாதவர் போல, *(14 - 22)*

எனது நெடுநிலை மாடம் கொண்ட, எல்லா வளத்தாலும் நிறைந்த மாளிகையில் மேன்மைக் குணத்தைக் கைவிட்டு, என்னை நெருங்கி வந்தது யாது காரணம்? என்று நீ கேட்பாயாக என்று தோழியிடம் தலைவி கூறினாள். *(22-23), (35 - 36)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **391** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் சிவபெருமான் பெருமையாக மார்க்கண் டேயனுக்காக இயமனை உதைத்த திருவிளையாடல் இடம் பெற்றுள்ளது. அதன்பின் வைகை ஆற்று நீரின் சிறப்புக் கூறப்பெற்று, அவ்வைகை ஆற்றில் மற்றொரு பெண்ணுடன் (பரத்தை) தலைவன் நீராடிய நிகழ்ச்சி வருணனை செய்யப் பெற்று, அச்செயல்களை எல்லாம் மறைத்து இப்பொழுது தலைவியை நெருங்கி வந்ததற்குக் காரணம் என்ன? என்று தலைவி தோழியிடம் கேட்பது போல் பாடல் பொருள் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

(சொ. ம்):

துணர் - பூங்கொத்து, செவ்வளி - பண், உளை - பண், கூவிளங்கண்ணி - வில்வமாலை, கிளை - பண், விளரி - பண், நான்மறைப் பாலர் - மாரக்கண்டேயர், காலன் - இயமன், தபுத்தி - மேலெடுத்து, விதலை - நடுக்கம், கலத்தி - புணர்ந்தும், மறிந்து - வலையால் மறித்து, உழை - மான்.

57. தன்னை வியந்து உரைத்தல்

விடம் கொதித்து உழிழும் படம் கெழு பகு வாய்க்
கண்டல் முள் முளைத்த கடி எயிற்று அரவக்
குழுவினுக்கு உடைந்து குளிர் மதி ஒதுங்க,
தெய்வப் பிறை இருந்த திரு நுதற் பேதையைக்
கண்டு உகண்டு அரவம் மயில் எனக் கலங்க,
நெடுஞ் சடைக் காட்டினை அடும் தீக்கொழுந்து என,
'தலை ஏது' அலையா நகு தலை தயங்க,
அணி தலைமாலையை நிறைமதித் திரள் எனப்
புடைபுடை ஒதுங்கி அரவு வாய் பிளப்ப,
ஒன்றினுக்கு ஒன்று கன்றிய நடுக்கொடு
கிடந்து ஒளி பிறழும் நெடுஞ் சடைப் பெருமான்,
(படை நான்கு உடன்று, பஞ்சவன் - துரந்து,
மதுரை வவ்விய கருநட வேந்தன்
அருகர்ச் சார்ந்து நின்று அருட்பணி அடைப்ப,
மற்று - அவன் தன்னை நெடுந்துயில் வருத்தி,
இறையவன் குலத்து முறையர் இன்மையினால்,
கருதி, தோரை கல்லொடு பிறங்க
மெய் அணி அளறாக் கைம் முழம் தேய்த்த
பேர் அன்பு உருவப் பசுக் காவலனை,
உலகினில், தமது முக் குறி ஆக,
மணி முடி வேணியும், உருத்திரக் கலனும்,
நிலவு உமிழ் புண்ணியப் பால் நிறச் சாந்தமும்,
அணிவித்து, அருள் கொடுத்து, அரசன் ஆக்கி,
அடுமால் அகற்றி, நெடு நாள் புரக்க
வையகம் அளித்த மணி ஒளிக் கடவுள்)
நெடு மதிற் கூடல் விரிபுனல் வையையுள்
பிடி குளிசெய்யும் களிறு அது போல,
மயில் எனும் சாயல் ஒரு மதி நுதலியை

Koviloor Digital Library

மருமமும், தோளினும், வரை அறப் புல்லி
ஆட்டுறும் ஊரன் அன்பு கொள் நலத்தினை,
பொன்னுலகு உண்டவர் மண் உலகு இன்பம்
தலைநடுக்குற்ற தன்மை போல,
ஒன்று அற அகற்றி உடன் கலந்திலனேல் -
அன்ன ஊரனை எம் இல் கொடுத்து,
தேரினும், காலினும், அடிக்கடி கண்டு,
நெட்டுயிர்ப்பு எறிந்து, நெடுங் கண் நீர் உகுத்துப்
பின்னும் தழுவ உன்னும் அவ் ஒருத்தி -
அவளே ஆகுவள், யானே - தவல் அருங்
கரு நீர்க் குண்டு அகழ் உடுத்த
பெரு நீர் ஆழித் தொல் உலகுழிக்கே.

துறை விளக்கம்:

மிகவும் சிவந்த வாயினை உடைய தலைமைப் பரத்தை யர்க்குத் தலைவி தன்னை மிகுத்துக் கூறியது. (வியந்து)

பாடற் பொருள்:

வற்றாத கடலைத் துயிலாக உடுத்த வட்ட வடிவாகிய பழமையான இவ்வுலகில் குளிர்ச்சி பொருந்திய நிலவானது -- நஞ்சு கொப்பளித்து வெளிப்படுத்துகின்ற படத்தைக் கொண்ட, பிளவு பட்ட வாயில் தாளை முள்போலக் கடிக்கும் பற்களை உடைய பாம்பினைக் கண்டு அஞ்சி ஒதுங்க (சந்திர கிரகணம்) *(1 - 3) (38 - 40)*

அந்தப் பாம்பினும் அழியாத் தன்மை உள்ள நண்ணுதல் பிராட்டியை (உமையவளை) நோக்கி, மயில் என்று கருதி நெளிந்து மனம் கலங்கவும், *(4 - 5)*

வெண்தலையானது (எலும்புமாலை) நெடுஞ்சடைக் காட்டினை, தன்னைக் கொளுத்தும் தீக்கொழுந்து என்று எண்ணி, இனி நமக்கு இடம் ஏது? என்று அலைந்து தயங்கவும் *(5 - 7)*

பாம்புகள் அணியப்பட்ட தலைமாலையை முழுமதிக் குலம் என்று கருதி, பக்கங்களில் ஒதுங்கித் தம் வாயைத் திறக்கவும், *(8 - 9)*

Koviloor Digital Library

இவ்வாறு ஒன்றின் பொருட்டு மற்றொன்று மிக்க அச்சப்பட்டுக் கிடக்கின்ற , ஒளி மிகுந்த செஞ்சடை உடையவன் சிவபெருமான். *(10 - 11)*

நான்கு படையுடன் போர் நடத்திப் பாண்டியனைத் துரத்தி, மதுரை நகரைக் கைக்கொண்ட கர்நாடக அரசன் சமணரைச் சார்ந்து ஆறுகத நெறியில் ஒழுகிச் சிவப்பணிகளைச் செய்யாமல் தடுத்த தனால், அக்கர்நாடக அரசனை நெடுந்தூக்கத்திலேயே இறக்கும்படி செய்து, அம்மன்னவன் குலத்தில் வாரிசு இல்லாமையால் - இரத்ததாரை சந்தனக் கல்லில் பெருகுமாறு சிவபெருமானின் திருமேனியில் பூசுவதற்கு உரிய சந்தனக் குழம்பாகத் தன் முழங்கையைத் தேய்த்த சிவஉருவு கொண்ட மூர்த்தி நாயனாரை *(15 - 19)*,

இவ்வுலகத்தின்கண் தமது அடையாளம் மூன்றும் விளங்கு மாறு சடைமுடியாகிய அழகிய மகுடம், உருத்திராக்கம் என்னும் ஆபரணம், பால்நிறப் புண்ணிய சாந்தமான திருநீறு அணியக் கொடுத்து அவரை அரசனாக்கி, ஆறுகத சமயத்தைத் தொலைத்துப் பல்லாண்டு நாட்டைக் காக்குமாறு, உயிர்களைப் புறச் சமயத்தில் இருந்து பாதுகாத்த கருணைக் கடவுள் சிவபெருமான் ஆவான். *(12 - 14, 20 - 25)*

அவரது நான்மாடக் கூடலில் புனல் நிறைந்த வைகை ஆற்றில் பெண் யானையை நீராட்டுகின்ற ஆண் யானை போல, மயிற் சாயலையும், மதி நுதலையும் உடைய ஒருத்தியை மார்பி னிடத்திலும், தோளினிடத்திலும் பலமுறை தழுவி, தன்னுடன் நீராடல் செய்வித்த தலைவன், *(28 - 30)*

சொர்க்க லோகத்தில் போகத்தை நுகர்ந்தவர்கள், மண்ணுலகத் தின் இன்பத்தை அருவறுக்கும் தன்மை போல, ஒருங்கே நீக்கி, அத்தலைவனுடன் நான் கூடவில்லையானால் நான் அத்தலை வனை எம் இல்லின்கண் போகவிடுத்து, தேர் மேல் செல்லுந் தோறும் சோலைகளில் விளையாடுந்தோறும், இடைவிடாமல் கண்டு பெருமூச்சு விட்டுக் கண்ணிலே நீர்சிந்தி மீண்டும் தழுவ எண்ணுகின்ற அவ்ஒருத்தியாகிய பொது மகளே ஆவேன். *(31 - 38)* என்று தலைவி தன்னை வியந்து கூறினாள்.

Koviloor Digital Library

(வி -ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **372** ஆவது பாடலின் விளக்கமாகும். பாடலில் சிவபெருமான் தலையில் உள்ள பொருள்கள் ஒவ்வொன்றும் மற்றொன்றிற்கு அஞ்சி ஒதுங்கிய தாகக் கூறப்பெற்று, அவ் இறைவனால் மூர்த்தி நாயனார் பாண்டியநாட்டுத் தலைவனாக்கப் பெற்ற சிறப்பு சிவபெரு மானின் சிறப்பாக முதற்பகுதியில் பேசப் பெற்றுள்ளது. அதன் பின் தலைவன் பரத்தையுடன் நீராடிப் பெற்ற இன்பத்தைப் பெருகச் செய்து, தன்னிடத்தில் அவன் மீண்டு வரவில்லை என்றால் , நானும் ஒரு பரத்தையாவேன் என்று தலைவியானவள் தன்னைப் பற்றி விதந்து கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்):

பகுவாய் - பிளந்தவாய், கண்டல் - தாழை, படைநான்கு - யானை, குதிரை, தேர், காலாட்படை, பஞ்சவன் - பாண்டியன், பசுக்காவலன் - மூர்த்திநாயனார், பால்நிறச் சாந்தம் - திருநீறு,

58. புதல்வன்மேல் வைத்துப புலவி தீர்தல்

**அடியவர் உளத்து இருள் அகற்றிலின் விளக்கும்,
எழு மலை பொடித்தலின் அனல் தெறும் அசனியும்,
கருங் கடல் குடித்தலின் பெருந்தழற் கொழுந்தும்,
மா உயிர் வௌவலின் தீவிழிக் கூற்றும்,
என் உளம் இருத்தலின் இயைந்து உணர் உயிரும்,
நச்சின கொடுத்தலின் நளிர் தரு ஐந்தும்,
கரு வழி நீக்கலின் உயர் நிலைக் குருவும்,
இரு நிலம் காத்தலின் மதியடை வேந்தும்,
ஆகிய மணி வேல் சேவல்அம் கொடியோன் --
வானக மங்கையும், தேன் வரை வள்ளியும்,
இரு புறம் தழைத்த திரு நிழல் இருக்கும் --
ஒரு பரங்குன்றம் மருவிய கூடல்,
பெருநதிச் சடைமிசைச் சிறுமதி சூடிய
நாயகன் திருவடி நண்ணலர் போல,
பொய் பல புகன்று, மெய் ஒளித்து, இன்பம்
விற்று உணும் சேரி விடாது உறை ஊரன்,
ஊருணி ஒத்த பொது வாய்த் தம்பலம்**

Koviloor Digital Library

நீயும் குதட்டினை ஆயின் -- சேயாய்!
நரம்பு எடுத்து உமிழும் பெரு முலைத் தீம் பாற்கு
உள்ளமும் தொடாது , விள் அமுது ஒழுக்கும்
குதலைவாய் துடிப்பக் குலக் கடை உணங்கியும்,
மண் உறு மணி எனப் பூழி மெய் வாய்த்தும்,
புடை மணி விரித்த உடைமணி இழுக்கியும்,
கடிகையும் சிகையும் சோர்ந்து கண் பனித்தும்,
பறையும் தேரும் பறிபட்டு அணங்கியும்,
மறிக்கட் பிணாவினர் இழைக்கும் சிற்றிலில்
சென்று அழியாது நின்று அயர் கண்டும்,
உறுவதும் இப் பயன், அன்றேல்,
பெறுவது என் பால், இன்று நின் பேறே.

துறை விளக்கம்:

பரத்தையர் பிரிந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க, வீட்டின் முன்புறத்தில் விளையாடிய புதல்வனை அணைத்துக் கொண்டு வீட்டிற்குள் வருவதைப் பார்த்த தலைவி, தான் பெற்ற மகனின் பெருமைகளைத் தானும் கூறி, தலைவன் மேல் கொண்ட ஊடலைத் தணித்துக் கொண்டது.

பாடற் பொருள்:

அடியவர் உள்ளத்து மன இருளை நீக்குதலால் தீபத்தையும், ஏழு மலையையும் அழித்து நீறு செய்தலால் அனல் போல் விழு கின்ற இடியேற்றையும், கரிய கடல் நீரை உண்டதால் வடவாக் கினியையும், மாமரமாய் நின்ற சூரன் உயிரைக் கைக்கொண்டதால் தீக்கண்களை உடைய இயமனையும், என் உள்ளத்தே இருத்தலால் பொருந்தி இருக்கின்ற அறிவாகிய ஆன்மாவையும், விரும்பின வற்றைக் கொடுத்தலால் பெருமை மிக்க ஐந்து தருக்களையும், பிறவி வருவதற்கு ஏதுவாகிய வழியை நீக்குதலால் ஆசிரி யரையும், பேர் உலகத்தைக் காத்தலால் மதி மரபுடைய வேந் தனையும் நிகராகக் கொண்ட, *(1 - 9)*

மணியுள்ள வேலை ஏந்திய சேவற் கொடியை உயர்த்திய முருகக் கடவுள் - தெய்வயானை நாச்சியாரும், மலையிடத்தே வளர்ந்த வள்ளி நாச்சியாரும் இருபக்கங்களிலும் தழைத் திருக்கின்ற, குளிர்ச்சி பொருந்திய நிழலின்கண் வீற்றிருப்பதற்கு

Koviloor Digital Library

இடமாகிய திருப்பரங்குன்றம் பொருந்திய மதுரையுள், பெரிய கங்கையை ஏற்ற சடைமேல் பிறைச் சந்திரனைச் சூடியுள்ள சிவ பெருமானது திருவடியை அடையாதவர் போல *(9 - 16)*,

புதல்வனே, பல பொய்களைச் சொல்லியும், உண்மையைக் கைவிட்டு இன்பத்தை காசுக்கு விற்று உண்டு வாழுகின்ற பரத்தையர் சேரியில் இடைவிடாது இருக்கின்ற உன் தந்தை போல, ஊர்ப் பொதுவாகிய ஊருணியை ஒத்த, யாவரக்கும் பொதுவாகிய பரத்தையர் தந்த தம்பலத்தை (வெற்றிலை) நீயும் மென்றனை ஆயின் -- நரம்பில் தோன்றி வெளிப்படுகின்ற மிக இனிய முலைப்பாலைக் குறித்து, மனத்தால் நினையாமல், உனது அமுதமாகிய எச்சில் ஒழுகுகின்ற மழலை வாயானது துடிக்கும் படி, நம் வீட்டுக் கடை வாயிலில் நின்று வருந்தியும், *(15 - 21)*

மண்ணில் புதைந்த மணிபோல் மண்புழுதி உன் உடலில் படவும், பொன்னும் மணியும் உடைய உன் இடையில் கட்டிய அரைஞாண் சரிந்தும், நெற்றிச் சுட்டியும் தலைமயிரும் அவிழவும், கண்ணீர் சிந்தியும், உன்னுடைய விளையாட்டுப் பொருளான சிறுபறையும் சிறுதேரும் பறித்துக் கொள்ளப்பட்டு வருந்தியும் *(22 - 25)*,

மான் போன்ற கண்களை உடைய பெதும்பைப் பெண்கள் அமைத்து விளையாடிய சிறு வீட்டிடத்தே போய் அழித்திடாமல் மயங்கியும் நின்று, நீ தளர்ச்சி உறுதலை யான் காண்பேன். (இத்தகைய துன்பங்களை எல்லாம் உன் தந்தை பரத்தையரின் தம்பலத்தைப் பெற்றது போல், நீயும் தம்பலத்தைப் பெற்றதால்) இத்தகைய பயன்களை அடைவாய். *(26 - 28)*

அவ்வாறு நீ இனிச் செய்யவில்லை என்றால் (தம்பலத்தை உண்ணவில்லை என்றால்) எனது முலைப்பாலை இப்பொழுதே பெறுவது உன்னுடைய பெரும் பேறாகும் என்று தலைவி மகனிடம் கூறினாள். *(28 - 29)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **396** ஆவது பாடலின் விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் முருகப் பெருமான் தீபம், இடி, வடவாக்கினித்தீ, இயமன் , ஆன்மா, ஐந்து தருக்கள்,

Koviloor Digital Library

ஆசிரியர், அரசன் ஆகியோருடைய செயல்களைப் பெற்று, அவர்களை ஒப்ப உள்ளவன் என்று குறிக்கப் பெற்றுள்ளது. அத்தகைய முருகப் பெருமான் இருக்கின்ற திருப்பரங்குன்றம் சூழ்ந்த மதுரையில் சிவபெருமான் எழுந்தருளி உள்ளார் என்று சிவ பெருமான் பெருமை குறிக்கப் பெற்றுள்ளது. பின் பரத்தையரிடம் சென்று வந்த தலைவனால், தலைவியின் வீட்டிற்கு அழைத்துவரப் பெற்ற, அவர்கள் பெற்ற மகனுக்குத் தலைவன் பரத்தையர் கொடுத்த தம்பலத்தை (வெற்றிலை) கொடுத்திருக்கிறான். அவ்வாறு கொடுத்ததை மகன் மென்று வருவதைப் பார்த்த தலைவி தனக்கு உரியவனாக அக்குழந்தையை ஏற்றுக் கொள்ளாது, அவனுடைய துன்பங்களைத் தலைவனுக்குக் கூறுவாள் போல, மகனிடம் கூறி அத்துன்பங்களைப் பெறாத வண்ணம் அதாவது பரத்தையர் உண்ணும் தம்பலத்தை உண்ணாது வந்தால் (தலைவனும் அவ்வாறு செய்யாது வந்தால்) மகன் தனது தாய்ப்பாலை உண்ண இயலும் என்று குறிப்பிடுகிறாள். இக்குறிப்பு தலைவனுக்கு இனிப் பரத்தையரிடம் செல்லாது வந்தால் தன்னுடைய இன்பத்தைப் பெறலாம் என்று கூறுவதாக அமைகிறது. எனவே மகனை நேர்கொண்டு தலைவி தன்னுடைய ஊடலைத் தணித்துக் கொண்டாள் என்ற குறிப்பு பாடலில் பெறப்படுகிறது.

(சொ - ம்):

அசனி - வடவைத்தீ, கூற்று -இயமன், ஐந்து தரு - அரி சந்தனம்,கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்ற மரங்கள், வானகமங்கை - தெய்வயானை, குலக்கடை - உரிமை வீட்டுக் கடைவாயில், உணங்கி - வருந்தி, பூழி - மண் தூசி, பிணாவினர் - பெதும்பைப் பெண்கள் (சிறுமியர்).

59. தலைவி தோழியொடு புகல்தல்

நடைமலை பிடித்த சொரி எயிற்று இடங்கரை
ஆழிவலவன் அடர்த்தன போல,
புன் தலை மேதி புனல் எழ முட்டிய
வரி உடற் செங் கண் வராலுடன் மயங்க,
உள் கவைத் தூண்டில் உரம் புகுந்து உழக்கும்

Koviloor Digital Library

நிறை நீர் ஊரர் -- நெஞ்சகம் பிரிக்கும்
பிணி மொழிப் பாணனுடன் உறை நீக்கி,
நூலொடு துவளும் தோல் திரை உரத்தின்
மால் கழித்து அடுத்த நரை முதிர் தாடி செய்
வெள்ளி குமிழ்த்த வெரூஉக் கட் பார்ப்பான்
கோலுடன் படரும் குறு நகை ஒருவி,
பூ விலைத் தொழில்மகன் காவல் கைவிட்டு,
திக்கு விண் படர் நதி, திரு மதி, கயிலை,
நாமகள், பெருங்கடல், நாற் கோட்டு ஒருத்தல்,
புண்ணியம், இவை முதல் வெள் உடல் கொடுக்கும்
புகழ்க் கவிப் பாவலர் புணர்ச்சி இன்பு அகற்றி,
எல்லாக் கல்வியும் இகழ்ச்சி செய் கல்வியர்
பெரு நகைக் கூட்டமும் கழிவு செய்து, இவ் இடை,
மயக்குறு மாலை மா மகள் எதிர --
ஒருவழிப் படர்ந்தது என்னத் திருமுகம்
ஆயிரம் எடுத்து வான்வழி படர்ந்து,
மண் ஏழ் உருவி மறியப் பாயும்
பெருங் கதத் திரு நதி ஒருங்குழி மடங்க,
ஐம் பகை அடக்கிய அருந் தவ முனிவன்
இரந்தன வரத்தால், ஒரு சடை இருத்திய
கூடல் பெருமான் குரைகழல் கூறும்
செம்மையர் போல -- கோடா
நம்மையும் நோக்கினர், சிறிது கண் புரிந்தே.

துறை விளக்கம்:

பரத்தையரைப் பிரிந்து வந்த தலைவன் தன்னிடத்தே ஊடலைத் தீர்ப்பதற்காக நெருங்கி உரையாடும் பொழுது அவனுடைய கூடலை ஏற்றுக் கொள்ளும் பின்னணியோடு ஊடுவது போலத் தலைவி பேசுதல் ஆகும். இத்துறையினைக் கலவி கருதிப் புலத்தல் என்றும் குறிப்பிடுவதுண்டு. அதாவது கலத்தலை விரும்பிப் பொய்மையாகத் தலைவனிடத்தில் ஊடல் கொள்ளுதல் ஆகும்.

பாடற்பொருள்:

நடக்கும் மலையை ஒத்த யானையைப் பற்றிக் கொண்ட கூர்மையான பற்களை உடைய முதலையைச் சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமால் கொன்றது போல, புன்மையான தலையை

Koviloor Digital Library

உடைய எருமையை நீர் மட்டத்திலிருந்து மேலே எழுமாறு தாக்கிய வரி பொருந்திய உடலையும், சிவந்த கண்களையும் உடைய வரால் மீன், (முதலையைச் சக்கரம் பாய்ந்து நீர் மட்டத்திற்கு மேலே வரச் செய்தது போல, இங்கு நீரில் குளித்துக் கொண்டிருந்த எருமையை நீருக்குள் இருந்த வரால் மீன் தாக்கி எருமையை நீர் மட்டத்திற்கு மேலே வரச் செய்தது) அத்தகைய வரால் மீன் தான் மயங்கும்படி தூண்டிலுக்குள்ளே வேகமாகப் புகுந்து நீரைக் கலக்கிய தடாகம் சூழ்ந்த ஊரை உடைய தலைவனே, *(1 - 6)*

திருமுகம் ஆயிரம் எடுத்து விண்ணில் பரவி, ஏழுலகமும் ஊடுருவி அங்கங்கு உள்ளவை எல்லாம் தலை தடுமாறும்படி, விரைந்து ஓடிய ஆகாய நதியானது ஓரிடத்தே அடங்குமாறு - புறப் பகையாம் ஐந்தையும், (ஐம்புலன்களால் ஏற்படும் பகை) தனக்குள் அடக்கிய அரிய தவத்தைச் செய்த பகீரதன் என்னும் முனிவன் கேட்ட வரத்தால் தன் சடையில் வைத்தருளிய, மதுரைச் சோமசுந்தரப் பெருமானது வேதம் ஒலிக்கின்ற திருவடிகளை வழி படுகின்ற நடுவு நிலைமை உடையவர்கள் போல, *(20 - 27)*

எம்மோடு மாறுபடாது எம்மையும் சிறிது நோக்கி (அருள் தந்து) கேட்போர் மனத்தை வேறுபடுத்துகின்ற நல்ல சொற்களை உடைய பாடல்களைப் பாடவல்ல, உம் நண்பனாகிய (தலைவனுடைய) பாணனுடன் உறைதலை விட்டும் *(6 - 7)*

முப்புரி நூல் கொண்ட தோல் சுருங்கி, மார்புவரை கருமை நீங்கி, நரை மிக்கு வளர்ந்த தாடியை உடைய சுக்கிரன் போல, ஒற்றைக்கண் பார்ப்பானாகிய (நண்பன்) ஊன்றுகோலுடனே விளங்கும் சிறுநகையைக் (சிரிப்பு) கைவிட்டு. *(8 - 11)*

பூவினை விற்கும் தொழிலை உடைய மகனது பாதுகாப் பையும் விட்டு, எட்டுத் திசையிலும், விண்ணகத்திலும், பெருகும் படி உள்ள சந்திரன், மற்றும் கயிலைமலை, கலைமகள், பாற் கடல், நான்கு கொம்புகளை உடைய ஐராவதம், புண்ணியம் ஆகிய இவற்றுக்கு உடல் வெளுத்தலைக் கொடுக்கும் (வெண்மை நிறம்) புகழை உடைய, கவிகளைப் பாடுகின்ற புலவர்களின் சேர்க்கையை விட்டுவிட்டும், *(12 - 16)*

Koviloor Digital Library

எல்லாக் கல்வியையும் கீழிப்படுத்துகின்ற கலவித் தொழிலை உடைய பரத்தையரது மகிழ்ச்சியை உடைய சேர்க்கை யையும் தொலைத்து, *(17 - 18)*

இந்த இடத்தில் (இல்லத்தில்) மாலை நேரத்தில் பெரிய (சிறப்புடைய) மகளாகிய என்னிடத்தில் ஒரோ வழியாய் வந்தது யாது காரணம்? எனத் தலைவி, தலைவனுடன் ஊடுவது போலத் தன் புணர்ச்சி விருப்பத்தை வெளிப்படுத்தினாள். *(18 20)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **392** ஆவது பாடலின் துறைக்குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் தலைவன் ஊரிலுள்ள நீர்வளமும், பின்பு சிவபெருமானின் சிறப்பாக ஆகாயக் கங்கையைப் பகீரதன் வேண்ட, அவர் தலையில் தாங்கியதும் குறிக்கப் பெற்றுள்ளது. பின், தலைவன் தன்னுடைய நண்பர்களான பாணனையும், அந்தணனையும், புலவரையும், பரத்தையரையும் விட்டு விட்டுத் தலைவியாகிய தன்னிடத்தில் அருளோடு (புணர்ச்சி இன்பத்தைத் தருவது) வந்த காரணம் என்ன? என்று புணர்ச்சி வேண்டும் அதே நேரத்தில் தலைவி ஊடுவது போலச் செய்யுளில் பொருள் அமைந்துள்ளது.

(சொ. ம்):

நடைமலை - நடக்கும் மலை, சொரிஎயிற்று - கூர்மையான பல், ஆழி வலவன் - திருமால், மேதி - எருமை, சிறுமதி - முழு நிலவு, நாற்கோட்டு ஒருத்தல் - நான்கு கொம்பினை உடைய யானை, (ஐராவதம்), கலவியர் - பரத்தையர், ஐம்பகை - ஐம்புலப்பகை, தவ முனிவன் - பகீரதன்.

60. வழிபாடு கூறல்

நிரை இதழ் திறந்து மது வண்டு அருத்தும்
விருந்து கொள் மலரும் புரிந்து உறை மணமும்,
செந்தமிழ்ப் பாடலும் தேக்கிய பொருளும்,
பாலும் சுவையும், பழமும் இரதமும்,
உடலும் உயிரும், ஒன்றியது என்ன --
கண்டும், தெளிந்தும், கலந்த உள் உணர்வால்,

Koviloor Digital Library

பாலும், அமுதமும்,தேனும். பிலிற்றிய
இன்பு அமர் சொல்லி, நண்பும், மனக் குறியும்,
வாய்மையும், சிறப்பும், நிழல் எனக் கடவார் --
விண்ணவர் தலைவனும் வீயா மருந்தும்,
அளகைக்கு இறையும் அரும் பொருள் ஈட்டமும்,
கண்ணனும் காவலும், முனியும் பசுவும்,
ஒன்றினும் தவறா ஒருங்கு இயைந்தனபோல்,
நீடி நின்று உதவும் கற்புடை நிலையினர்
தவம் கற்று ஈன்ற நெடுங் கற்பு அன்னை!
(முன் ஒரு நாளில் முதல் தொழில் இரண்டினர்,
பன்றியும், பறவையும் நின்று உரு எடுத்து,
கவையா உளத்துக் காணும் கழலும்,
கல்வியில், அறிவில், காணும் முடியும்,
அளவு சென்று எட்டா அளவினர் ஆகி,
மண்ணும் உம்பரும், அகழ்ந்தும் பறந்தும்,
அளவா நோன்மையில் நெடு நாள் வருந்திக்
கண்ணினில் காணாது, உளத்தினில் புணராது,
நின்றன கண்டு, நெடும் பயன் படைத்த
திரு அஞ்செழுத்தும் குறையாது இரட்ட,
இரு நிலம் உருவிய ஒரு தழல் - தூணத்து,
எரி, மழு, நவ்வி, தமருகம், அமைத்த
நாற் கரம், நுதல்விழி, தீப் புகை கடுக் களம்,
உலகு பெற்று எடுத்த ஒரு தனிச் செல்வி,
கட்டிய வேணி, மட்டு அலர் கடுக்கை,
ஆயிரம் திருமுகத்து அருள் நதி, சிறுமதி,
பகை தவிர் பாம்பும், நகை பெறும் எருக்கமும்,
ஒன்றிய திருஉரு நின்று நனிகாட்டிப்
பேர் அருள் கொடுத்த) கூடல் அம் பதியோன்
பதம் இரண்டு அமைத்த உள்ளக்
கதி இரண்டு ஆய ஓர் அன்பினரே.

துறை விளக்கம்:

தலைவனும் தலைவியும் கற்பு வாழ்க்கையில் தனித்து வாழும்பொழுது அவர்கள் வாழ்வைக் காணவந்த செவிலித் தாய்க்கு அவர்களின் சிறப்பை எடுத்துத் தோழி கூறுவதாகும்.

Koviloor Digital Library

பாடற்பொருள்:

விண்ணகத்தில் உள்ளவர்களுக்குத் தலைவன் (இந்திரன்) இறவாமைக்குக் காரணமான அமிழ்தமும், அளாகர்புரி என்னும் தலைநகருக்குத் தலைவனது (குபேரன்), கிடைத்தற்கு அருமையான பொருள் குவியலும், திருமாலது காவல் தொழிலும், வசிட்ட முனிவனும் , அவனது காமதேனுவும் யாது ஒன்றினாலும் கவறு படாமல் ஒன்றுபட்டு இயைந்தன போல, மிகவும் நிலைபெற்றுப் பயனைத் தருகின்ற கற்பைத் தம்மிடத்தே உடையோரது தவத்தைக் கொண்ட, தலைவியைப் பெற்ற கற்பு மிகுந்த அன்னையே, *(10 - 15)*

முன்னொரு காலத்தில் மூன்று தொழில்களில் இரண்டினை உடைய திருமாலும், பிரமனும் பன்றியும், அன்னப் பறவையும் என்ற உருவெடுத்து, மாறுபடாத உள்ளத்தினால் காணத் தக்க திருவடியையும், நல்ல நூற் கல்வியினாலும், அறிவினாலும் காணத் தக்க திருமுடியையும், காணமுடியாத அளவினை உடையவராகிப் பூமியிலும், ஆகாயத்திலும் கிடந்தும், பறந்தும் அருகில் செல்ல முடியாதவராக நெடுங்காலம் வருத்தம் உற்றார்கள். அவர்கள் கண்ணினால் காணாமலும், உள்ளத்தினால் அறியாமலும் நின்ற நிலைகளைக் கண்டு அழியாப் புகழ் பெற்ற, பயன் தருகின்ற, திருஐந்தெழுத்தை நிறைவாக உச்சரிக்க, இருநிலம் கடந்து ஒரு அக்கினிக் கம்பத்தினின்று, தீ, மழு, மான், தமருகம் அமைந்த நான்கு கைகளும், நெற்றிக் கண்ணும், காளகண்டமும், உலகங்களை எல்லாம் பெற்று வளர்த்த ஒப்பற்ற பிறிவில்லாத அருட் சத்தியும், சுற்றிக் கட்டிய சடைமுடியும், தேன்மலர்க் கொன்றை மாலையும், அருள்போலும் கங்கையும், இளம்பிறையும், பாம்பும், எருக்கமாலையும் கொண்ட பெரிய திருவுருவத்தை நீங்காமல் வெளிப்படக் காட்டிப், பேரருளைத் தந்த, மதுரையை இடமாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுளது, *(16 - 34)*

இரண்டு திருவடிகளையும் உள்ளத்தே உடைய, அன்பை ஒத்த தலைவரும், - ஆவின் பாலும், தேவார்மிதமும், செந்தேனும் வெளிப்படுகின்ற இனிமை பயக்கும் சொல்லை உடைய தலைவியும் *(7-8)*

Koviloor Digital Library

நெருங்கிய இதழ்களை விரித்து வண்டுகள் விருந்தினர் போல, தேனை அருந்துகின்ற மலரும், அம் மலருடன் நீங்காது இருக்கின்ற மணமும் - செந்தமிழ்ச் செய்யுளும் நிறைந்த அதன் பொருளும் - பாலும் சுவையும் - பழமும் இரசமும் - உடம்பும் உயிரும் பொருந்தியது போல, கண்டும் தெளிந்தும் கலந்த தங்கள் நட்பும், மனக்குறிப்பும், வாய்மையும், சிறப்பும் ஆகியவற்றைத் தத்தம் நிழல் போலப் பிரிவிலர் ஆவர். *(1 - 9)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **301**ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் செவிலித்தாய் விண்ண கத்துப் பொருள்கள் போல மாறுபடாத கற்பினை உடையவள் என்று சிறப்பிக்கப் பெற்றுள்ளாள். அதன்பின் இறைவனின் பெருமையாகத் திருமாலும், பிரமனும் அடி முடி தேடித் தோற்ற பொழுது, அவர்கள் ஐந்தெழுத்தினைச் சொல்ல, சிவபெருமான் நெருப்புப் பிழம்பாய்த் தன்னுடைய அவயவங்களோடு தோன்றி அருள் கொடுத்த செய்தி கூறப்பெற்றுள்ளது. பின்னர் தலைவனும் தலைவியும் மலரும் மணமும் போல, தமிழும் பொருளும் போல, பாலும் சுவையும் போல, பழமும் இரசமும் போல, உயிரும் உடம்பும் போலப் பிரியாது பல சிறப்புக்களால் வாழ்ந்து வருகின்றனர் என்று தோழி செவிலியிடம் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்)

இன்புஅமர் சொல்லி - இனிய சொல்லை உடைய தலைவி, வீயா அமிழ்து - இறப்பைத் தராத அமிழ்தம், அளகை - அளகாபுரி என்னும் நகர், கண்ணன் - திருமால், முன்தொழில் இரண்டு - படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்றில் படைத்தலும், காத்தலும், இரட்ட - கூற, தமருகம் - உடுக்கை,

Koviloor Digital Library

61. ஆதரம் கூறல்

நெடு வரைப் பொங்கர்ப் புனம் எரி கார் அகில்
கரும்புகை வானம் கையுறப் பொதிந்து,
தருநிழல் தேவர் தம் உடல் பனிப்பப்
படர்ந்து எறி கங்கை விடும் குளிர் அகற்றும்
பொன்அம் பொருப்ப! நின் உளத்து இயையின் --
கனல்தலைப் பழுத்த திரள் பரல் முரம்பு,
வயல் வளை கக்கிய மணி நிரைப் பரப்பே!
அதர் விரிந்து எழுந்த படர்புகை நீழல்,
பொதுளிய காஞ்சி மருது அணி நிழலே!
தீ வாய்ப் புலிப் பற் சிறு குரல் எயிற்றியர்,
கழுநீர் மிலையும் வயல் மாதினரே!
அயற்புலம் எறியும் எயினர் மாத் துடி,
நடு நகர்க்கு இரட்டும் களி அரி கிணையே!
இருள் கவர் புலன் எனச் சுழல்தரும் சூறை,
மதுமலர் அளைந்த மலையக் காலே!
எழுசிறை தீயும் எருவையும் பருந்தும்,
குவளை அம் காட்டுக் குருகொடு புதாவே!
வலி அழி பகடு வாய் நீர்ச் செந்நாய்,
தழை மடி மேதியும் பிணர் இடங்கருமே!
பட்டு உலர் கள்ளி நெற்றுடை வாகை,
சுருள் விரி சாலியும் குலை அரம்பையுமே!
(வட திரு ஆலவாய் , திருநடுவூர்,
வெள்ளியம்பலம், நள்ளாறு, இந்திரை,
ப்ஞ்சவனீச்சரம், அஞ்செழுத்து அமைத்த
சென்னி மாபுரம், சேரன் திருத்தளி,
கன்னி செங்கோட்டம், கரியோன் திருஉறை --
விண் உடைத்து உண்ணும் கண்ணிலி ஒருத்தன்,
மறிதிரைக் கடலுள் மா எனக் கவிழ்ந்த
களவு உடற் பிளந்த ஒளி கெழு திரு வேல்,
பணிப்பகை ஊர்தி, அருட்கொடி இரண்டுடன்,
அருவிஅம் சாரல் ஒரு பரங்குன்றம் --
சூழ்கொள இருந்த) கூடல்அம் பெருமான்
முழுதும் நிறைந்த இரு பதம் புகழார்
போம் வழி என்னும் கடுஞ் சுரம் மருதம் ! --
மாமை ஊரும் மணி நிறத்து இவட்கே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைவன் பிரியக் கருதிய பொழுது, தோழி அவனிடம் நீ தலைவியை உடன் கொண்டு செல்வாயானால், நீ கடந்து செல்லு கின்ற தீப் போன்ற, வெம்மை மிகுந்த வழியும், குளிர்ச்சி பொருந்திய தடாகத்தை (குளத்தை)ப் போன்று விளங்கும் என்று கூறுவதாகும்.

பாடற் பொருள்:

நெடிய மூங்கில் வளர்ந்த மலைச் சாரலில் தினைப்புனம் அமைக்கும் பொருட்டு, வெட்டப்படுகின்ற வயிரம் பொருந்திய அகில் மரங்களைக் கொளுத்துகின்ற, மிக்க புகையானது விண்ணில் மூடி, கற்பக நீழலை இடமாக உடைய தேவர்களது உடல் நடுங்கும்படிப் பரவி, அலைகளை உடைய ஆகாய கங்கை தருகின்ற குளிரை நீக்குகின்ற அழகிய மலையை உடைய தலைவனே, உன் உள்ளம் சம்மதித்தால் *(1-5)*

மாமை நிறம் பொருந்திய தலைவியாகிய இவளுக்கு - பழுத்த திரண்ட பரக்கற்களை உடைய பாறைகள், வயல் சங்குகள் ஈன்ற கூட்டமாகிய முத்துக்கள் போன்றதாகும். *(6 -7)*

அந்த வழியில் விரிந்து எழுந்த, பரந்த புகை நிழல் இவளுக்குத் தளிர் நிறைந்த காஞ்சி, மருத மரங்களின் நல்ல நிழல் போன்றதாகும். *(8 - 9)*

தீப் போன்ற வாயினை உடைய புலியினுடைய பற்களை அணிந்துள்ள கழுத்தைக் கொண்ட பாலைநிலப் பெண்கள், கழுநீர்ப் பூக்களைக் களைகளாகப் பறிக்கின்ற வயப் பெண்கள் ஆவர். *(10- 11)*

செல்லும் வழியில் முழக்குகின்ற மறவர்களின் மரத்தால் செய்த துடிப் பறையானது, நெடிய நகரத்தில் ஒலிக்கின்ற இனிமை பயக்கும் இந்திரனுக்கு உரிய மருதநிலப் பறையாகும். *(12-13)*

மனத்தே இருளைக் கொண்ட கீழ் மக்களது ஐம்புலன்கள் போல, சுழலுகின்ற சூரைக் காற்றானது, மலர்த்தேனோடு பரந்து வீசுகின்ற தென்றல் காற்றாகும். *(14 - 15)*

Koviloor Digital Library

அங்கு திரியும் பருந்துகளும், கழுகுகளும் குவளை மலர் களைக் கொண்ட வனத்தில் உள்ள நாரைகளும், கொக்குகளுமாக விளங்கும், (16-17)

வெப்பத்தால் வலிமை குன்றிய யானைகளும், எச்சில் ஒழுகும் செந்நாய்களும், பால் பெருகும் மடிகளை உடைய எருமைகளும், சொரிமேனியை உடைய முதலைகளும் ஆகும். கிளைகள் வெந்து உலர்ந்த கள்ளி மரங்களும், வாகை மரமும் அவளுக்கு நெற்பயிரும், வாழையும் ஆகும். (20 - 21)

வடமதுரை, திருநடுவூர், வெள்ளியம்பலம், திருநள்ளாறு, இந்திரை, பஞ்சவனீச்சுரம், பஞ்சாட்சரம் அமைத்த சோழபுரம், சேரன் திருத்தளி, அழிவில்லாத திருச்செங்கோட்டம், திருமாலது அழகிய சோலையும், (22-26)

விண்ணகத்தில் உள்ள தேவர்களை அழித்து உண்ணும் கண் ணோட்டம் இல்லாத சூரபதுமனுடைய-- கடலில் தோன்றிய மாமரமாகிய, தலைகீழாக முளைத்துத் தோன்றிய அவனது உடலைக் கூறாக்கிய, கூரிய வேல் ஏந்திய, பாம்புக்குப் பகை யாகிய மயில் ஊர்தியை உடைய முருகக் கடவுள், தெய்வயானை நாச்சியாரும், வள்ளி நாச்சியாருமாகிய இரண்டு தேவியருடன் எழுந்தருளியிருக்கும் வளமை கொள்ளும்படி நிறைந்துள்ள, அருவிச் சாரலை உடைய ஒப்பற்ற திருப்பரங்குன்றமும்,

(27 - 32)

ஆகிய திருத்தலங்கள் புடைசூழ இருந்த மதுரை நாயகனாம் சோமசுந்தரக் கடவுளின் இரண்டு திருவடிகளையும் புகழ்ந்து உரையாதார் மனம் போல, நீ போகும் வழி என்று சொல்லப் படுகின்ற பாலைநிலமும் அவளுக்கு மருதநிலம் ஆகும் என்று தோழி தலைவனிடம் கூறினாள். (33 - 36)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 202 ஆவது பாடல் துறைக்குரிய விளக்கமாகும். பாடலில் தலைவனின் ஊரின் சிறப்பு முதலில் கூறப்பெற்று, பின் அவனோடு தலைவி உடன் சென்றால், உடன் செல்லும் அவளுக்குத் துன்பம் தருகின்ற பாலை நிலத்துப் பொருள்கள் இன்பத்தைத் தரும் என்று ஒரு

Koviloor Digital Library

பட்டியலிட்டு, ஆதலால் அவள் வருந்த மாட்டாள், உடன் அழைத்துச் செல்க என்று தோழி தலைவனிடம் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் வடதிரு ஆலவாய் முதலாகத் திருப்பரங்குன்றம் ஈறாகப் பல திருத்தலங்கள் சூழ்ந்துள்ள மதுரை நகரத்திற்குத் தலைவன் என்பது சிவ பெருமானின் பெருமையாகக் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

பொங்கற்புனம் - தினைப்புனம், பரல் முரம்பு - பரக்கற்களைக் கொண்ட பாறைகள், எயிற்றியர் - பாலைநிலப் பெண்கள், துடி - பறை, கிணை - பறை, கால் - காற்று, சென்னிமாபுரம் - சோழபுரம், கரியோன் - திருமால், கண்ணிலி - கருணையில்லாத, பணிப்பகை ஊர்தி - மயில் வாகனம், மாமை ஊரும் - மாமை நிறம் பொருந்திய.

62. முகம் கண்டு மகிழ்தல்

நிறைமதி புரையா! நிறைமதி புரையா!
'தேரான் தெளிவு' எனும் திருக்குறள் புகுந்து
குறைமதி மனனே! நிறைமதி புரையா!--
உவர்க் கடற் பிறந்தும், குறைஉடல் கோடியும்,
கருங் கவைத் தீ நாப் பெரும் பொறிப் பகுவாய்த்
தழல்விழிப் பாந்தள்தான் இரை மாந்தியும்,
மிச்சில் உமிழ்ந்து மெய்யுள் கறுத்தும்,
தணந்தோர்க்கு எரிந்தும் மணந்தோர்க்கு அளித்தும்,
குமுதம் மலர்த்தியும் கமலம் குவித்தும்,
கடல் சூழ் உலகில் மதி நடு இகந்தும் --
பெரு மறை கூறி அறை விதிதோறும்,
'முத் தழற்கு உடையோன் முக்கட் கடவுள்' என்று
உய்த்திடும் வழக்குக் கிடக்க என்று, ஒருகால்,
வானவர் நதிக் கரை மருள் மகம் எடுத்த
தீக்குணத் தக்கன் செருக்களம் தன்னுள்,
(கண்தொறும் விசைத்த கருப்புத் தரளமும்,
வளை உமிழ் ஆரமும், சுரிமுகச் சங்கும்,
வலம்புரிக் கூட்டமும் , சலஞ்சலப் புஞ்சமும்,
நந்தின் குழுவும், வயல்வயல் நந்தி
உழவக் கணத்தர் படைவாள் நிறுத்தும்)
கூடற்கு இறையோன் குரை கழற்படையால்

Koviloor Digital Library

ஈர் - எண் கலையும் பூழிபட்டு உதிர
நிலனொடு தேய்ப்புண்டு அலமந்து உலறியும்,
சிதைந்து நைந்து எழு பழித் தீ மதி புரையா!--
முண்டகம் மலர்த்தி முதிராது அலர்ந்தும்,
அமுதம் நின்று இரைத்தும், அறிவு அறிவித்தும்,
தீக் கதிர் உடலுள் செல்லாதிருந்தும்,
திளையாத் தாரைகள் சேரா
முளையா வென்றி இவள் முகமதிக்கே!

துறை விளக்கம்:

தன் அருகில் தலைவி வந்ததால் மகிழ்ந்த அவள் முகத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதலாகும்.

பாடற் பொருள்:

தேரான் தெளிவு என்று தொடங்குகின்ற திருக்குறளின் பொருளை ஆராய்ந்து அறிந்தும், அறிவு குறைந்த மனமே (தலைவிக்கு), முழுமதி என்றும் ஒவ்வாது, முழுமதி எத் துணையும் ஒவ்வாது, முழுமதி எவ்வாற்றானும் ஒவ்வாது. *(1-3)* (எவ்வாறு என்றால்,)

உப்புக் கடலில் பிறந்தும், தன்னுடைய உடலானது கூனியும் (பிறைச்சந்திரன் நிலை) - கருமையாகிய, பிளவுபட்ட நாக்கையும், புள்ளிகளை உடைய வாயினையும், தீப்போன்ற விழிகளையும் உடைய ராகு என்னும் பாம்பினால், முதலில் இரையாக உண்டு, பின் உமிழப்பட்டுத் தன் உடல் கருத்தும், (ஆதலால் ஒவ்வாது) *(4 - 7)*

பிரிந்தவரைச் சினந்தும், புணர்ந்தவரை மகிழ்வித்தும், குமுத மலரை மலர்வித்தும், தாமரை மலரைக் கூம்புவித்தும், கடலால் சூழப்பட்ட உலகத்தே மாதத்தின் மத்தியில் மறைந்தும், (அமாவாசை) *(8- 10)* (அதனால் ஒவ்வாது)

பெரிய வேதங்களாகிய மறைகள் வெளிப்படையாகக் கூறு கின்ற விதிகள் எல்லாம் - முத்தழல் எழுப்பிச் செய்யப் படுகின்ற வேள்விக்குத் தலைவன் - ஞாயிறு, திங்கள், தீ என்ற மூன்று கண்களை உடைய சிவபெருமான்தான் என்று உறுதியாகச் சொல்லிய முறைமை இருக்க, ஒருகாலத்தில் தேவர்களுடன்

Koviloor Digital Library

காசியில் கங்கைக் கரையினிடத்தே தனது அறியாமையால் யாகம் செய்யத் தொடங்கிய, தீய குணமுடைய தக்கனுடைய போர்க்களத்தில் (சந்திரன் தேய்க்கப்பட்டான்) யாரால் என்றால் -

கணுக்கள் தோறும் சிதறிய கருப்பு முத்தங்களும், சங்குகள் ஈன்ற முத்தங்களும், இடம்புரிச் சங்குகள் ஈன்ற முத்தங்களும், வலம்புரிச் சங்கின் முத்தங்களும், சலஞ்சலம் என்னும் சங்கத்தின் முத்தங்களும், இப்பி ஈன்ற சங்குக் கூட்டங்களும், வளமை பொருந்திய இடத்தில் கூட்டமாகக் கூடி உழவர்கள் உழுவ தற்காகச் செலுத்தும் கலப்பையின் கொழுவை இடரப் பண்ணு வனவாகும். *(11 - 19)*

அத்தகைய மருதநிலம் சூழ்ந்த மதுரை நகரத்தின் தலை வனாகிய சோமசுந்தரக் கடவுளது நூபுரம் ஒலிக்கின்ற திருவடி யாகிய ஆயுதத்தால் பதினாறு கலைகளும், (சந்திரனிடத்தே உள்ள) குருதி பட்டுச் சிந்துமாறு, நிலத்தோடு தேய்க்கப்பட்டு, சுழன்று அலறியது திங்கள். அத்தகைய பழி உள்ள திங்கள் இவள் முகத்திற்கு ஒவ்வாது. *(20 - 24)*

செந்தாமரைப் பூவை வெளுக்கச் செய்யும், என்றைக்கும் வாடாதும், எப்பொழுதும் மலர்ந்து காணப்பட்டும், அமுதம் குறையாது பொருந்தியும், தன் கருத்தை அறிவித்தும், வெண் மையான ஒளி மிகுந்த கதிர் உடலில் மறையாது இருந்தும், விண் மீன்களோடு சேராது இருந்தும், காலையில் மறைந்து மாலையில் தோன்றாமலும் உள்ள. இத்தகைய குணங்களுடைய இவளுடைய முகமாகிய மதிக்கு முழுநிறைச் சந்திரனானது எவ்வாற்றானும் ஒப்பாகாது என்று தலைவன் தலைவியின் முகத்தின் பெரு மையைக் கூறினான். *(25 - 29)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 166 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். திருக்குறள் இடம்பெற்ற பாடல் இது. "தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் - தீரா இடும்பை தரும் (குறள் - 510) பாடலின் முதற் பகுதியில் சந்திரனுடைய குணங் கள் கூறப்படுகின்றன. உப்புக் கடலில் பிறப்பு, தேயும் உடல், ராகு கேதுவால் உண்ணப்பட்டு உமிழ்தல், ஊடல், கூடல்

Koviloor Digital Library

உடையோர்க்கு மாறுபட்டுத் தோன்றல், குமுதத்தை மலர்வித்துத் தாமரையைக் கூம்பச் செய்தல், மாதத்தின் ஒரு பகுதியில் மறைதல் சிவபெருமானால் தேய்க்கப்படுதல் என்ற குணங்களைக் கொண்ட சந்திரன் தலைவியின் முகத்திற்கு ஒவ்வாது என்ற பொருள் முடிவைப் பாடல் கொண்டுள்ளது. இடையில் சிவபெருமானால் தேய்க்கப்படுதல் என்ற பகுதியில் தக்கனின் யாகம் கூறப்பெற்று, அவனோடு போர் செய்தமையும் கூறப் பெற்றுள்ளது. அதன்பின் பலவகை முத்துக்களைக் கூறி அவை உழவரின் உழுவுத் தொழிலுக்குத் தடை செய்கின்றன என்றும், அத்தகைய வளம் கொண்ட மதுரை என்றும், மதுரைக்குத் தலைவன் சிவபெருமான் என்றும் அவனால் சந்திரன் தேய்க்கப் பெற்றான் என்றும் சிவ பெருமானுடைய பெருமை கூறப்பெற்றுள்ளது. இறுதியில் சந்திரனுக்குரிய குணங்கள் தலைவியின் முகத்திற்கு இல்லை என்பதும் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

நிறைமதி - முழுச்சந்திரன், புரையா - ஒப்பாகா, பாந்தள் - இராகு என்னும் பாம்பு, தணந்தோர் - பிரிவுத் துயர் உடையோர், முண்டகம் - தாமரை,

63. ஆயத்து உய்த்தல்

வடவனத்து ஒரு நாள் மாறுபட்டு எதிர்ந்து
வழி நடம் தனது மரக்கால் அன்றி,
முதல் தொழில் பதுமன் முன்னாய், அவ் உழி
மாந்தலைக் கரத்தினில் கூடை வயக்கி,
தூக்கல் வளையுடன் தொடர்பதம் எறிந்து,
மற்று அதன் தாள் அம்புத்திரி ஆக்கி,
நிமிர்தது எறி காலில் கடைக்கண் கிடத்தி,
பாணியில் சிரம் பதித்து, ஒரு நடை பதித்து,
கொடுகொட்டிக்குக் குறி அடுத்து எடுக்கும்
புங்கம், வாரம், புடைநிலை பொறுத்து,
சச்சபுடத்தில், தனி எழு மாத்திரை,
ஒன்றை விட்டு ஒரு சீர் இரண்டுற உறுத்தி,
எடுத்துத் துள்ளிய இனமுத்திரைக்கு,
மங்கலப்பாணி மாத்திரை நான்குடன்

Koviloor Digital Library

சென்று எறிந்து ஒடுங்கும் துருமிடை திருத்தி,
ஞெள்ளலில் குனித்த இரு மாத்திரைக்குப்
பட்டடை எடுக்கப் புலுதம் பரப்பி,
புறக் கால் மடித்து, குறித்து எறி நிலையம்
பதினான்கு அமைத்து, விடு மாத்திரைக்கு
வன்மமும் பிதாவும் பாணியில் வகுத்து,
வட்டம் கொடுக்கும் இந்திரை பணிக்கு
மாத்திரை ஆறுடன் கும்பம் பதித்து,
வலவை இடாகினி மண் இருந்து எடுத்த
காலுடன் சுழல ஆடிய காளி
நாணி நின்று ஒடுங்க, தானும் ஓர் நாடகம்,
பாண்டரங்கத்து ஒரு பாடு பெற்று அமைந்த
மோகப் புயங்க முறைத் துறை தூக்கி,
அதற்குச் சாரணி அருட்கரம் ஒன்றில்
பாணி இரண்டும் தாளம் ஆக்கி,
ஒரு தாள் மிதித்து, விண் உற விட்ட
மறு தாள்மலரில் மலர்க்கரம் துடக்கி,
பார்ப்பதிப் பாணியைத் துடி மணி எடுப்ப,
சுருதியைத் தண்டி வலி கொண்டு அமைப்ப,
முதல் ஏழ் - அதனை ஒன்றினுக்கு ஏழ் என
வீணை பதித்துத் தானம் தெரிக்க,
முன் துடி மணியில் ஒற்றிய பாணியை
நாதம் கூட்டி மாத்திரை அறுத்து,
மாங்கனி இரண்டில ஆம் கனி ஒன்றால்
முன் ஒரு நாளில் முழுக் கதி அடைந்த
அம்மைப் பெயர் பெறும் அருட் பேய் பிடிப்ப,
பூதமும், கூளியும்,பேயும், குனிப்ப,
அமரர் கண் களிப்ப -- ஆடிய பெருமான்
மதுரை அம் பதி எனும் ஒரு கொடிமடந்தை
சீறிதழ்ச் சாதிப் பெரு மணம் போல,
நின் உளம் நிறைந்த நெடுங் கற்பு - அதனால்
வினை உடல் புணர வரும் உயிர் பற்றிப்
புண்ணியம் தொடரும் புணர்ச்சி போல,
காலம் உற்று ஓங்கும் நீள்முகில் கூடி
மணி தரு தெருவில் கொடி நெடுந் தேரும்,
நாற் குறிப் புலவர் கூட்டு எழு நனி புகழ்
மருந்து அயில் வாழ்க்கையர் மணி நகர் உருவின

Koviloor Digital Library

உருள் எழு பூழியும், அவ் உருள் பூண்ட
கலின மான் துகளும் கதிர் மறை நிழலின்
நின்று, முன் இட்ட நிறைஅணி பொறுத்து,
பெருங் குலைக் கயத்துக் கருந் தாட் கழுநீர்
நிறைவினுள் பூத்த தாமரை ஒன்று என,
நின் உயிர் அய நாப்பண்
மன்னுக, வேந்தன் வரவினுக்கு எழுந்தே.

துறை விளக்கம்:

மர்ரே பதிப்பில் ஆயத்து உய்த்தல் என்ற துறையில் இப்பாடல் குறிக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் பழைய பதிப்புக்ககளில் தேர்வரவு கூறல் என்ற துறையின் கீழ் பாடல் அமைந்துள்ளது. பாடலின் பொருள் அடிப்படையில் தேர்வரவு என்ற துறையே பொருத்தமுடையதாகும். பிரிந்து சென்ற தலைவன் கார் காலத்தில் தேரில் திரும்பி வருவதைக் கண்ட தோழி, தலைவி மனம் மகிழும்படி கூறியது.

பாடற் பொருள்:

பண்டொரு நாள் திருவாலங்காட்டின் கண் தன்னோடு மாறுபட்டு எதிர்ந்து, தனக்குரிய நடனமாகிய மரக்கால் என்னும் கூத்தினை விட்டுவிட்டு,(காளியானவள்) முத்தொழிலில் முதல் தொழிலைச் செய்கின்ற படைத்தல் தொழிலை உடைய நான் முகன் முன்னே - மான்தலை என்னும் முத்திரையைக் கொண்ட கையை இரட்டைக் கையாக்கித் தூக்குதலும், வளைதலும் உடைய காலை வீசி, *(1 - 5)*

ஆடுகின்ற அக்கூத்தின் தாளம் புத்திரி தாளமாக அமைய, முன்னர்த் தூக்கி வளைத்த காலை நிமர்த்தி வீசி, வீசிய காலினைக் கடைக்கண்ணால் பார்த்து, கையிலே தலையினைத் தாங்கி அதற்கு ஐவகை நடைகளில் ஒரு நடையை மேற்கொண்டு, இறைவன் ஆடுவதற்கு உரிய கொடுகட்டி என்னும் கூத்திற்கு உரிய அடை யாளமாக எடுக்கும் குங்கம், வாரம், புடை, நிலை என்னும் நான்கு உறுப்புக்களை மேற்கொண்டு, மற்றொரு நடையான திசிர நடைக்கு உரிய சச்சபுடம் என்னும் தாளத்திற்குச் சிறப்பாக எழுந்த அலகு எட்டனுள் ஓர் அலகைத் தள்ளி, ஒரு சீரை இரண்டு கூறாக வகுத்து ஆடிய கூத்திற்கு முன் கூறப்பெற்ற மான்தலை

Koviloor Digital Library

கைக்கு இனமாகிய முத்திரைக்கு, மங்கலமாகிய தாளத்திற்கு நான்கு அலகுகளோடு சென்று காலை வீசியும், ஒடுக்கியும், மீளுகின்ற துரு மிடையைத் திருத்தமுறச் செய்தும், *(6 - 15)*

வள்ளல் என்னும் மூன்றாம் காலத்தில் தொழில் செய்தற்கு அடிமனை கோலுதல் பொருட்டு , முற்படப், புலிதம் என்னும் இரண்டாம் காலத்தைப் பெரிதும் விரித்து, புறக்காலை மடித்து, குவித்து வீசுவதாகிய கூத்திற்குப் பதினான்கு அலகுகள் அமைத்து, அவற்றுள்ள கழிமானமாக விடும் இரண்டு அலகிற்குத் தாளங்களுள் வன்மமும், பிதாவும் ஆகிய தாளங்களை வகுத்துக் கொண்டு, வட்ட வடிவத்தைத் தோற்றுவிப்பதாகிய, இந்திரை என்னும் தொழிலுக்கு ஆறு மாத்திரை அளவாகிய கும்பம் என்னும் முத்திரையைப் பிடித்து, *(16 - 22)*

நிலத்திலிருந்து தூக்கிய காலுடன் கூத்தாடிய இடாகினி என்று கூறப்படுகின்ற பெயரை உடைய காளியானவள் நாணமுற்றுக் கூத்தாடுதலை நிறுத்தி, தனக்குத் தோற்றுத் தலை கவிழ்ந்து நிற்கும்படி *(23-25)*

தானும் (சிவபெருமான்) ஒரு கூத்தினைப் பாண்டரங்கக் கூத்தோடு பொருந்திய மோகப் புயங்கம் என்னும் கூத்தினை நூல் முறைப்படி ஆடத் தொடங்கி, அக் கூத்திற்குப் பொருந்த முத்திரை பிடித்து, அருட்கை ஒன்றினாலே அக்கூத்திற்கு உரிய தாளம் இரண்டினையும் தாளமாக இயக்கி, ஒரு திருவடியை நிலத்தில் ஊன்றி, வானத்தில் பொருந்தும்படி நீட்டிய. மற்றொரு திருவடியாகிய செந்தாமரை மலரின்கண், அதனை ஒத்த மற்றொரு கையைச் சேர்த்து, *(26 - 31)*

ஆனந்தக் கூத்து என்னும் கூத்தை ஆடுங்கால் உமையம் மையார் தருவதற்கு இயன்ற தாளத்தை - சினத்தோடு கூடிய கூத்திற்குத் தான் பிடித்துள்ள உடுக்கையில் கட்டப்பட்டுள்ள ஒளி மணியானது தரவும், அதற்குரிய சுருதியை யாழ், வலிவுத் தானத்தை அமைத்துக் கொண்டும், இசைக்கு முதலாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிற்குக் குரலாகிய அரும்பாலைக் குரல் பெய்தும், இவ்வாறு ஒவ்வொன்றிற்கும் ஏழு ஏழு இசை வகுத்து, தும்புரு நாரதர் தத்தம் யாழில் அமைத்துத் தானங்களைக் காட்டவும், உடுக்கை

Koviloor Digital Library

மணியில் ஒட்டப்பட்ட தாளத்தை ஒலி கூட்டி அலகு அறுத்து, *(32 -37)* (ஆடவும்),

முன்னொரு நாள் தன் கணவன் கொடுத்த மாங்கனி இரண் டனுள் ஒன்றை அடியார்க்கு வழங்கி, அதனால் இறைவனின் அருள் பெற்று வீட்டுப் பேற்றினை அடைந்த, காரைக்கால் அம்மையார் எனப் பெயர் பெற்ற பேயும் கூத்தாட, பூத கணங்களும் பேய்க் கூட்டமும் மகிழ்ந்து கூத்தாட, கூடியிருந்த பிரமன் முதலாய தேவர்களும் மகிழ்வுடன் காணக் கூத்தாடிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள மதுரை என்னும் அழகிய திரு நகரத்தை ஒத்த, கொடி போன்ற வளப்பமுடைய தலைவியே கேட்பாயாக. *(38 - 43)*

சிறிய இதழ்களை உடைய சாதிமுல்லைக்கு அமைந்த மணம் போல, உயர் குடியில் பிறந்த உனக்கு அமைந்த கற்பின் காரணமாக - இருவினை காரணமாகத் தோன்றிய உடலைச் சேர்வதற்கு வருகின்ற உயிரினைத் தொடர்ந்து, முற்பிறப்பில் செய்த அறமும் அதனைத் தொடர்ந்து வந்து, அவ்வுயிரினைப் பொருந்துமாறு போல, உன்னைப் பொருந்துவதற்கு, *(44 -47)*

தலைவன் குறித்துச் சென்ற கார் காலத்தில் தோன்றிப் பின்னர் மறையும் மேகக் கூட்டமும், அழகு செய்யப்பட்ட தெருவின்கண் கொடிகளை உடைய தேர்க் கூட்டமும் கூடி - ஆசு கவி, சித்திர கவி, மதுர கவி, வித்தாரகவி என்னும் நான்கு வகைப்பட்ட கவிகளைப் பாடுகின்ற புலவர்கள் போற்றும் புகழை உடைய, அமுதம் உண்ணும் வாழ்க்கையினை உடைய தேவர்கள் வாழு கின்ற, விண்ணகரை ஊடுருவிச் செல்லுகின்ற தேர்களின் உருளை களால் எழுந்த புழுதியும், அத்தேர்களில் பூட்டிய குதிரைகளின் குளம்பால் எழுந்த புழுதியும் சூரிய மண்டலத்தை மறைத்ததால் உண்டான நிழலில் இனிதே சிறிது நின்று *(48 - 53)* (வருகின்ற தலைவனை,)

நீ முன்பு பிரிவுத்துயரத்தால் கழற்றி வைத்த அணிகலன்கள் அனைத்ததையும் அணிந்து கொண்டு வலிமையான கரைகளை உடைய குளத்தின்கண் மலர்ந்துள்ள செங்கழுநீர் மலர்க் கூட்டத்தின் இடையே மலரந்திருக்கும் ஒற்றைத் தாமரை மலர் போன்று - உன்னுடைய உயிர் போன்ற தோழியர் கூட்டத்தின்

Koviloor Digital Library

நடுவே நின்று நம் தலைவனை வரவேற்பதற்காக விரைந்து எழுந்து வருவாயாக என்று தேர்வந்த செய்தியைக் கூறித் தோழி தலைவியை மகிழ்வித்தாள். *(54 - 58)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் ***349*** ஆவது பாடல் துறைக்கு விளக்கமாகும். பாடலில் சிவபெருமான் தன்னை எதிர்த்து நடனமாடிய காளியைத் தோற்கும்படி செய்து, காரைக் கால் அம்மையார், பிரமன் முதலிய தேவர்கள் ஆகியோர் காணும் படி ஆடிய கூத்து விரிவாக அமைந்துள்ளது. காரைக்கால் அம்மையார் வரலாறும் சுட்டிக் காட்டப் பெறுகிறது. பின்பு தலைவன் தேருடன் வருவது கூறப்பெற்று, அதனைப் பாரத்த தோழி தலைவியைத் தேரினைக் காண வரும்படி அழைப்பதாகப் பாடற்பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமான் சிறப்பாக அவர் ஆடிய நடனமும், காரைக்கால் அம்மையாருக்கு அருள்புரிந்த செய்தியும் கூறப்பெற்றுள்ளன.

(சொ. ம்):

வடவனம் - திருவாலங்காடு, பதுமன் - நான்முகன், பாணி - கை, கொடுகொட்டி - கூத்தின்வகை, இடாகினிப் பேய் - காளியின்பெயர், பார்ப்பதி - உமையவள், அம்மை - காரைக்கால் அம்மையார், முகில் - மேகம், நான்குகுறி - நால்வகைப் பாடல், உருள் - தேர்ச்சக்கரம், கயம் - குளம்.

64. கற்புப் பயப்பு உரைத்தல்

எழு கடல் வளைந்த பெருங்கடல் நாப்பண்
பத்துடை நூறு பொற்பு அமர் பரப்பும்
ஆயிரத்து இரட்டிக் கீழ் மேல் நிலையும்
யோசனை உடுத்த, மாசு அறு காட்சிப்
பளிக்குப் பொருப்பில், திடர் கொள் மூதூர்க்
களவுடை வாழ்க்கை உள மனக் கொடியோன்
படர் மலை ஏழும், குருகு அமர் பொருப்பும்,
மா எனக் கவிழ்ந்த மறிகடல் ஒன்றும்,
கடுங் கனல் பூழிபடும்படி நோக்கிய
தாரை எட்டு உறையும் கூர் இலை நெடு வேல்

Koviloor Digital Library

காற்படைக் கொடியினன் கருணையோடு அமர்ந்த
புண்ணியக் குன்றம் புடை பொலி கூடல்
பிறைச் சடை முடியினன், பேர் அருள் அடியவர்க்கு
ஒருகால் தவறா உடைமைத்து என்ன,
பிரியாக் கற்பு எனும் நிறையுடன் வளர்ந்த
நெடுங் கயல் எறி விழிக் குறுந் தொடித் திருவினள்
தெய்வம் என்று ஒரு கால் தெளியவும் உளத்து இவள் --
பல உயிர் தழைக்க ஒரு குடை நிழற்றும்
இரு குல வேந்தர் மறு புலப் பெரும் பகை
நீர் வடுப் பொருவ நிறுத்திடப் படரினும்,
ஏழ் உயர் இரட்டி மதலை நட்டு அமைத்த
தன் பழங் கூடம் தனிநிலை அன்றி,
உடு நிலை வானப் பெரு முகடு உயரச்
செய்யும் ஓர் கூடம் புணர்த்தின்,
நெய்ம்மிதி உண்ணாது, அவன் கடக் களிறே.

துறை விளக்கம்:

செவிலித்தாய் நற்றாயிடம் தலைவியின் கற்பு நலத்தை எடுத்துக் கூறுதலாகும். தலைவியின் கற்பு வடமீனையும் வெல்லும் என்று தலைவியின் சிறப்பினை எடுத்துக் கூறுவதும் ஆகும்.

பாடற்பொருள்:

ஏழு கடலால் சூழப்பெற்ற பெரும் புறக்கடல் நடுவே, ஆயிரம் யோசனைப் பரப்பு கொண்ட சிற்ப விதி அமைந்த அகலமும், இரண்டாயிரம் யோசனை அளவுள்ள கீழ்நிலையும், மேல் நிலையும் பொருந்திய குற்றமற்ற தோற்றத்தினை உடைய, பளிங்குமலை போன்ற உயர்ந்த உச்சியைக் கொண்ட மகேந்திரம் என்னும் பெயரைக் கொண்ட ஊரிடத்தில், மாய வாழ்க்கையை உடைய, கொடிய மனத்தை உடையோனுடைய ஏழு மலையும், கிரௌஞ்சம் என்னும் பறவை வடிவான மலையும், மாமரம் தலைகீழாகக் கவிழ்ந்திருந்த அலைகளை உடைய கடலும் வேகமாக நெருப்புப் பொறிகளாகும்படி சினந்து நோக்கிய எட்டுக் கண்களை உடைய (எட்டு வடிவமான), இலை போன்ற பாகத்தை உடைய, நெடிய வேலை ஏந்திய கோழிக் கொடியை உடையவன் (முருகன்). அருளோடு எழுந்தருளியுள்ள புண்ணியமுடைய திருப்பரங்குன்றத்தின் பக்கத்தில் அழகு பெற்று விளங்கும்

Koviloor Digital Library

மதுரையில் எழுந்தருளியுள்ள பிறைச் சந்திரனைச் சடைமுடியில் உடைய சோமசுந்தரக்கடவுள் *(1 - 13)*

அவனது பேரருள் பெற்ற தொண்டர்களுக்கு ஒருகாலத்திலும் தப்பிப் போகாத பொருளைப் போல, தன்னை விட்டு நீங்காத கற்பு என்று சொல்லப்படுகின்ற நிறையுடன் வளர்ந்த, கயல் மீன் தோற்ற விழியையும், குறுந் தொடியையும் (வளையல்) உடைய, திருமகளை ஒத்த, ஒருகாலத்திலும் தனது உள்ளத்தில் தனது கணவனைத் தவிரப் பிற தெய்வம் உண்டென்று எண்ணாதவள். *(14 - 17)* (தலைவி)

பல உயிர்களும் தழைக்க ஒரு குடையால் தண்ணளி செய்கின்ற இரண்டு நாட்டு அரசர்களுக்குள் வேற்றுப் புலத்தின் பொருட்டு விளைந்த நெடுநாள் பகையை நீரின் எழுத்துப் போல நீக்கி, (நீர்வடு) ஒன்றுபடுத்தும்படி தலைவன் (அரசன்) சென் றாலும், *(18 -20)* (தூதுப் பிரிவு)

பதினான்கு முழம் உயரமுள்ள தூண்களை நிறுத்திச் செய்யப் பட்ட தனது பழமையான கூடமாகிய ஒருஇடத்து அன்ற (இந்த இடம் தவிர வேறு இடத்தில் உண்ணாது), தலைவனுடைய மதம் பொருந்திய யானையானது நட்சத்திரங்களை உடைய வானம் வரை எட்டும் அளவிற்குச் சிகரத்தைக் கொண்டு அமைக்கப் பெற்ற வேறுஒரு கூடத்தில் சேர்த்தாலும், நெய்யோடு கலந்த கவளத்தை அந்த யானை உண்ணாது *(21 -25)* என்று செவிலித் தாய் நற்றாயிடம் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **305** ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலில் முதற் பகுதியில் சூர பதுமனின் தம்பி யானைமுகன் கிரௌஞ்ச மலையாகத் தோற்றம் அளித்ததையும், சூரபதுமன் மாமரமாகத் தோற்றம் அளித்த கடலையும் தன்னுடைய வேற்படையின் நெருப்புப் பொறியால் அழித்த முருகப் பெருமான் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம் எனக் கூறப்பெற்று அதன் பக்கத்தில் உள்ள மதுரையில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானின் அருள் பெற்ற அடியவர் எண்ணியதைப் பெறுவர் என்ற இறைவனின் அருட் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.,

Koviloor Digital Library

தலைவி தன் கணவனைத் தவிர வேறு தெய்வத்தை உண்டென்று கருதாதவள் என்று அவளது கற்புநலம் கூறி, நிறைவாகத் தலைவனுடைய யானையும் தன் கொட்டிலில் உணவு உண்ணுமே தவிரப் பிறரால் பிணிக்கப் பெற்று வேறு ஒரு கொட்டிலில் அடைக்கப் பெற்றால் அங்கு நெய் உணவை உண்ணாது (பிறரால் கட்டப்பட முடியாது, பிறர் நாட்டிற்குச் சென்றாலும் உணவு உண்ணத் தன் கொட்டிலுக்கே விரைவாகத் திரும்பி விடும் என்று யானையின் சிறப்புக் கூறித் தலைவனின் சிறப்புக் கூறப்படு கிறது).

(சொ - ம்):

பத்துடைநூறு - ஆயிரம், குருகுஅமர் பொருப்பு - கிரௌஞ்சப் பறவை வடிவான மலை, மா - மாமரம், தாரை எட்டு - எட்டுப் பக்கங்களைக் கொண்ட வேல், புண்ணியக் குன்றம் - திருப்பரங் குன்றம், மதலை - தூண், பழங்கூடம் - யானை கட்டும் கூடம், உடு - நட்சத்திரம், நெய்மிதி - நெய்கலந்த உணவு.

65. மருவுதல் உரைத்தல்

பெண் எனப் பெயரிய பெரு மகள் குலனுள்,
உணா நிலன் உண்டு பராய அப் பெருந் தவம்
கண்ணுற உருப்பெறும் காட்சி - அது என்னக்
கரு உயிர்த்து எடுத்த குடி முதல் அன்னை!
நின்னையும் கடந்தது அன்னவள் அருங் கற்பு,
அரி கடல் மூழ்கிப் பெறும் அருள் பெற்ற
நிலமகள் கடந்தது, நலனவள் பொறையே,
இரு வினை நாடி உயிர்தொறும் அமைத்த
ஊழையும் கடந்தது, வாய்மையின் மதனே,
கற்பகம் போலும் அற்புதம் பழுத்த
நின் இலம் கடந்தது, அன்னவள் இல்லம்,
பேரா வாய்மை நின் ஊரனைக் கடந்தது,
மற்று - அவள் ஊரன் கொற்ற வெண்குடையே,
ஏழ் உளைப் புரவியோடு எழுகதிர் நோக்கிய
சிற்றிலை நெரிஞ்சில் பொற்பூ என்ன,
நின் முகக் கிளையினர் தம்மையும் கடந்தனர்,
மற்று -அவட் பார்த்த மதிக் கிளையினரே,

Koviloor Digital Library

உடல் நிழல் மான உனது அருள் நிற்கும்
என்னையும் கடந்தனள், பொன்னவட்கு இனியோள்,
(கொலை மதில் மூன்றும் இகல் அறக் கடந்து,
பெரு - நிலவு எறித்த புகர் முகத் துளைக் கை
பொழி மதக் கறையடி அழிதரக் கடந்து,
களவில் தொழில் செய் கரிமகன் உடலம்
திருநுதல் நோக்கத்து எரிபெறக் கடந்து
மாறுகொண்டு அறையும் மதிநூற்கடல் கிளர்
சமயக் கணக்கர்தம் திறம் கடந்து,
புலனொடு தியங்கும் பொய்உளம் கடந்த--
மலருடன் நிறைந்து வான்வழி கடந்த
பொழில் நிறை கூடல் புது மதிச் சடையோன்
மன் நிலை கடவா மனத்தவர் போல)
ஒன்னலர் இடும் திறைச் செலினும்,
தன் நிலை கடவாது, அவன் பரித்-தேரே,

துறை விளக்கம்:

மருவுதல் என்பது கூடுதல் என்ற பொருளைத் தரும். இங்கு தலைவனும் தலைவியும் கூடி வாழுகின்ற வாழ்க்கையைச் செவிலித் தாய் நற்றாயிடம் உரைத்தலைக் குறிக்கின்றது. மர்ரே பதிப்பில் இத்துறைத் தலைப்பு இருந்தாலும் பிற பதிப்புக்களில் வாழ்க்கை நலம் கூறல் என்று துறைப் பெயர் காணப்படுகிறது.

பாடற் பொருள்:

பெண்ணென்று கூறப்படுகின்ற நல்ல மகளிர் கூட்டத்துள் மகப்பேறு கருதித் தான் உண்ணும் உணவை நிலத்தை மெழுகி அதில் இட்டு உண்ணுதலாகிய தவமானது கண் கூடாகக் காண்பது போல, ஒரு வடிவெடுத்த வந்த காட்சி போல, கருவுற்றுத் தவிியைப் பெற்றெடுத்த நம் குடிக்கு முதன்மை பெற்ற அன்னையே, *(1-4)*

அம் மகளது பெறுதற்கரிய கற்பு உன்னுடைய கற்பினும் மேம்பட்டதாகும். அவளுடைய பொறுமையானது கடலில் மூழ்கித் திருமாலிடத்தே பெறத்தக்க அருளைப் பெற்ற நிலமகள் பொறுமையினும் மேம்பட்டது. அவளது வாய்மையின் ஆற்ற லானது இருவினை காரணமாக எல்லா உயிர்களிடத்தும் அமைந்த

Koviloor Digital Library

ஊழின் ஆற்றலைக் காட்டிலும் மேம்பட்டது. அவளது மனைச் செல்வமானது கற்பகத்தரு போலும் உனது மனைச் செல்வத்திலும் மேம்பட்டது, *(5 - 11)*

அவள் தலைவனது கொற்றமானது கவறு படாத வாய்மை உள்ள உனது தலைவன் அரசியலிலும் மேம்பட்டது. அவளை ஆதரவாகக் கொண்டுள்ள அவளது உறவினர் - பிடரி மயிரினை உடைய ஏழு குதிரைத் தேரோடு தோன்றுகின்ற சூரியனின் கதிரை நோக்கிய சிறிய இலை நெருங்கிய நெருஞ்சிக் செடியின் மலர் போன்று, உன்னுடைய முகம் நோக்கியுள்ள உறவினர்களைக் காட்டிலும் அதிகமானவர் ஆவர். அத்தலைவிக்கு அன்புடைய தோழியானவள் உன்னுடைய நிழலைப் போல, உன்னைச் சார்ந் திருக்கிற என்னைவிட உயர்ந்தவள். *(12- 19)* (இதுவரை தலைவியின் சிறப்பு கூறப்பட்டது. இனித் தலைவனின் சிறப்பு கூறப்படுகிறது)

மலர்கள் நிறைந்த ஆகாய வீதியை ஊடுருவிச் செல்லுகின்ற சோலைகள் நிறைந்த மதுரையினிடத்து. புலனோடு கூடி மயங்கு கின்ற பொய்ம்மை உள்ளத்தாரால் அறிவதற்கு எட்டாததாய் அமைந்து, பிறையை அணிந்த சடைமுடியை உடைய சோம சுந்தரக் கடவுளது,

கொலைத் தொழிலைக் கொண்ட முப்புரத்தையும் பகை கெடுக என்று வென்றும், ஒளி வீசிய தந்தங்கள் உள்ள புள்ளி களைக் கொண்ட முகத்தையும், துளையுடைய துதிக்கையையும், மதநீரையும் உடைய யானையானது அழியும்படி வென்றும், (யானைத் தோலைப் போர்த்தியும்), களவாகிய போர்த்தொழில் புரிந்த காமனது உடலை அழகிய நெற்றிக் கண்ணால் நெருப்பில் பொடியாகும்படி வென்றும், ஒருவருக்கு ஒருவர் மாறுகண்டு தருக்கம் செய்கின்ற பலநூற் பொருள்களை ஆராய்கின்ற சமயவாதிகளின் திறங்களுக்கு அப்பாற்பட்டவராய், (விளங்கும் சிவபெருமானின்) *(20-25)*

நிலைபெற்ற இறைவனின் அருளைப் பெற்ற மனத்தை உடையவர் போல- பகைவரால் செலுத்தப்படுகின்ற திறைப் பொருளை எண்ணி அரசன் சென்றாலும், அவனுடன் செல்லுகின்ற தலைவனது குதிரை பூட்டிய தேரானது, தன்னிடத்தை விட்டு

Koviloor Digital Library

வேறிடத்தில் தங்குதல் இல்லை. *(26 - 32)* என்று செவிலித்தாய் நற்றாயிடம் தலைவியின் இல்லறத்தைக் கூறினாள்.

(வி - ரை)

இது திருக்கோவையாரின் **302** ஆவது பாடல் துறைக்குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் செவிலித்தாய் தலைவியின் கற்பு, பொறுமை, வாய்மை, செல்வம், தலைவனின் கொற்றம், தலைவியின் உறவினர் ஆகியவற்றின் பெருமையைக் கூறி, பிறகு சிவபெருமானின் பெருமையாக முப்புரத்தை எரித்ததும், யானையை வென்று தோலை உடுத்தியதும், மன்மதனை எரித்ததும் கூறப்பெற்றுள்ளது. நிறைவாகத் தலைவனுடைய தேரானது பகைவயிற் பிரிந்தாலும், வேற்றிடத்துத் தங்காது தலைவனின் ஊருக்கே வந்து தங்கக் கூடிய சிறப்பினைப் பெற்றது என்று கூறித் தலைவன், தலைவியரின் இல்லறச் சிறப்பு உணர்த்தப் பெறுகிறது. தலைவனுடைய தேர் அரசனுக்காகப் பிரிந்த பொழுதும், சென்ற தொழிலை முடித்து விரைவாகத் தலைவி இருக்கும் அவன் இடத்திற்கே பிரிவுத் துயரைத் தராது திரும்பி வந்து விடும். எனவே இருவரும் பிரிந்திருக்க மாட்டார்கள் என்ற குறிப்பைத் தருவதாகவும் பாடல்போக்கு அமைந்துள்ளது.

(சொ- ம்):

நிலன்உண்டு - தரையில் மெழுகி உண்டு, பராய - மேற்கொண்ட, அரி - திருமால், மதன் - வலிமை, இனியோள் - பாங்கி, கொலைமதில் - தான் இறங்கும் இடமெல்லாம் கொலைத் தொழிலைச் செய்யும் மதில் மூன்று, ஒன்னலர் - பகைவர்.

66. பள்ளியிடத்து ஊடல்

நீரர மகளிர் நெருக்குப் புகுந்து
கண் முகம் காட்டிய காட்சித்து என்ன,
பெருங் குலை மணந்த நிறைநீர்ச் சிறைப் புனல்
மணி நிறப் படாம் முதுகு இடையறப் பூத்து,
சுரும்பொடு கிடந்த சொரி இதழ்த் தாமரை
கண்ணினும் கொள்ளாது உண்ணவும் பெறாது,
நிழல் தலைமணந்து புனல் கிடவாது,

Koviloor Digital Library

விண் உடைத்து உண்ணும் வினைச் சூர் கவர்ந்த
வானவர் மங்கையர் மயக்கம் போல,
பிணர்க் கரு மருப்பின் பிதிர்பட உழக்கி,
வெண் கார்க் கழனிக் குருகு எழப் புகுந்து,
கடுக்கைச் சிறு காய் அமைத்த வாற் கருப்பை
இணை எயிறு என்ன இடைஇடை முள் பயில்
குறும் புதல் முண்டகம் கரும்பு எனத் துய்த்து,
செங் கட் பகடு தங்கு வயல் ஊரர்க்கு,
அரு மறை விதியும், உலகியல் வழக்கும்
கருத்து உறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொல் மயக்கமும் வருவன புணர்த்தி,
ஐந் திணை வழுவாது அகப்பொருள் அமுதினை,
குறுமுனி தேறவும், பெறுமுதல் புலவர்கள்
ஏழ் - எழு பெயரும் கோது அறப் பருகவும்,
புலனெறி வழக்கில் புணர் உலகவர்க்கும்,
முன் தவம் பெருக்கும் முதல் தாபதர்க்கும்.
நின்று அறிந்து உணர, தமிழ்ப் பெயர் நிறுத்தி,
எடுத்துப் பரப்பிய இமையவர் நாயகன்
மெய்த் தவக் கூடல்) விளைபொருள் மங்கையர்
முகத்தினும், கண்ணினும், முண்டக முலையினும்
சொல்லினும், துவக்கும் புல்லம் போல
எம் இடத்து இலதால், என்னை
தம் உளம் தவறிப் போந்தது இவ் இடனே?

துறை விளக்கம்:

தலைவி ஊடல் கொண்ட பொழுது ஆற்றாமையை வாயிலாகக் கொண்டு வீட்டிற்குள் புகுந்த தலைவன் படுக்கை அறையில் தலைவியைச் சந்திக்கின்றான். அப்பொழுது தலைவனோடு தலைவி ஊடல் கொண்டு எம்மைத் தொடாதே என்று கூறிப் புலத்தல்.

பாடற்பொருள்:

நீரில் வாழும் தெய்வப் பெண்கள் நெருங்கிப் புகுந்து கண்களும், முகமும் காட்டுகின்ற காட்சியைப் போல, *(1- 2)*

பெரிய கரைகளை உடைய நீர்க் குளத்தில் மணி நிறம் போன்ற (கருஞ்சிவப்பு) புற இதழ்களை ஆடையாகக் கொண்டு போர்த்தி, வண்டுகள் சூழ இருந்து, தேன் சொரியும் அக இதழைக் கொண்டு மலர்ந்திருக்கும் தாமரைப் பூவை, *(3 - 5)*

Koviloor Digital Library

கண்ணாலும் நோக்காமல் - உண்ணுதலையும் செய்யாது, குளிர்ச்சியைத் தன்னிடத்தே கொண்ட நீரில் படுக்காது, விண்ணகத்தை அழித்த தீத்தொழிலை உடைய சூரபதுமனால் சிறையில் அகப்பட்ட தேவமகளிரின் தடுமாற்றம் போல, (6 -9)

சருச்சரை மிக்க (சொரசொரப்பு) கருங்கொம்புகளால் சேறாகும் படி நீரைக் கலக்கி, வெண்மையான கார் நெல் உள்ள வயலிடத்தே பறவைகள் சிறகடித்து எழுமாறு பாய்ந்து - கொன்றையினது சிறிய காய் போன்ற வாலை உடைய, கருமையான எலியின் பற்கள் போலத் தோற்றமளிக்கும் முட்கள் நடுநடுவே பொருந்திய நீர்முள்ளிச் செடியைக் கரும்பை உண்ணுதல் போலத் தின்று தடுமாறுகின்ற, (10 - 14) செங்கண் எருமை மேய்கின்ற மருதநாட்டுத் தலைவனுக்கு -

வேத விதிகளையும், உலகியல் வழக்கையும், கருத்துடைப் பொருளையும் விதிப்படி நினைந்து, வடமொழிப் புணர்ச்சியும் உணர்த்தி, ஐவகைத் திணை முறைமையும் வழுவாது, அகப்பொருளாம் அமுதத்தை அகத்திய முனிவன் தெளியவும், தலைமை பெற்ற சங்கப் புலவர்களாகிய நாற்பத்தொன்பது பேரும் ஐயம் திரிபு இன்றி உண்ணவும், ஐம்புல வழியில் செல்லுகின்ற உலக இயல்பினர்க்கும், இளமை தொட்டு தவம் பெருக்கும் முனிவருக்கும், தாம் தாம் அறிந்திட அறிவுறுத்தவும், தமிழ் என்னும் பெயரை நிலைநாட்டவும், திருவாக்கெடுத்து உரைத்த தேவர் பிரானாம் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள மதுரையிடத்து (15 - 26),

பொருளைச் சம்பாதிக்கின்ற பரத்தையர்கள், தங்கள் முகத்தினாலும், கண்களினாலும் தாமரை மொட்டை ஒத்த முலைகளாலும், சொற்களாலும் தன்வயப்படுத்தும் அபிநயம் போல, எம்மிடத்து எச்செயலும் இல்லை. இந்த இடத்தில் உமது உள்ளம் இடந்தெரியாது வந்தவாறு என்னை? என்று தலைவனிடம் தலைவி படுக்கையறையில் ஊடிக் கூறினாள். (26 - 30)

(வி -ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 358 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் முதலில் மருத நிலத்தின் வளமை

Koviloor Digital Library

கூறப்பெற்றுள்ளது. அதாவது தெய்வமகளிர், சூரபதுமனால் துன்பப்பட்டு, வாழ்க்கையில் உண்ணாமல் உறங்காமல் தடுமாறினர். அந்தத் தடுமாற்றத்தைப் போலத் தன்னுடைய கரிய கொம்புகளால் குளத்தில் உள்ள சேற்றைக் கலக்கிப் பறவைகள் சிறகை விரித்து ஓடிட, வயல் எலியின் பற்களைப் போல அமைந்த நீர்முள்ளிச் செடியைத் தின்று, செங்கண் எருமையானது மேய்ந்து நின்றது. அத்தகைய மருத நிலத் தலைவனுக்குப் பரத்தையர்கள் செய்த செயலை நான் செய்ய இயலாது, அவ்வாறிருக்கத் தலைவன் ஏன் தன்னிடம் வந்தான் என்று தலைவி கூறியதாகப் பொருள் கொண்டு முடிந்துள்ளது பாடல். இடையில் சிவபெருமான் அகத்தியருக்கும் பிறருக்கும் வேதத்தின் பொருளையும், தமிழின் சிறப்பையும் அகன் ஐந்திணையாக அறிவுறுத்திய திருவிளையாடல் பெருமையாகக் கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

நீரர மகளிர் - தேவ மகளிர், மணிநிறப் படாம் - கருஞ்சிவப்பு நிறம் படைத்த துகில் போன்ற புறஇதழ், சூர் கவர்ந்த - சூரபதுமன் வருத்திய, பிணர் - சருச்சரை, குருகு - பறவை, கருப்பை - கருமைநிற எலி, செங்கண் பகடு - செங்கண் எருமை, முண்டகம் - தாமரை.

67. வழிப்படுத்து உரைத்தல்

செங்கோல் - திருவுடன் தெளிந்து அறம் பெருக்கிய
மறு புல வேந்தன் உறு படை எதிர்ந்த
கொடுங்கோல் - கொற்றவன் நெடும் படை அனைத்தும்
சேர இறந்த திருத்தகு நாளில்,
அவன் பழி நாட்டு நடுங்கு நற் குடிகள்
கண்ணொடு கண்ணில் கழறிய போல,
ஒருவரின் ஒருவர் உள்ளத்து அடக்கித்
தோன்றா நகையுடன், துண்டமும் சுட்டி,
அம்பல் தூற்றும் இவ் ஊர் அடக்கி,
கடல் கிடந்தன்ன நிரைநிரை ஆய -
வெள்ளமும், மற்றவர் கள்ளமும் கடந்து,
தாயவர் மயங்கும் தனித் துயர் நிறுத்தி,
பறவைமக்களைப் பரியுநர்க் கொடுத்து,
கிடைப்பல் யானே நும்மை (தழைத்து எழு

Koviloor Digital Library

தாளியும் கொன்றையும் தழைத்தலின் முல்லையும்
பாந்தளும் தரக்கும் பயில்தலின் குறிஞ்சியும்,
முடைத்தலை, எரி, பொடி, உடைமையின் பாலையும்
ஆமையும் சலமும் மேவலின் மருதமும்,
கடுவும் சங்கும் ஒளிர்தலின் நெய்தலும்,
ஆகத் தனது பேர் அருள் மேனியில்,)
திணை ஐந்து அமைத்த இணைஇலி நாயகன்
(வரும் தொழில் அனைத்தும் வளர் பெரும் பகலே,
எரி விரிந்தன்ன இதழ்ப் பல் தாமரை
அருள் முகத் திருவொடு மலர்முகம் குவிய,
மரகதப் பாசடை இடை இடை நாப்பண்
நீலமும் மணியும் நிரை கிடந்தென்ன
வண்டொடு குமுதம் மலர்ந்து இதழ் விரிப்ப,
குருகும் சேவலும் பார்ப்புடன் வெருவிப்
பாசடைக் குடம்பையூடு கண்படுப்ப,
துணையுடன் சகோரம் களியுடன் பெயர்ந்து
விடும் அமுது அருந்த விண்ணகத்து அணக்க,
சுரிவளைச் சாத்து நிறைமதி தவழும்)
எறிதிரைப் பழனக் கூடல்
செறிக இன்று அம்ம, திருவொடும் பொலிந்தே!

துறை விளக்கம்:

தோழி, தலைவனையும் தலைவியையும் உடன் போவதற்கு உடன்பட்டு அன்னையும் ஆயமும் பின்வராது தடுத்து, ஊரில் எழுந்த அலரையும் நீக்கி, மற்றொரு நாள் உங்களை நான் வந்தடைவேன், தலைவனே, நீ இத்திருமகளாகிய தலைவியோடு உமது ஊர் செல்வீராக என வழிப்படுத்தி உரைத்ததாகும்.

பாடற் பொருள்:

செங்கோல் ஆகிய திருமகளுடன் மனுநூல் ஆராய்ந்து, அரசியல் தர்மத்தை விருத்தி செய்த, வேற்றுப்புலத்து அரசனது பெருஞ்சேனையால் எதிர்கொள்ளப்பட்ட, கொடுங்கோல் அரசனது அளவற்ற சேனை முற்றும் அழிந்து நன்மை பயக்கும் அந்நாளில், கொடுங்கோல் மன்னனது நாட்டில் உள்ள அவனது கொடுமையான ஆட்சியால் துன்பப்பட்ட நல்ல குடிகள், ஒருவர் கண்களால் மற்றவர் கண்களோடு மகிழ்ச்சியால் பேசிக் கொண்டதைப் போல, *(1 - 6)*

Koviloor Digital Library

ஒருவரோடு ஒருவர் சொல்லித் தத்தம் மனதுக்குள்ளே அடக்கி அலரை வெளிப்படுத்தாது, மென்மையாகச் சிரித்து, மூக்கின்மேல் விரலை வைத்து, குறிப்பாக இவ்வூரார் புறங் கூறுகின்ற அலர் தூற்றலை அடக்கி, *(7 - 9)*

கடல் போன்ற பெருங் கூட்டமாகிய மகளிர் கூட்டத்தையும், பிறர் சுற்றத்தாரது பின் தொடர்தலாகிய கள்ளத்தையும் நீங்கி, நமது தாய்மார்கள் மயங்கும் பெருந் துன்பத்தை நிறுத்தி, கிளி முதலிய பறவைகளைப் பரிவுள்ளவர்கள் இடத்தில் வளர்க்கும் படி சேர்த்து, விரைவில் நான் (தோழி) உங்களிடத்திலே வந்து சேர்வேன். *(10 - 14)*

தழைத்து எழுந்த தாளி மலரும், கொன்றை மலரும், தழைத் திருத்தலால் முல்லை நிலமும், பாம்பும் புலியும் கூடியிருத்தலால் குறிஞ்சி நிலமும், தீ நாற்றம் வீசும் நிலமாய் நெருப்பும் சாம்பலும் உண்டாயிருத்தலால் பாலை நிலமும், ஆமையும் நீரும் பொருந்தி இருத்தலால் மருத நிலமும், விடமும் சங்குகளும் விளங்குதலால் நெய்தல் நிலமும் ஆகத் தன்னுடைய பேரருளாகிய திருமேனியில் ஐந்து திணைகளையும் ஏற்ற, ஒப்பில்லாதவனாகிய சிவபெருமான் நடத்தும் தொழில் யாவும் வளர்தற்கு இடமாகிய மத்தியான நேரத்தில் - நெருப்பு விரித்தாற் போன்ற இதழ்களைக் கொண்ட பல தாமரை மலர்கள், *(15 - 23)*

அருள் நிறைந்த திருமகள் உடனே தமது முகமலர்ச்சி கூம்பவும், மரகதமணி போன்ற பச்சிலையின் நடுவே, நீல மணியும் மாணிக்க மணியும் அழகு பெற்று இருப்பது போன்ற, தோற்றத்தைக் கொண்ட வண்டுகள் உடனே செவ்வல்லி மலர்கள் இதழ் விரிக்கவும், *(24 - 27)*

குருகுகளும் சேவல்களும் தத்தம் குஞ்சுகளுடன் பொழுது போயிற்று என்று பச்சிலைகளாகிய கூடுகளுக்குச் சென்று கண் ணுறங்கவும், சகோரப் பறவைகள் தம் துணையுடன் மகிழ்ச்சி யாய்ப் பறந்து அமிர்தத்தை உண்ணுவதற்காக ஆகாயத்தில் அண்ணாந்து பறந்திடவும், *(28 - 31)*

முகம் சுரிந்திருக்கின்ற சங்குக் கூட்டமாகிய முத்த வரிசை களில் நிறைந்த நிலாத் தவழும் அலையை உடைய வயல் சூழ்ந்த

Koviloor Digital Library

மதுரையினிடத்து, திருமகளாகிய தலைவியோடு இந்நாளில் சேர்ந்து உறைவாயாக என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

(32- 33)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 214 ஆவது பாடல் துறைக்கு விளக்கமாகும். பாடலில் தலைவனையும் தலைவியையும் உடன் போக்குவித்த தோழி, ஊரில் எழுகின்ற அலரை அடக்கியும், ஆயத்தாரின் பின் தொடர்தலை நீக்கியும், தாயரின் துன்பத்தை ஆற்றுப் படுத்தியும், வளர்க்கும் வீட்டுப் பறவைகளைப் பிறரிடம் கொடுத்து வளர்க்கச் செய்தும், இத்தகைய செயல்களைச் செய்து பின் தலைமக்களிடம் வந்து சேர்வேன் என்று கூறுகிறாள். தன்மேனியில் அணிந்துள்ள பொருள்களால் ஐவகை நிலங்களும் தன் உடம்பில் ஏற்றுக் கொண்டது போல் விளங்கும் சிவபெருமானது மதுரை நகரத்திற்கு மாலை நேரத்தில் சென்று சேர்வார்களாக என்று கூறி விடுத்தனள். மாலை நேரத்தைக் குறிக்கும் பொழுது, தாமரை கூம்பவும், குமுதம் விரியவும், பறவைகள் கூட்டில் உறங்கவும், சகோரப் பறவைகள் அமுதத்தை உண்ண வானத்தில் பறக்கவும், நிலவு தோன்றுகின்ற நேரம் என்று குறிக்கப் பெற்றுப் பொருள் வளத்தை இப்பாடல் அழகுறப் பெற்றுள்ளது. இப்பாடலில் தன் மேனியில் அணிந்த அணிகலன்கால் ஐந்து திணையும் கொண்டவன் என்ற சிவபெருமானின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

திருவுடன் - செல்வச் செழிப்புடன், அறம் - அரசநீதி, கழறுதல் - பேசிக் கொள்ளுதல், அம்பல் - அலர், ஆயர்வெள்ளம் - மகளிர் கூட்டம், கள்ளம் - மறைந்து பின்தொடர்தல், பாந்தள் - பாம்பு, தரக்கு - புலி, சலம் - நீர், குமுதம் - செவ்வல்லி மலர், சகோரம் - இணைபிரியாப் பறவைகள், சுரிவளை - முகம் சுரிந்த சங்கு, பழனம் - வயல்.

Koviloor Digital Library

68. கடலிடை வைத்துத் துயர் அறிவித்தல்

இரு நிலம் தாங்கிய வலி பெழு நோன்மைப்
பொன்முடிச் சயிலக் கணவற் புணர்ந்து,
திரு எனும் குழவியும், அமுது எனும் பிள்ளையும்,
மதி எனும் மகவும், அமர் உலகு அறியக்
கண்ணொடு முத்தம் கலுழ்ந்து, உடல் கலங்கி,
வாய்விட்டு அலறி, வயிறு நொந்து ஈன்ற
மனம் எழு வருத்தம் - அது உடையை ஆதலின்,
பெரு மயல் எய்தா நிறையினள் ஆக
என் ஒரு மயிலும் நின் மகளாக் கொண்டு,
(தோன்றி நின்று அழியாத் துகள் அறு பெருந் தவம்
நிதி எனக் கட்டிய குறுமுனிக்கு, அருளுடன்
தரளமும், சந்தும், எரி கெழு மணியும்,
முடங்குளை அகழ்ந்த கொடுங் கரிக் கோடும்,
அகிலும், கனகமும், அருவி கொண்டு இறங்கிப்
பொருநை அம் கன்னிக்கு அணி அணி பூட்டும்
செம்பு உடல் பொதிந்த தெய்வப் பொதியமும்,
உவட்டாது அணையாது உணர்வு எனும் பசி எடுத்து
உள்ளமும் செவியும் உருகி நின்று உண்ணும்
பெருந் தமிழ் - அமுதும் பிரியாது கொடுத்த)
தோடு அணி கடுக்கைக் கூடல் எம்பெருமான்,
எவ் உயிர் இருந்தும் அவ் உயிர் அதற்குத்
தோன்றாது அடங்கிய தொன்மைத்து என்ன,
ஆர்த்து எழு பெருங் குரல் அமைந்து நின்று ஒடுங்கி,நின்
பெருந் தீக் குணனும் ஒழிந்து, உளம் குளிருறும்
இப் பெரு நன்றி இன்று எற்கு உதவுதி -
எனின் பதம் பணிகுவல் அன்றே - நன்கு அமர்
பவளவாயும், கிளர் பச்சுடம்பும்,
நெடுங் கயல் விழியும், நிறைமலை முலையும்,
மாசு அறப் படைத்து, மணி உடல் நிறைத்த,
பெரு முகில் வயிறு அளவு ஊட்டித்
திரு உலகு அளிக்கும், கடல் - மடமகளே!

துறை விளக்கம்:

களவுக் காலத்தில் தலைமகன் சிறைப்புறத்தானாக நிற்க, தலைமகள் கொண்ட துயரத்தை தோழி கடலோடு புலந்து கூறுவாள் போலக் கூறுவதாகும்.

Koviloor Digital Library

பாடற் பொருள்:

நன்மை பொருந்திய பவளமாகிய வாயும், ஒளி மிகுந்த பசுமையாகிய மேனியும், நீண்ட கயலாகிய கண்ணும், பெரிய மலையாகிய முலைகளும், குற்றமறப் படைத்து, மணிகளுடன் நன்நிறத்தைக் கொண்ட பெரிய மேகத்தின் வயிறு நிரம்ப நீராகிய அமுதத்தை ஊட்டி, வளப்பத்தை உலகிற்குக் கொடுக்கின்ற கடலாகிய மடந்தையே, *(26 - 31)*

பெரிய பூமியைத் தாங்கிய வலிமையுள்ள பொன்முடியை உடைய மந்தரகிரி என்னும் கணவனைப் புணர்ந்து, திருமகளாகிய பெண்ணையும், அமுதமாகிய பிள்ளையையும், சந்திரனாகிய மகவையும், விரிந்த உலகம் அறியும்படி, கண்ணில் கண்ணீர் அரும்ப, உடல் நொந்து, வாய் பிளந்து அலறி, கருப்ப வேதனை அடைந்து பெற்றதனால், மனத்தில் உண்டான வருத்தத்தை நீ உடையவளாய் இருக்கின்றனை. *(1-7)*

மிக்க மயக்கத்தைப் பொருந்தாத மாட்சிமை உடையவளாக இருக்குமாறு, மயில் போன்ற என் தலைவியாகிய பெண்ணையும். நின் மகளாக எண்ணி - *(8 - 9)*

பிறந்து இறவாமைக்குக் காரணமான குற்றமற்ற பெருந் தவத்தைத் தமது செல்வமாகக் கொண்ட அகத்திய முனிவருக்கு அன்புடனே முத்தங்களையும் சந்தனத்தையும், ஒளிபொருந்திய மாணிக்கத்தையும், சிங்கத்தினால் அழிக்கப் பெற்ற யானையின் கொம்புகளையும், அயிலையும், பொன்னையும், அருவி நீராகிய கைகளைக் கொண்டு இறக்கிய பொருநை நதி ஆகிய திருமகளுக்கு, *(10 - 15)*

அழகிய ஆபரணங்களை அணிந்து தாமிர உடலால் மூடப்பெற்ற (ஆறு) தெய்வத் தன்மை உடைய பொதிய மலையும், அடங்காத அறிவு என்கின்ற பசி தோன்றி நிலைத்து, மனம் உருகி செவியாகிய வாயால் உண்ணத் தக்க பெருமையாகிய தமிழ் என்னும் அமுதத்தையும், பிரியாது இருக்குமாறு தந்தருளிய சங்கு மாலையையும் கொன்றை மாலையையும் அணிந்த, மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளது, *(16 - 20)*

Koviloor Digital Library

எவ்வகைப்பட்ட உயிரிடத்தும் கலந்திருந்தும், அவ்உயிர்கள் அதனை அறியும்படி வெளிப்படாத தன்மையாகிய அநாதித் தன்மை போல, ஆரவாரித்து மேலெழுகின்ற பெருங்குரல் அடங்கித் தணிந்து, உனது கொடுங்குணம் நீங்கி என்னுள்ளம் குளிரத் தக்கப் பேருதவியை இப்பொழுது எனக்குத் தருவாய் என்றால், கடலே உன்பாதம் பணிவேன் என்று தோழி கடலைப் பார்த்துக் கூறுவது போலத் தலைவனுக்குக் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **173** ஆவது பாடல் துறைக்கு விளக்கமாகும். பாடலில் கடலானது பெண்ணாக உருவகிக்கப் பெற்று, அப்பெண் மேகத்திற்கு நீராகிய அமுதத்தை ஊட்டியதும், மந்தரகிரியாகிய கணவனைப் புணர்ந்ததும், அதனால் திருமகள், அமுதம், சந்திரன் ஆகிய மக்களைப் பெற்றதும் கூறப் பெற்றுள்ளது. பிறகு தலைவியை அக்கடல் மகளாக எண்ணித் தனது மிகுந்த ஒலியை அடக்கி உள்ளத்தைக் குளிர வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் கடலினை வணங்குவேன் என்று தோழி கூறுவதாகப் பாடற்பொருள் அமைந்துள்ளது. இடையில் சிவபெருமானின் பெருமையாக பல வளங்களையும், தன் அருவியால் கொட்டுகின்ற பொருநை ஆகிய நதிக்கு ஆபரணங்களைத் தருகின்ற தாமிரபரணி ஆறு மூடப் பெற்ற பொதிய மலையும், அகத்தியருக்குக் கொடுத்த தமிழும் பிரியாதிருக்குமாறு செய்த சிவபெருமான் என்று கூறப்பட்டு, அவன் எல்லா உயிரிடத்தும் கலந்திருந்தாலும் உயிர்கள் அறிய முடியாதபடி உயிருக்குள்ளே அடங்கியிருக்கின்ற தன்மை போலக் கடலும் தன்னுடைய பேரொலியை அடக்கிக் கொள்ள வேண்டும் என்ற செய்தியும் பாடலில் இடம் பெற்றுள்ளது.

(சொ ம்):

சயிலம் - மலை, என்ஒரு மயில் - என்னுடைய தலைவி, கடுக்கை - கொன்றை,

Koviloor Digital Library

69. பிரிவு இன்மை கூறல்

நிலையுடைப் பெருந் திரு நேர் படுகாலைக்
காலால் தடுத்துக் கனன்று எதிர் கறுத்தும்,
நனி நிறை செல்வ நாடும் நன் பொருளும்
எதிர் பெறின் கண் சிவந்து எடுத்து அனை களைந்தும்,
தாமரை நிதியமும் வால் வளைத் தனமும்
இல்லம் புகுதர இருங் கதவு அடைத்தும்,
அரி அயன் அமரர் மலை வடம் பூட்டிப்
பெருங் கடல் வயிறு கிடங்கு எழக் கடைந்த
அமுதம் உட்கையில் உதவுழி ஊற்றியும்,
மெய் உலகு இரண்டினுள் செய்குநர் உளரேல்,
எழு கதிர் விரிக்கும் மணி கெழு திருந்திழை!
நின் பிரிவு ஒள்ளும் மனன் உளன் ஆகுக --
(முழுதுற நிறைந்த பொருள் மனம் நிறுத்தி, முன்
வேடம் துறவா விதியுடைச் சாக்கியன்,
அருட்கரை காணா, அன்பு எனும் பெருங் கடல்
பல நாள் பெருகி, ஒரு நாள் உடைந்து,
கரை நிலை இன்றிக் கையகன்றிடலும்,
எடுத்துடைக் கல் மலர் தொடுத்து, அவை சாத்திய
பேர் ஒளி இணையாக் கூடல் மா மணி --
குல மலைக் கன்னி என்று, அருள் குடியிருக்கும்
விதி நெறி தவறா ஒரு பங்கு உடைமையும்,
பறவை செல்லாது நெடு முகடு உருவிய
சேகரத்து உறங்கும் திருநதித் துறையும்,
நெடும் பகல் ஊழி நினைவுடன் நீந்தினும்
அருங் கரை இறந்த ஆகமக்கடலும்,
இளங் கோவினர்கள் இரண்டு அறி பெயரும்,
அன்னமும் பன்றியும் ஒல்லையின் எடுத்துப்
பறந்தும் அகழ்ந்தும், படி இது என்னாது
அறிவு அகன்று உயர்ந்த கழல் மணி முடியும்
உடைமையன் -- பொற்கழல் பேணி
அடையவர் போல) மருள் மனம் திரிந்தே!

துறை விளக்கம்:

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனும் தலைவியும் தங்கள் இருவரையும் கூட்டிய தெய்வம் தான் பிரியாமல் பிரிவிக்கும் என்று

Koviloor Digital Library

கூறித் தலைவியைத் தலைவன் பாராட்டிட, அவன் பாராட்டிய பெருமை கண்டு தலைமகள் நாணி வருந்த, அது கண்டு இவள் வருந்துவதற்குக் காரணம் நான் பிரிவேன் என்று நினைந்துதான் என்று எண்ணி, அவளுக்குத் தன்னுடைய பிரிவின்மையைத் தலைவன் கூறுவது.

பாடற் பொருள்:

காலையில் எழுகின்ற சூரியனின் கிரணங்களைப் பரப்புகின்ற மாணிக்கங்கள் பதிக்கப் பெற்ற அழகிய அணிகலன்களை உடைய பெண்ணே, (தலைவியே) *(11)*

நல்ல பெருஞ் செல்வமானது கிடைத்த காலத்து அதனைக் காலால் தள்ளிக் கோபித்தும், பெரிதும் நிரம்பிய வளப்பத்தைத் தருகின்ற நாடும், அதனை ஆளுவதற்கு உரிய பொருளும் கிடைக்கப் பெறின், அவற்றை வேண்டாமென்று கோபித்து எடுத் தெறிந்தும், பதுமநிதியும், சங்க நிதியும் வீடு தேடிவரின் பெரிய கதவைத் மூடித் தடுத்தும், திருமாலும் பிரமனும் மந்திரம் என்னும் மலையை நட்டு, வாசுகி என்னும் பாம்பாகிய வடத் தைப் பூட்டி, பெரிய கடலின் வயிறானது பள்ளம் ஏற்படுமாறு கடைந்ததினால் உண்டான அமுதமானது உள்ளங்கையில் கிடைக் குங்கால் அதனைத் தரையில் கவிழ்த்தும், இத்தகைய செயல்களை விண்ணும் மண்ணுமாகிய இரண்டு உலகத்திலும் செய்பவர் உளரேல் ,(இருந்தால்) (1-10) (நானும் பிரிய எண்ணுவேனாக)

உள்ளும் புறம்பும் எங்கும் நிறைந்துள்ள சிவம் என்னும் பொருளை மனத்தகத்தே நிலைபெற வைத்து, முன்பு தான் கொண் டிருந்த சமணர்க்குரிய வேடத்தைக் கைவிடாத சாக்கியநாயனார் அருள் என்னும் கரையைக் காணப் பெற்று, அன்பாகிய பெருங்கடல் பலநாள் பெருக்கெடுத்து ஒருநாள் உடைபட்டு, கரையானது உடைந்து செயலற்றுச் சென்றதால், எடுத்துச் சேர்த்து வைத்த கல்லாகிய மலர்களை அர்ச்சித்த, ஒப்பற்ற பேரொளியாகிய மதுரையில் உள்ள மாணிக்கம், *(11 - 19)*

மேன்மையான மலைமகள் என்று கூறப்பெறும் தனது அருளாகிய கருணையானது, பிரியாது இருக்கின்ற வேதங்களால் விதிக்கப்பட்ட, முறைமை தவறாத ஒருபாகமாகிய தன்மையும், *(20 - 21)*

Koviloor Digital Library

பறவைகள் செல்ல முடியாத நெடிய ஆகாய முகட்டைக் கடந்து அப்பாற் சென்று திருமுடியில் இறங்கித் தங்கிய கங்கைத் துறையும், அநேக ஊழிக் காலங்களை நினைவுடன் கடந்தாலும், அருமையாகிய கரை காண முடியாத வேதக் கடலும், இளவர சாகிய படைப்பு, காத்தல் என்னும் தொழில் அறிந்த பிரமனும் திருமாலும் அன்னமாகவும், பன்றியாகவும் உருவெடுத்து, காலந் தாழ்த்தாமல் விண்ணில் பறந்தும், மண்ணைப் பிளந்தும், அளவு இது என்று அறிய முடியாத திருவடியும், திருமுடியும் கொண்டவனது, *(22- 30)*

திருவடியை அர்ச்சித்து அருளைப் பெறாதவர் மனம் போல, உன்னைப் பிரிதலுக்கு உள்ளத்தே நினைத்த எண்ணமுடையவன் ஆவேன் ஆக. *(30 - 31)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 12 ஆவது பாடல் துறைக் குரிய விளக்கமாகும். பாடலில் தலைவன் பெருஞ்செல்வம், அரசாட்சி, பதுமநிதி சங்கநிதி, பாற்கடலில் தோன்றிய அமுதம் ஆகிய அரிய பொருள்கள் கிடைத்தும், அவற்றை விரும்பாதவர் விண்ணகத்தும் மண்ணகத்தும் இருப்பது உண்மையானால் யான் தலைவியாகிய அரும்பொருளை உதறிவிட்டுப் பிரியக் கருதுவேன் என்று தலைவியிடம் கூறித் தன்னுடைய பிரிய முடியாத தன்மையை வெளிப்படுத்துவதாகப் பாடற் பொருள் அமைந் துள்ளது. இடையில் சாக்கியநாயனாரால் வணங்கப் பெற்ற மாணிக்கம் போன்ற சிவபெருமான் என்றும், அவர் ஒருபாகத்தில் உமையவளைப் பெற்றிருக்கிறார் என்றும், தலையில் கங்கை யையும் தன்னிடத்தில் ஆகம சமுத்திரத்தையும் கொண்டவர் என்றும், திருமால், பிரமன் ஆகியோரால் காணமுடியாத திருவடி, திருமுடிகளைக் கொண்டவர் என்றும் சிவபெருமானின் சிறப்புக் கூறப்பெற்று, அவரின் அருளைப் பெறாதவர் மனம்போன்று தலைவன் தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறான்.

(சொ - ம்):

பெருந்திரு - பெரிய செல்வம், கனன்று - கோபித்தும், கறுத்தும் - வெறுத்தும், தாமரை நிதியம் - பதுமநிதி, பால்வளைத்தனம் -

Koviloor Digital Library

சங்கநிதி, முன்வேடம் - சமணர்வேடம், மலைக்கன்னி - உமையவள், திருநதி - கங்கை, இளங்கோவினர் -இளவரசாகிய பிரமனும், திருமாலும்.

70. ஊடல் நீட வாடி உரைத்தல்

நிரை வளை ஈட்டமும், தரளக் குப்பையும்,
அன்னக் குழுவும், குருகு அணி இனமும்,
கருங்கோட்டுப் புன்னை அரும்பு உதிர் கிடையும்,
முடவெண் தாழை ஊழ்த்த முள் மலரும்,
அலவன் கவைக் கால் அன்ன வெள் அலகும்,
வாலுகப் பரப்பின் வலை வலிது ஒற்றினர்க்கு,
'ஈது' என அறியாது ஒன்றி, வெள் இடையாம்
மாதுடைக் கழிக் கரைச் சேரி ஓர் பாங்கர்,
புள்ளொடு பிணங்கும் புள் கவராது
வெள் இற உணங்கல் சேவல் ஆக,
உலகு உயிர் கவரும் கொலை நிலைக் கூற்றம்
மகள் எனத் தரித்த நிலை அறிகுவனேல்,
(விண் குறித்து எழுந்து - மேலவர்ப் புடைத்து,
நான்முகன் - தாங்கும் தேனுடைத் தாமரை
இதழும் கொட்டையும் சிதறக் குதர்ந்து,
வானவர்க்கு இறைவன் கடவு கார் பிடித்துப்
பஞ்சு எழப் பிழிந்து தண் புனல் பருகி,
ஐந்து எனப் பெயரிய நெடு மரம் ஒடித்து,
கண் உளத்து அளவா எள்ளுணவு உண்டு,
பொரி எனத் தாரகைக் கணன் உடல் கொத்தி,
அடும் திறல் அனைய கொடுந் தொழில் பெருக்கிய
மாயா வரத்த பெருங் குருகுஅடித்து,
வெண் சிறை முடித்த செஞ் சடைப் பெருமான்)
கூடற்கு இறையோன், குறி, உரு, கடந்த
இரு பதம் உளத்தவர் போல,
மருவுதல் ஒருவும் மதியா குவனே.

துறை விளக்கம்:

தீர்த்தாலும் தீர்க்க முடியாதபடி தலைமகள் ஊடல் கொள்ள, அவளுடைய ஊடலைத் தீர்ப்பதற்குத் தலைவன் ஒரு வழியும் காணாது வருந்த, முன்பு அமுதமாய் விளங்கியவள், இப்பொழுது

Koviloor Digital Library

தனக்கு வருத்தத்தைத் தருகின்ற மாயம் என்ன? என்று தன் நெஞ்சுக்குச் சொல்லித் தலைவன் வருந்துவது.

பாடற் பொருள்:

வரிசையான சங்குக் கூட்டங்களும், முத்துக் குவியல்களும், அன்னக் கூட்டங்களும், அழகிய கொக்குக் கூட்டங்களும், கரிய கொம்பிலிருந்து புன்னைப் பூக்கள் உதிருகின்ற இடமும், தாழையானது உதிர்த்த முள் பொருந்திய மலர்களும், நண்டினது கால் போன்று பிளந்திருக்கின்ற அலகினை உடைய வெள்ளிய அன்னப் பறவைகளும், மணல் மேட்டில் விரிந்திருந்த வலையை இழுத்துக் கட்டுகின்ற நெய்தல்நில மக்களுக்கு இன்னது என்று அறிய முடியாது, தலை மயங்கி இருக்கின்ற வெளியிடமாகிய உப்பங் கழிக் கரையின் கண் உள்ள சேரியின் ஒரு பக்கத்தில், *(1- 8)*

ஊடிடும் பறவைகள் கவர்ந்து செல்லாது வெண்மையான விரால்மீன்களைக் காவல் காக்கின்றவள் (தலைவி), உலகத்து உயிர் களைக் கவரும் கொடுந்தன்மை உடைய இயமன், பெண்ணெண வேடம் பூண்டு நிற்கின்ற நிலையை முன்னரே அறிவேனாயின், *(9 - 12)*

விண்ணுலகத்தைக் குறித்து மேல் எழுந்து தேவர்களைப் புடைத்து, பிரமனைச் சுமக்கின்ற தேனை உடைய தாமரையினது இதழும், கொட்டையும் சிதறும்படி அழித்து, தேவர்களுக்கு இறைவனாகிய இந்திரன், செலுத்தும் தேராகிய மேகத்தைப் பிடித்துப் பஞ்சாக ஆகும்படி பிழிந்து, அதிலுள்ள நீரை உண்டு. ஐந்து என்ற பெயரை உடைய நெடிய கற்பக மரங்களை ஒடித்து, கண்களுக்கும் உள்ளத்திற்கும் பொருந்தாத இகழத் தக்க உணவை உண்டு, நட்சத்திரக் கூட்டங்களை நெற்பொறி போலக் குத்தி, இத்தகைய தீச் செயல்களைப் பெருகும்படி செய்த, அழியாத வரத்தினைக் கொண்ட பெரிய கொக்காகிய அசுரனைக் கொன்று, அதனுடைய சிறகினைத் தான் தரித்துக் கொண்ட, செஞ்சடைக் கடவுளாகிய, சோமசுந்தரக் கடவுளாம் மதுரை நாயகனது,

உருவம் கடந்த இரண்டு திருவடியினையும் உள்ளத்தின்கண் வைத்தவர்கள் போல, அப்பெண்ணோடு கூடுதலை நீக்குகின்ற மதி கொண்டவன் ஆவேன் என்று ஊடலை நீடிக்கும்

Koviloor Digital Library

தலைவியிடத்துக் கூறுவது போலத் தலைவன் நெஞ்சிற்கு வாடி உரைக்கின்றான். *(13 - 26)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **364** ஆவது பாடல் துறையின் விளக்கமாகும். பாடலில் நெய்தல் நில மக்களுக்கு, அந்நெய்தல் நிலத்துப் பொருள்கள் ஒன்றுக்கொன்று கலந்திருப்பதால் மயக்கத்தைச் செய்கின்ற வளத்தை உடைய, சேரியின் கண்ணே மீன் உணங்கலைக் காத்துக் கொண்டிருக்கின்ற தலைவி, தலைவனுக்கு இயமனே பெண் உருவெடுத்து வந்ததுபோல ஊடல் கொண்டவளாகக் காட்சியளித்தாள், இவ்வாறு காட்சி அளிக்கின்ற பெண்ணை முன்பே தெரிந்திருந்தால் அவளோடு சேர்ந்திருக்கமாட்டேன் என்று தலைவன் வருத்தப்பட்டு நெஞ்சிற்குக் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. பாடலில் சிவபெருமான் சிறப்பாக விண்ணகம் வரை சென்று அழிவினைத் தந்த கொக்காகிய அரசனை அழித்த திருவிளையாடல் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

தரளம் - முத்து, அலவன் - நண்டு, வாலுகம் - வண்மணல், ஒற்றினர் - கட்டுபவர், உணங்கல் - கருவாடு, மேலவர் - தேவர்கள், நெடுமரம் - கற்பகமரம், எள்உணவு - இழிவான உணவு, தாரகை - நட்சத்திரம், மாயா வரத்த - கெடாத வரம

71. பங்கயத்தோடு பரிவுற்று உரைத்தல்

சிலை நுதல் கணை விழித் தெரிவையர் உளம் என
ஆழ்ந்து, அகன்று, இருண்ட சிறை நீர்க் கயத்துள்,
எரி விரிந்தன்ன பல் தளத் தாமரை!
நெடு மயல் போர்த்த உடல் ஒருவேற்கு,
குரு மணி கொழிக்கும் புனல் மலைக் கோட்டுழி
நின் பதி மறைந்த நெட்டிரவகத்துள்,
குருகும் புள்ளும் அருகு அணி சூழ,
தேனொடும் வண்டொடும் திருவொடும் கெழுமி,
பெருந் துயில் இன்பம் பொருந்துபு நடுநாள்,
காணும் நின் கனவுள், நம் கவர் மனத்தவரைக்

Koviloor Digital Library

கொய் உளைக் கடு மான் கொளுவிய தேரொடு,
'பூ உதிர் கானற்புறம் கண்டனன்' என,
சிறிது ஒரு வாய்மை உதவினை அன்றேல் --
(சேகரம் கிழித்த நிறைமதி உடலம்
கலை, கலை சித்திய காட்சியது என்ன,
கடுமான் கீழ்ந்த கடமலைப் பல் மருப்பு
எடுத்துஎடுத்து உந்தி, மணிக் குலம் சிதறி,
கிளைஞர்கள் நச்சாப் பொருளினர் போல,
சாதகம் வெறுப்ப, சரிந்து அகழ்ந்து ஆர்த்து,
திரள் பளிங்கு உடைத்துச் சிதறுவதென்ன,
வழி எதிர் கிடந்த உலமுடன் தாக்கி,
வேங்கையும் பொன்னும் ஓர் உழித் திரட்டி
வரையர மகளிர்க்கு அணி அணி கொடுத்து,
பனைக்கைக் கடமா எருத்துறு பூழி
வண்டு எழுந்து ஆர்ப்ப, மணி எடுத்து அலம்பி,
மயில் சிறை ஆற்ற, வலிமுகம் பனிப்ப,
எதிர் சுனைக் குவளை மலர்ப் புறம் பறித்து
வரையுடன் நிறயை மாலை இட்டாங்கு,
நெடு முடி அருவி அகிலொடு கொழிக்கும்
கயிலை வீற்றிருந்த கண்ணுதல் விண்ணவன்,
நாடகக் கடவுள்) கூடல் நாயகன்
தாமரை உடைத்த காமர் சேவடி
நிறை உளம் தரித்தவர் போல,
குறை உளம் நீங்கி இன்பாகுவனே.

துறைப் பொருள்:

தலைவன் பிரிந்து செல்லத் தலைவியானவள் உப்பங்கழியின் கண்ணும், பசுமையான கானலின் கண்ணும் உள்ள தாமரைகள் தேனாகிய கண்ணீரைச் சிந்தி, பின்பு மாலையில் கூம்புவதால் தன் மாட்டு அன்புடையன என்று தாமரையோடு வருந்திக் கூறுவது.

பாடற் பொருள்:

வில்லை ஒத்த நுதலையும், அம்பை ஒத்த கண்களையும் கொண்ட பெண்களின் மனம்போல ஆழம், உடைய, இருண்ட நீர் நிறைந்த குளத்துள் நெருப்பு விரிந்தாற் போன்ற பல இதழ் களை விரித்திருக்கும் தாமரை மலரே, *(1 - 3)*

Koviloor Digital Library

மயக்கத்தால் மூடப்பெற்ற உடலைக் கொண்ட ஒருத்தியாகிய எனக்கு மாணிக்க மணிகளைக் கொழித்து வருகின்ற அருவி நீரை உடைய, மலையின் சிகரத்தில் உன்னுடைய நாயகனாகிய சூரியன் மறைந்த நெடிய இரவில், கொக்கும் மற்றைப் பறவைகளும் அருகிலே அணியாகச் சூழ்ந்திருக்க, பெண் வண்டும் ஆண் வண்டும் திருமகளும் கூடி, நீ பெரிய துயிலாகிய இன்பத்தைப் பொருந்தி, யாமத்தில் நீ கண்ட கனவினுள் வேறுபட்ட மனத்தை உடைய தலைவன், கொய்யப்பட்ட பிடரி மயிரை உடைய குதிரைகள் பூட்டிய தேருடன் கானகத்தே வருவதை யான் கண் டேன் என்று சிறிய உண்மையை நீ சொல்வாயானல், *(4 - 13)*

(கயிலை மலையின்) முடியால் கிழிக்கப்பட்ட முழுமதியின் உடலம் கலைந்து, கலைகள் சிதறிய காட்சி போல, *(14 -15)*

சிங்கத்தின் நகத்தால் கிழிக்கப்பட்ட யானையின் கொம்புகளை எடுத்துத் தள்ளியும், மணிக்குலங்களை வீசியும், அதனால் உறவினரால் விருப்பப் படாத பொருளை உடையவர் போலக் காட்சி தந்தும், சகோரப் பறவைகள் வெறுத்துப் பெயர்த்துத் தள்ளிய பளிங்குப் பாறைகள் உடைந்து சிதறுவதைப் போலவும், எதிரே கிடந்த கல் தூணோடு மோதியும், வேங்கை மலரையும் பொன்னையும் ஓரிடத்தில் சேர்த்து மலையில் வாழும் தெய்வப் பெண்களுக்கு அணிகலன்களாகக் கொடுத்தும், பனைமரம் போன்ற துதிக்கையை உடைய மதயானையின் பிடரியில் உள்ள புழுதியை வண்டுகள் எழுந்து ஆரவாரம் செய்யும்படிக் கழுவியும், மயில்கள் தோகையை விரித்து ஆடவும், குரங்குகள் குளிரால் நடுங்கவும், சுனையில் பூத்த குவளை மலர்களைப் பறித்து வீசி, மலையின் இடமெல்லாம் நிரம்பும்படி மாலை சூட்டியது போலவும், அகிற் கட்டைகளையும் பிறவற்றையும் அலைகளால் கொழித்து வீசும் அருவியானது விளங்கும் கயிலை மலையில் வீற்றிருக்கின்ற நெற்றிக் கண்ணை உடைய மேலவனும், கூத்தினை ஆடுகின்ற பெருமானும் ஆகிய மதுரைப் பெருமானது, தாமரை மலரை வென்ற அழகிய திருவடிகளை உள்ளத்தில் நிறையும்படிக் கொண்ட அன்பர் போல, என் மனக்குறை நீங்கி இன்பம் அடைவேன் என்று தலைவி தாமரையைப் பார்த்துக் கூறினாள். *(16 - 34)*

Koviloor Digital Library

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 190 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் தலைவி தாமரை மலரைப் பார்த்து, கதிரவன் மறைந்த இரவுப்பொழுதில் வண்டுகள் துயிலுகின்ற நள்இரவில் நீ (தாமரையானது) காணும் கனவில், தலைவன் வருவதைக் கண்டேன் என்று கூறினால், கயிலைமலை இறைவனது திருவடியை நினைத்தவர் மனம்போல நான் மகிழ்வேன் என்று தலைவி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. கயிலை மலையின் சிறப்பைக் கூறும் பொழுது சந்திரனில் உள்ள கலைகள் சிதற, யானையின் கொம்புகள் தூக்கி எறிய, மணிக் குலங்கள் வீசிட, பளிங்குப் பாறைகள் உடைந்து சிதற, வேங்கை மலர் போன்ற மலர்கள் தெய்வ மகளிர்க்கு அணியாய்த் திகழ்ந் திட, யானையின் பிடரித் தூசி கழுவப் பெற, மயில்கள் ஆட, குரங்குகள் வாட, குவளை மலர்கள் மலையெங்கும் மாலையாகத் திகழ, அகிற் கட்டைகளும் பிறவும் கொழித்திட விளங்கும் அருவியினை உடைய கயிலை மலை என்று கூறப்பெற்றுச் சிவபெருமானின் பெருமை கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

சிலை - வில், கயம் - குளம், மயல் - காதல் மயக்கம், நின்பதி - கணவனாகிய சூரியன், சேகரம் - மலைமுடி, கடுமான் - சிங்கம், கிளைஞர் - சுற்றத்தார், சாதகம் - சாதகப் பறவை, உலம் - தூண், கடமா - யானை, வலிமுகம் - குரங்கு,

72. பதி பரிசு உரைத்தல்

எரி தெறக் கருகிய பொடி பொறுத்து இயங்கினை,
முகில் தலை சுமந்து ஞிமிறு எழுந்து இசைக்கும்
பொங்கருள் படுத்த மலர் கால் பொருந்துக!
கடுங் கடத்து, எறிந்த கொடும் புலிக்கு ஒடுங்கினை,
வரி உடற் செங் கண் வராலினம் எதிர்ப்ப,
உழவக் கணத்தர் உடைவது நோக்குக!
கொலைஞர் பொலிந்த கொடித் தேர்க்கு அணங்கினை,
வேதியர் நிதி மிக விதிமகம் முற்றி,
அவபிரதத்துறை ஆடுதல் கெழுமி,

Koviloor Digital Library

பொன் உருள் வையம் போவது காண்க!
ஆறு அலை எயினர் அமர்க் கலிக்கு அழுங்கினை,
பணைத்து எழு சாலி நெருக்குபு புகுந்து,
கழுநீர் களைநர் தம் கம்பலை காண்க!
தழல் தலைப்படுத்த பரல் முரம்பு அடுத்தனை,
சுரி முகக் குழு வளை நிலவு எழச் சொரிந்த
குளிர் வெண் தரளக் குவால் இவை காண்க!
அலகை நெட்டிரதம் புனல் எனக் காட்டினை,
வன்மீன் நெடுங் கயல் பொதி வினையகத்துக்
கிடங்கு எனப் பெயரிய கருங் கடல் காண்க!
முனகர்கள் பூசல் துடி ஒலி ஏற்றனை,
குடுமிஅம் சென்னியர் கரு முகில் விளர்ப்பக்
கிடை முறை எடுக்கும் மறை ஒலி கேண்மதி!
அமரர்கள், முனிக் கணத்தவர், முன் தவறு
புரிந்து, உடன் உமை கண் புதைப்ப, மற்று, உமையும்
ஆடகச் சயிலைச் சேகரம் தொடர்ந்த
ஒற்றைஅம் பசுங் கழை ஒல்கிய போல,
உலகு உயிர்க்கு உயிர் எனும் திருஉரு அணைந்து
வளைக் கரம்கொடு கண் புதைப்ப, அவ்வுழியே
உலகு இருள் துரக்கும் செஞ்சுடர், வெண்சுடர்,
பிரமன் உட்பட்ட நில உயிர் அனைத்தும்
தமக்கு எனக் காட்டும் ஒளிக் கண் கெடலும்,
மற்று - அவர் மயக்கம் கண்டு, அவர் கண் பெறத்
திரு நுதல் கிழித்த தனி விழி நாயகன்
தாங்கிய கூடல் - பெரு நகர்
ஈங்கு இது காண்க! - முத்து எழில் நகைக் கொடியே!

துறைவிளக்கம்:

தலைவியை உடன் போக்கில் அழைத்துச் சென்ற தலைவன் தன் நகரத்திற்கு அவளை அழைத்துச் சென்றான். நகரத்தில் உள்ள குன்று, குளம், சோலை, மாளிகை, திருக்கோயில், இவற்றை எல்லாம் தனித்தனியே காட்டி பதி எனப்படும் ஊரின் சிறப்புக்களை உரைத்தல்

பாடற்பொருள்:

முத்துப்போன்ற அழகிய பற்களை உடைய கொடி போன்றவளே, *(35)*

Koviloor Digital Library

நீ நெருப்பினாலும் கடத்தற்கரிய பாலை நிலைத்துக் கல்பொடிகளைப் பொறுத்துக் கொண்டு இதுவரை நடந்தனை. இனி மேகங்களைத் தலையின்கண் தாங்கிய, வண்டுகள் ஆர வாரிக்கும் சோலையினிடத்து உதிர்ந்த மலர்களில் நின் காலைப் பொருந்திடுமாறு வைத்திடுவாயாக. முன்பு காட்டில் எதிர்ப்பட்ட கொடுமையான புலிக்குப் பயந்தாய். இப்பொழுது வரி பொருந்திய செங்கண்ணை உடைய வரால் மீன்கள் துள்ளி எழுத லால் கூட்டமாகிய உழவர்கள் சிதறி ஓடுவதைப் பார்ப்பாயாக. மறவர் செலுத்திய கொடியை உடைய தேர்களைக் கண்டு முன்பு வருந்தினை. இப்பொழுது மலையோர், செல்வம் வளருமாறு யாகங்களை முறையாக முடித்து, அவ்விரதத்தின் பொருட்டு நீராடுதலைச் செய்து, பொன்னாலாகிய ஆழித்தேர் மேல் போவதைப் பார்ப்பாயாக. முன்பு வழிப்பறி செய்வோராகிய வேடர்களின் பேரொலிக்கு நொந்திருந்தாய். இப்பொழுது நன்கு அடிபருத்த, வளர்ந்திருக்கின்ற நெற்பயிர்களை நெருங்கிப் புகுந்த செங்கழுநீர்ப் பூவாகிய களைகளைப் பறிப்பவரின் ஓசையைக் கேட்பாயாக. *(1 -13)*

முன்பு நெருப்பானது பழுத்துள்ள (வெயிலால்) பருக்கைக் கல் மேட்டை நெருங்கி வந்தாய். இப்பொழுது சுரிந்த முகத்தினை உடைய சங்கினம் ஒளியை வீச, குளிர்ச்சி பொருந்திய வெண் முத்துக் குவியலை காண்பாயாக. நெடிய பேய்த்தேரை புனல்காடு என்று காட்டினாய். இப்பொழுது முதலைகள், கயல்மீன்கள் ஒன்றோடொன்று மோதுகின்ற தொழிலைத் தன்னகத்தே கொண்டுள்ள அகழி என்ற பெருங்கடலைக் காண்பாயாக. முன்பு காகளம் என்ற பறை ஓசையையும், போர்த்தொழிலுக்கு உரிய துடி ஒலியையும் செவியில் கேட்டாய். இப்பொழுது குடுமியை உடைய பார்ப்பனர் மேகத்தின் ஓசை நாணுமாறு வேத பாட சாலைகளில் முறையாக எடுக்கும் சந்தியாவந்தனம் செய்கின்ற வேதஒலியைக் கேட்பாயாக. *(14 -22)*

தேவர்களும் முனிவர்கள் கூட்டமும் முன்பு தவறு செய்த வுடனே உமாதேவியானவள் சிவபெருமானின் கண்களை மூடுவதற்காக, பொன்மலை சிகரத்தைத் தொடர்ந்த இளமை யாகிய ஒரு மூங்கில் அசைவது போல, (அசைந்து சென்று)

Koviloor Digital Library

உலகத்து உயிர்களுக்கு எல்லாம் உயிராகிய சிவபெருமான் திருமேனியை அணைத்து, வளையணிந்து கைகளால் அவரின் கண்களை மூட, *(23 - 28)*

அப்பொழுதே - உலகத்தில் பரந்த இருளை விலக்குகின்ற சூரியனும் சந்திரனும், நான்முகன் முதலாகிய உயிர்கள் அனைத்தும் தத்தமக்குரிய வெளியில் தெரிகின்ற ஒளியானது மங்கின. *(29 - 31)*

அத்தகைய ஒளி மங்குதலை அறிந்து அவர்கள் மீளவும் கண்ஒளி பெறுமாறு தன்னுடைய நெற்றியிடத்தில் திறந்த ஒப்பற்ற விழியைக் (நெற்றிக்கண்) கொண்ட கடவுளாகிய சோமசுந்தரப் பெருமானால் பாதுகாக்கப்பட்ட மதுரையாகிய நகரம் இது என்பதையும் அறிவாயாக. *(32- 34)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **223** ஆவது பாடல் துறைக்குரிய விளக்கமாகும். தலைவியைத் தலைவன் உடனழைத்து மதுரைக்குச் செல்லும் பொழுது, நகரத்தைக் காண்பதற்கு முன் பார்த்த, கேட்ட, அனுபவித்த பொருள்களைப் பற்றியும், அவற்றிற்கு மாறான மதுரை நகரத்துப் பொருள்களைப் பற்றியும் சுட்டிக் காட்டித் தனது நகராகிய மதுரையைக் காண்பாயாக என்று மதுரையின் பெருமையைக் கூறுவதாகப் பாடல் பொருள் அமைந்துள்ளது. இதில் சிவபெருமானுடைய கண்ணை உமையவள் பொத்தியதையும் அதனால் ஏற்பட்ட ஒளி மங்குதலைச் சீர் செய்யச் சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்ததையும் சிவபெருமான் சிறப்பாகப் பாடல் குறிப்பிடுகிறது.

(சொ- ம்)

கருகிய பொடி - பருக்கற்கள், பொங்கர் - சோலை, வரால் - மீன், அவபிரதம் - யாகத்தின் முடிவில் நீராடுதல், கலி - ஒலி, அலகை நெட்டிரதம் - கானல்தேர், சேகரம் - சிகரம், பசுங்கடை - பசிய மூங்கில், செஞ்சுடர் - சூரியன்,

Koviloor Digital Library

73. தேறாது புலம்பல்

புட்பெயர்க் குன்றமும், எழு வகைப் பொருப்பும்,
மேல் கடல் கவிழ் முகப் பொரி உடல் மாவும்,
நெடுங் கடல் பரப்பும், அடும் தொழில் அரக்கரும்,
என் உளத்து இருளும், இடை புகுந்து உடைத்த
மந்திரத் திரு வேல் மறம் கெழு மயிலோன்,
குஞ்சரக் கொடியொடும் வள்ளிஅம் கொழுந்தொடும்
கூறாக் கற்பம் குறித்து நிலை செய்த,,
புண்ணியம் குமிழ்த்த குன்றுடைக் கூடல்
நிறைந்து உறை கறை மிடற்று அறம் கெழு பெருமான்
பேர் அருள் விளைத்த மாதவர் போல,
முன் ஒரு நாளில், உடல் உயிர் நீ என
உள்ளம் கரிவைத்து, உரை செய்த ஊரர்
தம் மொழி திரிந்து தவறு நின்றுளவேல்,
அவர் குறை அன்றால், ஒருவன் படைத்த
காலக் குறிகொல்? அன்றியும், முன்னைத்
தியங்கு உடல் ஈட்டிய தரும் சுடு வினையால்,
காலக் குறியை. மனம் தடுமாறிப்
பின் முன் குறித்த நம் பெரு மதி அழகால்,
நனவிடை நவிற்றிக் கனவிடைக் கண்ட
உள் எழு கலக்கத்துடன் மயங்கினமால்,
குறித்த இவ் இடைநிலை ஒன்றே --
மறிக் குலத்து உழையின் வழி நோக்கினளே!

துறை விளக்கம்:

தலைவனது வார்த்தைகளைக் கூறித் தோழி, தலைவியின் வருத்தத்தை நீக்கக் கருதுகின்ற பொழுது, தலைவி அவரின் அவ்வார்த்தைகளால் என் நெஞ்சமும், நிறையும் என் வசமில்லை. மேலும் என் உயிரும் அவர் சொல்லை ஏற்று துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளாது உள்ளது. எனவே இதற்குக் காணரம் யாது? என்று தோழி தேற்றுவதற்குத் தான் தேறாதிருத்தலைத் தலைவி கூறுதல்.

பாடற் பொருள்:

மான் கூட்டத்துள் இருக்கின்ற பெண்மான் போல மருண்டு நோக்குகின்ற கண்களை உடையவளே (22)

Koviloor Digital Library

கிரௌஞ்சம் என்னும் மலையையும் அதனை ஒட்டிய எழு வகையாகிய மலையையும், கடலின் நடுவே கவிழ்ந்த முக முடைய மாமர வடிவான சூரனையும், அவனுள்ள நெடிய கடலையும், கொல்லும் தொழிலை உடைய மற்ற அரக்கர்களையும், என் உள்ளத்தின்கண் உள்ள இருளையும், நடுவில் புகுந்து அழித்த மந்திரம் பொருந்திய அழகிய வேலினையும், வலிமை பொருந்திய மயிலையும் உடைய முருகக் கடவுள், தெய்வ நாச்சியாரோடும், வள்ளி நாச்சியாரோடும், குறிக்கப் படாத கற்பந் தோறும் (எல்லை இல்லாத காலந்தோறும்) நிலைபெற்றிருக்கும் (எழுந்தருளியிருக்கும்), புண்ணியமே திரண்டு வடிவெடுத்தது போல வடிவெடுத்த திருப்பரங்குன்றம் என்னும் மலையை ஒரு பக்கத்தே கொண்ட மதுரையம்பதியில், *(1 - 8)*

கழுத்தில் காளகண்டத்தை உடைய, தருமமே உருவாகிய எமது பெருமானாகிய சோமசுந்தரக் கடவுளின் அருளைப் பெற்ற, பெரிய தவத்தை உடையவர்கள் போல, *(9 - 10)*

முன்னொரு நாளில் எனது உடலுக்கு நீர் உயிர் என்று தமது உள்ளத்தைச் சாட்சியாக வைத்து, உறுதி உரைத்த நம் தலைவர், இப்பொழுது தம் சொல் மாறுபட்டுத் தவறு உடையவர் ஆனால், அது அவர் குற்றமன்று, *(11- 14)*

பிரமனால் படைக்கப்பட்ட காலத்தின் இயல்போ, அல்லது முற்பிறப்பில் உடலானது ஈட்டிய தீமையால் வந்த கால நிலையோ, மனம் தடுமாற்றத்தைப் பொருந்திய, பின்முன் குறித்த நமது பெரிய புததியினது தன்மையோ, *(15 - 18)*

நனவிலே சொல்லியதைக் கனவிலே கண்ட மனத்தில் தோன்றும் கலக்கத்தோடு, தெளிவு அறியாது நாம் மயங்கினம் ஆதலால், துன்பத்தை நினைக்க இப்பொழுது யாம் உயிருடன் இருத்தல் பொறுத்தற்கு அரிதலாகும். *(19 - 21)* என்று தலைவி தான் தேறாத தன்மையை எடுத்துரைத்தாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **278** ஆவது பாடல் துறைக் குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் முருகப் பெருமான் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றத்தின் சிறப்புக்

Koviloor Digital Library

கூறப்பெற்று, முன்பு தலைவியைப் பாராட்டிய தலைவன் பின்பு மாறுபட்டதால் ஏற்பட்ட துன்பத்தையும், காலத்தின் மாறு பாட்டால் பொறுத்துக் கொண்டு உயிர் வாழ்தல் அரிது என்று தலைவி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இதில் சிவபெருமானின் சிறப்பாகக் கழுத்தில் நஞ்சுக்கறையோடு அறத்தின் வடிவமாக இருப்பவன் என்று கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

புள்பெயர்க்குன்றம் - கிரௌஞ்ச மலை, குஞ்சரக்கொடி - தேவயானை, கர்ப்பம் - காலம், கரி - சாட்சி, மதி - அறிவு.

74. மாலைப் பொழுதொடு புலம்பல்

ஆயிரம் பணாடவி அரவு வாய் அணைத்துக்
கரு முகில் நிறத்த கண்ணனின் சிறந்து,
நிறை உடல் அடங்கத் திரு விழி நிறைத்துத்
தேவர் நின்று இசைக்கும் தேவனின் பெருகி,
குரு வளர் மரகதப் பறைத் தழை பரப்பி
மணி திரை உகைக்கும் கடலினின் கவினி,
முன் எயிற்று அரவம் முறித்து உயிர் பருகிப்
புள் எழு வானத்து அசனியின் பொலிந்து,
பூதம் ஐந்து உடையும் காலக் கடையினும்
உடல் தழை நிலைத்த மறம் மிகு மயிலோன்,
புரந்தரன் புதல்வி, எயினர்தம் பாவை,
இரு பால் இலங்க, உலகு பெற நிறைந்த
அருவிஅம் குன்றத்து அணி அணி கூடற்கு
இறையவன், பிறையவன், கறை கெழு மிடற்றோன்,
மலர்க் கழல் வழுத்தும் நம் காதலர், பாசறை
முனைப்பது நோக்கி, என் முனை அவிழ் அற்றத்து --
பெரும் பகலிடையே, பொதும்பரில் பிரிந்த
வளை கட் கூர் உகிர்க்க கூக்குரல் மோத்தையை
கருங் கட் கொடியினம் கண் அறச் சூழ்ந்து,
புகை உடல் புடைத்த விடன் வினைபோல --
மனம் கடந்து ஏறா மதில் வளைத்து, எங்கும்
கரு நெருப்பு எடுத்த மறன் மருள் மாலை!
நின் வரற்கு ஏவர் நல்கினர்? நின் வரல்
கண்டு உடல் இடைந்தோர்க் காட்டுதும், காண்மதி,

Koviloor Digital Library

மண் உடல் பசந்து கறுத்தது, விண்ணமும்
ஆற்றாது அழன்று, காற்றின் முகம் மயங்கி,
உடு எனக் கொப்புள் உடல் நிறை பொடித்தன,
ஈங்கு இவற்று அடங்கிய இரு திணை உயிர்களும்
தம்முடன் மயங்கின, ஒடுங்கின, உறங்கின,
அடங்கின, அவிந்தன, அயர்ந்தன. கிடந்தன,
எனப் பெறின் -- மாலை! என் உயிர் உளைப்பதும்,
அவர் திறம் நிற்பதும், ஒருபுடை கிடக்க,
உள்ளது மொழிமோ, நீயே, விண்ணுழை
வந்தனை என்னில், வரும் குறி கண்டிலன்,
மண்ணிடை எனினே, அவ் வழியான,
கூடி நின்றனை எனின், குறி தவறாவால்,
தேம் படர்ந்தனை எனின், திசை குறிக்குநரால்,
ஆதலின், நின் வரவு எனக்கே
ஓதல் வேண்டும் புலன் பெறக் குறித்தே.

துறை விளக்கம்:

கதிரவன் மறைதல், ஆநிரை காத்தவர் திரும்பல், பறவைகள் கூடு சேர்தல், ஆகியவை நிகழும் மாலை நேரத்தில் நான் எவ்வாறு ஆற்றுவேன் என்று பிரிந்திருக்கும் தலைவி வருந்துதல்,

பாடற் பொருள்:

ஆயிரம் படங்களைக் கொண்ட சேடன் என்னும் பாம்பை வாயில் கவ்வி, கருமுகில் போன்ற கண்ணன் போல் சிறப்புற்று, *(1 -2)*

தன் உடல் முழுவதும் அழகிய கண்களைக் கொண்ட தேவர்கள் துதிக்கும் இந்திரன் போல் பெருமை பெற்று *(3 -4)*

நிறம் மிகுந்த மரகதமணி போலும் இறகுகளைத் (அலைகளைத்) தழைவாக விரித்து, முத்து முதலிய மணிகளை அலைகளால் ஒதுக்குகின்ற கடலைப் போன்று அழகுற்று, *(5 - 6)* விளங்கி,

முட்களைப் போன்ற பற்களை உடைய பாம்புகளை முறித்து, அவற்றின் உயிரை உண்டு விரைவாக மேகத்தின் இடி முழக்கம் போல் முழங்கி, பஞ்சபூதங்களும் அழியும் ஊழிக் காலத்திலும்,

Koviloor Digital Library

உடல் தழைத்து நிற்கும் மயிலை - வாகனமாக உடையவன், (7 - 10) (முருகப் பெருமான்)

இந்திர குமாரியான தேவயானையும், வேடுவர் குமாரியான வள்ளியம்மையும் இரு பக்கத்திலும் விளங்க, உலகில் உள்ளோர் வேண்டும் வரங்களைப் பெற, எழுந்தருளியிருக்கின்ற, அருவியை உடைய திருப்பரங்குன்றத்தை ஒரு பக்கமாகக் கொண்ட, கூடல் என்னும் நகர்க்கு இறைவன் (11 - 14)

பிறை அணிந்தவன், காள கண்டத்தை உடையவனும் ஆகிய சோமசுந்தரப் பெருமானின் மலர் போன்ற திருவடியைப் போற்றும் நமது தலைவர், பகைவர் பாசறையில் இருக்கின்ற வர்கள் தன்னை எதிர்ப்பதை நோக்கி வேலை அதன் உறை யிலிருந்து எடுத்தார். அந்தச் சமயத்தில் மத்தியான நேரத்தில் மரப்பொந்திலிருந்து வெளிப்பட்ட வட்டமான கண்களையும், கூரிய நகங்களையும், கூவும் குரலையும் உடைய கோட்டானைக் கரிய கண்களை உடைய காக்கைக் கூட்டங்கள் சூழ்ந்து, புகை போன்ற நிறத்தினை உடைய கோட்டானின் உடலைக் குத்திய கொடிய செய்கை போல, (15 - 20)

மனத்தாலும் கடக்க ஒண்ணாத மதிலைச் சூழ்ந்துள்ள எவ்விடத்திலும் கரிய நெருப்பை எடுத்துக் கொட்டிய துன்பத்தை எனக்குத் தருகின்ற மாலைக் காலமே, (21 - 22)

உன்னுடைய வருகைக்கு உன்னைத் தந்தவர் யார்? நீ வருவதைக் கண்டு வருந்தினவற்றை நான் காட்டுவேன், பார்ப்பாயாக, (23 - 24)

பூமியானது பசப்பை அடைந்தது, பின் கருத்தது. ஆகாயமும் உன் வரவைப் பொறாமுது புழுங்கிக் காற்றினால் முகம் வேறு பட்டு, நட்சத்திரமாகிய கொப்புளத்தைத் தன் உடலில் நிறையக் கொண்டது. (25 - 27)

இவ்விரண்டு உலகினும் அடங்கிய இருதிணையாகிய உயிர்களும் தமது உடல் சில மயங்கின, சில இளைத்தன, சில உறங்கின, சில வாய் திறவாது அடங்கின, சில இறந்தன, சில அயர்ந்தன, சில படுத்தன என்று சொல்லப்படின், மாலைக் காலமே என் உயிரை வருத்துவதும், தலைவர் பக்கம் நீ நிற்பதும் ஒரு சார்பாக உள்ளது கூறுவாயாக. (28 - 33)

Koviloor Digital Library

நீ, தானே விண்ணகத்திருந்து வந்தாய் என்று சொல்லுவா யானால் வருவதற்கு உரிய அடையாளம் அறிந்தேன் இல்லை. மண்ணிடத்திருந்து வந்தாய் என்றால் அதுவும் அப்படியே. இரண்டிடத்தும் கூடி நின்று வந்தாய் என்றால் உண்மைக் குறி தவறக் கூடாது. இல்லை ஒரு தேயத்திலிருந்து வந்தனன் என்று கூறுவாயானால் வந்த திக்கைக் குறிப்பிட வேண்டும். ஆதலால் நீ வருதலை எனக்குத் தெரியச் சுட்டி நீ சொல்ல வேண்டும் *(33-39)* என்று மாலை நேரத்தை நோக்கித் தலைவி கூறினாள்.

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **188** ஆவது பாடல் துறைக் குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் முருகனது மயிலின் சிறப்புக் கூறப்பெற்று, அதன்பின் பகற் பொழுதில் கோட்டானுக்குக் காக்கைகள் தருகின்ற துன்பம் போலத் தனக்குத் துன்பத்தை மாலை நேரம் தருவதாகத் தலைவி கூறித் தான் மட்டும் அல்லாது மாலை நேரம் தருகின்ற பிற உயிர்த் துன்பங் களையும் கூறி, துன்பத்தைத் தருகின்ற மாலை எங்கிருந்து வருகிறது என்பதைத் தனக்கு அறிவிக்க வேண்டும் என்று கூறு வதாகப் பாடற் கருத்து அமைந்துள்ளது. இதில் சிவபெருமானின் சிறப்பாக முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங் குன்றத்தைப் பக்கத்திலே கொண்ட மதுரையம்பதிக்குத் தலைவன் என்று கூறப்பெற்றுள்ளது.

(சொ- ம்)

பணாடவி - பாம்பின்படம், கவின் - அழகு, அசனி - இடி, மோத்தை - கோட்டான், கருங்கண் கொடியினம் - காக்கையினம், தேம் - தேசம்.

75. வாய்மை கூறி வருத்தம் தணித்தல்

திருமலர் இருந்த முதியவன் போல
நான்முகம் கொண்டு, அறி நன்னர் நெஞ்சு இருந்து,
வேற்றருள் பிறவி தோற்றுவித்து எடுத்து,
நிலம் இரண்டு அளந்த நெடுமுகில் மான,
அரக்கர்தம் கூட்டம் தொலைத்து, நெய் உண்டு,
களிற்று உரி புனைந்த கண்ணுதல் கடுப்ப
அழல் எடுத்து ஒன்னலர்புரம் எரி ஊட்டி,

Koviloor Digital Library

இனைய, எவ் உலகும் தொழுது எழு திரு வேல்,
சரவணத்து உதித்த அறுமுகப் புதல்வன் --
பரங்குன்று உடுத்த பயம் கெழு கூடல்
பெரு நகர் நிறைந்த சிறு பிறைச் சென்னியன்,
மால் அயன் தேடி, மறை அறைந்து, அறியாத்
தன் உரு ஒன்றில் அருள் உரு இருத்திய
ஆதி நாயகன், அகல் மலர்க் கழல் இணை
நண்ணலர் கிளைபோல் தன் மனம் திரிந்து, நம்
துறைவன் தணக்க அறிகிலம் யாமே ---
பிணர் முடத் தாழை விரிமலர் குருகு என,
நெடுங் கழிக் குறுங் கயல், நெய்தலுள் மறைந்தும்,
புன்னை அம் பொதும்பர்க் குழைமுகம் குழைமுகம்
கருந்த திரை சுமந்து எறி வெண் தரளத்தினை
அரும்பு என, சுரும்பினம், அலர நின்று இசைத்தும்,
கலம் சுமந்து இறக்கும் கரி இனம் பொருப்பு என,
பருகிய முகிற்குலம், படிந்து கண்படுத்தும்,
பவள நன் கவைக் கொடி வடவையின் கொழுந்து என,
சுரிவளை குளிக்குநர் கலனிடைச் செறிந்தும்,
வெள் இற உண்ண விழைந்த புகு குருகினம்,
கருங் கழி நெய்தலைக் காவல் செய் கண் என,
அரவு எயிற்று அணி முட் கைதையுள் அடங்கியும்,
விண் தொட எழுந்து விழுதிரைக் குழுவினைக்
கடல் வயிற்று அடங்கிய மலையினம் வரவு என,
குழி மணற் கேணியுள் கொம்பினர் படிந்தும்,
முயங்கிய உள்ளம் போகி,
மயங்கிய துறையினம் ஒருங்குழி வளர்ந்தே.

துறை விளக்கம்:

வரைவு நீட்டித்தலால் வருந்துகின்ற தலைவிக்குத் தலைவன் உறுதியாக வரைந்து கொள்வேன் என்று அவன் சொன்ன வார்த்தை தலைவிக்குப் பொய் என்பது கருத்தாயின் இவ்வுலகத்தில் மெய் என்பது சிறிதும் இல்லை என்று தலைவனது வாய்மை கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தது.

பாடற் பொருள்:

தாமரைப் பூவில் வீற்றிருந்த நான்முகனைப் போல, நான்முகம் கொண்டு அறியத் தக்கவற்றை அறிந்த நல்ல உள்ளங்

Koviloor Digital Library

களில் வசித்து, வேறாகிய அருளுக்கு உரிய பிறவியைப் பிறப் பித்துக் காட்டி தசாவதாரம் எடுத்து, மண்ணும் விண்ணுமாகிய இரண்டினையும் திருவடியால் அளந்த பெரிய முகிலாகிய திருமால் போலவும், (1 - 4)

அரக்கர் குலத்தைத் தொலைத்து, நெய்யை உண்டு (வேள்வி யில் எழுந்த), யானைத்தோலைப் புனைந்து, மேருவில்லைத் தாங்கி பகைவரது முப்புரங்களை எரித்த சிவன் போலவும், (5 - 7)

இத்தன்மையதாகிய செயல்களைச் செய்து எவ்வுலகும் தொழுது எழுவதற்குக் காரணமான வேலாயுதத்தை உடைய, சரவணப் பொய்கையில் உதித்த ஆறுமுகங்களைக் கொண்ட முருகப் பெருமானது திருப்பரங்குன்றம் சூழ்ந்துள்ள வயல் மிக்க மதுரையில், (8 - 11)

இளம்பிறையை அணிந்த தலைமுடி உடையவன், திருமாலும் பிரமனும் தேடிய, வேதங்கள் அறிந்தும் அறியாத, தனது வடிவின் ஓர் பாகத்தில் அருளாகிய பராசக்தியை வைத்த, ஆதி நாயகனாம் சோமசுந்தரக் கடவுளின், மலர்ந்த தாமரை மலர் போலும் திருவடிகளைச் சேராதவர்கள் சுற்றம் போலத் தன் மனம் திரிந்து நம் தலைவன் நம்மை விட்டு நீங்குதற்குக் காரணம் இன்னது என்று அறிகிலோம், (12 - 16)

சருச்சரை உடைய தாழையிடத்தில் விரிந்த மலரைக் கொக்கு என்று கருதி, உப்பங்கழியில் உள்ள கயல் மீன்கள் நெய்தல் மலர்களுக்குள்ளே மறைந்தும், (17 - 18)

புன்னைமரச் சோலையில் குழைகின்ற முகத்தினை உடைய அம்மரத் தளிர்களிடத்துப் பெரிய அலைகள் எடுத்தெறிந்து தங்கிய வெள்ளிய முத்தங்களை, புன்னை அரும்பு என்று கருதி வண் டினம் மலரும்படி இசைபாடவும், (19 - 21)

கப்பல் சுமந்து வந்து கடற்கரையில் இறக்குகின்ற யானைக் கூட்டங்களை மலை என்று கருதி,கடல்நீரை உண்ட மேகக் கூட்டம் அதன்மேல் படிந்து உறங்கவும், (22 - 23)

ஒளி பொருந்திய பவளங்களின் கொடிகளை வடவாக்கினித் தீயின் சுடர் என்று கருதிச் சங்குகளைக் குளித்து எடுக்கின்றவர்கள் (அஞ்சி) கப்பல் மேல் ஏறியும்,

Koviloor Digital Library

வெண்மையான இறால் மீனை உண்ண விரும்பிப் பாய்கின்ற கொக்கு இனங்கள், உப்பங்கழியில் மலர்ந்துள்ள நெய்தல் பூவைக் காவல் செய்கின்றவர்களின் கண்கள் என்று கருதி, பாம்பின் பற்களைப் போன்ற முட்களைக் கொண்ட தாழைப் புதரில் ஒளிந்தும், ஆகாயத்தைத் தொடும்படி எழுந்து விழுகின்ற கடல் அலைக் கூட்டத்தை, இந்திரன் மலைகளின் இறக்கைகளை வெட்டிப் போர்செய்து கடலுள் ஒளித்திருந்த மலைகள் எழுந்தன என்று கருதி, பெண்கள் மணற் கேணியில் சென்று போய் மறைந்தும், இவ்வாறு நெய்தல் துறையில் உள்ளவை ஓரிடத்தே வளர்ந்திருந்தும், ஒன்றோடு ஒன்று மயங்கியதைப் போல, தலைவன் மனம் வேறுபட்டான் நம்மை விட்டுப் பிரிந்தான். அதற்குக் காரணம் அறிந்திலோம் (24 - 33) என்று தோழி தலைவியை ஆற்றுப்படுத்தினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 277 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் பிரமன், திருமால், சிவன் ஆகியோருடைய தொழில்களை முருகப் பெருமான் மீது ஏற்றி அத்தகைய தொழில்களைச் செய்த முருகப் பெருமான் இருக்கின்ற திருப் பரங்குன்றம் என்று சிறப்பிக்கப் பெற்று, அதனைப் பக்கம் கொண்ட மதுரையில் திருமால், நான்முகன் வேதம் அறியாத தனது வடிவத்தில் சிவபெருமான் ஒருபக்கத்தில் பராசக்தியைக் கொண்டிருக்கின்றான் என்று சிவபெருமானின் பெருமை கூறப்பெற்றுள்ளது, பின்னர் நெய்தல் நிலத்திற்கு உரிய பொருள்கள் ஒரே இடத்தில் இருந்தாலும், ஒன்றுக்கொன்று மாறு பட்டு நிலைதடுமாறியதைப் போல, மனம் தடுமாறித் தலைவன் பிரிந்து சென்றான். அதற்குரிய காரணம் அறிய முடியவில்லை எனத் தோழி கூறுவது போல் பாடலில் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்):

முதியவன் - பிரமன், வேற்றருள் பிறவி - தசாவதாரம், அறுமுகப் புதல்வன் - முருகன், அருளுரு - கருணையாகிய பராசத்தி, தணக்க - பிரிய, குருகு - கொக்கு, கலம் - கப்பல், வடவை - தீ, கொம்பினர் - மாதர்.

Koviloor Digital Library

76. அயல் அறிவு உரைத்து அவள் அழுக்கம் எய்தல்

ஆடகச் சயிலத்து ஓர் உடல் பற்றி,
கலி திரைப் பரவையும், கனன்று எழு வடவையும்,
அடியினும், முடியினும், அணைந்தன போல,
பசுந் தழைத் தோகையும், செஞ் சிறைச் சேவலும்,
தாங்கியும், மலர்க்கரம் தங்கியும், நிலைத்த
பேர் ஒளி மேனியன், பார் உயிர்க்கு ஓர் உயிர்,
மாவுடைக் கூற்றம், மலர் அயன் தண்டம்,
குறுமுனி பெறும் மறை, நெடு மறை பெறா முதல்,
குஞ்சரத் தோகையும் குறமகட் பேதையும்
இருந்தன இரு புறத்து எந்தை, என் அமுதம் ----
பிறந்தருள் குன்றம் ஒருங்குறப் பெற்ற
மாதவக் கூடல் மதிச் சடைக் காரணன்
இரு பதம் தேறா இருள் உளம் ஆம் என,
இவன் உளம் கொட்ப, அயல் உளம் களிப்ப ---
அரும் பொருட் செல்வி எனும் திருமகட்கு,
மானிட மகளிர் தாமும், நின்று எதிர்ந்து,
புல் இதழ்த் தாமரை இல் அளித்தெனவும்,
உலகு விண் பனிக்கும் ஒரு சயமகட்கு,
தேவர்தம் மகளிரும் செருமுகம் நேர்ந்து,
வீரம் அங்கு ஈந்து பின் விளிவது மானவும்,
இருள் உடல் அரக்கியர் கலைமகட் கண்டு,
தென் தமிழ், வட கலை, சில கொடுத்தெனவும்,
நீரர மகளிர் பாந்தள்அம் கன்னியர்க்கு,
ஆர் எரி மணித்திரள் அருளியது எனவும்,
செம் மலர்க் குழல் இவள் போய் அறிவுறுத்தக்
கற்றதும், கல்லாது உற்றன ஊரனை
அவள் தர -- இவள் பெறும் அரந்தைஅம் பேறினுக்கு
ஒன்றிய உவமம் இன்று, இவண் உளவால்,
மற்று -- அவள் தர, நெடுங் கற்பே
உற்று இவள் பெற்றாள் என்பதும் தகுமே.

துறை விளக்கம்:

உலகத்தோர் அறியும்படி செவ்வணி அணிந்து இல்லோர் பெண்களை விடுக்க நினைத்த பொழுது. அயலார் முன்னே பரத்தையால் இத்தகைய நிலை நமக்கு வந்ததே என்று அயல் அறிந்த

Koviloor Digital Library

செய்தி உரைத்து (தலைவன் பரத்தமை கொண்ட செய்தியை) வருத்தமுற்றுத் தலைவி கூறுதல்.

பாடற் பொருள்:

பொன்மலையின் உடலைப் பற்றி ஒலிக்கின்ற அலைகடலும், வடவாக்கினித் தீயும் அடியிலும், நடுவிலும் பொருந்தி இருத்தல் போல, பசிய தோகையை உடைய மயிலும், செம்மையான சிறகை உடைய சேவலும் முறையாகத் தாங்கியும், மலர்க்கையில் தங்கியும் காணப் பெறுகின்ற, பெரிய ஒளியை உடைய உடலை உடையவன், *(1 - 5)*

உலகின் கண் உள்ள உயிர்களுக்கு உயிரானவன், மாமர வடிவான சூரபதுமனுக்கு எமன், பிரமனைத் தண்டித்தவன், அகத்தியனார் பெற்ற மறைக்கு ஆதியாக உள்ள வேதமானவன், தெய்வயானை நாச்சியாரையும், வள்ளி நாச்சியாரையும் இரு பக்கமும் பெற்ற எந்தை, என்னுடைய அமுதம் தோன்றி அருளிய திருப்பரங்குன்றம் ஒருபக்கத்தில் இருக்கப் பெற்ற *(6 - 11)*

மாதவக் கூடலாம் மதுரையில் சந்திரனைச் சடையில் தாங்கிய, எல்லாவற்றிற்கும் காரணனாய் (தலைவன்) விளங்கும் சோம சுந்தரக் கடவுளின் இரண்டு திருவடிகளின் பெருமையைத் தெளியாத, இருண்ட உள்ளமாம் என்று சொல்லும்படி, *(12-15)*

இவள் உள்ளமானது சுழலவும், அயலார் ஆகிய பரத்தையர் உள்ளம் மகிழவும், அரும்பொருள் செல்வியாகிய திருமகளுக்கு மானிடப் பெண்கள் எதிர் நின்று, தாமரைப் பூவாகிய இருக்கையை அளித்தாற் போலவும், *(16 - 17)*

மண்ணையும் விண்ணையும் நடுக்க வைக்கும் ஒப்பற்ற வீரலட்சுமிக்குத் தேவ மகளிர் போர் முகத்தே வந்து வீரத்தைக் கொடுத்த பின்னர் இறந்தது போலவும், *(18 - 20)*

இருளை ஒத்த உடலை உடைய அரக்கியர் கலைமகளைக் கண்டு தென் தமிழிலும், வட கலையிலும் இன்றியமையாத சிலவற்றைக் கொடுத்தாற் போலவும், நீரில் வாழும் தெய்வ மகளிர் நாக கன்னியர்க்கு நெருப்புப் போன்ற மாணிக்கக் கூட்டங்களைத் தந்தது போலவும், *(21 - 24)*

Koviloor Digital Library

புதுமலர்க் கூந்தலை உடைய இத்தோழியானவள் போய் அறிவிக்க (செவ்வணியாகிய மலரை அணிந்து) அப்பரத்தை அறிந்ததும், அறியாது இருந்த தலைவனை அப்பரத்தையர் தர இத்தலைவி பெற்ற செயலுக்குத் தக்க உவமானம் ஒன்றும் இல்லை.(25 - 28)

உவமானம் உள்ளதெனின் அப்பரத்தை(தலைவனைத்) தருவதற்கு இவள் தன் கற்பையே ஆதாரமாகக் கொண்டு (தலைவனைப்) பெற்றாள் என்று சொல்லுவது தக்கதாகும். (29 - 30)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 360 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலின் முதற் பகுதியில் முருகப் பெருமானுடைய சிறப்புக் கூறப்பெற்று, அவனுடைய திருப்பரங் குன்றத்தை ஒரு பக்கமாகக் கொண்ட மதுரை நகரமும், அந்நகரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் சிறப்பும் கூறப்பெற்றுள்ளது, பின் வீட்டிலிருந்து அனுப்பப் பெற்ற பெண்ணும் பரத்தையரும் சந்தித்ததை - திருமகளுக்கு மானிடப் பெண்கள் இருக்கை அளித்தது, வீரலட்சுமிக்கு வீரம் கொடுத்தது, அரக்கியர் கலை மகளுக்குத் தென்தமிழ் வடகலை கொடுத்தது, தெய்வப் பெண்கள் நாகர் குலத்துப் பெண்களுக்கு மாணிக்கம் அளித்தது போன்ற தொழில்களை ஒப்புமையாகக் கொண்டது என்று கூறித் தலைவனைப் பெறுவதற்குச் செவ்வணி அணிந்த பெண் தலைவியின் கற்பை ஆதரமாகக் கொண்டு, பரத்தையரிடமிருந்து தலைவன் மீட்கப் பெற்றான் என்ற பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்):

சயிலம் - மலை, ஆடகம் - பொன், பரவை - கடல், தோகை - மயில், மா - சூரபதுமன், காரணன் - தலைவன், செயமகள் - வீரமகள், பாந்தளம் - நாகர் உலகம்,

77. பிரிந்தமை கூறல்

மலரவன் பனிக்கும் கவினும், குலமீன்
அருகிய கற்பும், கருதி, உள் நடுங்கித்
திருமகள் மலர் புகும் ஒரு தனி மடந்தை! இன்று,
இரு கடல் ஓர் உழி மருவியது என்னச்
செருப் படை வேந்தர் முனைமேல் படர்ந்த நம்

Koviloor Digital Library

காதலர், முனைப் படை கனன்று உடற்று எரியால்,
(மூடம் படு நாஞ்சில் பொன் முகம் கிழித்த
நெடுஞ் சால் போகிக் கடுங் கயல் துரக்கும்
மங்கையர் குழை பெறு வள்ளையில் தடை கொண்டு,
அவர் கருங் கண் என் குவளை பூத்த
இருள் அகச் சோலையுள் இரவு எனத் தங்கிய
மற்று அதன் சேக்கையுள் வதிபெறும் செங் கால்
வெள் உடல் ஓதிமம் தன்னுடைப் பெடை எனப்
பறை வரத் தழீஇப் பெற்று, உவை இனக் கம்பலைக்கு
ஆற்றாது அகன்று, தேக்கு வழி கண்ட
கால் வழி இறந்து, பாசடை பூத்த
கொள்ளம் புகுந்து, வள் உறை வானத்து
எழில் மதி காட்டி, நிறைவளை சூல் உளைந்து,
இடங்கரும் ஆமையும் எழு வெயில் கொளுவும்
மலை முதுகு அன்ன குலை முகடு ஏறி,
முழுமதி, உடுக்கணம், காதலின் விழுங்கி
உமிழ்வன போல, சுரிமுகச் சூல் வளை
தரளம் சொரியும் பழனக் கூடல்)
குவளை நின்று அலர்ந்த மறை எழு குரலோன்,
இமையவர் வேண்ட, ஒரு நகை முகிழ்ப்ப,
ஓர் உழிக் கூடாது உம்பரில் புகுந்து
வான் உடைத்து உண்ணும் மறக் கொலை அரக்கர் முப்
பெரு மதில் பெற்றன அன்றோ --
மருவலர் அடைத்த, முன், மறம் கெழு மதிலே?

துறை விளக்கம்:

தலைவன் வெய்ய போரரை உடைய போர்க்களத்திற்குப் போர் செய்வதற்காக வேந்தர்க்கு உற்றுழி பிரிந்தமையைத் தோழி தலைமகளுக்குக் கூறியது.

பாடற் பொருள்:

பிரமன் இவ்வடிவை யாம் படைத்தற்கு அரிது என்று அஞ்சுகின்ற உருவமும், அருந்ததியானவள் தன் கற்பில் குறைந்த நிலையை எண்ணி மனம் நடுங்கியும், இலக்குமியானவள் தன் அழகு குறைந்தது என்று எண்ணி மலரில் ஒளிந்திருக்கவும் பெருமையை உடைய ஒப்பற்ற பெண்ணே, *(1 - 3)*

Koviloor Digital Library

இந்நாளில் இரு கடல்கள் ஓரிடத்தில் சேர்ந்தது போல, போர் செய்தவற்குரிய படையை உடைய அரசர்களது போரைக் கருதிச் சென்ற நம் தலைவரது, கூர்மை பொருந்திய ஆயுதம் - கோபித்துப் போர் செய்கின்ற நெருப்பால்(முப்புரம் எரித்த நெருப்பிற்கு இணை என்பது பின்வருவனற்றால் குறிக்கப் பெறுகின்றது.) *(3 - 6)*

வளைந்த கலப்பையில் பொருந்திய இரும்பால் செய்த கொழுவால் கிழிக்கப்பட்ட சாலினது வழியாக (வயல்வெளியே சங்குகள்) சென்று, வேகமுள்ள கயல்மீன்கள் துரத்துகின்ற பெண் களின் பொன்னாலாகிய அணிகள் அணிந்த, காது போன்ற வள்ளைச் செடியில் அகப்பட்டு, *(7 - 9)*

அப்பெண்களது கரிய கண்ணைப் போலக் குவளைப்பூ பூத்த இருளுள்ள சோலையுள் இரவுப் பொழுது என்று கருதித் தான் கட்டிய கூட்டினுள் தங்கிய, சிவந்த காலினையும், வெண்மையான உடலினையும் உடைய அன்னமானது, தன்னுடைய பெடை அன்னம் என்று கருதி, தன்னுடைய இறகுகளால் தழுவப் பெற்று, *(10 - 14)*

ஒலி எழுப்புகின்ற அத்தகைய அன்னங்களுக்கு ஆற்றாது நீங்கி - அச்சோலையில் தேன் பெருக்கமானது உண்டாக்கிய வாய்க்கால் வழியே சென்று, பாசி பூத்திருக்கும் குழைந்த சேற்றில் புகுந்து, நீர்த்துளியைச் சிந்துகின்ற, வானத்தில் எழுந்துள்ள அழகு பொருந்திய சந்திரனைக் காட்டி, (ஒளியால்) *(15 - 18)*

கருப்பமுற்ற தன் வயிறு வருந்தி, முதலையின், ஆமையின் இளவெயில் காய்கின்ற மலைபோன்ற முதுகாகிய செய்கரைமேல் ஏறி, *(19 -20)*

முழுமதியானது - நட்சத்திரக் கூட்டங்களைத் தன்னுள்ளே விழுங்கி, மீண்டும் உமிழ்கின்றது போல, சுரிமுகம் உள்ள சூல் கொண்ட சங்கங்கள் முத்தங்களைச் சொரிகின்ற வயல் நெருங்கிய மதுரையில், *(21 - 23)*

குவளை மலர் தங்கி விரிந்தது போன்ற: வேதம் பிறத்தற்கு இடமாகிய நீலகண்டத்தை உடைய சோமசுந்தரக் கடவுள் , தேவர்கள் வேண்டுதலால் சிறுநகை அரும்ப, ஓரிடத்தில் இராமல் விண்ணுலகம் தோறும் சென்று, தேவர்களின் ஊர்களை அழித்துக்

Koviloor Digital Library

கெடுத்த, கொலைத் தொழில் அரக்கர்களுடைய முப்புரங்கள் பட்ட பாட்டினைப் பெற்றன. எவை என்றால் பகைவரால் அடைக்கப் பெற்ற வலிமை மிக்க அரண்கள். (26 - 29) என்று தோழி தலைவனின் போர் பிரிவைப் பற்றிக் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 316 ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் தலைவி தோழியால் விளிக்கப் பெற்று, தலைவன் போர் முனையில் சென்ற பொழுது அவன் ஆயுதத்தால் வெளிப்பட்ட நெருப்பினால், சிவபெருமான் முப்புரங்களை எரித்த போது அம்முப்புரங்கள் பட்ட பாட்டினைப் போலப் பகைவரின் அரண்களாகிய கோட்டைகள் பெற்றன என்ற பொருள் அமைந்துள்ளது. இடையில் சிவபெருமானின் மதுரை நகரத்து வருணனை அமைந்துள்ளது. மதுரை நகர வயல்களில் கலப் பையின் கொழுவால் கிழிக்கப்பட்டுத் தோன்றிய சங்குக் கூட்டங் கள் வள்ளைச் செடியில் தடைப்பட்டு, குவளை மலர்ந்த சோலை யில் தான் அமைத்த கூட்டில் தங்கிய அன்னப் பறவையால் அணைக்கப் பெற்று, தேன் உண்டாக்கிய வாய்க்காலின் வழியே சென்று, பாசி படர்ந்த சேற்றில் புகுந்து, வானத்துச் சந்திரனைக் காட்டி, தன் கருப்பம் பொருந்திய வயிறு வருந்திட முதலை, ஆமை முதுகுகளில் ஏறித் தான் உண்ட நட்சத்திரங்களைச் சந்திரன் உமிழ்ந்தது போலச் சங்குகள் முத்துக்களை ஈன்றன. அத்தகைய வளப்பம் மிகுந்த மதுரை என்று வருணனை செய்யப் பெற்றுள்ளது. சிவபெருமானின் சிறப்பாக முப்புரம் எரித்தமை இடம் பெற்றுள்ளது.

(சொ - ம்):

குலமீன் - அருந்ததி, நாஞ்சில் - கலப்பை, நெடுஞ்சால் - நீண்டவயல், ஓதிமம் - அன்னம், பறை - சிறகு, கம்பலை - ஒலி, தேக்கு - தேன், கால் - வாய்க்கால், கொள்ளம் - குழைந்த சேறு, உடுக்கணம் - நட்சத்திரக் கூட்டம்.

78. கலக்கம் கண்டு உரைத்தல்

'பெருந் துயர் அகற்றி, அறம் குடி நாட்டி,
உளச் சுருள் விரிக்கும் நலத் தகு கல்வி ஒன்று

Koviloor Digital Library

உளது' என, குரிசில் ஒரு மொழி சாற்ற -
(பேழ்வாய்க் கொய்உளை அரி சுமந்து எடுத்த
பல் மணி ஆசனத்து இருந்து, செவ் வானின்
நெடுஞ் சடைக் குறுஞ் சுடர், நீக்கி, ஐந்து அடுக்கிய
ஆறு - ஐஞ்ஞூறொடு வேறு நிரை அடுத்த,
பல் மணி மிளிர் முடி பலர் தொழக் கவித்து,
பல் தலைப் பாந்தட் சுமை திருத் தோளில்
தரித்து, உலகு அளிக்கும் திருத்தகு நாளில்,
நெடு நாள் திருவயிற்று அருளுடன் இருந்த
நெடுஞ் சடை உக்கிரற் பயந்தருள் நிமலன்,
மற்று -- அவன் தன்னால், வடவையின் கொழுந்து சுட்டு
ஆற்றாது, உடலமும், இமைக்குறும் முத்தமும்,
விளர்த்து நின்று அணங்கி, வளைக்குலம் முழங்கும்
கருங் கடல் பொரிய, ஒருங்கு வேல் விடுத்து,
அவற்கு அருள் கொடுத்த முதற் பெருநாயகன்,)
வெம்மையும், தண்மையும் வினை உடற்கு ஆற்றும்
இரு சுடர், ஒரு சுடர், புணர்விழி ஆக்கி, முன்
விதியவன் தாரா உடலொடு நிலைத்த
முத் தமிழ்க் கூடல் முதல்வன் பொற்றாள்
கனவிலும் காணாக் கண்ணினர் துயரும்,
பகுத்து உண்டு ஈகுநர் நிலைத் திரு முன்னர்,
'இல்' எனும் தீச் சொல் இறுத்தனர் தோமும்,
அனைத்து உயிர் ஓம்பும் அறத்தினர் பாங்கர்,
'கோறல்' என்று அயலினர் குறித்தன குற்றமும்,
நன்று அறி கல்வியர் நாட்டுறு மொழி புக்கு
அவ் அரண் இழந்தோர்க்கு அரு விடம் ஆயதும் --
ஒரு கணம் கூடி, ஒருங்கே
இரு செவி புக்கது ஒத்தன, இவட்கே.

துறை விளக்கம்:

தலைவனின் பிரிவைக் கூற, அதனால் வருந்திய தலைவியின் கலக்கம் கண்டு தோழி வருந்திக் கூறியது.

பாடற் பொருள்:

தலைவியின் பெருந்துயரை நீக்கி, தருமத்தை மனத்திலே இருத்தி, உணர்வின்றிச் சுருங்கிய உள்ளத்தை விரிக்கின்ற, நலம் சிறந்த ஒரு கல்வியானது, நாம் பிரிவதற்கு உண்டாகி இருக்கின்றது என்று தலைவன் ஒரு வார்த்தை சொல்லலும், *(1 - 3)*

Koviloor Digital Library

பல்வகை மணிகள் பதித்துப் பெரிய வாயும், பிடரி மயிரும் உடையதாகச் செய்யப் பெற்ற சிங்க உருவானது தாங்குகின்ற அரியணையில் வீற்றிருந்து, (4 - 5)

செவ்வானம் போன்று நெடுஞ்சடையையும், சிறிய பிறை யையும் மறைத்து, ஐந்து என்னும் எண்ணால் மூவாயிரத்தைப் பெருக்கி, பதினைந்தாயிரம் என்ற எண் பெற்ற பல்வேறு வகையான மணிகளோடு விளங்குகின்ற திருமுடியைப் பலரும் வணங்கும்படித் தலையில் சூடி, (6 - 8)

பல தலைகளை உடைய பாம்பு தாங்கும் சுமையாகிய மாநிலத்தைத் தனது அழகிய தோளில் தாங்கி உலகத்தைக் காக்கின்ற, செல்வம் பெருகிய நாளில், (9 - 10)

தடாதகைப் பிராட்டியாரது திருவயிற்றில் நெடுநாள் தங்கியிருந்து பாண்டிய குலத்திற்கு முதலாகத் தோன்றிய உக்கிர பாண்டியனைப் பெற்றருளினான் சோமசுந்தரக் கடவுள். அந்த உக்கிர பாண்டியன், (11-12)

வடவாக்கினியின் கொழுந்தானது சுட்டதால் சங்குக் கூட்டங்கள் ஆற்றாது,தமது உடலும் முத்தமும் வெறுத்து வருந்தி ஒலித்தற்கு இடமாகிய பெரிய கடலானது ஒருங்கே வற்றுமாறு, வேற்படையை விடுத்து, பின் அக்காரியத்திற்கு அருள் செய்த யாவர்க்கும் முதல்வனாகிய பெரிய கடவுள் ஆவான். (13 - 17)

வெப்பத்தையும், குளிர்ச்சியையும் கொண்டு இருவினை காரணமாக வந்த உடலுக்கு ஆற்றும் சந்திர சூரியராகிய இரு சுடரையும், மற்றொரு சுடராகிய நெருப்பையும் தன்னுடைய கண் களாகக் கொண்டு , ஆதியில் பிரமனால் தரப்படாத உடலோடு நிலைபெற்று, இயல் இசை, நாடகமாகிய முத்தமிழும் விளங்கு கின்ற மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரப் பெருமானது பொன் திருவடியைச் சொப்பனத்திலும் காணப் பெறாத பேதையருடைய துன்பமும், (19 - 22)

தன்னிடத்தில் உள்ளதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் அறம் செய்வோரது வீட்டின் முன்னே சென்று, இல்லை என்னும் கொடிய சொல்லைப் பதிலாகச் சொல்லிய இரவலர் துன்பமும், (23 - 24)

Koviloor Digital Library

உயிரனைத்தும் பாதுகாக்கின்ற புண்ணியர் இடத்துத் தோன்றிய பிறரைக் கொல்லுதல் என்று பிறர் சொல்லிய குற்றமும், நன்மையை அறிவதற்கு உரிய கல்வியாளர் சொல்லிய சொல் லானது கல்வி அரணைக் கைவிட்டாற் மாட்டுச் சென்று தோற்றிய நஞ்சு போன்ற வருத்தமும் ஆகிய வருத்தங்கள் ஒன்று கூடி எம் செவியில் புகுந்தாற் போல் இருக்கின்றன. (25 - 30) என்று தலைவி கல்வியில் பிரிகின்றேன் என்று தலைவன் கூறியபோது வருந்திக் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **310** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் கல்விக்காகப் பிரிவதாகத் தலைவன் கூறினான். அதனைக் கேட்டுச் சிவபெருமானின் திருவடியைக் கனவிலும் காணப் பெறாதவன் துன்பமும், இல்லை என்று சொல்லிய இரவலர் துன்பமும், கொல் என்று சொல்லியவர் துன்பமும், கல்வியாளர் சொல்லியதால் ஏற்பட்ட துன்பமும் ஒருசேரத் தனக்குத் துன்பத்தைத் தந்ததுபோல் உள்ளது என்று தலைவி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இடையில் சிவ பெருமான் பெருமையாக மதுரையில் சிங்க ஆசனத்தில் வீற்றிருந்து, தடாதகைப் பிராட்டியாரால் உக்கிர பாண்டியனைப் பெற்று, அப்பாண்டியனால் கடல்நீர் வற்றப் பெற்றுப் பின் அருள் புரிந்தமையையும், சிவபெருமானுக்கு மூன்று கண்கள் விளங்கு வதையும் பாடல் குறிப்பிடுகிறது.

(சொ - ம்):

குரிசில் - தலைவன், பேழ்வாய் - பெரியவாய், அரி - சிங்கம், பாந்தள் - பாம்பு, அளிக்கும் - காக்கும், அருளுடன் - கருணை வடிவு கொண்ட தடாதகைப் பிராட்டி, உக்கிரன் - உக்கிர பாண்டியன், விதியவன் - நான்முகன்.

79. முன்பனிக்கு நொந்து உரைத்தல்

கடல்மகள், உள் வைத்து வடவை, மெய் காயவும்,
மலைமகள் தழல் தரு மேனி ஒன்று அணைக்கவும்,
மாசு அறு திருமகள் மலர் புகுந்து,ஆயிரம்
புற இதழ்ப் புதவு அடைத்து, அதன் வெதுப்பு உறைக்கவும்,
சயமகள் சீற்றத் தழல் மனம் வைத்துத்

Koviloor Digital Library

திணி புகும் வென்றிச் செரு அழல் கூடவும்,
ஐயர் பயிற்றிய விதி அழல் ஓம்பவும்,
அவ் அனற்கு அமரர் அனைத்தும் வந்து அணையவும்,
(முன் இடைக்காடன் பின் எழ நடந்து,
நோன்புறு விரதியர் நுகர உள் இருந்து, என்
நெஞ்சகம் நின்று, நினைவினுள் மறைந்து,
புரை அறும் அன்பினர் விழி பெறத் தோற்றி,
வானவர் நெடு முடி மணித் தொகை திரட்டிப்
பதுக்கை செய் அம்பலத் திருப் பெரும் பதியினும்,
பிறவாப் பேர் ஊர்ப் பழ நகரிடத்தும்,
மகிழ் நடம் பேய் பெறும் வடவனக் காட்டினும்,
அரு மறை முடியினும், அடியவர் உளத்தினும்,
குனித்து அருள் நாயகன்) குல மறை பயந்தோன்
இருந் தமிழ்க் கூடல், பெருந் தவர் காண,
வெள்ளி அம்பலத்துள் துள்ளிய ஞான்று,
நெருப்பொடு சுழலவும், விருப்பு எடுத்து அவ் அழல்
கையினில் கொள்ளவும், கரி உரி மூடவும்,
ஆக்கிய பனிப்பகைக் கூற்று இவை நிற்க --
ஆங்கு, அவர் துயர் பெற ஈன்ற என் ஒருத்தி
புகல் விழும் அன்பு தற்கு இன்றி
மகவினைப் பெறலாம் வரம் வேண்டினளே.

துறை விளக்கம்:

முன் பனி நாளில் தலைவனைப் பிரிந்த தலைவி பெரிதும் வருந்தித் தாயை நொந்து கூறியது.

பாடற் பொருள்:

கடலாகிய பெண் வடவாக்கினி என்னும் தீயைத் தன்னிடத்தில் வைத்திருந்து தனது உடல் காயவும், மலைமகளாகிய பார்வதி நெருப்புப் போன்ற மேனி ஒன்றினை அணைக்கவும், **(1 - 2)**

திருமகள் தாமரை மலரில் புகுந்து ஆயிரம் புற இதழ்களாகிய கதவைச் சாத்தி, அத்தன்மையால் உண்டாகும் வெப்பத்தை ஏற்கவும், சயமகள் மனத்தின்கண் கோபாக்கினியை வைத்து வெற்றியுள்ள யுத்தமாகிய வெம்மையைப் பொருந்தவும், வேதியர்கள் விதிமுறைப்படி வேள்வியைச் செய்ய அதனால் தோன்றிய வேத அக்கினியின் வெம்மை தேவர்களிடத்தில் வந்து சேரவும், **(3 - 8)**

Koviloor Digital Library

இடைக்காடன் முன் சென்ற போது அவன் பின்னே சென்றும், தவம்செய்யும் வேதியர்கள் அமுதம் உண்ணுமாறு அவர்கள் உள்ளத்தில் இருந்தும் அருள் செய்தது போல, *(9 - 10)*

என் நெஞ்சத்திலே நிறைந்து நினைப்பினிடத்துப் பிரியாது நின்று. குற்றமற்ற அன்பினர் அறிவு பெறுமாறு குருவடிவாக வெளிப்பட்டு, *(11 - 12)*

தேவர்களது நீண்ட முடிகளில் உள்ள மாணிக்கத் திரள்கள் தம்மை வணங்கிச் சிந்தியதால் மேடாகிய பொன்னம்பலமாகிய பெரிய பதியிலும், பிறவாமைக்குக் காரணமாகிய பெரிய ஊராகிய காசியிடத்தும், இன்பக் கூத்தினைக் காரைக்கால் அம்மையார் கண்ட திருவாலங்காட்டிடத்தும், *(13 - 16)*

அருமறை முடியினிடத்தும், அடியவர் உள்ளத்திலும் ஆடி யருளிய முதல்வன், நான்மறைப் பொருளை உணர்த்திய தலைவன், கூடலாகிய மதுரையினிடத்தில் பதஞ்சலி வியாக்கிர பாதர் காணும்படி வெள்ளியம்பலத்தில் நடித்தருளிய நாளில், *(17 - 20)*

தீயோடு சுழலும் விருப்பம் கொண்டு அதனைக் கையில் ஏந்தியும், யானைத் தோலைக் கொண்டு உடலைப் போர்த்திக் கொள்ளவும், என்ற இவ்வகை நிலையை உண்டாக்கிய பனியின் துன்பம் ஒருபக்கம் மிக்க, *(21- 23)*

அதனால் பலர் துன்பத்தை அடைய என்னை ஈன்ற தாயானவள் அத்துன்பத்தைப் பற்றி நினையாது அன்பு தனக்கு இல்லாத பிள்ளையைப் பெறுவதற்கு வரம் வேண்டிக் கிடந்தாள் *(24 - 26)* என்று தலைவி முன்பனியின் துன்பத்தால் தாய் மீது வருத்தம் கொண்டு கூறினாள்.

(வி -ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் ***320*** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் முன்பனிக்கு ஆற்றாத கடலாகிய பெண் மலைமகள், திருமகள், சயமகள், தேவர்கள் ஆகியவர்கள் வெம் மையைப் பெற, இறைவனும் ஒரு கையில் தீயை ஏந்தி, யானைத் தோலைப் போர்த்திக் கொள்ள இவ்வகை நிலையில் பனித் துன்பம் அமைந்திருந்தது. இத்துன்பத்தை உணராது தலைவியின் தாயானவள் அன்பில்லாது மகவினைப் பெறும் வரத்தினைப் பெற

Koviloor Digital Library

வேண்டுகின்றாள் என்ற பொருள் அமைந்துள்ளது. இடையில் சிவபெருமானின் பெருமையாக அரசனால் துரத்தப் பெற்ற இடைக்காடன் என்ற புலவர் பின் சிவபெருமான் சென்றதும், வேதியர்கள் வேதமாகிய அமுதத்தை உண்ண உள்ளத்தில் இருந்ததும், தட்சணாமூர்த்தியாக வெளிப்பட்டதும். பொன்னம் பலத்தில் ஆடியதும், காசி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங் களில் எழுந்தருளி உள்ளதும், வேதங்களிடத்தும் அடியவர் உள்ளத்தும் ஆடியருளியதும், பதஞ்சலி, வியாக்கிரபாதர் காண வெள்ளியம்பலத்தில் கூத்தாடியதும் கூறப் பெற்றுள்ளது. பாடலின் இறுதியில் புகல் விழும் அன்பு தக்கு இன்றி - மகவினைப் பெறலாம் வரம் வேண்டினளே என்ற தொடர் அமைந்துள்ளது. இத்தொடருக்குத் திருக்கோவையாரின் அடிப்படையில் பொருள் கொள்வது சிறப்புடைத்தாகும். அதாவது புகலிடமாக உள்ள அன்பைத் தனக்கு இல்லாமல் இந்தப் பனித் துயரை யான் பெறுமாறு செய்த என்னை ஈன்றவள் நான் அவள் வயிற்றில் பிறக்கத் தவத்தை உடையவளாய் இருக்கின்றாளே என்ற பொருள்கொள்ளுதல் சிறப்பு.

(சொ - ம்):

வெதுப்பு - வெம்மை, அமரர் - தேவர், இடைக்காடர் - மதுரையில் வாழ்ந்த புலவர், அம்பலம் - பொன்னம்பலம், பிறவாப்பூர் - காசி, வடவனக் காடு - திருவாலங்காடு, பெருந்தவர் - பதஞ்சலி, வியாக்கிர முனிவர், கரி - யானை, ஈன்ற ஒருத்தி - தாய்.

80. மறவாமை கூறல்

மரு வளர் குவளை மலர்ந்து, முத்து அரும்பி,
பசுந் தாள் - தோன்றி மலர் நனி மறித்து,
நெட்டெறி ஊதை நெருப்பொடு கிடந்து,
மணி புறம் கான்ற புரிவளை விம்மி,
விதிப்பவன் விதியா ஓவம் நின்றென, என்,
உள்ளமும் கண்ணும் நிலையுறத் தழீஇனள் --
(உவணக் கொடியினன் உந்தி மலர்த் தோன்றிப்
பார் முதல் படைத்தவன் நடுத் தலை அறுத்து,
புனிதக் கலன் என உலகு தொழக் கொண்டு --
வட்டம், முக்கோணம், சதுரம், கார்முகம்,

Koviloor Digital Library

நவத்தலை, தாமரை, வளைவாய்ப் பருந்து, எனக்
கண்டன -- மகம்தொறும் கலிபெறச் சென்று,
நறவு இரந்தருளிய பெரியவர் பெருமான்,
கூக்குரல் கொள்ளாக் கொலை தரு நவ்வியும்,
விதிர் ஒளி காற்றக் கனல் குளிர் மழுவும்,
இரு கரம் தரித்த ஒரு விழி நுதலோன்)
கூடல் ஒப்பு உடையாய்! குல உடுத் தடவும்
தட மதில் வயிற்றுள் படும் அவர் உயிர்க்கணம்
தனித்தனி ஒளித்துத் தணக்கினும் அரிது எனப்
போக்கு அற வளைந்து புணர் இருள் நாளும்,
காவல் காட்டிய வழியும்,
தேவர்க் காட்டும் நம் பாசறையினுமே.

துறை விளக்கம்:

தலைவியைப் பிரிந்து சென்று வினை முடிந்து (சென்ற காரியம் முடிந்து) திரும்பி வந்த தலைவன் படுக்கை அறையில் தலைவி யோடு இருந்தான். அப்பொழுது தோழி அவனிடத்தில் நீர் சென்ற வினையிடத்து எங்களை மறந்தீரோ என்று கேட்க, அதற்குத் தலைவன் நான் பாசறைக்கண் இருந்த இடத்தும், துயின்ற இடத்தும் இவள் என்னுடைய நெஞ்சை விட்டு நீங்க வில்லை, ஆதலால் நான் அவளை மறக்குமாறு என்னோ என்று கூறுவது.

பாடற் பொருள்:

பருந்துக் கொடியை உடைய திருமாலின் நாபிக் கமலத்தில் பிறந்து உலகம் முதலியவற்றைப் படைத்த நான்முகனது தலையை நகத்தால் கிள்ளி, அத்தலையானது புனித பாத்திரம் என்று உலகத்தார் வணங்க, அதனைக் கையிலே கொண்டு, வட்ட வடிவமாகவும், முக்கோண வடிவமாகவும், சதுர வடிவமாகவும், நீள் வடிவமாகவும், நவ கோணமாகவும், தாமரை வடிவாகவும், பருந்து வடிவாகவும், அமைக்கப்பட்ட யாக குண்டங்கள் இருக்கும் இடந்தோறும் சென்று, வேத முழக்கத்தைச் செய்து, அந்த யாக குண்டங்களில் இடப் பெற்ற அவியாகிய உணவைக் கேட்டுப் பெற்ற பெரியவராகிய சிவபெருமான், (7 - 13)

அவர் கூவுகின்ற குரல் ஒலியானது உலகமெல்லாம் பரவிடக் கொலை செய்ய வந்த மானையும், யாவரும் நடுங்கும்படி நெருப் பாகிய ஒளி வீசுதலால் தீக்கடவுளும், தம் வெம்மையில் குறைவு

Koviloor Digital Library

படுகின்ற மழுவாயுதத்தையும், வலது கையிலும் இடது கையிலும் ஏந்திய, நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானது மதுரையை ஒத்தவளே (தோழியே) *(14 - 17)*

கூட்டமாக விளங்கும் நட்சத்திரங்களைத் தொடும் அளவுக்கு உயர்ந்த, மதில் சூழ்ந்த அரணுள் இருந்து துயர்பட்டுக் கொண்டிருந்த பகைவர்களின் உயிர்கள் ஒழிந்து ஓடித் தப்பிப் போவதற்கு அரிது என்று கருதும்படியும், அம்மதிலைச் சூழ்ந்து முற்றுகை செய்த இருட் காலத்திலும், காவல் காத்த இடத்தும், தான் தங்கியிருந்த மன்னரைப் பெருமைப்படுத்துகின்ற பாசறைக்கண் இடத்தும், *(18 - 20)*

மணம் மிக்க கண்களாகிய குவளை மலர் மலர்ந்து, பற்களாகிய முத்துக்கள் தோன்றி, கைகளாகிய பசிய இலைகளை உடைய காந்தற்பூ மறித்து (விளங்கி), வேகமாய் வீசுகின்ற பனிக் காற்றாகிய நெருப்போடு இருந்து மணிகளை வெளியில் உமிழ்ந்த கழுத்தாகிய சங்கு விம்ம, நான்முகன் படைத்தற்கு அமையாத ஓவியப்பாவை நிலைபெற்று இருந்தாற் போல, என் உள்ளத்தையும் கண்களையும் விட்டு நீங்காது தழுவி இருந்தனள் *(1- 6)* (தலைவி)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **331**ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். குவளை போன்ற கண்களையும், முத்துப் போன்ற பற்களையும், காந்தள்பூ போன்ற கைகளையும், பனிக்காலமாகிய நெருப்பில் பூத்த சங்கை மாலையாக உடைய கழுத்தையும் கொண்ட தலைவி, தலைவன் பாசறையில் இருந்த காலத்தில் அவன் உள்ளத்திலும், கண்களிலும் நிறைந்து தழுவி இருந்தாள் என்று தலைவன் குறிப்பிட்டு, தலைவியை போர்த்தொழில் செய்வதாகிய தொழிலிடத்தும் தான் மறக்கவில்லை என்பதைக் கூறுவதாகப் பொருள் அமைந்தது இப்பாடல். இப்பகுதிப் பாடலில் நான்முகன் தலையைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு சிவபெருமான் யாக குண்டத்து அவிப்பலியை உண்ட திருவிளையாடல் கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

மரு - மணம், ஊதை - பனிக்காற்று, கான்ற - உமிழ்ந்த, விதிப்பவன் - நான்முகன், ஓவம் - ஓவியப்பாவை, உவணக்கொடி - பருந்துக்கொடி, மகம் - யாகம், நறவு - தேனாகிய பிச்சை, பெரியவர் பெருமான் -சிவபெருமான், நவி - மான்,

Koviloor Digital Library

81. ஊடி உரைத்தல்

மதியம் உடல் குறைத்த வெள்ளாங் குருகினம்
பைங் கால் தடவிச் செங் கயல் துரந்து உண்டு,
கழுக்கடை அன்ன தம் கூர்வாய்ப் பழிப் புலவு,
எழில் மதி விரித்த வெண் தளை இதழ்த் தாமரை
மலர்மலர் துவட்டும் வயல் அணி ஊர!
கோளகைக் குடிலில் குனிந்து இடைந்து, அப்புறத்து,
இடைநிலை அற்ற படர் பெரு வெளியகத்து
உடல் முடக்கு எடுத்த, தொழிற் பெரு வாழ்க்கைக்
கவைத்தலைப் பிறை எயிற்று இருள் எழில் அரக்கன் --
அமுதம் உண்டு இமையா அவரும், மங்கையரும்,
குறவரும் குறவத் துணையரும் ஆகி,
நிலம் பெற்று இமைத்து, நெடு வரை இறும்பிடை,
பறவை உண்டு ஈட்டிய இறால் நறவு அருந்தி,
அந் நிலத்தவர் என அடிக்கடி வணங்கும் --
வெள்ளிஅம் குன்றகம் உள்ளுறப் புகுந்து,ஒரு
தேவனும் அதன் முடி மேவவும் உளன் ஆம்'
எனப் புயம் கொட்டி நகைத்து, எடுத்து ஆர்க்க,
பிலம் திறந்தன்ன பெரு வாய் ஒருபதும்,
மலை நிரைத்து ஒழுங்கிய கரம் இருபத்தும்,
விண் உடைத்து அரற்றவும், திசை உட்கி முரியவும்,
தாமரை அகவயின் சேயிதழ் வாட்டிய
திருவடிப் பெரு விரல் - தலை நக நுதியால்,
சிறிது மலை உறைத்த மதி முடி அந்தணன்,
பொன் அணி மாடம் பொலி நகர்க்) கூடல்
ஆவண வீதி அனையவர் அறிவுறில்,
ஊருணி அன்ன நின் மார்பகம் தோய்ந்த என்
இணை முலை நன்னர் இழந்தன - அது போல்,
மற்று - அவர் கவை மனம் மாழ்கி,
செற்றம் நிற் புகைவர், இக் கால் தீண்டலையே.

துறை விளக்கம்:

தலைவியைப் பள்ளியறையில் சந்திக்க வந்த தலைவனை நோக்கித் தலைவி நீ செய்கின்ற செயல்களை நின் பரத்தையர் களாகிய காதலியர் கண்டால் கோபிப்பர், மேலும் நான் அண்மையில் குழந்தையைப் பெற்றுப் பால் நாற்றம் வீசும் தன்மையை

Koviloor Digital Library

உடையவள். ஆதலால் என்னைத் தீண்டுதலை நீக்குவாயாக என்று ஊடலோடு கூறியது இத்துறை. திருக்கோவையாரில் இத்துறை அணைந்தவழி கூடல் என்னும் தலைப்பில் அமைந்துள்ளது.

பாடற் பொருள்:

சந்திரனின் நிறத்தைத் தம் உடல் நிறத்தால் குறைவு படுத்திய, வெண்மை நிறமுடைய கொக்கினங்கள் தங்களுடைய மென்மையான கால்களால் தடவி, சிறிய கயல் மீன்களைத் துரத்தி உண்டன. உண்ட பிறகு ஈட்டி முனையைப் போல் காட்சி தரும் தன்னுடைய கூர்மையான அலகினில் உள்ள புலால் நாற்றத்தை - முழுமதியின் அழகை வெளிப்படுத்துகின்ற வெள்ளைத் தாமரை மலரில் துடைத்துக் கொள்ளுகின்ற வயல்களை உடைய ஊரனே, *(1 - 5)*

அண்ட கோளமாகிய தனது வீட்டில் செல்லும் பொழுது மட்டும் தலைகுனிந்து, வெளி அண்டத்தில் எவ்விதத் தடையும் இல்லாது, உடலை நிமிர்க்கும் தொழிலை உடைய, வாழ்க்கை யினைக் கொண்ட, சந்திரன் போன்ற பற்களையும், இருள் போன்ற நிறத்தினையும் கொண்ட இராவணன், *(6 -9)*

அமிழ்தத்தை உண்டதால் கண்ணிமையாத தேவரும், தேவ மகளிரும் - குறவர்களும், குறத்தியர்களுமாகி மாறிப் பூமியில் வந்து கண்களை இமைத்து, நீண்ட நெடிய மலைப்பாதையில் - தேனீக்கள் பூக்கள் தோறும் கவர்ந்து கொண்டு வந்து சேர்த்து வைத்த தேனடையில் ஒழுகும் தேனை உண்டு, குறிஞ்சி நிலத் தாரைப் போல இடைவிடாது வணங்குவது சிவபெருமான் இருக்கின்ற வெள்ளி மலையாகும். *(10 - 14)*

அந்த வெள்ளிமலையில் இராவணன் நுழைந்து அதன் முடியில் (சிகரத்தில்) சிவன் என்னும் ஒரு தெய்வம் இருக் கின்றான் என்று தன்னுடைய தோள்களைக் கைகளால் தட்டி, சிரித்து அம்மலையைத் தூக்கி ஆரவாரித்தான் (கேலி செய்தான்). அவனது குகை திறந்தது போன்ற பத்தாகிய பெரிய வாயும், மலையை வரிசையாக வைத்தது ஒத்த இருபதாகிய கைகளும், முறையாக விண் உடையுமாறு அழவும், திசைகள் நடுங்குமாறு முறியவும், (வாய் அழுதது, கைகள் முறிந்தன) *(15 - 20)*

Koviloor Digital Library

தாமரை மலரின் செம்மை நிறம் கொண்ட இதழை வாடச் செய்த பெருமை உடைய தனது காலின் பெருவிரல் நகத்தின் நுனியால் சிறிது அம்மலையை அழுத்திய சிவபெருமானது, பொன்அணி கொண்ட மாடங்களை உடையப் பொலிவு பெற்ற மதுரை நகரில் உள்ள கடைவீதியை ஒத்த உன்னுடைய பரத்தை யர்கள் அறிவாராகில், (என் காலை நீ தொட்டு வணங்குவதை) (20 - 25)

ஊருணியை ஒத்த உன்னுடைய மார்பைப் புணர்ந்த என்னுடைய இரண்டு முலைகளும் குழந்தை பெற்றதால் நன்மை இழந்தது போல, அவர்களது இரட்டை மனம் வருந்தி உன்னைக் கோபிப்பார்கள். ஆதலால் நீ என்னுடைய கால்களைத் தீண்டாதே என்று தலைவி ஊடி உரைத்தாள். (26 - 29)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **390** ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். இப்பாடலில் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காக அவள் கால்களில் வீழ்ந்து வணங்குகிறான். அதனைக் கண்ட தலைவி அவன் பரத்தையிடம் பிரிந்ததைச் சுட்டிக் காட்டிப் பரத்தையர்கள் தன் காலைத் தொட்டு வணங் குவதை அறிந்தால் தலைவனை அவர்கள் கோபிப்பார்கள் என்று கூறித் தன் ஊடலை வெளிப்படுத்தினாள் என்ற பொருளைக் கொண்டது இப்பாடல். இப்பாடலில் தேவர்களும் தேவமகளிரும் குறவனும் குறத்தியுமாக மாறி வணங்குகின்ற பூமியில் உள்ள வெள்ளி மலையாம் கயிலை மலையை இராவணன் இகழ்ச்சி கூறித் தூக்கிய பொழுது அதன் அடியில் இராவணன் நசுங்குமாறு சிவபெருமான் தன் விரல் நகத்தின் நுனியால் மலையை அழுத்திய திருவிளையாடல் கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

மதியம் - சந்திரன், குருகு - கொக்கு, கோளகை - அண்டம், இடநிலைப் பெருவளி - வெளிஅண்டம், கவை - வளைந்த, அவர் - தேவர், மங்கையர் - தேவமகளிர், இறால் - தேனடை, வெள்ளியங் குன்றம் - கயிலாயம். பிலம் - குகை, ஆவணவீதி - கடைத்தெரு, புகைவர் - கோபிப்பர்.

Koviloor Digital Library

82. தோழி பொறை உவந்து உரைத்தல்

உலர் கவட்டு ஓமைப் பொரிசினைக் கூகையும்
வீசு கோட்டு ஆந்தையும் சேவலொடு அலமர,
திரை விழிப் பருந்தினம் வளை உகிர்ப் படையால்
பார்ப்பு இரை கவரப் பயன் உறும் உலகில்,
கடன் உறும் யாக்கைக் கவர்கடன் கழித்துத்
தழல் உணக் கொடுத்த அதன் உணவிடையே,
கைவிளக்கு எடுத்துக் கரை இனம் கரைய,
பிணம் விரித்து உண்ணும் குணங்கினம் கொட்ப,
சூற் பேய் ஏற்ப இடாகினி கரப்ப,
கண்டு உளம் தளிர்க்கும் கருணைஅம் செல்வி,
பிறைநுதல் நாட்டி, கடு வளர் கண்டி,
இறால் நறவு அருவி எழு பரங்குன்றத்து
உறை சூர்ப் பகையினற் பெறு திருவயிற்றினள்
ஒரு பால் பொலிந்த உயர்நகர்க் கூடல்
கடுக்கைஅம் சடையினன் கடல் உளத்து இலர் போல்
பொய் வரும் ஊரன் புகல் அரும் இல் புக,
என் உளம் சிகைவிட்டு எழும் அனல் புக்க,
மதுப் பொழி முளரியின் மாழ்கின என்றால்,
தோளில் துவண்டும், தொங்கலுள் மறைந்தும்,
கை வரல் ஏற்றும், கனவினுள் தடைந்தும்,
திரைக் கடல் தெய்வமுன் தெளி சூள் வாங்கியும்,
பொருட் கான் தடைந்தும், பாசறைப் பொருந்தியும்,
போக்கு அருங் கடுஞ் சுரம் போக முன் இறந்தும்,
காவலில் கவன்றும், கல்வியில் கருதியும்,
வேந்து விடைக்கு அணங்கியும், விளைபொருட்கு உருகியும்,
நின்ற இவட்கு இனி என் ஆம் --
கன்றிய உடலுள் படும் நனி உயிரே?

துறை விளக்கம்:

தலைமகன் பரத்தையிரிடத்தில் சேர்ந்த பொழுது அதனைக் கேட்ட தலைமகள் நெஞ்சு உடைந்து ஆனால் அதே நேரத்தில் புறத்து வெளிப்படாமல் தலைவன் பரத்தமையைப் பொறுத்துக் கொண்டாள். அவளுடைய பொறுமையைத் தோழி அறிந்து அவளைப் பாராட்டிக் கூறுதலாகும்.

Koviloor Digital Library

பாடற் பொருள்:

வாடிய கொம்பினை உடைய ஓமை என்னும் மரத்தின் கிளையில் இருக்கும் கோட்டானும், அம் மரத்தினது உயர்ந்த கொம்பில் உள்ள ஆந்தையும், தத்தம் ஆண் பறவைகளோடு பறந்து திரிய, கொடுமையான விழியினை உடைய பருந்துகள் தங்களுடைய வளைந்த நகமான ஆயுதத்தால் தங்கள் குஞ்சு களுக்கு இரையைக் கவர்ந்து அதனைக் கொண்டு வந்து ஊட்டுமாறு அமைந்த பாலை நிலத்தில், *(1-4)*

வந்தவினை போக எடுத்த உடலின் பொருட்டுச் செய்யத் தகும் கடன்களைச் செய்து முடித்து, சுடுகாட்டுத் தீயில் அந்த உடலைத் தத்தம் செய்ய, அவ்வுடல் நெருப்பில் வேகும் போது கையில் விளக்கு ஏந்தி, தம்முடைய இனத்தை அழைத்துப் பிணத்தைப் பிரித்து உண்ணுகின்ற பிசாசுகள் கொடுப்ப, *(5- 8)*

அந்த உணவைச் சூலை உடைய பேய்கள் கையை ஏந்தி வாங்கி, இடாகினிப் பேய்கள் அதனை மறைத்துக் கொள்ள, அதனைக் கண்டு உள்ளம் மகிழுகின்ற கருணையை உடைய அழகிய காளிதேவி, பிறை போன்ற நுதலில் கண்ணினை உடையவள், விஷம் தங்கிய கண்டத்தை உடையவள், தேனடையில் இருந்து தேனானது அருவிபோல் ஒழுகுகின்ற திருப்பரங் குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் சூரனுக்குப் பகையாகிய முருகனைப் பெற்ற திருவயிற்றினை உடையவள், அத்தகைய காளியாகிய உமாதேவி ஒரு பாகத்தில் விளங்க, நகரங்களுள் உயர்வாகிய மதுரை நகரத்தின்கண் கொன்றை மாலை அணிந்த சடை முடியை உடைய சிவபெருமானது திருவடி உள்ளத்தில் இல்லாதவர் போல, *(9 - 15)*

பொய் கூறுவதில் கைவந்தவனான தலைவன் செல்லத் தகாத பரத்தையர் வீட்டில் புகுதலால் என்னுடைய உள்ளமானது, கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பில் இடப்பட்ட தேனை உடைய தாமரை மலர் போலக் கருகியது. *(16 - 18)*

(தலைவன் பிரியாதவிடத்துத் தலைவி) அத்தலைவனது தோளில் துவண்டும், அவன் அணிந்த மாலையில் மறைந்தும், கையால் வருடுதலைப் பெற்றும், அவனைக் கண்ட கனவிலும்

Koviloor Digital Library

அவனைப் போகாதே என மறித்தும், கடல் தெய்வத்தின் முன்பு சந்தேகமில்லாத சத்தியத்தை வாங்கியும், பொருள்வயிற் பிரிவதற்காகக் காட்டுவழி போகாமல் தடுத்தும், பாசறைக்குச் சென்ற போது வருத்தத்தைப் பொறுத்திருந்தும், செல்லுவதற்கு இயலாத வெம்மையான காட்டுவழியில் தலைவன் போகத் துணிந்த போது, அவன் போவதற்கு முன்னமேயே மூர்ச்சித்து விழுந்தும், நகரம் காத்தலுக்குத் தலைவன் சென்ற பொழுது கவலைப்பட்டும், கல்விக்காகப் பிரிந்து சென்றபோது வருந்தியும், அரசனால் தூது விடுக்கப்பட்டுப் போன பொழுது வருந்தியும், இனிமேல் நடக்கும் செய்திகளுக்கு மனம் உருகியும் இருந்த இவளுக்கு, *(19 - 25)* (தலைவனின் பரத்தையர் பிரிவில்)

இவளுடைய உடலுள்ளே இருந்த சிறிய உயிர் இனி யாதாய் முடியுமோ? யான் அறியவில்லை என்று தோழி கூறினாள். *(26-27)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **353**ஆவது பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் சுடுகாட்டு நிகழ்வுகள் கூறப்பெற்று, அச்சுடுகாட்டுக்குத் தெய்வமாக விளங்கும் காளியாகிய உமையவள் ஒரு பாகத்தில் இருக்கின்ற சிவபெருமானுடைய மதுரை நகரம் என்று சிவபெருமான் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. தலைவன் கூடியிருக்கின்ற பொழுது அவன் தோளில் துவள்வது போன்ற செயல்கள் கூறப்பெற்று, அவனுடைய பொருள்வயிற் பிரிவினைத் தடுத்தும், அவன் காட்டுவழி பிரிகின்ற பொழுது மூர்ச்சித்தும், நாடு காவல், கல்வி, தூது ஆகிய பிரிவுகளில் வருந்தியும், எதிர்கால நிகழ்வுகளுக்கு வருந்தியும் காணப்படுகின்ற தலைவி தலைவன் பரத்தமை பிரிந்தது கண்டு அவளுடைய உடம்பில் உள்ள சிறிய உயிர் என்னாகுமோ? என்று தோழி வருந்துவதாகப் பாடற் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்)

ஓமை - மரம், கூகை - கோட்டான், உகிர் - நகம், பார்ப்பு - குட்டி, கரையினம் - பிசாசு, கருணைஅம்செல்வி - காளி, சூர் - சூரன், சூள் - சத்தியம்.

Koviloor Digital Library

83. கலவி கருதிப் புலத்தல்

நில நீர் மொக்குளின் வினையாய்த் தோன்றி,
வான் தவழ் உடற் கறை மதி எனச் சுருங்கி,
புல்லர் வாய்ச் சூள் எனப் பொருளுடன் அழியும்
சீறுணவு இன்பத் திருந்தா வாழ்க்கை,
கான்றிடு சொன்றியின் கண்டு, அருவருத்து,
புலன் அறத் துடைத்த நலன் உறு கேள்வியர்,
ஆரா இன்பப் பேர் அமுது அருந்தி,
துறவு எனும் திருவுடன் உறவு செய் வாழ்க்கையர்,
வாயினும், கண்ணினும், மனத்தினும், அகலாப்
பேர் ஒளி நாயகன், கார் ஒளி மிடற்றோன்
மண் திருவேட்டுப் பஞ்சவற் பொருத
கிள்ளியும், கிளையும், கிளர் படை நான்கும்,
திண்மையும், செருக்கும், தேற்றமும், பொன்றிட,
எரிவாய் உரகர் இருள் நாட்டு உருவக்
கொலைக் கொண்டாழி குறியுடன் படைத்து,
மறியப் புதைத்த மறம் கெழு பெருமான்,
நீர் மாக் கொன்ற சேயோன் குன்றமும்,
கல்வியும், திருவும், காலமும், கொடியும்,
மாடமும், ஓங்கிய மணி நகர்க் கூடல்
ஆலவாயினில் அருளுடன் நிறைந்த
பவளச் சடையோன் -- பதம் தலை சுமந்த
நல் இயல் ஊர!நின் புல்லம் உள் மங்கையர்
ஓவிய இல்லம் எம் உறையுள் ஆக,
கேளாச் சிறு சொல் கிளக்கும் கலதியர்
இவ்வுழி ஆயத்தினர்களும் ஆக,
மௌவல் இதழ் விரிந்து மணம் சூழ் பந்தர் செய்
முன்றிலும் எம்முடை முன்றில் ஆக,
மலர்ச் சுமைச் சேக்கை மது மலர் மறுத்த இத்
திருமனம் கொள்ளாச் சேக்கை - அது ஆக,
நின் உளம் கண்டு, நிகழ் உணவு உன்னி,
நாணா நவப் பொய் பேணி உள் புணர்த்தி,
யாழொடு முகமன் பாணனும் நீயும்,
திருப் பெறும் அயலவர் காண
வரப் பெறு மாதவம் பெரிது உடையேமே.

Koviloor Digital Library

துறை விளக்கம்:

ஊடல் தீர்ந்த தலைவி தலைவனோடு கூடி மகிழ்ந்தாள். தனக்கு அவன் தந்த இன்பத்தைக் கருதி இவ்வாறு அருளும் தலைமகன் பிறிதொரு நேரத்தில் பரத்தையருக்கு அருளுகின்றானே என்பதை நினைந்து வருந்தி, பின்னும் அவனோடு புணர்வதற்கு விரும்பிப் புலர்ந்தாள் (ஊடினாள்) என்பதாகும்.

பாடற்பொருள்:

அசைவற்ற நீரில் எழுந்த நீர்க்குமிழியைப் போல -- முன் வினையின் விளைவாகத் தோன்றி, பிறகு ஆகாயத்தில் இயங்கு கின்ற உருவத்தில் களங்கமுள்ள சந்திரனைப் போல -- குறைந்து, கீழ் மக்கள் வாயில் உண்டான சபதம் போல -- பொருளோடு கெடுகின்ற சிறிய உணவாகிய இன்பத்தை உடைய, திருத்த மில்லாத இல்லற வாழ்வை, (1 -4)

கக்கிய சோற்றைப் போல -- அதனைக் கண்டு அருவருப்பு அடைந்து, ஐம்புல வாசனையை முற்றும் துடைத்த, நன்மை அடைவதற்குக் காரணமான வேள்வியைச் செய்கின்றவரும், (5-6)

கிடைத்தற்கு அரிதான பேரின்பமாகிய - அமுதத்தை உண்டு துறவு என்னும் பெண்ணாகிய செல்வியுடன் உறவு கொண்டு வாழ்கின்றவர்களது வாயால் சொல்லும் துதிகளிலும், கண்ணால் காணுகின்ற காட்சியிலும், மனதினால் சிந்திக்கின்ற சிந்தனை யிலும் நீங்காத, பேரொளியாக விளங்குகின்ற இறைவன், கருமையான கண்டத்தை உடையவன் ஆவான். (7 - 10)

பூமியாகிய செல்வத்தை விரும்பி, பாண்டியனோடு போரிட வந்தான் சோழன். அத்தகைய அவனது படைத் தலைவர்களாகிய உறவினர்களும், நால்வகைப் படைகளும் தங்களுடைய வலிமையும், இறுமாப்பும் வெற்றி பெற்று விடுவோம் என்ற எண்ணமும் கெட்டு, விஷம் பொருந்திய வாயினை உடைய நாகங்கள் வாழுகின்ற நாகர் உலகத்தில் வீழுமாறு -- கொலைத் தொழிலை மேற்கொண்டு, பாண்டியனுக்கு உதவ அவனுடைய படைக்கு முன்னால் குதிரைச் சேவகனாகத் தோற்றம் கொண்டு, ஆழமாகிய மடுவில் சோழன் வீழுமாறு செய்து தானும் வீழ்ந்து, பாண்டியனுக்கு வெற்றி தந்து அருளிய வேட வடிவத்தில் வந்து

Koviloor Digital Library

அருள் புரிந்தவர் அவ்இறைவன் -- *(11 - 16)* (இங்கு பாண்டியனுக்காகச் சோழனை ஆழமான மடுவில் தான் வீழ்வது போல் வீழ்ந்து சோழனை விழச்செய்த திருவிளையாடல் கூறப் பெற்றுள்ளது)

கடலில் மாமரத்தை வெட்டிய முருகக் கடவுளது திருப்பரங் குன்றமும், கல்வி, செல்வம், ஆயுள் இவற்றில் ஓங்கிய மக்களும், கொடிகள் நிறைந்த மாடங்களும் ஓங்கிய நகரங்களுக்கெல்லாம் சிறந்த மணியை ஒத்த கூடல் என்னும் திருஆலவாயின் கண் அங்கயற்கண் அம்மையுடன் எழுந்தருளியுள்ள, பவளம் போன்ற செஞ்சடையினை உடையவன் ஆவான். அவனது திருவடிகளைத் தலைமேற் கொண்ட தலைவனே, *(17 - 22)* (இதுவரை சிவ பெருமான் சிறப்புக் கூறப்பெற்றது)

உனது உள்ளத்தை உடைய பரத்தையரது சித்திரம் எழுதிய இல்லத்தை அவ்வாறு இல்லாத எம் இல்லமாகவும், கேட்கத் தகாத சொற்களைச் சொல்லுகின்ற கலகம் இயற்றும் பரத்தையரின் தோழிகள், எம் இல்லத்தில் உள்ள தோழிகள் ஆகவும், மல்லிகை மணம் வீசுகின்ற பரத்தையரின் வாயில்கள் எங்களுடைய வாயில்களாகவும், மலர் நிறைந்த பரத்தையரின் படுக்கை மலர்கள் இல்லாத, உன் மனம் விரும்பாத எனது படுக்கையாகவும் எண்ணி அவர்பால் இன்பத்தை துய்த்த உன் உள்ளத்தை அறிந்து, தனக்குக் கிடைக்கக் கூடிய பயனாகிய இன்பத்தைக் கருதி, சிறிதும் நாணாமல் பொய்களைக் கற்பித்து உனக்குப் போற்றுதல் மொழி சொல்லுகின்ற யாழுடன் கூடிய பாணனும் -- நீயும் -- செல்வ வளம் பெற்ற அயலவர்களாகிய பரத்தையர்கள் அறிய எனது இல்லம் வருவதற்கு நல்ல தவத்தை நாங்கள் உடையோமாக *(23 - 34)* என்று தலைவி தலைவனின் வரவாகிய நன்மையைக. கூறி, பரத்தமையால் ஏற்பட்ட ஊடலை வெளிப்படுத்தினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 368 ஆவது பாடலின் விளக்கமாகும். ஆனால் திருக்கோவையாரில் இப்பாடல் வாயிலவர் வாழ்த்து என்ற தலைப்பைக் கொண்டு விளங்குகிறது. இப்பாடலில் முதல் 22 வரிகளில் சிவபெருமான் பெருமை கூறப் பெற்றுள்ளது. இல்லற வாழ்வை வெறுத்த வேள்வியைச்

Koviloor Digital Library

செய்கின்ற துறவிகளின் போற்றுகின்ற சொற்களிலும், காணுகின்ற காட்சியிலும், நினைக்கின்ற மனத்திலும் அகலாதவன் என்று கூறப்பெற்று, பின்பு பாண்டிய மன்னன் ஒருவனுக்காக அவன்மீது படையெடுத்து வந்த சோழனை அழிப்பதற்காகத் தான் ஒரு குதிரைச் சேவகனாகச் சிவபெருமான் வந்ததும், அவ்வாறு வந்தவர் தான் ஆழமான மடுவில் வீழ்வது போல் போக்குக் காட்டிச் சோழனை மடுவில் வீழ்த்திய திருவிளையாடல் கூறப் பெற்றுள்ளது, சிறப்புடைய மதுரை நகரில் அங்கயற்கண் அம்மையுடன் எழுந்தருளிய சிறப்பினை உடையவர் என்றும் கூறப்பெற்றுள்ளது. அதன்பின் தலைவனின் பண்பாகப் பரத்தையர் இல்லத்தைத் தலைவியின் இல்லமாகவும், பரத்தை யரின் தோழியர்களைத் தலைவியின் தோழியர்களாகவும், பரத் தையரின் முன்றிலாகிய வாயிலைத் தலைவியின் வாயிலாகவும், பரத்தையரின் படுக்கையைத் தலைவியின் படுக்கையாகவும் கொள்ளுகின்ற பண்பு கூறப் பெற்றுள்ளது. அவனும் அவனுடைய பாணனும் இப்பொழுது தன் இல்லம் வந்ததற்குச் தான் செய்த தவத்தை எண்ணிப் பெரிதும் மகிழ்கின்றவளாகத் தலைவியின் நிலை கூறப்பெற்ற பொருளை உடையது இப்பாடல்.

(சொ.ம):

மொக்குள் - நீர்க்குமிழி, வினை - ஊழ்வினை, புல்லர் - கீழ்மக்கள், சீர்உணவு - சிறிய உணவால் கிடைக்கின்ற இன்பம், கான்றிடும் - கக்கிய, சொன்றி - சோறு, வேள்வியர் - யாகத்தைச் செய்கின்ற முனிவர், பஞ்சவர் - பாண்டியன், கிள்ளி - சோழன், உரகர் - நாகர், பதம் - திருவடி, புல்லம் - கீழ்மை, கலதியர் - கலக்கத்தை உண்டாக்கும் தோழியர், உன்னி - எண்ணி,

84. வறும் புனம் கண்டு வருந்தல்

உள் இருந்து எழுந்து புறம்பு நின்று எரியும்
அளவாத் திரு மணி அளித்தலானும்,
கொலை முதிர் கடமான் முதிர்முகம் படர்ந்து
கொழுஞ்சினை மிடைந்து குளிரொடு பொதுளிய
நெடு மரத்து இளங்கா நிலைத்தலானும்,
பாசடை உம்பர் நெடுஞ் சுனை விரிந்த

Koviloor Digital Library

பேர் இதழ்த் தாமரை பெருகலானும்,
நெடு விசும்பு அணவும் பெரு மதி தாங்கி,
உடையா அமுதம் உறைதலானும்,
இளமையும், தொங்கலும், இன்பமும் ஒருகால்
வாடாத் தேவர்கள் மணத்தலானும்,
நூறுடை மகத்தில் பேறு கொண்டிருந்த
புரந்தரன் போலும் -- பொன் எயில் எறிந்த
மணி வேற் குமரன் -- திருவளர் குன்றம்
பேர் அணி உடுத்த பெரு நகர்க் கூடல்
கோயில் கொண்டிருந்த குணப் பெருங் குன்றம்,
(அருந் தவக் கண்ணினோடு இருந்த மா முனிபால்,
பேர் இருள் மாயைப்பெண், மகவு இரக்க,
உவர் முதல் கிடந்த சுவை ஏழ் அமைத்துக்
கொடுத்த மெய்ப் பிண்டம் குறியுடன் தோன்றிய
எழு நீர்ச் சகரர்கள், ஏழ் அணி நின்று,
மண் புக மூழ்கிய வான் பரி பிணிக்க,
பல் முக விளக்கின் பரிதியில் தோட்டிய
வேலைக் குண்டு அகழ் வயிறு அலைத்து எழுந்த
பெருங் கார்க் கருங்கடு அரும்பி
எறிந்து வீழ் அருவியும், எரிமணி ஈட்டமும்
உள்ளுதோறு உள்ளுதோறு உள்நா அமுது உறைக்கும்
திரு முத்தமிழும், பெருகு தென் மலயத்து
ஆரப் பொதும்பர் அடை குளிர் சாரல்,
சுரும்புடன் விரிந்த துணை மலர்க் கொடியே!
விண் விரித்து ஒடுக்கும் இரவி வெண் கவிகைக்கு
இட்டு உறை காம்பு என விட்டு எழு காம்பே!
மரகதம் சினைத்த சிறை மயிற்குலமே!
நீலப் போதும் பேதையும் விழித்த
பொறி உடல் உழையே! எறிபரல் மணியே!
பாசிழைப் பட்டு நூல் கழி பரப்பிய
கிளை வாய்க் கிளைத்த வளைவாய்க் கிளியே!
மைந்தர்கண் சென்று மாதர் உள் தழைத்த
பொழி மதுப் புது மலர்ப் போக்குடைச் சுரும்பே!
வெறி முதிர் செம் மலர் முறிமுகம் கொடுக்கும்,
சந்தனப் பொதும்பர்த் தழை சினைப் பொழிலே!
கொள்ளை அம் சுகமும் குருவியும் கடிய
இரு கால் கவணிற்கு எறி மணி சுமந்த

Koviloor Digital Library

நெடுங் கால் குற்றுழி நிழல் வைப்பு இதணே!
நெருநல் கண்ட எற்கு உதவுழி இன்பம்
இற்றையின் கரந்த இருள் மனம் என்னை?
இவண் நிற்க வைத்த ஏலாக் கடுங்கண்!
கொடுத்து உண்டவர் பின் கரந்தமை கடுக்கும்,
ஈங்கு இவை கிடக்க! என் நிழல் இரும் புனத்து
இருந்து ஒளிர் அருந் தேன் இலதால், நீரும்
'நின் புனம் அல்ல' என்று என் புலம் வெளிப்பட
அறைதல் வேண்டும், அப் புனம் நீரேல்,
முன்னம் கண்டவன் அன்று என்று
உன்னா, உதவுதல் உயர்ந்தோர் கடனே.

துறை விளக்கம்:

தினைப்புனம் காத்த தலைமகளும் தோழியும் தினை அறுக்கப்பட்டதால் அதனை விட்டு அகன்றனர். அவர்கள் சென்ற பின் அவர்களைக் காண்பதற்காக வந்த தலைவன் அவர்கள் இல்லாத தினைப் புனத்தைக் கண்டு, முன்பு நாம் பழகிய இத் தினைப்புனம் இப்பொழுது வெறுமையாகக் காட்சி தருகின்றதே என்று எண்ணி வருந்திக் கூறியதாகும்.

பாடற் பொருள்:

பூமியின் உள்நின்று மேல் எழுந்து, எல்லாத் திசைகளிலும் சுடர் விடுகின்ற பெருமையின் அளவு கூறப்பெறாத மாணிக் கங்களைப் பாதுகாத்தலாலும், *(1 - 2)*

கொலைத் தொழிலை உடைய மதம் பொருந்திய யானைகள் இடங்கள் தோறும் திரிகின்ற -- தழைகளை உடைய கிளைகள் நெருக்கமாக விளங்குகின்ற, குளிர்ச்சியைத் தருகின்ற மரங்களை உடைய, சோலைகள் நிலைபெற்றிருத்தலாலும், *(3 - 5)*

பெரிய சுனைகளில் பசிய இலைகளோடு விரிந்திருக்கும் பெரிய இதழ்களைக் கொண்ட தாமரை மலர்கள் அதிகமாகக் காட்சி அளிப்பதாலும், *(6 - 7)*

பெரிய ஆகாயமானது சந்திரனைத் தாங்கி, அழியாத அமிழ்தத்தை வழங்கி நீங்காது இருத்தலானும், *(8 - 9)*

Koviloor Digital Library

என்றும் இளமையையும், மாலைகளையும், மகிழ்ச்சி யினையும் ஒருகாலத்திலும் இழக்காத தேவர்கள் பொருந்தி இருத்தலானும், *(10 - 11)*

நூறு என்னும் எண்ணை உடைய யாகம் நிகழ்ந்து கொண் டிருக்கும் காரணத்தால் தேவேந்திரன் போலும் விளங்கும், *(11 - 13)* பொன் மதில் சூழ்ந்த(இதுவரை கூறப்பட்ட வருணனைகள் பொன்மதிலுக்கு உரிய வருணனைகளாகும். அத்தகைய பொன் மதில் சூழ்ந்த) மகேந்திரபுரியை அழித்த அழகிய வேலாயுதத்தை உடைய முருகக் கடவுளின் திருப்பரங்குன்றத்தை அரணாகக் கொண்ட, நகரங்களில் சிறப்புடைய மதுரையில் திருக்கோயில் கொண்டருளிய, *(12 - 15)*

பெரிய குணம் என்னும் மலையை உடைய, அரிய தவமாகிய மாலையை உடைய, ஆரணியத்தில் இருந்த காசிப முனிவரிடத்து, இருளை ஒத்த மாயை என்ற பெண்ணானவள் பிள்ளை வரம் வேண்டி நின்றாள். அதற்கு உவர்ப்பு முதலாக உள்ள எழுவகைச் சுவையையும் அமைத்து அளித்த உண்மைப் பிண்டத்தின் அடையாளக் குறிகளுடன் தோன்றிய, ஏழு நிறத்தினை உடைய சகரர்களும், ஏழ் அணியாக நின்று, பாதாள உலகத்தில் இந்திரனால் ஒளிக்கப்பட்டிருந்த தன் தந்தையின் அசுவமேகக் குதிரையைக் கண்டுபிடித்துக் கட்ட, பல முகங் களைப் போல் காட்சி தரும் சக்கராயுதத்தினால் அவர்கள் தோண்டிய ஆழமாகிய கடலின் வயிற்றை அலைத்துத் தோன்றிய, கரிய நிறத்தை உடைய ஆலகாலம் என்ற விஷத்தை உண்டதால் ஏற்பட்ட கண்டத்தை உடையவனது,(மதுரையில் எழுந்தருளி யிருக்கும் இறைவன்)

நீர் ஒழுகுகின்ற அருவி, ஒளி பொருந்திய மணிக் கூட்டம் நிறைந்த, நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் உண்ணுவ தற்குரிய அமுதத்தைச் சுரக்கின்ற முத்தமிழும் மலர்வதற்கு இடமாகிய, தெற்கின் கண் உள்ள பொதிகையில் -- சந்தனச் சோலைகள் உள்ள குளிர்ந்த சாரலின் கண், வண்டுகள் மொய்க் கின்ற பூங்கொத்துக்கள் மலர்ந்த கொடியே, *(16 - 30)*

விண்ணில் கிரணங்களை விரித்துச் சுருக்கும் சூரியனாகிய நல்ல குடைக்கு அமைந்திருக்கும் காம்பு போலக் காணப்

Koviloor Digital Library

படுகின்ற மூங்கிலே, மரகதமணி அள்ளித் தெளிக்கப் பட்டது போலும் இறகுகளை உடைய மயிலே, நீலோற்பவ மலரும், பெண்களின் கண்ணும் போல உடலில் புள்ளிகளை உடைய மானினமே, தினை அறுத்த புனங்களில் உள்ள மணியே, **(31-35)**

பட்டு நூலை மூங்கிலில் பரத்தியது போல மூங்கிலில் இருக்கின்ற சிவந்த வாயை உடைய கிளியே, ஆடவர்களின் கண்கள் சென்று மாதரிடத்திலே அழகைக் கண்டு தடைப்பட்டாற் போலும் மலர்களில் தங்கியுள்ள வண்டே, **(36 - 39)**,

பழம் பூக்களைச் சொரிகின்ற சந்தன மரங்களால் கிளைகள் தாழ்ந்துள்ள சோலையே, புனத்தை அழிக்கும் கிளிகளையும், குருவிகளையும், ஏனைப் பறவைகளையும் விரட்டுவதற்குக் கவண்கழியில் கல்லை வைத்து வீசுவதற்கு அமைக்கப் பெற்ற நெடிய காலை உடைய சிறிய இடத்தை உடைய பரணே, **(40-44)**

நேற்று கண்ட எனக்குத் தந்த இன்பத்தை இன்று தராமல் ஒளித்த இருள் மனமானது, இவ்விடத்தில் நான் மயங்கி நிற்கும்படி விட்ட கொடுமையானது, முன்பு ஒருவருக்குப் பகிர்ந்து கொடுத்து உண்டவர், பின்பு கொடாமல் ஒழித்த தன்மை போல் உள்ளது. இது இவ்வாறு இருக்க எனது நிழல் போன்ற இத் தினைப்புனத்தில் தங்கியிருந்த அருமையுள்ள தேனை ஒத்த வளாகிய தலைவி இங்கில்லாததால் இது உன்னுடைய தினைப் புனம் அல்ல என்று என் அறிவிற்கு விளங்க நீவீர் சொல்ல வேண்டும், **(45 - 52)**

அவ்வாறு இல்லாமல் இந்தப் புனமே நான் கண்ட தலைவி இருந்த புனம் என்றால் முன்னம் கண்டவன் நான்தான் என்பதால், என்னால் விரும்பப் பெற்ற தலைவி சென்ற இடமாவது சொல் லுதல் வேண்டும். இதுவே பெரியோரின் முறைமையாகும். **(53-54)**

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **146**ஆவது பாடலுக்கு விளக்கமாகும். பாடலில் ஒளி பொருந்திய மணிகள் காக்கப் படுதல் முதலாக தேவேந்திரன் போல் ஈறாகச் சொல்லப்பட்ட சிறப்புக்களை உடைய திருப்பரங்குன்றத்தை அரணாகக் கொண்ட மதுரை. அதில் கோயில் கொண்டிருந்த பெருமான் சிவபெருமான்

Koviloor Digital Library

என்று முதலில் சிவபெருமான் பெருமை கூறப்பெற்றுள்ளது., பின்பு காசிப முனிவரிடத்தில் அசுர இனத்து மாயை புணர்ந்து பிள்ளைவரம் கேட்க, அதற்குக் கடலில் உள்ள உவர்ப்புச் சுவை யோடு மற்ற அறுசுவையும் சேர்ந்து, அமைந்த பிண்டக் குறியுடன் தோன்றினர் - ஏழு நிறத்தினை உடைய சகரர்கள். அவர்கள் ஏழணியாக நின்று தங்கள் தந்தையாகிய காசிப முனிவனின் அசுவமேதக் குதிரையை இந்திரன் ஒளித்ததனால், அதனைத் தேடிப் பூமியை வெட்டிச் சென்று, இறுதியில் குதிரையைக் கண்டுபிடித்துக் கட்டினார்கள். அப்பொழுது அவர்கள் தோண்டிய ஆழமான கடலில் தோன்றிய கரிய நிறத்தை உடைய விஷம் தங்கிய கண்டத்தைக் கொண்ட இறைவன், (இறைவன் கரிய கண்டத்தைக் கொண்டமைக்கு இது போன்ற புராண வரலாறு கூறப்படுகிறது போலும்) அவனுடைய பொதிய மலை என்று சிறப்பிக்கப் பெற்று, அப்பொதிகையில் உள்ள கொடி, மூங்கில், மணி, கிளி, வண்டு, சோலை, பரண் ஆகியவற்றைப் பார்த்துத் தலைவன், தலைவி சென்ற இடத்தைக் கேட்பதாகப் பொருள் அமைந்தது இப்பாடல்.

(சொ. ம்):

கடமான் - யானை, சினை - கிளை, பொதுளிய - தழைத்த, இளங்கா - சோலை பாசடை - பசிய இலை, தொங்கல் - மலை, மகம் - யாகம், குமரன் - முருகன், குணப்பெருங்குன்றம் - குண மாகிய மலை, முனிவன் - காசிபன், சகரர் - காசிப முனிவரின் மக்கள் அறுபதினாயிரம் என்பர், வான்பரி - அசுவமேத யாகக் குதிரை, பரிதி - சக்கராயுதம், கவிகை - குடை, உழை - மான், கிளை - மூங்கில், சுரும்பு - வண்டு, இதண் - பரண்,

85. நெஞ்சொடு வருந்தல்

வடமொழி மதித்த இசை நூல் வழக்குடன்
அடுத்தன எண் - நான்கு அங்குலியகத்தினும்,
நாற்பதிற்று இரட்டி நால் அங்குலியினும்,
குறுமையும். நெடுமையும், கொடல் பெற்று, ஐதாய்,
ஆயிரம் தந்திரி நிறை பொது விசித்து,
கோடி மூன்றில் குறித்து, மணி குயிற்றி,
இரு நிலம் கிடத்தி, மனம், கரம், கதுவ,

Koviloor Digital Library

ஆயிரத்து எட்டில் அமைத்தன பிறப்பு,
பிறவிப் பேதத் துறையது போல,
ஆரியப் பதம் கொள் நாரதப் பேரியாழ்
நன்னர் கொள் அன்பால் நனிமிகப் புலம்ப ---
முந் நான்கு அங்குலி முழு உடல் சுற்றும்,
ஐம்பதிற்று இரட்டி ஆறுடன் கழித்த
அங்குலி நெடுமையும் அமைத்து, உள் தூர்ந்தே,
ஒன்பது தந்திரி உறுத்தி, நிலை நீக்கி,
அறுவாய்க்கு ஆயிரண்டு அணைத்து வரை கட்டி,
தோள் கால் வரிந்து, தொழில்படத் தோன்றும்
தும்புருக் கருவியும் துள்ளி நின்று இசைப்ப --
எழு என உடம்பு பெற்று, எண்பது அங்குலியின்,
தந்திரி நூறு தழங்கு மதி முகத்த
கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல -----
நிறைமதி வட்டத்து முயல் உரி விசித்து,
நாப்பண் ஒற்றை நரம்பு கடிப்பு அமைத்து,
அந் நரம்பு இருபத்தாறு அங்குலி பெற
இடக் கரம் துவக்கி, இடக்கீழ் அமைத்து,
புறவிரல் மூன்றின், நுனி விரலகத்தும்,
அறுபத்திரண்டு இசை அனைத்து உயிர் வணக்கும்
மருத்துவப் பெயர் பெறும் வானக் கருவி,
தூங்கலும், துள்ளலும், துவக்கி நின்று இசைப்ப --
நான்முகன் முதலா மூவரும் போற்ற,
முனிவர் அஞ்சலியுடன் முகமன் இயம்ப,
தேவர்கள் அனைவரும் திசைதிசை இறைஞ்ச,
இன்பப் பசுங்கொடி இடப்பால் படர,
வெள்ளிஅம் குன்றம் விளங்க வீற்றிருந்த --
முன்னவன் கூடல் முறைவணங்கார் என,
அரவப் பசுந் தலை, அரும்பு அவிழ் கணைக் கால்,
நெய்தற் பாசடை நெடுங் காட்டு ஒளிக்கும்
கண் எனக் குறித்த கருங் கயல் கணத்தை,
வெள் உடல், கூர்வாய், செந் தாட் குருகினம்,
அரவு எயிறு அணைத்த முன் இலை முடக் கைதைகள்
கான்று அலர் கடி மலர் கரந்து உறைந்து, உண்ணும்
கருங் கழி கிடந்த கானல்அம் கரைவாய்,
மெய் படு கடுஞ் சூள் மின் எனத் துறந்தவர்
கவல் உளைக் கவனப் புள் இயல் கலி மான்
நோக்கம் மிறைத்த பரிதி கொள் நெடுந் தேர்ப்

Koviloor Digital Library

பின்னொடும் சென்ற என் பெரும் பிழை நெஞ்சம்,
சென்றுழிச் சென்றுழிச் சேறலும் உளவோ?
அவ் வினைப் பயனுழி அருந்தவம் பெறுமோ?
இடை வழி நீங்கி என் எதிர் உறுங்கொல்லோ?
அன்றியும், நெடு நாள் அமைந்து உடன் வருமோ?
யாது என நிலைக்குவன் மாதோ --
பேதை கொள்ளாது ஒழி மனம், கடுத்தே?

துறை விளக்கம்:

தலைவன் பிரிந்து சென்றமையை அறிந்த தலைவி அன்று பிரிந்த பொழுது, அவனை விடாது பின்சென்று என்னை விட்டுச் சென்ற நெஞ்சம் இன்று அவ்வாறு செய்யாதது ஏன்? என்று தன் நெஞ்சோடு வருந்திக் கூறியது.

பாடற்பொருள்:

வடமெரழி இசைநூல் மரபுப்படி பொருந்திய ***32*** விரல் அளவு, ***84*** விரல் அளவு ஆகிய இவற்றைக் குறுக்கவும் நீளவுமாகக் கொண்டு அழகியதாய், ***(1 - 4)***

ஆயிரம் தந்திகள் (நரம்புகள்)நிறைவாகக் கட்டப் பெற்ற, மூன்று முனையாக மணிகள் இழைக்கப்பட்ட பெரிய இடத்தில் கிடத்தி, மனமும் கையும் விடாது பற்ற, ***(5 - 9),***

உயிர்ப் பிறப்புக்களின் வேறுபாட்டின் தோற்றம் போல ஆயிரத்து எண் வகையாகத் தோற்றுவிக்கப் பெறுகின்ற நாதங்கள் அமைந்த ஆரியப் பதத்தினைக் கொண்டிருக்கின்ற நாரதம் என்னும் பெயரினை உடைய யாழ், நன்மையைக் கொண்டிருக்கும் அன்புடன் மிகுதியாக வாயால் ஒலிக்கவும், ***(10 - 11)***

12 விரல் அளவுள்ள உடற்சுற்றின் குறுக்கமும், ***94*** விரல் அளவாகிய நீளமும் கொண்டு செய்யப் பெற்ற ஒன்பது நரம்புகளைக் கொண்ட, குற்றங்களை நீக்கம் செய்து வரையறுக்கப் பட்ட நிலையில் இரண்டு என்னும் எல்லை கட்டி, தோளிலும் காலிலும் தங்க வைத்து நாதம் தோன்றுகின்ற தொழில் உண்டாகும் படி ஒலிக்கப் பெறுகின்ற தும்புரு என்ற வீணையும், ***(12 - 18),***

Koviloor Digital Library

பொருந்தி நின்று பாட வயிர உடல் பெற்று 80 விரல் நீளத்துடன் 100 கம்பிகள் ஒலிக்கின்ற முகத்தினை உடைய கீசகம் என்னும் பெயரினை உடைய யாழ் பண்ணோடு பாடவும், (18-21)

முழுமதி போலும் வடிவாய் முயல் தோலினால் கட்டி நடுவில் ஒரு நரம்பாகிய மாற்றனை அமைத்து அந்த நரம்பு 26 விரல் அளவு பெறும்படி இடக்கரத்தால் கட்டி, இடப்பால் அமைத்து 3 விரலின் புறத்திலும், விரல் நுனியிடத்தும் 62 வகை யாகிய இசையை அனைத்துயிரும் வணங்க வழங்கும் மருத்துவம் என்னும் பெயர் பெற்ற தேவயாழ் துூங்கலோசை துள்ளலோ சையைத் தரவும்,(22- 29)

பிரமன் முதலாகிய மூவரும் துதிக்க முனிவர்கள் அஞ்சலி செய்து உபசரிக்க, தேவர்கள் யாவரும் திசைகள் தோறும் வணங்க, உமையவள் இடப்பாகத்தில் இருக்க, வெள்ளிமலையில் ஞானப் பிரகாசம் விளங்க வீற்றிருந்த இறைவனது, மதுரையாகிய திருப் பதியை விதிமுறைப்படி வணங்காதவர் போல, (30 - 35)

பாம்பின் தலை போன்ற அரும்பு மிகுந்த திரண்ட தாளை உடைய, அல்லிப் பூவின் பச்சிலைகளால் ஆகிய பெரிய காட்டில் மறைகின்ற, மாதர்கள் கண் போன்ற பெரிய சேல் மீன்களை, வெண்மையான உடலையும் கூரிய வாயினையும் செங்கால் களையும் உடைய நாரைக் கூட்டங்கள், பாம்பின் பல் போலக் காணப்படும் முட்கள் நிறைந்த தாழைச் செடிகளிடத்துப் பூத் திருக்கும் மலர்களோடு கொத்தி உண்ணுகின்ற, (36 - 41)

உப்பங்கழி சூழ்ந்த கடற்கரையில் நம்மிடத்தில் கூறிய உண்மைச் சொல்லாகிய சத்தியத்தை, மின்னலைப் போன்று விரைவில் மறந்தவரது, பிடரி மயிரை உடைய குதிரை பூட்டிய, பார்க்கின்ற கண்களை மறைக்கின்ற சக்கரங்களைக் கொண்ட பெரிய தேரின் பின்னால் சென்ற எனது மிகுந்த துயரை உடைய மனம், (42 - 46)

அத்தேர் சென்ற இடங்களில் எல்லாம் செல்லுதல் உண்டோ?, அவர் சென்ற வினை முடியும் அளவும் அரிய தவத்தைச் செய்யுமோ? அல்லது நடுவழியில் அவரை விட்டு எனக்கு எதிராக வருமோ? அல்லது நீண்டநாள் அவருடன் இருந்து அவர் மீண்டும்

Koviloor Digital Library

வந்தால் உடன் வருமோ? யாதும் அறியேன். எனவே மனமே என்னுடைய பேதமை வெளிப்படாமல் நிற்பாயாக என்று தலைவி தன் நெஞ்சத்தைப் பார்த்துக் கூறினாள்.

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **273** ஆவது பாடலுக்கு உரிய விளக்கமாகும். இப்பாட்டின் முதற் பகுதியில் நாரதம் என்னும் பேரியாழ், தும்புரு என்னும் வீணை, கீசகம் என்னும் யாழ், மருத்துவம் என்னும் தேவயாழ் ஆகிய இசைக்கருவிகள் ஒலிக்க, முனிவர்கள் தேவர்கள் வணங்க, உமையவள் இடப் பாகத்தில் இருக்க, வெள்ளி மலையில் இறைவன் வீற்றிருந்தான் என்ற சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. பின்பு தலைவன் சென்ற தேரின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. தேரின் பின்சென்ற மனம் என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவி வாடுவதாகப் பொருள் அமைந்துள்ளது.

(சொ - ம்):

தந்திரி - நரம்பு, இன்பப் பசுங்கொடி - உமையவள், பாசடை - பசிய இலை, குறுகினம் - கொக்கு, கைதை - தாழம்பூ,

86. கண் துயிலாது மொழிதல்

கடு வினை அங்குரம் காட்டி, உள் அழுக்காறு
எண் திசைச் சாகை கொண்டு, இருள் மனம் பொதுளி,
கொடுங் கொலை வடுத்து, கடும் பழிச் சடை அலைந்து,
இரண்டு ஐஞ்ஞூறு திரண்ட அக் காவதம்
சுற்றுடல் பெற்று, துணைப் பதினாயிரம்
மற்று அதின் நீண்டு மணி உடல் போகி,
ஐம்பது - நூறுடன் அகன்று சுற்று ஒழுக்கி,
பெருங் கவிழ் இணர் தந்து அவை கீழ்க் குலவிய
அடல் மாக் கொன்ற நெடு வேற் குளவன்,
குன்றவர் வள்ளிஅம் கொடியொடு துவக்கிப்
பன்னிரு கண் விரித்து, என் வினை துரக்கும்
அருட் பரங்குன்றம் உடுத்து அணி கூடல்
குறும் பிறை முடித்த நெடுஞ் சடை ஒருத்தனைத்
தெய்வம் கொள்ளார் சிந்தை - அது என்னக்

Koviloor Digital Library

கிடந்த வல் இரவில், கிளர்மழை கான்ற
அவலும், உம்பரும், அடக்கு புனல் ஒருவி,
தே அருள் கல்லார் சிந்தையின் புரண்ட
கவலையும் காற் குறி கண்டு, பொழில் துள்ளும்
இமையாச் சூரும் பல கண்டு, ஒருங்காத்
துடியின் கண்ணும் துஞ்சாக் கண்ணினர்
கடியும் துனைவில் கையகன்று, எரிமணித்
தொகை இருள் கொல்லும் முன்றில் பக்கத்து,
இணை முகப் பறை அறை கடிப்புடைத் தோகை
வயிற்றுள் அடக்கி வளை கிடை கிடக்கும்,
முழக்கி மெய் கவரும் முகக் கொலை ஞானி
அதிர் குரைப்பு அடக்கி, இற்புறத்து அணைந்த நம்
பூம் புனல் ஊரனை, பொருந்தா நெடுங் கண்
அன்னையின் போக்கிய அரும் பெருந் தவறு --
மாலையும் கண்ணும் மேனியும் உள்ளமும்
மயங்காத் தேவர், மருந்து வாய்மடுக்க
முகம் கவிழ் வேலையில், அறம் குடிபோகிய
மாய வல் அரக்கர், தட்டிக்
காய் பார் உகுத்த விதி ஒத்தனவே.

துறை விளக்கம்:

தலைவன் தலைவியைக் காண்பதற்காகக் கார்காலத்தில் பல தடைகளையும் கடந்து வந்த பொழுது, கண் துயிலாத தாயின் காவலால் தலைவியால் தலைவனைச் சந்திக்க இயலாது போயிற்று. அப்பொழுது தலைவி வருந்திக் கூறியது.

பாடற் பொருள்:

நஞ்சை ஒத்த மாயை ஆகிய முளையைத் (மாமரத்தினைத்) தோற்றுவித்து, உள்ளத்தின் கண் அழுக்காறாகிய கிளைகளை எட்டுத் திக்கிலும் பரப்பி, இருண்ட மனமாகிய தளிர்களை விளைவித்து. மரத்தடியின் சுற்றளவானது ஆயிரம் காத தூரம் பெற்று, மாமரமானது இருபதினாயிரம் காத தூரம் உயர்ந்து, அந்த மரத்தின் அழகிய உடலானது சுற்றிலும் சென்று ஐயாயிரம் காத தூரம் அகன்று பரவி, மிகுந்த வஞ்சகமாகிய பூங்கொத்துக்களைத் தந்து, கொடிய கொலையாகிய பிஞ்சுகளை அரும்பி, கிளைகளைக் கொண்டதாகி, பழியாகிய வேரினைக் கொண்டு எழுந்த விஷத்தை

Koviloor Digital Library

ஒத்த மாமரத்தை (சூரபதுமனாகிய) வெட்டிய நெடிய வேலாயுதத்தை உடைய முருகக் கடவுள், (1 - 9)

மலையில் அமர்ந்திருந்த வள்ளி நாச்சியார் என்னும் கொடியுடனே கட்டப்பட்டடு, பனிரெண்டு கண்களாலும் நோக்கி, எனது இருவினையும் போக்கிய அருளுக்கு இடமாகிய திருப்பரங்குன்றத்தால் சூழப்பட்ட மதுரையில், (10 - 12)

தலையில் இளம்பிறையைத் தரித்த நீண்ட சடையினை உடைய சிவபெருமானைத் தெய்வம் என்று மதியாதார் மனம் போல், (13 - 14)

இருண்ட இரவுக் காலத்தில் நிறைந்த மழையைப் பொழிந்த, மண்ணையும் விண்ணையும் அடக்கிய. ஆற்று வெள்ளத்தைக் கடந்து, தெய்வத்தை அறியாதவர் மனம் போல மாறுபட்ட, நீண்ட வழியையும், தன் கால் சுவட்டால் தடவிக் கொண்டு, சோலை களில் நடமாடுகின்ற கண் இமைத்தல் இல்லாத தெய்வங்களைப் பலவாகக் கண்டு, ஒலிக்கின்ற குறிஞ்சிப் பறையின் ஓசையால் உறங்காத கண்களை உடைய காவலர்களின் காவலையும் விரைவில் நீங்கி, (15 - 21)

நன்கு ஒளி விடுகின்ற மணிகளால் இருளை நீக்குகின்ற வீட்டின் முன்பு, இரு முகங்களை உடைய பறையினை அடிக்கும் கருவியாகிய குறுந்தடிகளைப் போல வாலைத் தன் வயிற்றின் கண் அடக்கி, வளைந்து படுத்திருக்கும் குரைத்தலால் தமர் என்றும் அயலவர் என்றும் அறிகின்ற, கொலை முகத்தை உடைய நாய் குரைக்கின்ற அந்த ஒலியை அடக்கி, (22- 26)

வீட்டின் பின்புறத்தே வந்த நீர்வளம் மிக்க நாட்டை உடைய தலைவனை, உறங்காத நெடிய கண்களை உடைய நம்முடைய தாயினாலே போய்விடச் செய்த இடையூறு எவ்வாறு இருக்கும் எனில், (27 - 28)

மாலைகளும், இரு கண்களும், உடம்பும், உள்ளமும் வேறு படாத தேவர்களது அமிர்தத்தை உன் வாயால் உண்ணுதற்கு முகத்தைச் சாய்த்த நேரத்தில், தருமத்தைக் கைவிட்ட வஞ்சனை யில் வல்லவர்களாகிய அரக்கர்கள் தட்டி, சாய்த்துப் பூமியின்கண் சிந்தும்படி செய்த விதியை ஒத்தது என்று தலைவி கூறினாள். (29-33)

Koviloor Digital Library

(வி -ரை) :

இப்பாடல் திருக்கோவையாரின் 175 ஆவது பாடல் துறைக்கு விளக்கமாகும். ஆனால் திருக்கோவையாரில் இத் துறைக்குத் தலைப்பு, காப்புச் சிறைமிக்க கையறு கிளவி என்ப தாகும். எனவே பழைய பதிப்புகளில் கல்லாடத்தில் அத்துறையே அமைந்துள்ளது.

இப்பாடலில் முதற்பகுதியில் கடலில் மாமரமாக நின்ற சூரபதுமனின் மாமர உருவம் பலவாறு உருவகப் படுத்தப் பெற்றுள்ளது. பிறகு தலைவன் இரவுப் பொழுதில் நிறைந்த மழைநீர் தேங்கியிருந்த வழியைக் கண்களுக்குத் தெரியாததால் காலினால் தடவிக் கடந்து, இரவுப் பொழுதில் ஒலிக்கின்ற தெய்வப் பறையான குறிஞ்சிப் பறையின் ஓசையால் கண் துயிலாது காவல் காக்கும் காவலர்களின் காவலையும் கடந்து, வீட்டிற்கு முன்புறம் படுத்திருந்து ஆட்களைக் கண்டால் அதிலும் பிறர் என்று தெரிந்தால் குரைக்கின்ற நாயினது ஒலியையும் அடக்கித் தலைவியைக் காண வந்தான் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அவ்வாறு வந்த தலைவனைத் தாய் பக்கத்தில் கண் விழித்துப் படுத்திருந்ததால் தலைவி வீட்டிலிருந்து எழுந்திருந்து சென்று காண முடியவில்லை என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

(சொ - ம்)

அங்குரம் - முளை, சாகை - கிளை, பொதுளி - தளிர்த்த, இணர் - பூங்கொத்து, வேற்குளவன் - வேலை உடைய முருகன், அவல் - பூமி, உம்பர் - விண்ணகம், கவலை - சிறுவழி, முன்றில் - வாயில், ஞாளி - நாய், மருந்து - அமிழ்தம்.

87. தலைவன் வரவு உரைத்தல்

நாற் கடல் வளைத்த நானிலத்து உயிரினை,
ஐந்தருக் கடவுள், அவன் புனத்தினரை,
நடந்து புக்கு உண்டும், பறந்து புக்கு அயின்றும்,
முத் தொழில் தேவரும் முருங்க உள் உறுத்தும்,
நோன் தலைக் கொடுஞ் சூர்க் களவு உயிர் நுகர்ந்த
தழல் வேற் குமரன் சால் பரங்குன்றம்,
மணியொடும் பொன்னொடும் மார்பு அணி அணைத்த

Koviloor Digital Library

பெருந் திருக் கூடல் அருந்த தவர் பெருமான்
இரு சரண் அகலா ஒருமையர் உளம் என --
சுடர் விளக்கு எடுமின்! கோதைகள் தூக்குமின்!
பூவும் பொரியும் தூவுமின்! தொழுமின்!
சுண்ணமும் தாதும் துனைத்துகள் தூற்றுமின்! --
கரும் பெயல் குளிறினம் களி மயில் என்னக்
கிடந்து அயர்வாட்கு, முன் கிளர்வினைச் சென்றோர்
உடல் உயிர் தழைக்கும் அருள் வரவு உணர்த்த,
முல்லைஅம் படர் கொடி நீங்கி, பிடவச்
சொரி அலர் தள்ளி, துணர்ப் பொலம் கடுக்கைக்
கிடைதரவு ஒருவி, களவு அலர் கிடத்தி,
பூவைஅம் புடைமலர் போக்கி, அரக்கு அடுத்துக்
கழுவிய திரு மணி கால் பெற்றென்ன,
நற் பெருந் தூது காட்டும்
அற்புதக் கோபத் திருவரவு - அதற்கே.

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்பி வந்ததை இயற்கைச் சூழல்கள் அறிவித்ததால் தலைவி மகிழும் வண்ணம் தோழி அவன் வரவை எடுத்துரைத்தது.

பாடற் பொருள்:

நான்கு திசைக் கடலும் தனக்குள் அடக்கிய நான்கு நிலத்தில் - உள்ள உயிரையும், இந்திரனையும், அவன் நாட்டில் உள்ள தேவர்களையும் நடந்து போய் அழித்தும், பறந்து போய் உண்டும், தேவர்களை நடுங்கச் செய்யும் வலிய தலையை உடைய , கொடிய சூரபதுமனது கள்ளத் தன்மையாகிய உயிரை உண்ட, அழகிய வேலை உடைய முருகக் கடவுள், *(1-6)*

எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றத்தை அடுத்த மதுரையில் - மாணிக்கங்களும் பொன்னும் கூடிய மதாணிப் பதக்கத்தை அணிந்த அருந்தவத்தை உடையவர்களது தலைவனாகிய சிவ பெருமானின் - இரண்டு திருவடிகளை விட்டு நீங்காத தவத்தவர் களின் மனத்தைப் போல, *(7 - 9)*

கரிய மழை பெய்ததினால் மகிழ்ச்சி அடைகின்ற மயிலைப் போல மகிழ்ச்சியடைய, மதிப்புடைய வினையின் கண் சென்ற

Koviloor Digital Library

தலைவனது - தலைவியின் உடலும் உயிரும் தழைத்தற்குக் காரணமான வரவைத் தலைவிக்கு உணர்த்த, *(13- 15)*

எதிராக வருகின்ற முல்லைக் கொடிகளை நீக்கி, பிடவ மலரையும் விலக்கி, பொற்கொன்றை மலர் இருக்கும் இடத்தி லிருந்து நீங்கி, களா மலரினை உதிர்த்து, காயாவினது புதிய மலரைப் போக்கி, அரக்கினால் ஆகிய சாணை தீட்டும் கல்லால் நன்கு தீட்டப் பெற்ற மாணிக்கம் கால் பெற்று வந்தாற் போல் காட்சிதரும் இந்திரகோபம் என்னும் பூச்சியினது வரவானது, *(16 - 22)*

தலைவன் வரவிற்குத் தூதாக அமையும். ஆதலால் மாணிக்க விளக்கு ஏந்துவீர்களாக, மலர் மாலைகளைச் சூடுவீர்களாக, மலரும் பொரியும் தூவுவீர்களாக,தரை மெழுகிக் கோலம் இடுவீர்களாக, வாசனைப் பொடிகளையும், மலர்த் தாதுக்கயையும் தரைஎங்கும் இரைப்பீராக என்றுதோழி கூறினாள். *(10 - 12)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **296** ஆவது பாடல் துறைக் குரிய விளக்கமாகும். ஆனால் அங்கு தலைப்பு மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல் என்றுள்ளது. ஆனால் பாடல் தலைவன் வரவை உணர்த்துவதாகவே உள்ளது.

பாடலில் முதற்பகுதியில் முருகப் பெருமான் சூரனை வென்ற செய்தி கூறப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்தை அடுத்த மதுரையில் எழுந்தருளியுள்ள இறைவன் தவத்தவர்களுக்குத் தலைவன் என்றும், அவர்களுக்கு அருளுபவன் என்றும் சிவ பெருமான் பெருமை கூறப் பெற்றுள்ளது. பின் கார்காலத்தைக் கண்ட மயில் போலத் தலைவி மகிழ்ச்சி அடையத் தலைவனது வரவை உணர்த்தும் தூதாகக் கார்காலத்தில் வாழும் இந்திரகோபப் பூச்சியின் வரவு கூறப் பெற்றுள்ளது. ஆதலால் மகிழ்வைத் தெரிவிக்க வீட்டில் அமைக்கப் பெறும் சிறப்புக்கள் கூறப் பெற்றுள்ளன.

(சொ - ம்)

ஐந்தருக் கடவுள் - வானகத்தில் கற்பகம், சந்தனம், பாரிசாதம், மந்தாரம், சந்தானம் என்ற ஐந்து மரங்களைக் கொண்ட தேவர்

Koviloor Digital Library

உலகத்துத் தலைவன் இந்திரன், கோதை - மாலை, தாது - பூந்தாது, கடுக்கை - கொன்றை, களவு - களாமலர், கோபம் - இந்திரகோபம் என்ற பூச்சி.

88. இரங்கல்

பழுது அறு தெய்வம் காட்டிப் பண்டையின்
உழுவலின் நலத்தால் ஓர் உயிர் என்றும்,
கடுஞ் சூள் தந்தும், கைபுனை புனைந்தும்
பூழிஅம் போனகம் பொதுவுடன் உண்டும்,
குழமகற் குறித்தும், சில மொழி கொடுத்தும்,
கையுறை சுமந்தும், கடித் தழை தாங்கியும்,
உயிரினில் தள்ளா இரங்கியும், உணங்கியும்,
பனையும், கிழியும் படைக்குவன் என்றும்,
இறடிஅம் சேவற்கு எறி கவண் கூட்டியும்
புனமும் எம் உயிரும் படர் கரி தடிந்தும்,
அழுங்குறு புனல் எடுத்து அகிற் புகை ஊட்டியும்,
ஒளி மணி ஊசல் பரிய விட்டு யாத்தும்,
இரவினில் தங்க எளிவரல் இரந்தும்,
இருவிஅம் புனத்திடை எறி உயிர்ப்பு எறிந்தும்,
தெரித்து அலர் கொய்தும், பொழில் குறி வினவியும்,
உடலொடும் பிணைந்த கை ஆய் துயில் ஒற்றி,
செறிஇருட் குழம்பகம் சென்று, பளிங்கு எடுத்த
இற் பொழில் கிடைக்கும் அளவும் நின்று அலைந்தும்,
பல் நாள் பல் நெறி அழுங்கினர், இன்று,
(முகன் ஐந்து மணத்த முழவம் துவைக்க
ஒரு கால் தூக்கி நிலையம் ஒளிர்வித்து,
மூஉடல் அணைத்த மும் முகத்து ஓர் முகத்து
எண் கடிப்பு விசித்த கல்லலகு எறிய,
இருட் குறள் ஊன்றி, எம் அருட்களி ஆற்றி,
உருள் வாய்க் கொக்கரை உம்பர் நாட்டு ஒலிக்க,
கரம், கால், காட்டி, தலையம் இயக்கி,
இதழ் அவிழ் தாமரை எனும் தகுணிச்சம்
துவைப்ப, நீள் கரத்துக் கவைகள் தோற்றி,
கரிக் கால் அன்ன மொந்தை கலித்து இரங்க,
துடி எறிந்து இசைப்ப, துகளம் பரப்பி,
வள்ளம் பிணைத்த செங் கரடிகை மலக்க,

Koviloor Digital Library

எரியகல் ஏந்தி, வெம் புயங்கம் மிசை ஆக்கி,
எரி தளிர்த்தன்ன வேணியில் குழவிப்
பசும் பிறை அடுதொடு நிரம்பியதென்ன
மதுக் குளிர் மத்தமும் மிலைத்து, ஒரு மறு பிறை
மார்பமும் இருத்தியதென்னக் கூன் புறத்து
ஏனக்கோடு வெண் பொடிப் புறத்து ஒளிர,
பொலன் மிளிர் மன்றப் பொதுவகம் நாடித்
தனிக்கொடி காண, எவ்விடத்து உயிர் தழைப்ப,
ஆடிய பெருமான் அமர்ந்து நிறை கூடல்
கனவிலும் வினவாதவரினும் நீங்கி,
சூளும் வாய்மையும் தோற்றி)
நீளவும் பொய்த்ததற்கு அவர் மனம் கரியே!

துறை விளக்கம்:

தலைவன் பொய்ச்சூழ் கூறித் தன்னை வருத்தியதற்குத் தலைவி வருந்துவது.

பாடற் பொருள்:

குற்றமற்ற விதியானது கூட்டுவித்தலால் பண்டை எழு பிறப்பும் தொடர்ந்த அன்போடு இருவருக்கும் உயிர் ஒன்றாயிற்று என்று சூளுரைத்தும், கையால் அணிகலன்கள் அணிந்தும், வண்டல் சோற்றினை ஆயத்தாரோடு அருந்தியும், வண்டல் பாவையாகிய பொம்மையைப் பாராட்டியும், சில வார்த்தை கூறியும், கையுறை தந்தும், மணம் கொண்ட தளிர்களை ஏந்தியும், உயிர் தளரும்படி வருந்தியும், வாடியும், பனைமடலால் குதிரையும், ஓவியப் படமும் படைப்பேன் என்றும், தினைக் காவலுக்குப் பரண் கட்டிக் கொடுத்தும், தினைப் புனத்தின் மேலும் எம் உயிரின் மேலும் அன்பு கொண்டு - என்னைத் தாக்க வந்த யானையைக் கொன்றும், ஆற்றில் விழுந்த போது என்னை மேல் எடுத்தும், ஆற்றில் விழுந்ததால் ஏற்பட்ட குளிர்ச்சியை நீக்க அகிற்புகை கொடுத்தும், ஊசலாடுகின்ற கயிறானது அறுந்த போது அதனைக் கட்டி ஆட்டியும், இரவில் எம்மிடத்துத் தங்குவதற்கு யாசித்தும், தினை அறுக்கப்பட்டதால் வறுமையாய் நின்ற தினைப்புனத்தின் கண் எம்மைக் காணாமையால் பெருமூச்சு விட்டும், மலர்களை ஆராய்ந்து பறித்துக்

Koviloor Digital Library

கொடுத்தும், இருக்கும் பூஞ்சோலையின் அடையாளம் கேட்டும், எம் உடலோடு அணைத்த கையை உடைய தூங்கிய தாயினது தூக்கத்தைச் சோதித்தும், நெருக்கமாக விளங்கிய நள்ளிரவில் வந்து குறியிடமாகிய சோலையில் யாம் வரும்வரை காத்திருந்தும், பலகாலம் இவ்வாறு பல நெறிகளில் செயல்பட்ட தலைவர் இப்பொழுது, *(1-19)*

ஐந்து முகத்தைக் கொண்ட வாச்சியம் என்னும் முழவமானது ஒலிக்க, ஒரு காலைத்தூக்கி நாடகம் ஆடிய கூத்தினைத் தோற்றுவித்து, மூன்றுடல், மூன்று முகம் கொண்ட, ஒவ்வொரு முகத்தில் எட்டுக் களிப்பால் அடித்து ஓசை எழுப்புகின்ற கல் என்னும் வாச்சியம் முழங்க, *(20 - 23)*

கருமையான பூதங்களானவை கீழே இருந்து இறையருளால் மகிழ்ச்சி உண்டாகி, அதனால் உருண்ட முகத்தை உடைய வலம்புரிச் சங்கைத் தேவர்கள் நாடு வரை சென்று ஒலிக்கும் வண்ணம் ஒலித்து,அத்துடன் கையும் காலையும் காட்டித் தலையம் என்னும் கூத்தைத் தோற்றுவித்து, தாமரை மலரைப் போன்ற தகுணித்தம் என்னும் வாச்சியம் ஒலிக்க, *(24-28)*

கையால் ஒலிகளை எழுப்பி, யானைக் காலை ஒத்து விளங்கும் மொந்தை என்னும் வாச்சியம் மிகுந்து ஒலிக்க, துடி என்னும் பம்பை வாச்சியம் ஒலிக்க, நுட்பமான ஒலிகளை எழுப்பி, மரக்கால் கட்டிய செம்மையான கடிகை என்னும் வாச்சியத்தின் ஒலி அதிகரிக்க, *(28 - 31)*

கையில் மழுவேந்தி, பாம்பணியை மேலே தரித்து, நெருப்புப் போன்ற சடையில் இளம்பிறையின் அமிர்தத்துடன் மதுவால் பொலிந்த ஊமத்தம் பூவையும் சூடி, வேறொரு பிறைச் சந்திரனை மார்பில் சூடியது போலப் பன்றியின் கொம்பினைச் சூடி, திருநீற்றுப் பொடியானது மார்பை ஒளி செய்ய, *(32 - 37)*

பொன் ஒளிகாட்டும் பொற் சபையினிடத்துத் திருவுளம் கொண்டு, பார்வதி தேவியார் தரிசிக்க, எல்லாம் உயிர்களும் தழைக்கும்படி நடனமாடிய கடவுள் விற்றிருந்த மதுரைப் பதியைச் சொப்பனத்திலும் கேட்டறியாதவரைக் காட்டிலும், அன்பு சிறிதுமின்றிச் சத்தியத்தையும் இனிய வாய்மொழியையும்

Koviloor Digital Library

சொல்லி, எம்மைத் தேற்றிப் பெரும்பாலும் உள்ளத்தில் வஞ்சனை கொண்டதற்கு அவர் மனம் ஒன்றே சாட்சியாகும் அல்லவோ.

(38 - 43)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் ***311***ஆம் பாடல் துறைக் குரிய விளக்கமாகும். ஆனால் திருக்கோவையாரில் வாய்மொழி கூறித் தலைவி வருந்துதல் என்ற தலைப்பு அமைந்துள்ளது.

பாடலின் முன் பகுதியில் களவுக் காலத்தில் தலைவியின் காதலைப் பெறுவதற்காகத் தலைவன் செய்த செயல்கள் எல்லாம் குறிக்கப் பெற்று, அத்தலைவன் வெளியில் சத்தியம் கூறுவது போலப் பொய்ச் சூழ் கூறி, மனதில் வஞ்சகத் தன்மை உடைய வனாக இருக்கின்றான். அவன் அவ்வாறு இருப்பதற்கு வேறு எந்தச் சாட்சியும் இல்லை, அவன்மனமே சாட்சி என்று தலைவி வருந்திக் கூறுகிறாள். பாட்டின் இடையில் சிவபெருமானின் சிறப்பாகப் பலவிதமான வாத்தியங்கள் ஒலிக்க, மதுரையில் பார்வதியார் காண ஆடிய நடனம் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்)

பூழிஅம்போனகம் - வண்டல் விளையாட்டுச் சோறு, இரடிஅம் சேவல் - தினைக்காவல், அழுங்குறு - மூழ்குதல்,

89. ஐயம் உற்று ஓதல்

பாசடைக் கருங் கழி படர் மணல் உலகமும்
எழு மலை பொடித்தவர்க்கு இசைத்தல் வேண்டி
வரை உலகு அனைத்தும் வருவது போல,
திரை நிரை திரைத்துக் கரை கரைக் கொல்லும்
வையை நீர் விழவு புகுந்தனம் என ஒரு
பொய்யினள் அன்றி மெய்யினை நீயும்,
பொலம்பூண் பெயர்ந்து உறை பூணை, அருள்தரும்
மலர்ச்சி நீங்கிக் கொடுங்கோல் வேந்து எனச்
சேக்கொள் கண்ணை, செம்மொழிப் பெயர் தந்து
ஒன்றுடன் நில்லா மொழியை, மதுத்த
முதிரா நாள் செய் முண்டகம் மலர்ந்து
கவிழ்ந்த முகத்தை, எம் கண் மனம் தோன்ற

Koviloor Digital Library

அரும்பிய நகையை அன்றே? நின் கெழு
என்கண் கண்ட இவ் இடை, என் உளம்
மன்னி நின்று அடங்காக் குடுமிஅம் பெருந்தழல்
பசுங் கடல் வளைந்து பருகக் கொதித்த
தோற்றமும் கடந்தது என்றால், (ஆற்றல் செய்
விண்ணகம் புடைத்து, நெடு வரை கரக்கும்
கொடுஞ் சூர்க் கொன்ற கூர் இலை நெடு வேல்
குன்றக் குறவர் கொம்பினுக்கு இனியோன்
குருகு ஒலி ஓவாப் பனி மலர் வாவி
வயிறு வாய்த்த குழவிஅம் கிழவோன்,
வாழ் பரங்குன்று எனும், மணி அணி பூண்ட
நான்மறை புகழும் கூடல் எம்பெருமான்
வான் முதல் ஈன்ற மலைமகள் தன்னொடும்,
முழுது உணர் ஞானம், எல்லாம் உடைமை,
முழுது அனுக்கிரகம், கெழு பரம், அநாதி,
பாசம் இலாமை, மாசு அறு நிட்களம்,
அவிகாரக் குறி, ஆகிய தன் குணம்
எட்டும் தரித்து, விட்டு, அறு குற்றமும்,
அருச்சனை, வணக்கம், பர உயிர்க்கு அன்பு அகம்,
பேர் அருள் திரு நூல், பெருந் துறவு, எங்கும்
நிறை பொருள் அழுந்தல், அருளினர்க் கூட்டம்,
இருள் பவம் நடுங்கல், எனும் குணம் எட்டும்,
தமக்கும் படைத்த விதிப் பேற்று அடியவர்
நிலை அருள் கற்பு என) நெடுங் கற்பு உடையோள்
முன் உறின், அவள் மனம் ஆங்கே
நன்னரில் கொண்டு குளிரும் பெறுமே?

துறை விளக்கம்:

தலைவன் பரத்தையிடம் சென்று வந்ததைக் குறிப்பால் உணர்ந்த தோழி, அந்தக் குறிப்பை ஐயமாகக் கொண்டு தலைவனிடத்தில், அவன் பரத்தமை ஒழுக்கத்தை உரைத்தலாகும். இது பிற பதிப்புக்களில் தோழி இயற்பழித்தல் என்ற துறையை உடையதாகக் கூறப்பெற்றுள்ளது.

பாடற்பொருள்:

பச்சை இலையால் மூடப் பெற்றுள்ள பெருங் கடலானது படர்ந்து விளங்கும் மணல் மிகுந்த நெய்தல் நிலத்தையும், ஏழு

Koviloor Digital Library

மலைகளையும் துகளாக்கிய வேலவனை வணங்குதல் வேண்டி, குறிஞ்சியில் உள்ள எல்லா மலைகளும் வருகின்ற தோற்றம் போலக் கடலில் உள்ள அலைகளானது விரைந்து வந்து கரையை அழிக்கின்ற. வையையில் பெருவெள்ளம் வரும்பொழுது -- கொண்டாடும் விழாவிற்குப் போய் வந்தோம் என்று கூறுகின்ற பொய்யுள்ளம் கொண்ட தலைவி போல் அல்லாமல் நீ (தலைவன்) உண்மையாய் உள்ளாய். *(1-6)*

பொன்னால் ஆகிய அணிகலன்கள் கலைந்து கிடக்கின்ற அலங்காரம் உடையவனே, இனிமை தருகின்ற அருள் நீங்கி விளங்கும் கொடுங்கோல் அரசன் போல, சிவந்த கண்களைக் கொண்டவனே, இனிமைச் சொல் நீங்கிய சொல்லை உடைய வனே, மலர்ச்சியில்லாது(கூம்பி) பருவம் இல்லாத நாளில் தோன்றிய தாமரைப் பூப்போலக் கீழ்நோக்கிய முகத்தை உடையவனே, எங்கோ மனத்தைச் செலுத்தி அதனால் உண்டாகிய மெல்லிய சிரிப்பை உடையவனே, என்று தலைவனிடம் கூறி *(7-13)*

இந்த இடத்தில் எனது கண்ணால் உன்னைக் கண்ட என் நெஞ்சமானது ஒரு நிலையில் நிலைபெற்று அடங்காமல் - வடவாக்கினித் தீயானது கடலைச் சூழ்ந்து அதனை வற்றும்படி கொதிக்கின்ற கொடுமையை விட அதிகமாகக் கொதிக்கின்றது என்றால், *(13-17)*

போர் புரிந்து தேவர் உலகங்களை அழித்து மலையின் உள்ளே ஒளிந்து கொண்ட சூரனைக் கொன்ற கொடிய வேலை ஏந்தியவரும், வேடர்கள் கொடுத்த வள்ளியை மணந்தவரும், பறவைகள் என்றும் ஒலிக்கும் இனிய மலைச்சாரலில் உள்ள குளம் ஈன்ற குழந்தையும் ஆகிய நாயகன் வாழ்கின்ற திருப்பரங் குன்றத்தை மாணிக்க அணியாகத் தன்னில் கொண்ட, வேதங்கள் நான்கும் பெருமையாய்க் கூறுகின்ற மதுரைக்குத் தலைவனாக விளங்கும் சிவபெருமான், *(18-24)*

விண் முதல் அனைத்தையும் ஈன்றவளாகிய உமையவளுடன் இருந்து, எல்லாவிதமான பொருளையும் அறிகின்ற ஞானமும், எல்லாவற்றையும் தன்னிடத்தே கொண்ட உயர்ந்த தன்மையும், பேரருள் உடைமையும், முடிவில்லாத ஆற்றல் உடைமையும்,

Koviloor Digital Library

தோற்றம் இன்மையும், பாசமின்மையும், தனக்கெனக் குற்றமற்ற வடிவு இல்லாமையும், விகாரமில்லாத திருமேனியும் ஆகிய எட்டுக் குணங்களையும் தனக்கெனக் கொண்டு விளங்குவது போல, *(25-30)*,

காமம் முதலாகிய அறுவகைக் குற்றமும் நீங்கி, சிவ அருச்சனையும், வணக்கமும், எல்லா உயிர்களிடத்தும் அன்பும், பெரிய அருளுக்குரிய திருமறை அறிவும், எல்லாவற்றிலும் கொண்ட துறவும், எங்கும் நிறைந்துள்ள சிவத்தோடு அழுந்து தலும், அருளை உடைய கூட்டத்தோடு இணங்குதலும், பாவங் களுக்கு நடுங்குதலும் ஆகிய எட்டுக் குணங்கள் கொண்ட அடி யவர்களது நிலையான ஒழுக்கம் போல நீங்காத கற்புடைய தலைமகளுக்கு எதிரில் நீ சென்றால் அவள் உள்ளமானது அப்பொழுதே நன்மையை உட்கொண்டு மகிழ்ச்சி பெறுமே என்று தலைவனைக் கண்டு தனக்குக் கோபம் வருதலையும், தலைவி முன் தலைவன் சென்றால் தலைவி மகிழ்வதையும் தோழி கூறினாள். *(31-38)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **376** ஆவது பாடலுக்கு விளக்கமாகும். இப்பாடலில் தோழி தலைவனோடு கூடிய தலைவியின் தோற்றத்தை ஒருமுறை பார்த்து ஐயமுற்றுக் கேட்ட பொழுது, அவள் வையை ஆற்றில் ஆடி வந்தேன் என்று பொய் கூறினாள். அவ்வாறு பொய் கூறாதவன் என்று தலைவனைக் குறிப்பிட்டு, அவன் பரத்தையிடம் சென்று வந்ததைக் குறிப்பால் அறிந்து தோழி அவனை வினவுவது போலக் கருத்து அமைந் துள்ளது. பாடலின் முதற் பகுதியில் தலைவனுடைய தோற்றம் வருணிக்கப் பெற்றுள்ளது. அத்தோற்றம் பரத்தையர் புணர்ந்த தோற்றம் என்பதால் தோழியின் மனம் கொதிப்படைந்தது பின் கூறப் பெற்றுள்ளது. இந்தத் தோற்றத்தோடு (பரத்தையர் கூடிய தோற்றத்தோடு) தலைவன், தலைவி முன் சென்றாள் மகிழ்வாள் என்று இகழ்ச்சியுடன் தோழி கூறுவதாகவும் பொருள் அமைந் துள்ளது. இதில் திருப்பரங்குன்றத்தைக் கொண்ட மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் எட்டுக் குணங் களைப் போல, எட்டுக் குணங்களைக் கொண்ட அடியவர்

Koviloor Digital Library

ஒழுக்கம் போலத் தலைவியின் கற்பு உள்ளது என்று கூறப் பெற்றுச் சிவபெருமானின் எட்டுக்குணங்களின் சிறப்புக் கூறப் பெற்றுள்ளது.

(சொ - ம்):

பாசடை - பச்சைஇலை, வரைஉலகு - குறிஞ்சிநிலம், பூணை - விளங்கும் அணிகலன்கள், சேக்கொள் - செம்மைநிறம், முண்டகம் - தாமரை, விண்ணகம் -தேவர் உலகம், கொம்பு - கொம்பு போன்ற வள்ளி, வாவி - முருகப் பெருமான் பிறந்த குளம், அனுக்கிரகம் - அருள், வரம் - ஆற்றல், அநாதி - தோற்றம் இல்லாதவன், நிட்களம் - வடிவு இல்லாமை, அவிகாரக்குறி - அவலட்சணம் இல்லாத மேனி,

90. தலைவனோடு ஊடல்

மாயமும் இன்பும் மருட்சியும் தெருட்சியும்
நகைத்தொகை கூட்டிக் கவைத்து எழு சொல்லும்,
அமுதமும் கடுவும் விழியல் வைத்து அளிக்கும்
இருமனப் பொய் உளத்து ஒரு மகள் தன்னை
கரியோன் கடுப்பத் துகில் கவர்ந்து, ஒளிர் அலர்
விதியினம் பன்மை செய்முகன் படைத்து, அளவாச்
சோதியின் படைக்கண் செல உய்த்து, அரும்புசெய்
முண்டக முலையில் சாந்து அழித்து, அமைத் தோள்
எழுதிய கழைக் கரும்பு எறிந்து, நூல் வளர்த்த
கோதை வகை பரிந்து, மணிக்கலன் கொண்டு,
கழைத் தோள் நெகிழத் தடை உடல் குழையத்
திரையினைத் தள்ளி, மலர்த்துகில் கண் புதைத்து,
ஒள் நிற வேங்கையின் தாதும் பொன்னும்
சுண்ணம் - அவை கலந்து திமிர்ந்து உடல் தூற்றி,
வண்டொடு மகிழ்ந்து அவிழ் தோட்டலர் சூட்டி,
இறால் புணர் புதுத் தேன் ஈத்து, உடன் புணரும்
அவ்வயின், மறித்தும் அன்னவள் தன்னுடன்
கெழுமிய விழவுள், புகுமதி நீயே -
(கவை நாக் கட்செவி அணந்து இரை துய்த்த
பாசுடற் பகுவாய்ப் பீழை அம் தவளையும்,
பேழ்வாய்த் தழல்விழித் தரக்கு டித்து அவிந்த
நிலம் படர் தோகை குலம் கொள் சேதாவும்,
அவ்வுழி மாத்திரை அரை எழு காலை,

Koviloor Digital Library

திரு நுதற்கண்ணும் மடமகள் பக்கமும்
எரி மழு நவ்வியும், பெறும் அருள் திரு உருவு
எழுத்து, உடன் அந்தக் கடுக் கொலை அரவினை,
தீவாய்ப் புலியினை, திருந்தலர் நகைப்ப,
எடுத்து, அணிபூண, உரித்து உடை உடுப்ப,
முனிவரும் தேவரும் கரமலர் முகிழ்ப்ப,
தருவன அன்றி - மலரவன் - அவன் தொழில்,
நாரணன் ஆங்கு - அவன் கூருடைக் காவல்,
சேரத் துடைக்கும் பேர் அருள் நாளினும்,
முத் தொழில் தனது முதல் தொழில் ஆக்கி,
ஒரு தாள் தாரைகொள் முக் கவைச் சுடர் வேல்,
தலை இருந்து, அருங்கதி முழுது நின்று அளிக்கும்
திரு நகர்க் காசிப் பதியகதது, என்றும்
வெளியுறத் தோன்றிய இருள் மணி மிடற்றோன்)
நேமியங்குன்று அகழ் நெடு வேற் காளையன் -
தன் பரங்குன்றம் தமர் பெறு கூடற்கு
இறையோன் திருவடி நிறையுடன் வணங்கும்
பெரும் புனல் ஊர! எம் இல்
அரும் புனல் வையைஅம் புது நீர் அன்றே..

துறைவிளக்கம்:

பரத்தையோடு கூடிவந்த தலைவனுடன் ஊடல் கொண்டு, தலைவன் பரத்தையர்களுடன் கூடி, புனலாடி வந்ததை வெறுத்துத் தலைவி ஊடுதலாகும்.

பாடற் பொருள்:

பொய்ச் சிரிப்பை மிகுதியாகச் சேர்த்து, இரு வேறு நிலையில் தோன்றும் சொல்லிடத்தில் வஞ்சமும் இன்பமும் கொண்டு, மயக்கமும் தெளிவும் கொண்ட கண்ணிடத்தில் அமிழ்தமும், நஞ்சமும் வைத்ததுத் தம் தொழிலைச் செய்கின்ற இருவகை மனத்தைக் கொண்ட, பொய்ம்மை உடைய உள்ளத்தைக் கொண்ட ஒரு விலைமகளாகிய பரத்தையை, *(1-4)*

கிருஷ்ணனைப் போல அவளுடைய ஆடையைக் கழற்றி, நான்முகனைவிட பற்பல விதமாகத் தோன்றுகின்ற அவளுடைய முகத்தைப் பெற்று, அளவு படாத காமத்தின் ஒளியைக் கொண்ட கண்களை அவன்மீது செலுத்தி, *(5 - 7)*

Koviloor Digital Library

தாமரை மொட்டுப் போன்ற அவளுடைய முலையில் எழுதப் பெற்ற சந்தனத்தை அழித்தும், மூங்கில் போன்ற அவளுடைய தோளில் எழுதப் பெற்ற மன்மதனின் கரும்பு போல் எழுதப் பெற்ற தொய்யலைக் கரைத்தும், நாரினால் கட்டப் பெற்ற அவளுடைய மாலைகளை அறுத்தும், அவளுடைய அணிகலன் களைக் கழற்றியும், மூங்கில் போன்ற அவளின் தோள் நெகிழ வும், பூரித்த உடல் குழையவும், வையை ஆற்றின் அலைகளிலே அவளைத் தள்ளி விளையாடிப் பிறகு பூந்துகிலால் (ஆடை) அவள் கண்களை மூடி, வேங்கை மலரின் மகரந்தப் பொடி களையும், பொன் போன்ற பொடிகளையும், சுண்ணத்தோடு கலந்து அவள் உடலில் பூசியும், வண்டுகள் மொய்க்கும் மாலை களை அணிவித்தும், புதிய தேனினை அவளுக்கு உண்பித்தும், அவளுடன் கூடி இன்புற்று, மீண்டும் வையை நதியில் கொண்டா டப்படும் சிறப்புடைய விழாவில் அந்தப் பரத்தையோடு சென்றவனாகிய நீ (தலைவன்) **(8-21)**

பிளந்த நாக்கை உடைய பாம்பானது இரையாக உண்ட பசுமை நிறம் கொண்ட மரண வாதைக்கு உட்பட்ட தவளையும் - நெருப்பு எரிகின்ற கண்களைக் கொண்ட புலியால் அடித்து இறந்த நீண்ட வாலை உடைய உத்தமப் பிறவியாகிய பசுவும், தாங்கள் பட்ட இடத்தே அரைநொடியில் உயிர் பெற்று எழுகின்ற வண்ணம் நெற்றிக் கண்ணையும், பார்வதி உடைய ஒரு பாகத் தையும், மழுவையும், மானையும் கொண்ட, அருளே திரு மேனியாக உடைய இறைவன் அருள் செய்து, **(22-26)**

அத்துடன் தவளையை உண்ட பாம்பையும், பசுவைக் கொன்ற புலியினது தோலையும் தாருகாவனத்து முனிவர்கள் நகைக்குமாறு பாம்மை அணியாக, புலியினைத் தோலாடையாகக் கொள்ளவும், அதனைக் கண்ட முனிவர்களும் தேவர்களும் மலர் போன்ற கைகளைக் கூப்பவும் அருளியதோடு அல்லாமல் பிரமனது படைப்பையும், திருமாலது காப்பையும், உருத்திரனது அழிக்கின்ற தொழிலையும் ஆகிய மூவரின் தொழிலையும் தனக் குரிய முதன்மைத் தொழிலாக்கியும் **(27-34)**

மூன்று சுடர் கொண்ட பகுதிகளை உடைய திரிசூலத்தின் நுனிப்பகுதி அடங்கி, அனைத்துக் கதிகளையும் தருகின்ற, எல்லா

Koviloor Digital Library

நகரங்களிலும் பெருமை உடைய காசி என்னும் திருத்தலத்தில் தோன்றிய, நீலமணி கண்டனாகிய இறைவன், *(35-37)*

கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலினை உடைய முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றத்தைத் தன் இனமாகப் பெற்றுள்ள மதுரை நகரத்துச் சிவபெருமானின் திருப் பாதங்களைப் பக்தியுடன் வணங்குகின்ற தலைவனே, நீ எமது வீட்டிற்கு வருகின்றாய். எமது வீடானது நீ பரத்தையோடு விளை யாடிய மகிழ்வு தரும் வையை நீர்போலப் பெருமை உடையது என்று பரத்தையைப் புணர்ந்து வந்த தலைவனிடம் ஊடல் கொண்டு தலைவி கூறினாள். *(38-42)*

(வி-ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **391** ஆம் பாடலுக்குரிய விளக்கமாகும். பாடலில் தலைவன் விலைமாதராகிய பரத்தை யரோடு வையை ஆற்றில் புனல் விளையாடியதும், அதன்பின் அவர்களை அலங்கரித்துப் புணர்ச்சி செய்ததையும் தலைவி குறிப்பிட்டு அத்தகைய இன்பத்தைத் தன் வீடு தராது என்று கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. பாடலில் சிவபெருமான் சிறப்பாகப் பாம்பு உண்ட தவளையையும், புலி அடித்து உண்ட பசுவையும் பிழைக்குமாறு செய்த அருளும், பாம்பையும், புலித் தோலையும் அணியாக ஆடையாக அணிந்து கொண்ட சிறப்பும், முத்தொழிலையும் நடத்துகின்ற பெருமையும், காசி நகரத்தில் எழுந்தருளிய சிறப்பும் கூறப்பெற்றுள்ளது.

(சொ.ம்):

கரியோன் - கிருஷ்ணன், செய்முகன் - நான்முகன், கரும்பு - மன்மதனின் ஆயுதம், கோதை - மாலை, திரை - அலை, இறால் - தேன்கூடு, சேதா - பசு, திருந்தனர் - தாருகாவனத்து முனிவர்கள், கரமலர் - கைகள், முக்கவைச் சுடர்வேல் - திரிசூலம்.

91. உடன்பட உரைத்தல்

வேலிஅம் குறுஞ் சூல் விளைகாய்ப் பஞ்சினம்
பெரு வெள்ளடையில் சிறுகால் பட்டெடன,
நிறை நாண் வேலி நீங்கி, தமியே

Koviloor Digital Library

ஓர் உழி நில்லாது, அலமரல் கொள்ளும் என்
அருந் துணை நெஞ்சிற்கு உறும் பயன் கேண்மதி,
மண்ணுளர் வணங்கும் தன்னுடைத் தகைமையும்,
இருள் அறு புனலும், மெய்ப்பொருள் அறி கல்வியும்,
அமரர் பெற்று உண்ணும் அமுது உருக் கொண்டு
குறுஞ் சொல் குதட்டிய மழலை மென் கிளவியில்
விதலை உள் விளைக்கும் தளர்நடைச் சிறுவனும்,
நின் நலம் புகழ்ந்து உணும் நீதியும் தோற்றமும்
நுவருறத் தீர்ந்த நம் கவர் மனத்து ஊரன்,
'பொம்மல்அம் கதிர் முலை புணர்வுறும் கொல்?'' எனச்
சென்றுசென்று இரங்கலை, அன்றியும், தவிர்மோ --
(நெட்டுயிர்க் கருங் கால் தோல்முலைப் பெரும் பேய்
அமர் பெற்று ஒன்னலர் அறிவுறப் படர,
பேழ்வாய் இடாகினி கால் தொழுது ஏத்திக்
கையடை கொடுத்த வெள் நிண வாய்க் குழவி,
ஈமப் பெரு விளக்கு எடுப்ப, மற்று - அதன்
சுடு பொடிக் காப்பு உடல் துளங்க, சுரிகுரல்
ஆந்தையும் கூகையும் அணி ஒறுத்த,
ஓரி பாட்டு எடுப்ப, உவணமும் கொடியும்
செஞ் செவிச் சேவல் கவர் வாய்க் கழுகும்
இட்ட செய்பந்தர் இடைஇடை கால் என,
பட்டு உலர் கள்ளிஅம்பால், துயில் கொள்ளும்
சுள்ளிஅம் கானிடை, சுரர் தொழுது ஏத்த --
மரகதத் துழாயும், அந் நிறக் கிளியும்,
தோகையும், சூலமும், தோளில், முன்கையில்,
மருங்கில், கரத்தில், வாடாது இருத்தி,
பொர் வலி அவுணர் புகப் பொருது உடற்றிய
முக் கண், பிறை எயிற்று, எண் தோட் செல்வி,
கண்டு உளம் களிப்ப - கனை கழல் தாமரை
வானக - வாவியூடு உற மலர,
ஒரு நாள் எழு புவி உருவ, திண் தோள்
பத்துத் திசையுள் எட்டு அவை உடைப்ப --
ஒரு நடம் குலவிய திருவடி உரவோன்)
கூடல்அம் பதியகம் போற்றி
நீட நின்று எண்ணார் உளம் என நீயே.

Koviloor Digital Library

துறை விளக்கம் :

தலைவனின் பிரிவால் உள்ளம் உடைந்து தனிமையுற்று வருந்துகின்ற தலைவியை, தலைவன் பிரிவிற்காக நீ வருந்தாதே, விரைவில் வந்து சேர்வார் என்று தோழி, தலைவியின் பிரிவு உள்ளம் உடன் படுமாறு உரைத்தது.

பாடற் பொருள்:

முள்ளை உடைய இலவ மரத்தின் சிறிய கிளையில் உள்ள சூல் உதிர்த்த காயில் உள்ள பஞ்சு வெட்ட வெளியில் தென்றல் காற்றால் அகப்பட்டுச் சுழலுமாறு போல, நிறையும் நாணமு மாகிய காப்பு நீங்கித் தனியாக ஒருவழிப்பட்டு நில்லாமல் உழன்று கொண்டிருக்கின்ற எனது அரிய துணையாகிய நெஞ்சமானது (1-5)

உன்பால் பொருந்த அதனால் ஏற்பட்ட பயனை நீ கேட் பாயாக (என்று தோழி தலைவியிடம் கூறத் தொடங்கினாள்) மண்ணுலகத்தார் வணங்கும் தன்னுடைய பெருமையும், மாசற்ற அறிவும், உண்மைப் பொருளைத் தரும் கல்வியும், தேவர் உலகத்து அமுதத்தின் சுவையை ஒத்த இளம் சொல்லாகிய மழலைச் சொல்லால் உள்ளத்தில் வேட்கை விளைவிக்கும் தளர்நடை உடைய மைந்தனையும் (6-10)

உன்னைப் புகழ்ந்து பேசி உனது இன்பத்தை அனுபவித்த நிலையினையும் மாண்பினையும் முற்றும் துறந்த தலைவன், உன்னுடைய பூரித்த முலைகளை இப்பொழுது பிரிந்திருப்பதால் மீண்டும் வந்து தழுவுவனோ என்று அடிக்கடி வருந்தாது இருப்பாயாக. இரங்கி ஏங்குவதை விடுவாயாக (அது எதுபோல என்றால் (11-15)

நீண்ட நகமுள்ள கரிய காலினையும், வற்றிய தோல் கொண்ட முலையையும் உடைய பெரிய பேய்கள், போர்த்தொழில் கிடைத்துப் பகைவர் அறியுமாறு போர் நடைபெறும் இடம் செல்லவும்,

பெரிய வாயுள்ள இடாகினிப்பேய் பாதத்தை வணங்கித் துதித்து அடைக்கலமாகக் கொடுத்த வெள்ளிய தசை உணவைப் பற்றியிருக்கும் வாயை உடைய குழந்தை, மயானத்தில் எரிகின்ற

Koviloor Digital Library

பெரிய விளக்காலும், அம் மயானத்தின் பிணம் சுட்ட சாம்பல் பொடியாலும் வருந்த,

கடினமான குரலை உடைய ஆந்தையும் கோட்டானும் நாவினால் ஒலிக்க, முதுநரிகள் ஊளையிட, பருந்தும் காக்கையும் சிவந்த காதையும், பிளந்த வாயையும் உடைய சேவலுடன் பெண் கழுகுகளும்

சுடுகாட்டில் நடப்பெற்றிருக்கும் பிணப் பந்தரின் நடுவே காட்சிதரும் கால்களை ஒப்ப, பட்டு உலர்ந்த கள்ளி மரத்தின் சுள்ளியினிடத்தில் துயில்கொள்ளும் பாலை நிலத்தில் (16-26)

தேவர்கள் துதிக்க துளபமாலை, கிளி, மயில் இறகு, சூலம் இவற்றைத் தோளிலும், முன்கையிலும், இடையிலும், கையிலும் நீங்காமல் கொண்டு, போர்க்குணம் உடைய அரக்கர்கள் எதிர்த்த போது, அவர்களை அழித்து வெற்றி பெற்ற மூன்று கண்களும், பிறை போன்ற பல்லும், எட்டுத் தோள்களையும் உடைய காளியின் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட, (27 - 31)

சிவபெருமான் தன்னுடைய வேதச் சிலம்பு ஒலிக்கின்ற இரண்டு திருவடிகளில் ஒன்று தாமரைப்பூவாக ஆகாயத்தில் உள்ள கங்கையிடத்துப் பொருந்தி மலரவும், மற்றொரு திருவடியானது ஏழு பாதாளத்திற்கு அப்பால் சென்று நிற்கவும், திண்ணிய தோள்கள் பத்துத் திசைகளில் எட்டுத் திசையையும் தாமே கடந்து ஊடுருவவும், ஒப்பில்லாத நடனத்தைச் செய்தான். அத்தகைய இரண்டு திருவடிகளை உடைய சிவபெருமானது கூடல் நகரமாகிய திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளைப் போற்றி வழிபட நினையாதவரது உள்ளத்தைப் போல நீ வருந்தாதே என்று தோழி கூறினாள். (31-36)

(வி - ரை):

இது திருக்கோவையாரின் **315** ஆவது பாடலுக்கு விளக்கமாக அமைகிறது. பாடலின் முதற் பகுதியில் தலைவியின் வருத்தம் கண்டு வருந்துகின்ற தோழியின் உள்ளம் , தலைவியின் உள்ளத்தோடு உடன்பட்டுக் கூறுகின்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. தோழி முதலில் தலைவன் தன்னுடைய பெருமை முதலான அனைத்தையும் துறந்து, இரண்டு மனமுடையவனாய்

Koviloor Digital Library

வாழ்ந்தவன் என்று தலைவனைக் குறிப்பிட்டு, அதன்பின் தலைவன் தன்னைத் தழுவவில்லையே என்று வருந்தாதே. உன்னுடைய வருத்தம் எதுபோன்றது என்றால் சுடுகாடாகிய பாலை நிலத்தில் காளி மகிழும் வண்ணம் காலைத் தூக்கி ஆடிய இறைவன் மதுரையில் எழுந்தருளியுள்ளான். அவனை வணங்கா தவருடைய உள்ளம் எவ்வாறு துன்புறுமோ அதுபோல நீ துன்புறாதே. தலைவன் விரைவில் வருவான் என்ற குறிப்புப் பொருளைப் பாடல் கொண்டுள்ளது. இப்பாடலில் சிவபெரு மானின் சிறப்பாகக் காளியோடு சிவபெருமான் ஆடிய நடனத்தின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.

(சொ -ம்):

வேலி - வேலியில் அமைந்துள்ள முள்ளுடைய இலவ மரம், சிறுகால் - தென்றல், ஓர்உழி - ஓரிடத்தில், அலமர - சுழல, புலன் - ஐம்புலன் அறிவு, கிளவி - மழலைச் சொல், விதலை - நடுக்கம், கவர்மனம் - இரட்டைமனம், ஓரி - நரி, உவனம் - பருந்து, கொடி- காக்கை, செய்பந்தர் - பிணப்பந்தர், சுடர் - தேவர், செல்வி - காளி,

92. பரத்தையிற் பிரிவு உரைத்தல்

பெரு நிலத் தேவர்கள் மறை நீர் உகுப்ப
மற்று - அவர் மகத்துள், வளர் அவி மாந்த,
விடையோன் அருச்சனைக்கு உரிமையின், முன்னவன்,
அன்னவன் தன்னுடன் கடிகை ஏழ் அமர,
அன்றியும், இமையவர் கண் எனக் காட்ட,
ஆயிரம் பணாடவி அரவு கடு வாங்க,
தேவர் உண் மருந்து உடல் நீட நின்று உதவ,
உடல் முனி செருவினர் உடல்வழி நடப்ப,
நாரணன் முதலாம் தேவர்படை தோற்ற,
தண் மதிக் கலைகள் தான் அற ஒடுங்க,
எறிந்து எழும் அரக்கர் ஏனையர் மடிய,
மறையவன் குண்டம் முறைமுறை வாய்ப்ப,
அவன் தரும் உலகத்து அருந் தொழில் ஓங்க,
பாசுடல் உளை மா ஏழ் அணி பெற்ற
ஒருகால் - தேர் நிறைந்து இருள் உடைத்து எழுந்த

Koviloor Digital Library

செங்கதிர் விரித்த செந் திரு மலர்த் தாமரைப்
பெருந் தேன் அருந்தி, எப்பேர் இசை அனைத்தினும்
முதல் இசைச் செவ்வழி விதிபெறப் பாடி, அத்
தாது உடல் துதைந்த மென் தழைச் சிறை வண்டினம்,
பசுந் தாள் புல் இதழ்க் கருந் தாள் ஆம்பல்,
சிறிது, உவா, மதுவமும் குறை பெற அருந்தி, அப்
பாசடைக்கு உலகவர் பயிலாத் தாரியை
மருளொடு குறிக்கும் புனல் அணி ஊர!
(தானவரக்கு உடைந்து வானவர் இரப்ப,
உழல் தேர் பத்தினன் மகவு என நாறி,
முனி தடற் செல்வம் முற்றி, பழங் கல்
பெண் வர, சனகன் மிதிலையில் கொடுமரம்
இறுத்து, அவன் மகட் புணர்ந்து, எரிமழு இராமன்
வில் கவர்ந்து, அன்னை வினை உள் வைத்து ஏவ,
துணையும் இளவலும் தொடரக் கான் படர்ந்து,
மா குகன் நதி விட ஊக்கி, வனத்துக்
கராதி மாரீசன் கவந்தன் உயிர் மடித்து,
இரு சிறைக் கழுகினர்க்கு உலந்த கடன் கழித்து,
எறிவளி மகனை நட்டு. ஏழு மரத்தினுக்கு,
அரிக்கு, கருங் கடற்கு, ஒரொரு கணை விடுத்து,
அக் கடல் வயிறு அடைத்து, அரக்கன் உயிர் வெளவி,)
இலங்கை அவ் அரக்கற்கு இளையோன் பெறுக எனத்
தமது ஊர் புகுந்து முடி சுமந்தோர்க்கும்,
நான்முகத் தவர்க்கும், இரு பால் பகுத்த
ஒரு நுதற் கண்ணவன் உறைதரு கூடல்
தெளி வேற் கண் குறுந்தொடியினர் காணின் ---
நின்பால் அளியமும் நீங்கி,
இன்பும், இன்று ஒழிக்கும் எம் கால் தொடல், சென்மே.

துறை விளக்கம்:

பரத்தையர் பிரிவில் பிரிந்து வந்த தலைமகன் வாயில்கள் மூலமாகத் தலைவியின் ஊடலைத் தீர்க்க முனைந்தான். அதனை மறுத்தாள் தலைவி. என்றாலும் ஆற்றாமையை வாயிலாகக் கொண்டு தலைவன் தலைவியின் படுக்கை அறையில் புகுந்தான். அப்பொழுது தலைமகள் தலைவனின் பரத்தையற் பிரிவை உணர'த்தி,அவன் புணர்ச்சிக்கு மறுத்தாள் போல புணர்ச்சி கருதிக் கூறியது.

Koviloor Digital Library

பாடற் பொருள்:

பெரிய நிலவுலகத்துத் தேவர்களாகிய அந்தணர்கள் வேத ஒழுக்க யாகத்தில் நீரை இறைக்கவும், அவ் அந்தணரது வேள்விக் களத்தில் அவர்களால் கொடுக்கப் பெற்ற அவிப்பலியை உண் ணவும், இறைவனின் சிவபூசனைக்கு உரியவர்களாகி அவ் இறைவனோடு ஏழு நாழிகை அளவு பொருந்தி இருக்கவும், இவை அல்லாமல் இமைத்தல் இல்லாத சிவபெருமானின் மூன்று கண்களில் தான் ஒருவனாய் இருப்பதை யாவர்க்கும் காட்டவும், ஆயிரம் படங்களைக் கொண்ட பாம்புகளின் நஞ்சைக் கவரவும், தேவர்கள் உண்ணுகின்ற அமுதத்தை நெடுங்காலம் அத்தேகத்தில் இருக்கவும், உடலை விரும்பாத வீரர்கள் தன் உடலாகிய மண்டில நெறியே செல்லவும், திருமால் முதலாயின தேவர்கள் தங்கள் படைகளைக் காட்டவும், குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் கலைகள் (ஒளி) முழுமையும் தன்னிடத்தில் ஒடுங்கவும், கோபத் தோடு எழுகின்ற அரக்கர் முதலிய தீயோர் மாயவும், பிரமனது யாக குண்டம் முறைப்படி விளங்கவும், அப் பிரமனால் படைக் கப்பட்ட உலகத்தில் தொழில்கள் பெருகவும்,

பச்சைநிற உடலும், பிடரி மயிரும் கொண்ட ஏழு குதிரைகள் பூட்டப் பெற்ற ஒற்றைச் சக்கரத் தேரில் கிரணங்களைப் பரப்பி இருளைக் கிழித்து உதித்தனன் சூரியன். *(1-15)*

அச்சூரியன் மலர்த்தின சுரும்புகளுக்கு இடமாகிய தாமரை மலரில் இருந்த தேனை மிகவும் உண்டு, இசைகள் பலவற்றிலும் முதன்மை இசையாகிய செவ்வழிப் பண்ணைப் பாடி, அத்தாமரைப் பூந் தாதுக்கள் தமது உடலில் பரவியிருக்க, தளிர் போன்ற மென்மையான இறகுகளைக் கொண்ட வண்டின் கூட்டங்கள் பச்சைத் தண்டினையும், இதழ்களையும் கொண்ட செவ்வல்லிப் பூவிலும், கரிய தாளை உடைய நீரோற்பலப் பூவிலும் தோன்றிய சிறிய தேனை வளர்பிறை நாளில் நிறைய உண்டு, அப்பூக்களின் இலைகள் உலகத்தில் உள்ளோர் தன் வழியில் செல்ல மாட்டாதபடி மயக்கத்தைத் தரும் நீரால் வளப்ப முடைய ஊரனே, *(16-23)*

அரக்கர்களால் வருந்திய தேவர்கள் வேண்டத் தன்னுடைய ஓடுகின்ற தேரினால் பத்துத் திசைகளையும் வென்றவனாகிய

Koviloor Digital Library

தயரதனுக்கு மகனாகி அவதரித்து, விசுவாமித்திர முனிவரது யாகமானது நிறைவேறிடத் துணை நின்று, கௌதம முனிவரால் சபிக்கப் பெற்ற பழைய கல்லானது பெண் உருவாகிட, சனகன் என்னும் மன்னவனின் வில்லை ஒடித்து அவனுடைய மகளாகிய சீதையை மணந்து, எதிர்த்த பரசுராமனது வில்லை வளைத்து வாங்கி, கைகேயி தன் மனதில் வஞ்சனையை வைத்து அனுப் பியதால், தனது தேவியும் இளவலும் உடன்வரக் காட்டிற்குச் சென்று, பெரிய வேடனாகிய குகன் கங்கைக் கரையில் இருந்து கடத்துவிக்கக் கடந்து, காட்டில் கரன், மாரீசன், கவந்தன் என்ப வர்களது உயிரை வாங்கி, இரு சிறகுகளை உடைய சடாயுவிற்கு அந்திமக் கிரியை செய்து, வீரனாய் நின்ற சுக்ரீவனை நட்பாக்கி, மராமரம் ஏழிற்கும், வாலி என்னும் குரங்கிற்கும், பெரிய கடலுக் கும் தனித்தனியே ஓர் அம்புகளை எய்து, அக் கடலில் அணை கட்டி, இராவணனைக் கொன்று இலங்கை நகரத்தை வீடணன் என்னும் அவன் சகோதரன் பெற்றுக் கொள்வதற்கு உரியது எனக் கொடுத்து, தமக்குரிய அயோத்தியில் மீண்டும் வந்து முடிதரித்து அரசியல் நடாத்திய திருமாலுக்கும், *(24-38)*

நான்முகனுக்கும் தனது இரண்டு பாகத்தைக் கொடுத்தருளிய, ஒரு கண்ணை நெற்றியில் கொண்ட சோமசுந்தரப் பெருமான் வீற்றிருக்கின்ற மதுரையின்கண், வேல் போன்ற கண்ணும், சிறிய வளைகளை அணிந்த கைகளும் கொண்ட பரத்தையர், நீ என் னுடைய படுக்கை அறையில் இருப்பதைக் கண்டால் உம்மிடத்து அவர்கள் கொண்ட கருணை நீங்கி இப்பொழுதே அழியும். ஆதலால் எனது கால்களைத் தீண்டாது நீ போய்விடு என்று படுக்கை அறைக்கு வந்த தலைவனிடம் தலைவி (ஊடல் கொண்டு) கூறினாள். *(39 - 43)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **358**ஆவது பாடலுக்கு விளக்கமாகும். இப்பாடலில் சூரியனின் தோற்றத்தால் ஏற்படும் நிகழ்வுகள் கூறி, அந்தச் சூரியனின் கிரணத்தால் மலர்கள் விரிந்தும், பச்சிலைகள் வளப்பமாக விளங்கியும், நீரில் இறங்கி நடந்து செல்வோர்க்குத் தடைப்படுத்தி மயக்கத்தைத் தரும் நீர் வளம் மிக்க ஊரைச் சார்ந்த தலைவன், தலைவியின் படுக்கைக்கு

Koviloor Digital Library

வந்து தலைவியின் கால்களைத் தொட்டுத் தான் பரத்தையிற் பிரிந்த குற்றத்தை மன்னிக்க வேண்டிய பொழுது, இந்தக் காட்சியைக் கண்டால் மதுரை நகரத்துப் பரத்தையர்கள் தலைவனிடம் அன்பு செலுத்தாதவர்களாக ஆகிவிடுவார்கள்.ஆதலால் தன்னை விட்டு விலகத் தலைவி கூறுவதாகப் பாடல் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் சிறப்பாகத் திருமாலுக்கும் பிரமனுக்கும் தனது பகுதிகளைக் கொடுத்த சிவபெருமான் என்று கூறப்பெற்றுத் திருமாலைக் குறிக்கின்ற பொழுது இராமாவதாரத்தில் பிறப்பு முதல் அயோத்தியில் முடிசூடிய வரை நிகழ்ச்சிகள் சுருக்கமாகக் கூறப் பெற்றுள்ளன.

(சொ. - ம்):

மகம் - வேள்வி, அவி - வேள்விஉணவு, ஏழ்நாழிகை - பகற்பொழுது, பாசுடல் - பச்சைநிறஉடல், உளை - பிடரிமயிற், உவா - வளர்பிறை, நாறி - தோன்றி, பழங்கல் - அகலிகை, கொடுமரம் - வில், எரிமழுராமன் - பரசுராமன், அன்னை - கைகேயி, இளவல் - லட்சுமணன், இருசிறைக் கழுகு - சடாயு, எறிவளிமகன் - சுக்ரீவன், அரி - குரங்கு(வாலி), இளையோன் - வீடணன், இருபால் - இருபகுதி, அளியம்- - கருணை.

93. பாணனை வெருளுதல்

**உளம் நகைத்து உட்க ஊக்கும் ஓர் விருந்தினை,
குவளை வடி பூத்த கண் தவள வாள் நகைக்
குறுந் தொடி மடந்தை நம் தோழியும் கேண்மோ!
கவிர் அலர் பூத்த செஞ் செம்மை வில் குடுமி,
மஞ்சு அடை கிளைத்த வரிக் குறு முள் - தாள்
கூர் அரிவாளின், தோகைஅம் சேவற்
கொடியோன் குன்றம் புடைவளர் கூடல்,
கணிச்சி அம் கைத்தலத்து அருட் பெருங் காரணன்,
உலகு உயிர் மகவுடைப் பசுங் கொடிக்கு ஒருபால்
பகுந்து, உயிர்க்கு இன்பம் தொகுத்த மெய்த் துறவினன்,
முளரி நீர்ப் புகுத்திய பதமலர்த் தாள் - துணை
மணி முடி சுமந்த நம் வயல் அணி ஊரர் பின்,
வளர் மறித் தகர் எனத்திரிதரும் பாண்மகன்
எனக் குறித்து அறிகிலம் யாமே, எமது
மணி ஒளிர் முன்றில் ஒரு புடை நிலை நின்று,**

Koviloor Digital Library

அன்ன ஊரர் புல்லமும், விழுக் குடிக்கு
அடாஅக் கிளவியும், படாக் கரும் புகழும்,
எங்கையர் புலவியில் இகழ்ச்சியும், நம்பால்
தனது புன் புகழ் மொழி நீளத் தந்தும்,
ஒன்று பத்து ஆயிரம் நன்று பெறப் புனைந்து
கட்டிய பொய் பாப் புனைந்து நிற்கு உறுத்தின் --
பேர் எழிற் சகரர் ஏழ் எனப் பறித்த
முரிதிரை வடிக்கும் பரிதிஅம் தோழம்
காட்டையுள் இம்பரும் காணத்
தோட்டி நின்று அளக்கும் தொன்மை - அது பெறுமே.

துறை விளக்கம்:

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்கப பாணனை அனுப்பினான். அப் பாணனைத் தான் மறுத்த செய்தியைத் தோழிக்குத் தலைவி கூறுவதாகும்.

பாடற் பொருள்:

குவளை மலர் போன்ற கண்களையும், வெண்மையான ஒளி பொருந்திய பற்களையும், சிறிய வளையல்களையும் உடைய மடப்பம் மிக்க தோழியே, நான் கூறுவதைக் கேட்பாயாக. *(2-3)*

நம் உள்ளமானது நகைத்து வருந்தத் தலைவன் ஓர் விருந்தினை அனுப்பினான். *(1)*

(அவ்விருந்து பாணன் என்பதைப் பின்வரும் பகுதியில் குறிப்பிடுகின்றாள்)

ஒளி பொருந்திய சிவந்த குடுமியையும், இளமை நீங்காத வரி பொருந்திய முள் போன்று காட்சி தருகின்ற நகங்களைக் கொண்ட காலாகிய அரிவாளையும், இறகுகளையும் உடைய அழகிய கோழிக் கொடியைக் கையில் உயர்த்தியோனாகிய முருகப் பெருமானின் திருப்பரங்குன்றம் சூழ்ந்திருக்கின்ற மதுரையின் கண், மழுவாயுதத்தைக் கையிலே கொண்டு அருளைத் தருகின்ற பெரிய காரணனாக விளங்கி, உலகத்து உயிர்களை எல்லாம் உடைய உமாதேவிக்கு ஒரு பாகத்தைத் தந்தும், உலக உயிர்களுக்கு எல்லாம் இன்பத்தை வகுத்தருளிய உண்மைத் துறவியினது தாமரை மலரை நீரில் போக்கியவனுமாகிய, சோமசுந்தரக்

Koviloor Digital Library

கடவுளின் இரண்டு திருவடிகளைத் தன் தலைமேல் கொண்ட, வயல்வளம் கொண்ட ஊரனாகிய நம் தலைவனுடனே, தலைவனால் வளர்க்கப் பட்ட ஆட்டுக்கிடாய் போலத் திரிகின்ற பாணன் ஆவான் என்பதைக் குறிப்பால் நாம் அறிவோம். (4-14)

நம்முடைய மணிகள் பொருந்திய முற்றத்தில் ஒருசார் ஒளியாமல் நின்றான். அவன் நம் தலைவனது தகுதிக்கும், அவனது உயர்குடிப் பிறப்பிற்கும் உரியதல்லாத சொற்களை அதாவது புன்சொற்களை எம் தங்கையராகிய பரத்தையர் ஊடலில் சொல்லியதைப் போல இன்று நம்மிடத்தில் மிகுதியாகச் சொன்னான். (15-19)

ஒன்று, பத்து, ஆயிரமாக நாம் நம்பும்படி புனைந்து அவன் அலங்காரமாகக் கூறிய பொய்களின் விரிவை முழுதும் நான் உனக்குச் சொல்லப் புகுந்தால், மிகுந்த வலிமை பெற்ற சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் ஏழு என்ற எண்ணிக்கை யாகும்படி அகழ்ந்த பெரிய அலை வீசுகின்ற, சூரியன் உதிக்கின்ற கடலில் உள்ளே இருக்கின்ற பொருள்கள் எல்லாம் இவ்வுலகம் காணும்படிப் பெயர்த்து எடுத்துக் காட்டினால் எப்படி இருக்குமோ அவை போன்றதாகும் என்று தலைவி பாணனின் தூதையும், அவனின் பொய்யுரைகளையும் தோழியிடம் கூறினாள். (20-25)

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் 386 ஆவது பாடலுக்கு விளக்கமாகும். பாடலில் பாணனைப் பற்றிய வருணனை அமைந் துள்ளது. அவன் கூறிய பொய்யுரைகள் கடலில் தோன்றுகின்ற பொருள்களைப் போன்று மிகுதியானதாகும் என்று தோழியிடம் தலைவி கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. சிவபெருமானின் சிறப்புக்களாக அருள்தன்மை, உமையவளை ஒருபாகத்தில் கொண்டது, அகப்பொருள் தந்த துறவியினுடைய தாமரை மலரை நீரில் போக்கிய செயல் ஆகியவை கூறப்பெற்றுள்ளன.

(சொ- ம்):

உட்க - அஞ்ச, விருந்து - பாணன், கணிச்சி - மழுவாயுதம், முளரி - தாமரை, தகர் - ஆடு, புல்லம் - தகுதி, எங்கையர் - தங்கையராகிய பரத்தையர், தோட்டி - பெயர்த்து.

Koviloor Digital Library

94. பாணன் புலந்து உரைத்தல்

இலவு அலர் தூற்றி, அனிச்சம் குழைத்து,
தாமரை குவித்த காமர் சேவடித்
திருவினள் ஒரு நகை அரிதினின் கேண்மோ,
எல்லாம் தோற்ற இருந்தன தோற்றமும்,
தன்னுள் தோன்றித் தான் அதில் தோன்றாத்
தன்னிடை நிறையும் ஒரு தனிக் கோலத்து,
இரு வடிவு ஆகிய பழ மறை வேதியன்,
(நான்மறைத் தாபதர் முத் தழற்கனல் புக்கு
அரக்கர் துய்த்து உடற்றும் அதுவே மான,
பாசடை மறைத்து எழு முளரிஅம் கயத்துள்
காரான் இனங்கள் சேடு எறிந்து உழக்கும்
கூடற்கு இறையவன்) காலற் காய்ந்தோன்,
திரு நடம் குறித்த நம் பொருபுனல் ஊரனை,
எங்கையர் குழுமி, ‘எமக்கும் தங்கையர்ப்
புணர்த்தினன் பாண் தொழில் புல்லன்’என்று இவனை,
கோலின், கரத்தின், தோலின், புடைப்ப --
கிளை முள் செறித்த வேலிஅம் படப்பைப்
படர் காய்க்கு அணைந்த புன் கூழைஅம் குறு நரி,
உடையோர் திமிர்ப்ப, வரும் உயிர்ப்பு ஒடுக்கி
உயிர் பிரிவுற்றமை காட்டி, அவர் நீங்க
ஒட்டம் கொண்டன கடுக்கும் --
நாட்டவர் தடைய, மற்று, உதிர்த்து நடந்ததுவே!

துறை விளக்கம்:

பரத்தையற் பிரிந்து வந்த தலைவன் பாணனைத் தலைவியின் ஊடல் தீர்க்க அனுப்பினான். அப் பாணனை நோக்கிச் சினம் கொண்டு அவனைத் தலைவி விரட்டினாள். அதனால் பாணன் துன்புற்றுப் போயினான்.

பாடற்பொருள்:

இலவ மலரைப் பழித்து, அனிச்சம் பூவை வாடச் செய்து, தாமரைப் பூவைக் குவியச் செய்யும் அழகிய சிறிய கால்களை உடைய தோழியே, நகைப்புக்கு உரிய நிலையில் நடந்ததை நான் சொல்லுவேன் கேட்பாயாக. *(1-3)*

Koviloor Digital Library

உலகம் எல்லாம் தன் சந்நிதியின் கண் தோன்றுமாறு செய்தாலும் தான் அசையாது வீற்றிருக்கின்ற காட்சியும், அவையெல்லாம் தன்னிடத்தில் உண்டாகித் தான் அதில் தோயாத தனித்த நிலையில் எல்லா வற்றிலும் வியாபகமாக நிறைந்துள்ள தனது ஒப்பில்லாத ஓர் வடிவில், சிவம், சத்தி என்னும் இரு வடிவம் இருக்கப் பழமையான வேதப் பொருளாய் உள்ளவன், (இறைவன்) (4-7)

நால் வேதங்களை உணர்ந்த முனிவர்கள் செய்யும் மூன்று தீ பொருந்திய வேள்வியில் புகுந்து, அரக்கர்கள் அவிப்பலியை உண்டு அழித்த தன்மை போல, பச்சை இலைகளை மறைத்து மிகுதியாய்ப் பூத்து எழுந்த தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் எருமைக் கூட்டங்கள் வீழ்ந்து அழித்தன. (8 - 11)

அத்தகைய காட்சியை உடைய மதுரைக்கு நாயகன் அவ் இறைவன், அவன் எமனைச் சினந்தவன், அவனுடைய திரு நடனத்தைச் சிந்திக்காது நின்றவன், நல்ல வளப்பம் உடைய புனல் நாட்டை உடைய அத்தகைய நம் தலைவனுக்கு, எம் தங்கையாய் வாய்த்த பரத்தையை, இசைபாடும் தொழிலை உடைய கீழ் மகனாகிய இப் பாணன் சேர்த்து வைத்தவன் ஆவான். அதனைக் கருதி எம்முடைய தோழிகள் இப் பாணனைக் கம்பினாலும், கைகளாலும், கம்பிகளாலும் அடித்ததால் அவன் ஓடினான். அது எவ்வாறு இருந்தது என்றால், (12-16)

முள்ளைக் கொண்ட மூங்கிலால் அமைந்த வேலி சூழ்ந்த தோட்டத்தின்கண் காய்த்திருக்கும் கொடிக் காய்களைத் தின்பதற்காக வந்த சிறிய வாலினைக் கொண்ட நரியைத் தோட்டத்திற்கு உரியவர்கள் அடித்த பொழுது, மூச்சை அடக்கித் தான் இறந்தது போல் காண்பித்து அந்நரி விளங்க, அதன் உயிர் போய்விட்டது என்று தோட்டத்துக்காரர்கள் நீங்க, எழுந்து ஓடிய நரியை ஒக்கும். அந்நரியைப் போல் நம் தோழிமார்கள் தடுக்க அவர்களை விலக்கிக் கொண்டு பாணன் தப்பித்து ஓடினான். (17 - 22)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 387 ஆவது பாடலுக்கு விளக்கமாகும். தூது வந்த பாணனைத் தலைவியின் தோழி

Koviloor Digital Library

மார்கள் அடித்து விரட்டியதையும், அவன் அவர்களை விலக்கி ஓடியதையும் தலைவி தோழி ஒருத்தியிடம் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானின் பெருமை தத்துவ அடிப்படையில் கூறப் பெற்றுள்ளது. சிவபெருமான் உலகைப் படைத்து இயக்கினாலும் தான் இயங்காதவன். உலகப் பொருள்கள் அனைத்திலும் வியாபகமாய் இருப்பவன், தன்னுடைய ஒரே வடிவில் தானும் சத்தியுமாக இருவடிவத் தோற்றம் உடையவன் என்ற செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

(சொ- ம்):

இலவு - இலவம்பூ, தாபதர் - முனிவர், முத்தழல் - மூன்றுதீ (காருகபத்தியம், ஆகவநீயம், தக்கிணாரக்கினியம்)காலன் - எமன், தோலின் - கம்பி, படப்பை - தோட்டம்,

95. தோழிக்கு உரைத்தல்

வாய் வலம் கொண்ட வயிற்று எழு தழற்கு
ஆற்றாது அலந்து, காற்று எனக் கொட்புற்று,
உடைதிரை அருவி ஒளி மணி காலும்
சேயோன் குன்றகத் திருப் பெறு கூடல்,
கொடுஞ் சுடர் கிளைத்த நெடுஞ் சடைப் புயங்கன்
பவளம் தழைத்த பதமலர் சுமந்த நம்
பொருபுனல் ஊரனை, பொது என அமைத்த
அக் கடிகுடி மனையவர் மனை புகுத்தி,
அறுவாய் நிறைந்த மதிப்புறத்தோ என,
கரை தலை கிடைத்த இசை உளர் தண்டு எடுத்து,
அளிக் கார்ப் பாடும் குரல் நீர் வறந்த
மலைப் புள் போல நிலைக் குரல் அணந்து, ஆங்கு,
உணவு உளம் கருதி ஒளி இசை பாட,
முள் - தாள் மறுத்த முண்டகம் தலை அமைத்து
ஒரு பால் அணைந்த இவ் விரிமதிப் பாணற்கு,
அடுத்தன உதவுழி வேண்டும் --
கடுத் திகழ் கண்ணி! அக் கல்லை இக் கணமே.

துறை விளக்கம்:

தூது வந்த பாணன் நம்மை அறியாது தலைவனைத் துயில் எழுப்பப் பாடவந்தான் என்று தலைவி தோழிக்குக் கூறியது.

Koviloor Digital Library

பாடற்பொருள்:

ஒளி பொருந்திய மணிகளைத் தருகின்ற அலையை உடைய அருவிகள் விளங்கும் முருகனின் திருப்பரங்குன்றத்தைத் தன்பாற் கொண்டு விளங்கும் தெய்வத் தன்மை பெற்ற மதுரை நகரின்கண், நெருப்பைக் கிளறி விட்டாற் போன்ற நீண்ட செஞ்சடைகளைக் கொண்ட சோமசுந்தரப் பெருமானது, செம்மை நிறம் பொருந்திய திருவடிகளைத் தன் தலைமேல் கொண்ட நம் தலைவனை, யாவர்க்கும் பொது என்று அமைக்கப்பட்ட, அறநூல்களால் விலக் கப்பட்ட, வாழ்க்கையை உடைய பரத்தையரது வீடுகளில் சேர்த்து இப்பொழுது, *(3-9)*

கார்த்திகை நட்சத்திரம் முழுச் சந்திரனிடத்தில் உள்ளதோ என்று கூறும்படி ஒளி பொருந்திய, சுரைக்குடுவை போன்ற அமைப்பைத் தனது தலைப் பக்கத்தே கொண்ட, இசை நரம்புகளைப் பெற்று இசைவாணர்கள் அதைத் தடவுகின்ற பெருமை கொண்ட யாழைக் கையில் எடுத்து, *(9-10)*

வாயால் பாடும் தனது திறமையால் வயிற்றில் உண்டாகின்ற பசியாகிய தீயை அவித்தற்குத் தாங்க மாட்டாது, அலைந்து துன்புற்றுக் காற்றைப் போல் எங்கும் சுற்றி, பூவில் வண்டு பாடுவது போலப் பாடுகின்ற பாணன்,

தொண்டைநீர் வற்றிய மலைப் பறவையைப் போலத் தன்மை உடையதாய், வாயைத் திறந்து உணவுக்காக ஒள்ளிய பாட்டைப் பாடி, *(11- 13)*

முள்ளுடைக் காம்பை நீக்கித் தாமரை மலரைத் தலையில் சூடி, தலைவனின் ஒரு புறத்தில் வந்து நிற்கின்றான். இத்தகைய உயர்ந்த புத்தியுள்ள பாணனை, அழகிய கண்களை உடைய தாய் போன்ற தோழியே, இவனை விரட்டுவதற்கு இப்பொழுதே கல்லை நீ கொடுத்து உதவ வேண்டும் என்று தலைவி, பாணன் வந்ததைத் தோழியிடம் கூறுகிறாள். *(14-17)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் **375** ஆவது பாடலின் விளக்கமாகும். பாடலில் மதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக்

Koviloor Digital Library

கடவுளின் திருவடிகளைத் தன் தலையில் சூடிய தலைவனைப் பாடி எழுப்புவதற்கு - முன்பு தலைவனைப் பரத்தையிடம் சேர்ப்பித்த பாணன் வந்திருக்கிறான். அவனை அகற்றுவதற்கு எரியத் தோழி கல்லைத் தரவேண்டும் என்று தலைவி வேண்டுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவ பெருமானின் சடை சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

(சொ- ம்)

வயிற்றுஎழுதழல் - பசித்துன்பம், மனையவர் - பரத்தை, அறுவாய் - கார்த்திகை நட்சத்திரம், சுரை - சுரைக்காய், முண்டகம் - தாமரை.

96. பாங்கி அன்னத்தோடு அழுங்கல்

வெறி மறி மடைக்குரல் தோல் காய்த்தென்ன
இருக்கினும் இறக்கினும் உதவாத் தேவர்தம்
பொய் வழிக் கதியகம் மெய் எனப் புகாத
விழியுடைத் தொண்டர் - குழு முடி தேய்ப்ப,
தளிர்த்துச் சிவந்த தண்டைஅம் துணைத் தாள்
சேயோன் பரங்குன்று, இழை எனச் செறித்து,
தமிழ்க்கலை மாலை சூடி, தாவாப்
புகழ்க்கலை உடுத்து, புண்ணியக் கணவர்
பல் நெறிவளனின் பூட்சியின் புல்லும்
தொல் நிலைக் கூடல், துடிக் கரத்து ஒருவனை,
அன்பு உளத்து அடக்கி, இன்பம் உண்ணார் என,
சேவல் மண்டலித்துச் சினை அடைகிடக்கும்
கைதை வெண் குருகு எழ மொய்திரை உகளும்
உளைகடற் சேர்ப்பர், அளி விடத் தணப்ப,
நீலமும், கருங் கொடி அடம்பும், சங்கமும்,
கண்ணிற்கு, இடையில், களத்தில், கழிதந்து
அலர்ந்தும், உலர்ந்தும், உடைந்தும், அனுங்கலின்
வட்குடை மையல் அகற்றி, இன்பு ஒரு கால்
கூறவும் பெறுமே! ஆறு - அது - நிற்க --
இவள் நடைபெற்றும், இவட் பயின்று இரங்கியும்,
ஓர்உழி வளர்ந்த நீர இவ் அன்னம்
அன்று என, தடையாக் கேண்மை
குன்றும், அச் சூளினர் தம்மினும் கொடிதே.!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

உலகம் எல்லாம் துயில, தான் மட்டும் துயிலாமைக்குக் காரண மாகிய தலைவன் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தைச் சென்று தலைவர்க்குச் சொல்லாது, தன்னுடைய ஆண் பறவையாகிய சேவலோடு கூடி எவ்விதத் துன்பமும் இன்றி அன்னம் துயிலு கின்றதே என்று தலைவி அன்னப் பறவையோடு கூறுவது. இது தலைவி கூற்றாக மட்டும் அல்லாது தோழி கூற்றாகவும் கொள்ளலாம்.

பாடற்பொருள்:

வெறியாடலுக்குத் துணையாகும் ஆட்டின் கழுத்தில் பயனற்ற தோல் யாருக்கும் உதவாமல் காய்த்துத் தொங்குவது போல, வாழ்ந்தாலும் இறந்தாலும் எவ்உயிருக்கும் உறுதி தராத, பிற தெய்வத் தேவர்களது பொய் நெறியாகிய கதியினை உண்மை யென்று சொல்லாத, சிவஞானம் பெற்ற சிவனடியார்கள் கூடி வணங்கும் பொழுது, *(1-4)*

அவர்கள்தம் முடிகளால் தேய்ந்து சிவந்த காலில் தண்டை அணிந்த முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கும் திருப்பரங் குன்றத்தை அணிகலன் போல் பூண்டு,

முத்தமிழ் நூல்களாகிய மணிமாலைகளைத் தரித்த, நிலைத்த புகழாகிய ஆடையைக் கட்டி, புண்ணியம் என்னும் கணவனால் தரப்பெறும் பலவகைப் பட்ட வளப்பங்களைத் தனது மனத்திற் குள்ளே ஆபரணங்களாகப் பூண்டிருக்கின்ற உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட, தொன்மைப் பகுதியாகிய மதுரையில் எழுந் தருளியுள்ள துடியைக் கையில் ஏந்திய சிவபெருமானை, *(5-10)*

அன்பினால் தங்கள் உள்ளத்தில் எழுந்தருளச் செய்து பேரின்பத்தினை அனுபவிக்காதவரைப் போல விளங்கும், ஆண் பறவையுடன் கூடி முட்டையினை அடை காக்கின்ற தாழைப் புதரிலிருந்து வெள்ளிய நாரைப் பறவையானது அஞ்சி மேலே எழும்படி, அலைகள் வீசுகின்ற கடல் துறையை உடைய நம்முடைய தலைவன் பிரிவால் கொடுத்த சோர்வைத் தணிக்கும் பொருட்டு, *(11-14)*

Koviloor Digital Library

நீரோற்பல மலரும், அடம்பின் கொடியும், சங்கும் முறையே தலைவியின் கண்களுக்கும், தலைவியின் இடைக்கும், தலைவியின் கழுத்துக்கும் தோல்வி அடைந்து விரிந்தும், வாடி உலர்ந்தும், முத்துக்களை ஈன்றும் கெட்டன. ஆதலால் மயக்கத்தை நீக்கி அன்பாக ஒருமுறை தலைவனிடம் தலைவியின் வருத் தத்தைப் போய் சொல்லவும் கூடுமோ. *(15-19)*

தலைவியின் நடையைத் தன்னுடைய நடையாகப் பெற்றும், தலைவியோடு பழகியும், ஒரே இடத்தில் தலைவியோடு வளர்ந்தும், இத்தகைய தன்மையுடைய அன்னப் பறவை இவளுடன் கூடிப் பழகியது இல்லை என்னும்படி தன்னுடைய நட்பில் குறைந்து, நீங்கிய சத்தியத்தைச் செய்த தலைவனைப் பார்க்கினும் மிகவும் கொடியதாக இருக்கிறது. (ஏனென்றால் தலைவியின் குறையை அன்னம் போய்க் கூற முயற்சிக்க வில்லை) *(20 - 23)*

(வி - ரை):

இது திருக்கோவையாரின் **184** ஆவது பாடலின் விளக்க மாகும். பாடலில் உமையவளின் சிறப்பு முதலில் கூறப்பெற்று, பிறகு தலைவியின் வருத்தத்தைத் தலைவனிடம் சென்று கூறாத அஃறிணைப் பொருள்களின் நிலைமை கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்)

மறி - ஆடு, இருக்கினும் - வாழ்ந்தாலும், தமிழ்க்கலை - முத்தமிழ்நூல்கள், கலை - ஆடை, பூச்சி - அணிகலன், கைதை - தாழம்பூ, வட்குடை - மயக்கம், சூளினர் - சத்தியம் செய்த தலைவர்.

97. இரவு இடை விலக்கல்

முதுக் குறிப் பெண்டிர் வரத்து இயல் குறிப்ப,
வழி முதல் தெய்வதம் வரைந்து, மற்று - அதற்குப்
பருக்காடு உறுத்திப் பலி முதல் பராவ,
கிள்ளை அவ் அயலினர் நா உடன்று ஏத்தப்
பக்கம் சூழுநர், குரங்கம், மண் படப்
பெற்று உயிர்த்து அயரும் பொற்றொடி மடந்தைதன்
குரு மணி ஓவியத் திரு நகர்ப் புறத்தும்,

Koviloor Digital Library

கரியுடன் உண்ணார் பழிஉளம் ஒத்த
இருளுடைப் பெரு முகில் வழி தெரிந்து ஏகன்மின் --
(அரிமான் உருத்த நூற்றுவர் மதித்த
புடை மனச் சகுனி புள்ளிஅம் கவற்றில்
அத் தொழிற்கு அமைந்த ஐவரும் புறகிட்டு,
ஒலிவாய் ஓதிமம் எரிமலர்த் தவிசு இருந்து,
ஊடு உகள் சிரலைப் பச்சிற் அருந்தும்
பழனக் குருநாடு அணி பதி தோற்று,
முன்னுறும் உழுவலின் பன்னிரு வருடம்,
கண்டீரவத்தொடு கறையடி வளரும்
குளிர் நிழல் அடவி இறைகொண்டு அகன்றபின்,
அனைத்துள வஞ்சமும் அழித்து, நிரை மீட்சி
முடித்து, தமது முடியாப் பதி புக,
'ஊழ் முறையே எமக்கு உள மண் கருதிச்
சேறி' என்று இசைப்ப, செல் பணித் தூதினர்க்கு
ஒரு கால் அளித்த திரு மா மிடற்றோன்)
பாடல் சான்ற தெய்வக்
கூடல் கூடார் குணம் குறித்து எனவே.

துறை விளக்கம்:

தலைவன் தலைவியை இரவு நேரத்தில் சந்திக்கும் விருப்பத்தைத் தோழியிடம் கூறினான். அதற்குத் தோழி நாங்கள் வாழும் ஊர் அச்சத்தைத் தருகின்ற ஊர் ஆதலால் உம்முடைய ஊரிலிருந்து இரவு நேரத்தில் இங்கு வருதலைத் தவிப்பாயாக என்று அவன் இரவில் வருவதைத் தடுத்தாள் என்பது.

பாடற் பொருள்:

அறிவு முதிர்ந்த பெண்கள் வரம் கேட்டு நிற்கவும், வழி வழியாக வந்த தங்கள் வழிபடு தெய்வத்தை நினைந்து, அதற்கு வழிபாடு செய்வதற்காகக் காடுபலி கொடுத்துப் பெண்கள் போற்றுதலைச் செய்யவும், அவ்வாறு வணங்குவதற்குரிய நிலத்திற்கு அயலில் உள்ள சுற்றத்தார் நாக்குழறி அத் தெய்வத்தைப் போற்ற, நான்கு பக்கத்திலிருந்தும் வந்து சூழ்ந்தாராக. (அத்தகைய வழிபாடு நடக்கின்ற) *(1-5)*

Koviloor Digital Library

மான் ஒன்று நிலத்தில் விழுமாறு கருக்கொண்டு ஈன்ற அருமையான வள்ளியம்மையினது அழகு பொருந்திய வடிவத்தை ஒத்த உனது நகரத்திலிருந்து தலைவனே, விருந்தினர்களுடன் உண்ணாத கள்ளமனம் கொண்டவர்களின் உள்ளத்து இருளைப் போல, மேகங்களால் சூழப்பெற்று விளங்கும் இந்த இரவில் நீ வாராதிருப்பாயாக. *(6 -9)*

சிங்கம் போல் சினந்த துரியோதனன் முதலிய நூற்றுவரால் நன்கு மதிக்கப் பட்ட தீய மனம் கொண்ட சகுனி என்பவனால், புள்ளி பொருந்திய சூதாடல் காரணமாக ஐவேறுபட்ட தொழில் களில் சிறந்த பாண்டவர் ஐவரும் தோற்று, அன்னப் பறவைகள் செந்தாமரையாகிய இருக்கையின் கண் இருந்து ஒலிக்க, அந்த இடத்தில் சிச்சிலிப் பறவை சிறிய இறால் மீனை அருந்த. வயல்கள் சூழ்ந்த குருநாடாகிய தங்களுடைய நகரத்தை இழந்து, *(10-15)*

முன் செய்த வினையின் காரணமாகப் பனிரெண்டு ஆண்டுகள் சிங்கமும் யானையும் ஒன்றாய் வாழுகின்ற மரங்கள் தரும் நிழலால் குளிர்ச்சியான வனத்தில் தங்கியிருந்து, அதன்பின் அஞ்ஞாத வாசம் கழிந்து, அவ்வப்பொழுது நூற்றுவரால் கொடுக் கப்பட்ட வஞ்சனை முழுவதும் கெடுத்து, விராட நாட்டுப் பசுக் களை மீட்டு வாழ்ந்து, பின் கேடில்லாத தங்கள் பதியைக் கைக்கொள்ள *(16-20)*

மனு முறைப்படி எமக்கு உரித்தான பூமியைப் பெற்றுத் தருவாய், தேவரீர் நீ தூது செல் என்று பாண்டவர் வேண்டுதலின், அப்பணி முடிக்கச் சென்ற தூதுவராகிய கண்ணனுக்கு (திரு மாலுக்கு) தமது ஒரு பாகத்தை அளித்த, இருள் பொருந்திய கண்டத்தோடு சிவபெருமான் எழுந்தருளியுள்ள, பெருமை நிறைந்த, தெய்வத் தன்மையுடைய மதுரை நகரத்தைச் சென்று அடையாதவரின் குணத்தைப் போல, கருமையான இரவில் நீ வாராது ஒழிவாயாக என்று தோழி தலைவனை இரவுக்குறி விலக்கினாள் *(21 -25)*

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 149 ஆவது பாடலின் விளக்கமாகும். பாடலில் தலைவனின் ஊர் சிறப்பிக்கப்

Koviloor Digital Library

பெற்றுள்ளது. அதாவது கடவுளைப் போற்றுகின்ற பதி என்று கூறப் பெற்றுள்ளது. அப்படிப் பட்ட பதியிலிருந்து இரவுப் பொழுதில் தலைவன் வரவேண்டாம் என்று தோழியால் கூறப் பெற்ற பொருள் அமைந்துள்ளது. பாடலில் சிவபெருமானின் சிறப்பு திருமாலுக்கு ஓர் பாகத்தை அளித்த திருவிளையாடலால் கூறப் பெற்றுள்ளது. திருமாலைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது பாண்டவர்களுக்குத் தூதாகச் சென்ற செய்தி பாரதக் கதையின் சுருக்கத்தைத் தந்து கூறப் பெற்றுள்ளது. இப்பாடல் மகாபாரதக் கதையின் சுருக்கத்தைப் பெற்றுள்ள சிறப்பினைக் கொண்ட தாகும்.

(சொ - ம்):

முது - பேரறிவு, வழிமுதல் தெய்வம் - வழிபடு தெய்வம், பருக்காடு - பெருங்காடு, கிள்ளை - கிளை (சுற்றம்) , குரங்கம் - மான், கரி - சாட்சி (விருந்தினர்), அரிமான் - சிங்கம், புடைமனம் - மாறுபட்ட மனம், ஐவர் - பஞ்சபாண்டவர், ஓதிமம் - அன்னப் பறவை, எரிமலர்த் தவிசு - தீப்போன்ற நிறமுடைய தாமரையாகிய இருக்கை, சிரலை - சிச்சிலிப்பறவை, குருநாடு - பாண்டவரின் குரு தேசம், கண்டீரவம் - சிங்கம், கறையடி - யானை, ஊழ்முறை - மனுமுறை, தூதினர் - கண்ணன்,

98. பருவம் குறித்தல்

அளிகள் பாட்டு எழுப்ப, புறவு பாட்டு ஒடுங்க,
காந்தள், அம் கடுக்கை, கனல், தனம், மலர,
கோடல் ஈன்று கொழு முனை கூம்ப,
பிடவமும் களவும் ஒரு சிறை பூப்ப,
வான்புறம் பூத்த மீன் பூ மறைய,
கோபம் ஊர்தர மணி நிரை கிடப்ப,
தென்கால் திகைப்ப, வடகால் வளர,
பொறி விழிப் பாந்தள் புற்று அளை வதிய,
வரி உடல் ஈயல் வாய்தொறும் எதிர்ப்ப,
இடிக்குரல் ஆன் - ஏற்றினம் எதிர் செறுப்ப,
பொறிக் குறி மட மான் சுழித்தலைக் கவிழ,
முடை உடல் அண்டர் படலிடம் புகுத,

Koviloor Digital Library

கோவியர் அளையுடன் குலனொடு குளிர்ப்ப,
காயாக் கண்கொள, முல்லை எயிறு உற,
முசுக்கலை பிணவுடன் முழையுறை அடங்க,
கண மயில் நடன் எழ, காளி கூத்து ஒடுங்க,
சாதகம் முரல் குரல் வாய்மடை திறப்ப,
மாக் குயில் மாழ்கிக் கூக்குரல் அடைப்ப,
பனிக் கதிர் உண்ணச் சகோரம் பசிப்ப,
உடை நறவு உண்டு வருடை வெறுப்ப,
அகில் சுடு பெரும் புனம் உழுபதன் காட்ட,
வெறி விழிச் சவரர் மா அடி ஒற்ற,
மணந்து உடன்போக்கினர்க்கு உயங்கு வழி மறுப்ப்,
புலிக் குரல் எயிற்றியர் பூவினில் பரப்ப,
குழலிஅம் கதிர்பெறத் திருமலர் அணங்க,
இனத்தொடு கயிரவம் எதிரஎதிர் மலர,
குமரியர் காமமும் கூவலும் வெதுப்புற,
நிலமகள் உடலமும் திசைகளும் குளிர,
ஒலி கடல் இப்பி தரளம் சூல் கொள,
இவை முதல் மணக்க எழுந்த கார் கண்டை,
வறுநீர் மலர் என மாழ்கலை, விடு மதி ---
(மறை அடி வருத்திய மறைவனத்து, ஒரு நாள்,
மணிச் சுடர் நறு நெய் கவர் மதிக் கருப்பைக்கு,
இரு வகை - ஏழ் எனும் திரு உலகு அனைத்தும்
கொடுத்தவன் கூடல் வழுத்தினர் போல)
இரு புறம் போற்ற ஒரு தேர் வரத்தினர்க்கு
ஒன்னலர் முற்றி ஒருங்குபு படர,
பாசறை சென்ற நாள் நிலம் குழிய
எண்ணி, விரல் தேய்ந்த செங் கரம் கூப்புக --
கொய்தளிர் அன்ன மேனி
மொய் இழை பூத்த கவின் மலர்க் கொடியே!

துறை விளக்கம்:

பிரிந்து சென்ற தலைவன் தான் வருவதற்குக் குறித்த கார்காலப் பருவம் வந்தது என்று தலைவி வருந்தினாள். அவ்வாறு வருந்துகின்றவளுக்கு இது கார்காலம் அல்ல என்று தோழி பருவம் காட்டி வற்புறுத்தியது.

Koviloor Digital Library

பாடற் பொருள்:

கொய்த தளிரைப் போலக் காட்சி தரும் மேனியிடத்து அழகு மிக்க அணிகலன்களாகிய பூக்கள் மலர்ந்துள்ள மெல்லிய பூங்கொடியே (தலைவியே) *(40-41)*

வண்டுகள் பாடத் தொடங்க, புறாக்கள் குரலோசை அடங்க, செங்காந்தள் பூவும், அழகிய கொன்றைப் பூவும் முறையாக நெருப்பு போலவும், பொன் போலவும் பூக்க, வெண்காந்தள் அரும்பிக் கலப்பையின் கொழுமுனை போல் மேலே கூம்பி நிற்க, பிடவஞ் செடிகள் நிறைந்து மலர, *(1-4)*

விண்ணிடத்துத் தோன்றிய நட்சத்திரங்களாகிய மலர்கள் மறைய, இந்திரகோபப் பூச்சி திரிய, மணித்திரள்கள் அசை வின்றிக் கிடக்க, தென்றல் காற்று அடங்கி வாடைக் காற்றுத் தலையெடுக்க, கண்ணில் அனல்பொறியைச் சிந்துகின்ற பாம்புகள் புற்றில் ஒடுங்க, *(5 -8)*

உடலில் வரிகளைக் கொண்டுள்ள ஈசல்கள் எல்லாத் திசை களிலும் எதிர்ப்பட, இடியோசைக்கு எதிராக எருதுகள் முழங்க, புள்ளிகளைக் கொண்ட உடலை உடைய இளமான்கள் தலை கவிழ, நாற்றம் பொருந்திய உடலைக் கொண்ட இடையர்கள் படலால் மூடப் பெற்ற வீடுகளில் புகுந்திட, *(9-12)*

இடைச்சியர் தங்கள் இனத்துடன் தயிர்ப்பானை குளிர்வது போல குளிரை அடைய, காயா மலர்கள் கண் போன்று மலர, முல்லைச் செடிகள் பெண்களின் பற்கள் போல அரும்ப, ஆண் முசுக்களாகிய குரங்குகள் தங்கள் பெண் குரங்குகளுடன் மலைக் குகையில் அடங்க, மயில் கூட்டங்கள் நடனம் செய்ய, காளியின் கூத்து ஒடுங்க, வானம்பாடிப் பறவைகள் வாய்திறந்து பாட, மாமரத் தில் உள்ள குயில்கள் மயங்கிக் குரலோசை அடங்க, *(13-18)*

சந்திர கிரகணத்தில் உள்ள குளிர்ச்சியைச் சகோரப் பறவைகள் உண்ணக் காத்திருக்க,உடைந்த தேனைக் குடித்த வரையாடுகள் வெறுப்புக் கொள்ள, அகில் மரங்களை வெட்டிப் பரந்து பட்டுக் காணப்படும் தோட்டங்கள் உழுவதற்குப் பருவத்தைக் காட்ட, வெறித்த கண்களை உடைய மறவர்கள் மிருகங்களின் அடிச் சுவட்டைப் பார்க்க, தலைவியருடன் காட்டு வழி செல்பவர்

Koviloor Digital Library

களுக்குப் போகும் வழியில் அவர்களைத் தடுக்க, புலி நகம் அணிந்த கழுத்தினை உடையக் குர மங்கையர் செல்லும் வழியில் சஞ்சரிக்க, காலைக் கதிரவனின் ஒளிக் கற்றையைப் பெறுவதற் காகத் தாமரை மலர்கள் வாடியிருக்க, ஆம்பல் மலர்கள் தம் இனத்தோடு பார்க்கும் இடந்தோறும் மலர்ந்திருக்க, *(19 -26)*

காமமிக்க சிறுமியர்க்குக் கிணற்றுநீர் சுட, பூமாதேவியின் சரீரமும் சந்திரனும் குளிர, ஒலிக்கின்ற கடலில் முத்துக்கள் கருப்பம் கொள்ள ஆகிய இவைகள் தோன்றும்படி *(27-30)*

வந்த கார்காலத்தைத் தலைவியே நீ கண்டாய். வற்றிய நீரில் பூத்திருக்கும் மலர்கள் வாடுவதைப் போல நீ உள்ளம் வாடு கின்றாய். அதனை விட்டு விடுவாயாக. *(30-31)*

வேதங்கள் பாத பூசை பண்ணிய திருமறைக் காட்டில் முன்னொரு நாளில் விளக்கின் நெய்யை உண்ணும் எண்ணம் கொண்ட எலிக்கு, மேலும் கீழுமாகிய பதினான்கு உலகம் முழுவதும் அருளாகக் கொடுத்தருளிய, சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியிருக்கும் மதுரைத் திருப்பதியை வாழ்த்துகிறவர்கள் போல, பகைவரை வென்று ஒப்பில்லாத தேர்மேல் தலைவன் வர,

இருபக்கத்திலும் போற்றுதலைச் செய்யும் சேனைகள் நெருங்கிச் சூழ, முன்னர் பாசறைக்குத் தலைவன் போகிய நாள் களை எண்ணி எண்ணித் தேய்ந்த விரல்கள் கொண்ட செங்கை களால் கூப்பி இறைவனை வாழ்த்துவாயாக என்று தோழி தலைவியிடம் கூறினாள். *(32-39)*

(வி - ரை)

இப்பாடல் திருக்கோவையாரின் **326** ஆவது பாடலுக்கு விளக்கமாகும். பாடலில் கார்காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் பெரிதாகக் கூறப்பெற்றுள்ளன. சிவபெருமானின் சிறப்பாகத் திருமறைக் காட்டில் விளக்கில் உள்ள நெய்யை உண்ண வந்த எலி, திரியைத் தூண்டி எரிய வைத்ததால் சிவபெருமான் அந்த எலிக்கு அருளியது பெருமையாகக் கூறப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ - ம்):

அளி - வண்டு, புறவு - புறா, கோபம் - ஒருவகைப் பூச்சி, பாந்தள் - பாம்பு, ஆன்ஏறு - எருமைக்கடா, அண்டர் - மறவர், கோவியர் - இடைக்குலப் பெண்கள், சகோரம் - பறவை, மறைவனம் - திருமறைக்காடு, கருப்பை - எலி,

99. நெறி விலக்கிக் கூறல்

வனப்புடை அனிச்சம் புகை மூழ்கியது என,
இவ் அணங்கு, அவ் அதர்ப் பேய்த்தேர்க்கு இடைந்தனள்,
தென் திசைக் கோமகன் பகடு பொலிந்தன்ன
கறையடிச் சென்னியின் நக நுதி போக்கி,
குருத்து அயில் பேழ்வாய்ப் பல் படைச் சீயம்
அதர்தொறும் குழுவும், அவற்றினும் மற்று - அவன்
கடுங்கால் கொற்றத்து அடும் தூதுவர் எனத்
தனி பார்த்து உழலும் கிராதரும் பலரே,
ஒரு கால் இரதத்து எழு பரி பூட்டி
இரு வான் போகிய எரிசுடர்க் கடவுள்,
'மாதவர் ஆம்' என, மேல்மலை மறைந்தனன்,
மின் பொலி வேலோய்!(அன்பினர்க்கு அருளும்
கூடற் பதி வரும் ஆடற் பரியோன்,
எட்டு - எட்டு இயற்றிய கட்டு அமர் சடையோன்
இரு சரண் அடைந்த மறுவிலர் போல)
அருளுடன் தமியை ஆடினை ஐய!
தண்ணீர்' வாய்த் தரும் செந் நிறச் சிதலை
அதவு உதிர் அரிசி அன்ன செந் தினை
நுண் பதம், தண் தேன், விளங்கனி, முயல் - தசை,
வெறிக் கண் கவைஅடிக் கடுங் கால் மேதி
அன்புமகப் பிழைத்துக் கல்லறைப் பொழிந்த
வறள்பால், இன்ன எம்முடை உள அயின்று,
கார்' உடல் அனுங்கிய பைங் கண் கறையடி
சென்னி தூக்கி நின்றன காட்டும்
நெடு மரை அதள் வேய் சில் இடக் குரம்பையில்,
மற்று - அதன் தோலில் உற்று, இருவீரும்
கண் படுத்து, இரவி கீறுமுன்
எண்பட நும் பதி ஏகுதல் கடனே.!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

தலைவனும் தலைவியும் உடன் போக்கு செல்கின்றார்கள். அவர்கள் செல்லும் வழியில் இடையில் அவர்களைக் கண்டோர் இனிவரும் வழியின் கொடுமை கூறி, தலைவி இப்பொழுது வாடி யிருக்கிறாள், ஆதலால் தலைவனே ஒருபொழுது இங்கு தங்கிச் செல்லுங்கள் என்று அவர்கள் செல்லும் வழி விலக்கி (நெறி - வழி) கூறுவது.

பாடற்பொருள்:

மின்னலைப் போன்ற விட்டு விட்டு ஒளியைக் காட்டுகின்ற வேலினைக் கையில் உடையவனே *(12)*

அழகு பொருந்திய அனிச்ச மலரானது பனிப் புகையால் மூடப்பட்டது போல இத்தலைவி நீங்கள் வந்த பாலை வழியே கண்ட கானல் நீருக்கு அஞ்சினாள். *(1-2)*

தென்திசைக் கடவுளாம் எமனுடைய எருமை பொலிவுடன் தோன்றுவது போலத் தோன்றி, யானையின் மத்தகத்தில் (முகத்தில்) தன்னுடைய கூரிய நகங்களை அழுத்தி மூளையை உண்ணுகின்ற பெரிய வாயையும், படைக் கருவி போல் கூரிய பல்லையும் உடைய சிங்கங்கள் இனி வழிதோறும் காணப்படும். மேலும் அவைகளைக் காட்டிலும் கொடியவர்களாகிய - எமனுடைய வேகமாக நடை யையும் வெற்றியையும் உடைய கொல்லுகின்ற தூதர்கள் போன்று வழிச் செல்வோராது தனிமையை நோக்கிக் காத்துத் திரிகின்ற கொலை மறவர்கள் பலரும் திரிவர். *(3 - 8)*

ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட தேரில் ஏழு குதிரைகளைப் பூட்டி வானத்தே செலுத்துகின்ற கிரணங்களை உடைய சூரியனும், மாதவ முனிவர்கள் போல மேற்கு மலையில் ஒளிந்தான். *(9-11)*

மெய்யன்பராகிய திருவாதவூரார் பொருட்டு மதுரை யம்பதியில் எழுந்தருளி வேதக் குதிரையை உடைய சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் செய்து அருளினான். அழகு பொருந்திய சடையை உடைய அவ் விறைவனது இரண்டு திருவடிகளையும் அடைக்கலமாக அடைந்த தூயோர் போலக் காட்சி அளிக்கின்ற நீயும் வாடியுள்ளாய். *(12-16)*

Koviloor Digital Library

எனவே குளிர்ச்சியாகிய நீரினைத் தன் வாயால் உமிழ்கின்ற செம்மை நிறமுள்ள கரையானும்(ஈசலும்) அத்தி விதையை ஒத்த செவ்விய தினையால் ஆகிய சிறிய சோறும், சுவையுள்ள தேனும், விளாம்பழமும், முயல் இறைச்சியும்,

வெறித்த கண்களையும், பிளந்த குளம்பினையும், விரைந்து செல்லும் நடையினையும் உடைய காட்டெருமைகள் தமது கன்றுகளை நினைத்து, அவற்றைக் காணாமையால் பாறைகளில் அமைந்த குழிகளில் சொரிந்த பால் உலர்ந்த கட்டியும் ஆகிய இவைகள் எங்கள் இல்லத்தில் உள்ளன. அவற்றை நீங்கள் உண்டு

(17 - 22)

மேகத்தைத் தனது உடலின் வண்ணத்தால் கெடுத்த, சிறிய கண்களை உடைய யானை தலையைத் தூக்கி நின்ற தன்மையைக் காட்டுகின்ற, பெரிய மானின் தோலால் கூரை வேய்ந்துள்ள நெருக்கமான இடத்தில் உள்ள எங்கள் வீட்டினிடத்து, மான் தோலாகிய பாயில் இன்றைய இரவில் இருவரும் துயில்வீர்களாக. துயின்று சூரியனால் இருள் விலகுவதற்கு முன்னே உமது எண்ணத்திற்கேற்ப உமக்குரிய ஊருக்குச் செல்லுதல் முறைமை யாகும் என்று தலைமக்களை வழியில் கண்டவர்கள் கூறினார்கள்.

(23 - 28)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 218 ஆவது பாடலின் விளக்கமாகும். பாடலில் தலைவனும் தலைவியும் செல்லுகின்ற வழியில் அவர்களைக் கண்டவர்கள் தலைவியின் தளர்ச்சியையும், இனிச் செல்லும் வழியில் காணுகின்ற சிங்கம், மறவர்களின் நட மாட்டத்தையும், இரவு நேரத்தையும் தலைவனின் வாட்டத்தையும் குறிப்பிட்டு இனி நடந்து செல்ல இயலாது, ஆதலால் சுவையுள்ள உணவை உண்டு, மான் தோல் பாயில் உறங்கி விடிந்த பிறகு செல்க என்று கண்டோர் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. சிவபெருமானின் பெருமையாக மதுரை நகரில் அன்பராகிய மணிவாசகருக்காக இறைவன் நடத்திய திருவிளையாடற் செய்தி குறிப்பாகக் கூறப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

(சொ- ம்)

புகை - பனிப்புகை, அணங்கு - தலைவி, பேய்த்தேர் - கானல் நீர், தென்திசைக் கோமகன் - எமன், பகடு - எருமை, கறையடி - யானை, குருத்து - மூளை, சீயம் - சிங்கம், அதர் - வழி, கிராதர் - கொலை மறவர், அன்பினர் - மணிவாசகர், சிதலை - கரையான் எனும் ஈசல், அதவு - அத்தி, கல்லறை - கல்குழி, குரம்பை - வீடு, கண்படுத்து - துயின்று.

100. ஆறு பார்த்து உற்ற அச்சக் கிளவி

வெறிக் குறுங் கதுப்பின் வெள் எயிற்று எயிற்றியர்,
செம் மணி சுழற்றித் தேன் இலக்கு எறிதர,
பெருக்கெடுத்து இழிதரும் வெள்ளப் பிரசக்
கான் யாறு உந்தும் கல்வரை நாட!
சொல் தவறு உவக்கம் பித்தினர் சேர் புலன்
சிறிது இடைத் தெருள்வதும் உடன்உடன் மருள்வதும்
ஆம் எனக் காட்டும் அணி இருள் மின்னலின்,
நிணம் புணர் புகர் வேல் இணங்கு துணையாக,
காமம் ஆறுள் கவர்தரும் வெகுளுநர்
படிறு உளம் கமழும் செறிதரு தீ உறழ்
கொள்ளி வாய்க் குணங்கு, உள்ளுதோறு இவறிய
மின்மினி உமிழும் துன் அலர் கள்ளியை,
'அன்னை!' என்று அணைதரும் அரை இருள் யாமத்து --
கடுஞ் சுடர் இரவி விடும் கதிர்த் தேரினை,
மூல நிசாசரர், மேல் நிலம் புடைத்து,
துணைக் கரம் பிடித்தெனத் தோற்றிடும் பொழில் சூழ்
கூடல் பதி வரும்) குணப் பெருங் குன்றினன்
தாமரை பழித்த இரு சரண் அடையாக்
கோளினர் போலக் குறி பல குறித்தே,
ஐந்து அமர் கதுப்பினள் அமைத்தோள் நசைஇ,
தருவின் கிழவன் தான் என நிற்றி,
நின் உயிர்க்கு இன்னல் நேர்தர, திருவின் --
தன் உயிர்க்கு இன்னல் தவறு இல! ஆ! ஆ!
இரண்டு உயிர் தணப்பு என எனது கண் புணர, இக்
கொடு வழி, இவ் வரவு, என்றும்
விடுவது நெடும் புகழ் அடுவேலோயே!

Koviloor Digital Library

துறை விளக்கம்:

சிறைப்புறமாக (ஓரத்தில் நின்று) தலைவியின் மீது தான் கொண்ட காதலைக் கூறுகின்ற தலைவனை நோக்கித் தோழி இரவு நேரத்தில் தலைவியைக் காண்பதற்காக நீ வருவாயானால் வருகின்ற வழி மிகவும் துன்பம் தருகின்ற வழியாகும். அதனால் உன் உயிருக்குக் கேடு விளையும். அக்கேட்டால் தலைவியின் உயிரும் கேடு அடையும். ஆதலால் இருவரின் கேட்டினைக் காணுகின்ற நிலையில் நான் இல்லை. இரவில் நீ வரவேண்டாம் என்று அஞ்சிக் கூறியது.

பாடற்பொருள்:

மணம் பொருந்திய சிறிய கூந்தலையும், வெண்மையான பற்களையும் கொண்ட வேடர் மகளிர் தங்கள் கையில் கொண்ட மணிகளைக் கவணில் வைத்துத் தேன் கூட்டின் மீது எறிதலால் தேனடை கிழிந்து, பெருகி வழியும் தேன் வெள்ளமானது காட்டாற்றில் கலந்து வருகின்ற மலைநாட்டை உடைய தலைவனே, ***(1-4)***

பயனற்ற சொற்களைச் சொல்லுவதில் மகிழ்கின்ற பித்தருடைய அறிவானது சிறிது தெளிந்தும் மீண்டும் மயக்கத்தைத் தருவது போல, தோன்றி மறைகின்ற மின்னலைப் போல ஒளியைத் தோற்றி, தசை நாற்றம் உள்ள வேற்படை ஒன்றை மட்டும் தனக்குத் துணையாகக் கொண்டு, ***(5 -8)***

காமம் முதலிய ஆறு குணங்களில் ஒன்றான அறிவை வேறுபடுத்துகின்ற கோபத்தைக் உடையவர்களது, குற்றம் பொருந்திய உள்ளத்தில் எழுகின்ற வெம்மையாகிய தீப்போன்று, கொள்ளிவாய்ப் பிசாசுகள் நீ வரும் இடந்தோறும் மின்மினி ஒளி காட்டுகின்ற சுடுகாட்டில், மலர் நிரம்பிய கள்ளி மரங்களை அன்னையாக எண்ணி, அடைந்து தங்குகின்ற நள்ளிரவாகிய பெரும் பொழுதில், ஒளி பொருந்திய கரணங்களை உடைய சூரியன் நடத்துகின்ற தேரினை, தீமைகளுக்கு எல்லாம் மூலமாக இருக்கின்ற அரக்கர்கள் விண்ணுலகத்தைக் கெடுத்து, தங்கள் இரு கைகளாலும் அதனைப் பிடித்தாற் போல இருள் தோன்றுகின்ற சோலை சூழ்ந்துள்ள, ***(9-16)***

மதுரையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அருட் குணங்களால் பெரிய மலையை ஒத்த சோமசுந்தரக் கடவுளது,

Koviloor Digital Library

தாமரைப் பூவைத் தோற்கடித்த திருவடிகள் இரண்டினையும் அடையாத தவறு உடையவர்கள் சொல் போல, (17 -19)

பலவற்றை எண்ணி ஐந்து வகையாகப் பின்னப் பெற்ற கூந்தலை உடைய தலைவியின் மூங்கிலை ஒத்த தோளைத் தழுவுதலை, இந்திரனே என்னும்படி தோன்றுகின்ற நீ விரும்புகின்றாய் (20-21)

நீ வருகின்ற வழியில் உனக்குத் துன்பம் ஏற்பட்டால் தலைவியின் உயிருக்கும் தவறாது. துன்பம் ஏற்படும். எனவே உம்முயிர் இரண்டும் நீக்கமாம் என்ற அச்சம் என் கண்கள் காண, இந்தக் கொடுமையாகிய வழியில் இரவு நேரத்தில் துணிந்து வருதலை எப்பொழுதும் நினையாது ஒழிவாயாக. கொடும் வேலினைக் கைக்கொண்ட தலைவனே, உனக்கு அதுவே பெரிய புகழுமாகும் என்று தோழி கூறினாள். (23 - 26)

(வி - ரை):

இப்பாடல் திருக்கோவையாரின் 176 ஆம் பாடலுக்கு விளக்கமாகும். பாடலில் தலைவனின் கையில் உள்ள வேலின் சிறப்பும், அவன் நாட்டின் சிறப்பும் தோழி கூறி, தலைவன் இரவில் வருகின்ற வழியில் நடைபெறும் பேய்களின் நடமாட்டத் தையும், இருளின் கொடுமையையும் கூறித் தலைவன் அவ் வழியில் வரும்பொழுது துன்பம் ஏற்படும். அத்துன்பத்தால் தலைவியும் துன்புறுவாள் என்று கூறி அந்தத் துன்பத்தை யான் காணும் வண்ணம் இரவில் வந்துவிடாதே என்று தலைவன் வரும் வழியின் அச்சத்தைக் கூறி, இரவில் வாராதே, விரைவில் திருமணம் செய்து கொள் என்ற குறிப்பாகக் கூறுவதாகப் பொருள் அமைந்துள்ளது. இறைவனின் சிறப்பாக அவனின் குணச்சிறப்பு மட்டும் கூறப்பெற்றுள்ளது.

(சொ - ம்):

கதுப்பு - கூந்தல், எயிறு - பல், எயிற்றியர் - வேடர் பெண்கள், பிரசம் - தேன், காமம் ஆறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மகம், மாச்சரியம் என்பன. மின்மினி - மின்மினிப்பூச்சி, மூல விசாசரர் - அழிவிற்கு மூலமாக விளங்கும் அரக்கர்கள். கோளினர் - கொள்கை உடையவர் (தவறு உடையவர்) தருவின் கிழவன் - இந்திரன், அடுவேலோய் - அழிக்கும் வேற்படை.

○

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
Acc. No. 45857

Koviloor Digital Library

Koviloor Digital Library

சைவத் திருமுறைகளில் ஒன்றான எட்டாம் திருமுறையின் ஒரு பகுதியான திருக்கோவையாருள் நூறு துறைகளைத் தேர்ந்தெடுத்து, அதன் பொருள் அமைப்பினைக் கொண்டு பாடப் பெற்றது. பாடியவர் கல்லாடர். எனவே கல்லாடம் என்ற பெயர் கொண்டது.

சங்க இலக்கிய நடையில் அகப்பொருள் செய்திகளை முறையாகக் கொண்டு பாடப் பெற்றது. ஒவ்வொரு பாடலிலும் மதுரை சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் கதை ஒன்று அமைந்துள்ளது. எல்லாத் திருவிளையாடற் கதைகளும் இடம் பெற்றதோடு, பெரிய புராண வரலாற்று நிகழ்வுகளில் ஒருசிலவற்றையும் இராமாயணம், மகாபாரதம் கதை நிகழ்வுகளையும் சுருங்கக் குறிப்பிடுகிறது. மதுரையும் திருப்பரங்குன்றமும் அழகிய வருணனையோடு குறிக்கப் பெற்றுள்ளன.

உலகியல் செய்திகளும் சிறந்த உவமைகளும் சில பழமொழிகளுள் சிறப்பாகக் காட்டப் பெற்றுள்ளன. நூலில் இடம் பெற்ற நூறு செய்யுட்களும் யாப்பு, அணி, மற்றும் பொருள் அமைப்பிலும் சிறப்பாகத் திகழ்கின்றன. ஆசிரியப்பாவின் சிறப்பு அனைத்தையும் ஒருங்கே இந்நூலில் காணலாம்.

இந்நூலைப் பயின்றால் தமிழறிவு மிக்கு விளங்கும் என்பதால் 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்ற பழமொழி தமிழ் உலகில் வழங்கலாயிற்று. வரலாறு அறிய இயலாத கல்லாடர் என்ற மாபெரும் புலவர் பாடிய சங்க இலக்கிய நடையை ஒத்த இந்நூல் தமிழ் இலக்கிய வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

உமா
பதிப்பகம்